# 1975



இரா. முருகன்


1975
ரா. முருகன்



# 1975

இரா. முருகன்

# இரா. முருகன்

இரா. முருகன், 1953 ஆகஸ்ட் 28 அன்று பிறந்தார். தந்தை என்.எஸ்.ராமசாமி, தாய் மீனாட்சி. இரா. முருகனின் முதல் கவிதை 1977ஆம் ஆண்டும், முதல் சிறுகதை 1984ஆம் ஆண்டும் கணையாழியில் வெளியானது. தொடர்ந்து நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஐந்து நாவல்கள், ஒரு கவிதைத் தொகுப்பு, தகவல் தொழில்நுட்பம் குறித்த இரண்டு புத்தகங்கள், இரண்டு தொகுப்பு நூல்கள் மற்றும் ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார். மலையாளத்தில் இருந்து தமிழுக்குக் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகளை செய்துள்ளார். இவரது பல படைப்புகள், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கதா விருது, இலக்கியச் சிந்தனை விருது, திருப்பூர் தமிழ்ச் சங்கம் விருது, லில்லி தேவசிகாமணி விருது உள்பட பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்ற முருகன், தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

பெருந்தலைவர் காமராஜருக்கு

# உள்ளே


சாற்றுகவி வெண்பா

முன்னுரை

மதராஸ்

1. ஜூன் 1975

2. ஆகஸ்ட் 1975

3. செப்டம்பர் 1975

4. அக்டோபர் 1975

அரசூர்

5. நவம்பர் 1975

6. நவம்பர் 1975

7. டிசம்பர் 1975

8. ஜனவரி 1976

9. பிப்ருவரி 1976

10. மார்ச் 1976

11. ஏப்ரல் 1976

12. மே 1976

13. ஜூன் 1976

14. ஆகஸ்ட் 1976

15. அக்டோபர் 1976

16. அக்டோபர் 1976

புது தில்லி

17. நவம்பர் 1976

18. டிசம்பர் 1976

19. ஜனவரி 1977

20. பிப்ரவரி 1977

21. மார்ச் 1977

பின்கதைச் சுருக்கம்

# சாற்றுகவி வெண்பா

‘துயிலேறும் மாலும், மயிலேறும் வேலும்
கயிலையின் சூலமும் காப்பு - ஒயிலான
கற்பகமும் சேர்ந்துமை காத்திடுவார், உம்கதையை
நற்பொருள் நாவல் சிறப்பு...!’

- கிரேஸி மோகன்

# முன்னுரை

த ன் வரலாறும் புனைவும் கலந்த பயோஃபிக்ஷன் நெம்பர் 40, ரெட்டைத்தெரு, தியூப்ளே வீதி என்ற இரு நாவல்களாக வெளிவந்ததும் அந்த உத்தியை இன்னும் சற்று நீட்சி அடைய வைத்து, புனைவின் சுதந்திரமும், நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி காட்டும் வரலாற்றின் தகவல் துல்லியமும், ஒருங்கமைதியும், செறிவுமாக ஒரு படைப்பு எழுதிப் பார்க்கத் தோன்றியது.

வழக்கம்போல் சிறுகதைப் பொறியைக் கற்பனை ஊதிப் பற்ற வைக்க, அது படர்ந்து பரவிய நாவல் நெருப்பானது. 1970களில் நடந்து, என்னோடு சென்னை மேன்ஷனிலிருந்த நண்பர்கள் நினைவு வைத்திருக்கும் நிகழ்ச்சி அது. பெருந்தலைவர் காமராஜர் மறைந்த தினத்தில் நிகழ்ந்தது. மேன்ஷன் அறைக்கு எங்கள் யாருக்கும் பரிச்சயமில்லாத ஒரு இளம் பெண் வந்து, வெளியே போகமாட்டேன் என்று அடம் பிடித்தாள்.

அந்த வினோதமான அல்லது அபத்தமான சூழலை, நான்கு அரசூர் நாவல்கள் எழுதித் தீர்த்தபின் சாவகாசமாக ஒரு சிறுகதையாக எழுத உத்தேசித்தபோது மனதில் தோன்றிய சிந்தனை, அந்தக் காலத்தில்தானே எமர்ஜென்சி நடப்புக்கு வந்தது? எமர்ஜென்சி காலத்தில் நடப்பதாக ஒரு நாவல் எழுதினால் என்ன? '1975' நாவலின் எழுத்து மூலம் இதுதான்.

இந்தப் புதினம், எமர்ஜென்சி என்ற நெருக்கடி நிலைக் காலத்தின் வரலாறு இல்லை. எமர்ஜென்சியின்போது நிகழ்கிற சம்பவங்களின், புனைவு பொதிந்த தொகுதி. ஒரு தளத்தில், இவை பார்வைப்

பதிவுகளின் சங்கிலிப் பின்னலும் கூட. எமர்ஜென்சி இல்லாமல் இருந்தாலும் இந்த நிகழ்வுகளில் பல நிகழ்ந்திருக்கும். ஆனால் அவற்றின் போக்கும் முடிவும் வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

வாழ்க்கையை ஓரளவு பிரதிபலித்து அதில் வண்ணம் கலக்க ஒரு முயற்சி இந்தச் சிதறுண்ட கதை கூறுதல். இறுதி அத்தியாயத்திலும் கதாபாத்திரங்கள் அறிமுகமாகிறார்கள். திடுமென்று வந்து திடுமெனக் காணாது போகிற இவர்கள் எல்லோரும் கதைப் போக்கை நகர்த்த ஒரு கை கொடுத்துத் தேர் இழுக்கிறார்களா என்றால் இல்லை. தன்னைச் சுற்றிச் சுழலும் உலகத்தில் இன்னார் மட்டும்தான் இருக்க வேண்டும் என்றோ, இயக்கம் எல்லாம் தன்னையே மையமாகக்கொண்டு நிகழவேண்டும் என்றோ விதி செய்யப் போத்தியால் முடியாது. ஆடுவாரும், ஆடி முடித்து அள்ளிச் செல்லாமல் ஒதுங்குவாரும், ஆட வந்தவர்களுமாகக் கதை விரிவதிலும் ஒரு ரசம் உண்டு.

Character Arc என்ற கதாபாத்திரத்தின் வளர்ச்சியோ வீழ்ச்சியோ தட்டுப்படாதவர்கள் போத்தியும் மற்றவர்களும். கதைவெளியில் எமர்ஜென்சி தான் உருவாகி, வளர்ந்து, கலைந்து போகிறது.

எமர்ஜென்சி 1975 ஆம் வருடம் ஜூன் 25 ஆம் தேதி பிரகடனப்படுத்தப்பட்டது. 1977 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதி விலக்கிக்கொள்ளப்பட்டது. இடைப்பட்ட இருபத்தோரு மாதங்களில் நிகழும் இந்த நாவலின் அத்தியாயங்களும் இருபத்தொன்றுதான்.

நாவலின் முதல் நான்கு அத்தியாயங்கள் சென்னையிலும், அடுத்த பன்னிரண்டு அத்தியாயங்கள் தமிழகத்தில் ஒரு சிறு நகரத்திலும், இறுதி ஐந்து அத்தியாயங்கள் தில்லியிலும் நிகழ்கின்றன. தில்லியிலும் சென்னையிலும், நான் பிறந்த சிறு நகரத்திலும் வாழ்ந்து பெற்ற என் வாழ்வனுபவங்கள் நாவலில் கலந்திருக்கின்றன. வாழ்வனுபவத்தின் பின்பலம் இல்லாமல், வெளிநாடோ, உள்நாடோ, எந்த நிலப்பரப்பும் என் படைப்புகளில் இடம்பெற வேண்டாம் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

பெருங்கதையாடல் இந்த நாவல் போக்கில் அயர்வு சேர்க்கக் கூடும் என்பதால் சிதறுண்ட கதையாடலாகக் கூறப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளின் நிகழ்ச்சித் தொகுப்பு நாவலாகிறது. எமர்ஜென்சியும் போத்தியும் இவை எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் சரடுகள்.

என் ஆருயிர் நண்பர் கிரேஸி மோகன் வழக்கம்போல் நாவலின் முதல் பி.டி.எஃப் பிரதியைப் படித்து முதல் விமர்சகராக தினசரி தொலைபேசி, கருத்தும், மேம்படுத்த யோசனையும், பாராட்டும், கறாரான விமர்சனமும் அளித்தார். அவருக்கு என் நன்றி.

இந்தமுறை இன்னும் சில நண்பர்களும் நாவலின் சில பகுதிகளுக்கு நடைபெற்ற எடிட்டிங்கில் மகிழ்ச்சியோடு பங்குபெற்றார்கள். தகவல் ஒருங்கு இணக்கம் சரிபார்ப்பதில் இவர்களின் பங்கு சிறப்பானது. நாற்பது வருடங்களுக்கு முற்பட்ட எமர்ஜென்சி கால வாழ்வு அனுபவமும், பணி இட அனுபவமும், இந்தக் கதை நிகழும் இடங்களில் வசித்த அனுபவமும், நல்ல வாசிப்பனுபவமும் வாய்க்கப் பெற்றவர்கள்.

திருமிகு அனுராதா கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீவத்ஸன் நடராஜன், பரத்குமார் பாலசுப்பிரமணியன் ஆகிய இந்நண்பர்களுக்கு என் நன்றி. நண்பர் ரமேஷ் வெங்கட்ராமனுக்கும் என் நன்றி.

நாவலுக்குச் சாற்றுகவி வெண்பா அளித்த நண்பர் கிரேஸி மோகனுக்கு மீண்டும் நன்றி.

என் அன்புக்குரிய வாசக நண்பர்களுக்கு என் வாழ்த்துகள். இனி நாவல் உங்களோடு பேச, நான் மௌனமாகிறேன்.

இரா. முருகன்
ஏப்ரல் 2018

# மதராஸ்

அத்தியாயம் 1

# ஜூன் 1975

நான் போத்தி. திருப்பணித்துறை சிவசங்கரன் போத்தி. திருப்பணித்துறையிலிருந்து தெற்குத் தமிழ்நாட்டுக்கு சாப்பாட்டுக்கடை நடத்த வந்த குடும்பம் எங்களது. அது நடந்தது 1900களில். சாப்பாட்டுக் கடை பற்றி இல்லை இங்கே எழுதப் போவது. 1975ல் மெட்ராஸில் தொடங்கி அடுத்த இரண்டு வருடம் நடந்தது இது. போத்தியின் கதை மட்டுமில்லை. உங்களுடையதும்தான்.

ஓராண்டு முன்பு எனக்கு சென்னை வங்கி ஒன்றில் இன்னும் பணி நிரந்தரமாக்கப்படாத இளநிலை மேலாளர் பணி கிட்டியது.

1975ல் பெரும்பாலும் நிலவிய தமிழில் சொன்னால் - ஒரு வருடம் முன்னால் எனக்கு மெட்ராஸில் பேங்க் ஒன்றில் ஜூனியர் ஆபீஸர் வேலை கிடைத்தது. புரபேஷனரி ஆபீஸர்.

கிளார்க்குகளுக்கு எல்லாம் கீழ்ப்பட்ட குமாஸ்தா - அந்தச் சொல் 1975லேயே பெரும்பாலும் வழக்கொழிந்து போனது. மேலும், நான் கடைநிலை ஊழியர்கள் எல்லோருக்கும் கடைப்பட்ட ஊழியன்.

மேனேஜர், அக்கவுண்டண்ட் போன்ற சிறு தெய்வங்கள் கிளார்க்குகளையும், கடைநிலை ஊழியர்களையும் வேலை வாங்க முடியாத கோபத்தை எல்லாம் ஒன்று திரட்டிப் பிரயோகிக்க, எல்லாத் திசையிலும் உதைபடும் பந்து.

வால்டாக்ஸ் ரோடோடு போனால் தட்டுப்படும் யானைக்கவுனி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிழக்கே வங்கிக் கிளை. சுற்று வட்டாரத்தில் வேற பேங்க் இல்லை என்பதாலோ என்னமோ, சிறு வர்த்தகர்கள் எல்லோரும் அங்கே கணக்கு துவக்கி, பொழுது விடிந்து பொழுது போக வசூலான தொகையாக செக், டிராஃப்டைக் கொண்டுவந்து கணக்கில் வரவு வைக்கக் கொட்டுவார்கள்.

தினசரி ஆயிரம் இரண்டாயிரம் செக்குகளின் விவரத்தைப் பேரேட்டில் டீ குடித்தபடி எழுத வேண்டும். அவற்றை கிளியரிங்கில் ரிசர்வ் பேங்குக்கு அனுப்ப பேங்க் வாரியாக, டீ மேலே கொட்டாமல் குடித்துக்கொண்டே பிரித்து அடுக்க வேண்டும். நீள பட்டாவில் நம்பர் போட்டு விவரம் எழுதி, டீ குடித்துக்கொண்டே கூட்டிப் போட வேண்டும். அப்புறம் பட்டாவை எல்லாம் கூட்டினால், பேரேட்டில் பதிந்ததற்கு அடித்த தொகையோடு ஒத்துப் போக வேண்டும். உடனே ஆகாது. ஆச்சு என்றால் அப்புறம் என்ன வேலை இருக்கும்?

டீ குடித்துக்கொண்டே கணக்கை நேர் செய்ய வேண்டும். டீ குடித்தபடி அடுத்த கோப்பை டீயைப் பத்திரமாக மேஜையில் நகர்த்தி வைக்க வேண்டும். வால்டாக்ஸ் ரோடு கோல்டன் கஃபே டீ இருந்தால் வாழ்க்கை இனிது, இனிது. புரபேஷனரி ஆபீசராக இருந்தால் கூட அப்படித்தான்.

1975 ஜூன் 25 புதன்கிழமை மற்ற வேலை நாட்களோடு வித்தியாசம் இல்லாமல், கிளியரிங் பட்டாவில் பதினெட்டு பைசா வித்தியாசத்தோடு நகர்ந்து கொண்டிருந்தது.

“பதினெட்டு. ஒண்ணு. எட்டு. ரெண்டையும் கூட்டினா ஒன்பது. நிச்சயம் யாரோ ஏதோ செக்கை லெட்ஜரிலே பதியும்போது பைசாவில் உல்டா பண்ணியிருக்காங்க. முப்பத்தைஞ்சு பைசாவை ஐம்பத்து மூணு பைசாவா பதிஞ்ச மாதிரி. செக்கை வச்சுக்கிட்டு ஒண்ணொண்ணா பாத்துடலாம்.”

நான் நம்பிக்கையோடு சொன்னேன். காலை நேரத்துக்கான பரபரப்பு நிறைந்து வழியும் பேங்க் கவுண்டர்.

“நேத்து சுப்ரீம் கோர்ட் வெகேஷன் ஜட்ஜ் வி.ஆர். கிருஷ்ணய்யர் என்ன பண்ணினார் தெரியுமோ? இந்திராவை டிஸ்க்வாலிஃபை பண்ணின அலஹாபாத் ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் இருக்கே, அதை முழுக்க ஸ்டே பண்ணமாட்டேனுட்டார். She is no more the Prime Minister, let alone a M.P.”

கரீம் அண்ட் ஹாத்திம் எண்டர்ப்ரைசஸ் கம்பெனி நிர்வாகி ஆராவமுதன், அப்துல் அஸீஸிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

அப்துல் அஸீஸ், ஐயங்கார் அண்ட் ஐயங்கார் தோல் பதனிடும் தொழிற்கூடத்தின் நிர்வாகி. இரண்டு நிறுவனங்களும் எங்கள் பேங்க் கிளையின் பெரிய கஸ்டமர்கள்.

காலையில் ஷட்டரை மேலே ஏற்றி ஆபீஸ் திறக்கும்போதே முதல், இரண்டாவதாக நுழையும் வாடிக்கையாளர்களாக நின்று கணக்கு வழக்கு சரிபார்த்துப் போவது இரண்டு பேருக்கும் வழக்கம்.

‘இங்கே அரசியல் பேசுவது கூடாது’ என்று எழுதிய பலகைக்குக் கீழே உட்கார்ந்து இரண்டு பேரும் தினமும் பேசுவது அரசியல் என்றாலும் யாரும் எதுவும் சொல்வதில்லை, காரணம் அவர்கள் பேசுவது சர்வதேச நாட்டுநடப்பு.

அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்ட் எகிப்து நாட்டுக்குப் போய் விமானத்திலிருந்து இறங்கும்போது விழுந்து அடிபட்டது பற்றியோ, பிரிட்டீஷ் பிரதமர் ஹெரால்ட் வில்சன் சோவியத் யூனியனின் ஒற்றரா என்பது பற்றியோ அவர்கள் விரிவாக அலச, அவர்களைச் சுற்றி சேவிங்க்ஸ், கரண்ட் அகவுண்ட், டோக்கன் நம்பர் எட்டு என்று அதுபாட்டுக்கு பேங்க் உலகம் சுழன்று கொண்டிருக்கும்.

இன்றைக்கு ஒரு மாறுதலுக்கு இந்திய அரசியல் பேசுகிறார்கள்போல என்று நினைத்தபடி பதினெட்டு பைசா வித்தியாசத்தில் மூழ்கியிருந்தேன்.

“க்ளியரிங் செக் எல்லாத்தையும் அனுப்பி வைக்கற நேரம் வந்தாச்சு. சஸ்பென்ஸ் டெபிட் பண்ணி பதினெட்டு பைசாவை இப்போதைக்கு

சரிக்கட்டுங்க. க்ளியரிங்லே வேறே ஏதாவது பேங்குக்கு இதே தொகை உதைக்கும். அப்போ பிடிச்சுடலாம்" என்றார் சீனியர் ஆபீஸர் கணேசன்.

இதுபோல் டென்ஷன் ஆக்கக்கூடிய பல சந்தர்ப்பங்களைச் சந்தித்த அவர் இதைச் சொல்லிவிட்டு, கவுண்டருக்கு அந்தப் பக்கம் போய், பெரிசுகளோடு பேச ஆரம்பித்தார்.

"ஹைகோர்ட் பிரதமரை பதவி நீக்கம் செஞ்சு, இன்னிக்கு கவர்மெண்டே இல்லாத நிலைமை சார். மிலிட்டரி டேக் ஓவர் செஞ்சா கூட ஆச்சரியப்பட மாட்டேன்."

கணேசன் அரசியல் பேசிக் கேட்பது இதுதான் முதல் தடவை. ஆபீஸ் விஷயம் பற்றி இல்லாமல் மற்றதைப் பேசிக் கேட்பதும் முதல் முறைதான்.

பகல் நேரத்தில் லஞ்ச் டேபிளில் கணேசனிடம் நான் கேட்டேன்,

"சார், காலையிலே சொல்லிட்டிருந்தீங்களே, பிரதமரை ஹைகோர்ட் பதவி நீக்கம் செய்திருக்குன்னு, அதாலே நமக்கு என்ன பிரச்சனை? இந்திராவுக்கு பதவி இல்லேன்னா சஞ்சய் காந்தி பிரதமர் ஆகிடுவார் இல்லே? அவர்தானே லைன்லே அடுத்தது?"

கணேசன் ஏதும் சொல்லாமல் என்னைப் பார்த்துப் புன்னகையோடு தலையை ஆட்டியபடி ஒரு பப்படத்தை ஆசையோடு நொறுக்கி வாயில் போட்டுக் கொண்டார்.

நாலடுக்கு டிபன் செட் அவருடையது. அதில் மூன்று அடுக்கில், பொறித்த அப்பளமும் பப்படமும் அடைத்து வரும். மற்றதில் தயிர் சாதம். ஒரு பாட்டில் நிறைய சாம்பார். பப்படத்துக்குத் தொட்டுக்கொள்ள அது.

"போத்தி, இது ஜனநாயக நாடு. மன்னராட்சி இல்லே. அம்மா போனா, மகன் அரியணை ஏற முடியாது. அது இல்லே இப்போ விஷயம். டெக்னிகலா பார்த்தா இன்னிக்கு இந்திய அரசாங்கமே இல்லை. பிரதமரை பதவி நீக்கம் செய்ததாலே நாட்டுக்குத் தலைவரும் கிடையாது. மற்ற பல நாடுகளிலே இப்படி நிலைமை வந்தால், ராணுவம்

ஆட்சிக்கு வந்துடும். இங்கே இதுவரைக்கும் இல்லை. இனிமேல் எப்படியோ...”

கணேசன் ஏதும் சொல்லாமல் என்னைப் பார்த்துப் புன்னகையோடு தலையை ஆட்டியபடி பப்படத்தை விண்டு மென்றார்.

“எப்போ வேணுமின்னாலும் எதுவும் நடக்கலாம். அதுவும் இன்னிக்கே.”

கணேசன் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டு சாம்பார் குடிக்கலானார்.

அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த யாரும் ஒரு சத்தமும் எழுப்பவில்லை. ஏதோ ஒரு கூட்டுப் பயம் பாதித்திருந்தது எல்லோரையும்.

என் மனதில் ராணுவம் கோல்டன் கஃபே வாசலில் துப்பாக்கியுடன் நின்று டீ குடிக்கப் போகும் என்னைச் சுடுவதற்கு இலக்கு நோக்குவதாகக் கற்பனை செய்து ஒரு வினாடி நடுங்கினேன்.

பிற்பகல் மூன்று மணிக்கு பதினெட்டு பைசா புதிர் தீர்ந்து தவறுதலாகப் பதியப்பட்ட செக் கண்டுபிடிக்கப்பட்டு, என்ட்ரி திருத்தப்பட எல்லாம் சுபம்.

திடீரென்று ரகோத்தமன் நினைவு வந்தது. தில்லியில் இருந்து வந்திருக்கும் நண்பன். அங்கே ஆகாசவாணி ரேடியோ ஸ்டேஷனில் உத்தியோகம். ஒலிபரப்பு பக்கம் போகாமல், மேஜை நாற்காலி போட்டு உட்கார்ந்து கிளார்க் வேலை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போனவன்.

ரகோத்தமன் ஒரு வாரம் சொந்த ஊர் திருப்புல்லாணி போய் வந்து திரும்பும் நாள் இது. சென்ட்ரலுக்கு வெய்யில் தாழ ஒரு ஐந்து மணி சுமாருக்கு வந்தால், கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் 7 மணிக்குக் கிளம்பும் வரை அரட்டை அடிக்கலாம் என்று அவன் போஸ்ட் கார்ட் போட்டிருந்தான்.

ஐந்து மணிக்கு நான் சென்ட்ரல் போக ரெடி.

வால்டாக்ஸ் ரோடு வட்டாரத்தில்தான் ஆபீஸ் என்பதால் ஒரு பத்து நிமிடம் நடந்தாலே சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் போய்விடலாம்.

கோல்டன் கஃபேயில் இன்னொரு பால் டீ சாப்பிட்டுவிட்டு நடக்க ஆரம்பித்தேன். ஆறுதலான கடல் காற்று கூடவே வந்தது. கணேசன் பேச்சில் கடந்து வந்து என்னை ஒரேயடியாகப் பயமுறுத்திய ராணுவத்தினர் வால்டாக்ஸ் ரோடு நெரிசலில் காணாமல் போனார்கள்.

ரயில் கிளம்பும் வரை, ரகோத்தமனுடன் நாஸ்டால்ஜியா அரட்டை தொடர்ந்தது. கணேசன் சொன்னது நடக்குமா என்று மத்திய அரசு ஊழியனான அவனிடம் கேட்டேன். அவனுக்கு கிருஷ்ண ஐயர் யாரென்றே தெரியவில்லை. அவர் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரா என்று கேட்டான். நான் ஒன்றும் செய்யத் தோன்றாமல் அவனைப் பார்த்தேன்.

“ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஏன் கவர்மெண்ட் சர்வென்டை வெளியே போகச் சொல்லணும்?”

அடிப்படைக் கேள்வியைக் கேட்டு என்னை நிசப்தனாக்கினான். அதற்கு அப்புறம் ராயர் கடையில் வாழைக்காய் பஜ்ஜி சாப்பிட்ட பத்து வயது அனுபவத்துக்கு மேற்பட்ட எதையும் அவனோடு பேசவில்லை.

எந்த ஜென்மத்தில், எந்த ஊரில் எங்கே காண்போமோ என்று கண்ணில் நீர் மல்க, கட்டிப் பிடித்துக்கொண்டு ரகோத்தமனுக்குப் பிரியாவிடை கொடுத்துவிட்டு ஜெனரல் ஆஸ்பத்திரி பஸ் ஸ்டாப்பில் பதினொன்றாம் நம்பர் பஸ் பிடித்து ஜி.என்.செட்டி ரோடு வழியாக உஸ்மான் தெரு வந்து சேர்ந்தேன்.

சிவா விஷ்ணு கோயில் எதிரே விரியும் தெருவில் எங்கள் மேன்ஷன். உஸ்மான் வீதியில் கூட்டமும் நெரிசலும் குறையவில்லை. காப்பிப்பொடி புதுசாக அரைத்து வாங்கவும், கோன் ஐஸ் சாப்பிடவும், சாத்துக்குடி ஜூஸ் குடிக்கவும், லிஃப்கோவில் இங்கிலீஷ் தமிழ் டிக்ஷனரி வாங்கிப் போகவும், மாம்பல ரயில்வே ஸ்டேஷன் அருகே ரங்கநாதன் தெருவில் காய்கறி வாங்கவும், நல்லியில் முகூர்த்தப் புடவை வாங்கவுமாக ராத்திரி நகரம் வாங்கி, தின்று, குடித்து இயங்கிக் கொண்டிருந்தது.

நாதன்ஸ் கஃபே ஃபுல் மீல்ஸ் பிரிவில் காகித டோக்கனை எச்சில் இலைப் பக்கம் வைத்துக் காத்திருக்க வேண்டியில்லாமல் போனதுமே

இடம் கிடைத்தது.

வத்தல் குழம்பும், இரண்டு சுட்ட அப்பளமும் போனஸாகக் கிடைக்க, இந்தியாவை, பப்படம் கணேசனை, பதினெட்டு பைசா வித்தியாசத்தை மறந்து, அவரைக்காய் சாம்பாரும், தக்காளி ரசமும் கலந்து சூடான சாதம் வயிற்றில் நிறைய, எங்கே எங்கே என்று அசதியும் தூக்கமும் எட்டிப் பார்த்த நேரம். இரையெடுத்த பாம்பாக ஊர்ந்து நான் தங்கியிருக்கும் மேன்ஷன் வந்தாயிற்று.

மாடிப்படி ஏறி நடையில் திரும்ப, முதல், இரண்டாம் அறை கன்னட நண்பர்கள் பெல்காவியும் குல்கர்னியும் பெல்காவி அறை வாசலிலேயே டிரான்சிஸ்டருடன் நின்று கொண்டிருந்தார்கள்.

என்ன விஷயம்? ராணுவ ஆட்சியா?

“இன்னும் இல்லே. இந்திராம்மா அமைச்சர்களோடு ஆலோசனை செய்து ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமதை சந்திக்க ராஷ்ட்ரபதி பவன் போயிருக்காங்களாம். அதுவும் ஆகாசவாணி ந்யூஸ் இல்லை. பி.பி.சி லண்டன் செய்தி. வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவும் அதேதான் சொல்றது.”

மர்ஃபி டிரான்சிஸ்டர் ரேடியோ குமிழியைத் திருகிக்கொண்டு சொன்னார் பெல்காவி. அவர் எனக்கு பிரியமான நண்பர். பெல்காவி என்பது கர்னாடகாவில் ஊர்ப் பெயரான பெல்காம் அடிப்படையில் வருவதாம்.

குல்கர்னி மூத்தவர். நகத்தைக் கடிக்காதே, தலை வாரிட்டு வா, விபூதி இட்டுக்கோ என்கிற மாதிரி அண்ணா அவதாரம் அடிக்கடி எடுப்பார். அவரைத் தவிர நாங்கள் இங்கே அறைகளில் இருக்கப்பட்ட எல்லா பிரம்மசாரிகளும் இருபத்தைந்து வயதுக்குக் கண்டிப்பாகக் கீழ்ப்பட்டவர்கள் என்பதால் ஹள்ளிய அண்ணா எனப்படும் இந்தக் கிராமத்து அண்ணன் குல்கர்னியின் சொல் மதிப்புக்குரியது.

அறைக்கு நடந்தேன். உள்ளே போய்ப் படுத்தால் உலகோடு ஒரு தொடர்பும் இல்லாமல் அடுத்த எட்டு மணி நேரம் போகும். பூமியே புரண்டாலும்தான் என்ன?

பேண்ட் பாக்கெட்டில் ரூம் சாவிக்குக் கை விட்டேன். அது அங்கே இல்லை.

இரண்டு பாக்கெட், கைப்பை, இருக்க முடியாது என்று தெரிந்தாலும் சட்டைப் பை. பரபரப்பாகத் தேட அறைச் சாவியை எங்கேயும் காணவே காணோம்.

பூட்டு எதுவும் இல்லை. கதவிலேயே பதிந்த பூட்டு, கதவைச் சாத்தினால் பூட்டிக்கொண்டு விடும். சாவி போட்டால் திறக்கும் ஏற்பாடு.

காலையில் ஆபீஸ் போகிற அவசரத்தில் சாவியை எடுத்துக் கொள்ளாமல் வெளியே வந்து சாத்திவிட்டுக் கிளம்பியிருக்கிறேன். இனிமேல் கதவு திறக்க கோவிந்தன்தான் வரவேண்டும்.

கோவிந்தன் இந்த மேன்ஷனின் உரிமையாளர். எல்லா சாவிக்கும் பொதுவான, ஒரு மாஸ்டர் சாவி அவரிடம் இருக்கிறதாகக் கர்ணபரம்பரைக் கதைகளாக வதந்தி உலவுகிறது. அதில் நம்பிக்கை இனிமேலாவது வைத்தாக வேண்டும். கதவு திறக்காவிட்டால் எங்கே போய் உறங்க? நாளை எப்படி நான் ஆபீஸ் போக?

ஜன்னல் வழியே ஏக்கத்தோடு ரூமுக்குள் பார்த்தேன். என் பின்னால் கொரகொரவென்று பிபிசியோ வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவோ வேற எதுவோ இந்த நாட்டு நிலைமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்திரா என்ன ஆனார்? என்ன வேண்டுமானாலும் ஆகட்டும். எங்கேயும் போகட்டும். நான் எப்படி அறைக்குள் மீண்டும் போகப் போகிறேன்?

‘பக்ருதீன் அலி அகம்மது அவசரச் சட்டத்தில் கையெழுத்துப் போட்டுட்டாராம். நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனமாகி இருக்காம். எமர்ஜென்ஸி.’

பெல்காவி டிரான்சிஸ்டரை உரக்க வைக்க, எமர்ஜென்சி வந்ததைப் பரபரப்போடு மதராஸ் வானொலி நிலையத்தில் பத்மநாபன் சிறப்புச் செய்தி அறிக்கையாகச் சொல்கிற ஒலி.

பத்மநாபன் செய்தி சொல்லி முடித்து வீட்டுக்குப் போவார். தட்டியதும் கதவு திறக்கும். ஓய்வெடுத்துக் கொண்டு, குளித்து, சாப்பிட்டு வந்து நாளைக்கு இந்திரா காந்தி புகழ் பரப்பும் அடுத்த செய்தி சொல்வார்.

நான் ஆபீஸ் போக முடியாமல், அழுக்கு உடுப்போடு அறைக்கு வெளியே கையைப் பிசைந்துகொண்டு நிற்பேன்.

"என்ன ஆச்சு போத்தி, வாசல்லே நின்னு முழிச்சிட்டு இருக்கே?"

என் அறைக்குத் தெற்கே அடுத்த ரூம்காரரான நாராயணசாமி ஸ்கிப்பிங் கயிறில் தாண்டிக் குதித்துக்கொண்டு தன் அறைக்குள் இருந்தபடிக்கே விசாரித்தார்.

காலை ஏழு மணிக்கு எண்ணூரில் வேலைக்குப் போய் இரவு ஏழுக்கு வருகிறதால் ராத்திரி படுக்கும் முன் ஸ்கிப்பிங் ஆடுகிற உடல் பயிற்சி அவருக்கு விதிக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார். ராத்திரியில் ஸ்கிப்பிங் ஆடி ஆடி அவர் நடக்கும்போதே குதித்துக் குதித்துப் போவதாகத்தான் தோன்றும். என்ன சாப்பிட்டாலும் சதையே போடாத பூஞ்சை உடம்பு அவருடையது. மூக்கு இந்திரா காந்தி மாதிரி நீளம். பழைய எகிப்து ஜனாதிபதி நாசர் கூட நீண்ட மூக்கர்தான். ஆனால் அவரை யாரும் பதவி நீக்கவில்லை. நாசர் சாவியைத் தொலைத்திருக்க மாட்டார். நாராயணசாமியும்.

"நாராயணசாமி சார், சாவியை ரூம் உள்ளே விட்டுட்டேன். என்ன பண்றது?"

பெல்காவி டிரான்சிஸ்டரைக் கட்டிச் சுமந்தபடி என் அறைக்குள் ஜன்னல் வழியே பார்க்க, குல்கர்னி பின்னாலேயே வந்து உள்ளே டார்ச் அடித்தார்.

'எதிர்க் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவராக மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்' என்று அமெரிக்காவோ, பிரிட்டனோ உற்சாகமாகச் செய்தி சொல்ல, நான் குழப்பத்தோடு அறைக்குள் பார்த்தேன். கதவு ஓரமாக சின்ன மேஜையில் சாவி பத்திரமாக இருக்கிறது.

நாராயணசாமி வந்து ஜன்னல் கம்பிகளுக்குள் கையை நீட்ட குட்டி மேஜைக்கு நாலு அங்குல உயரத்தில் அவர் விரல் அலை பாய்கிறது. பழைய எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் மூக்கு போல் விரல் கொஞ்சம் நீளமாக இருந்தால் சாவியைக் கைப்பற்றி இருக்கலாம்.

நாராயணசாமியும் ஸ்கிப்பிங் கயிறை ஓரமாகப் போட்டுவிட்டு அவருடைய டிரான்சிஸ்டர் ரேடியோவில் பிபிசி போடுகிறார்.

“மொரார்ஜி தேசாய் போயாச்சு.”

அவர் சொன்னதைக் கேட்க நடுக்கம் வருகிறது. அதுவும் அனாதையாக அறைக்கு வெளியே நின்று மொரார்ஜியை நினைக்கும் சோகம். சுட்டுட்டாங்களா அவரை? கொலையும் செய்வார் அந்தம்மாவா?

“எழுபத்தேழு வயசு. அவரை ஜெயில்லே போட்டுட்டாங்க. அநியாயம்.”

குல்கர்னி குரலில் ஆத்திரம் புலப்பட்டது. ரொம்ப சாந்தமான மனிதர் அவர்.

கோவிந்தனுக்கு ஃபோன் செய்து பார்க்கலாமா? நாராயணசாமி தன் பர்ஸில் தேடி ஒவ்வொன்றாக அவர் அறையில் தரையில் போட்ட பொருட்கள் - தினசரி காலண்டர் காகிதத்தில் மடித்த கோயில் விபூதி. எழும்பூர் ரயில்வே ஜங்ஷன் பிளாட்பாரம் டிக்கெட். மின்சார ரயில் சீசன் டிக்கெட். கோளறு திருப்பதிகம் ஒன்றும் பின்னால் பனியன், ஜட்டி விளம்பரமுமாக சிறு அட்டை. மடாதிபதி படம். நுணுக்கி அச்சடித்த புகையிலைக் கம்பெனி கேலண்டர். பஸ் டிக்கெட். சின்ன, மினிக்கும் மினியாக பாக்கெட் சைஸ் நோட்புக்.

அதுதான் என்றார் நாராயணசாமி. எடுத்துப் பிரித்து கோவிந்தனை அழைக்க, அவருடைய டெலிஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர். நாசமாகப் போகட்டும் அதுவும் அவரும்.

“வாஜ்பாய் அரெஸ்டெட். அத்வானியும் உள்ளேதான்.” பெல்காவி சொன்னார்.

“கலைஞர் கருணாநிதி?”

அந்தக் குழப்பமான நேரத்திலும் எனக்குக் கேட்கத் தோன்றிய பெயர் அதுதான்.

“இன்னும் இல்லை” என்றார் நாராயணசாமி. அந்தப் பதில் மற்ற எதையும் விட மிரட்டலாக கதிகலங்க வைத்தது.

அது இருக்கட்டும். அறைக்குள் எப்படிப் போக? நாளைக்கு எப்படியாவது சமாளித்து, கோவிந்தன் வீட்டுக்குப் போய், எந்த அட்ரஸோ தெரியாது, அவரைக் கெஞ்சிக் கூத்தாடிக் கூட்டி வந்தால் கதவு திறக்குமா? என் ஒரு வருடம் சம்பளம் முழுக்க அவருக்கு அபராதமாகத் தரவேண்டி வருமா? பாண்டி பஜாரில் ட்யூப்ளிகேட் சாவி பண்ணுகிறவர் கீதா கஃபே அருகே மரத்தடியில் உட்கார்ந்திருப்பாரே... அவரைக் கூப்பிட்டால் செய்து கொடுப்பாரா? பூட்டு இருந்தால் சாவி போடுவார். கதவிலேயே பதிந்த பூட்டுக்கு? தப்புக் காரியமா அப்படி சாவி போடச் சொல்வது?

‘ஆகாசவாணி. ஒரு முக்கிய அறிவிப்பு. நாளை, ஜூன் 26ஆம் தேதி, வியாழக்கிழமை, காலை ஏழு மணிக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார். ஆகாசவாணியின் அனைத்து நிலையங்களும் இந்த உரையை அஞ்சல் செய்யும். அடுத்த நிகழ்ச்சி, வாத்திய கோஷ்டி.’

நான் கதவில் சாய்ந்துகொண்டு நடையில் காலை நீட்டி ஓய்ந்து போய் உட்கார்ந்தேன். எமெர்ஜென்சி என்றால் இருப்பிடத்துக்குள் போக முடியாமல் தவிக்கிற ராத்திரி. இப்படிதான் என் அகராதியில் எழுதப்படும்.

திடீரென்று ராத்திரியின் அமைதியைக் குலைத்துக்கொண்டு, தன் அறைக்கு உள்ளே இருந்து நாற்காலியைத் தூக்கிப் போட்டுச் சுவரில் அடித்து ஓவென்று அலறினார் குல்கர்னி. “பாவி, மகா பாவி” தெரு வரைக்கும் அந்தத் தீனமான அலறல் எதிரொலித்தது. இந்திரா புகைப்படம் அட்டையில் போட்ட ஒரு கன்னட வாரப் பத்திரிகை உள்ளே இருந்து தரையில் வந்து விழுந்தது. அதை உக்கிரமாகக் காலால் மிதித்தபடி அரைத்துத் தேய்த்து நசித்தார் குல்கர்னி.

“இட்ஸ் ஆல் ரைட், இட்ஸ் ஆல் ரைட்”, பின்னாலேயே பெல்காவி குரல் ஆதரவாக ஒலித்தது.

“ஜெயப்பிரகாஷ் நாராயண் உடல் நலம் சரியில்லை என்பதால் ஆஸ்பத்திரியில் காவலில் வைக்கப்படலாம்.” பெல்காவி எங்களுக்குச் சொல்லியபடி குல்கர்னி தோளில் தட்டி சமாதானப்படுத்தினார்.

நேரம் கெட்ட நேரத்தில் நிலைய வித்வான் தில்ரூபா வாசித்துக் கொண்டிருந்தார் ஏதோ ஸ்டேஷனில். மற்றபடி எல்லா அலைவரிசையிலும் கொரகொரவென்று ஒரு சத்தம் வார்த்தையின்றி பயமுறுத்தி எமெர்ஜென்சித் தகவல் கொடுத்தது. அந்த ராத்திரி தொடங்கி பிபிசி, இந்தியாவின் பொய் சொல்லாத வானொலி ஆனது.

“போத்தி, உள்ளே வந்து படுங்க, காலையிலே பார்க்கலாம். உங்க ரூமுக்குள்ளே போக வழி பிறந்துடும். அது நிச்சயம். ஆனால், நாளைக்கு தேசம் என்ன ஆகுமோ, அது தெரியாது.”

நாராயணசாமி இன்னொரு முறை டிரான்சிஸ்டரின் குமிழைத் திருப்ப, சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் அசோக் மேத்தா, மது தந்த்வாதே அரெஸ்ட் ஆனார்கள்.

“ஒவ்வொரு தடவை ரேடியோ வைக்கறபோதும் புதுசா யாராவது தலைவர் கைதான செய்தி. இனிமேல் நான் கேட்கப் போறதில்லே. விடிஞ்சுதான்” என்றார் சலிப்போடு நாராயணசாமி.

நான் தூக்கம் பிடிக்காமல் அடுத்த சில மணி நேரங்கள் நாராயணசாமி சார் அறையில் வெறும் தரையில் புரண்டபடி கிடந்தேன். நாளைக்குக் காலை மாடிப்படி நிறைத்து, தெருவிலும் உஸ்மான் ரோடிலும் பஸ் ஸ்டாண்டிலும் ரங்கநாதன் தெருவிலும், மேற்கு மாம்பலத்திலும் அகஸ்தியர் கோயிலிலும் இந்தி பிரசார சபைக் கட்டடத்துக்குள்ளும், எதிரே லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தியின் வாசகர் வட்டம் இயங்கிய தீரர் சத்தியமூர்த்தியில் சுந்தரா மாளிகையிலும் ராணுவம் நிற்கும். நான் ஆபீஸ் போக ஸ்கூட்டருக்குப் போட பெட்ரோல் கிடைக்காது. பஸ் கிடைக்காமல் ராணுவம் அவற்றில் நிறைந்து வெங்கட்நாராயணா வீதியில்

வீறிட்டு ஓடும். நடந்தே ஆபீஸ் போவேன். பச்சைச் சீருடை உடுத்திய சிப்பாய்கள் கத்தி பொருத்திய துப்பாக்கிகளைக் காட்டி வழியில் போகவிடாமல் தடை செய்வார்கள். காமராஜர், மொரார்ஜி தேசாய், ஜெயப்ரகாஷ் நாராயணன் என்று முதியவர்களை விலங்கிட்டுத் தெருவில் இழுத்துப் போவார்கள்.

புரண்டு படுத்தேன். இடுப்பில் துண்டும் இளைத்த உடம்புமாக அறைக்கு வெளியே நிற்பது யார்? காந்தியா? தாடி வைத்த காந்தி. எல்லைக் காந்தியா? 'நாடே ஒழுங்கைக் கடைப்பிடிக்க நேரம் வந்துவிட்டது' என்கிறார் அவர். எழுந்து நிற்கச் சொல்கிறார் என்னை. எழுந்து நிற்க முயற்சி செய்கிறேன். முடியவில்லை. சோம்பலாக இருக்கிறது. தளர்ச்சியாக இருக்கிறது. பயமாக இருக்கிறது. விடியப் போகிறது என்று பல குரல்கள் சேர்ந்து ஒலிக்கின்றன. அப்புறம் அதையே கூட்டமாகச் சேர்ந்து பாடுகின்றன. இருட்டில் புறாவின் இறகுச் சிலிர்ப்புகள். கைகளின் ஓரம் கழுகின் நகங்கள். அந்த நகங்களிடம் இருந்து தப்ப இன்னும் புரண்டு படுக்கிறேன். உடல் அனலாகக் கொதிக்கிறது.

நான் எழுந்தபோது விடிந்து வெகு நேரமாகி இருந்தது. மெல்ல அறைக்கு நடந்து கதவைத் தள்ளினேன்.

திறந்துகொண்டது.

நேற்று அதை யாரும் முயற்சி செய்யவில்லை. சாவி தேடுவதில் நேரம் தொலைந்து போனது. எமர்ஜென்சி பயத்திலும் என் நேரம் கடந்து போயிருந்தது. பயத்தைக் கொன்று போடு, எந்தக் கதவும் தடுத்து அடைத்து இருக்காது. தள்ளினால் திறக்கும் அதெல்லாம். நம்பிக்கை எழுந்து வந்தது.

"ஜெயப்ரகாஷ் நாராயணை இன்னிக்கு காலையிலே ரெண்டு மணிக்கு அரெஸ்ட் பண்ணி தில்லி பார்லிமெண்ட் வீதி போலீஸ் ஸ்டேஷன்லே வச்சிருக்காங்களாம். வினாச காலே விபரீத புத்தி. நான் சொல்லலே. அவர்தான் சொன்னதா பிபிசி நியூஸ்", குல்கர்னி படி இறங்கிப் போனார்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்த காலை ஏழு மணி. உள்ளே போய் டிரான்சிஸ்டரை ஆன் செய்தேன்.

‘இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியவர்கள் இப்போது நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.’

கேட்கத் தொடங்கினேன்.

அத்தியாயம் 2

# ஆகஸ்ட் 1975

தி. நகர் பஸ் ஸ்டாண்டில் பதிமூன்றாம் நம்பர் பஸ்ஸைப் பிடிப்பதைவிட கஷ்டமான வேலை கிடையாது. திருவல்லிக்கேணி போகும் பஸ் அது.

காலை நேரத்தில் எல்லாக் கூட்டமும் அண்ணாசாலைக்கு அலைபாய்ந்து கொண்டிருக்கும். அப்போதும் திருவல்லிக்கேணி பஸ் நிரம்பி வழியும். மதியம் மீதி ரூட் பஸ் எல்லாம் சும்மா போகும். என்ன காரணத்துக்காகவோ மாம்பலம் மனுஷர்கள் வேகாத வெயில் என்றாலும் திருவல்லிக்கேணி போவார்கள். சாயந்திரம் பீச் போகிற கூட்டம். அதற்கு நாள், கிழமை கிடையாது. அந்தப் போக்குவரத்து முடிந்து இருட்டும்போது சாப்பாட்டுக் கூட்டம் கிளம்பிவிடும். விளம்பரப் பலகை இல்லாத, மெஸ் என்ற உணவகங்களில் நாவுக்கு ருசியான ராத்திரி சாப்பாட்டுக்காக அலைகிற மத்திய வர்க்க பிரம்மசாரிகள் நாங்கள். மேன்ஷன்களில் குடியிருப்பவர்கள்.

தி.நகரில் இருந்து ஒவ்வொரு பஸ் ஸ்டாப்பாக நின்று நின்று திருவல்லிக்கேணி போக குறைந்தது ஒரு மணி நேரமாவது பிடிக்கும். ஸ்கூட்டரை எடுக்கலாம் என்றால் மேன்ஷனே சுற்றுலாப் பயணம் போகும் குழு மாதிரி கூட்டமாகக் கிளம்ப வேண்டியிருப்பதால் பஸ்தான் சரிப்படும்.

அது ஆகஸ்ட் 15. வெள்ளிக்கிழமை. சுதந்திர தின விடுமுறை என்பதால் எங்கள் கோஷ்டியில் சிலர் அன்றைக்கு ரிலீஸ் ஆன 'ஷோலே' என்ற இந்திப் படம் பார்க்கப் போய் வந்தார்கள். மற்றவர்கள் ஆளாளுக்கு ஒரு

திசையில் ஒன்று விட்ட, இரண்டு விட்ட உறவுகளைத் தேடிப்போய் காப்பிப்பொடி சரியாக வடிகட்டாத ரெண்டாம் டிகாஷன் காப்பியும், உறவுக்கார வகையில் வம்பும் கேட்டு வந்தோம். சந்திக்கப் போன எல்லோருக்கும் கூட விடுமுறை என்பதால் அவர்களும் எங்கெங்கோ அவசரமாகக் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். உறவில் சாப்பாடு கிட்டாத சோகமான தினம் அது.

போதாக்குறைக்கு அண்டைநாடான பங்களாதேஷ் ஜனாதிபதி ஷேக் முஜிபுர் ரஹ்மானை ராணுவம் சுட்டுக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாக ஆகாசவாணி, எமர்ஜென்சி பிரசாரத்துக்கு நடுவே சொன்னது.

ஓட்டல், பேக்கரி போன்ற தீவன மையங்கள் மூடப்பட்டு விடக்கூடும் என்ற அச்சம் எழுந்தது உண்மை. ஆனால் அது கலைந்து போக, கடையடைப்பு இல்லாமல், அரைக் கம்பத்தில் எங்கோ கொடி இறக்கிப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது. எப்போதுமே எமர்ஜென்சி முகாரி பாடிக் கொண்டிருப்பதால் ஆகாசவாணியில் பங்களா தேஷ் செய்தி பெரிதாகச் சொல்லப்படவில்லை.

ராத்திரி சாப்பிட முதலில் திருவல்லிக்கேணி புறப்பட்டவர்கள் நானும், கீழே கடைசி அறையில் புதுசாக வந்திருக்கும் விஸ்வநாதனும்தான்.

ரகசியமே பேசத் தெரியாத குரல் விஸ்வநாதனுக்கு. கிட்டதட்ட முப்பது வயது இருக்கலாம். ஏழு வருஷமாக மெட்ராஸின் பல பகுதிகளிலும் மேன்ஷன் வாழ்க்கை பழகி சுகம் கண்டு இப்படியே மீதி வாழ்க்கையைக் கழித்துவிடலாம் என்று கனவு கண்டுகொண்டிருப்பவன். ரொம்ப, ரொம்பவே வெளிப்படையாகப் பேசுகிறவன் என்று சொல்லலாம்.

“ஒன்பது மணிக்கு ஆபீஸ் கிளம்பி போய்ட்டேன். அட்டெண்டென்ஸ்லே கையெழுத்து போடறதுக்கு முந்தி மூத்ரம் முட்டிட்டு வந்துதா, போய்ட்டு போகலாம்னு டாய்லெட்டுக்குள்ளே போனேன். வெளியிலே நாலு பீங்கான்லேயும் சாவகாசமா இன்னிக்கு முழுசும் வேறே வேலை இல்லைங்கற மாதிரி எவனெவனோ அடிச்சுண்டிருக்கான். உள்ளே ப்ளஷ் அவுட்லே போய் நின்னு கதவைச் சாத்தினேன். தொறந்து

டொரடொரடொரன்னு பியர் குடிச்ச மாதிரி சுகமா போயிண்டிருந்தேன் பாரு. பிளாஸ்டிக் வாளி பின்னாடி இருந்து பெருச்சாளி ஒண்ணு உர்ருனு முறைச்சுக்கிட்டே வெளியே வருது. கை நடுங்கி பேண்ட் முழுக்க நனஞ்சு போச்சு. என்ன பண்றது. தண்ணியை கர்ச்சீப்லே எடுத்து தொடச்சு... ஒண்ணும் சரியா இல்லே. இந்தி நியூஸ் பேப்பர் தைனிக் ஜாக்ரனோ என்னமோ ரிசப்ஷன்லே கிடந்தது. எடுத்து இடுப்புக்கு கீழே வர்ற மாதிரி பிடிச்சுண்டு, வயித்துவலி, டாக்டர் கிட்டே போறேன்னு லீவு சொல்லிட்டு ஆட்டோ பிடிச்சு ரூமுக்கு வந்துட்டேன். ஆட்டோ டிரைவர் முஸ்க் முஸ்குன்னு மூக்கை உறிஞ்சுண்டிருந்த மாதிரி இருந்தது. கண்டுக்கலே. ரூமுக்கு ஓடி வந்து மாத்திண்டாச்சா, அப்புறம் மீதி லீவை என்ன பண்றது? திருவல்லிக்கேணி புறப்பட்டுப் போயிட்டேன். நம்ம மனுஷா அங்கே நிறைய. ஆபீஸ் போகாம ஜாகையிலே இருந்து சிலபேர் வேலை பார்க்கறது தெரியுமோ? அவாளுக்கு எமர்ஜென்சியும் ஒண்ணுதான். மத்த திவசமும் ஒண்ணுதான்."

நேற்றுதான் அவன் திருவல்லிக்கேணி போய்த் திரும்பி இருந்தான். இன்றைக்கும் அங்கே போக குறையாத ஆர்வம் காட்டினான். அங்கே மீசை வைத்த பெருமாள் கோயிலும், ஒடுங்கிய தெருவும், பழைய கட்டடங்களும், எப்போதும் காற்றில் வரும் கடல் வாசனையும் எத்தனை அனுபவித்தாலும் தீராது என்று அவன் சொல்வான். அப்புறம் ஏன் அங்கே அறையில் இருக்காமல் தி.நகருக்கு மேன்ஷன் அறை தேடி வந்தான்?

"அந்த மேன்ஷன் எதிலுமே தனியாகத் தங்க முடியாது. ரூம் ஷேரிங். இங்கே கொஞ்சம் கூடுதலா கொடுத்தாலும், சின்னதா இடம் இருந்தாலும், ஒவ்வொருத்தருக்கும் தனி ரூம். அந்த சுதந்திரம் வேணும். அண்டர்வேரோடு ரூமிலே அலைஞ்சுண்டிருப்பேன். பட்டாணி சாப்பிட்டு வந்து எட்டுத் திசையும் டர்ர்ருனு கொட்டி முழக்குவேன். வெளிக்கி வரலேன்னா குப்புகுப்புன்னு புகை விட்டுண்டு ஒரிஜினல் கிடா மார்க் சுருட்டு குடிப்பேன். ஷவர்லே குளிச்சபடிக்கே ஒண்ணுக்கு அடிப்பேன். அதெல்லாம் ரெண்டு, மூணு பேர் இருக்கப்பட்ட மேன்ஷன் அறையிலே முடியாது."

முடியுமோ முடியாதோ, விஸ்வநாதனோடு எந்த ஜென்மத்திலும் இருப்பிடத்தைப் பங்கு வைத்துக்கொள்ள முடியாது.

ஆனாலும் அவனுக்கு நூற்றுக்கணக்கில் சவுத் மெட்ராஸ் பூரா நண்பர்கள். வடசென்னையில் அதைவிட அதிகமாம். அவன்தான் சொன்னான். வந்து ஒரு வாரத்தில் எங்கள் எல்லோரையும் வா போ விளிக்கு மாற்றி விட்டான் விஸ்வநாதன். எனக்கு சிறப்பாக, வாடா, போடா மரியாதை.

மெல்லச் சேர்ந்த எங்கள் எட்டு நபர் குழு வெற்றிகரமாக திருவல்லிக்கேணி பஸ் பயணம் முடித்து பெல்ஸ் ரோடு. இறங்கினோம். என்னமோ தெரியவில்லை, இன்றைக்கு நின்று நின்று வராமல் முக்கால் மணி நேரம் மட்டும் பயணம் செய்து திருவல்லிக்கேணி வந்துவிட்டோம்.

“ஏழு மணிதான் ஆவுது. எட்டு மணிக்குதான் ராவ்ஜி, சைடோஜி, தீனாஜின்னு எல்லா ஜி மெஸ்ஸும் களை கட்டும். தீனாஜி மெஸ்ஸுக்கு இன்னிக்கு வரேன்னு சொல்லி விட்டிருக்கேன்.”

விஸ்வநாதன் தோளில் பெரிய துணிப்பையை மாட்டியபடி சொன்னான். பையிலே என்ன என்று கேட்டேன்.

“நீ இதெல்லாம் பத்தி கேட்டிருக்கக்கூட மாட்டே” என்ற முன்னறிவிப்போடு பட்டியல் ஒப்பித்தான் அவன்.

“உப்புப் போட்டு உலர்த்தின நார்த்தங்காய் ஊறுகாய், சுக்காக் காஞ்சு சுருங்கின எலுமிச்சை, மணத்தக்காளி வத்தல், தாமரைக்கிழங்கு வத்தல், தும்ப்டிக்கா வத்தல்.”

என்னமோ மற்றதெல்லாம் தெரிந்த மாதிரி தும்ப்டிக்கா வத்தல் என்றால் என்ன என்று கேட்டேன். கரப்பான் பூச்சியை வறுத்து வைச்ச மாதிரி குண்டு குண்டாக இருக்குமாம். சாப்பிடப் போகிற நேரத்தில் தேவையான வர்ணனைதான். விஸ்வநாதனிடம் ஏதும் இப்போதைக்குக் கேட்கக் கூடாது என்று முடிவு செய்து கொண்டேன்.

அவன் சாப்பாட்டை எதிர்பார்த்த சந்தோஷத்தில் பாடியபடி வந்தான், “மேரே ஸப்னோம் கி ராணி கப் ஆயேகி தும்...”

“வேணாம் விசு, இது தேசவிரோத கானம். நம்ம எல்லோரையும் கைவிலங்கு போட்டு கூட்டிப் போயிடுவாங்க. மெஸ் சாப்பாடு கிடைக்காது அப்புறம்.”

அவனை அடக்கினேன். பின்னே இல்லையா? போன மாதம் புதுதில்லி ஜவஹர்லால் நேரு யூனிவர்சிடி மாணவர்கள் அறுபது பேரை உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (Maintenance of Internal Security Act - MISA) மிசாவில் கைது செய்து உள்ளே தள்ளிவிட்டதாக குல்கர்னி சொன்னது நினைவு வந்தது. நேரு பெயரில் பல்கலைக் கழகம் இருந்தாலும் மார்க்சிஸ்டுகளின் கூடாரமாம் அது. அந்த அறுபது மாணவர்களும் எமர்ஜென்சி காலத்தில் தைரியமாக காரல் மார்க்ஸின் கம்யூனிச சித்தாந்தப் புத்தகங்களைப் படிப்பதோடு எமர்ஜென்சியை எதிர்த்துப் பேசக் கூட்டம் சேர்க்க ஆராதனா படப் பாடல்களையும் பாடினார்களாம்.

அறுபது மார்க்சிஸ்ட்கள் ஒன்று சேர்ந்து ஸப்னோம் கி ராணி என்று கோஷ்டியாகக் காதல் பாட்டு பாடிக்கொண்டு வந்தால், ஷர்மிளா டாகூர் மிரண்டு, காதைப் பொத்திக்கொண்டு ஓடியே போய்விடுவாளாக்கும். அதற்காக எஸ்.டி.பர்மனின் ‘காகே கோ ரோயே’ - ஏன் அழறே என்று துவங்கும் சங்கீத அழுகையை கோஷ்டி கானமாகப் பாட முடியுமா? துக்கப்பட வேண்டிய எதற்கும் துக்கப்படாத இந்த நாட்டின் தேசிய கீதமாகவே இசைக்க வேண்டிய பாடல் அதுவன்றோ.

“ஒரு நிமிஷம் இருங்க.” விஸ்வநாதன் எங்களைத் தெரு முனையில் நிற்கச் சொன்னான்.

“என்ன விஷயம் விசு?” பழநியப்பன் கேட்டான்.

“என் ஃப்ரெண்ட் குரு இங்கேதான் இருக்கான். அவனையும் கூட்டிப் போகலாம். போத்தி, இந்த மூட்டையைத் தூக்கிக்க.”

வடகம், வற்றல் விற்பனைப் பிரதிநிதிபோல நான் மூட்டை சுமந்து நிற்க விஸ்வநாதன் மங்கிய தெருவிளக்கு வெளிச்சத்தில் அவசரமாக பக்கத்துச் சந்தில் திரும்பி இருளில் மறைந்தான்.

ஐந்து நிமிடம் கழித்து மெலிந்து உயரமான ஒரு முப்பது வயசுக்காரனோடு வந்து சேர்ந்தான். தோளில் ஜோல்னா பையும், முகத்தில் ஷேவ் செய்யாத முள்ளுதாடியும், ஒட்ட வெட்டிய தலைமுடியுமாக இருந்தவர் குருநாதன் என்று அறிமுகமானார்.

“என் ஸ்கூல் மேட், ப்ரூஃப் ரீடரா இருக்கான்.”

எந்தப் பத்திரிகையில் என்று குருநாதனைக் கேட்டேன். நான்கைந்து பதிப்பகங்களுக்கு அவர்கள் பிரசுரம் செய்யும் புத்தகங்களுக்கு பிழை திருத்திக் கொடுக்கிற வேலை செய்கிறதாகச் சொன்னார் குருநாதன். எடிட்டிங்கும் செய்வாராம். எழுதிக் கொடுப்பதும் அதில் சேர்த்தியா என்று கேட்டேன். இல்லை என்றார்.

எல்லாரும் சேர்ந்து மெஸ்ஸுக்கு நடந்தபோது ஒன்றிரண்டு வார்த்தை மட்டும் பேசினார் அவர். என் பக்கத்தில்தான் சாப்பிட உட்கார்ந்தார்.

விஸ்வநாதன் வற்றல் வறுவல் மூட்டையை மெஸ்காரரிடம் கொடுத்து பதினைந்து நிமிடம் காத்திருக்க அதெல்லாம் வறுபட்டு வந்தது. கூடவே நெய்யும், கறிவேப்பிலைப் பொடியும், கோங்குரா சட்னியும்.

சாதம் மட்டும் ஒரு வெங்கலப்பானை நிறைய வந்தது முதலில். ஒவ்வொரு வத்தலாகப் போட்டுச் சோற்றில் குழைத்துச் சாப்பிட, பசி கூடுதலாகிக்கொண்டு போனதே அல்லாமல் வயிறு அடைக்கவில்லை.

தும்ப்டிக்காய் என்ற உரைப்பும் உப்பும் கூடிய கரப்பான்பூச்சி வடிவிலான வற்றலை வாழ்க்கையிலேயே முதல்தடவை சாப்பிட்ட நானும் அங்கே பலரும் கண்ணீர் தளும்ப அந்த அற்புதச் சுவையை அனுபவித்தோம்.

“அது கரப்பான் பூச்சி மாதிரி இல்லை. வறுத்தால் எல்லா வற்றலுமே இந்த ஷேப்பில்தான் வரும்” என்றார் குருநாதன். அவர்கள் பக்கத்தில் இதை முறுக்கு வற்றல் என்பார்களாம். எது அவர்கள் பக்கமோ.

சாப்பிட்டு விட்டுப் போகும்போது குருநாதன் அறை வாசல்வரை நடந்தோம். சின்னச் சந்தில் ஒடுங்கிய வீட்டு மாடி அது. மாடிப் படியில் யாரோ உட்கார்ந்திருந்தார்கள்.

“நம்ம ஊர்த் தம்பிதான்.”

குருநாதன் சிரித்தார்.

“சினிமா பாட்டெழுதற கனவுகளா?” விஸ்வநாதன் விசாரித்தான். டைரக்டர் கனவோடு ஊரை விட்டு வந்தவன் அந்தத் தம்பி என்று குருநாதன் சொன்னார்.

பையன் எழுந்து நின்றான். “சாப்பிட்டியா?” குருநாதன் கேட்க, அவன் சொன்ன பதிலை இல்லை என்றுதான் நான் எடுத்துக் கொண்டேன்.

“இப்பத்தான் வந்தேன். கதவு பூட்டியிருக்கேன்னு படியிலே உக்காந்திருந்தேன். வீட்டு ஓனர் யார் என்னன்னு விசாரிச்சார். உங்களுக்கு பிரச்சனை ஆயிடுமோ அண்ணே?”

அவன் குருநாதனைக் கேட்க அப்படி ஒன்றும் இல்லை என்றார் குருநாதன். கதவைத் திறந்தபடி எங்கள் எல்லோரையும் உள்ளே வரச் சொல்லிக் கூப்பிட்டார் அவர். அத்தனை பேரும் அந்தப் பழைய மர மாடிப்படியில் ஏறி நகர்ந்தால் படிக்கட்டே விழுந்துவிடலாம். அப்புறம் ஒருநாள் சாவகாசமாக வருவதாகக் கூறி நாங்கள் நடந்தோம்.

மேன்ஷனுக்கு வந்ததும் விஸ்வநாதனிடம் கேட்டேன், “புத்தகத்துக்கு ப்ரூஃப் ரீடிங் செஞ்சு எவ்வளவு வருமானம் வரும்?”

“புத்தக வேலையிலே மாசம் இருநூறாவது கிடைக்கும்னு நினைக்கறேன். அப்புறம் ஏதோ எழுதறான். ஆனா எந்தப் பத்திரிகையிலேயும் அவன் எழுதி வந்து நான் படிச்சதில்லே.”

“பத்திரிகை எதிலாவது உன் ஃப்ரெண்ட் சேரலாமே...”

“சேரலாம். நானே தினரத்தினம் பத்திரிகையிலே என் ஜர்னலிஸ்ட் ஃப்ரெண்ட் மூலமா சேர்த்து விட்டேன். ரிப்போர்ட்டர் வேலைதான். அவனாலே அங்கே பத்து நாளுக்கு மேலே தாக்குப்பிடிக்க முடியலே. கையைக் கட்டிப் போட்ட மாதிரி இருக்கு. எனக்கு சரிப்பட்டு வரலேன்னு ரிசைன் பண்ணிட்டு வந்துட்டான். ஜாயின் பண்ணும்போதே போயிடுவேன் போயிடுவேன்னு சொல்லிண்டிருந்தானாம். தினப்

பத்திரிகை ப்ரஷர் தாங்க முடியாது. உனக்கு வாரப் பத்திரிகையிலே யாராவது தெரிஞ்சா குருநாதனுக்கு சொல்லு. அங்கே கொஞ்சம் தாக்கு பிடிப்பான்."

அதற்கு ஒரு வாரம் சென்று எங்கள் பேங்க் கிளைக்கு தொழிற்சங்கத் தலைவர் ஒருத்தர் வந்திருந்தார். அதாவது முன்னாள் தொழிற்சங்கத் தலைவர். ராகுல் சங்கமித்திரன் என்று பெயர்தான் கொஞ்சம் கடபுடாவென்று இருக்கும். புனைபெயர்தான். மாலைப் பத்திரிகை ஒன்று, ஊர்ப் பேச்சு என்று பெயர். ஆசிரியராக, பதிப்பாளராக இருந்து நடத்துகிறார். சுமாராக விற்கிறது என்று கேள்வி. நான் தொடர்ந்து வாங்கிக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் முழுக்க எமர்ஜென்சி ஆதரவுப் பத்திரிகையாக அவதாரம் எடுத்ததால் வாங்குவதை நிறுத்திவிட்டேன்.

மேனேஜர் என்னை அவரிடம் அறிமுகப்படுத்தினார். 'உங்களுக்கு எல்லா உதவியும் இவர் செய்வார்' என்று சொல்லி என்னைக் கைகாட்டி விட்டு, ரீஜனல் ஆபீஸில் மீட்டிங் என்பதாக அவசரமாகக் கிளம்பிப் போய்விட்டார் அவர்.

"ஒண்ணும் பெரிய விஷயம் இல்லே தம்பி. லோன் கீன் எல்லாம் வேணாம்." வந்தவர் நிம்மதியை ஏற்படுத்தினார். "ஒரு அக்கவுண்ட் ஓபன் பண்ணணும்."

கோல்டன் கஃபேயில் இருந்து டீ வரவழைத்துக் கொடுத்தேன். ஊர்ப் பேச்சு பத்திரிகை எப்படி நடக்கிறது என்று கேட்டபடி நடப்புக் கணக்கு திறக்க அச்சடித்த கரண்ட் அக்கவுண்ட் ஓபனிங் ஃபாரம்களை வெளியே எடுத்து வைத்தேன்.

"நல்லா போவுது. ஊர்லே பத்து பேர் வாங்கினா, இருக்கற ஏர்போர்ட், விமான சர்வீஸ்லே எல்லாம் நூறு இருநூறுன்னு வாங்கி பயணிகளுக்கு தர்றாங்க. ஆக கையை சுட்டுக்கலே. பெரிய லாபமும் இல்லே. நீங்க படிக்கறீங்களா?"

எமர்ஜென்சிக்கு முன் வாங்கிட்டிருந்தேன். வேணாம். எதுக்கு அதெல்லாம்.

“சார், ஊர்ப் பேச்சுன்னு கணக்கு ஓபன் பண்ணணுமா? உங்க பெயர்லேயா?”

“சிந்துபாத் அப்படின்னு பெயர்.”

‘அது தந்தி பேப்பர் கார்ட்டுன் ஆச்சே. நான் ஆரம்பப் பள்ளியிலே படிக்கிற காலத்தில் இருந்து இன்னும் தொடரும் போட்டு தினம் வந்துக்கிட்டிருக்கே.’ நினைத்துக் கொண்டேன். கேட்கவில்லை.

“நந்தனம் பத்திரிகை நின்னு போச்சில்லே, அந்த அச்சகத் தொழிலாளர்கள், பத்திரிகையாளர்கள் இவங்களுக்கு எப்படியாவது உத்தியோகம் தரணும்னு தோணிச்சு. அதான் அவங்களை வச்சு ஆரம்பிக்கறேன்.”

அவர் சிந்துபாத் பத்திரிகைக் கணக்கை ஆரம்பித்துவிட்டுப் போகும்போது கேட்டே விட்டேன் - “சார், நீங்க எமர்ஜென்சி ஆதரவாளர். உங்க தினசரி மாதிரி சிந்துபாத்தும் எமர்ஜென்சி சப்போர்ட்டர்தானா?”

“அதுலே என்ன சந்தேகம்?” அவர் சிரித்தபடி கேட்டார்.

“இல்லே, நந்தனத்திலே வருஷக் கணக்கா இந்திராவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிச்சு எழுதிட்டிருந்தாங்க. அவங்களை வச்சு நீங்க எப்படி…”

“வாழ்த்த வைக்கப் போறேன்னு கேக்கறீங்களா? செஞ்சுடலாம். பிரச்சனை இல்லே.”

அவர் வெளியே போகும்போது குருநாதன் நினைவு வர “சிந்துபாத்துக்கு ப்ரூஃப் ரீடர் வேண்டியிருக்குமா, என் நண்பர் ஒருத்தர் இருக்கிறார்” என்று கேட்டேன்.

“வரச் சொல்லுங்க. அகௌண்ட் ஓபன் பண்ணின அதே அட்ரஸ்தான்.”

அந்த வாரக் கடைசியில் சாயந்திரம் நான் பேங்க் வேலையாக மேனேஜர் அனுப்பி திருவல்லிக்கேணியில் ஒரு மதிப்பீட்டாளரைப் பார்க்கப்

போயிருந்தேன். அபீஷியல் வேல்யுவர். கட்டடங்களுக்கு என்ன விலை மதிப்பு இருக்கும் என்று அளந்து, ஆராய்ந்து பார்த்து சொல்லக்கூடியவர். பேங்க் அங்கங்கே இப்படி அங்கீகரித்த வேல்யுவர்களின் வேலையைப் பயன்படுத்திக் கொள்வது வழக்கம். ஒரு பெரிய கட்டடத்தை அடமானமாக வைத்து தொழிற்கடன் யாரோ கேட்டிருந்தார்கள் அப்போது.

வேல்யுவரைப் பார்த்துவிட்டு வரும்போது வழியில்தான் குருநாதன் இருக்கும் முடுக்குச் சந்து. சரி, இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது. ப்ரூஃப் ரீடரையும் பார்க்கலாமே என்று எண்ணம்.

எனக்கு புத்தகம் சம்பந்தமான எல்லா காரியமும் சுவாரசியமானது. எழுத்தில் இருந்து நூலாகிற மாயவித்தை எப்படி நிகழ்கிறது என்பதில் ஈர்ப்பு. பத்திரிகைக்கு புரூஃப் பார்க்கிறது இஷ்டமா என்று கேட்க, நான் குருநாதனின் மாடிக்குப் படியேறினேன். சிந்துபாத் பற்றி அதற்கப்புறம் சொல்லணும்.

மும்முரமாக தரையில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார் அவர். நான் வாசலில் நின்றதும் உடனே தலை தூக்கிப் பார்த்து எழுதியதை ஜமுக்காளத்தின் கீழே பத்திரப்படுத்திவிட்டு எழுந்து நின்றார்.

“நீங்களே புத்தகம் எழுதறீங்களா?” என்று கேட்டேன். சிரித்தார். தலையைக் குலுக்கிக்கொண்டு, வாங்க என்றார்.

“இந்த மாதம் புத்தகம் எதுவும் அச்சுக்கு போகல்லே. நாலு பதிப்பகத்திலும் அதான் நிலைமை. லைப்ரரி ஆர்டர் கவர்மெண்ட் கிட்டே இருந்து ஆறு மாசமா எதிர்பார்க்கறது இன்னும் வரலயாம். கூடுதலா பணம் முடக்கி புத்தகமா அச்சடிச்சு அடுக்கி வச்சுக்க வேணாம்னு அவங்க நினைக்கறாப்பல இருக்கு.”

பாவமாக இருந்தது. அவரிடம் நந்தனம் பத்திரிகை தெரியுமா என்று கேட்டேன்.

“அதென்ன தெரியுமான்னு கேக்கறீங்க. ரெண்டு தலைமுறையா நிறைய வாசிக்கப்படற தமிழ் குடும்பப் பத்திரிகைகள்லே அதுவும் ஒண்ணாச்சே…

ஆனா, நிதி நிலைமையும் சரி இல்லாம, எமர்ஜென்சி பத்திரிகை தணிக்கையையும் சமாளிக்க முடியாம ரொம்ப கஷ்டப்பட்டாங்க பாவம். பத்திரிகையை ரெண்டு மாசமா நிறுத்தி வச்சிருக்காங்களே…”

அவர் வேதனையோடு சொன்னார்.

“ஆமா, அதேதான். அந்த பத்திரிகைகாரங்க, தொழிலாளர்கள் எல்லோருக்கும் பிழைப்பு முழுக்க இல்லாமல் போகக் கூடாதுன்னு எனக்கு வேண்டியவங்க சிந்துபாத் அப்படீங்கற பெயர்லே ஒரு ஃபோர்ட்நைட்லி, பதினஞ்சு நாளைக்கு ஒருதடவை வர்ற தமிழ்ப் பத்திரிகை ஆரம்பிக்கறாங்க. சம்பளம் ஆகக் குறைவுதான். ஆனா வரும். பத்திரிகை வளர்ந்ததுன்னா இன்னும் அதிகமாகலாம். இல்லேன்னா…” நான் நிறுத்தினேன்.

“இல்லேன்னா?” குருநாதன் கேட்டார்.

“நாளைக்கே நந்தனம் பத்திரிகை திரும்ப ஆரம்பிச்சுதுன்னா இங்கே வேலைக்கு வந்த பலரும் அங்கே போயிடுவாங்க. அப்போ சிந்துபாத் நின்னுடும்.”

“சரி என்கிட்டே இது ஏன் சொல்றீங்க சார்? நான் நந்தனம் ஸ்டாஃப் இல்லியே?”

“இல்லேதான். ஆனா சிந்துபாத்துக்கு ஒரு ரிபோர்டர் ப்ளஸ் ப்ரூஃப் ரீடர் ப்ளஸ் நிருபர் ஒருத்தர் வேண்டி இருக்கு. உங்க கிட்டே அந்த அனுபவம் இருக்குன்னு விஸ்வநாதன் சொன்னார்.”

அவர் சிரித்தார். “ரொம்ப நன்றி. என் மேல் பரிதாபப்பட்டு எதுவும் செய்ய வேணாம். என் ஒருத்தனுக்கு தேவையான பணம் எனக்கு வருது.”

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மாடிப்படியில் யாரோ ஏறி வரும் சத்தம். “சாப்பிட்டியாடே?” என்று வந்தவனைக் கேட்டார் குருநாதன். இல்லே என்றான் அந்தப் பையன். “போய் ஆகாரம் கழிச்சுட்டு வா.” அவர் சட்டைப் பையில் நான்காக மடித்து வைத்திருந்த ஒரு இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து நீட்ட வாங்கிக்கொண்டு அவன்

படியிறங்கினான். இவன் போன தடவை வந்தபோது பார்த்தவன் இல்லை.

என் பார்வையைப் புரிந்து கொண்டவர்போல் குருநாதன் சொன்னார் -

“ஊர்லே இருந்து, எங்க வட்டாரத்திலே பெரும்பாலும். பசங்க எல்லோருக்கும் பட்டணத்துலே சாதிக்கறது ஒரு பெரிய கனவு. பலரும் சினிமா பாட்டு எழுத, கதை வசனம் எழுத இப்படி சான்ஸ் தேடி வந்துடறாங்க. நடிக்கறேன்னு கூட சில பசங்க வந்து சேர்றது உண்டு. என் விலாசத்தை எப்படியோ தெரிஞ்சுக்கிட்டு நேரே இங்கேதான் வருவானுங்க. நான் இப்படி என்னைத் தேடி வர்றவங்க கிட்டே சினிமா வேணாம், விஷ விருட்சம்னு சொல்லி திருப்பி அனுப்பப் பார்க்கறேன். ஊர்லே இவங்களுக்கு ஒரு குறையும் இல்லே. எமர்ஜென்சி கொண்டு வந்துச்சு அந்தம்மா. ராட்சசி, பதவி வெறி பிடிச்ச பிசாசு இப்படி இந்திராம்மாவைப் பற்றிப் பேசறவங்க இருக்கட்டும். ஒரு தலைவரா, மனசுலே கருணை உள்ள மனுஷியா, பொதுஜனத்தைப் பார்த்து பரிதாபப்பட வேறே யார் உண்டு? அவங்க ஏற்பாடு செஞ்சு, பேங்க் மூலமா சாமானியனை முன்னேற்ற ஊர்ப் பக்கம் எம்புட்டு கடன் தர்றாங்க. பேங்குலே கூப்பிட்டுக் கூப்பிட்டுக் கடன் தராங்கன்னு ஊர்லே இருந்து போஸ்ட் கார்ட் போட்டு சொல்றாங்க. இப்போதானே அங்கே இருந்து தானா வரும் கடனை வாங்கிப் போட்டு உருப்பட வழி பார்க்கணும். இங்கே சினிமாவிலே புகுந்து என்னத்தை சாதிக்க? அதைச் சொல்லி அனுப்பறேன்.”

“திரும்பப் போகமாட்டேன்னு சொன்னா?” நான் கேட்டேன்.

“ஊரைப் பார்க்க திரும்பப் போக மாட்டேன்கறானா... ரெண்டு வாரம், ஆமா பதினாலு நாள் சரியா ரெண்டு வாரம் இங்கே என்னோட தங்கி இருக்க, அதாவது வேற யாரும் ஏற்கெனவே என் கூட தங்கி இருக்கலேன்னா, இருக்க நான் அனுமதி கொடுக்கறேன். சாப்பாட்டுச் செலவை அவங்க அவங்கதான் கவனிச்சுக்கணும். அப்படியும் காசு இல்லாம பலரும் வர்றதாலே அந்தச் செலவையும் பெரும்பாலும் ஏத்துக்கறேன். என்ன பெரிசா செலவு? நான் ஜனதா மீல்ஸ்

சாப்பிடறபோது அவனும் கூட இருந்து சாப்பிடட்டுமே. இந்திரா காந்தி பெயரைச் சொல்லிக்கிட்டு வயறு நிறைஞ்சா சரிதான். விசு கொண்டுவந்த வத்தல், வடகம், நெய், பொடி, அவியல் இப்படி ராஜபோஜனம் எதுவும் வேணாம். உசிரை உடம்புலே பிடிச்சு நிறுத்த ஜனதா சாப்பாடு போதும். பதினாலு நாள்லே அவன் சான்ஸ் கிடைக்குதான்னு முயற்சி செய்யணும். இல்லே ஊருக்கு திரும்பிடணும். அல்லது வேறே எங்கேயாவது ஜாகை மாத்திக்கணும்."

"சரி, நான் புறப்படறேன். சாப்பிட வர்றீங்களா?" என்று மரியாதைக்குக் கேட்டேன்.

"நான் ரூமிலேயே சோறு பொங்கி, மோர் ஊத்தி சாப்பிட்டுட்டேன் சார்" என்றார். புறப்படும்போது சிந்துபாத் பத்திரிகை ஆபீஸில் ஆசிரியரைப்போய் சந்திக்கச் சொன்னேன். தலையாட்டினார் குருநாதன்.

சிந்துபாத் வெளியாகி சுமாரான வரவேற்பைப் பெற்றது. பத்திரிகையில் தீபாவளி, பொங்கல், சாவு, பிறப்பு என்று சகலமானதுக்கும் பாட்டு எழுதும் கவிஞர்கள் இருபதம்சத் திட்டத்தையும், இந்திரா, சஞ்சய், பக்ருதீன் அகமதை, வினோபா பாவேயை, இன்னும் எமர்ஜென்சி ஆதரவாளர்களையும் குளிரக் குளிர வாழ்த்தியிருந்தார்கள். ஆளும் கட்சித் தலைவர் தேவகாந்த் பரூவாவைக்கூட ஒரு கவிஞர் செல்லமாக பரூவா நல்ல படுவா என்று பாராட்டியிருந்தார். பரவலாகப் படிக்கப்படும் புதுக் கவிதைகள் இனியவளே, மனக் குமைச்சல், உன் கண்களால் கைதாக்கி, அவசம், ஆயாசம், ஓ காதலனே என்று போய்க் கொண்டிருந்தன. சினிமா நட்சத்திரம் எழுதும் கவிதை என்று புருடா விட்டு பத்திரிகை ஆபீஸிலேயே ஆள் வைத்து எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கச் சிறுகதை, அரைப் பக்கச் சின்னஞ்சிறுகதை, சினிமாக் கதை, சிரிப்பு வராத ஜோக்குகள், பின்- அப் படம் என்று கலந்து கட்டியதாக இருந்த பத்திரிகை அது. ஆபீஸில் டெஸ்பாட்ச் கிளார்க் கலையரசி 'வேதனை எப்போ தீரும்' என்று எட்டு வரியில் ஒரு புதுக்கவிதை - புலம்பல் கவிதை எழுதி அனுப்ப உடனே

பிரசுரமாகி வந்தது மட்டுமில்லாமல் ஆசிரியரே பேங்குக்கு வரும்போது ஒரு பிரதி கொண்டுவந்து கலையரசிக்குக் கொடுத்துவிட்டுப் போனார்.

இரண்டு இதழ் சிந்துபாத் வந்த பிறகு அடுத்த திங்கள்கிழமை நாதன்ஸ் கஃபே பக்கத்து நாராயணன் கடையில் கேட்க, 'இன்னும் வரல்லே சார்.' அதே கதைதான் அடுத்த நாளும். பத்திரிகைக்கு ஃபோன் செய்து கேட்டேன். பத்திரிகை சென்சாரில் ஒரு கட்டுரையை க்ளியர் செய்ய மாட்டேன் என்று பிடித்து வைத்திருக்கிறார்களாம். மலையாள நடிகர் ஒருத்தர் பேட்டியில் இந்திராவைப் பெயர் சொல்லாமல் விமர்சனம் செய்திருக்கிறார் என்று சென்சார் சொல்கிறார்களாம். அதை விட்டுட்டு மற்றதை க்ளியர் பண்ணச் சொல்லியிருக்கேன் என்றார் எடிட்டர் அடுத்து வந்தபோது.

"இங்கே சென்சார்ஷிப் அவ்வளவு கடுமை இல்லே. வடக்கிலே ஒரு வரிகூட அவங்க பாஸ் பண்ணாம அச்சு போடக்கூடாதாம்" என்றார் கணேசன் சாப்பாட்டு மேஜையில்.

"இங்கே தைரியமா எதிர்க்கறாங்க. சோ மாதிரி இருக்கணும். பாருங்க, அட்டை முழுக்க கறுப்பு அடிச்சு துக்ளக் கொண்டுவந்துட்டார். நூறு பக்கம் எழுதினா கூட இதுக்கு மேலே பவர்ஃபுல்லாக எமர்ஜென்சியை எதிர்த்து அழுத்தமாக எழுத முடியாது."

நான் சொல்ல, எதுக்கு நமக்கு அரசியல் என்று யார்யாரோ அவசரமாகக் கையைக் கழுவ எழுந்து போனார்கள். கணேசன் மட்டும் கூட இருந்தார்.

அடுத்த நாள் தில்லி ஆங்கிலப் பத்திரிகை ஆபீஸுக்கு மின்சாரம், தண்ணீர் தராமல் நிறுத்தி எமர்ஜென்சி பற்றி ஆதரவாக எழுதச் சொல்லி நிர்ப்பந்திக்கும் செய்தி பிபிசி மூலம் கேள்விப்பட்டேன். குடும்பக் கட்டுப்பாட்டுக்குக் கட்டாயப்படுத்திக் கூட்டிப் போவது பற்றி சூசகமாகக் குறிப்பிட்டிருந்ததாம் அந்தப் பத்திரிகை. வேறு எந்தப் பத்திரிகையிலும் அது வரவில்லை.

சிந்துபாத் இருவார இதழ், 'நாட்டு நலனைக் கருதி நெருக்கடி காலத்தின் அவசியம் மற்றும் நன்மைகள் பற்றி மக்களுக்கு சினிமாவும்,

வானொலியும், பத்திரிகைகளும் தொடர்ந்து தெரிவிக்க வேண்டும். இன்னும் நூறு வருடம் நெருக்கடி நிலைமை நிலவி நாடு வல்லரசாக வேண்டும்' என்று மொண்ணையாக ஒரு தலையங்கம் எழுதியது. அடுத்த இதழில் கவிஞர்கள் அன்னைக்கு ஒரு நூறு, அவர்தம் பிள்ளைக்கும் ஒருநூறு என்று கணக்குப் போட்டு அளந்து கவிதை வடித்திருந்தார்கள். பத்திரிகை சென்சார் கொட்டாவி விட்டுக்கொண்டே க்ளியர் பண்ணியிருப்பார்கள்.

சிந்துபாத் எடிட்டர், நம் தொழிற்சங்க மாஜி தலைவர் சார் தொலைபேசி என்னைக் கூப்பிட்டார்.

"சார், உங்க ஃப்ரெண்ட் ஒரு ப்ரூஃப் ரீடர் இருக்கார்னு சொன்னீங்களே... கொஞ்சம் வரச் சொல்லுங்க. எங்க ஆளுங்க செய்யற எழுத்துப் பிழை எங்களை சென்சார் போர்ட் முன்னாடி மண்டி போட வச்சிடும்போல இருக்கு" என்றார். இப்போ எப்படி போறீங்க என்று மனதுக்குள் கேட்டுக்கொண்டேன்.

"வீடுதோறும் மரம் வளர்ப்போம்னு ஐந்து அம்சத் திட்ட பபிள் போட்டு காமிக் ஸ்ட்ரிப் போட்டதுலே மறம்னு வந்துடுச்சு. சென்சார்லே அதிகாரி கூடவே ஒரு காது கேட்காத ரிடையர்ட் தமிழ் வித்வானையும் உக்கார வச்சிருந்தாங்க. மறம்னா வன்முறை. வீடுவீடா வன்முறை சொல்லித் தரப் போறீங்களான்னு அவர் கேட்டு, கொடுத்த காசுக்கு கூவி அக்கப்போர் பண்ணி, போன வாரம் பத்திரிகை தொடருமான்னே சந்தேகமாப் போச்சு. நல்ல வேளை, ஓவியர் தெலுங்கர், தமிழ் ஒரு எழுத்து தப்பாயிடுச்சுன்னு சமாளிச்சேன். இனி அது முடியாதுபோல இருக்கு. ப்ரூஃப் ரீடர் அவசியம் வேணும்" என்றார் அவர்.

எமர்ஜென்சி என்ற தும்பை விட்டு எழுத்துப் பிழை என்ற வாலைப் பிடிக்கும், சகலமானதற்கும் சர்க்காரோடு ஒத்துப்போகும் ரிடையர்ட் அறிஞர்களின் எமர்ஜென்சி வருமானம் என்னவாக இருக்கும்?

சனிக்கிழமை சாயந்திரம். ஞாயிற்றுக்கிழமை அடுத்து வரும் வழக்கமான மகிழ்ச்சியைக் கொண்டாட விஸ்வநாதனின் அறையில் நிறைய பியர் சாப்பிட்டோம். அவன் கவிழ்ந்து படுத்துத் தூங்கத் தொடங்கி விட்டான்.

“ஏதாவது பரோட்டா, பிரியாணின்னு வாங்கிட்டு வாடா” என்று சொல்லிவிட்டுத் திரும்பப் படுத்துக் கொண்டான் அவன்.

நாங்கள் திருவல்லிக்கேணி போய் உலகில் இது தவிர வேற எதைப் பற்றியும் நினைக்க வேண்டாம் என்பதுபோல் சோற்றை விழுங்கினோம்.

மற்றவர்களை அனுப்பி வைத்துவிட்டு, ஜம்ஜம் ஸ்டாலில் பரோட்டா வாங்கிக்கொண்டு நான் பஸ் பிடிக்க நடந்தேன். பக்கத்தில்தான் குருநாதனின் மாடிக் குடியிருப்பு. அங்கே போனால் யாருமில்லை.

உடனடியாக சிந்துபாத் பத்திரிகை அலுவலகம் போகச் சொல்லி குருநாதனுக்கு ஒரு காகிதத்தில் குறிப்பு எழுதி கதவு இடுக்கு வழியாக உள்ளே போட்டுவிட்டு வந்தேன். அடுத்த வாரம் அவர் சிந்துபாத் பத்திரிகையில் சேர்ந்துவிட்ட தகவல் கிடைத்தது.

அரசியல் சட்ட திருத்தம் 38, 39, 40, 41 என்று தினசரி ஒன்றாகச் சட்டம் போட்டு சர்வ சக்தி வாய்ந்ததாக மத்திய அரசை மாற்றியமைத்துக் கொண்டிருப்பதை எல்லாம் மக்களாட்சியின் சாதனை என்று வானொலி சொல்ல, கவிஞர்கள் சளைக்காமல் வாழ்த்துக் கவிதை எழுதித்தர, சேர்ந்த இசை என்று ஆகாசவாணியில் நடுப்பகலில் கூட்டமாகப் பாடப்பட்டது.

எதிர்க்கட்சிக்காரர்களான பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதானதையோ, தலைமறைவானதையோ மறந்தும் வானொலி சொல்லவில்லை. பத்திரிகைகளில் அந்த சாதாரண செய்தி ஏதும் வராமல் இட்லிக்கு அரைத்த மாவு புளிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும், ஜலதோஷத்துக்கு பாட்டி வைத்திய மருந்து எது என்று உபயோகமான விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டு வந்தன.

சிந்துபாத், ஊர்ப்பேச்சு இந்தப் பத்திரிகைகளில் பிரமுகர்கள் தொடர்ந்து பாலாறு தேனாறு பாரதத் தெருக்களில் பெருக்கெடுத்து ஓடுவதைக் களிப்போடு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

தமிழ் சினிமா, எமர்ஜென்சி பக்கமே போகாமல் ‘ஏழு சுவரங்களுக்குள் எத்தனை பாடல்’ என்று அபூர்வ ராகங்களை ஆராய்ச்சி பண்ணிக்

கொண்டிருந்தது. ‘அத்தை வெந்துடுவாங்க’ என்று புதிதாக ரிலீஸ் ஆன எம்.ஜி.ஆர் சினிமா ‘இதயக்கனி’யில் ஹீரோயின் ராதா சலூஜா பேசிய தமிழை ரசித்து கொஞ்சம் ஏ-த்தனமாக பேச்சு நீண்டது.

“ரொம்ப கருத்தா வேலை பார்க்கறாருங்க உங்க சிநேகிதர். பேச்சு ஆகக் குறைவு. பேச்சைக் குறை, வேலையைச் செய் அப்படின்னு சஞ்சய் ஜி சொல்றதுக்கு எடுத்துக்காட்டு இவரு. ஆனா அரசு ஆதரவா, இல்லையான்னு கேட்டா சிரிக்கறார். பிழைக்கத் தெரிஞ்சவர்.”

இப்படி, நடுவில் ஒருதடவை பத்திரிகை அலுவலகத்திலிருந்து வந்த யாரோ, பேங்க் கவுண்டர் அமளிதுமளிக்கு நடுவில் நல்ல வார்த்தை சொல்லிப் போனார்கள். ஏதோ, குருநாதன் செட்டில் ஆனால் சரிதான்.

ஒரே வாரம். காலையில் கவுண்டர் திறக்கும்போதே சிந்துபாத் ஆபீஸ் பையன் என்று சொல்லப்பட்ட, காக்கி நிஜார் அணிந்த கிட்டதட்ட அறுபது வயது ஊழியர் மூச்சு இரைக்க சைக்கிளில் வந்து குருநாதன் சார் விலாசம் தெரியுமா என்று கேட்டார்.

நானும் பரபரப்படைந்து என்ன விஷயம் என்று விசாரித்தேன். அவர் அரசியல் சார்பு நிலைப்பாடு, எதிர் நிலைப்பாடு என்றெல்லாம் கஷ்டப்பட்டு தலையைத் திருகி யோசிக்க மாட்டார் என்று தோன்றியது.

“ரெண்டு நாளா வேலைக்கு வரல்லேங்க.”

சரி போய்ப் பார்க்கிறேன் என்று அனுப்பி வைத்தேன்.

நான் ஞாயிற்றுக்கிழமை ராத்திரி குருநாதன் அறைக்குப் போனபோது அங்கே கரண்ட் இல்லாமல் இருண்டு கிடந்தது. ஒரு பெரிய மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து ப்ளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவரே குறிக்கோளாக, கண்ணில் தெரியாத மரப்படிகள் ஏறி மெல்லப் போகும்போது மனதில் பாம்பையும் வௌவாலையும் கண்டால் ஏற்படும் அடிப்படை பயம் எட்டிப் பார்த்தது.

குருநாதன் பத்தொன்பதாம் நூற்றாண்டு பழைய மெட்ராஸ் புகைப்படங்களில் ஆளரவமற்ற கடற்கரைச் சாலையில் சாவதானமாக

நடந்து போகும் மனுஷர்போல மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் தெரிந்தார். கையில் அட்டையில் க்ளிப் போட்டு செருகிய வெள்ளைக் காகிதங்கள்.

“எழுதிட்டிருந்தேன். கரண்ட் போயிடுச்சு.”

கையில் காகிதத்தோடு எழுந்து நின்று என்னை அந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார். நானும் நின்றபடிக்கே, “சிந்துபாத்…” என்று ஆரம்பிக்க, பரபரப்படைந்து “வேணாம், விட்டுடுங்க சார்” என்றார். நானென்னத்தை விட? அவர்தான் வேலை வேணாம் என்று விட்டெறிந்துவிட்டு வந்திருக்கிறார்.

“சரிப்படலே சார். அது தப்பு.”

அவர் ஆதுரத்தோடு சொன்னார். மெழுகுவர்த்தி சுடர் காற்றில் அலைந்து சீக்கிரம் பேசி முடிங்க, நான் உறங்கப் போகணும் என்றது.

“என்ன விஷயம்?” என்று குருநாதனைக் கேட்டேன்.

“நானும் அடிப்படையிலே எமர்ஜென்சி எதிர்ப்பு ஆள்தான் சார். ஆனா பத்திரிகை நடத்தறவங்க நம்மளைக் கூப்பிட்டு வேலை கொடுத்திருக்காங்க. அதுவும் நந்தனம் பத்திரிகை நின்னு திண்டாடிட்டு இருந்த ஒரு கூட்டத்துக்கே காலோ அரையோ குறைவாகவாவது சம்பளம் கொடுத்து ஒரு கஷ்டமான காலத்துலே கடந்து போக வழி செஞ்சிருக்காங்க. அவங்க எமர்ஜென்ஸி சப்போர்ட்னா பத்திரிகையும் அப்படித்தான். பிடிக்குதோ பிடிக்கலியோ வேலை செய்யற நேரத்திலே அங்கே என்ன நடைமுறையோ அதைத்தான் கடைப்பிடிக்கணும், அதிலே போய் திரிசமன் செய்யலாமா?” என்றார் படபடப்பாக.

விசாரித்தேன். ஒண்ணுமில்லே என்றவர் கொஞ்சம் தயங்கிப் பிறகு சொன்னார். சிந்துபாத் பத்திரிகையில் இருக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து அரைப் பக்கத்துக்கு ஒரு காலமானார் அறிவிப்பு லே அவுட் செய்து அடுத்த இதழில் பிரசுரிக்கத் தயார் செய்திருந்தார்களாம். மாஜி தொழிற்சங்க, எமர்ஜென்சி ஆதரவு பத்திரிகை ஆசிரியர் கண்ணிலும் கருத்திலும் படாதவாறு, ‘25.6.1975 புதன்கிழமை திரு. ஜனகராஜன் அவர்களின் மகன் நாயகம் மறைந்தார். ஜன.நாயகம் இறப்புக்கு அஞ்சலி

செலுத்தும் நண்பர்கள், உறவினர்கள்' என்று எமர்ஜென்சி எதிர்ப்பை மறைவாகத் தெரிவிக்கும் 'விளம்பரம்' ஒன்றைப் பத்திரிகையின் கடைசிக்கு முந்தைய பக்கத்தில் வைத்திருந்தார்களாம்.

"நான் உடனே எடுத்து விட்டுட்டேன். தப்பு அது. நமக்கு சோறு போடற கையை முறிக்க கோடாலி எடுக்கக் கூடாது. நேரடியா இல்லேன்னாலும் தப்பு தப்புதான். அப்படி எமர்ஜென்சி எதிர்ப்புன்னா நம்ம சி.எம் மாதிரி இருங்க. அவரோட அரசு எப்ப வேணும்னாலும் கவிழும். கவலைப்படாம, கலைஞர் வீட்டிலேயே எமர்ஜென்சி எதிர்ப்பு துண்டுப் பிரசுரம் அடிச்சு, அவரோட மகன்களே அண்ணாசாலை தேனாம்பேட்டையிலே தொடங்கி கடற்கரை தீவுத்திடல் வரை விநியோகிச்சுட்டுப் போறாங்க. அத்த்து எமர்ஜென்சி எதிர்ப்பு. இது சும்மா ஓரமா சொங்கி மாதிரி நின்னு இருட்டுலே கம்பு சுத்தறது."

'ப்ரூஃப் ரீடிங் செய்ய வந்தா அதை மட்டும் பாத்துட்டு போங்க. இதிலே ஏன் தலையிடறீங்க?' உதவி ஆசிரியர் யாரோ கேட்டபோது வேலை போதும் என்று வந்துவிட்டாராம்.

கொஞ்சம் நெளிந்தார்.

"உட்காருங்க இதோ வந்துட்டேன். கரெண்ட் போனது தெரியாம வயிறு கடமுடங்குது."

அவர் க்ளிப் போட்ட அட்டையை தலையணைக்குக் கீழே தொடுக்கி வைத்து சவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டு படி இறங்கிப் போனார். உட்கார்ந்து இருட்டில் எங்கோ பவழமல்லி பூத்த வாசனையை முகர்ந்து கொண்டிருந்தேன்.

திடீரென்று கரெண்ட் வர ட்யூப் லைட் பிரகாசமாக எரிந்தது. அசுரத்தனமாக மின்விசிறி சுழன்று அறை முழுக்க கிளிப்பில் இருந்து விலகிய காகிதங்கள்.

நான் அவசரமாக நகர்ந்து அவற்றைப் பொறுக்கி எடுத்தேன். மேலே இருந்த காகிதத்தில் திருத்தமான எழுத்தில் குருநாதன் எழுதியிருந்தார் -

‘அவர் ஆபீஸ்லே இருந்து வந்துடப் போறார். சீக்கிரம்’ என்றபடி ரேணுகா நெருங்கிப் படுத்து சேகரை இறுக அணைக்க, சேகருடைய கைகள் சரசரவென்று இறங்கி அவளுடைய…’

வேண்டாம், இவ்வளவு போதும். சங்கமம் - 2, ரோஜாகுமாரி என்று ஒரு எழுதிய காகிதம். முதல் பக்கமாக இருக்கலாம்.

ரேணுகாவையும் சேகரையும் எனக்கு ஏற்கெனவே தெரியும். மாடியிலும் கீழ் போர்ஷனிலுமாக குடித்தனம் இருந்து, கள்ளக்காதல் செய்கிறவர்கள். ரேணுகாவின் புருஷன் சங்கரும், சேகரின் மனைவி கலாவும் கூட அதேபடிதான். ரோஜாகுமாரி எழுதிய சங்கமம் - 1 செக்ஸ் கதைப்புத்தகம் மேன்ஷனில் நான் வந்து சேர்ந்தபோது வெற்றிகரமாகச் சுற்றி வந்து சாதனை படைத்துக் கொண்டிருந்தது. ரோஜாகுமாரியை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

பேப்பரை எல்லாம் க்ளிப்பில் செருகி வைத்தேன். ஃபேனை அணைத்துவிட்டு நான் கீழே இறங்கி நடந்தேன்.

குருநாதனை மதிப்பிட நான் யார்? அவரும் எமர்ஜென்சி மாதிரிதான். நல்லதா கெட்டதா என்று புரியாத புதிர். எமர்ஜென்சியிலாவது இது இருட்டு, இது வெளிச்சம் என்று நல்லதும் அல்லாததும் கொஞ்சம் யோசித்தால் தெளிவாகும். குருநாதனை எமர்ஜென்சி முடிவதற்குள் புரிந்துகொள்வேன் என்று தோன்றியது.

சைடோஜி மெஸ் ராச்சாப்பாடு என்னை முழுமையாகக் கவிந்துகொள்ள நடையை எட்டிப் போட்டேன். எமர்ஜென்சியையும் குருநாதனையும் பற்றி சாவகாசமாக யோசிக்கலாம்.

அத்தியாயம் 3

# செப்டம்பர் 1975

கடற்கரைக்குக் கூப்பிட்டால் போகலாம் என்று சொல்வதற்கு ஒவ்வொருத்தருக்கும் ஒரு காரணம்.

அங்கே நடைபாதையில் பழைய புத்தகக் கடைகளை மேயலாம் என்பது எனக்கு முக்கிய காரணம். பழைய புத்தகத்தில் ருசி கண்ட பூனைகளுக்கு புத்தம்புது எடிஷன் புத்தகங்கள் அறவே பிடிக்காது. அதுவும் நடைபாதையில் கிடைக்கிற பழைய தீபாவளி மலர்கள், பொன்னியின் செல்வன், தில்லானா மோகனாம்பாள் தொடர்கதை பத்திரிகையிலிருந்து வாராவாரம் கிழித்து எடுத்து பைண்ட் செய்து உருவாக்கிய புத்தகங்கள். புதுப் பதிப்பில் இல்லாத அந்தக்கால நகைச்சுவை, துணுக்குச் செய்தி, 1940-கால காபிப்பொடி விளம்பரம் என்று எங்கேயோ தூக்கிப் போய்விடும்.

பெல்ஸ் ரோடில் இருக்கும், நான் விரும்பிப் படிக்கும் இலக்கியப் பத்திரிகை ஆபீஸில் தலைகாட்டிவிட்டு வருவது இன்னொரு சிறிய சந்தோஷம்.

அங்கே சதா மோனத்தில் மூழ்கி அச்சுக் கோர்த்துக் கொண்டிருக்கும் வயதான கம்பாசிட்டர் உலகே அழிந்து கொண்டிருந்தாலும் லட்சியம் செய்ய மாட்டார். போனால் போகிறதென்று ஒரு வினாடியில் காலே அரைக்கால் பாகம் நிமிர்ந்து பார்த்து, 'எடிட்டர் டில்லியிலே இருக்காரு. அங்கே போய்ப் பாருங்க' என்று தில்லி ஏதோ அடுத்த தெருவில் இருப்பதுபோல் கைகாட்டி வேலையைத் தொடர்வார் அவர்.

எடிட்டர் இருக்கும் பொழுதுகளில் நான் கட்டும் ஒரு வருட சந்தாவுக்காக, நியூயார்க் டைம்ஸில் இந்தியச் செய்தியாளரான அந்தப் பத்திரிகை ஆசிரியர், கருத்தாக ரசீது எழுதி பெரியதாகக் கையெழுத்துப் போட்டுத் தருவார்.

அவரிடம் பேச வேண்டும் என்பதற்காகவே இதுவரை நான்கு தடவை சந்தா கட்டிவிட்டேன். இன்றைக்கும் அவர் இருந்தார்.

"எமர்ஜென்சி நல்லதுக்குதானா?"

நான் சந்தா செலுத்திவிட்டு பத்திரிகை ஆசிரியரைக் கேட்டேன். அவர் அமைதியாக கம்பாசிட்டரைக் காட்டினார்.

"இவரைக் கேளுங்க. நான் டாக்டர்கிட்டே போய்ட்டிருக்கேன். Chest congestion."

சொல்லிவிட்டுப் போயே போய்விட்டார் அவர். கம்பாசிட்டர் மேல் அவருக்கு இருந்த நம்பிக்கை எனக்கு வியப்பாக இருந்தது.

நல்ல கடற்காற்று வீசிக் கொண்டிருந்தது. இன்றைக்கு பகல் ஒரு மணிக்கெல்லாம் காற்று துவங்கி விட்டதால் சூழலே அற்புதமாக மாறியிருந்தது.

நான் ஆபீஸ் முடித்து நேரே வந்து கொண்டிருக்கிறேன். மேன்ஷன் நண்பர்கள் ஏற்கெனவே வந்து உழைப்பாளர் சிலைக்கு அருகே காத்திருக்கிறார்கள்.

ஒரு சனிக்கிழமை மாலை நேரத்தை இன்னும் ஒரு முறை கடற்கரையில் கழிக்கப் போகிற மகிழ்ச்சி எனக்கும்.

கடலை, யானையை, அரசனைப் பார்க்க அலுக்காது என்று நாராயணசாமி காளிதாசன் கவிதையை மேற்கோள் காட்டுவது வழக்கம். இதில் கடலும் யானையும் எப்போது பார்த்தாலும் இன்பம்தான். அரசு? எமர்ஜென்சி வந்த பிறகு கொம்பும் வாலும் முளைத்து சாத்தானாக பயம் காட்டுகிறது அது.

பெல்ஸ் ரோடு நடைபாதைக் கடையில் கொஞ்சம் பேரம் பேசி ஐந்து ரூபாய்க்கு ஜி.வி. தேசானியின் புதிய அலை நாவல், 'ஆல் அபவுட் ஹெச்.ஹேட்டர்' வாங்கினேன். 1953ஆம் வருட தீபாவளி மலர் ஒன்றைப் புரட்ட தி. ஜானகிராமனின் சிறுகதை இருப்பதைப் பார்த்து அதையும் மூன்று ரூபாய்க்கு வாங்கி சந்தோஷமாக இரண்டு புத்தகங்களையும் கையில் சுமந்துகொண்டு கடற்கரைக்கு நடந்து போனேன்.

உழைப்பாளர் சிலைப் பக்கமே போக முடியவில்லை. கூட்டமாக போலீஸ் நின்று கொண்டிருந்தது. கையில் துப்பாக்கி பிடித்து ஒரு வரிசை பின்னால் ஜீப்களுக்கு அருகே நிற்க, கையில் பிரம்போடும், பிரம்புத் தட்டியோடும் ஒரு நீண்ட அணியாக போலீஸ், சிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

சிலையை ஒட்டி மொத்தம் எட்டுப் பேர் வேட்டியும் கதர்ச் சட்டையும் அணிந்து நெற்றியில் விபூதி குங்குமம் துலங்க, தோளில் பெரிய துணிப்பையோடு நின்றார்கள்.

"எல்லோரும் கலைஞ்சு போங்க. இங்கே கூடி நிக்கறது சட்ட விரோதம்" போலீஸ் இன்ஸ்பெக்டர்போல் இருக்கிறது. மெகாஃபோனில் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தார்.

நெடுநெடுவென்று கெச்சலாக, நெற்றியில் நீளமாக ஸ்ரீசூர்ணம் தீட்டிய ராவ்ஜி ஒருத்தர் இங்கிலீஷில் அவரிடம் சத்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் -

"பீச்சுக்கு காத்து வாங்க வர்றது எப்போ இருந்து சட்ட விரோதமாச்சு?"

"பேசாதே. போ. இல்லேன்னா உன்னையும் அரெஸ்ட் பண்ண வேண்டி வரும்." இன்ஸ்பெக்டர் எச்சரித்தார் அவரை.

என் பக்கத்தில் எங்கிருந்தோ வந்து நின்ற விஸ்வநாதன் "இதென்ன அநியாயமா இல்லே இருக்கு. பீச்சுக்கு வரக்கூட அப்ளை பண்ணி பெர்மிட், விசா வாங்கிட்டு வரணுமா என்ன?" என்று கேட்டான்.

அவன் குரல் கொஞ்சம் பலமாக இருப்பதால் இன்ஸ்பெக்டர் காதில் விழ, அவர் முறைத்தபடி நாங்கள் இருந்த இடத்துக்கு வர, கோவிந்தன்

மேன்ஷன்வாசிகள் பன்னிரண்டு பேரையும் சூழ்ந்துகொண்டு தாக்கக் கூடிய சூழ்நிலை.

அருகே வந்தவர் மெகாஃபோனை விலக்கி மெல்லிய குரலில் சொன்னார், "தம்பி, தயவுசெஞ்சு கலைஞ்சு போங்க. இதெல்லாம் கவர்மெண்ட் விரோதமான சமாசாரம். பக்கத்துலே போனாலே குற்றம்."

அதற்குள் பின்னால் இருந்து கூட்டம் முன்னே நகரும்படி அழுத்தியது. நாங்கள் முன்னே கொண்டு செலுத்தப்பட்டோம்.

அதற்குள் உழைப்பின் வெற்றி சிலையை ஒட்டி நின்ற எட்டுப் பேரும் தோள்பையில் இருந்து பழுப்புக் காகித நோட்டீஸ்களை வீசி கடற்கரையில் எறிந்தபடி, "ஜெயப்ரகாஷ் நாராயணன் வாழ்க" என்று கோஷமிட்டார்கள்.

என் காலடியில் பறந்து வந்து விழுந்த காகிதத்தை நான் எடுத்துப் படிக்க, அவசரமாக நகலெடுத்த காகிதம். சைக்ளோஸ்டைல் செய்த அந்தக் காகிதத்தில், 'இது தகுமோ' என்று தலைப்பில் சில வரிகள்:

> ஜூன் 25, 1975 எமர்ஜென்சி பிரகடனத்துக்கு அப்புறம் இன்னொரு கறுப்பு நாள் - நேற்று - செப்டம்பர் 26: வானளாவிய அதிகாரங்களை பிரதமருக்கு வழங்கிய துக்க தினம். யாரும் கேள்வி கேட்க முடியாத சர்வாதிகார அரசு பீடத்தில் இந்திரா காந்தி. எதிர்ப்பவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் - மிசாவில் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கே ஜனநாயகம்?

பாரதியார் பாடல் வரிகள் அதன் கீழ்.

> 'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும், நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ.'

'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்' என்று தொடங்கும் இந்த பாரதியார் பாட்டை 'கப்பலோட்டிய தமிழன்' படத்தில் உணர்ச்சிகரமாக திருச்சி லோகநாதன் பாடி, எ.ஸ்.வி. சுப்பையா பாரதியாக

வாயசைத்ததை நினைத்துப் பார்ப்பதற்கு முன், இன்ஸ்பெக்டர் குரல் மறுபடி உயர்ந்தது.

“நோட்டீஸை கீழே போடுங்க எல்லோரும். எடுத்தீங்கன்னா உங்களையும் இவங்களோட தீவிரவாதியா கருத வேண்டி வரும்.”

போலீஸார் பிரம்பைச் சுழற்றிக்கொண்டு எங்கள் பின்னால் அழுத்திக் கொண்டிருக்கும் கூட்டத்தில் வேகமாகப் புகுந்தார்கள். ஓவென்று பெரிய சத்தம். யார்யாரோ கீழே விழுந்து கிடக்க, அவர்களை மிதித்து மற்றவர் ஓடுகிற பேரொலி. நான் ஓடிக்கொண்டே திரும்பிப் பார்த்தேன். துப்பாக்கி பிடித்த போலீஸ் அந்த எட்டுப்பேரையும் நெட்டித் தள்ளி ஜீப்பில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ‘வந்தே மாதரம்’ என்று வீரமாக முழங்கியபடி போகும் அவர்களைப் புது மரியாதையோடு நான் பார்த்தேன்.

இந்திரா காந்தி என்ற தலைவர், நான் உயிராக மதிக்கும் ஜவஹர்லால் நேருவின் திருமகள், பங்களாதேசம் என்ற புதுநாடு அமையக் காரணமாக இருந்த, நாடே போற்றி வணங்கிய, நேசித்த இந்தியப் பிரதமர். அதற்குப் பின், மூன்றே வருடம் கழித்து, மிக வெறுக்கப்படும் ஒருவராக எனக்கு அந்த நொடியில் ஆனார். நெருக்கடி நிலைக்கும் அதைப் பிரயோகித்த இந்திரா காந்தியின் அரசுக்கும் முடிவு காண மனதில் எடுத்து வைத்த முதல் கல், அது.

வந்தேமாதரம் முழக்கிப் போனவர்கள் எந்தக் கட்சியோ, எந்த மத அமைப்போ, எந்த சமூக இயக்கமோ. அவர்களுக்கு மனதார வணக்கம் சொல்லி, சட்டைப் பையில் பத்திரப்படுத்தியிருந்த பாரதி பாட்டு காகிதத்தை ஒரு முறை எடுத்துப் பார்த்துத் திரும்ப வைத்தேன்.

“பெரிசா மெஸ் சாப்பாடு வேணாம்டா, மூட் இல்லை. சும்மா உக்காந்திருந்துட்டு நாதன்ஸ் போய்டலாம்” விஸ்வநாதன் சொன்னபோது யாரும் மறுப்பு சொல்லவில்லை.

இரண்டு நாள் கழித்து உஸ்மான் தெருவில் மெடிக்கல் ஷாப்புக்குப் போகவேண்டி இருந்தது. அங்கே எப்போதும் ஊழியர்கள் உயரமான ஸ்டூல்களில் உட்கார்ந்து திருக்கோஷ்டியூர் தெப்ப உற்சவத்தின்போது

தோணி கவிழ்ந்தது பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். முப்பது வருடம் முந்தைய வரலாறு அது.

பேசி முடித்து அப்புறம், வயதான கேஷியர் மட்டும் பலகையைத் தள்ளித் திறந்துகொண்டு படி இறங்க, மற்றவர்கள் காணாமல் போய்விடுவார்கள். அவர்தான் கடை முதலாளி என்று அப்புறம்தான் தெரியும்.

வழக்கமாக, மாலை மங்கும் நேரம், கடைக்காரரர் பக்கத்துக் கடையான கோமதிசங்கரன் ஸ்வீட் ஸ்டாலில் அல்வா வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். அல்வா சாப்பிட்டவர்களுக்கு ஒரு கை காராசேவும் இனாமாகக் கொடுக்கிற கடை அது.

நான் மருந்துக் கடைக்குப் போனபோது முதலாளி மட்டும்தான் இருந்தார். அதுவும் அடுத்த கடையில் வஞ்சனை இல்லாமல் வெட்டிய பெரிய துண்டு அல்வா சாப்பிட்டபடி.

மருந்துக் கடை வைத்திருந்தால் ஷுகர் கம்ப்ளெயிண்ட் ஏதும் இருக்காதுபோல. ராத்திரி ஏழு மணிக்கு அல்வா சாப்பிட சீரணமும் சீரானதாக இருக்க வேண்டும். அதுவும் அறுபது வயதில். வாய்க்கப் பெற்றவராக இருக்கும்.

“ரக்த தோஷாந்தக் ஒரு புட்டி கொடுங்க.”

தரையைப் பார்த்தபடியே யோசனையோடு வந்த யாரோ முன்னால் இருப்பது கடைச் சிப்பந்தி என்ற ஊகத்தில் கேட்டார்.

“உட்காருங்க, கடைக்காரரர் வந்துடுவார்” என்றேன்.

தோளில் துணிப்பை, மொடமொட என்று நீளமான கதர் ஜிப்பா. பட்டை ஃப்ரேம் மூக்குக் கண்ணாடி. இலக்கியக் கூட்டங்களில் சண்டை பிடிக்கிற, சந்தர்ப்பம் கிடைத்தால் தன் சொந்தக் கவிதையையோ, பிடித்த கவிஞரின் எழுத்தையோ அல்வா சாப்பிடுவதுபோல் ரசித்து ‘மலை கற்போம் வா மகனே பரங்கிக் குன்றளந்து’ என்று ஒருதடவைக்கு நான்கு முறை சொல்லி, நிறுத்த மாட்டேன் என்று அடம் பிடிக்கிறவர்களில் ஒருவரோ?

“நீங்கதானே போன சனிக்கிழமை சாயந்திரம் கடற்கரை சந்திப்பிலே விடாம நோட்டீஸை எடுத்துக்கிட்டு போனது?”

அவர் என்னைத்தான் கேட்டார். அவரை நிமிர்ந்து பார்த்தேன். போலீஸா? எமர்ஜென்சி போலீஸ்காரர்கள் ஜிப்பா போட ஆரம்பித்துவிட்டார்களா?

“நானும் அங்கேதான் இருந்தேன். அன்னிக்கு ஆர்ப்பாட்டம் செஞ்சவங்களுக்கு பின்னாடி எங்க பேட்ச் பனிரெண்டு பேர் நின்னுட்டிருந்தோம். இருட்டிப் போனதாலே இன்னொரு நாள் வச்சுக்கலாம்னு திரும்பிட்டோம்.”

அவர் சொல்லிப் போக, எதை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளப் போகிறார்கள் என்று நான் முழித்தேன். அல்வா சாப்பிட்ட கை எண்ணெய் மினுமினுக்க மருந்துக் கடைக்காரர் படியேறி வர, அவர் ரக்த தோஷாந்தக் என்று மறுபடி கேட்டார்.

கடைக்காரர் உள்ளே பார்த்து கைதட்டினார். யாக குண்டத்திலிருந்து வெளிப்பட்ட பூதம்போல, மண்கூஜாவோடு ஒருத்தரும், கெச்சலாக இன்னொருத்தரும் வெளியே அவசரமாக ஓடி வந்தார்கள். ஸ்டூலில் ஏறி நின்று ஷெல்ஃபின் மேல் தட்டில் இருந்து பெரிய இங்க் பாட்டில்போல போத்தல் ஒன்றை அவர்கள் இறக்கினார்கள். யார் ரத்தமோ தெரியவில்லை.

“ரத்தத்தை சுத்தப்படுத்தற டானிக்.”

பொதுவாகப் பார்த்து, அல்வா சாப்பிட்ட இனிய குரலில் சொன்னார் கடைக்காரர். ஜிப்பாக்காரர் புன்முறுவலோடு வாங்கிக்கொண்டார். தீவிரவாதியின் ரத்தத்தை சுத்தப்படுத்தினால் என்ன ஆகும்?

நான் கொண்டுவந்த மருந்துச் சீட்டை நீட்ட, “ரங்காசாரி டாக்டரா, விக்டோரியா மகாராணி கால மருந்துதான் எழுதுவார். இந்த காம்பவுண்ட் எல்லாம் வந்து ரெண்டு மாமாங்கம் ஆச்சு. அடுத்த வாரம் வாங்க, சொல்லியனுப்பி வரவழைக்கறேன்.” அடுத்த மாமாங்கத்துக்கு வருவதாகச் சொல்லி இறங்கினேன். திருக்கோஷ்டியூர் தெப்பத்தில் இவரை அனுப்பியிருக்கணும்.

“கோவிந்தன் மேன்ஷன்தானே, வாங்க, நானும் அந்தப் பக்கம்தான் வரேன்.”

ஒதுங்கி நின்று உஸ்மான் ரோடு நெரிசலை ரசித்துக் கொண்டிருந்த ஜிப்பாக்காரர், என்னோடு நடக்க ஆரம்பித்தார். நான் உடனே உஷாரானேன்.

“சார், ஏதோ தப்பா என்னை நினைச்சுட்டீங்கபோல. நான் அன்னிக்கு பீச்சிலே நோட்டீஸை பொறுக்கி எடுத்துப் போனது உண்மைதான். ஆனா அதுக்கு மேலே என்னால் எமர்ஜென்சி எதிர்ப்பு காட்ட முடியாது. நீங்க வந்து இருக்கவோ, தடை செஞ்சிருக்கற புத்தகம் கொண்டுவந்து விநியோகம் பண்ண பத்திரமா வைக்கவோ, வெளியூர் தீவிரவாதி வந்து தங்கிப் போகவோ, பீச் மீட்டிங் போட்டா பேசவோ, குறைந்த பட்சம் நின்னு கேட்கவோ நான் வர முடியாது. பேச்சைக் குறை, வேலையைப் பார்ன்னு கவர்மெண்ட் போர்ட் எழுதி வச்சிருக்கறதைப் படிச்சா, சைகையிலே கூட அப்புறம் பேசமாட்டேன். ரயில்வே ஸ்டேஷன்லே ‘இந்தத் தண்ணீரைக் குடிக்காதீர்கள். கைகழுவ மட்டும் பயன்படுத்துங்கள்’ன்னு போர்ட் போட்டிருந்த இடத்திலே இருந்து அதைப் பார்க்காம அவசரமா தண்ணி பிடிச்சுக் குடிச்சதுதான் நான் அரசாங்க வார்த்தையை சமீபத்திலே மீறின ஒரே சம்பவம். அடுத்த எலக்ஷன் வந்தா வோட்டு போடுவேன். அவ்வளவுதான் நான் உங்களுக்காகச் செய்ய முடியும். என்கூட வரலாம்னு நினைச்சா உங்க நேரம்தான் வேஸ்ட் ஆகும்.”

உஸ்மான் தெருவில் இருந்து பிரியும் தெருவில் என்னோடு அடி எடுத்து வைத்தவர் நின்றார். காலில் உரசிப் போன சைக்கிள் ரிக்ஷாவைத் தவிர்த்தபடி நானும் நின்றேன்.

“சார், எனக்கு உங்க கிட்டே எதுவுமே வேணாம். நம்புங்க மிஸ்டர்...”

அவர் தயங்கினார். போத்தி என்றேன்.

“மீட்டிங் நடத்த செலவுக்கு எப்போவாவது நண்பர்கள் கிட்டே வாங்கிப்போம். உங்க கிட்டே அதுவும் கேட்கப் போறதில்லே. நீங்க

விஸ்வநாதனோட ஃப்ரெண்ட்ங்கறதாலே, அதுவும் ஒரே மேன்ஷன்லே இருக்கீங்கங்கறதாலே ஹலோ சொன்னேன். வேணாம்னா சொல்லலே இனிமேலே."

மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. எடுத்தெறிந்தாற்போல பேசி இருக்க வேண்டாம். நான் பேசவில்லை அப்படி. சாதாரண தினம் என்றால் புது நட்புகளை வரவேற்கவும், சிநேகிதமாக இருப்பதில் முன்கை எடுக்கவும் செய்தவன்தான் போத்தி. எமர்ஜென்சி அந்தப் பண்பாட்டை, லகுவான வாழ்க்கை முறையை எல்லாம் ஒரேயடியாக மாற்றிப் போட்டிருக்கிறது.

எதிர்ப்படுகிறவன் யாரோ, வேவு பார்க்க வந்த ஒற்றனோ, தலைமறைவு வாழ்க்கைப் போராளியோ, எங்கே இருந்து வருகிறார்கள், எங்கே போகிறார்கள் என்று ஆயிரத்தெட்டு கேள்விகளை மனதிலேயே கேட்டு அவஸ்தைப்படுவதை விட, புதிய அறிமுகம் ஏதும் கிடைத்தாலும் வேண்டாம் என்று கத்தரித்துப் போக நினைக்கும் மனப்பான்மை. எனக்கு என்று இல்லை, எல்லோருக்கும் பொதுவாக வந்து கொண்டிருப்பது அது.

இந்த ஜிப்பாக்காரன் எமர்ஜென்சி எதிர்ப்பாளன்தான். பயங்கரவாதி இல்லை. எதிர்ப்பாளர்கள் எல்லாரும் தீவிரவாதி என்றால் உலகத்தில் எப்போதும் துப்பாக்கிப் புகைதான் சூழ்ந்திருக்கும்.

"ஸாரி, ஏதோ யோசிச்சிட்டிருந்துட்டேன். நீங்க விஸ்வநாதன் ஃப்ரெண்டா? அவன் ராத்திரிதான் வருவான். யார் வந்திருந்ததா சொல்லணும்?"

"நானா, ஷர்மா. ராமகிருஷ்ண ஷர்மா. விஸ்வநாதன் எனக்கு ஃப்ரெண்டுனு வச்சா ஃப்ரண்ட்தான். என் வேட்டகத்து மனுஷா அவா குடும்பம். அங்க சுத்தி இங்க சுத்தி எல்லாரும் நம்ம மனுஷாதான், கேட்டேளா?"

உஷாரானேன். 'நீ ஐயரா' என்று கேட்கிறான் ஜிப்பாக்காரன். இல்லை என்று உடனே சொல்லிவிட்டால் பிரச்சினை இல்லை.

"வேட்டகம்னா என்ன சார்?" நான் கேட்க, அவன் சிரித்தான்.

"நான் பொண்ணு எடுத்த இடம்."

“அப்படியா, நான் போத்தி.”

“போத்தின்னா ஜாதியா? திருச்செந்தூர் கோயில்லே பூஜை பண்ற குருக்கள் எல்லாம் போத்திதானே?”

“அதெனக்கு தெரியாது சார். நாங்க ப்ராமின் இல்லே. பகுதி ப்ராமின்னு சொல்றவங்க உண்டு. முதலே இல்லேங்கறபோது பாதி எங்கே வந்தது?”

என்னோடு சேர்ந்து ஷர்மாவும் சிரித்தான். சிரித்தார். வரேன் என்று விடுவிடுவென்று நடந்து அறைக்கு வந்து சேர்ந்தேன்.

விஸ்வநாதனை அன்றைக்குப் பார்க்கவில்லை. அதற்கு அடுத்த இரண்டு நாளும் கூட அவன் இல்லை. புதன்கிழமை திரும்பி வந்தபோது பாலக்காட்டில் இருந்து நேந்திரம்பழ வறுவல் வாங்கி வந்திருந்தான்.

கூட்டமாக உட்கார்ந்து நான்கு கிலோ வறுவலை முகாந்திரமாக முன்வைத்து கல்யாணி பியர் குடித்தோம்.

ஷர்மா வந்திருந்தார் என்று அப்போதுதான் அவனிடம் சொன்னேன். பெரிய மோட்டார் கம்பெனியில் விற்பனைப் பிரிவில் இருக்கிறாராம் ஷர்மா. தீவிரவாதி இல்லை. ஆனாலும் தீவிரமாக வலம் போகிற ஆசாமியாம்.

விஸ்வநாதன் ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாட், ஏ.கே. கோபாலன், சகாவு கிருஷ்ணபிள்ளை என்று அபிமானத்தோடு பேசக்கூடியவன். ஷர்மா, விசுவின் பெரியம்மா மகளைக் கல்யாணம் செய்து கொண்டதோடு சிநேகிதம் பலமானதாம்.

சொந்தக் கதை எல்லாம் பியர் சாப்பிட்ட பிற்பாடு வச்சுக்கலாம் என்று பெல்காவி அபிப்பிராயப்பட அப்புறம் நாங்கள் அப்போது ஷர்மா பற்றிப் பேசவில்லை.

என்றாலும் நாதன்ஸ் கஃபேயில் ஜனதா சாப்பாட்டுக்காக டோக்கன் வாங்கும்போது உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த ஷர்மா கண்ணில் பட்டார்.

“விசு, கொஞ்சம் இரு, ஒண்ணு சொல்லவேண்டி இருக்கு.”

ஷர்மா விஸ்வநாதனிடம் சொல்ல, நான் எதையும் யாரையும் பார்க்கவில்லை, கேட்கவில்லை என்று அபிநயித்து டோக்கனோடு உள்ளே நடந்தேன். கொம்பு உள்ளதற்கு ஐந்து முழம், குதிரைக்குப் பத்து முழம், எமர்ஜென்சி எதிர்ப்பாளர் கண்ணில் பட்டால் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் வேகமாக ஓடி ரட்சைப்படுவதே சான்றோர் சொல்லும் வழிமுறையன்றோ.

சாப்பிட்டுவிட்டு வெளியே வரும்போது அதற்கு முன்பே அவசரமாக முடித்துக் காத்திருந்த விஸ்வநாதன், "போத்தி, நீ ஆயுர்வேத வைத்யன்தானே..." என்று கேட்டான்.

குடும்பத் தொழிலாக சொல்லப்போனால், ஹோட்டல் நடத்துவதுதான் குடும்பத் தொழில், உபதொழில் வைத்தியம். இது போன தலைமுறை வரை இருந்தது. போத்தி மருத்துவன் இல்லை. ஆனால் அடிப்படை தெரியும் என்று தெளிவுபடுத்தினேன்.

"அதுபோதும், கொஞ்சம் கூட வா."

உஷாராக வேண்டிய அடுத்த இடம். ஷர்மா இதுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல விலகி அன்பழகன் பழச்சாறு நிலையம் வாசலில் நின்று அவர் வழக்கப்படி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன விஷயம்?" விஸ்வநாதனிடம் விசாரித்தேன். தெரிந்து கொள்வதை விட, கேட்டபடி தப்பித்துப் போக வழி கண்டுபிடிப்பதே என் குறிக்கோளாக இருந்தது.

"போத்தி, நான் லெஃப்ட்னு தெரியும் உனக்கு."

"கட் பண்ணு, நேரே மெயின் ஃபிலிமுக்கு வா" என்றேன்.

முந்தாநாள் வடக்கே இருந்து இரண்டு சாமியார்கள் வந்திருக்கிறார்களாம். திருப்பதி போய் சிதம்பரமும் மதுரையும் தரிசித்து, ராமேஸ்வரம் யாத்திரையாகி காசி-ராமேஸ்வரம் புனிதப் பயணத்தை முடிக்க உத்தேசித்தவர்களாம்.

யாரிடம் இந்தக் கள்ளத்தனம்? சாமியார்களா வந்திருப்பது? அவன் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னான் -

“சரி இப்போதைக்கு அப்படி வச்சுப்போம். அப்பத்தான் கதை மேலே போகும்.”

அவர்கள் துறவிகள். இரண்டு பேரும் ஒரு அடியார் இல்லத்தில் இரண்டு நாளுக்குத் தங்கி இருக்கிறார்கள். குருநாதனின் மாடி அறை இருக்கும் அதே தெரு. கோடியில் உள்ளொடுங்கி ஒரு சந்து போகும். முடுக்குச் சந்து. அங்கே ஒரு ஷெட்டில்தான் இருக்கிறார்கள். சரி, பிறகு?

அதில் வயதான சாமியாருக்கு ஜன்னி வந்து புலம்பும் அளவு காய்ச்சல் கண்டிருக்கிறது. இடதுகை வீக்கம் வேறே. ஆண்டிபயாடிக்ஸ் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறாராம். பழக்கமில்லையாம். அனால்ஜினும் நோவால்ஜினும் கேட்கவில்லை. ஹோமியோபதி போகலாம் என்று பார்த்தால் அந்த இடத்தில் யாரும் ஹோமியோ கிடையாது. அலோபத் கிட்டே போக முடியாது. ஊசி போட சம்மதிக்க மாட்டார். ஆயுர்வேதம் மருந்து எழுதிக் கொடுத்தால் நாளைக்கே கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலையில் வாங்கிக் கொடுத்து குணப்படுத்தி விடலாமாம். ஆயுர்வேத வைத்தியன் இப்போதைக்கு போத்தி.

“வந்து பத்து நிமிஷம் பார்த்துவிட்டு கிளம்பிவிடுவேன். இன்னொரு தடவை எல்லாம் அழைக்கக் கூடாது. ஆட்டோ கிடைத்தால் போய் உடனே வரலாம்.”

“ஆட்டோ அப்பவே சொல்லி வச்சாச்சு.”

இந்த உரையாடல் காதில் கேட்காத தூரத்தில் நின்றிருக்கும் ஷர்மா சொன்னார். மூன்று பேரும் பயணமானோம்.

குருநாதனின் மாடி அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரோ ஒரு இளைஞன் ராஜ மோகனம், ராணி தோரணம் என்று சினிமாப் பாட்டு எழுதிக் கொண்டிருக்க, பக்கத்திலேயே குருநாதன் எழுத்தில் அந்த அயோக்கியன் சேகர் அடுத்தவன் பெண்டாட்டி ரேணுகாவை

விதவிதமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் காட்சி நினைவில் வந்து சிரித்தேன்.

விஸ்வநாதன் எதுக்கு என்று சைகை காட்டிக் கேட்டான். அப்புறம் சொல்கிறேன் என்றபடி அவனோடு ஆட்டோவை விட்டு இறங்கினேன். வேட்டகம் வாசல் படியிலேயே உட்கார்ந்து கொண்டார். ஏதோ ஒரு ஜாக்கிரதைத் தன்மை அவரிடம் தட்டுப்பட்டது. ரக்த தோஷாந்தக்கும் இன்னும் சில டப்பாக்களும் விஸ்வநாதனிடம் கை மாறின.

கோடவுன்தான். நியூஸ் ப்ரிண்ட் வாடையும், அச்சு மை வாடையும் தூக்கலாக வந்த கிடங்கு அது.

சுவரில் வைத்த போர்ட் ஊர்ப் பேச்சு பத்திரிகையுடையது.

உள்ளே நடக்க, கோடவுன் முடிந்து, ஒரு கதவு. திறந்தால், ஒரு அறை. இரண்டு கயிற்றுக் கட்டில். பின்னால், சிறு உள்ளறையாக டாய்லெட்.

வயதான, ஈர்க்குபோல மெலிந்த ஒரு சாமியார் கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்தார். மண் பாத்திரத்தில் இருந்த தண்ணீரில் நனைத்த துணியை அவர் நெற்றியில் வைத்தபடி இளைய துறவி ஒருவர் கயிற்றுக் கட்டிலை ஒட்டி மண்டி போட்டு இருந்தார். மங்கிய விளக்கு வெளிச்சத்தில் ரெம்ப்ராண்ட் ஓவியம்போல இருவரும் தெரிந்தார்கள்.

விஸ்வநாதனைப் பார்த்து இளையவர் ஒரு முறை தலையசைத்தார். ஜாக்கிரதையான இங்லீஷில் அவர் சொன்னார் -

“இப்போ ரொம்ப பரவாயில்லே. கை வீக்கம் கொறஞ்சிருக்கு. மட் பாத் எடுக்க வேற மண் கிடைக்கலே. பீச்சுக்கு போய் நேற்று ராத்திரி வெகு நேரம் சென்று எடுத்து வந்ததை வச்சு வறுத்து மணல் சிகிச்சை கொடுத்தேன். காய்ச்சலுக்கு நெற்றியிலே குங்குமப் பற்று போட்டேன். நல்ல முன்னேற்றம்.”

விஸ்வநாதன் கொண்டுவந்திருந்த ரக்ததோஷாந்தக் மற்றும் பையிலிருந்து தசமூலாரிஷ்டம், சியவ்னப்ராஸ், திரிபலாதி சூரணம் என்று அரை ஆயுர்வேத வைத்தியனான நான் வந்தனை செய்யும்

ஔடதங்களைப் பையில் இருந்து எடுத்து வைத்தான். இளைய சாமியார் முகத்தில் மகிழ்ச்சி மின்னி மறைந்தது

விஸ்வநாதன் பெரியவரின் அருகில் நின்று என்னைப் பார்த்தான். நான் குனிந்து இளையவருக்கு அருகே மண்டியிட்டு உட்கார்ந்து பெரியவரின் நாடியைப் பிடித்துப் பார்த்தேன். சாதாரணமாகதான் இருந்தது.

விஸ்வநாதன் கொடுத்த தர்மாமீட்டரை இளையவர் அவசரமாக பக்கத்தில் பாத்திரத்தில் வைத்திருந்த வெந்நீரில் கழுவித் தர டெம்பரேச்சர் பார்த்தேன்.

சொற்பமாகத்தான் ஏறி இருந்தது. நூறு டிகிரி ஃபாரன்ஹீட். இளையவர் அருகில் வைத்திருந்த திரிபலாதி சூரணம், பாலாரிஷ்டம், ம்ருதசஞ்சீவினி இவற்றைக் காட்டினார். தொடர்ந்து தரலாம் என்றேன்.

முதியவர் புரண்டு படுத்தார். மல்லாந்து இருந்தார் அவர் இப்போது. கம்பீரமான முகம். எங்கோ பார்த்த நினைவு. எங்கே என்று தெரியவில்லை.

“ராம் பாட்டு பாடு” அவர் முனகினார். இளையவர் சட்டென்று கட்டில் அருகே உட்கார்ந்து மெல்லிய குரலில் பாடினார் -

‘சூரஜ் கி கர்மி ஸே
ஜல்தெ ஹுவே தன் கோ
மில் ஜாயெ தருவர் கி சாயா’

வேனல் காலத்தில் வீதியில் நடப்பவன்
தான்படும் துன்பம் தருநிழல் மாற்றும்
வேதனை தான்மிகு வாழ்க்கையின் பாதையில்
வேறுயார் நிழல்மரம் கோசல ராமா!

வெய்யில் சூடு அனுபவித்தவனுக்குக் கிட்டிய மரநிழல்போல் எனக்கு ராமநாமம் என்று நாமஜபத்தின் பெருமை சொல்லும் கானம் அது.

பெரியவருக்கு மட்டுமில்லை, இளையவருக்கும் எனக்கும் கண்ணில் நீர் வழிந்தது. விஸ்வநாதன் கூட கைகுவித்து நின்றான்.

மீண்டு, என்னை இளையவரிடம் அறிமுகப்படுத்த அவர் கைகூப்பி வணங்கி ராம்ராம் என்றார்.

முதியவர் மறுபடி உறங்கிவிட்டார். நாங்கள் கிளம்பினோம்.

இரண்டு நாள் கழித்து விஸ்வநாதனிடம் சாமியார்கள் பற்றிக் கேட்டேன்.

பெரியவர் யார் தெரியுமா?

சொன்னான். எதிர்பார்க்கவே இல்லை.

சரி, அவர் இருக்கட்டும், ராத்திரியில் கடற்கரை மண் எடுத்து வந்து பற்று போட்டு மகன்போல கவனித்துக் கொண்ட, சூரஜ் கி கர்மி சே பாடிய இளையவர்?

விஸ்வநாதன் சாப்பிடக் கிளம்பும் அவசரத்தில் சொன்னான் -

“பெரியவர் மராட்டிக்காரர். சின்னவர் குஜராத்தி. பெயர் நினைவு இல்லே. ஏதோ நரேந்தர்னு சொன்ன ஞாபகம்.”

அத்தியாயம் 4

# அக்டோபர் 1975

**கா**ந்தி ஜெயந்தி வியாழக்கிழமை வந்தது. வார நடுவில் வரும் விடுமுறையை ஆர்வத்தோடு எதிர்பார்த்து இருந்தோம்.

கூட ஒரு நாள், இருநாள், வெள்ளி, சனிக்கிழமை லீவு கிடைத்த அதிர்ஷ்டசாலிகள் பஸ்ஸை, ரயிலைப் பிடித்து சொந்த ஊரைப் பார்க்கக் கிளம்பிப் போனார்கள். இல்லாவிட்டாலும் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. சுகம் அனுபவிக்க, விடுமுறையைக் கொண்டாட மெட்ராஸில் நிறைய இருந்தன. எமர்ஜென்சி காலம் என்பதெல்லாம் இரண்டாம் பட்சம்.

கோவிந்தன் மேன்ஷன் புதன்கிழமை சாயந்திரமே களைகட்டிவிட்டது. உஸ்மான் ரோடு ஹோட்டல் ராச்சாப்பாடு வேண்டாம் என்று ஒரு மனதாக முடிவு எடுக்கப்பட்டது. வேண்டாம் என்று முடிவானதும், தினசரி சாப்பிடுவதில் என்ன எல்லாம் சரியில்லை என்று பட்டியல் போட சௌகரியமாகப் போனது.

எமர்ஜென்சி கால சாப்பாடு சரியான அளவில் இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தால் சோற்றை பட்டையாக அடித்துக் கொண்டு வருவார்கள். ஒரே மாதிரியான சிறு கிண்ணங்களில் ஒரே அளவு வார்த்த சவசவ சாம்பாரும், ரசமும், மோரும், இரண்டு ஸ்பூன் உருளைக்கிழங்கு பொரியலும், நெற்றியில் வைக்கும் பொட்டு சைஸில் ஊறுகாயும் அடுத்து தட்டில் ஏந்தி வந்து சேரும்.

தட்டில் மீதி இருக்கும் இடத்தில் பொரித்த அல்லது சுட்ட சிறு அப்பளத்தின் விட்டம் கேம்பஸால் அளந்து வட்டம் போட்ட துல்லியத்தோடு வரும். ராணுவ மிடுக்கோடு முன்னால் வைக்கப்படும் அந்தத் தட்டைப் பார்த்ததுமே எழுந்து நின்று சல்யூட் அடித்து ஜனகனமன பாடவேண்டும் என்று தோன்றும்.

முன்பெல்லாம் ராத்திரி மெனு அமர்க்களமாக இருக்கும். பருப்புப் பொடியும் நெய்யும் பெரிய விழுதாக காரமான கோங்குராவும்தான் இரைவணக்கம் பாடி ராச்சாப்பாட்டைத் தொடங்கி வைக்கும். அளவுச் சாப்பாடெல்லாம் கிடையாது. பசிக்கப் பசிக்கச் சோறு வடிக்கப்படும். வீணாக்கினால் மட்டும் கல்லா முதலாளியிலிருந்து பரிமாறுகிறவர், இலை எடுப்பவர் வரை கோபப்படுவார்கள். ஏன், அடுத்த இலையில் சாப்பிடும் கோங்குராவ்களே மிளகாய்க் காரத்தோடு பார்ப்பார்கள்.

பெல்காவியோ, குல்கர்னியோ பனகல்பார்க் மார்க்கெட்டில் காலிஃப்ளவர் வாங்கி எடுத்து வந்து கொடுக்க, நாதன்ஸ் கஃபேயில் சிறப்பு பொரியல் செய்து தருவார்கள். அதற்கு ஒரு கட்டணம் உண்டு என்றாலும் ரெகுலர் கஸ்டமர் என்பதால் பல தடவை வசூலிப்பதில்லை.

என்ன, சபையில் கொண்டுவராமல், ரூமுக்கு பெரிய கேரியரில் ராச்சாப்பாடு அனுப்பும்போது அதெல்லாம் வரும். சனிக்கிழமை ராத்திரி ரூமில் இருந்து வைபவமாகச் சாப்பிட்டுவிட்டு பாண்டிபஜார் ராஜகுமாரியில் அல்லது, பஸ் ஸ்டாண்ட் எதிரே கிருஷ்ணவேணியில், அங்கேயும் நல்ல படமாக ஓடாவிட்டால், மாம்பலம் சீனுவாசாவில் இரண்டாம் ஆட்டம் சினிமா பார்க்கப் போவது வழக்கம்.

அதெல்லாம் இந்த வருடம் ஜூன் இருபத்தைந்து அன்று எமர்ஜென்சி வந்ததும் கொஞ்சம் கொஞ்சமாகக் காணாமல் போனது.

எவரும் சாப்பிட ஒரே கட்டணத்தில் மிகச்சரியாக அளந்த சாப்பாடு. மேலே கேட்டால் தேசத் துரோகமாகி விடலாம் என்று பொதுவான ஐயம்.

சாப்பாடு ஒரு கடமை என்று மாறிப் போயிருந்தது இப்போது. எல்லோரும் சாவி கொடுத்து முடுக்கப்பட்ட பொம்மை என்று ஒரு

தோணுதல்.

‘வெட்டிப் பேச்சைத் தவிர். வதந்தியைப் பரப்பாதே’, ‘கடின வேலைக்கு மாற்றே கிடையாது’ என்று நாஜி வதை முகாமில் எழுதி வைத்து மிரட்டிக் கொடுமைப்படுத்தின மாதிரி ஊரெங்கும் விளம்பரப் பலகை வைத்து நாட்டையே எமர்ஜென்சி அரசு பயமுறுத்தியது.

வட இந்தியாவிலும் கர்னாடகத்திலும், கேரளத்திலும், மகாராஷ்ட்ரத்திலும் எமர்ஜென்சி கொடுமைகள் தலைவிரித்து ஆடுவதாக அவ்வப்போது தகவல் வரும். ஆபீஸில் இன்ஸ்பெக்ஷன், ஆடிட், டெப்யூடேஷன் என்று தில்லிக்கோ, பம்பாய்க்கோ போய் வரும் எல்லோரும் அங்கெல்லாம் சர்க்கார் கடுமையாக நடந்து கொள்வதாக வேறு யாரோ சொன்னதாகச் சொல்வார்கள்.

முக்கியமாக, கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு நிலவுகிறதாம். ஜூலை மாதத்தில் எமர்ஜென்சியை அங்கீகரிக்க நாடாளுமன்றத்தில் ஜகஜீவன்ராம் பாபு கொண்டுவந்த மசோதா ஏகமனதாக நிறைவேறியதற்கு அப்புறம் குடும்பக் கட்டுப்பாடும் பத்திரிகைத் தணிக்கையும், எமர்ஜென்சி எதிர்ப்புப் பேச்சுக்குத் தடையும் தீவிரமாக அமுலாக்கப்படுகிறதாம். வடக்கிலும் மேற்கிலும் இது அதிகமாகவும், தெற்கில் கிட்டதட்ட இல்லாமலும் போயிருப்பதாகத் தகவல்.

எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள். மேலே விவரம் கேட்டால், ‘பேச்சைக் குறை, வேலையைப் பார்’ என்று அரசாங்க போஸ்டராக அடித்து வந்த சஞ்சய் காந்தி வாக்கை வாகாகக் காரணம் காட்டி மௌனமாகி விடுகிறார்கள். கூடுதலாக அவர்கள் சொன்னாலும் அதையெல்லாம் நம்புவதா என்று தயக்கமாக இருந்தது.

இங்கே. பத்திரிகைத் தணிக்கையும், கூட்டம் போடத் தடையும், மீறினவர்கள் கைதானதும் மட்டும் எமர்ஜென்சியின் இன்னொரு முகத்தைக் காட்டியது. மற்றபடி, எமர்ஜென்சி என்பது ரயில் நேரத்துக்கு வருகிற, சர்க்கார் ஆபீஸில் ஒன்பதே முக்கால் மணிக்கு எல்லா நாற்காலியும் நிரம்பி வழிகிற, ஹோட்டலில் சரியாக இருநூறு மில்லி காப்பி அளந்து கிடைக்கிற, ரேடியோ சதா சர்க்கார் கீதம் இசைக்கிற,

நாள் முழுக்க பேச்சாகவும் உரையாடலாகவும் இருபது அம்சத் திட்டப் பிரசாரம் நடத்துகிற, நாட்டுக்குத் தேவையான நல்ல விஷயம் என்று நம்பி வாழ்க்கை நடந்தது.

“விஷயம் தெரியுமா? மந்தவெளி கேஷவ்ஜி மெஸ்ஸில் நோ அளவுச் சாப்பாடு. பருப்புப்பொடி, நெய், வடு மாங்காய், ஸ்வீட்டுனு ராச்சாப்பாடாம்.”

பக்கத்து அறை நாராயணசாமி புதன்கிழமை சாயந்திரம் ரூமுக்குப் போகிறபோது சொன்னார்.

“எப்படி சார், மந்தவெளி பாகிஸ்தான்லே இருக்கா?”

நான் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக்கொண்டேன். கோவிந்தன் மேன்ஷனின் கதவுகளுக்குப் பூட்டு, தாழ்ப்பாள் இருக்கிறதோ என்னமோ, காது உண்டு. எமர்ஜென்சி காலத்தில் அரசாங்கச் சின்னத்தில் மூணு சிங்கத்துக்கும் அசோகச் சக்கரத்துக்கும் நகைச்சுவை அந்நியமானது. பின்னால் மறைந்து நிற்கும் நான்காவது சிங்கம் வேண்டுமானால் சிரிக்குமோ என்னமோ.

“எப்படி சாத்தியமாச்சு ஃபைவ் ஸ்டார் விருந்து?”

நான் கேள்வியை மாற்றி சாத்விகமாக்கிக் கேட்டேன்.

“ரொம்ப தெரிஞ்சவங்களுக்கு மட்டும் சாப்பாடு போடுவாங்களாம். நாம நாலு பேரு இருக்கோம். என் நண்பர்கள் நாலு பேர் நம்மை அறிமுகப்படுத்த ரெடி. வயிறு நிறைய சாப்பிட்டு வரலாம், வாங்க.”

கேஷவ்ஜி மெஸ் பற்றி கீழ்த்தளத்தில் இருந்த விஸ்வநாதன் சொல்லியிருக்கிறான். ஒருநாள் கூட்டிப் போகிறேன் என்றவன் காலி செய்துகொண்டு போய் ஒரு மாதமாகிறது. பாலக்காட்டுக்கு டிரான்ஸ்ஃபர் என்று சொன்னார்கள்.

மேன்ஷன் நட்பு எல்லாம் ட்ரான்ஸ்ஃபரில், கல்யாணத்தில் பால் குக்கர் பரிசு கொடுத்து பிஸிபேளா சாப்பிடுவதில் முடிந்து போகும் என்பதற்கு விஸ்வநாதன் சொல்லாமல் பறையாமல் போனது உதாரணம்.

“எப்படி இந்த மாதிரி இஷ்டம்போல வெட்டுன்னு சோறு இலையிலே கொட்ட முடியும்?”

நான் திரும்ப அடியைப் பிடிக்க நாராயணசாமி சொன்னது-

“முதல்லே அது மெஸ் இல்லே. தினம் ஒரு இருபது இருபத்தஞ்சு பேருக்கு பிரசாதம் கொடுக்கறாங்க. தினசரி பூஜை முடிந்து அன்னதானம். அன்னதானத்துக்கு அளவுச் சாப்பாடு ரூல்ஸ் எல்லாம் கிடையாது. சமாராதனை முடிஞ்சு சாப்பிட்டவங்க சமையல்காரங்களுக்கும் பரிமாறினவங்களுக்கும் பதில் மரியாதை செய்யறது சகஜம்தானே. நாம அதுபோல பூக்குடலையிலே ஆளுக்கு பத்து ரூபாய் போடப் போறோம். ரொம்ப பிடிச்சுதுன்னா அதிகமாகவும் போடலாம்.”

அந்த சமாராதனை விருந்து அடிபொளி. அட்டகாசமாக, வீட்டில் உண்ணும் ஓண சத்ய, கல்யாண விருந்து போல எல்லாப் பழைய நினைவையும் கிளறி, சுடச்சுட சாப்பிடும்போதே கண்ணில் நீர் நிறைய வைத்து விட்டது, கேஷவ்ஜி ஹோட்டல் - மெஸ் - மடம் ஏதோ ஒண்ணு அன்போடு போட்ட அளவில்லா உணவு.

“சஃபையரிலே போய் செகண்ட் ஷோ பார்த்துட்டு போகலாமா?”

பெல்காவி கேட்டார்.

“கண்ணைக் கட்டுது சார், போய்ப் படுத்தா விடிஞ்சு ஏழு மணிக்குத்தான் எழுந்திருப்பேன். சஃபையர் போய்ட்டு திரும்ப நடக்க தெம்பு இல்லே.”

நாராயணசாமி சொன்னார்.

“அதெல்லாம் ஒரு சாக்கா, ஈரானியிலே சூடா ஒரு டீ சாப்பிட்டு அப்புறம் பாருங்க.”

பெல்காவியோடு பக்கத்து ஈரானியில் நுழைந்தோம். சின்னச் சின்ன சமோசாக்களுக்கும் டீக்கும் வயிற்றில் எப்படியோ இடம் ஒழிந்து கிடந்தது. படி இறங்கும்போது நாராயணசாமி அறிவித்தார்:

“இப்போ விடிய விடிய வள்ளித் திருமணம் பார்க்கக்கூட நான் ரெடி.”

சினிமா பார்த்துவிட்டுக் கிளம்பும்போது நான் சொன்னேன் -

“இனிமே காலையிலே ஒன்பது மணிக்குத்தான் மறுபடியும் நடமாட்டம்.”

“ஏன், காந்தி இறந்து போன நாள் ஆச்சே, துக்கம் அனுஷ்டிக்க வேணாமா?” குல்கர்னி கேட்டபடி ஆட்டோ ரிக்ஷாவுக்குக் கைகாட்ட, சங்கடமான அமைதி அப்போது.

நல்ல வேளையாக இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்கள் சேர்ந்து வந்து நிற்க, நானும் குல்கர்னியும் ஒரு ஆட்டோ. மற்றவர்கள் இருவரும் மற்றையதில்.

“ஏன் குல்கர்னி சார், நாளைக்கு என்ன கொண்டாட்டம்னு மறந்துட்டீங்களா? அக்டோபர் ரெண்டு. காந்தி பிறந்த நாள் ஆச்சே...”

குல்கர்னி பதறிப் போனார். அடடா, என்னமோ நினைவு, தப்பா சொல்லிட்டேன் என்றார். ஆனால் அவர் சொன்னது சரிதான். அது துக்க தினமும் கூட. அடுத்த நாள் தெரிந்துவிட்டது.

ஊருக்கு எல்லாம் விடிந்து மூன்று மணி நேரம் கழித்துத்தான் எனக்கு விடிந்தது. விவிதபாரதியோ, மீடியம்வேவ் அலைவரிசையில் ஒலிபரப்பும் மதராஸ் ஒன்று வானொலி நிலையமோ, கட்டாய எமர்ஜென்சி இன்னிசையோடு மகான் காந்தி மகான் பாட்டையும் ஒலிபரப்பியது. காந்தி அந்தக் கூட்டத்தில் அந்நியமாகக் காதில் விழுந்தார். தொடர்ந்து எம்.கே. தியாகராஜ பாகவதரின் தனிப்பாடல் ‘காந்தியைப் போலொரு சாந்த ஸ்வரூபனை’. ட்ரான்சிஸ்டரை சத்தமாக வைத்து அந்தப் பாட்டைக் கேட்கும்போது கீழிருந்து மேன்ஷன் வாட்ச்மேன் குரல் -

“போத்தி ஐயா, தண்ணி நிக்கப் போவுது. அடிச்சு வைக்கணும்னா பக்கெட் எடுத்துட்டு விரசா வாங்க.”

நான் காலி பக்கெட்டும், பிரஷ் வைத்து நுரைத்த வாயுமாகக் கீழே ஓடும்போது மனதில் காந்தியைப்போல் பாட்டு. இதென்ன ராகம்? சட்டென்று மனதில் வர மாட்டேன் என்கிறது. எம்.கே.டி பாடிய இன்னொரு பாட்டு, அது ஒரு சினிமாப் பாட்டு, அது கூட இதே மெட்டுதான்.

அரை பக்கெட் அடிபம்பில் அடிப்பதற்குள் தண்ணீர் சன்னமாக வர ஆரம்பித்தது. இது ஒரு வினோதமான குடியிருப்பு காம்பவுண்ட். கீழ்த் தளம், மூன்று மாடி மேலே. நான்கு நான்கு ரூமாக மொத்தம் பதினாறு அறைகள். இந்தக் குடியிருப்பைத் தவிர, ஒரு சிறிய வீடும் இந்த காம்பவுண்டில் உண்டு.

எல்லோருக்கும் சேர்த்து நான்கு அடிபம்புகள். வார நாட்களில் தண்ணீர் வரத்து குறைந்து போனால், வீட்டுக்காரர்களுக்கும் மேன்ஷன்வாசிகளுக்கும் அவ்வப்போது தண்ணீர் யுத்தங்கள் நிகழ்ந்தாலும் சாயந்திரம் ஆபீஸ் விட்டு வரும்போது அந்தச் சுவடே தெரியாமல் பத்து நிமிடம் கீழே வீட்டு வாசலில் நின்று அரட்டை அடித்துவிட்டு ரூமுக்குப் படியேறுவது வாடிக்கை. முக்கியமாக பெல்காவியும், குல்கர்னியும். அவர்களுடைய கன்னடமும், குடித்தனக்காரர்களின் தமிழும் எப்படியோ தகவல் பரிமாறிக் கொள்ளும்.

“போத்தி மாமா, எங்க வீட்டுலே ஹாப்பி தாத்தா திவசம். ஸ்வீட்டு எல்லாம் சாப்பிடுவோம்.”

கீழ் வீட்டு வாண்டுகள் நான்கு அடிபம்பிலும் தண்ணீர் அடித்துக்கொண்டு பக்கெட்டை வைக்க விடாமல் சூழ்ந்து கொண்டிருந்தார்கள்.

“திவசத்துக்கு ஹாப்பி எல்லாம் சொல்லக் கூடாது. தாத்தா போய்ச் சேர்ந்துட்டாரில்லையா?”

நான் மெல்ல அறிவுரை சொன்னபடி பக்கெட்டை பம்பில் வைத்து பசங்கள் கையை விலக்க, தண்ணீர் நின்றே போனது. “இப்போ என்ன பண்ணுவீங்க?” அதுகள் அக்கறையாக விசாரித்தன.

“வேறென்ன செய்ய, மாதுதான்.” சொல்லியபடி நான் கீழே முதல் அறை வாசலில் நின்று “மாது வந்திருக்கேன்” என்றேன்.

இப்படி நான்கு ரூமில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் தேற்றினால், இரண்டு பக்கெட்டுக்குக் குறையாமல் தண்ணீர் கிடைக்கும். குளியல்,

ஆத்திர அவசரத்துக்குத் துணி துவைப்பது எல்லாம் முடித்துக் கொள்ளலாம்.

“போத்தி, மாது வேணாம். எக்ஸ்ட்ரா பக்கெட் இருக்கு. எடுத்துப் போய்க் குளிச்சுட்டு உடனே ரிட்டர்ன் பண்ணுங்க.”

கீழே குடியிருந்த ராமோஜி ராவ் சலுகை காட்ட, எல்லாம் கிரமமாக முடித்து வெளியே கிளம்பும்போது வாட்ச்மேன் பெரியசாமி வந்து நின்றார்.

“மனஸ்தாபம் இல்லாம, கோபதாபம் இல்லாம சமாளிச்சுட்டீங்க தம்பி.”

வீட்டுப் பெரியவர்போல் என்னைப் பாராட்டினார் அவர். எங்கள் ஊர்ப் பக்கத்து மனுஷர்தான். விளைச்சல் பொய்த்து முன்னூறு மைல் கடந்து பஞ்சம் பிழைக்க இங்கே வந்திருக்கிற பலரில் அவரும் ஒருத்தர்.

“எதுக்கு கோபம்? யாருக்கும் கோபம் ஆகவே ஆகாது” என்று காந்தி அடிகள்போல சாத்விகமும் புனிதமும் ஒரு வினாடியாவது மேலே கவிய நின்றேன்.

சட்டென்று எம்.கே. தியாகராஜ பாகவதரின் இன்னொரு பாட்டு நினைவு வந்தது. ‘ராதே உனக்குக் கோபம் ஆகாதடி.’ சினிமாப் பாட்டு. என்ன படம் நினைவு இல்லை. ஆனால் ராகம் புலப்பட்டது. செஞ்சுருட்டி.

அப்போ, காந்தியைப்போல் ஒரு சாந்த ஸ்வரூபனை? செஞ்சுருட்டியேதான். பாகவதர் வேண்டிக் கேட்டு பாபநாசம் சிவன் எழுதியது என்று வீட்டில் பாட்டித்தள்ளை சொல்லக் கேட்டிருக்கிறேன்.

‘இதிலே எல்லாம் என்ன நாட்டம்? இன்னும் இருபது வருஷம் முந்தி பிறந்திருக்க வேண்டியவன் நீ’ என்பாள் அவள். நான் இல்லாத ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதுகள் கம்பீரமானவை. மனசும் புத்தியும் விடுதலையாக இருந்த காலம். இன்றுபோல் இல்லை.

அண்ணாந்து பார்க்க, எங்கள் மாடியில் எல்லா அறைகளும் பூட்டியிருந்தன. ஆக, நான் மட்டும்தான் கும்பகர்ணன்போல தூங்கிக் கொண்டிருந்திருக்கிறேன்.

வாசலில் சைக்கிள் ரிக்ஷா வந்து நிற்கிற சத்தம். இனிமேல் ரிக்ஷா வாடகை பற்றி ஒரு ஐந்து நிமிடத்துக்காவது தொடர்ந்து ஒரு சண்டை இருக்கக்கூடும்.

“போத்தி, வெளியே கிளம்பிட்டியா?”

வாசலில் இருந்து இந்தச் சத்தம்தான் வந்தது. முத்தார் சாயபு இல்லையோ இது. அவனேதான்.

கொஞ்சம் குண்டு அடித்திருக்கிறான். தலையில் வைத்த கறுப்புக் குல்லாய் ஜொலிக்கிறது. பக்கத்தில் போனேன். மூக்கைத் துளைக்கும் நறுமணம். அந்தக்கால வாசனை அது. ஜவ்வாது. முத்தார் சாயபு இல்லை. அத்தர் சாயபு. சைக்கிள் ரிக்ஷா தட்டில் வைத்திருந்த மூட்டையில் இருந்துதான் வேற ஏதோ வாடை வருகிறது.

“எங்கேடா இருக்க இப்போ? பார்த்தே ரெண்டு வருஷம் ஆச்சே? அத்தா எப்படி இருக்காரு? உம்மா நல்லா இருக்காடா? ரியாலுதீன் தம்பி என்ன பண்றான்?”

அவன் மூட்டையை இறக்கக் கைகொடுத்தபடி வரிசையாகக் கேட்டேன்.

சத்தியமாக சாப்பிடுகிற வஸ்து இல்லை அந்த மூட்டைக்குள் இருந்தது. இதைக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்து என் ரூமில் போட்டால் மேன்ஷனே கெட்ட வாடை அடிக்கும்.

“எல்லாரும் நல்லா இருக்காக. உங்க அச்சன், அம்மா, பாட்டித்தள்ளை எல்லாம் எப்படி இருக்காக?”

ஒரு வினாடி சும்மா இருந்தேன். சொந்த சோகத்தைப் பங்கு போட இது இடமில்லை. நேரமில்லை. ‘ஒண்ணாங்க்ளாஸ்’ என்று அவன் எதிர்பார்த்த கட்டைவிரலும் ஆள்காட்டி விரலும் இணைத்த சைகை காட்டிச் சொன்னேன்.

“நீ என்ன பண்ணிட்டு இருக்கே?”

“நானா? புலியடிதம்மத்திலே செருப்பு சோல்ஸ் பிசினஸ் பண்ணிட்டு இருக்கேன் போத்தி.”

செருப்பு, ஷூவுக்கான பாதப் பகுதியில் வைக்கிற மெத்தென்ற தோல் அடுக்குகளை மொத்தமாக விற்கும் தொழில் அது. புது கஸ்டமருக்குத் தானே நேரில் டெலிவரி கொடுக்க வந்திருக்கிறான். இந்த ஆர்டர் வந்தால் அடுத்து லாரியில் புலியடிதம்மத்தில் இருந்து இன்னும் இருபது மடங்கு அதிகம் சரக்கு அனுப்பி வைப்பானாம். எதுவோ, இப்போது இந்த மூட்டை என் அறைக்குள்தான் இருக்கவேண்டும்.

“நான் குளிச்சுட்டுக் கிளம்பிடறேன். கொஞ்சம் இரு” என்றான் முத்தார் சாயபு. தண்ணி இல்லையேடா என்று இல்லேப் பாட்டு பாடவேண்டிய சந்தர்ப்பம். கீழே இரண்டாம் அறைக் கதவு திறந்திருந்தது தெரிந்தது. மாது வந்தாச்சு.

மறுபடியும். ஒரு பெரிய பக்கெட் நிறைய உபரியான தண்ணீர் கிடைத்தது. பாத்ரூமில் சின்னதாக உறுதியான பாலிவினைல் தொட்டி நிறைய இன்னும் தண்ணீர். “நீங்க தண்ணியை எடுத்துப் போக வேணாம். உங்க சிநேகிதரை இங்கேயே குளிக்கச் சொல்லுங்க” என்றார் கீழ்த்தள நண்பர். சென்சார் போர்டில் உத்தியோகம். கத்தரி போடுவதற்கு முந்திய படமெல்லாம் பார்க்கக் கொடுத்து வைத்தவர்.

முத்தார் ரெடி ஆக பதினைந்தே நிமிடம்தான் பிடித்தது. கிளம்பப் போகிறான் என்று பார்த்தால், “கஸ்டமரை சாயந்திரம்தான் பார்க்கறேன். இப்போ எங்க குப்பி வீட்டுக்கு போகணும். நுங்கம்பாக்கத்துலே இருக்கு” என்றான் சாவதானமாக.

சரக்கு டெலிவரி கொடுக்க வந்தவன் அத்தை வீட்டுக்கே போயிருக்கலாமே? யார் அவனிடம் கேட்க? வெளியே போனோம்.

ரயில்பாதை ஓரமாக நடந்தோம். இங்கே ஏதோ இடத்தில் திருநெல்வேலி மண்பானை சமையல் என்று பெயர்ப்பலகை பார்த்த நினைவு. நிதானமாகத் தேடினேன். ஒன்றும் தட்டுப்படவில்லை. தெரு திரும்ப, ஒரு புது பெயர்ப்பலகை. ‘செட்டிநாடு சைவச் சமையல்’.

இட்லியும், கந்தரப்பமும், வெள்ளைப் பணியாரமுமாக காலைச் சாப்பாடு நகர்ந்தது. காந்திக்கு நன்றி சொன்னேன். அவர் பிறக்காவிட்டால்

இன்றைக்கு முழுநாள் வேலை என்றுதான் போயிருக்கும். காந்தி ஒரு நாள் தாமதமாகவே பிறந்திருக்கலாம்.

அண்ணா பிறந்தநாளுக்கும் விடுமுறை கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றான் முத்தார். வட்டை செட்டில் மண்டை வெல்லம் கரைத்த காப்பி செம்மண் பூமிக் கிராம வாசனையோடு உள்ளே இறங்கியது.

மாம்பலம் ரயில் நிலையத்துக்குள் போகும்போது முத்தார் சொன்னான், "போத்தி, சும்மாதானே இருக்கே, நீயும் என்னோடு கூட எங்க குப்பி வீட்டுக்கு வாயேன். மாமு உனக்கு தெரிஞ்சவஹதானே?"

"போய்ட்டு ஒரு மணிக்கு வந்துடலாம்" என்று சம்மதித்தேன்.

"மேட்னி ஷோ சினிமா போக புக் பண்ணியிருக்கியா?"

நான் வெறுமனே சிரித்தேன். ருசி கண்ட பூனையாக கேஷவ்ஜி மெஸ்ஸுக்கு மதியச் சாப்பாட்டுக்குப் போக பெரிய சைஸ் ஆசை ஒன்று மேலெழுந்து வர, கொஞ்சம்போல பசியும் எட்டிப் பார்த்தது.

இன்னொரு விடுமுறை யார்யாரோ இழுத்த இழுப்புக்கு நீண்டு வளைந்து இதோ போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதம் போனால் இந்த நாளே நினைவு வராது. ஒரு மாதம் என்ன, நாளை மறுநாள் இந்தச் சாதாரண தினத்தை மறந்து போகப் போகிறேன்.

முத்தார் சாயபுவின் குப்பிக்கு (அத்தை) வணக்கம் சொன்னேன். குப்பி வீட்டுக்காரர் உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்கிறவர். வீடு கமகமவென்று சந்தனம் மணத்தது. ஒரு தூசி தும்பு இல்லாமல் மொசைக்குக்குப் பதிலாக பளிங்குக் கல் பதித்த தரை கால் வைக்கக் குளிர்ந்து இருந்தது. இங்கே செருப்பு மூட்டை வைத்தால் சரிப்பட்டு வராதுதான். அதெல்லாம் மேன்ஷன் நண்பர்கள் மட்டும் அனுபவிக்கக் கொண்டுபோகப் படுபவை.

"உக்காருங்கப்பா" என்றாள் குப்பி. கூடத்தில் உயரம் குறைவான இருக்கைகள் வெல்வெட் திண்டு தலையணை சின்னச் சின்னதாகப் பொதிந்து காணப்பட்டன. திண்டுகளை எடுத்தால் சற்றே அகலம் குறைவான படுக்கையுமாகும். கருவாடு விற்ற பணத்தைக்

கருத்தாகத்தான் செலவழித்திருக்கிறார் முத்தாருடைய அத்தை வீட்டுக்காரர்.

முத்தாரின் குப்பி ஜமீலாம்மா என் அத்தை விலாசினி டீச்சருக்குப் பள்ளித்தோழி. வாடி போடி உறவு. “என்னடா, மெட்ராஸ்லே இருக்கேன்னு பேரு, முத்தார் வந்தாத்தான் நீ பார்க்க வருவியா? பெரிய மனுஷன் ஆயிட்டேபோல”, ஜமீலா அத்தை அன்போடு கோபித்துக்கொண்டு, லக்னோ இனிப்பும் கசோரியும் கொண்டுவந்து கொடுத்தாள்.

“லக்னோ யார் போனாங்க குப்பி?” நான்தான் கேட்டேன். “இவுகதான்” என்று வாசலைப் பார்க்க, குப்பி வீட்டுக்காரர் நிஜாமுதீன் சாயபு வந்துகொண்டிருந்தார்.

“பிள்ளைங்களுக்கு சர்பத் எடும்மா” அவர் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொல்ல நான் உடனே சுதாரித்துக் கொண்டேன். குப்பி வீட்டு பலகாரம் எல்லாம் நல்ல சுவையாக இருக்கும் என்றாலும், சர்பத் கொடுத்தால் மறுத்துவிடுவது உத்தமம் என்று முத்தார் சாயபுவே சொல்லியிருக்கிறான்.

வடக்கே இருந்து வரவழைத்தது அந்த சர்பத். நல்ல சிவப்பில், ஐஸ் கட்டி எல்லாம் மிதக்க, பெரிய கண்ணாடித் தம்ளரில் வரும். ஒரு வாய் உறிஞ்சினால் அது என்னமோ மூட்டைப்பூச்சியோ தெள்ளுப்பூச்சியோ மிதக்கிறதுபோல் ஒரு வாடை. எதோ கப்ஸா என்று முடியும் பெயரே கொஞ்சம் யோசிக்க வைக்கும். சர்பத்களிலேயே உசந்த ருசி என்று குப்பியும் நிஜாமுதீன் சாகீபும் சிபாரிசு செய்கிறார்களே என்று ஒரு முறை சாப்பிட்டு, நடு ராத்திரி பீங்கான் தட்டில் மூட்டைப்பூச்சி கழுவிய தண்ணீரைக் குடிக்கிற அரைத் தூக்கக் கனவு. அந்த வாடை மனதில் இருந்து போக ஒரு வாரமானது.

“வடக்கத்தி ஷெர்பத் இல்லே தம்பி. நானே வீட்டுலே காச்சினது. குடிச்சுத்தான் பாரேன்.”

முத்தார் சாயபுவின் குப்பி கொடுத்ததைத் தட்டாமல் குடித்தவன் அதன் ருசியில் மயங்கி இன்னொரு கிளாஸ் கேட்டு வாங்கிப் பருகினேன். 'ரோஜா இதழையும், பாதிரி மாம்பழத் துண்டுகளையும் சர்க்கரையையும் இன்னும் எதையோ எல்லாம் பாகு வைத்துக் காய்ச்சி...' என்று குப்பி சொன்ன செய்முறையை அரைக் காதால் கேட்டபடி மூன்றாம் கிளாஸும் பாதி குடித்தபோது திருவல்லிக்கேணியில் மதிய சாப்பாடு எண்ணம் கேன்சல் ஆகிவிட்டது.

பகல் சாப்பாடு குப்பி வீட்டில்தான். முத்தாருக்கு பிரியாணியும் நான் துவாதசி என்று அசைவம் தவிர்த்ததால் மல்லிகைப் பூ போல மெத்தென்று இடியாப்பமும் தேங்காய்ப் பாலும், ரவாப் பொங்கலும் இஞ்சித் துவையலுமாக சிறப்புச் சைவ உணவு.

சாப்பிடும்போது அத்தை வீட்டுக்காரர் ஜனாப் நிஜாமுதீன் சாகிப் அவர்களை தில்லி எப்படி இருக்கு என்று விசாரித்தேன்.

"டில்லிக்கு யார் போகிறதுங்கறதைப் பொறுத்தது தம்பி அது" என்றார் குப்பி வீட்டுக்காரர்.

"அப்படீன்னா?"

"துருக்கன்னா ஆடு மாடு மாதிரிதான். இழுத்துப் போய் உதச்சு அறுத்து விட்டுடுவாங்க. மக்யவன்னு சொன்னா, கொஞ்சம் சலுகை. உடனே அறுத்துக்க வேணாம்." அவர் சிரிப்பில் வேதனை தெரிந்தது.

"அப்படி குடும்பக் கட்டுப்பாடு பண்ணி வைக்க என்ன காரணம்?"

முத்தார் சாயபு கேட்டான்.

"வேற என்னடே. இளவரசர் சொல்றாரு கேட்டுக்க. நாம எதுவோ பெத்துப் போட்ட மாதிரி பெருகிட்டே போறோமாம். நாளைக்கு நாட்டை பிடிச்சுடுவோமாம். ஆளாளுக்கு நாலு பொண்டாட்டி கட்டறோமாம். இங்கே ஒண்ணை வச்சுக்கிட்டே சமாளிக்க முடியலே."

நிஜாமுதீன் நமுட்டுச் சிரிப்போடு சொல்ல, குப்பி அவரை அடிக்கக் கையை ஓங்கினாள். செல்லமாகத்தான்.

“பாரு நாம இங்கே காமெடி பண்ணிட்டு இருக்கோம், அங்கே அறுத்துத் தள்ளி அனுப்பிட்டிருக்காங்க. நம்மாளுங்க இருக்கப்பட்ட ஏரியா எல்லாம் பயத்துலே கிடக்கு. தெருவுக்குத் தெரு பயந்து போய் அந்தம்மா படத்தையும் மகன் படத்தையும் மாட்டி வச்சுருக்காங்க. ஒருத்தனை ஒருத்தன் ஒற்று சொல்லிடுவானோன்னு நம்மாளுங்களுக்குள்ளேயே சந்தேகம். கவர்மெண்ட் பத்தி பேசவே பயம். ஒண்ணும் சரியில்லே போ.”

எமர்ஜென்சி என்றால் ரயிலும் பஸ்ஸும் நேரத்துக்கு வருவதுவும், மலிவு விலைக்குக் கிடைக்கும் ஜனதா அளவுச் சாப்பாடும் மட்டுமில்லை. அரைக்குக் கீழே ஆபரேஷன் பண்ணி ஆடுமாடுபோல பட்டியில் அடைக்கிறதும், குடியிருக்கும் வீட்டை இடிக்கிறதும் கூடத்தான். ஒரு ஜனக்கூட்டத்தையே இருபது, ஐந்து என்று நம்பரைச் சொல்லிப் பயமுறுத்தும் சூழ்நிலை. நாங்கள் மந்தைவெளி மெஸ்ஸில் பருப்புப் பொடியும் நெய்யும் பிசைந்து சுடுசோறு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

பகல் மூன்று மணி சுமாருக்கு முத்தார் சாயபுவோடு திநகர் வந்து கொண்டிருந்தபோது, பஸ் திருமலைப் பிள்ளை வீதியில் திரும்பி சில அடிதூரம் செல்ல, போலீஸ் கைகாட்டி நிறுத்தினார்கள். தெரு முழுக்கப் பரபரப்பாக அங்கங்கே நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். பதற்றமாக யார்யாரோ ஓடிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

“வேற ரூட்டுலே போங்க. இந்த ரோட்டுலே போக்குவரத்து இல்லே.” காவலர் சொன்னார்.

“ஏன் என்ன ஆச்சு?”

“பெருந்தலைவர் காமராஜர் இறந்துபோய்ட்டார்.”

திருமலைப்பிள்ளை சாலையில்தான் காமராஜர் வீடு. நானும் முத்தார் சாயபுவும் உடனே பஸ்ஸில் இருந்து இறங்கிவிட்டோம். எப்போ என்று என்னிடம் விரசாக நடந்தபடி யாரோ கேட்டார்கள். “தெரியலீங்க, இப்போதான் நியூஸ் வருது” என்றேன். ஒரு அம்பாசடர் கார் வந்து நிற்க

கேமராவோடு ஓடுகிற வத்திக்குச்சி இளைஞனோடு ஸ்தூல சரீர அம்மாள் கூடவே விரைந்தாள். பிரஸ் என்றேன் முத்தார் சாயபுவிடம்.

“ஆமா, நோட்டீஸ் அடிச்சு சம்பந்தக்காரங்களுக்கு அனுப்பி மைத்துக் கொல்லையிலே ஜனாசா தொழுகைக்கு வரச் சொல்லணுமில்லே.”

“அந்த பிரஸ் இல்லேப்பா” என்றபடி காமராஜ் வீட்டு வாசலில் நின்றேன். கூட்டத்தை போலீஸ் ஒழுங்குபடுத்தி வரிசையாக நிற்கச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நானும் முத்தாரும் வரிசையின் கடைசியில் போய் நின்றோம்.

“மதியம் லேசா கண்ணயர்ந்திருக்கார். தூங்கி முழிச்சதும் அந்தப்படிக்கே உசிரு ஆண்டவன் கிட்டே போயிடுச்சு.”

முன்னால் நின்றவர் ஆற்றாமையோடு சொல்லிக் கொண்டிருந்தார். முத்தார் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தபோது அது இரண்டு வர்ணக் கரையோடு இருந்ததைப் பார்த்து முன்னவர், “முனாகானாவா?” என்று கேட்டார். முத்தார் “நான் மட்டும்” என்று என்னை விலக்கினான். நானும்தான் என்றார் கேட்டவர், ரகசியம் பகரும் குரலில்.

முனாகானா காமராஜ் வீட்டில் என்ன செய்கிறார்? என் பார்வை புரிந்ததுபோல் அவர் பதில் சொன்னார் - “எந்தக் கட்சியா இருந்தா என்ன, எல்லோருக்குமே பெருந்தலைவர் அவர் ஒருத்தர்தான்.”

நாங்கள் உள்ளே நகர்ந்து அஞ்சலி செலுத்திவிட்டு வெளியே வந்தோம். ஜி.என்.செட்டி தெருவுக்கு நடந்து போக, அங்கே ஒரு பஸ் கிடையாது. நடந்தே மேன்ஷன் இருந்த தெருவுக்கு வந்தோம்.

“போத்தி, காசிமேட்டுலே கஸ்டமர் கிட்டே எப்படி நான் ஆர்டரை டெலிவரி பண்றது?”

முத்தார் கேட்டான். அவன் கவலை அவனுக்கு. காமராஜருக்காக ஒரு நிமிடம் துக்கம் அனுஷ்டித்ததுதான் அவனோ நானோ அதிகபட்சம் இங்கே செய்யக்கூடியது.

“வேணாம், நீ அதை எல்லாம் கட்டித் தூக்கி எடுத்துக்கிட்டுப் போய் நடுவழியிலே போக்குவரத்து இல்லாம மாட்டிக்கிட்டா சிரமமாயிடும். நாளைக்கு போய்க்கலாம்” என்றேன்.

தெருமுனையில் வெல்டிங் கடையில் நல்லவேளையாக பப்ளிக் டெலிஃபோன் யாரும் பேசாமல், அருகே பேசக் காத்திருக்காமல் இருந்தது. அதைவிட நல்ல வேளையாக, அது இயங்கியது. ஒரு ரூபாய் காசும் நல்ல யோகம் காரணமாக இரண்டு பேரிடமும் இருந்தது. நாளைக்கு வருகிறேன் என்று அவன் சேதி சொல்லி வைத்துவிட்டான். இனி காலை வரை இவனை, சிற்றரசன் பாணரையும் பொருநரையும் ஆதரித்ததுபோல், சாப்பாடும் தங்க இடமும் செருப்பு மூட்டை முடிச்சை வைக்க அங்கேயே ஓரமாக ஒரு மூலையும் கொடுக்க வேண்டும்.

அதை எல்லாம் மீறி, காமராஜ் பற்றி நினைவு. இன்னொரு தலைவர் இவ்வளவு எளிமையாக, எந்தச் சொல் அலங்காரமும் இல்லாமல் பேசிக்கொண்டு, சாதாரணமா இருந்துகொண்டு இனியும் வர சாத்தியமுண்டா?

என்ன யோசிக்கிறே என்று முத்தார் சாயபு கேட்க இதைச் சொன்னேன்.

“தலைவர் வரலாம், ஆனா அவர் மாதிரி தில்லியிலேயும் அதிகாரம் செல்லுபடி ஆகறவரா இன்னொருத்தர் இனிமேல் வரமுடியாது. அது வேற உலகம். நிறைய தடவை வியாபாரத்துக்காக போயிருக்கேன். நாம இனி அங்கே டில்லியிலே இந்தியா கேட் பார்க்க, கரோல் பாக்கிலே பானிபூரி தின்ன, கன்னாட் ப்ளேஸ்லே சும்மா ப்ராக்கு பார்த்துக்கிட்டு நடக்க வேணும்னா டூரிஸ்டா பயணம் போகலாம். வெளியே நின்னுக்கிட்டு ஜனாதிபதி மாளிகையையும் பார்லிமெண்டையும் அண்ணாந்து பார்த்து நானும் இந்தியன்னு பெருமைப் பட்டுக்கலாம். அவ்வளவுதான். யாரும் அங்கே நம்மை சீந்தப் போறதில்லே. கூப்பிட்டு விட்டா வந்தேன் வந்தேன்னு ஓடிப் போய் ஓரமா வாய் பார்த்துக்கிட்டு நிக்கற நிலைதான் இனிமேல்கொண்டு” என்றான் முத்தார்.

கோவிந்தன் மேன்ஷன் கீழ்வீட்டுக் குடும்பம் வெளியே போயிருந்தது. அங்கே விளக்கில்லாததால் இருண்ட மாடிப்படி ஏறும்போது மேலே ஒரே

சத்தம்.

பெல்காவி அறையில் இருந்து சத்தம் வந்து கொண்டிருந்ததைக் கவனித்தேன்.

“ஏதாச்சும் தீபிடிச்சுட்டுதா?” முத்தார் சாயபு ஓட்டமும் நடையுமாகப் பின்னால் வந்து அடுத்த படியில் நின்றபடி அவசரமாக விசாரித்தான். அவன் கவலை அவனுக்கு. எனக்கும்தான். தீ ஏதாவது பிடித்து தோல் செருப்பு எரிய ஆரம்பித்தால் ஊரோடு வாடை கிளம்பி விரட்டும்.

பெல்காவி அறையில் எட்டிப் பார்த்தேன். அவர் கையைக் கட்டிக்கொண்டு நின்றிருக்க, அவருடைய நாடாக் கட்டிலில் ஒரு பெண் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தாள். முப்பது வயது காணும். பெல்காவி வீட்டில் இருந்து அதாவது பெல்காமில் இருந்து யாரோ, அவர் சகோதரியோ சித்தி, மாமி என்று உறவிலோ வந்திருக்கிறார்கள்போல. வந்தவளுக்குக் காது சற்று மந்தமாக இருக்கலாம். ஆகவே, பெல்காவி சத்தம்போட்டு ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறாராக இருக்கும்.

“போத்தி, இது உங்க உறவுக்கார அம்மாவா?”

கடந்து போகும் என்னைப் பார்த்து பெல்காவி கேட்டார். அப்படியே நின்றுவிட்டேன். என் சொந்த பந்தம் யாரும் மேன்ஷனுக்கு வந்ததில்லை. ஆயிரத்தெட்டு அம்பலவாசி ஆசாரம் பார்க்கிறவர்கள் அவர்கள் எல்லாம். ஒரே ஒரு தடவை எர்ணாகுளம் போக ரயிலேற அச்சன் வந்தபோது, பக்கத்தில் சவேரா ஓட்டலில் அறை ஏற்பாடு செய்து வைத்து அங்கே போய் அவரோடு இருந்து சென்ட்ரலில் ரயில் ஏற்றி அனுப்பினேன். எங்கள் குடும்பத்துப் பெண்கள் எனக்குத் தெரிந்து இதுவரை யாரும் தனியாக இத்தனை தூரம் பயணம் வந்ததில்லை. வந்தாலும் மேன்ஷன் எல்லாம் அவர்களுடைய அகராதியில் கிடையாது.

பெல்காவியிடம் அந்தப் பெண் எனக்கும் அந்நியமானவள்தான் என்று சொல்ல, அவர் முத்தார் சாயபுவைக் காட்டி யாரென்று கேட்டார். சிநேகிதன் என்பதை அறிவிக்க, கொஞ்சம் நிம்மதி அடைந்து, இந்தப் பெண் உங்கள் சிநெகிதருக்கு வேண்டியவரா என்று கேட்டார். அப்படி

எல்லாம் இல்லை என்று மறுத்து, ஹதீஸில் அந்நியப் பெண்களோடு பயணம் போவதும் ஒரே இடத்தில் தங்குவதும் ஹராம் என்ற பாவச்செயல், அது தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ன முத்தாரை எனக்குத் தெரியாது. நான் அவனோடு பழகி இருக்காத இந்த இரண்டு வருடம் அவனைக் கிட்டதட்ட ஒரு மௌல்வி ஆக்கி இருக்கிறதுபோல.

நாங்கள் பேசுவதை சுவாரசியமாகப் பார்த்தபடி அந்தப் பெண் தரையில் வைத்திருந்த ரெக்சின் பையில் இருந்து ஒரு கண்ணாடிக் காகித உறையில் வைத்த கடலை மிட்டாயை எடுத்துத் தின்றாள். ஓரத்தில் வைத்த மண்பானையிலிருந்து குடிக்கத் தண்ணீர் எடுத்துத் தரச்சொல்லி பெல்காவியிடம் சைகை செய்தாள். பெல்காவி உடம்பு தடதடவென்று ஆட, வாசலைக் காட்டி கன்னடத்தில் அவளை வெளியே போகச் சொல்லிக் கொண்டிருந்தார். எனக்குக் கன்னடம் தெரியாவிட்டாலும் அவர் வேறே எதையும் சொல்லியிருக்க வாய்ப்பில்லை என்பது தெரியும்.

அந்தப் பெண் ஒன்றுமே பேசாமல் தானே எழுந்து பானையில் இருந்து தண்ணீரை கிளாஸில் சரித்துக் குடித்துவிட்டுத் திரும்ப நாடாக் கட்டிலில் சுபாவமாக உட்கார்ந்து கொண்டாள். பெல்காவி வெடவெடவென்று ஆறடி உயரத்தில் தீக்குச்சி மனிதன்போல இருப்பார். அவர் என்னிடம் குனிந்து “போத்தி, உங்களைத்தான் பார்க்க வந்திருக்காங்க, கூட்டிப் போங்க” என்று பட்டை ஃப்ரேம் மூக்குக்கண்ணாடி மூலம் பார்த்துக் கெஞ்சுதலோ, வேண்டுதலோ, கோரிக்கையோ, ஆணையிடுதலோ ஏதோ கன்னடத்தில் சொன்னார். பதற்றப்படும்போது தாய்மொழிக்குத் தன்னை அறியாமல் தாவுவது யாரும் செய்வதுதான்.

குல்கர்னி அடுத்த அறையில் இருந்து கையில் ‘முப்பது நாளில் பெங்காலி பாஷை’ என்ற பாலாஜி பப்ளிகேஷன் புத்தகத்தோடு வந்து புத்தகத்தைப் பார்த்துப் பார்த்துக் கேட்டது, அந்த மாதிரிப் புத்தகங்களுக்கே உரித்தான, ‘உங்களுக்கு ரொட்டி சாப்பிடப் பிடிக்குமா? வியாழக்கிழமை எத்தனை வாழைப்பழம் சாப்பிடுவீர்கள்? குடை எடுத்து

வந்தீர்களா?' என்று லாஜிக் இல்லாத வரிசையில் வரும் கேள்விகளாக இருக்காது என்று பட்டது.

அந்தப் பெண் அசையவில்லை. ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தபடி ரெக்சின் பையை மடியில் வைத்துக் கொண்டாள். பெல்காவியின் அறை நகர்ந்து ஒரு அடி மேலே உயர்ந்து பறந்துவிடும் என்ற எதிர்பார்ப்புடனோ என்னமோ ஜாக்கிரதையாக நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள் அவள்.

"போத்தி, இங்கிலீஷ், தெலுகு, கன்னடம், துளு, உருது, மராட்டி, இந்தி, பெங்காலி எல்லா மொழியிலேயும் யார் என்னன்னு கேட்டாச்சு. பதில் இல்லே." குல்கர்னி சொன்னார்.

உடனே முத்தார் சாயபு, "நீங்க யாரு அம்மா? வீடு எங்கனக்குள்ளே? எங்கிட்டிருந்து வரீக?" என்று செம்மண் பூமித் தமிழில் கேட்க இப்போதும் பதில் இல்லை. நானும் என் பங்குக்கு மலையாளத்தில் கேட்டுப் பார்த்தேன்.

"பத்து மொழியிலே மௌனமாக இருக்கக் கூடியவர் இவங்கதான்" என்றேன் முத்தார் காதில். அவன் மகா ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான்.

சரசரவென்று சாயந்திரம் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. நான் அறையைத் திறந்து விளக்குப் பொருத்திவிட்டு வரலாம் என்று நடந்தேன். சீக்கிரம் வந்துடுங்க போத்தி என்று அனாதரவான குரலில் சொன்னார் பெல்காவி. எதாவது அற்புதம் நடந்து அந்தப் பெண் படியிறங்கிப் போவாள் என்ற நம்பிக்கையோடோ என்னமோ வாசல் பக்கம் தத்திப் போய் கதவை விரியத் திறந்து வைத்தார். நான் அவசரமாக வெளியே என் அறையை நோக்கி நடந்தேன். நாராயணசாமி அவருடைய அறையில் இல்லை. மந்தவெளி மெஸ்ஸுக்குப் போயிருப்பாரோ.

என் அறையில் இருந்து செருப்பு வாடை தூக்கலாக அடைத்த கதவுக்கு அப்புறம் இருந்து வந்து கொண்டிருந்தது. பெல்காவியோ குல்கர்னியோ

மற்ற நேரம் என்றால் நாகரிகமாகவும் மறைமுகமாகவும் ஆட்சேபித்திருப்பார்கள். இப்போது அந்தப் பெண் சட்டமாக பெல்காவி அறையில் வந்து உட்கார்ந்துகொண்டு மற்ற எல்லா நினைப்பையும் செயலையும் இல்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறாள்.

“ஏயப்பா, ஒரே ஒச்சமா இல்லே இருக்கு இந்தச் செருப்பெளவு.”

இது ஆச்சரியகரமாக முத்தார் சாயபு சொன்னது.

அறையில் நான்கைந்து மட்டிப்பால் ஊதுவத்திகளைக் குத்தாகக் கொளுத்தி, காப்பி கப்பை அலம்பித் துடைத்து அதற்குள் வைத்து சின்ன நாற்காலி மேல் இட்டேன். டிரான்சிஸ்டரை வெளியே எடுத்துக்கொண்டு, பிளாஸ்டிக் பிரம்பு பின்னிய நாற்காலியையும் வெளியே நகர்த்தியபடி வந்தேன். கதவு அடைக்காதபடி வாசலுக்கும் அறைக்கும் குறுக்கே நாற்காலியைப் போட்டுவிட்டுத் தரையில் உட்கார்ந்தேன், பக்கத்தில் கால் நீட்டியபடி முத்தார்.

“போத்தி, ஓட்டல் எல்லாம் மூடியாச்சு. டீக்கடை கூட அடைச்சிட்டிருக்கு. ராத்திரி சிவராத்திரி உபவாசம் இருந்துடலாமா?”

நாராயணசாமி கேட்டபடி படியேறி வந்து கொண்டிருந்தார்.

“நத்திங் டு ஈட்?”

குல்கர்னி மொழிபெயர்க்க, பெல்காவி முகத்தில் கலவரம் சூழ்ந்தது. பசி தாங்க முடியாத மனுஷர் அவர்.

“சாந்தி ஸ்டோர்லே பன், பிஸ்கட் இருக்குமே, வாங்கிட்டு வந்துடலாமா?”

அவர் பர்ஸை நிஜாரில் வைத்துக்கொண்டு அவசரமாக நடக்கக் கிளம்பி, அறையில் ஆணி அடித்து வைத்ததுபோல் உட்கார்ந்து கொண்டிருக்கும் பெண்ணைக் கோபமாகப் பார்த்து திரும்ப வந்து நின்றார். செக் வைக்கப்பட்ட சதுரங்க ராஜாபோல் இயலாமை அவர் செயலில் தெரிந்தது.

“நான் போய்ப் பார்த்துட்டு வரேன்” என்று புறப்பட்டேன். அங்கே இப்போதைக்கு நிலைமை சீராகும் என்று தெரியவில்லை.

வெளியே எங்கள் மேன்ஷனுக்கு அப்புறம் தெருவிளக்கு மட்டும் எரிய மற்றபடி கடை எல்லாம் எடுத்து வைத்திருந்தது. சின்னு லாண்டரிக் கடையில் கதவைக் கொஞ்சம்போல் திறந்து வைத்துவிட்டு சின்னையா மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தார்.

தெருக்கோடி பெட்ரோமாக்ஸ் கடைக்காரர் எட்டிப் பார்த்தார்.

“ஏம்பா, ஊரோடு அடைச்சி வச்சிருக்கு. நீ துணி இஸ்திரி போடாட்ட நாளைக்கு உலகம் சுத்தாதா? நல்ல மனுஷர், பெரிய மனுஷர்னு தினைக்கும்மா சொர்க்கவாசி ஆகிறாங்க. எடுத்து வச்சுட்டு போவியா?”

சத்தமும் இல்லாமல் தணிந்த குரலும் இல்லாமல் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தார் அவர்.

“அண்ணே, எலி கிடக்கு கடைக்குள்ளே, வந்த துணியை நாளைக்கு பெட்டி போடலாம்னு அடைச்சு வச்சா, துணி மிச்சமிருக்காது. அதான் நேரம் சென்னாலும் சரின்னு... தோ முடிஞ்சுடுத்து.”

சின்னுவுக்கும் காமராஜர் மறைவு முக்கியமானதுதான். அவர் கடை எலிகளுக்கு அதெல்லாம் தெரியாது.

“உஸ்மான் ரோட்டுலே பார்க்கலாம்பா.”

முத்தார் ஓட்டமும் நடையுமாகக் கூடவே வந்தான். மெட்ராஸ் முழுக்கத் தெரிந்த அதாரிட்டியான என்னைச் சார்ந்து இனி இங்கிருந்து புறப்படுவது வரை இருப்பது என்று அவன் நிச்சயம் செய்திருந்தான். போதாக்குறைக்கு டெலிவரி செய்யவேண்டிய சரக்கு வேற கைவசம் உண்டு. அவன் நிலையில் நான் இருந்தால் அதுதான் செய்திருப்பேன்.

ராத்திரி ஒன்பது மணிக்கு உஸ்மான் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தவர்களில் இந்தப் பேட்டையில் இருக்கும் மேன்ஷன்வாசிகளே முக்கால்வாசியும். சோற்றுக்கு அலைகிற பெரிய கும்பலில் நானும் கலந்தேன். கூடவே முத்தார் சாயபு.

“அவரை தொடக்கூட பயம். கடைசி வரைக்கும் என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டிருந்தாங்க. போங்கடா பேய்ப்புள்ளைங்களான்னு

அவரே கிளம்பிட்டாரு.”

யாரோ சொன்னது இருட்டில் கேட்ட குரலாக இருந்தது.

டிரான்சிஸ்டர் ரேடியோவில் செய்திகள் படிக்கிற ஒலி. வடக்கில் ஒன்றிரண்டு தலைவர்கள் இரங்கியிருந்தார்கள். அவர்கள் வெளியே இருக்கும் தலைகள் என்று ஊகிக்கக் கஷ்டமாக இல்லை. கவனித்துக் கேட்டேன். பிரதமர் தனக்கு ஆதரவாக இருந்த பெருந்தலைவர் என்று துக்கச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

“அவுகளுக்கு ஆதரவா? பெருந்தலைவர் கொடுத்தாரா? பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது.”

முத்தாரை தரதரவென்று இழுத்து வந்தேன்.

“மெய்தான். பொய் சொல்லியிருக்கோம் நாம. அதான் போஜனமில்லை” என்றான் அவன்.

“நாளைக்கு கிண்டியிலே புதுசா ஒரு இடம் ஏற்பாடு செஞ்சு அடக்கம் செய்யறாங்க. தகனம் இல்லை.”

கண்ணாடி போட்ட ஒரு மேன்ஷன்வாசி கூட வந்த சின்னக் கூட்டத்துக்குச் சொல்லிக்கொண்டு ஏதாவது கிடைக்கிறதா சாப்பிட என்று பருந்துப் பார்வையும் மடித்துக் கட்டிய வேட்டியுமாக எங்களைப்போல சுற்றிக் கொண்டிருந்தார். ஆயுசு பூரா மேன்ஷன்வாசியாக இருக்க அந்தக் கண்ணாடி மாமாவுக்கு விதிக்கப்பட்டிருக்குமோ? ரிடையர் ஆகும் வரைக்கும் என்று நானே மனதில் திருத்திக் கொண்டேன். என்னமோ அவர்தான் நான், தொடரும் எமர்ஜென்சியில் மிசா சட்டத்தின்கீழ் சிறைபிடிக்கப்பட்ட ஒரு தலைவர் இறந்துபோக, கடைகள் அடைத்து, நீண்ட நாள் மேன்ஷன்வாசியாக நான் பட்டை ஃப்ரேம் கண்ணாடி போட்ட கண்ணாடி மாமாவாக சாப்பாட்டுக்குத் திரியும் காட்சி மனதில் வந்து போனது. தலைவர்கள் இன்னும் யாரெல்லாம் போக ரெடியாக இருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டபடி நடந்தேன். முப்பது பேராவது அப்படித் தேறுவார்கள். அத்தனை நாள் கடை அடைப்பு. சோறு கிட்டாது. இதற்காகவாவது குடும்பஸ்தன் ஆகணும்.

எனக்கு முன்னால் ஊர்வலம்போல் இரண்டு இரண்டு பேராக நடந்து கொண்டிருந்த சிறு கூட்டம் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி போனது சிகரெட்டுக்காக என்று அவர்கள் உரையாடலில் இருந்து தெரிய வந்தது. ஒரு கெட்ட வார்த்தை சொல்லி, “ஒரு கடை கூட இல்லே, பீடி கிடைச்சாலும் பரவாயில்லன்னு பார்த்தா அதுக்கும் வந்த கேடு” என்று தொடர்ந்து, இன்னொரு கெட்ட வார்த்தையோடு அதை முடித்த இளைஞன் என்னிடம் சிகரெட் கேட்காமல் முத்தாரிடம்தான் அக்கறையாக விசாரித்தான் -

“பாய், சிகரெட் இருக்கா? ஒண்ணே ஒண்ணு இருந்தா கொடுங்க. பெருந்தலைவர் போய்ட்டார்னு ஓட்டலை அடை, சலூன் கடையை எடுத்து வை, ஹார்ட்வேர் கடைக்கு பூட்டுப் போடு, நியாயம். டீக்கடைக்கும் பெட்டிக்கடைக்கும் ஏன் அடைப்பு?”

முத்தார் கருத்தாகச் சிரித்தான். நான் தலையைத் திருப்பிக் கொண்டேன்.

“பெரியவகளே அப்பப்ப சிகரெட் குடிப்பார்னு சொல்றாங்க. அப்புறம் என்னதுக்கு ஏழை வயித்துலே அடிக்கணும்?” அந்தப் பையன் அடங்க மாட்டான்போல. முத்தார் அவனுக்கு சட்டைப் பையில் இருந்து ஒரு சிகரெட் எடுத்துக் கொடுத்தான்.

“டீக்கடையை அடைச்சு பன், பொறை வியாபாரத்தை முடக்கினது வேணும்னா ஏழைங்க வயத்திலே அடிக்கறதாகும் தம்பி, சிகரெட் உசிர்க் கொல்லியாச்சே, அதை விக்காம வாங்காம ஒரு நாள் ஒரு ராத்திரி இருந்து பார்ப்போமே.”

வந்தவன் சிகரெட் கிடைத்த மகிழ்ச்சியில் வேறேதும் சொல்லாமல் போய்விட்டான்.

அடைத்துக் கிடந்த நாதன்ஸ் கஃபே வாசலில் ஒரு வினாடி நின்றேன். டிஃபன், காப்பிக்கான ஓட்டல் அது. அளவுச் சாப்பாடும், எமர்ஜென்சிக்கு முந்தைய காலத்தில் அன்லிமிடெட் மீல்ஸும் சாப்பிடுவதற்கான இடம் அதற்கு அடுத்த கட்டடத்தில். அது நாதன்ஸ் அனெக்ஸ்.

அனெக்ஸ் உள்ளே இருந்து யாரோ கிரில் கதவைத் திறந்துகொண்டு வர, பலர் தெருவில் ப்ரேக் அடித்து நின்றார்கள். நின்றோம். வந்தவர் கையில் பலகை, ‘ஜனதா சாப்பாடு இவ்விடம் கிடைக்கும்’. அதை நடைபாதையில் நிற்க வைத்தார்.

பாய்ந்து நாதன்ஸ் வாசலில் வரிசைக்கு முதல் ஆளாக நின்றுவிட்டேன். காமராஜர் மறைவுக்கு அடுத்து மனதில் கவிந்த துக்கம் ஒரு கணம் விலகிப் போக சாப்பாடு கிடைத்த உற்சாகம். ஜனதா சாப்பாடாக இருந்தால் என்ன? பசிக்குத் தின்ன சூடாக சமைத்து பட்டையாக அடித்து ஏதோ ஒன்று. எமர்ஜென்சியும் வேண்டுவதே.

கண்ணாடி மாமா கொஞ்சம் முன்னால் போயிருந்தவர் யாரோ இங்கிருந்து கூக்குரலிட, வயதுக்குப் பொருந்தாத வேகத்தோடும் இரை கண்ணுக்கெட்டிக் கையை விட்டுப் போகுமோ என்ற பதைபதைப்போடும் சாப்பாட்டைப் பார்த்த நாஜி வதைமுகாம் யூதன்போல் ஓடி வந்தார். வதை முகாம் யூதர்கள் வேளாவேளைக்கு உணவு மறுக்கப்பட்டு எப்போதாவது ஏதாவது கிடைக்கும்போது அவசர அவசரமாகச் சாப்பிட்டுக் கையில் இன்னொரு குத்து எடுத்து வாயில் திணித்து, நிஜார்ப் பையிலும் அடைத்துக்கொண்டு நடப்பது இயல்பு என்று படித்திருக்கிறேன். நாஜிகள் தோற்று ஹிட்லர் ஆட்சி அகன்று வதைமுகாம்கள் மூடப்பட்டு புது அரசு வந்து பல வருடம் சென்றும் அந்தப் பரிதாபமான யூதப் பெரியவர்கள் வீட்டிலோ விடுதியிலோ சாப்பிடும் நேரத்தில் தங்களை அறியாமல் பையில் அடைத்துக்கொண்டு வேகமாகச் சாப்பிடுவது வழக்கமாம். கண்ணாடி மாமா யூதர் இல்லைதான்.

மேன்ஷனில் நண்பர்கள் பசியோடு இருக்க இங்கே உட்கார்ந்து கொட்டிக்கொள்ள மனக்குமைச்சல் இருந்தது. என்ன செய்ய? அவர்கள் சாப்பாட்டை நான் சாப்பிட முடியாது. நான் வேண்டாம் என்று வைத்தால் வேறே ஒருத்தர் சாப்பிட்டுப் போயிருப்பார். அவருக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை.

கிரில் கதவு சாத்தப்பட்டு பூட்டுப் போடும் ஓசை. “நூறு பேருக்கு சமையல் செஞ்சோம். நூறு டிக்கெட் கொடுத்தாச்சு. அவ்வளவுதான் எங்களாலே செய்யமுடியும். உள்ளே வந்திருக்கற முப்பது பேர் தவிர டிக்கெட் வாங்கின இன்னும் எழுபது பேர் ஒரு அரை அவர் வெளியே இருங்க. மத்தவங்க, தயவுசெஞ்சு நாளைக்கு வாங்க.”

ஒரு சந்தடி இன்றி, கூச்சல், குழப்பம் இல்லாமல் கூட்டம் கலைந்து போனது. எமர்ஜென்சி இல்லாமல் இருந்தாலும்கூட அப்படித்தான் இருந்திருக்கும். எழுபதுகளின் இளைஞர்கள்.

“மன்னிக்கணும், அளந்து பட்டை போட நேரம் இல்லே.”

யாரும் அதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இலையில் விழுந்த சோற்றின் வாடையும் கொஞ்சமாகப் புளி கரைத்த குழம்பும், வாழைக்காய்ப் பொரியலும் அமிர்தமாகத் தோன்றிய ராச்சாப்பாடு அது.

அடைத்த கடைகள் நாளை பெருந்தலைவரின் நல்லடக்கம் முடிந்து திறக்கும் என்று ஹோட்டல் வால்வ் ரேடியோ உயரமான ஸ்டாண்டில் இருந்து அறிவித்தது. அடுத்த சாப்பாடு எப்போதோ?

முத்தாரும் நானும் பஸ் ஸ்டாண்ட் பக்கம் நடந்தோம். ஒரு பெரிய வாழைப்பழத் தாரைச் செல்லமாகத் தோளில் போட்டுக்கொண்டு ஒருவர் நடக்க, பின்னாலேயே தய்யர தய்யர ஹோலே என்று இன்னும் ஏழெட்டுப் பேர். ராமேஸ்வரம் தெருவில் ஸ்டேஷனை ஒட்டிய மேன்ஷன்வாசிகள். அவர்களுக்கு ஸ்பெஷல் சந்தோஷமாக அவ்வப்போது வாய்த்தது, அடுத்த வீட்டில் வசிக்கும் ஹீரோயின் நடிகை தரிசனம். தய்யரதய்யர ஹோலே என்று ஒரு பாட்டு இடம் பெற்ற தமிழ்ப்பட ஹீரோயின் அவர். அவர் காமராஜர் மறைவுக்கு இரங்கியிருக்க மாட்டார். ஷூட்டிங் இல்லாமல் திரும்பி வந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பார். எங்கேயோ எப்படியோ வாங்கிய வாழைக்குலையை அந்த நடிகைக்கு காணிக்கை வைக்க கொண்டுபோனார்களோ என்னமோ.

காப்பிப்பொடி அரைத்துத் தரும் கடை ஜாக்கிரதையாக மூடி உள்ளே இருந்து தேவாங்குபோல எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இந்தக் கூட்டம் காப்பிப்பொடி வாங்க வந்ததில்லை.

சிவா விஷ்ணு கோயிலுக்கு எதிர்ப்புறமாக, அடைத்த பேக்கரி உள்ளே இருந்து வெளிச்சம் கசிந்தது. முத்தார் என்னை இருக்கச் சொல்லிவிட்டு அங்கே போய் பலகைகளை மெல்லத் தட்டினான். யாரும் வரப்போவதில்லை. வந்தாலும், 'அடைப்பு இப்போ, போய்ட்டு அப்புறம் வாங்க' என்று அனுப்பப் போகிறார்கள்.

ஒரு பலகை நெம்பிக் கொஞ்சம்போல் திறந்தது. முத்தார் தலையில் தொப்பியை நேராக்கிக்கொண்டு குனிந்தான். பலகை திரும்ப உடனே அடைத்துக் கொள்ளாமல் ஒரு கையால் தாங்கிக்கொண்டு ஏதோ பேசினான். சரி என்று தலையை ஆட்டி விலகி நிற்க அந்தப் பலகை முழுக்க அடைந்து கீற்று வெளிச்சமும் காணாமல் போனது.

ஐந்து நிமிஷம் கழித்து இருட்டில் உள்ளே இருந்து பலகை விலகும் சத்தம். ஒரு பெரிய துணிப்பை நிறைய எதோ வைத்து கடைக்கு உள்ளே இருந்து முத்தார் சாயபுவிடம் கொடுக்க, அவன் பையில் கைவிட்டு எவ்வளவு என்று பார்க்காமலேயே எடுத்து நீட்டிவிட்டு என்னோடு நடந்தான்.

"அன்வர் பேக்கரின்னு பேர் பார்த்ததும் சரி முயற்சி செய்யலாமேன்னு தோணிச்சு. அரை உண்மை சொன்னேன். வெளியூர்லே இருந்து வந்திருக்கேன். சித்தப் பிரமையோட தங்கச்சி வேற இருக்கா. அது கொலைப் பட்டினி. பசிக்குது, பசிக்குதுன்னு சின்னப் புள்ளை கணக்கா அழுவுது. உங்களுக்காக துஆ பண்றேன். கேக்கு, ரொட்டி, பன்னுன்னு எது இருந்தாலும் பெரிய மனசு பண்ணி கொடுங்கன்னு கேட்டேன்."

"தப்பு இல்லையா, முத்தார்?"

"ஒரு தப்பும் இல்லே. அந்தப் பொம்பளைப் பிள்ளைக்கு பேச முடிஞ்சுதுன்னா நிச்சயம் பசின்னு கேட்காம இருக்காது."

மேன்ஷனில் நுழைந்தபோது அந்தப் பெண் பெல்காவியின் அறைக்குள் கட்டிலில் நீண்டு நிமிர்ந்து படுத்திருந்தாள். என்ன ஏது என்று யாரும் பேசாமல், காகிதத் தட்டுகளில் கேக், பன், சமோசா என்று நிறைத்து பெல்காவியிடம் நீட்ட அவர் நன்றி சொல்லி வாங்கிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார். குல்கர்னி உணர்ச்சிவசப்பட்டு என்னையும் முத்தாரையும் 'ஸோ நைஸ் ஆஃப் யூ' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் மடியில் வைத்த காகிதத் தட்டு மெல்லத்தான் காலியாகிக் கொண்டிருந்தது.

மேன்ஷன் அறைக்கு வந்த பெண் பசியில் உச்சத்தில் இருந்திருக்கலாம். வதைமுகாம் யூதர்கள் இப்படித்தான் இருந்திருப்பார்கள் என்று தோன்றியது. நிறைய வெண்ணெய் வைத்து ஜாம் தலையில் உட்கார்ந்திருந்த பட்டர் பன் ஒன்றையும், சாக்லெட் கேக்கையும், டோநட்டையும், பஃப்ஸையும் நான் எடுத்துத் தட்டில் வைக்க அவள் ஐந்து நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து, பானைத் தண்ணீருக்காக சமிக்ஞை செய்தாள். அந்நியர் இடத்தில் சகஜமாக இருந்து ஆகாரம் கழிக்கவும், அதிகாரத்தோடு அதையும் இதையும் சைகையிலே கேட்கவும் சித்தம் கலங்கியிருப்பதால் அவளால் முடிகிறதா அல்லது ஏதோ பெரிய திட்டத்தோடு இங்கே வந்திருக்கிறாளா, தெரியவில்லை என்று குல்கர்னி பின்னால் டாய்லெட்டுக்குப் போய்க் கொண்டிருந்தபோது சொன்னார்.

டாய்லெட் எங்கே இருக்கிறது என்று தேடி அந்தப் பெண்ணே வந்து கொண்டிருந்தபோது பழக்க தோஷத்தில் கதவை வெறுமனே மூடிவைத்துக்கொண்டு குல்கர்னி உள்ளே இருந்தார். அவள் கதவைத் தள்ளித் திறக்க முற்பட்டபோது நான் போட்ட சத்தம் குல்கர்னியையும் அவளையும் தவிர மற்றவர்கள் கேட்டு கீழ் போர்ஷன் அறைகளிலிருந்து ஓடி வந்தார்கள். அவர்களுக்கு ராத்திரி சினிமா இல்லாது சும்மா கவிழ்ந்து படுத்திருக்க வேண்டாமல் ஓரங்க நாடகம் ஒன்று அரங்கேறுகிறது. அதில் அவர்கள் பங்கு பெற, செய்ய ஏதுமில்லை என்பதால் குறுக்கீடு இல்லாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவள் டாய்லெட்டிலிருந்து திரும்பி வரும்போது பெல்காவி தன் அறையை உள்ளே இருந்து பூட்டிக்கொண்டிருந்தார். அந்தப் பெண் நான்கு தடவை கதவைத் தட்டிவிட்டு, கதவிலேயே சாய்ந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டாள். பெல்காவி கதவைத் திறந்து அவளை உள்ளே படுக்கும்படி சைகை செய்துவிட்டு வாசலில் அமர்ந்ததைப் பார்த்தபடி நான் என் அறைக்குள் போனேன்.

ராத்திரி பதினொரு மணிக்கு பிபிசி செய்திகள் வைத்தபோது காமராஜர் மறைவு பற்றித் தமிழிலேயே லண்டனிலிருந்து செய்தி வந்துகொண்டிருந்தது. காமராஜர் பற்றிச் சொல்லும்போது இந்திரா காந்தி பெயரை ஒரு முறை கூட வலிந்து இழுக்காமல் பெருந்தலைவர் மரணத்தைச் சொன்ன செய்தி அறிக்கை அது. சற்றே பகலில் உறங்கி எழுந்து சுகவீனமாக உணர, அவருடைய உதவியாளர் வைரவன் டாக்டரை அழைக்கப் போயிருக்கிறார். வருவதற்குள் மரணம் அவரை ஆட்கொண்டது என்று கேட்க என் கண் கலங்கியது. 'வைரவன், விளக்கை எல்லாம் அணைச்சுட்டு போங்க' என்பது அவருடைய இறுதி வாக்கியம் என்று சொன்னார்கள். பகலில் எந்த விளக்கு எரிந்தது தெரியவில்லை. என்றாலும் பிபிசி சொன்னால் பிழை இருக்காது.

செய்தி அறிக்கையில் நாளை காமராஜர் பூத உடலை ராஜாஜி ஹாலில் மரியாதை செலுத்த வைத்திருப்பார்கள் என்பதும் பிரதமர் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள மதராஸ் வருகிறார் என்பதும் தெரிந்தது. ஸ்தாபன காங்கிரஸ் தலைவர்களில் காமராஜரைத் தவிர மற்ற எல்லோரும் எமர்ஜென்சி நடவடிக்கையாக மிசா சட்டத்தின்கீழ் சிறையில் இருக்கிறார்கள் என்றும் மறக்காமல் குறிப்பிட்டார்கள். முத்தார் சத்தம் இல்லாமல் திட்டினான். என்னை இல்லை.

எல்லா விளக்கையும் எரிய வைத்து, அந்தப் பெண்ணுக்கு ஒரு கைத்தறிப் போர்வையையும் போர்த்தி, பெல்காவி அறைக்கு வெளியே தரையில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டார். அடுத்த அறை குல்கர்னியும் நானும் எங்களோடு வந்து படுக்கச் சொல்லிக் கூப்பிட்டும் அவர் வர மறுத்துவிட்டார்.

“யார் என்னன்னு தெரியலே. நாளைக்கு எப்படியாவது அனுப்பி வைக்கணும். போலீஸுக்கு ஃபோன் செஞ்சா எடுப்பாங்களோ என்னமோ. அவங்க எல்லோரும் காமராஜர் இறுதிச் சடங்குக்கு பாதுகாப்பு கொடுக்க போயிருப்பாங்க. முயற்சி செய்யலாம். விடியட்டும்.”

நடுராத்திரி கடந்து, ஏதோ சத்தம் கேட்டது. என்றாலும் கண்ணைத் திறக்க முடியாமல் அப்படி ஒரு அசதி. “போத்தி, போத்தி” என்று முத்தார் சாயபு குரல் கேட்டு அது பள்ளிக்கூடத்தில் ஹிஸ்டரி வாத்தியார் அட்டெண்டென்ஸ் எடுக்கிற கனவில் கச்சிதமாகப் புகுந்துகொண்டது. அந்த வாத்தியாராக பெல்காவி சரித்திரம் கற்பித்த கனவு அது.

விடிந்து எழுந்து பார்க்க, முத்தார் சாயபுவைக் காணோம். அவனுடைய செருப்பு அடித்தோல் மூட்டையும் அறைக்குள் இல்லை. பெல்காவி தடதடவென்று வந்து மூச்சு இரைக்கச் சொன்னார்:

“அந்தப் பொண்ணு எங்கே போனான்னு தெரியலே. எப்போ போனான்னும் தெரியலே.”

காலையில் கிடைத்த முதல் செய்தி, அன்றைக்கு தலைவர் காமராஜருக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்படுவதால் அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்டது.

என்றாலும், ஹோட்டலும் டீக்கடையும் அடைத்து, காப்பியோ, தேநீரோ கிடைக்காத சிரமத்தில் அடுத்து கவனம் பதிந்து போனது.

நாதன்ஸ் கஃபே திறக்கவில்லை என்பதை விட, மதியம் ஜனதா சாப்பாடும் இல்லை என்று ஊரோடு சேர்ந்து துக்கம் அனுஷ்டித்த மீல்ஸ் அனெக்ஸ் வாசல் பலகை சொன்னது.

ஹோட்டலுக்கு வடக்குப் புறமாக இருந்த நாராயணன் மல்ட்டி பர்ப்பஸ் ஸ்டாலும் அடைத்திருந்தது. கவிழ்த்துப்போட்ட ஒரு மரப்பெட்டி மேல் நாராயணன் உட்கார்ந்து ப்ளாட்பாரத்தில் பத்திரிகைகளை அடுக்கி விற்றபடி, “பின்னே போத்தி சாரே...” என்று ராகம் இழுத்தார்.

மேன்ஷன் சேட்டன் யாரோ அவரிடம் டெபனேர் பத்திரிகை அக்டோபர் இஷ்யு வந்துவிட்டதா என்று ஆர்வத்தோடு விசாரித்தார். அது இந்திய

ப்ளேபாய் மாதிரி. ஒரு பத்திரிகை விடாமல் சர்க்கார் சென்சாருக்கு உட்பட்டு வந்து கொண்டிருந்த எமர்ஜென்சி காலத்தில் எந்த இடையூறும் இல்லாமல் ஜாம்ஜாமென்று நடைபோட்ட பத்திரிகை டெபனேர். அரசியலுக்குத்தான் சென்சார், அரை நிர்வாணத்துக்கு இல்லை. டெபனேரில் இலக்கியத் தரமான சிறுகதைகளும் அவ்வப்போது வந்து கொண்டிருந்தன. ஈ.எல் டாக்டரோவின் 'ரைட்டர் இன் தி ஃபேமிலி' அப்படித்தான் படித்தேன். கிடக்கிறது, இந்த நேரத்தில் டெபனேரா நினைவுக்கு வர வேண்டும்.

நேற்று ராத்திரியை விட உக்கிரமாக காலைச் சாப்பாட்டுக்கே பசி கிளம்பி ஏழு மணிக்கு அலைய ஆரம்பித்தோம். மயிலாப்பூரில் ராயர் காப்பி கிளப் திறந்திருக்கிறது என்று யாரோ சொல்லக்கேட்டு ஒரு கூட்டம் பாத யாத்திரையாக மயிலாப்பூர் கிளம்பியது. சன் தியேட்டர் பக்கம் ப்ளாட்பாரத்தில் ஒரு அம்மா இட்லி போட்டு விற்பார் என்று யாரோ நினைவு கூர, அங்கே ஒரு கோஷ்டி புறப்பட்டது. பாண்டி பஜாருக்குப் பக்கமாக தி.நகர் போஸ்ட் ஆபீஸ் எதிரே கைவண்டியில் பொடி தோசை போட்டு விற்கும் கடைக்காரர் அகஸ்தியர் கோயில் பக்கம் நடந்து போய்க் கொண்டிருப்பதைப் பார்த்ததாக ஒரு செய்தி வர, சிலர் விழுந்தடித்துக்கொண்டு போனார்கள். எல்லாம் வதந்திதான்.

மழை வரும்போல வானம் இருட்டியிருந்தது. காமராஜ் மறைவுக்கான துக்கத்தை மீறி பசி எங்கும் வியாபித்த காலை நேரம் அது. அவர் இன்னும் சில வருடம் இருந்திருக்கலாம்.

முத்தார் ஒரு வினாடி நினைவில் வந்து செருப்பு மூட்டையைத் தூக்கிக்கொண்டு கடந்து போனான். இரை தேடி நடந்த கூட்டத்தில் ஏதோ ஓரத்தில் பெல்காவி, எதுவும் பேசாத அந்தப் பெண்ணைப் பற்றி நினைத்தபடி நடந்து போயிருக்கலாம்.

இரண்டு நாள் கழித்து சகஜநிலை திரும்பி, காமராஜரை மறந்து ஆபீஸ் வேலையிலும், கோல்டன் கஃபே பரோட்டா, டீயிலும் லயித்திருக்க எனக்கு ஃபோன் வந்திருப்பதாக அக்கவுண்டண்ட் கூப்பிட்டார். முத்தார் தான்.

“போத்தி, சாரிப்பா, உன்கிட்டே சொல்லிக்காம கிளம்பிட்டேன். என்ன ஆச்சா? ஏன் கேக்கறே கிரகசாரம்… நான் தூக்கம் பிடிக்காம உலாத்தப் போனேன், கேட்டுக்க. சரக்கு ஏத்திக்கிட்டு லாரி போய்ட்டிருந்ததா, கைகாட்டி நிறுத்தி கேட்டு… காசிமேட்டுலே டெலிவரி அட்ரஸ்லே போட, என்னையும் இட்டுப் போக நூறு ரூபா கேட்டான். சரின்னு வண்டியை மேன்ஷன் வாசலுக்கு திருப்பிட்டு வந்து… நீ தூங்கிட்டிருக்கே, தொந்தரவு வேணாம்னு தோல் அடிச்செருப்பு மூட்டையை தூக்கிட்டுப் போய் லாரியிலே ஏத்திட்டு நானும் ஏறப்போனா ட்ரைவர் பக்கத்துலே அந்தப் பொம்பளை. நீயும் ஏறிவான்னு சைகை காட்டினா. ஏறிக்கிட்டேன். கை நடுங்கிட்டே ட்ரைவர் ஓட்டறான். காசிமேட்டுக்கு இல்லே. காசிமேட்டுக்கு போங்க ட்ரைவர், இது வேற எங்கேய்யோ போவுதேன்னு பதட்டத்தோடு சொன்னேன். அவ மடியிலே துணி போட்டு வச்சிருந்ததை விலக்கிட்டு, ஏன் கேக்கறே, ஒரு துப்பாக்கியை எடுத்து நீட்டினா. நிஜம்மாப்பா. ட்ரைவரையும் மிரட்டி வச்சிருக்கா. பீச்சாங்கரை ஓரம் டவுண் இல்லே, வெகு தூரம் வெளியே இருக்கப்பட்ட இடம். காசிமேட்டுக்கு கிழக்காலே. திடீர்னு நிறுத்தி குதிச்சு இறங்கி ஓடிட்டாப்பா. ஏதாவது தீவிரவாதியா இருக்கலாம்னு தோணுது. எதுக்கு வந்தா, ஏன் இங்கே அதுவும் உங்க மேன்ஷனுக்கு வந்தான்னு ஒண்ணும் புரியலே. போவுது, காலைப் பிடிச்ச சனியன் தானா விலகிப் போனது போ, சரி, ஊருக்கு கிளம்பிட்டிருக்கேன். போட்மெயில்தான், வச்சுடட்டா?”

சாயந்திரம் மேன்ஷன் திரும்பியதும் பெல்காவியிடம் சொல்லலாம் என்று அவர் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். சுவாரசியமாகப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். டெபனேர்.

# அரசூர்.

அத்தியாயம் 5

# நவம்பர் 1975

ஏ ழு மணிக்குப் புதுப்பால் காப்பி குடித்துவிட்டுக் கிளம்பினால், சாத்தய்யன் ஊருணிக்கரையிலும் சேர்வார் ஊருணிக்கரையிலும், செட்டியார் ஊருணிக்கரையிலும் நீளமாக ஒரு வாக்கிங். திரும்பி வந்து அரை மணி நேரம் தெருவோடு நடக்கிறவர்கள், தேடி வந்தவர்கள் என்று யாரோடாவது இதுவும் அதுவும் பேசிக் கொண்டிருந்துவிட்டு, எட்டரை மணிக்குக் குளியல். காலை ஆகாரம். ஆபீஸ் கிளம்ப சரியாக இருக்கும்.

ஆபீஸ் கிளம்ப என்று சொல்வது கொஞ்சம் அதிகமான பிரயோகமாக இருக்கும். என் வீட்டுக்கு நான்கு வீடு கிழக்கில்தான் ஆபீஸ். அதாவது நான் வேலை பார்த்த பேங்க். இது நான் காரியம் மெனக்கெட்டு அலைந்து திரிந்து ஏற்படுத்திக்கொண்ட விஷயமில்லை. வீடு எழுபது வருடமாக அங்கேதான் நிற்கிறது. வீட்டுக்கு நான்கு வீடு தள்ளி நாட்டுக்கோட்டை நகரத்தார் ஒருத்தரின் உடைமையாக இருந்த ஒரு வீட்டை யாரோ வாங்கி இடித்துக் கட்டி புதியதாக்க, பேங்க் காந்தி வீதியிலிருந்து அங்கே இடம் பெயர்ந்தது.

ஒரு சொந்த சோகம் காரணமாக, வேறேதுமில்லை, அம்மா நோய் பாதித்து இருந்தாள், முடிவு நெருங்கிக் கொண்டிருந்தது என்பதால், ஒரு வருடத்துக்கு மட்டும் நான் சொந்த ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் கேட்டேன். கொடுக்க மாட்டார்கள் என்று நினைத்தது பொய்யாக உடனே மனிதாபிமான அடிப்படையில் ட்ரான்ஸ்ஃபர் கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

‘சரியா ஒரு வருடம் மட்டும். நவம்பர் 1975 முதல் அக்டோபர் 1976 வரை’ என்று இறுதிநாள் அறிவிக்கப்பட்ட மரண தண்டனைக் கைதிபோல் காலக்கணக்கு சொல்லியனுப்பப்பட்டேன்.

அம்மா ஆச்சரியமான விதத்தில் குணமானாள். அது நான் வந்ததுமே நிகழ்ந்த அற்புதம். அதனால்கூட ஏற்பட்டிருக்கலாம். எப்படியோ, இனி ஒரு வருடம் இங்கேதான்.

கோல்டன் கஃபே கள்ளிச்சொட்டு பால் டீயை சதா குடித்து செக்குகளின் உலகத்திலும், சேமிப்புக் கணக்குகளிலும் சஞ்சரித்து இடம் மாறி இங்கே வந்தது ஒரு வாரம் முன்னால். நாட்டில் எமர்ஜென்சி என்ற நெருக்கடிநிலை அமுலில் இருந்தது என்பதால் இங்கே பேங்குகளில் வேறு மாதிரி வேலை குவிந்திருந்தது.

முதல் நாள் பேங்குக்குப் போனதுமே மேனேஜரில் இருந்து கடைநிலை ஊழியர் வரை வேட்டி சட்டையில் ஆபீஸ் வந்திருப்பதைப் பார்த்தேன். சீனியர் கிளார்க்குகள் செய்யும் வேலைகளான டே புக் எழுதுவது, ப்ராக்ரஸிவ் லெட்ஜர் போஸ்ட் செய்வது என்ற தினசரி காரியங்கள் செய்யவேண்டியது இனி என் பொறுப்பு என்று தெரிந்து கிட்டதட்ட தரையில் கால் பாவாமல் மிதந்தேன். அதெல்லாம் எப்படிச் செய்வது என்று கற்றுக் கொண்டுவிட்டால் நம்மை அடிக்க வேறே யாருமில்லை என்ற சந்தோஷத்தில் எமர்ஜென்சி கூட மறந்து போன விஷயமாகிவிட்டது.

அதென்ன, கிரமமாக ஆபீஸில் டே புக் எழுதி, ஜெனரல் லெட்ஜர் போஸ்ட் செய்து, பேலன்ஸ் ஷீட் இறக்கி, மறக்கக்கூடிய சமாசாரமா நெருக்கடி நிலைமை?

ஹோட்டலில் ஒரு ரூபாய்க்கு அளவுச் சாப்பாட்டை தராசிலும், சாம்பாரையும் ரசத்தையும் கெமிஸ்ட்ரி லாபரட்டரிபோல இருநூறு சி.சி கண்ணாடிக் குடுவையிலும் அளந்து தர, நாடே சோதனைக் கூடமாகி மக்கள் எல்லாம் எலிகளான பிரமை. சரியான நேரத்துக்கு வரும் ரயில்களும் பஸ்களும் அடையாளம் தெரியாத ஒரு பயத்தை மனதில் ஏற்படுத்த, ஆல் இந்தியா ரேடியோவில் எமர்ஜென்சி பிரசார இசை

நடுராத்திரிக் கனவில் கூட நடுக்கத்தை நகர வாழ்க்கையில் கொண்டுவந்தது. ஆனால் சிறு நகரமான இந்த ஊரிலும் சுற்றுவட்டார சிறு கிராமங்களிலும் நெருக்கடி நிலை வேறு முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

இது அன்பும் ஆதரவும் பரிவுமான முகம். கூப்பிட்டுக் கூப்பிட்டு 'ஏதாவது பணம் கடன் வேணுமா?' என்று பேங்குகள் எல்லோர் பின்னாலும் ஓடிக் கொண்டிருந்த காலம். நான் இட மாற்றத்தில் போய்ச் சேர்ந்த முதல் நாள் சாயந்திரம் ஐந்து மணிக்கு மேல் எனக்கும் அந்த உலகம் அறிமுகமானது.

ஐந்தரை மணி அடித்ததும் எனக்குக் கொடுத்த மேஜையைப் பூட்டிவிட்டுக் கிளம்ப, மேனேஜர் அறையில் இருந்து மெசஞ்சர் பழநி மூலம் கூப்பிட்டுவிட்டார். “அய்யா கூப்பிடறாக” என்று மரியாதையே உருவாகச் சொன்னார் கடைநிலை ஊழியர் பழநி.

“அய்யா கிட்டே நான் கிளம்பிட்டேன்னு சொல்லு” என்று கெத்தாகப் பதில் சொல்லி கிளம்பி வீட்டுக்கு அடுத்த நிமிடம் வந்து சேர, அதற்கும் அடுத்த நிமிடம் மேனேஜரே மடித்துக் கட்டிய வேட்டியோடு என் வீட்டுப்படி ஏறிக் கொண்டிருந்தார்.

“ஏண்டா, ஜடை கிருஷ்ணனோட கடைசி தம்பிதானே நீ, மூக்கு வடிய விட்டபடிக்கு பள்ளிக்கூடம் போவியே...” என்று பாட்டி அவரை உரிமையோடு வரவேற்றாள். மேனேஜர் அவள் அன்பில் நெகிழ்ந்து, அவள் பிரியத்தோடு கொடுத்த வேர்க்கடலை உருண்டைகளை அதம் பண்ணினார். காப்பியை வாங்கிக்கொண்டு அலை பாய்ந்த அவரை, நாற்காலியில் அமர்த்தினேன்.

“போத்தி, எங்கே போய்ட்டிருக்கீங்க?”

“ஊருணிக் கரையிலே வாக்கிங்.”

“ஊருணிக்கரைக்கு இந்த நேரத்திலே எதுக்கு? தண்ணி தூக்கிப்போக வர்ற பொண்ணுங்களை சைட் அடிக்கவா? வேணாம், போத்தி.

என்னோட வாங்க. நமக்கு வேறே வேலை இருக்குது. நாடு அழைக்குது.”

விவித்பாரதியில் எமர்ஜென்சி விளம்பரம்போல படபடவென்று சொன்னார்.

நானும் தட்டுச்சுத்து வேட்டிக்கு மாறி, இடுப்பில் கவனமாக பெல்ட் போட்டுக்கொண்டு, மல் ஜிப்பா அணிந்து அவரோடு கூட மறுபடி பேங்குக் கட்டடத்துக்குப் போக அந்த இடமே முழுக்க மாறி இருந்தது.

வாசல் படி, ஆளோடி, பேங்க் கவுண்டருக்கு வெளியே எல்லாம் நரிக்குறவர் சமூக ஆண்களும் பெண்களும் தரையில் உட்கார்ந்தும், நின்றபடிக்கும் சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஒரு கெச்சலான, முரட்டு மீசைக்காரர், சின்ன நோட்டுப் புத்தகத்தில் அவர்களிடம் ஏதோ தகவல் சேகரித்து, நின்றபடிக்கே பென்சிலால் எழுதிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் புன்சிரித்து, “நான் ஜெபர்சன், எலிமெண்டரி ஸ்கூல் எட்மாஸ்டர்” என்றார்.

“எங்க புத்தம்புது ஸ்டாஃப். துடிப்பான இளைஞர். தேசபக்தர். அன்னைக்கு அடியார். அவர் மகனுக்கும் ஆதரவாளர், இன்னிக்குதான் மெட்றாஸ்லே இருந்து ட்ரான்ஸ்ஃபர்லே வந்திருக்கார்.”

மேனேஜர் எனக்கே தெரியாத என்னை அறிமுகப்படுத்த நான் இருபது அம்சத் திட்ட மீட்டிங்கில் இந்திரா காந்திபோல வணக்கம் சொன்னேன். பிறகு எதற்கும் இருக்கட்டுமே என்று ஐந்தம்சத் திட்ட விழாவில் சஞ்சய் காந்திபோல கோணலாகப் புன்னகைத்தேன். சுவரில் இருந்த புகைப்படத்தில் சஞ்சய் ‘பேச்சைக் குறை. வேலையை அதிகம் செய்’ என்று கண்டித்தார். எல்லா ஆபீஸிலும், நாடெங்கும், பிரதமர் படத்துக்குக் கீழே இந்த வாசகம்தான் எழுதியிருக்கிறது.

“ஜெஃபர்சன்?” பெயரை சரியாக உச்சரிக்கத் தெரிந்து கொள்ளவேண்டி விசாரித்தேன்.

“இல்லே, ஜெபர்சன்... J E B A R S A N.” கரிசனமாக ஸ்பெல்லிங்கோடு சொன்னார் மீசைக்காரர்.

“இவங்களுக்கெல்லாம் ஆளுக்கு ஐநூறு ரூபா நாளைக்கு தேதியிலே குடிசைத்தொழில் கடன் கொடுக்கப் போறோம்.”

மேனேஜர் அந்தக் கூட்டத்தைக் கைகாட்டிச் சொல்ல, என்ன விதமான ரியாக்ஷன் கொடுப்பது என்று புரியாமல் சும்மா நோக்கியபடி நின்றேன். ஜெபர்சன் என்று சொல்லப்பட்ட அந்த ஈர்க்குச்சி மனிதர் என்னைப் பார்த்தார். அருள் பொழிய வந்த தேவதூதன் பாவனை. மீசை போகக் கொஞ்சமாக முகம் தெரிந்த அவரிடம், வாத்தியார்களுக்கே உரிய சாக்பீஸ் வாசனை வந்தது.

“கடன் அப்ளிகேஷனை எல்லாம் நிரப்பறது”, மேனேஜர் ஒரு கத்தை விண்ணப்பப் படிவங்களை என்னிடம் கொடுத்துப் போதாதென்று பட இன்னொரு கத்தையையும் அதன்மேல் இருத்தினார்.

“மொத்தம் அறுபத்துநாலு. இதுக்கு மேலே வந்தா நாளைக்கு ஃபில் அப் பண்ணலாம்.”

அவர் சொல்ல, ஜெபர்சன் என் உதவிக்கு வந்தார். அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு ஒரு அப்ளிகேஷன் ஃபாரத்தைக் கத்தையிலிருந்து உருவியபடி, கையிலிருந்த நோட்புக்கைப் பார்த்தார். “போண்டா” என்றார்.

நான் புரியாமல் பார்த்தேன். திரும்பவும் உரக்க அவர் “போண்டா” என்றார். டிபன் காப்பி கொடுக்காமல் இப்படி பாங்கில் உத்தியோகம் பார்க்காத ஒரு மூன்றாம் மனுஷரை வேலை வாங்குகிற மேனேஜரைக் கொஞ்சம் ஆத்திரத்தோடு பார்த்தேன். அவர் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்களை ஒவ்வொன்றாக எடுத்து, பின்னால் பெயர் எழுதியிருக்கிறதா என்று சோதித்துக் கொண்டிருந்தார்.

“ஹோட்டலுக்கு போய்ட்டு வரட்டா?”

நான் ஜெபர்சனிடம் சத்தம் எழுப்பாமல் சதியாலோசனை செய்யும் குரலில் கேட்டேன்.

“போய்ட்டு வாங்களேன்.”

“உங்களுக்கு போண்டா, காப்பிதானே?”

அவர் வேண்டாம் என்று வேகமாகத் தலையாட்டினார். இன்னொரு முறை புன்னகை அருள் பொழிந்து “போண்டா, வாப்பா” என்றார் சத்தமாக. பின்னால் எங்கோ நின்று கொண்டிருந்த ஒரு குருவிக்காரர், “சாமியோவ்” என்றபடி முன்னால் வந்து நின்றார்.

“இவர்தான் போண்டா, வயது ஐம்பது” என்றார் என்னிடம் ஜெபர்சன். எனக்கு அதற்குள் ஆச்சரியப்படுவது என்ற செயல் மறந்து போயிருந்தது. நரிக்குறவர் சமுதாயத்துக்குக் கடன் கொடுத்து சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் கடமை உணர்ச்சி உத்தரீயத்தை மனதில் அணிந்தேன். அது நழுவி விழ, ஜெபர்சனை முன்மாதிரியாகக் கருதி மீண்டும் அணிந்தேன்.

“ஏன் இப்படி ஒரு பேர்?”

பெயர், வயது படிவத்தில் எழுதியபடி, அந்தப் பெரியவரைக் கேட்டேன். “குலதெய்வம் சாமி” என்றார் அவர். எங்கே சுத்தினாலும் வருடம் ஒரு முறை குலச்சாமி கொண்டாடி, அடுக்குப் பானைப் பொங்கல் வைக்க வந்து சேர்ந்துவிடுவதாகச் சொன்னவர் நான் கேட்காமலேயே சேர்த்துக்கொண்டார்:

“சாமி, இங்கே பணம் வாங்கிட்டு போய் திரும்ப கட்டாம யாரானும் இருந்தா நாங்களே சாதி விலக்கு செஞ்சிடுவோம். எங்கே இவங்க இருந்தாலும் எப்படியாவது மாசாமாசம் உங்க காசு வந்துடும்.”

நான் ஏதும் பேசாமல் அவருடைய இடதுகைப் பெருவிரலைப் பற்றி, ஸ்டாம்ப் பேட் மசியில் நனைத்து பேப்பரில் ரேகை புரட்டினேன். ஐநூறு ரூபாய்தான் கடன் என்பதால் ஒரே ஒரு தாள் மட்டும்தான் கைநாட்டு போட.

தொடர்ந்து ஜெபர்சன் வாத்தியார் ‘செங்கல்பட்டான்’, ‘காஞ்சிபுரத்தான்’, ‘திண்டுக்கல்’, ‘வத்தலக்குண்டு’ என்று வரிசையாகக் கூப்பிட்டு, கடன் படிவத்தில் பெயர், வயது விவரம் எழுதி, கைரேகை புரட்ட என்னிடம் அனுப்பினார். பிறந்த ஊர் பெயராகிற பேருண்மை கண்டு நான் செயல்

மறக்காமல் ரேகை வாங்க, 'சௌகார் ஜானகி', 'ராஜசுலோசனா' என்று சினிமா நடிகை பெயர் வைத்த பெண்கள் வெட்கத்தோடு ரேகை புரட்டிப் போனார்கள். அவர்கள் சௌகார் ஜானகியும் ராஜசுலோசனாவும் நடித்த சினிமா வந்தபோது பிறந்தவர்களாக இருக்கும்.

எல்லா ஃபாரமும் பூர்த்தி செய்து, கைரேகை எல்லாம் வாங்கி முடிந்தது.

"காலையிலே எட்டு மணிக்கு வந்துடுங்க. எம்.எல்.ஏ, எம்.பி கையாலே பணம் வாங்கிட்டு, விருந்து சாப்பிட்டுப் போயிடுங்க. ஆபீஸ் பின்னாடி கொட்டகை கட்டி சமையலுக்கு ஏற்பாடு செய்யறோம். கவிச்சி உண்டு."

மேனேஜர் சொல்லியபடி, வாசல் கதவைப் பூட்டினார். ராத்திரி பதினொரு மணி. ஆபீஸில் நான் இவ்வளவு நேரம் இருந்தது இதுதான் முதல் தடவை.

"வாங்க, சேர்ந்தே சாப்பிட்டுப் போயிடலாம்" என்று மேனேஜர் கூப்பிட்டார்.

வெங்கடகிருஷ்ணா பரோட்டா கடை என்று காந்தி வீதியில் என் பள்ளித் தோழன் வெங்கு வைத்திருந்த கடையில் படி ஏறினோம்.

பூணூல் தெரிய வெங்குவின் அப்பா ராமசந்திர ஐயரும் பக்கத்தில் இத்தனூண்டுக்கு, நல்ல லட்சணமாக அவனுடைய அம்மா காத்தம்மை நாச்சியும் சேர்ந்திருக்கும், பழசாக இருந்தாலும் பளிச்சென்று இருக்கும் சீர்திருத்தக் கல்யாணப் புகைப்படம் கல்லாவில் மாட்டிய கடை அது.

கூடவே லெனின், மார்க்ஸ், ஏங்கெல்ஸ் படங்கள். ஜீவானந்தம் படமும் பாரதி படமும் பகத்சிங் படமும் கூட அங்கே உண்டு. வேறு எந்த புரோட்டா கடையிலும் இவர்களைப் பார்த்ததில்லை.

"முன்பெல்லாம் இங்கேதான் போகணுமான்னு குறைச்சல் இருந்துச்சு. எமர்ஜென்சி வந்து அது இல்லாமப் போச்சு. எங்க தோழர்கள் பலருக்கும் இப்போ இந்தக் கடையும் இந்தக் கட்சியும்தான் அடைக்கலம்", ஜெபர்சன் சொன்னார்.

கமகம என்று எண்ணெய் மணத்துக்கொண்டு வீச்சு பரோட்டாவும் கொத்து பரோட்டாவும் சால்னாவும் வர வயிறு திகுதிகு என்று பற்றி எரிந்தது. வீட்டில் அசைவம் விலக்கு. பரோட்டா சைவ வேஷம் போட்டுக் கொண்டு சாத்விகமான சிநேகிதமான குருமா, சாம்பார், சட்னியோடு நுழையக்கூட அனுமதி இல்லை. பிரியாணிக்கு பூணூல் போட்டு அடையாளமே இல்லாமல் சாத்விகமாகப் போன வெஜிடபிள் பிரியாணியும், காய்கறிக் குருமாவும் கூட விலக்கப்பட்ட பொருட்கள். எனவே இங்கே, மைதாமாவு பரோட்டாவை பக்கவாத்தியங்களோடு ஒரு பிடி பிடித்தேன். ஜெபர்சன் கொறித்தார்.

“நீங்க இடதுசாரி கம்யூனிஸ்ட், வெங்கு வலது சாரியா?”

ஜெபர்சனைக் காரியமாக விசாரித்தேன். தெரிந்து எனக்கு என்ன ஆகப் போகிறது?

“நாங்களும் அவரும் ஒரே பக்கம்தான் இப்போ. நாங்க எல்லோரும் ஒண்ணாயிட்டோம்.” ஜெபர்சன் சொன்னார். புரியலை என்றேன்.

“இடதுசாரியிலே இருந்தா கண்காணிப்பு, அது இதுன்னு அதிக கஷ்டமா இருக்கறதாலே, வெளியே வந்து, எல்லோரும் பொதுவாகச் சொல்ற வலதுசாரி என்கிற, முதலாவது கட்சியிலே இணைஞ்சிருக்கோம்.”

அவர் சிரித்தபடி சொல்ல, கல்லாவில் இருந்து வெங்குவும் சிரித்தான். சாப்பிட்டுக் கொண்டிருந்த நான்கைந்து நபர்களும் கூட சிரித்தமாதிரி தோன்றியது. ராத்திரி பதினொரு மணிக்கு பரோட்டா சாப்பிட வேண்டும் என்று எல்லா விதமான கம்யூனிஸ்டுகளுக்கும் விதிக்கப்பட்டிருக்கலாம் என்று கொஞ்சம்போல நம்ப ஆரம்பித்தேன்.

“தோழர், ஒரு உதவி தேவை.”

ஜெபர்சன் எச்சில் கையைக் காய விட்டபடி கேட்டார். நான் சுவாரசியமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

“உங்களைத்தான், தோழர்.”

அவர் என் பக்கம் குனிந்து சொன்னார். நான் நடுராத்திரிக்குக் கொஞ்சம் முன்னால் தோழரான சந்தோஷத்தில் இரண்டு பேருக்கும் ஆளுக்கு இன்னொரு பரோட்டா போடச் சொன்னேன். ஜெபர்சன் வேண்டாம் என்று மறுத்துவிட்டார்.

“நீங்க எந்தத் தெரு?” நான் கேட்டேன்.

“நான் பக்கத்து ஊர்லே வேலை பார்க்கறேன். நாட்டுக்கோட்டை. அங்கேதான் வீடு.”

நாட்டுக்கோட்டை நான் ஸ்கூட்டர் பழகியபோது வண்டியை ஓட்டிப் போய் ஒரு ரவுண்ட் அடித்துத் திரும்பி வந்த தலம். உண்மையிலேயே தலம்தான். கண்விழி அம்மன் கோயில் அங்கே உண்டு. எங்கிருந்தெல்லாமோ கண் நோய் குணமாக நேர்ந்துகொண்டு கூட்டம் கூட்டமாக பக்தர்கள் தினம் வருகிற ஊர் அது. நானும் போயிருக்கிறேன். வேண்டாம், அவருக்கு ரசிக்காத தகவலாக அது இருக்கக்கூடும்.

“என்ன உதவி வேணும்?”

“தோழர், நீங்க மலையாளம் படிப்பீங்க, பேசுவீங்கதானே?”

அவர் கேட்க நான் கையலம்ப எழுந்தபடி சொன்னேன், “ஏதோ சுமாரா அதெல்லாம் செய்வேன்.”

“அது போதும், நீங்க நம்ம பசங்களுக்கு க்ளாஸ் எடுக்கலாம்.”

“உங்க பிள்ளைங்க என்ன வயசு? பள்ளிக்கூடம் போயிட்டு வீட்டுப் பாடம் எழுதி பரிட்சைக்குப் படிக்கறதே பெரிய விஷயம். மலையாளமும் சேர்த்து ஏன் படிச்சு அவதிப்படணும்?” நான் கேட்டேன்.

“பசங்கன்னா என் பசங்களா? கட்சியிலே, சித்தாந்தத்திலே ஈர்ப்பு உடைய பிள்ளைகள். தியரி கிளாஸ் நான் எடுக்கறேன். நீங்க கூடவே மலையாளம் எடுங்க. உங்க சௌகரியத்தையும் பாத்துக்கணும்.”

காலேஜில் ஃபிசிக்ஸ் தியரி கிளாஸ் எடுத்த பேராசிரியர் ஜான் லூயிஸ், தமிழ் புரஃபசர் ராமானுஜ ஐயங்காரிடம் சொல்வதுபோல் இருந்தது. மேனேஜர் ஓசைப்படாமல் மூன்று பேரும் சாப்பிட்டதற்கு கல்லாவில்

துட்டு கொடுத்துவிட்டுக் காணாமல் போய்விட்டார். அடைத்துக் கொண்டிருந்த பரோட்டாக் கடை வாசலில் நானும் ஜெபர்சனும் மட்டும் நின்றோம்.

“தோழர், நீங்க பேசற தமிழ் இந்தப் பக்கத்து ஆள் மாதிரி தெரியலியே...” நான் மெல்லக் கேட்டேன்.

“இல்லே, நான் பத்மனாபபுரத்துக்காரன்” என்றார் அவர், ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு. சிகரெட் இல்லை, பீடி அது.

“அப்புறம் ஏன் சார் என்னை மலையாளம் சொல்லித்தரச் சொல்றீங்க? மூணு தலைமுறை முந்தி இங்கே வந்து நாங்க பேசற மலையாளமே தமிழ் மாதிரிதான் இருக்கும். உங்க பேச்சு அப்படி இருக்காதே?”

இதைக் கேட்டு முடித்தபிறகு மலையாளத்திலேயே இதைக் கேட்டிருக்கலாமே என்று வெகு தாமதமாகத் தோன்றியது.

“வேணாம், எனக்கு மலையாளத்தை கட்சி அறிக்கைக்கான மொழியாத்தான் தெரியுமே தவிர, சாகித்யம் எதுவும் தெரியாது. மத்தபடி, வகுப்பு எடுக்க, டயலெடிகல் மெடீரியலிஸம் ஓரளவுக்கு தெரியும்.”

எனக்கு அதுவும் தெரியாது என்று நினைவு வந்தது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் மூன்று பேரும் தாடிக்காரர்கள் என்று நினைவு. சேர்ந்து நின்று சைட் ப்ரொஃபைல் ஃபோட்டோ எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்க வைக்கும் அளவு அவர்களின் தாடி எடுப்பாகத் தெரிய, தலை மட்டும் வரிசையாகத் தட்டுப்படும் படத்தை பொதுக்கூட்ட நோட்டீஸ்களில் பார்த்திருக்கிறேன். அதிலும் மற்ற இருவருக்கும் தாகூர் தாடி என்றால் லெனினுக்கு சின்னஞ்சிறிசாக ஆட்டுத் தாடி. ஆள் கொஞ்சம் குட்டையும் கூட.

“என்ன யோசிக்கறீங்க?”

பீடியை சுவரில் தீற்றி அணைத்து பாக்கெட்டில் போட்டுக்கொண்டார். நான் லெனின் குட்டையாக இருப்பார் என்றேன் அவரிடம்.

“சரி களைச்சுப் போயிருப்பீங்க தோழர், ஓய்வெடுங்க” என்றபடி அவர் தாட்தாட் என்று பஸ் ஸ்டாண்ட் பக்கம் நடந்தார். என் ஸ்கூட்டர் இன்னும் மெட்ராஸில் இருந்து குட்ஸ் ரயிலில் புக் பண்ணி அனுப்பியது வந்து சேரவில்லை. வந்திருந்தால் அவரை பக்கத்தில் நாட்டுக்கோட்டையில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்திருக்கலாம்.

நான் பாதி தூரம் போய்க் கொண்டிருந்தபோது பின்னால் இருந்து வெங்கு வேகுவேகென்று ஓடி வந்தான். காசு எல்லாம் கொடுத்தாச்சே. மேனேஜர் முழுக்கக் கொடுத்திருக்காவிட்டாலும் நாளைக்கு பேங்குக்கு வந்தால் மீதித் தொகையையும் உடனே சார்ஜஸ் வவுச்சர் போட்டுக் கொடுத்துவிட மாட்டாரா என்ன?

“வாத்தியார் தோழர் புத்தகப் பையை விட்டுட்டுப் போயிட்டார் போத்தி தோழர். அவர் கூட வந்த பூவந்தித் தோழர் இப்போதான் லாரி பிடிச்சுப் போனார். வேற யார் கிட்டயாவது கொடுத்துவிடலாம்னா, பரோட்டா மாஸ்டர் காசித் தோழர் இன்னிக்கு லீவு. சர்வ் பண்ற சமஷ்டிராஜ் தோழரும் போயாச்சு. சரி, நம்ம புகாரித் தோழர் கிட்டே கொடுத்து விடலாம்னா அவர் கடைக்குள்ளேயே படுத்துட்டார். நாளைக்கு ராபர்ட் தோழரோட கல்யாணத்துக்கு போறாராம்.”

இத்தனை தோழரில் ஒருத்தரையும் எனக்குத் தெரியாது என்று வெங்குத் தோழரிடம் சொல்வதற்கு முன் அந்தப் பையை என் கையில் அழுத்தி வைத்துவிட்டுப் போயே போய்விட்டான் அவன்.

சிவப்பு நிறமாகத் தெரு விளக்கில் ஒளிர்ந்த துணிப்பையில் இருந்து புத்தகங்களை எடுத்துப் பார்த்தேன். மாசேதுங் எழுதிய சிவப்புப் புத்தகம், மதுரை ஆதினம் எழுதிய ‘இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்’, ராகுல சாங்க்ருதியாயனின் ‘வால்காவிலிருந்து கங்கை வரை’.

படித்துவிட்டுக் கொடுக்கலாம். இறந்தவர்கள் வாழும் நிலை என்னவாக இருக்கும்?

அத்தியாயம் 6

# நவம்பர் 1975

சீ க்கிரம் போகலாம் என்று எட்டு மணிக்கே ஆபீஸ் படி ஏறினேன். நேற்று டாக்குமெண்ட் கைரேகைப்படுத்திய பெரிய கூட்டம் பணம் வாங்கிப் போகக் காத்திருக்கும் என்று நினைத்ததற்கு மாறாக ஒருத்தர் கூட அங்கில்லை.

"சாயந்திரம் நாலு மணிக்கு அரண்மனை வாசல்லே வச்சு லோன் கொடுக்கறாப்பல" என்றார் சைக்கிளில் வந்து இறங்கிய மெசஞ்சர் பழநி.

'போல' என்பது 'போல தெரியுது' என்பதன் குறுவடிவம் என்று தோன்றியது. அது எதற்காக எல்லா வாக்கியத்தையும் 'போல', 'போல' என்று பூசி மெழுகி முடிக்க வேண்டும் என்று புலவர்கள்தான் சொல்ல வேண்டும்.

நான் சும்மா சிரித்துக் கொண்டிருந்தபோது பழநி "ஸ்வீப்பர் வந்துட்டாங்களா, சார்?" என்று கேட்டார். ஓரமாக பூந்துடைப்பத்தால் சாவதானமாகப் பெருக்கிக் கொண்டிருந்த சௌந்தரம்மா "ஆஜர்" என்று சொல்லி ஒரு சல்யூட் அடித்தார்.

பழநி கடைநிலை ஊழியர் என்றால் ஸ்வீப்பர் சௌந்தரம்மா கடைநிலைக்கும் கடைப்பட்ட உத்தியோக அடுக்கில் இருப்பவர். ஆனால் என்ன, பேங்க் சம்பளம் அவருக்கும் உண்டு.

"ஸ்வீப்பரம்மா போய் சூடா ரெண்டு டீ மாயளகு கடையிலே வாங்கிட்டு வந்துடுங்க. அப்படியே ஒரு பாக்கெட் பிஸ்கட்டும். சார்ஜஸ் போட்டுத்

தரேன்னு சொல்லுங்க.”

ஸ்வீப்பரம்மா விளக்குமாறைத் தூக்கியபடி ஒரு வினாடி நின்றார்.

“இன்னொரு டீ சாருக்கு. நேத்து புதுசா வந்திருக்கார்” என்று அவருடைய புரிந்து கொள்வதற்காகச் சொன்னார் பழநி.

“அவுகளையும் தெரியும், அவுக அப்பாரையும் தெரியும், எனக்கு கூடப் பொறக்காத தம்பி இவங்கப்பாரு. இவனுக்குப் பொறந்து ரெண்டு மாசம் வரை வெதைக்கொட்டை ஏறிப்போய் இளுத்து வச்சு மருத்துவம் செஞ்சது யாரு? எங்க ஆம்பளையாளு. எங்க வீட்டுக்கு வந்தா இந்தப் பயலுக்கும் உனக்கும் தேத்தண்ணி காச்சி தருவேன். ஆனா, யாருக்கும் டீ வாங்க இப்போ போகமாட்டேன். ஆபீஸை யார் பெருக்க? நீ பண்ணுவியா? இல்லே ஜெயலச்சுமி வந்து செய்வாளா?”

பழநி ஒரு அசட்டுச் சிரிப்போடு என்னிடம், “ஜெயலட்சுமி என் பொண்ஜாதிங்க. கிளவி ஒரு மார்க்கமா பதில் சொல்லுது. கண்டுக்காதீங்க” என்றார். பழநியே சீக்கிரம் ரிடையர் ஆகவேண்டிய நபர். சௌந்தரம்மாவை கிழவி என்று அவர் அழைக்க சிறப்பு தைரியம் தேவைப்படும்.

நான் என் மேஜையைத் திறக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன். சாவி துளையில் போய் திரும்பவும் மாட்டேன், வெளியே வரவும் மாட்டேன் என்று மக்கர் பண்ணிக் கொண்டிருந்தது.

இந்த ஊருக்கு வராமல் மதறாஸில் இருந்து இங்கே பக்கத்தில் மதுரை, சிங்கம்புணரி, புலியடிதம்மம் என்று மாற்றல் வாங்கிப் போயிருந்திருக்க வேண்டும். யாரும் பழங்கதை, உறவு முறை என்று நினைவு வைத்துக்கொண்டு போடா பயலே என்று தலையில் தட்டிவிட்டுப் போயிருக்க மாட்டார்கள். ஊர் முழுக்க, பேங்க் முழுக்க நம்ம சனம் என்பது ஒரு விதத்தில் நிம்மதி தரும் என்றாலும், அந்தரங்கம் என்று ஒன்று இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. விதைக்கொட்டை வெளியே தெரிகிற மாதிரி தோணுதல்.

அந்தரங்கம் கிடக்கட்டும், எனக்கு என்று ஒதுக்கிய மேஜையைக் கூடத் திறந்து என்னுடையது என்று எதையும் வைக்க முடியவில்லை. நாற்காலி வேறே ஆடுகிறது.

யாரோ உள்ளே வந்தார்கள். வேட்டியை கிட்டதட்ட உள்ளாடை தெரிய மடித்துக் கட்டிக்கொண்டு கரளை கரளையாகக் கையும், முறுக்கு மீசையுமாக விழித்துப் பார்த்தபடி வந்தவர் ஒருத்தர் கவுண்டருக்கு அந்தப் பக்கம் வாசலில் இருந்து மறுகோடி வரை மெல்ல நடந்தார். திரும்பவும் அதேபடி நடந்தபோது என்னை முறைத்து, பழநியையும் துச்சமாகப் பார்த்தார். மூன்றாம் முறை மறுகோடிக்கு ஏதோ சடங்கு சம்பிரதாயம்போல நடந்தவரை வழிமறித்து ஸ்வீப்பரம்மா "என்ன வேணும்?" என்று ஃபேனை சுவிட்ச் ஆஃப் செய்தபடி விசாரித்தார்.

"லோன் தருவீங்களா?" க்ரீச் என்று தகர சிலேட்டில் சாக்பீஸ் எழுதினதுபோல கீச்சிட்டார் வந்த பிரமுகர்.

"இன்னிக்கு இல்லே" என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னார் பழநி.

வந்தவர் என்னை ஒரு வினாடி பார்க்க, நான் மேஜையை வெற்றிகரமாகத் திறந்தபடி இல்லை என்று தலையாட்டினேன்.

"ஏன், வெள்ளையும் சொள்ளையுமா உடுத்திக்கிட்டு சும்மாத்தானே உக்காந்திருக்கீங்க? குடுத்தா என்ன கொறஞ்சா போயிடுவீங்க?"

சமூக அக்கறையோடு பேங்குக்காரர்களை நாக்கைப் பிடுங்குவதுபோல் கேட்ட திருப்தியில் மெல்ல நடந்து போனார் அவர்.

"நீங்க அரண்மனை வாசலுக்குப் போய் பந்தல், மைக் எல்லாம் செக் பண்ணிட்டு வந்துடுங்க. நான் கவுண்டர் ஓப்பன் பண்ணிட்டு வந்துடறேன்."

அக்கவுண்டண்ட் கையில் இடுக்கிய பையோடு நுழைந்தபடி இன்னொரு மெசஞ்சர் ரத்தினத்திடம் கெஞ்சுகிற தொனியில் சொல்லி அனுப்பினார்.

அக்கவுண்டண்ட் என்பவர் இரண்டாம் நிலை அதிகாரி என்றாலும், மெட்றாஸ் போன்ற நகரங்களில் அவர்களுக்கு பெரிய அதிகாரம் ஏதும்

கிடைக்காது என்று பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிறேன். சின்ன ஊரான இங்கே அவருடைய கொடி சற்று அதிகமாகவே பறக்கும் என்று தோன்றியது. மேனேஜர் இல்லாவிட்டாலும் கிளையை முன்னால் கொண்டு செலுத்த சகல அதிகாரமும் உள்ளவர் அவர். பக்கத்தில் தேவகோட்டையிலிருந்து அவதி அவதியாக பஸ் பிடித்து வருகிறவர் அவர் என்று நேற்று தெரிந்துகொண்டேன்.

“என்ன சார், வேலை எல்லாம் கத்துக்கிட்டீங்களா?”

என்னைத்தான் கேட்டார். நேற்று வந்து நுழைந்து இன்றைக்கு சகலகலா வல்லவனாக ஆகியிருக்க முடியாது என்று அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

அப்புறம், நான் புதுக்கருக்கு அழியாமல் இங்கே வரவில்லை. மதராஸில் ஒரு வருடத்துக்கு மேலாக குப்பை கொட்டிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். அதுவும் இதைப்போல பத்து மடங்கு பெரிய கிளையில் டன் கணக்காக அதைக் கொட்டி அள்ளிவிட்டு வந்தவனாக்கும்.

இதை எல்லாம் கணக்காக ஆனால் மரியாதையோடு சொல்வது எப்படி என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, ஜெபர்சன் கையில் குடையோடு வந்து சேர்ந்தார்.

“புரட்சி வணக்கம் தோழர்” என்று குடையில்லாத கையில் முஷ்டி மடக்கி முன்னால் நீட்டினார். நானும் புடலங்காய் வாங்கிப் போகிற மாதிரி முட்டி மடக்கி புரட்சி வணக்கத்தை முனகினேன்.

அக்கவுண்டண்ட் பார்வை இதை எதையும் அவர் ரசிக்கவில்லை என்று காட்டியது. தேவகோட்டையில் புரட்சி வணக்கம் கெட்ட வார்த்தை, கெட்ட செயலுக்குத் தொடக்கமோ என்னமோ.

“மேனேஜர் தோழர் குருவிக்காரத் தோழர்களுக்கு எல்லாம் புதுத் துணி கொடுக்கறதா சொன்னார். வாங்கிட்டாரான்னு விசாரிக்க வந்தேன்” என்றார் ஜெபர்சன். அதுக்கு எதுக்கு குடை? பத்மநாபபுர வழக்கமோ!

“மொத்தம் அறுபத்துநாலு பேர். எல்லா அப்ளிகேஷனும் இதிலே இருக்கு. ரெண்டே ரெண்டு மட்டும் நான் எடுத்து வச்சிருக்கேன்.

கொஞ்சம் பொறுத்து தரேன்", ஜெபர்சன் என் பக்கம் வந்து ரகசியம் பேசும் குரலில் சொன்னார்.

"எல்லாம் சேர்த்துக் கொடுத்தா, கேஷ் ரிலீஸ் பண்ண, கவர்லே போட்டு பெயர் எழுத சௌகரியமா இருக்கும்" என்றார் அக்கவுண்டண்ட்.

"ஒரு ரெண்டை மட்டும் தனியா வச்சிருக்கேன். அது இன்னிக்கு இல்லேன்னா நாளைக்காவது..."

ஜெபர்சன் அவருக்கே லோன் கிடைக்கிற வாய்ப்பு இருந்து மன்றாடுகிறதுபோல் கெஞ்சினார்.

ஸ்டார்ங் ரூம் என்ற பணமும், நகைக்கடனுக்கு எடுத்த நகைகளும் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கும் தனி அறையில் இருந்து வாட்ச்மேன் சிவத்தையாவும் மேனேஜரும் ஒரு பெரிய துணிப் பொதியை உருட்டி வந்து வெளியே சுவர் ஓரமாகத் தள்ளி வைத்தார்கள்.

"இதுதான் நான் சொன்ன துணி. கதிரேசன் லோன் கொடுத்து, குமரேசன் வசூலிக்க கால் தேய நடந்து, சுந்தரேசன் அந்தக் கடையிலே புகுந்து எடுத்து வந்தது. லோனுக்கு செக்யூரிட்டி... ஹைபாதிகேஷன் வச்ச துணி."

மேனேஜர் பொதியின் மேல் சாய்ந்தபடி சொன்னார். அவர் குறிப்பிட்ட எல்லா ஈசன்களும் அவருக்கு முன்னால் இங்கே ப்ராஞ்ச் மேனேஜர்களாக இருந்தவர்கள். இதில் சில ஈசன்கள் ஈசனடி சேர்ந்திருக்கவும் வாய்ப்புண்டு.

"அரக்கு சீல் வச்சிருக்கு சார்" என்று நினைவுபடுத்தும் குரலில் சொன்னார் அக்கவுண்டெண்ட். சீலை உடைத்து விவகாரமாகி, சாயந்திரம் வேலை முடித்து பஸ் ஏறி ஊர் போக முடியாது போகக்கூடும் என்ற கலவரம் அவர் முகத்தில் தெரிந்தது.

"நான்தான் இந்த மூட்டைக்கு சீல் வச்சேன்" என்று பழநி தன் பெருமையை நிலைநாட்டிக் கொண்டார்.

"அப்போ நீங்களே எடுங்க" என்றார் மேனேஜர். பழநி சும்மா நின்றார்.

“சரி, நானே எடுக்கறேன், அந்த ஸ்க்ரூ ட்ரைவரையும் கத்தரிக்கோலையும் எடுங்க” என்றார் மேனேஜர். எந்தக் கத்தரி, ஸ்க்ரூ ட்ரைவர் என்று ஒருநாள் பழக்கத்தில் இடம் பழகாது குழப்பத்தோடு நான் நிற்க, துள்ளிச்சாடி மேலே கப் போர்டில் இருந்து அவரே மேற்சொன்ன உபகரணங்களை எடுத்தார்.

அவர் உடைத்துத் திறந்த அந்தப் பொதிக்குள் மக்கிய வாடையோடு புடவைகளும், சட்டைத் துணி பீஸ்களும் தட்டுப்பட்டன. மஞ்சள் புடவை, மஞ்சள் டெரிகாட்டன் சட்டைத் துணி என்று மங்களகரமான ஜப்திதுணி.

“சௌந்தரம்மா” அவர் கூப்பிட புகையிலை அடக்கிய புத்தரின் அம்மாபோல் கோணல் கொண்டையும், காதில் வளர்த்து அணிந்த தண்டையுமாக ஸ்வீப்பரம்மா தலை காட்டினார்.

“இந்தப் புடவையிலே ஒண்ணை எடுத்து”, மேனேஜர் சொல்லி முடிப்பதற்குள் சௌந்தரம்மா கை எடுத்துக் கும்பிட்டார்.

“ஐயா, நான் வயசானவ. அந்தப் புடவை எல்லாம் கட்டிக்க ஏலாது.”

“உங்களை யாரும்மா கட்டிக்கச் சொன்னது? அதை எடுத்து விரிச்சு துணி நல்லா இருக்கான்னு பாத்துச் சொல்லுங்க போதும். கடையிலே ரெண்டு வருஷம், பேங்க் ஸ்ட்ராங்க் ரூமிலே ஒண்ணரை வருஷம், மூணு வருஷம் அடைச்சு வச்ச துணி. இத்துப் போகாம இருக்கணுமே.”

சிவத்தையா மேலே இருந்த புடவையைக் குவியலில் இருந்து எடுத்தார். “அடியிலே இருந்து எடுங்க” என்றார் மேனேஜர். கொஞ்சம் கஷ்டப்பட்டு எடுத்த புடவையை முகர்ந்து பார்த்தார் சிவத்தையா.

“அண்ணே, அதென்ன சந்தையிலே நெத்திலிக் கருவாடா, மோந்து பாத்துகிட்டு நிக்கறீயளே...”

சௌந்தரம்மா புடவையை வாங்கிப் பிரிக்க, உள்ளே நிறம் கம்மியாகி இருந்தது தவிர வேறே குழப்பம் இல்லை. கவுண்டருக்கு அந்தப் பக்கம் முழுக்க அந்தத் துணியின் நெடி சூழ்ந்தது. அது மக்கின துணி வாடை இல்லை. புத்தம்புது துணி கிளப்பும் மயக்கம் தருகிற வாசனையும் இல்லை.

“இது என்ன வாடை?” ஜெபர்சன் கேட்க, உள்ளே இருந்து வந்த கேஷியர் கருப்பையா சொன்னார்: “இது கரன்சி வாடை.”

“தோழர், எத்தனை பொம்பளை?”

மேனேஜர் கேட்க, “முப்பத்துரெண்டு ஸ்த்ரீகளும், முப்பத்துரெண்டு புருஷன்மாரும் லோன் ஆவஸ்யப்பெட்டு” என்று இடம் மறந்து மலையாளத்தில் பொழிந்தார் ஜெபர்சன்.

“அப்போ முப்பத்துரெண்டு புடவை எடுத்து தனியா வையுங்க” என்றார் மேனேஜர்.

முப்பத்திரண்டு புடவைகள் வெளியே எடுத்து வைக்கப்பட்டன.

“அது எப்படி சார், ஜப்தி துணியை நாம விநியோகிக்கறது?”

கடமை உணர்ச்சியோடு அக்கவுண்டண்ட் குறுக்கே புகுந்தார். உனக்கு தெரிஞ்ச பேங்கிங் அவ்வளவுதானா என்பதுபோல் ஏளனமாகப் பார்த்தார் மேனேஜர்.

“மார்க்கெட் விலையிலே, தள்ளுபடி சேர்த்து எடுத்து வச்சதுக்கு விலை போட்டு, பேங்க் அதை வாங்கினதா வவுச்சர். காரணம், நரிக்குறவர்களுக்கு கடன் மட்டும் தரலை. பேங்க் வாழ்த்துகளோடு உடுப்பும் அன்பளிப்பா கொடுக்கறோம். அவங்க நல்வாழ்வுக்காக இருபது அம்ச திட்ட அடிப்படையிலே கொடுக்கற பரிசு இது. துணிக்கு வவுச்சர் போட்ட தொகை வராக்கடன் கஸ்டமரோட கணக்குலே வரவாயிடும். அம்புட்டுதான்.”

மைக் இல்லாமல் சொற்பொழிந்து நிறுத்தினார் மேனேஜர். எமர்ஜென்சி சிறந்த பேங்க் மேனேஜர்களை உருவாக்குமோ என்னமோ, நல்ல பேச்சாளர்களைப் பிறப்பித்திருக்கிறது.

ஜெபர்சனும், சௌந்தரம்மாவும், நானும், கேஷியரும், மெசஞ்சர்களும் ஏகோபித்துப் பொழிந்த பாராட்டு மழையில் சொட்டச் சொட்ட நனைந்து போனார் மேனேஜர். அக்கவுண்டண்ட்டும் வெள்ளந்தியாக “அட, இதுவும் நல்லாத்தான் இருக்கு” என்றபடி கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்.

“அப்போ ஆண்களுக்கு? அவங்களுக்கும் புடவையிலே கிழிச்சுக் கொடுத்துடலாமா? அவங்க உள்ளபடிக்கே இடுப்பிலே கம்மியாத்தான்துணி உடுத்தறாங்க. இதைக் கொடுத்தாலும் ஒண்ணும் பிரயோஜனமா இருக்கப் போறதில்லே” என்றார் சீனியர் கிளார்க் ரவீந்திரன்.

“இல்லே, அந்தத் துணி இல்லே, ரெவ்வெண்டு மீட்டர் நீளத்திலே அந்த சட்டைத் துணி பீஸ்லே இருந்து துணி வெட்டிக் கொடுத்திடலாம். அதான் ஆணுங்களுக்கு” மேனேஜர் சொன்னார்.

“அதை யார் சார் தச்சுப் போட?” கேஷியர் கேட்க, “ஆளுண்டு” என்றார் ஜெபர்சன். “என் வீட்டம்மா நல்லா தையல் வேலை செய்வாங்க. அவங்களும், அவங்களோட கல்பனா பெண்கள் முன்னேற்ற சங்கமும் இந்தத் தையல் வேலையை காசு வாங்காம செஞ்சு தருவாங்க.”

“கல்பனா சங்கத்துக்கும் போன மாசம் பணம் கடன் கொடுத்திருக்கே. துணி தைக்க ஒரு தொகை போட்டு அவங்க கணக்குலேயும் வரவு வச்சுடலாம்” என்றார் அக்கவுண்டண்ட். புதிய அலை பேங்க்கிங் ஞானோதயம் பெற்ற பெருமிதம் அவர் முகத்தில்.

“சார், மதியம் நாலு மணிக்கு ஃபங்க்ஷன் இருக்கு. அதுக்குள்ளே தைச்சு...”

யாரோ கேட்க, நான் சொன்னேன் “துணியை அப்படியே மொத்தமா எடுத்துப் போய் எம்.பி கையால கொடுக்கச் சொல்லலாம். அப்புறம் தைக்கப் போடலாம்.”

“இல்லேன்னா அவர் கையிலே கொடுத்து ஒரு கத்தரிக்கோலையும் ஸ்கேலையும் கூடவே கொடுத்து, அளந்து வெட்டிப் போடச் சொல்லலாம். வெட்டியாத்தானே கூட்டம் சொற்பொழிவுன்னு வரார்” என்றார் பழநி.

அவர் உடனடியாக அடக்கப்பட்டு, தபால் பார்த்து எடுத்து வர அனுப்பப்பட்டார்.

“போட் மெயில் பத்தரைக்குதான் வருது. இன்னும் ரெண்டு மணி நேரம் இருக்கு. இப்போ என்ன தபால் இருக்கும்?” என்று அங்கேயே சுற்றி வந்தவர் உடனடியாக சைக்கிள் ஏறிப் போக உத்தரவிடப்பட்டார். அவருக்கும் போவதில் இஷ்டம்தான் என்று முகம் சொன்னது.

இரண்டு மணிக்கு கவுண்டர் முடிந்த பிறகு, “போய் உடனே சாப்பிட்டு வந்துடுங்க. ஃபங்க்ஷன் இருக்கு” என்றார் மேனேஜர்.

என் ஸ்கூட்டர் வந்து சேர்ந்ததா என்று ரயில்வே ஸ்டேஷனில் போய் விசாரிக்க வேண்டும். கடன் வழங்கும் விழா எப்போது முடியுமோ தெரியவில்லை.

“நேரா அங்கே வந்துடறேன்” என்றேன். முடிந்தால் ஸ்டேஷன் போய்விட்டு அங்கிருந்து அரண்மனை வாசல் போக நினைத்த திட்டம் எல்லாம் தவிடுபொடியாக, “இல்லே, இங்கே வந்துடுங்க. ஒரு முறை எல்லா டாகுமெண்டையும் சரிபார்த்துட்டு, எல்லோருமா சேர்ந்தே போயிடலாம்” என்றார் மேனேஜர்.

மூன்று மணிக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தபோது, ‘உள்ளம் உருகுதையா’ என்று கோயிலில் மார்கழி மாதத்துக் காலையில் பாடுவதுபோல் லவுட்ஸ்பீக்கர் பாடிக் கொண்டிருந்தது. ‘இருபது அம்சத் திட்டம்’ என்று எழுதி இருந்த துணி பேனர்களை கதர் உடுத்திய சிலர் மேடைக்குப் பின்னால் ஏற்றிக் கொண்டிருந்தனர். உள்ளூர் ரெவின்யூ தாசில்தாரும், அவர் ஆபீஸ் கூட்டமும் என்று மேனேஜர் சொன்னார்.

தாசில்தாரும் கலெக்டரும் பொதுக்கூட்டத்துக்கு பேனர் கட்டி, சவுண்ட் டெஸ்டிங் ஒன் டு த்ரீ என்று ஒலிபெருக்கி, மைக் டெஸ்ட் செய்து, பாட்டு போட்டுக்கொண்டிருந்தால், தாசில்தார், கலெக்டருக்கு விதிக்கப்பட்ட வேலையை யார் பார்ப்பது? அங்கே அதெல்லாம் நினைக்க ஆளில்லை. இருபதம்சத் திட்டம் தவிர வேற யாரும் எதையும் யோசித்ததாகத் தெரியவில்லை.

இன்னொரு சின்ன பேனரில் ‘சஞ்சய் காந்தி ஐந்தம்சத் திட்டம்’ என்று எழுதிப் பிடித்துக்கொண்டு இரண்டு இளைஞர்கள் பாய்ந்து மேடை

ஏறினார்கள். தாசில்தாரும், ஆர்டிஓவும் கட்டிய இருபதம்சத் திட்டம் பேனர் மேல் கால்வாசி மறைத்துக்கொண்டு ஐந்தம்சம் உட்கார்ந்தது. இந்திரா காந்தி படத்தில் மூக்குக்கு மேல், வீறாப்பாக நிற்கிற சஞ்சய் காந்தி படம்.

“இந்த லோன் இருபதிலே வருமா, அஞ்சுலேயா?”

மேனேஜர் நியாயமான சந்தேகத்தை எழுப்ப, ஆர்டிஓவும் தாசில்தாரும் அவசர ஆலோசனையில் ஈடுபட்டார்கள்.

“இருபதுதான். போன மாசம் கிளாஸ் வச்சு ஒவ்வொரு அம்சமா உரக்கச் சொல்ல வச்சு கத்துக்கொடுத்தாங்களே...” என்றார் தாசில்தார்.

“அதெல்லாம் சரிதான். தலைவர் என்னன்னு பேசறாரோ அதுபடிக்கு போட்டுடுங்க” என்றார் ஆர்டிஓ ஒரு முடிவுக்கு வரமுடியாமல்.

ஒரு காலத்தில் பருத்திக்கொட்டை வியாபாரம் செய்து நஷ்டப்பட்டு, நான்கைந்து கட்சி மாறி, எப்படியோ தில்லிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போனவருக்கு ஐந்து அம்சத்துக்கும் இருபது அம்சத்துக்கும் வேறுபாடு தெரிந்திருக்கும். மற்றவர்களுக்கு எல்லாமே எமர்ஜென்சி கடன்.

ஜெபர்சன் என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தார். “என்ன தோழர்?” என்று கேட்டேன்.

“அவங்க தில்லியிலே குனியுங்கன்னுதான் சொன்னாங்க. இவங்க நம்மூர்லே தரையிலே மண்டி போட்டு தவழ ஆரம்பிச்சுட்டாங்க” என்றார் அவர் பூடகமாக.

எமர்ஜென்சி பற்றி நெகட்டிவாகச் சொல்கிறார். பக்கத்தில் நின்றாலே ஆபத்து. மெட்றாஸ் பீச்சில் ஜோல்னாப்பை கதர் ஜிப்பாக்காரர்கள் போட்ட நோட்டீஸைப் பிடுங்கிப் போன போலீஸ் சொன்ன மாதிரி, “இதெல்லாம் கவர்மெண்ட் விரோதமான சமாசாரம். பக்கத்துலே போனாலே குற்றம்.”

நான் என்னை அறியாமல் ஜெபர்சன் அருகில் இருந்து விலகி நின்றேன். பக்கத்தில் இருந்த குருவிக்காரர்களின் கூட்டம் மேனேஜர் எவ்வளவு

சொல்லியும் நாற்காலிகளில் உட்கார மாட்டோம் என்று சொல்லி, தரையிலேயே குந்தி இருந்தது.

“இன்னிக்கு ஹீரோ, ஹீரோயின் நீங்கதான். தயவுசெஞ்சு நாற்காலியிலே உட்காருங்கப்பா, டீ தரச் சொல்றேன்.”

கேஷியர் வணங்கிச் சொன்னார்.

“சாமி, டீ கொடுங்க. அது போதும். மகாராசனா நீங்க, அவரு, இவரு, அங்கே நிக்கறவரு எல்லா பேங்க் சாமிகளும் நல்லா இருக்கட்டும்...”

ஒரு குருவிக்காரக் கிழவர் வாழ்த்தியபடி, பாசிமணி மாலை கோர்ப்பதைத் தொடர்ந்தார். அவருக்குப் பின்னால் உட்கார்ந்து அதே வேலை செய்துகொண்டிருந்த பெண்கள் ஒரே நேரத்தில் தலை உயர்த்தி ஒருத்தரை ஒருத்தர் பார்க்க, கிழவர் குருவிக்கார மொழியில் - அதற்கு ஒரு பெயர் உண்டாமே - ஏதோ சொல்ல, கூட்டமாக அவர்கள் ஓரமாகப் போய் சாக்கடையில் உமிழும்போது எம்.பி.யின் அம்பாசிடர் கார் கொடி பறக்க வெகு விமர்சையாக வந்து சேர்ந்தது.

எல்லாக் கூட்டத்திலும் தட்டுப்படும் ஊர்ப் பிரமுகர்களான ஹைஸ்கூல் ரிடையர்ட் ஹெட்மாஸ்டர், ஹோமியோபதி வைத்தியர், ஊருக்கு இருந்த ஒரே எழுத்தாளரான டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் உரிமையாளர், மங்கையர்க்கரசி மாதர் சங்கச் செயலாளரான, உரக்கடை ஷண்முகநாடார் சம்சாரம் ரோஸ்லின் ரீட்டா அம்மையார் ஆகியோர் ஆளுக்கு பத்து நிமிஷம் அன்னை இந்திரா புகழ் பாடி நாட்டுக்கு எப்படி இருபது அம்சத் திட்டம் தேவையானது என்று சொல்ல, ஓரமாக நின்று எங்கள் மேனேஜரும், ஆர்டிஓ, தாசில்தாரும் மட்டும் வலிக்க வலிக்கக் கை தட்டினார்கள்.

அக்கவுண்டண்ட் குருவிக்காரக் கும்பலைக் கை தட்டும்படி சைகை காட்ட, கொஞ்சம் தாமதமாக டால்டா டின்கள் அதிவிமர்சையாகக் கொட்டி முழக்கப்பட்டன. அப்போது மிகப் பெரிய ஜனநாயக நாடு, நம் நாடு என்று சொல்லிக் கொண்டிருந்தார் ரோஸ்லின் அம்மையார்.

எம்.பி பேசும்போது எங்கள் வங்கியின் பெயரைத் தவறாகச் சொன்னார். மேனேஜர் அவசரமாக எம்பிக் குதித்து சரியாகச் சொல்ல, அவர் 'ஏதோ ஒண்ணு' என்றது எங்கள் எல்லோர் மனதிலும் ஆறாத வடுவை ஏற்படுத்தியது. ஏதோ ஒண்ணாக இருக்கவா, இத்தனை பாடுபட்டு டாகுமெண்ட் தயார் செய்து எல்லா வேலையும் கருத்தாகச் செய்து கொண்டிருக்கிறோம்?

எனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு லிஸ்டில் இருந்து ஒவ்வொன்றாகப் பெயர் படிக்க, ஒவ்வொரு பெயருக்கும் அங்கங்கே கூடியிருந்த ஊர் மகாஜனங்கள் சிரித்த பிறகு அந்தப் பெயருக்கு உரியவர் மேடை ஏறி, பணமும் துணியும் வாங்கி கீழே இறங்கினார்.

கடைசியாக இரண்டு பெயர்கள் - எண்ணூறு, ஆயிரம். ஆளே காணோம். இன்னும் இரண்டு தடவை சொல்ல, எம்.பிக்குப் பொறுமை போனது.

"இன்னிக்கு முழுக்க படிச்சுக்கிட்டே இருப்பீங்களா? எனக்கு வேற வேலை வெட்டி இல்லையா?" என்று அவர் எகிறினார்.

அவருக்கு என்ன வேறு வேலை வெட்டி இருந்தது என்பதை அவர் சொல்லாததால் தெரிந்துகொள்ள முடியாமல் போனது.

"இறுதியாக மேனேஜர் பேசுவார்" என்று ஆர்டிஓ அறிவிக்க, தப்பிக்க சைகை கிடைத்த சந்தோஷத்தில் எம்.பி கிளம்பினார்.

"அடுத்த கூட்டம் இருக்கு."

அவர் மேனேஜரிடம் புன்சிரிப்போடு சொன்னார். எல்லா பேங்குகளும் ஏற்பாடு செய்த கடன் தொகையை கூட்டம் போட்டு, எடுத்து வழங்கிக்கொண்டே இருக்கிற உன்னதமான உத்தியோகம் அவருக்கு.

மேனேஜர் மைக்கைப் பிடித்து, 'துன்பப்பட்டு, துயரப்பட்டு, வாழ்க்கையின் ஓரத்துக்குத் துரத்தப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டு' என்று அவருக்கு சம்பந்தமே இல்லாத அடுக்கு மொழியில் பொழிந்து கொண்டிருந்தார்.

“இது போன மாசம் பட்டுப்பூச்சி வளர்க்கறவங்க சங்கத்துக்கு லோன் கொடுத்தபோது எழுதின பேச்சு. அதையே எடுத்து விட்டுக்கிட்டு இருக்கார்” என்றார் அக்கவுண்டண்ட்.

எம்.பி நடக்க ஆரம்பிக்க, ‘அன்னை வாழ்க’, ‘இருபது அம்ச திட்டம் வாழ்க’ என்றெல்லாம் கோஷம் முழங்கியது. அவர் கார் பக்கம் போனார். வாழ்க முழங்கியவர்களில் ஆர்டிஓவும் உண்டு என்பதை நான் கவனித்தேன்.

“எடுத்த ஃபோட்டோவை எல்லாம் உடனே ப்ரிண்ட் போட்டு கார்மேகம் கிட்டே கொடுங்க, எங்கே போனார் நிருபர்?”

எம்.பி போகிற போக்கில் சொல்லி, கொடி பறக்கும் அம்பாசிடர் காரில் ஏறிப் போய்விட்டார்.

“கொடுங்க, நான் மதுரைக்கு எடுத்துப் போய் பத்திரிகை ஆபீஸ்லே கொடுத்துடறேன். இப்போ கொடுத்தாத்தான் நாளைக் காலை பத்திரிகையிலே வரும்.”

அடித் தொண்டையில் பேசியபடி ஓடி வந்தவரை நிருபர் கார்மேகம் என்று தெரியும். பொதுக்கூட்டம், பள்ளிக்கூட ஆண்டுவிழா, கலெக்டர் மரம் நடும் விழா என்று எங்கேயாவது நான்கு பேர் கூடினால் அங்கே பரபரப்பாக ஓடியாடிக்கொண்டு நிருபரும் இருப்பார். கலெக்டர் மரம் நட்ட விவரம் அடுத்த நாள் பத்திரிகையில் வராவிட்டால் தமிழ்நாடே தவித்துத் தடுமாறிப் போய்விடும் என்று அவருடைய அவசரத்தையும் படபடப்பையும் பார்த்தால் தோன்றும்.

விழா மேடையில் யாராவது பேசிக் கொண்டிருக்க, நிருபர் கீழே ஓரமாக உட்கார்ந்து, விழாவைப் பற்றி இருபது வரியில் செய்தி எழுதிக் கொண்டிருப்பார்.

இவரைக் கல்யாண வீடுகளிலும், சாவு வீடுகளிலும் கூட பார்த்திருக்கிறேன். பத்திரிகையின் நான்காம், ஐந்தாம் பக்கத்தில் கண்ணில் படும் செய்திகள் பலவும் இவர் கொடுப்பதுதான். பார்க்க, நேரம் இருந்தால் படிக்கலாம் என்றான உதிரி செய்தி ரகம் அதெல்லாம்.

“சார், முடிஞ்சுதா?”

நிருபர் என்னைப் பார்த்து ஒரு சிநேகிதமான சிரிப்பை உதிர்த்தபடி மேனேஜர் முன்னால் போய் நின்றார். ஃபோட்டோகிராஃபருக்கு அட்வான்ஸ் கொடுத்து உடனே ஃபிலிம் கழுவி பிரிண்ட் போடச் சொல்லி நிருபர் நினைவுபடுத்த அதை உடனே செயல்படுத்தச் சொல்லி கேஷியரிடம் கண்காட்டினார் மேனேஜர்.

இன்னொரு சார்ஜஸ் வவுச்சர். நூறு ரூபாயை கைப்பையில் இருந்து கேஷியர் புகைப்படக்காரருக்குத் தர அவர் வேகமாக உருண்டுகொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் பொறுப்பான பணியாளர் தோற்றத்தோடு கிளம்பிப் போனார். ரிக்ஷாவுக்கும் அப்புறம் தனியாகக் காசு வசூலித்துவிடுவார் என்றார் கேஷியர் என்னிடம்.

“சார், உங்க உதவி வேணும்” மேனேஜரிடம் நிருபர் குழைந்தார்.

“உங்களுக்கும் லோன் வேணுமா என்ன?” வள்ளல் தன்மை மேலோங்கி நிற்க மேனேஜர் கர்ணனாக நல்வார்த்தை உதிர்க்க, நிருபர் இல்லை என்று தலையசைத்தார்.

“எனக்கு லோன் எதுவும் வேணாம் சார், இந்த கூட்ட ந்யூஸை இங்லீஷ்லே மொழிபெயர்த்து கொடுங்க. அதையும் மதுரையிலே கொண்டுபோய் கொடுத்துடுவேன். நாளைக்கே இங்லீஷ் பத்திரிகையிலும் வந்துடும்.”

இந்தக் கடன் விழா செய்திகளைப் படித்து அறிந்து கொள்ளாவிட்டால், இங்கிலீஷ்காரர்கள் சிலருக்கும் மண்டை வெடித்துச் சிதறிவிடக்கூடும்போல. நிருபரை ஆர்வத்தோடு பார்த்தேன்.

“தம்பி இப்போதான் ட்ரான்ஸ்ஃபர்லே வந்திருக்கார். நல்லா மொழிபெயர்ப்பார், பிடிச்சுக்குங்க.”

மேனேஜர் என்னைக் கைகாட்டிவிட்டு நகர்ந்துவிட்டார். “கொஞ்சம் இருங்க” என்று சட்டைப்பையில் இருந்து பொடிமட்டையை எடுத்து ஒரு ஆவர்த்தம் மூக்கில் திணித்துத் தும்மியபடி நிருபர் “சொல்லுங்க சொல்லுங்க” என்றார்.

அவர் நச்சரிப்பு தாங்காமல், ஹெட்மாஸ்டர் இங்லீஷில் சகலவிதமான ஜாக்கிரதையோடும் வெர்ப், நவுன், அட்ஜெக்டிவ் எல்லாம் சரியாக வரும்படியாக யோசித்து அவருக்கு கடன்விழா செய்தியை ஆங்கிலமாக்கிச் சொன்னேன்.

தலையை ஆட்டியபடி கேட்டுவிட்டு, இது நல்லா இருக்கு என்று அபிப்பிராயம் சொன்னார் அவர்.

"எழுதிக் கொடுத்திடுங்க, கண்ணாடி எடுத்து வரலே" என்று ஒரு பழுப்புக் காகிதத்தையும் அவருடைய பழைய பேனாவையும் என் கையில் திணித்தார்.

காகிதத்தின் அந்தப் பக்கம், கோயிலில் தெப்பத்திருவிழா நோட்டீஸும், கீழே தரமான சைவ உணவுக்கு வேம்பத்தூர் ஓட்டல், மேலராஜ வீதி விளம்பரம், உரக்கடை நாடார் வாழ்த்தாக பள்ளிக்கூடத் தமிழாசிரியர் கம்பநாடர் யாத்த பல விகற்ப பஃறொடை வெண்பா என்று இருந்தது.

"இது முடிஞ்சு போன விழா. போன வருஷம் பொங்கல் நேரத்திலே. நிறைய நோட்டீஸ் அடிச்சுட்டாங்க. வீணாக்க வேணாம்னு மிஞ்சினதை எல்லாம் கேட்டு வாங்கிக்கிட்டேன். இப்போ உதவுது பாருங்க" என்றார் நிருபர்.

அரைப் பக்கம் அடித்தல் திருத்தல் வராமல் எழுதி அவரிடம் நீட்டினேன். அவர் முகத்தில் தெரிந்த திருப்தி கிலியடையச் செய்தது. இனிமேல் ஊரில் நல்லது கெட்டது எது நடந்தாலும் அதை எல்லாம் இங்கிலீஷ் உலகத்துக்குத் தெரியப்படுத்தும் பொறுப்பு என் தலையில்தான் உட்காரப் போகிறதுபோல.

எல்லோரும் போனபிறகு பந்தல்காரரும், லௌட் ஸ்பீக்கர்காரரும் நாளைக்கு ஆபீஸில் வந்து வவுச்சர் போட்டுப் பணம் வாங்கிக் கொள்வதாகச் சொல்லி கிளம்பிப் போனார்கள்.

"முடிஞ்சுடுத்தா தோழர்?" பக்கத்தில் இருந்து சத்தம். ஜெபர்சன் வந்து கொண்டிருந்தார். கூடவே ஒரு குருவிக்காரரர்.

“என்ன சார், எங்கே போனீங்க? ஃபங்ஷன்போது காணாம போயிட்டீங்களே...” என்றேன். “இல்லே தோழர், இவர்தான் எண்ணூறு. வீட்டுக்காரம்மா பெயர் ஆயிரம். இவருக்கு ஒரு அவசரம். அதான் கூடவே போயிட்டு வந்தேன்” என்றார் ஜெபர்சன்.

“எங்க பொம்பளே பிள்ளை பெத்தாங்க சார். டாக்டர் அம்மா யாரும் இல்லே. வாத்தியார் பெண்ஜாதி பிரசவம் பார்த்து ஆபரேஷன் செஞ்சுதுங்க.”

எனக்கு சுத்தமாகப் புரியவில்லை. ஜெபர்சன் மனைவி பள்ளிக்கூட ஆசிரியை என்றுதானே சொன்னார். அவர் எதற்கு பிரசவம் பார்த்து, ஆபரேஷனும் செய்யவேண்டும்? அதற்கு எல்லாம் பயிற்சியும் அனுபவமும் வேண்டாமா?

“அது வேற கதை, அப்புறம் சொல்றேன் தோழர். சுருக்கமா சொன்னா தாயும் சேயும் நலம்” என்றார் ஜெபர்சன். “எண்ணூறு, ஆயிரம்னு ரெண்டு லோன் அப்ளிகேஷன் இருக்கும். அதை எடுத்துத் தரீங்களா?” என்று கேட்டார் அவர்.

அப்போதுதான் நினைவு வந்தது, நான் பெயர் படிக்கும்போது இந்த இரண்டு பெயர்களுக்கு மட்டும் யாரும் எழுந்து வந்து காசும் துணியும் வாங்காமல் இருந்தது.

“கேஷ் எல்லாம் கேஷியர் பாக்கி இருந்ததை எடுத்துப் போய் ஸ்ட்ராங்க் ரூமில் வச்சிருப்பார். துணி வேணும்னா ஆபீஸ்லே இருக்கும். இப்போதைக்கு அதை வாங்கிக்கட்டும். பணம் நாளைக்கு வாங்கித் தரேன்.” அவரிடம் சமாதானமாகச் சொன்னேன்.

“இல்லீங்க, லோன் எதுவும் வேணாம். இப்போ அந்தக் காசை வச்சுக்கிட்டு மாலை அது இதுன்னு செஞ்சு வித்து வருமானம் வரப் போறது இல்லே. வீட்டுலே பிள்ளைக்கும் சம்சாரத்துக்கும் கூடவே இருந்து ஒரு ரெண்டு மூணு மாசமாவது பார்த்துக்கணுமாம். லோன் வேணும்னா பின்னாடி வாங்கிக்கறாராம்.”

ஜெபர்சன் சொல்ல தலையை ஆட்டியபடியே இருந்தார் அந்தக் குருவிக்காரர்.

“இன்னும் கிளம்பலியா?” மேனேஜர் வந்தபடிக்கு எங்கள் பேச்சில் கலந்துகொண்டுவிட்டார். எல்லாம் கேட்டிருக்கிறார் அவர்.

“உண்மையைச் சொல்லணும்னா, இந்தக் கடன் எதுவும் வசூல் ஆகும்னு நம்பிக்கை இல்லே. ஒரு உதவியாகத்தான் செஞ்சிட்டிருக்கோம். இதை அதிகாரபூர்வமா சொல்ல முடியாது. ஆனாலும் எல்லோருக்குமே தெரியும். திரும்பித் தரணும்னா எம்.பி எதுக்கு வந்திருக்கப் போறார். ஆர்டிஓ எதுக்கு கூடவே நிக்கப் போறார். இந்த ஐநூறு ரூபாயை வச்சு உங்க எதிர்காலம் நல்லா ஆகப் போறதுன்னு சொல்றது எல்லாம் ரொம்ப அதிகம். ஆனாலும் ஆடிக்கிட்டிருக்கோம். எல்லோரும் நாடகம் ஆடறோம்னு தெரிஞ்சுதான் ஆடறோம். நீயும் கூடவே ஆடலாம், காசை வாங்கிக்க. அதை திரும்ப வவுச்சர் போட்டு உள்ளே வைக்கணும். வீண் வேலை.”

மேனேஜர் சொன்னார். அவரால் இவ்வளவு கோர்வையாக நிலைமையைச் சொல்ல முடிந்ததில் சந்தோஷம்.

“இப்போ வேணாம் சாமியோவ். இருபது, பள்ளிக்கூடத்துலே படிப்பான். அப்போ தேவையின்னா கேட்டு வாங்கிக்கறேன்.”

சிரித்தார் எண்ணூறு என்ற அந்தக் குருவிக்காரர்.

“இருபதுன்னா?” நான் கேட்டேன்.

“பிறந்திருக்கற பிள்ளை. இருபது அம்சத் திட்டம் பேரை வச்சுட்டார்” என்றார் ஜெபர்சன்.

அத்தியாயம் 7

## டிசம்பர் 1975

‘போ த்தி.’

கவுண்டரில் உட்கார்ந்து, சேமிப்புக் கணக்கு லெட்ஜர்களைத் தூக்கி, எழுதி வவுச்சரை செருகி சர்க்கஸ் நடத்திக் கொண்டிருந்தேன். மாதத்தின் முதல் வேலை நாள் என்பதால் கூட்டம் எக்கச்சக்கமாக இருந்தது. மின்சார இலாகா பென்ஷன் வாங்கும் முதியவர்களும், ரிடையர் ஆன பள்ளிக்கூட வாத்தியார்களுமாக நிறைந்த இடத்தில் அனாதை பென்ஷன், தியாகி பென்ஷன், குடும்ப பென்ஷன் இப்படி மற்ற வகை பென்ஷன்காரர்களும் உண்டு. ஒரு பொய்க்கால்குதிரை ஆட்டக்காரரும் கலைஞர் பென்ஷனில்.

நேற்றைக்கு விடுமுறை என்றாலும் ஆபீஸுக்கு வந்து பென்ஷன் வவுச்சர் எல்லாம் போட்டு லெட்ஜர்களிலும் பதிந்து வைத்துவிட்டேன். மேனேஜர் பார்த்துவிட்டு கையெழுத்தை அங்கங்கே போட்டுவிட்டால் போதும். அடுத்த ஒரு மாதத்துக்கு கவுண்டருக்கு அந்தப் பக்கம் இவர்களும் இந்தப் பக்கம் நாங்களும் சிரமம் இல்லாமல் நாளைக் கடத்துவோம்.

“சாமிகளே, கொஞ்சம் உக்காருங்க, கூப்பிடுவாங்க” மெசஞ்சர் பழநி, அன்பு கொஞ்சம் அலுப்பு கொஞ்சமாகச் சொல்லிக் கொண்டிருந்தவரைப் பார்த்ததும் சிரிப்பு வந்துவிட்டது. எதுக்கு சிரித்து எல்லார் கவனத்தையும் கவர? நான் சேவிங்ஸ் பேங்கில் வரவு செலவு செய்வதில் மும்முரமானேன்.

‘போத்தி.’

மறுபடி கிசுகிசுவென்று குரல். யாரையும் காணோம்.

“சாமிகளே, பாஸ்புக் கொடுத்திருக்கீங்களா? பென்ஷனை தம்பி வரவு வச்சிடுவார். பெயரைச் சொல்லுங்க.”

பழநி கேட்க, வந்தவர் “அப்துல் ஹமீது” என்றார். பழநியின் முகத்தைக் குறிப்பாகப் பார்த்தேன். திறந்த வாய் ஒரு வினாடி மூடாமல் அந்த ஆச்சரியத்தை உள்வாங்கியபடி சிரித்தார்.

“பாய், சாமின்னு இல்லே நினைச்சுட்டேன் உங்களை” என்றார் பழநி.

அவருக்கு மட்டுமில்லை, முதல் தோற்றத்தில் எல்லோருக்கும் அப்படித்தான் தெரிவார் அப்துல் ஹமீது. வழுக்கைத் தலையும், பட்டை மூக்குக் கண்ணாடியும் எடுப்பான நாசியும் தாடி, மீசை இல்லாமல் மழுங்கச் சிரைத்த முகமும் அவருக்கு ஒரு ஐயங்கார் வக்கீல் களையைக் கொடுத்திருந்தன.

அவராகப் பெயரைச் சொல்லாதவரை, பழநிக்கும், அறிமுகம் ஆகாத மற்றவர்களுக்கும் அவர் யாரோ ஐயங்கார் சுவாமிகள்தான். எலக்ட்ரிசிட்டி போர்டில் தலைமை எழுத்தராக இருந்து ரிடையர்மெண்ட் வாங்கிக்கொண்ட சாத்விகமான ஐயங்கார் ஜாடை மனுஷர் அவர்.

யாரோ “போத்தி” என்றபடி பின்னால் இருந்து சட்டையைப் பிடித்து இழுக்க, கையில் லெட்ஜரோடு அவசரமாகத் திரும்பினேன். ஐந்து வயது இருக்கும் சின்னஞ்சிறுமி. கொஞ்சம் அழுக்கான கவுனும் கண்ணில் குறும்புச் சிரிப்புமாக அவள்தான் ‘போத்தி’ என்று பின்னால் இருந்து கூப்பிடுகிறாள்.

“யார் நீ பாப்பா? ஆபீஸுக்குள்ளே எல்லாம் வரக்கூடாது. பள்ளிக்கூடம் போகலியா?” நான் அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக்கேட்டேன்.

“இன்னிக்கு ஸ்கூல் இல்லே. டீக்கடையிலே இருக்கச் சொல்லிட்டாரு அப்பா” அவள் சொன்னாள். மாயழகு டீக்கடைப் பையன் ட்ரே நிறைய டீயோடு வந்தபோது, “பாப்பா, வா, இதை சார் கிட்டே கொடு” என்றான் அவளிடம், என்னைக் காண்பித்து.

“மீசை மாமா வாசல்லே நிக்கறாரு.”

டீயை ஜாக்கிரதையாக கவுண்டரில் வைத்தபடி சொன்னாள் அவள். எழுந்து பார்த்தேன். வெளியே ஜெபர்சன்.

எதிரே, பணம் எடுக்க வித்ட்ராயல் ஸ்லிப்பும் பாஸ்புக்குமாக நின்ற இரண்டு பேரிடம் அவற்றை வாங்கி, டோக்கன் கொடுத்து, டோக்கன் நம்பரை ஸ்லிப் பின்னால் எழுதி, வட்டம் போட்டு டோக்கன் தாங்கிக்குக் கீழே பாதுகாப்பாக வைத்துவிட்டு எழுந்தேன்.

“இதோ வந்துட்டேன்” என்று நான் சொன்னபோது ஜோக்கைக் கேட்டதுபோல் அங்கே நின்றவர்கள் சிரித்தார்கள். இது மரியாதையைத் தெரிவிக்கும் சிரிப்பு. ‘பரவாயில்லே, நாங்க பத்து நிமிஷம் நிக்கறோம். நீ போய் ஒண்ணுக்கு ரெண்டுக்கு இருந்துட்டு வா, இல்லே ஒரு சிகரெட் பத்த வச்சு இழுத்துட்டு வா’ என்று சலுகை காட்டும் சிரிப்பு இது. நான் சொல்லாமல் போனாலோ, இவர்கள் சிரிக்காமல் இருந்தாலோ மரியாதைக் குறைவாகக் கருதப்படும்.

வாசலில் பொறுமை குறைவாக நடை பயின்றபடி இருந்தார் ஜெபர்சன். கையில் குடை ஆயுதம்போல ஏறி இறங்கியது.

“என்ன தோழர், அவசரமா ஏதாவது வேலை இருக்கா?” கேட்டேன்.

யாருக்காவது இருபதம்சத் திட்டத்திலோ ஐந்தம்சத் திட்டத்திலோ வருகிற மாதிரி டி ஆர் ஐ கடன் கேட்டு வந்திருக்கிறாரோ. நாலே சதவிகித வட்டி இந்திரா காந்தி பெயரைச் சொல்லி, கடன் பணம் ஆயிரம் ரூபாய் வரை அதே அம்மையாரை வாழ்த்தி. கடையே வைக்காத கடைக்காரர்கள், எந்தத் தொழிலும் தெரியாத சிறுதொழில் முனைவோர்கள், விவசாயத்தின் பக்கமே போகாத நகர்ப் புறத்தில் லுங்கியை தொடை வரை வழித்துக் கட்டிக்கொண்டு திரிகிற லும்பன்கள் இப்படி யார்யாரோ வாங்கிப் போக, தேவையானவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது மிகக் கம்மியாகத்தான். சொன்னால் சோவியத் பிரதமருக்குக்கூட தரலாம்தான். ஆனால் அது ஜெபர்சன் தோழர் சொல்லி இல்லை. அதற்கு வேறு கெட்-அப்பில் வரணும்.

ஆனாலும் பெரிய பெரிய முதலாளிகளுக்கும், கம்பெனிகளுக்கும் கொடுத்து வசூல் நிலுவை இருக்கும் கோடிக்கணக்கான ரூபாய் கடன்களோடு ஒப்பிட்டால், அது மலை, இது சின்னக் கூழாங்கல்.

“இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு நம்ம பசங்களுக்கு மலையாளம் கிளாஸ் எடுக்கணும் தோழர். நேரம் சரிப்படும்தானே... வேற வேலை வச்சிக்கலியே அந்த டைம்லே?” ஜெபர்சன் ரகசியம் பேசுகிற குரலில் கேட்டார்.

பத்துப் பேரை உட்கார்த்தி மலையாளத்தில் அ, ஆ சொல்லிக் கொடுக்க இத்தனை ரகசியமாக ராத்திரி பத்து மணிக்கு வகுப்பு நடத்தவேண்டியது என்னத்துக்காக?

“நீங்க பத்து, பத்தரை மணிக்கு எடுத்தா, தொடர்ந்து நான் அவங்களுக்கு பனிரெண்டு மணிக்கு டயலடிக்ஸ் க்ளாஸ் எடுக்கலாம்” அவர் சீரியஸாகச் சொன்னார்.

டயலெடிகல் மெட்டீரியலிஸம் என்ன மந்திரவாதமா, குட்டிச் சாத்தான் வழிபாடா, நடுராத்திரிக்கு ஆரம்பித்து நடத்த?

“வகுப்பு எடுக்கறது எமர்ஜென்சி காலத்துலே வீணா கஷ்டத்தை வரவழைச்சுக்கறதுதான். அதான் யாருக்கும் சந்தேகம் வராம ராத்திரி அதை நடத்தறது” என்றார் அவர்.

மலையாளம் என்ற வெண்ணெயை வைத்து என்மூலம் ஒருசில புதுக் கொக்குகளைப் பிடித்து டயலெடிக் மெடீரியலிஸக் குளத்தில் விட அவருக்கு உத்தேசமாக இருக்கலாம்.

மலையாளம் சொல்லிக் கொடுப்பதில் என்ன சட்ட விரோதம் என்று கேட்டேன். பதில் இல்லை. சட்ட விரோதம்தானோ?

“சரி, ராத்திரி பார்ப்போம்.”

அவர் வேறே எதுவும் சொல்லாமல் போய்விட்டார். கவுண்டருக்கு நான் திரும்பியபோது இன்னும் நான்கு பேர் கையில் வித்ட்ராயல் ஸ்லிப்போடு நின்றார்கள். ஒவ்வொருத்தருக்கும் தொகை எவ்வளவு என்று எழுதிக்

கொடுத்து, கையெழுத்து வாங்கி டோக்கன் கொடுத்தேன். இவர்களில் யாராவது ராத்திரி வகுப்புக்கு வந்து மலையாளம் படிப்பார்களா?

“மேனேஜர் கூப்பிடறார்” என்று சுபச் செய்தி கொண்டுவந்தார் ஸ்வீப்பரம்மா.

கூட்டிப் பெருக்கி மெழுகுவதோடு அவரை இப்படி அவ்வப்போது தூதுவர் பணிக்கும் பயன்படுத்திக் கொள்வதை ப்ராஞ்ச் செக்ரட்டரியான கேஷியர் கருப்பையா கண்டிப்பார் என்று எதிர்பார்த்தேன். அவரே அந்தம்மாவைத்தான் வெற்றிலை பாக்கு வாங்கி வர அனுப்புகிறார். நாலு வெற்றிலை எடுத்துக்கொள்ள அவர் அனுமதிப்பதால், சௌந்தரம்மாவும் கேஷியர் கொடுத்த வேலையை சடுதியில் செய்துவிடுகிறார். மேனேஜர் சொல்வது அதற்கு அடுத்தாற்போல கேட்கவேண்டியது.

“உங்க ஸ்கூட்டர் வந்து சேர்ந்துடுச்சு இல்லையா?” மேனேஜர் கேட்டார். ஆமா என்று தலையாட்டினேன். ஓடுதா என்று கேட்டார். பறக்குது என்றேன்.

என் ஸ்கூட்டர் ஒரு வாரம் முந்தி அங்கங்கே நசுங்கலோடு வந்து சேர்ந்து உள்ளூர் ஆட்டோ மெகானிக் வாசுவின் ஒர்க்ஷாப்பில் விட்டு, தட்டிக் கொட்டி ஒரு மாதிரி ஓட ஆரம்பித்திருந்தது.

மெட்றாஸ் தெருக்களில் நெரிசலிலும் தூசியிலும் ஓடிய அந்த ஸ்கூட்டர் கப்பி ரோடிலும் செம்மண் தரையிலும் ஓடப் பழகிக் கொண்டிருந்தது. நாய் ஓடி வந்து மூச்சு வாங்க இளைக்கிற மாதிரி அரை மணி நேரம் ஓடினால் வேகம் குறைந்து எவ்வளவு த்ராட்டில் கொடுத்தாலும் பிக் அப் கம்மியாகவே இருந்தது. ஆனாலும் மேனேஜருக்கு அந்தத் தகவல் எல்லாம் எதுக்கு?

“சரி, நாலு மணிக்கு ஷட்டரை இறக்கிட்டு வண்டியை எடுங்க. நாட்டுக்கோட்டை போயிட்டு வந்துடலாம்.”

அவர் கரண்ட் அக்கவுண்ட் செக் ஒவ்வொன்றாக எடுத்து ஓரமாக இனிஷியல் போட்டு ரவீந்திரனிடம் கொடுக்கச் சொன்னார். அவரைத் தவிர எல்லோரும் மெசஞ்சர் வேலை பார்க்கிற வங்கிக்கிளை இது.

ஆக, இன்றைக்கு சாயந்திரம் ஆபீஸ் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது. இவரைக் கூட்டிக்கொண்டு எங்கேயோ போய் யாரையோ பார்த்துவிட்டு வரவேண்டும். இருபது அம்சத் திட்டமாகத்தான் இருக்கும். என்ன மாதிரி கடனோ... எத்தனை பேருக்குத் தரவேணுமோ.

நான்கு மணி அடிக்க பத்து நிமிஷம் முன்னால் சகாக்கள் ரவீந்திரனும் கேஷியர் கருப்பையாவும் புறப்பட்டார்கள்.

“பங்காளி, நாங்க பஸ்ஸை பிடிச்சு வரோம். நீங்க உங்க புஷ்பக ரதத்துலே மிதந்துக்கிட்டு மேனேஜரோடு டூயட் பாடிக்கிட்டு வாங்க. எல்லாரும் சேர்ந்து பக்கெட் வாங்கிட்டு வந்துடலாம்.”

ரவி சொன்னது அட்சரம் புரியவில்லை.

“கிளம்பலாமா? நான் நேரா உக்காந்து வரணுமா, சைடிலே உக்காரலாமா?”

மேனேஜர் கேட்டார். அவருக்கு தாட்டியான சரீரம். சைடில் உட்கார்ந்தால் எனக்கு பேலன்ஸ் பண்ணுவது சிக்கலாகலாம் என்று எப்படித் தெரிவிப்பது என்று யோசித்தபடி சாவியைப் போட, ஒரே உதையில் லாம்ப்ரட்டா சீறிக்கொண்டு புகை கக்கி ஸ்டார்ட் ஆனது.

ஜாக்கிரதையாக ஸ்டாண்ட் நீக்கி அமர்ந்து மேனேஜரைப் பார்த்துப் புன்னகைத்தேன். அவர் நேரே உட்கார்ந்துகொண்டு “எதிர்க் காத்துலே வேகமா போயிடும்” என்றார்.

எந்தக் காத்தாக இருந்தால் என்ன? எங்கே போகிறோம்?

“நாட்டுக்கோட்டையிலே சுப. கண வீட்டுலே கல்யாணம். அவங்க மகனுக்கு பிள்ளையார்பட்டி கோயில்லே பட்ட குடும்பத்துலே பொண்ணு எடுத்திருக்காங்க. ஒரே நோட்டீஸா கொடுத்தாங்க. உங்களுக்கு சர்க்குலேட் பண்ண மறந்துடுச்சு.”

மேனேஜர் மன்னிப்புக் கேட்டபடி அரண்மனை வாசலுக்கு ஓட்டச் சொன்னார்.

மதுரை பஸ் வந்து கெத்தாக நிற்க பலாச்சுளையும், நுங்கும், காராபூந்தி பொட்டலமும் விற்கிற பையன்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்கள். தொண்டியில் இருந்து வரும் பஸ் அது. இன்னும் ஒண்ணேகால் மணி நேரத்தில் மதுரைக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

“சார், ரிசர்வ்லே வந்திருக்கு. பெட்ரோல் போட்டுக்கலாமா?”

வண்டி மெதுவாக நகர, நான் நிறுத்தியபடி கேட்டேன். “பேஷா, அது ஆபீஸ் கணக்கிலே வரட்டும்” என்றார் அவர்.

ரிசர்வ் அடைப்பைத் திறந்து வண்டியை ஓட்டிப்போய் நிறுத்தியது ‘அன்னை இந்திரா பெட்ரோல் விற்பனை’ நிலையத்தில்.

ஆர்.டி.ஓ ஆபீஸ் ஜீப் டீசல் போட்டுக்கொண்டு நகர்ந்து போனது. ஜெர்ரி கேன் கோப்பைகளில் மோட்டார் மெக்கானிக்குகள் இரண்டு பேர் பெட்ரோல் அளக்கச் சொல்லி வாங்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். பெட்ரோல் பங்க் நிர்வாகி பென்சிலைத் தின்றபடி ஏதோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

“எப்போ சார் ஸ்கூட்டர் வாங்கினீங்க? ட்ரைவரும் போட்டுட்டீங்கபோல.”

மேனேஜரிடம் குசலம் விசாரித்தார் நிர்வாகி குலசேகரன். அவருடைய எட்டு பிள்ளைகள் நான் பள்ளியில் படித்த காலத்தில் வெவ்வேறு வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவருக்கு ‘பங்குத் தந்தை’ என்று பட்டப்பெயர் ஏற்பட அவர்களும், பெட்ரோல் பங்கும் காரணம். ஆனாலும் இப்படியா, என்னை ட்ரைவர் ஆக, அதுவும் அல்பமாக ஸ்கூட்டர் ட்ரைவராக ஆக்கிவிட வேணும்.

“இல்லே முதலியாரே, இவர் பேங்குலே வேலை பார்க்கறவர். மெட்றாஸ்லே இருந்து ட்ரான்ஸ்ஃபர்லே வந்தவர். இந்த ஊர்க்காரர்தான்.”

பெட்ரோல் போட்டு முடிப்பதற்குள் குலமுறை கிளர்த்தல், ஸ்கூட்டர் பற்றிய விசாரிப்பு, எத்தனை வயது வரை ஓட்டப் படிக்கலாம் என்பது பற்றி ஆலோசனை என்று தகவல் சேகரிப்பை அவர் வெற்றிகரமாக நடத்தினார்.

“ஏயப்பா, தங்கம் மாதிரியில்லே பெட்ரோல் விலை ஏறுது” என்றார் மேனேஜர் சட்டைப் பையில் இருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்தபடி. லிட்டர் மூணு ரூபாய், முப்பது காசு என்று கரும்பலகை சொன்னது.

“போன மாதம் ரெண்டு ரூபா, தொண்ணூறு காசுதான் வித்தது” என்றார் மேனேஜர்.

“என்ன பண்ணச் சொல்றீங்க சார், கவர்மெண்ட் விக்கச் சொன்னா விக்கறோம். சும்மா குடுக்கச் சொன்னா, ரெண்டு நாளைக்கு கொடுத்திட்டு கடையை கட்டறோம். கீழ்ப்படியலேன்னா உள்ளே தூக்கிப் போட்டுடுவாங்கபோல. என்ன நெருக்கடியோ என்ன இருபதம்ச திட்டமோ...” அங்கலாய்த்தார்.

அவரை மேலும் பேசவிடாமல் வண்டியைக் கிளப்பினேன். ஓரமாகப் போய்க் குத்த வைத்திருந்த மேனேஜர் அவசரமாக வந்து பின்னால் உட்கார்ந்தார். “சரி இனிமே நிக்க வேண்டாம்” என்று அவர் சொல்ல சீறிப் பாய்ந்தது வண்டி.

“காலையிலே கல்யாண முகூர்த்தத்துக்கு போகலியே சார், இப்போ போய் பார்த்தா ஒண்ணும் குறைப்பட்டுக்க மாட்டாங்களா?”

வண்டி ஓட்டியபடியே கேட்டேன்.

“மதியம் ஆச்சி போய்ட்டு விருந்தும் ஏக தடபுடலா சாப்பிட்டு வந்துடுச்சு. இது ஆபீஸ் வேலைக்கு நாம போறது” என்றார் மேனேஜர் எதிர்க் காற்றில் குரல் மெல்ல ஒலிக்க. பின்னால் இருந்து பாம்பாம் என்று கார் சத்தம்.

ரோட்டில் இத்தனை இடம் ஒழித்துக் கொடுத்துத்தான் ஓட்டிப் போய் ஆகிறது. எதற்காக பின்னால் இருந்து ஹாரன் அடித்து கஷ்டப்படுத்தணும்?

அந்த அம்பாசடர் கார் என்னைத் தொடர்ந்து மெல்ல வந்தது. நான் ஓரமாக ஒதுங்கி நிறுத்த உள்ளே இருந்து கண்ணாடியை விலக்கி, “அண்ணாச்சி, கல்யாணத்துக்கா?” என்று கேட்டவரை எனக்கு போட்டி

கம்பெனியான வேறொரு அரசுடமை வங்கி மேனேஜர் என்று தெரியும். பங்காளிகள் பகையாளிகளாக தொழில் முறையில் இருந்தாலும், சொந்த வாழ்க்கையில் உறவு. நட்பு.

“இடம் இருக்கு, வரீகளா அண்ணாச்சி?” அந்த மேனேஜர் கேட்டார். அப்படி அங்கே ஒண்ணும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை. பின் சீட்டில் நான்கு பேர் எப்படியோ கரணம் போட்டு உட்கார்ந்திருந்ததாகத் தோன்றியது.

“நம்மாளு ஒருத்தர் தம்பி கூட ஸ்கூட்டர்லே வரட்டும், நீங்க இங்கே வாங்கண்ணேன்.”

திரும்ப உபசார வார்த்தை வர, அன்போடு வேண்டாம் என்று மறுத்தார் இவர்.

“போய்க்கிட்டு இருங்க. வந்துடறோம்” என்றார்.

“சரி, சித்தம் போக்கு, வாங்க. ஆனா, நீங்க வந்து சேராம சாப்பாட்டுலே கை நனைக்க மாட்டோமில்லே.”

இரண்டு மேனேஜர்களும் அவ்வளவு ரசித்துச் சிரித்த காரணம் புரியவில்லை. ஊருக்குள் நுழைந்து வெள்ளை மண் பரவிய பரந்த வெளியில் ஃபுல் த்ராட்டில் கொடுத்து பிரயத்தனப்பட்டு ஓட்டி, ஊருணிக்கரையில் ஜாக்கிரதையாக ஏறி, சர்க்கஸ்காரன்போல வண்டி விட்டுப்போய், இரண்டு காலும் பரப்பி, புதிதாக ஸ்கூட்டர் பழகுகிறவர்கள் மாதிரி காலைத் தேய்த்து நகர்ந்து, கூழாங்கல் கிடந்த பாதையில் முடிந்த மட்டும் அதைத் தவிர்த்து வண்டியைச் செலுத்தி ஒரு வழியாக சுப.கண என்ற சுப்பையா செட்டியார் மகன் கண்ணப்பச் செட்டியார் வீட்டுக்கு வந்தோம்.

வீடா அது, அரண்மனை. நிமிர்ந்து பார்த்தால் முதல் மாடி என்று தோன்றுகிற உயரத்தில்தான் வாசலே இருந்தது. அதை அடைய பத்து விசாலமான படிகள்.

“ஏதோ காலத்துலே காவிரிப்பூம்பட்டிணத்துலே கடல் தண்ணி வீட்டை அழிச்சு, நாங்க எல்லாரும் இங்கே வந்த பரம்பரை. தண்ணி காணாத

இங்கேயும் கடல் தண்ணி வராம அத்தனை உசரத்திலே வாசல் வைக்கிறோம்."

மேனேஜர் என் சந்தேகத்தைப் புரிந்துகொண்டவராக விளக்கினார். ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு எங்கே நிறுத்தினாலும் புதை மணலில் அது சரிய, மேலே இருந்து பார்த்த நான்கைந்து பேர் ஓடி வந்து வண்டியை உருட்டிப் போய் ஒரு பெரிய மேட்டில் விட்டார்கள்.

ஒரு பழைய மோட்டார் சைக்கிள் அங்கே நின்றது. "ஜெபர்சன் வாத்தியார் வண்டி அது" என்றார் அவர்களில் ஒருவர். வாத்தியாரிடம் ராத்திரி மலையாளம் கிளாஸ் எடுப்பதாக வாக்குறுதி கொடுத்தது நினைவு வந்தது.

இந்தக் கல்யாண விசாரிப்பு சீக்கிரம் முடிந்து வகுப்பு எடுக்க உட்கார வேண்டும். முதல் நாள் என்பதால் அ, ஆ, இ, ஈ, நமஸ்காரம், வரு, இரிக்கு... இப்படி சுலபமாக எடுத்தோதிவிட்டு ஏறக் கட்டிவிடலாம் என்று அவசரத் திட்டம் போட்டபடி உள்ளே போனேன்.

ரவீந்திரன் கையில் பெரிய ரசீது புத்தகத்தை வைத்துக்கொண்டு வாங்கோ என்று வரவேற்றார். நன்கொடை வசூலா என்று விசாரித்தேன்.

"அது எதுக்கு நன்கொடை, இது ஃபிக்ஸட் டெபாஸிட் ரசீது புத்தகம்."

"அதை எதுக்கு எடுத்து வந்தீங்க?" என்று புரியாமல் கேட்டேன்.

"கல்யாண அன்பளிப்பு பணமா வந்திருக்கு இல்லே. அதை பேங்குலே மாப்பிள்ளை-பொண்ணு பெயர்லே ஃபிக்ஸட் டெபாசிட் போட்டுடுவாங்க. அந்தப் பணத்தை எண்ணி வாங்கி கேஷியர் கருப்பையா ஸ்ட்ராங்க் ரூம்லே வச்சுட்டு வீட்டுக்கு போவார், நாம ரசீது எழுதி, மேனேஜர் கையெழுத்தோடு கொடுத்துட்டு எல்லாருமா சாப்பிட்டு வருவோம்."

அவர் பொறுமையாக விளக்கினார். தொழில்முறை உறவும், சமூக வாழ்க்கையும், குடும்பத் தோழமையும் ஒன்று கலந்த சூழ்நிலை அது. தெற்குச் சீமைக்கே சொந்தமான அக்கறையும் பிரியமும் ரசனையும் சேர்ந்தது.

“அவங்களும் வந்திட்டிருக்காங்க” என்று போட்டி பேங்க் பெயரைச் சொன்னேன். “அவங்களுக்கும் இதே மரியாதை எல்லாம் உண்டு. நீங்களே பார்க்கலாம்” என்றபடி மேனேஜர் உள்ளே போனார்.

யாராரோ சலிக்காமல் ஒவ்வொருவராகப் பார்த்து, சிரித்து ‘வாங்க’ என்று வாசலில் நுழையும் ஒவ்வொருவரையும், குழந்தைகள் உட்பட தனித்தனியாக வரவேற்றார்கள். மேனேஜர் அப்படி அழைத்த ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ‘ஆமா’ என்று வரவேற்பை அங்கீகரித்தார்.

நாங்களும் ஆமா சொல்லியபடி உள்ளே போக, மெட்றாஸ் ஃபிலிம் ஃபெஸ்டிவல் ஜப்பானியத் திரைப்படங்கள் நினைவு வந்தன. குனிந்து வளைந்து பொறுமையாக வரவேற்று நன்றி சொல்லும் சமூகம் அது.

“ஒரு பத்து நிமிசம் காத்தாட உக்காருங்க. சின்னப் பிள்ளைங்க பலகாரம் தின்னுக்கிட்டிருக்கு.”

பழுத்த பழமாக ஒரு ஆச்சி இரண்டு கையும் குவித்து வணங்கி வாசல் பந்தலில் உட்காரக் கைகாட்டினாள். கூடவே வந்த முதியவர் அவுக வீட்டுக்கார செட்டியாராகத்தான் இருப்பார்.

“பள்ளிக்கூடம் முடிச்சு வெளயாடிட்டு பிள்ளைங்க வந்து சேர கொஞ்சம் சொணங்கிடுச்சு. இதோ பலகாரம் தின்னு முடிக்கற நேரம்தான்.”

செட்டியாரும் மன்னிப்புக் கேட்கும் தொனியில் சொல்ல, மேனேஜர் கைகாட்டி ஆதரவாகக் கூறினார்:

“அதுக்கென்ன, ஆபீஸெல்லாம் எடுத்து வச்சுட்டுத்தான் வந்திருக்கோம். நேரம் சென்னா ஒரு கயிஷ்டமும் இல்லே... அய்யா நீங்க?”

“நான் சொக்கலிங்கம். சூரத்திலே சொக்கு ஃபைனான்ஸ்னு லேவாதேவி கடை வச்சிருக்கேன். சுப.கண அவுகளுக்கு அண்ணன்முண்டி உறவு நம்ம ஆச்சி.”

“அப்படியா? நான் பேங்கு ஏஜெண்ட்.”

பரஸ்பர அறிமுகம் முடிந்ததும் மேனேஜர் கேட்டார், "சூரத் எல்லாம் எப்படி இருக்கு?"

"ஏன் கேக்கறீங்க, கயிஷ்டப்படறவன் கயிஷ்டப்பட்டுட்டுத்தான் இருக்கான். சுகப்படறவன் சுகமாத்தான் இருக்கான். இங்கே அதிகாரத்திலே இருக்கறவங்க கொஞ்சம் இதமா பதமா நடந்துப்பாங்க. அங்கே அப்படி இல்லே. அதான் வித்தியாசம். இப்படி நல்லபடிக்கு ஊரை அழச்சு சிறுசு பெரிசுன்னு பார்க்காம கல்யாணத்துக்கு விருந்து வைக்கறது அங்கே கொஞ்சம் கயிஷ்டம். ஏற்கெனவே அப்படித்தான். எமர்ஜென்சியிலே கூடியிருக்கு."

அவர் சொன்னது எனக்குப் புதிய விஷயமாக இருந்தது. வீட்டு விசேஷம் என்று என்ன நடத்தினாலும் இருபத்தைந்து பேருக்கு மேல் கூப்பிட்டு விருந்து வைக்க தடை இருக்கிறதாம். நாடு முழுவதற்குமான தடை என்றாலும் அவர் மாநிலத்தில் அவ்வப்போது அதை நடப்பில் கொண்டுவருகிறார்களாம். கல்யாண விருந்து எதுவும் ஓஹோ என்று நடக்கிறதில்லையாம். ஏற்கெனவே எமர்ஜென்சிக்கு நூறு கோணல். இதுவும் அதிலே சேர்கிறது என்று சிரித்தார் சொக்கு செட்டியார்.

"கோதுமை, அரிசி, சர்க்கரை எல்லாத்துக்கும் தட்டுப்பாடு இருந்த சீன யுத்த காலத்துலே கெஸ்ட் கன்ட்ரோல் ஆக்ட் வந்தது, அடுத்து பங்களாதேஷ் யுத்தம் முடிஞ்சு இப்போ எமர்ஜென்சியிலும் அது உண்டு. நிலைமை முன்னைக்கு இப்போ எவ்வளவோ பரவாயில்லே, ஆனாலும் சட்டம் இன்னும் இருக்கு. தெற்கிலே அதை பொதுவா அமல் படுத்தறதில்லே. கிழக்கிலே வங்காளத்திலும் அப்படித்தானாம். தில்லியிலே கூட கிட்டதட்ட அதான் கதை. ஆனா மேற்கிலே என்னமோ அப்படி இல்லை."

பள்ளிக்கூடக் குழந்தைகள் சாப்பிட்டுப் போனபின் ஈரம் உலரும் ஹாலில் வரிசையாக இலை போட்டுக் காத்திருந்தார்கள்.

போட்டி வங்கி சகாக்களும் நாங்களும் ஒரே பந்தியில் இருந்து சாப்பிட்டோம். இனிப்பு, கந்தரப்பம், வெள்ளைப் பணியாரம், சொதி,

இட்லி, உளுந்து வடை என்று அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்க, ஓடி ஓடி உபசரித்தார்கள்.

“கேட்டுப் போடுங்க... கேட்டுப் போடுங்க” என்று பரிமாறுகிறவர்களிடம் சதா சொல்லிக்கொண்டு சொக்கு செட்டியார் பந்திவிசாரிப்பு செய்தபடி நடந்தார். எதுவும் வீணாகாமல் இருக்க வேண்டும் என்ற கரிசனம் தெரிந்தது.

பசியாறிய பிறகு பூவும் மஞ்சள் அரிசியும் இரைந்து கிடந்த பெரிய ஹாலில் நான்கைந்து பெரிய பத்தமடைப் பாய்கள் விரிக்கப்பட்டன. நாங்கள் ஒரு பக்கமும், எதிரில் மற்ற பேங்க் கூட்டமுமாக உட்கார்ந்தோம். சம்பந்திகள், கல்யாணத் தம்பதி அடுத்து வந்து நடுவே உட்கார்ந்தார்கள். ஒரு நாற்காலியும் இல்லாத சூழல் அது. எல்லோரும் தரையில்தான் கால் மடித்து உட்கார்ந்திருந்தோம்.

மணமக்களுக்கு வாழ்த்து, நன்றி என்று சாங்கோபாங்கமாக பத்து நிமிடம் போக, மேனேஜர்கள் இரண்டு பேரும் கொண்டுவந்த பரிசுப் பொருட்கள் அவர்களுக்குத் தரப்பட்டன. இரண்டு மேனேஜர்களுமே ஆளுக்கு நூற்று ஒரு ரூபாய்க்கு கிஃப்ட் செக் உருட்டி உருட்டி எழுதி பெரிய கட்டைப் பேனாவால் கையெழுத்து போட்டு மங்கிய பூப்போட்ட கவர்களில் பேங்க் முத்திரையோடு எடுத்து வந்திருந்தார்கள். அங்கே குவிந்திருந்த பரிசுப் பொருட்களைப் பார்க்க, இது ஒன்றுமே இல்லை என்று தோன்றியது.

மரியாதையோடு எழுந்து நின்று எங்கள் கைதட்டலுக்கு இடையே மணமக்கள் கிஃப்ட் செக்குகளை வாங்கி, முகத்தில் மகிழ்ச்சியைக் காட்டி, பெரியவர்களிடம் கொடுத்துவிட்டு திரும்ப வணங்கி உள்ளே போனார்கள்.

“இனிமேல்தான் விசேஷம்” என்றார் கேஷியர் கருப்பையா. ‘சோ.நா.அரு. தங்கநகை வியாபாரம், கோலாலம்பூர்’ என்று போட்ட மஞ்சள் துணிப்பைகளோடு உள்ளே இருந்து இரண்டு வீட்டு மூத்த பெண்மணிகளும் வந்தார்கள். நிறைந்து வழிந்த துணிப்பைகள் அவை.

பொதுவில் அந்தப் பைகளைக் கவிழ்த்துக் கொட்டி ஆளுக்குக் கொஞ்சமாக எண்ணி தொகை சொல்லி வீட்டுப் பெரியவர் சொக்கு செட்டியாரிடம் ஒப்படைத்தோம். ஐந்தே நிமிடத்தில் அதெல்லாம் எண்ணப்பட்டு மொத்தத் தொகை கணக்கிடப்பட்டது. சரிசமமாக இரண்டாக அது பிரிக்கப்பட்டது.

“இப்பதிக்கு ஒரு வருஷம் ரெண்டு பேரும் ஃபிக்சட் டெபாசிட்லே போட்டுக்குங்க.”

மேனேஜர் கேஷியரிடம் “கல்யாணப் பத்திரிகை கொண்டுவந்திருக்கீகதானே?” எனக் கேட்க, நான் விழித்தேன். கல்யாண வீட்டுக்குப் போக கல்யாணப் பத்திரிகை எதற்கு அட்மிஷன் கார்டுபோல. அதற்குள் போட்டி பேங்க் மேனேஜர் அவர் கைப்பையில் இருந்து ஒரு அழைப்பைக் கொடுத்தார். மேனேஜர்கள் மேனேஜர்கள்தான். யாருடைய நிர்வாகியானால் என்ன?

முப்பத்துரெண்டாயிரத்து முன்னூற்று ஏழு ரூபாய் புது மணத் தம்பதிகளின் பெயரில் ஒரு வருடம் நிரந்தர வைப்புக் கணக்கில் ஏற்றி நான் ரசீது எழுதினேன். மேனேஜர் கையொப்பம் இட, பிளாஸ்டிக் உறையில் வைத்து அதை மேனேஜர் மரியாதையோடு அவர்களிடம் நீட்டினார். ‘இன்னும் நிறைய வரணும்’ என்று கோரிக்கையும் வைக்கப்பட்டது.

இன்னொரு ப்ளாஸ்டிக் உறை.

“இன்னும் நிறைய வரணும்”, மேனேஜர் சொன்னார். ஆமா என்றார் மற்றவர்.

நாங்கள் எழுந்தோம். இரண்டு கேஷியர்களும் தோல்பையில் பத்திரமாகப் பணத்தை எடுத்து வைத்தபடி சிரித்துப் பேசிக்கொண்டு வந்தார்கள்.

“வேற பேங்க் வந்துதுன்னா மூணா பிரிப்பாங்களா?” நான் ரவீந்திரனைக் கேட்டேன்.

“இங்கே இந்த ரெண்டு பேங்க்தான் ரெண்டு தலைமுறையா தொழில் நடத்தறது. இவங்களைத் தவிர வேற யாருக்கும் டிபாசிட் இல்லே.”

“தாம்பூலம் வாங்கிட்டுப் போகலாம், வாங்க.”

ஒருவர் வந்து அழைத்தார். உள்ளே ஆளோடியை ஒட்டி இருந்த பெரிய ஒரு அறைக்கு எல்லோரும் போனோம். அங்கே பாத்திரக்கடைபோல ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாளிகளை வரிசையாக வைத்திருந்தார்கள். ஒவ்வொன்றும் குறைந்தது இரண்டு லிட்டராவது பிடிக்கும் எவர்சில்வர் பக்கெட்கள் அவை. அம்மா, பாட்டி போன்ற குடும்பப் பெண்களின் பிரியத்தைக் கவர இப்படி மாதாமாதம் ஒரு வாளி வாங்கிக் கொடுத்தால் போதும். அவர்களுக்கு அடுத்த தலைமுறைப் பெண்கள் எங்கள் வயது உள்ளவர்களான அவர்களுக்கு பாத்திர மோகம் எதுவும் கிடையாது. நல்ல பட்டு, வாயல் புடவைகள், கேசட் டேப் ரிக்கார்டர், இளையராஜா இசையமைத்த பாட்டுகள் அடங்கிய கேசட், குட்டி கத்தரிக்கோல் இப்படியான சமாசாரங்கள் இருந்தால் இப்போது கியாரண்டியாக பிரியம் கிடைக்கும்.

ஆளுக்கு ஒரு பக்கெட் கொடுக்கப்பட்டது. என் கையில் வந்ததைத் தூக்கவே முடியவில்லை. அவ்வளவு கனம். உள்ளே லட்டு, அதிரசம், முறுக்கு என்று தின்பண்டங்கள். பெரிய கொப்பரைத் தேங்காய். வெற்றிலை, பாக்கு, பிஸ்கெட் பாக்கெட். ஒரு சுருக்குப் பையில் பாரிஸ் தேங்காய் சாக்லெட்கள். ‘தோத்திரத் திரட்டு’ என்று தேவாரம், திருவாசகப் பதிகங்கள் கொண்ட புத்தகம்.

நான் வாசலுக்குப் போக, மற்ற பேங்க் தோழர் “பஸ் இறங்கி நீங்க விரசா போயிடுங்க” என்றார்.

“ஆமா, கையிலே வாளியைப் பிடிச்சுக்கிட்டு வரிசையா நடந்தா, அவனவன், என்ன காலையிலே போக மறந்துடுச்சான்னு நக்கலா கேப்பான்” என்றார் கேஷியர். நல்லவேளை நான் ஸ்கூட்டரில் வந்திருக்கிறேன். நக்கல், பிக்கல் பிடுங்கல் ஏதுமில்லை.

எந்த நேரத்தில் அப்படி நினைத்தேனோ, திரும்பி வரும்போது பாதி வழியில் ஸ்கூட்டர் நின்று போய்விட்டது.

“ஃப்ளட் ஆகிடுத்துபோல சார்” என்றேன். மேனேஜர் இறங்கி, “அடுத்த மழை வந்தா ஃப்ளட் லோன் வரும். தண்ணி இல்லாத பிரதேசத்துலே வெள்ளம் வருதுன்னு லோன் கொடுக்கறது நாமதான்” என்று நேரம் காலம் இல்லாது சமூக விமர்சனம் செய்தார். எமர்ஜென்சி வந்ததும் பேங்குகள் வாங்கிகளாக இனியும் இருக்கக் கூடாது. அவை வழங்கிகள் ஆகவேண்டும் என்று அங்கங்கே மைக் பிடித்து முழங்க, வேலை பார்ப்பவர்கள் கடன் கொடுக்க ஆள் தேடி அலையும் நேரம் இது. நல்ல நேரத்திலும் அல்லாத நேரத்திலும் அதுதான் மேனேஜர்கள் மனதில் வரும்.

ஒரு பத்து நிமிஷம், சுவர்க்கோழிகளும், எங்கேயோ தூரத்தில் தொடர்ந்து குரைக்கும் நாய்களும், கொசுக்களின் ரீங்காரமும் கேட்டபடி ஸ்கூட்டரை சாய்த்துப் பிடித்துக்கொண்டு காத்திருந்தேன். பின்னர் உதைக்க வண்டிக்கு உயிர் வந்து ஏகப்பட்ட புகையை இருட்டில் வெளியேற்றி உறுமிக்கொண்டு நின்றது.

“வாங்க, விரசா போயிடலாம். திரும்ப நின்னுடப் போவுது.”

மேனேஜரை ஆபீஸில் விட்டுவிட்டு கடைத் தெருவுக்கு வர, ஒரு பெரிய கூட்டமே லெனின் வாசகசாலை முன், மாடிப்படியில், வராந்தாவில் எல்லாம் குழுமி நின்றது. கல்லூரியில் எனக்குப் பாடம் எடுத்த ஆசிரியர்கள், பள்ளிக்கூடத்தில் எனக்கு கொஞ்சம் முன்னால் படித்து, பிஎஸ்ஸி பி.டி பட்டம் வாங்கி ஆசிரியர்களாக இருப்பவர்கள் என்று சிலர், தாலுகா ஆபீஸ் சகாக்கள், ஆனந்த பவான் நாகராஜ ராவ்ஜி, வெங்கு அப்பா, திருப்புகழ் பஜனை கிட்டுவய்யர் என்று டயலெட்டிகல் மெடீரியலிசத்தோடு ஸ்நாநப் பிராப்தி இல்லாத நபர்கள் ஏகப்பட்ட பேர் நின்றார்கள்.

“எல்லாரும் உங்க வகுப்புக்குதான் காத்திருக்காங்க. இன்னிக்கு நோ டயலெட்டிகல் மெடீரியலிஸம்” என்றார் சிரித்தபடி ஜெபர்சன். நான் ஸ்கூட்டர் பையில் துருத்திக்கொண்டிருந்த வாளியைப் பார்த்தேன். அதை

விட்டுவிட்டு வந்தால் திரும்பும்போது அங்கேயே இருக்குமோ என்னமோ. கையில் வாளியோடு இலக்கியம் பேச உள்ளே போனேன்.

“இவங்களுக்கெல்லாம் மலையாள வகுப்பு இருக்குன்னு யார் சொன்னாங்க?” நான் கேட்டுக் கொண்டிருந்தபோதே, சைக்கிளில் வந்து இறங்கினார் நிருபர் கார்மேகம். முகம் கொள்ளாத சிரிப்பு அவருக்கு.

“என்ன சார், உங்க க்ளாஸுக்கு ஊர் முழுக்க ஆள் பிடிச்சிருக்கேன். அதை சொற்பொழிவுன்னு ஆக்கிட்டீங்கன்னா நான் செய்தி போட்டுடுவேன். நாலு வரின்னாலும் நாலு வரி. மாசக் கடைசியிலே அளந்து பார்த்து காசு கொடுக்கும்போது இருபது ரூபாய் கூட வரும்” என்றார் அவர். மாதாமாதம் அவர் அனுப்பிய செய்திகளின் மொத்த நீளத்தை அளந்து வரிக்கு இரண்டு ரூபாய் வருமானமாம் அவருக்கு.

“முடிஞ்சா நடுவிலே, நம்ம பிரதமர் வகுத்த இருபது அம்சத் திட்டப்படி நாடு சிறப்பா முன்னேறிக்கிட்டிருக்கு. சஞ்சய் காந்தியின் ஐந்து அம்சத் திட்டப்படி இளைஞர்கள் பாடுபடணும், இப்படி சேர்த்துச் சொல்லிடுங்க. இன்னும் ரெண்டு வரி சேர்த்துப்பேன்” என்ற நிருபரைப் பார்த்துத் தலையாட்டிவிட்டு நான் மேஜை முன் அமர்ந்தேன். வாளிக் கையோடு வணக்கம் சொன்னேன். அவர் முதல் வரிசையில் இருந்து செய்தி எழுத ஆரம்பித்தார்.

கரும்பலகையில் ‘மலையாள இலக்கியம் - ஓர் அறிமுகம் - சொற்பொழிவு’ என்று எழுதி என் பெயரை ஜெபர்சன் குறிப்பிட்டுவிட்டு வந்து எல்லோரையும் வரவேற்றார். “இது அரசியல் பேசும் கூட்டம் இல்லை, இலக்கியக் கூட்டம்” என்று ஒன்றுக்கு மூன்று முறை சொல்ல கடைசி வரிசையில் இருந்து ஒட்டத் தலைமுடி வெட்டிய இரண்டு பேர் வெளியே போனார்கள். கல்லூரி ஆசிரியர்கள் புன்னகை பூத்தார்கள்.

நான் வைக்கம் முகம்மது பஷீர் என்று பேச ஆரம்பித்தேன். கையில் எடுத்து வந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாளியும் எனக்கு முன்னால் உட்கார்ந்து கதை கேட்க ஆரம்பித்தது.

அத்தியாயம் 8

# ஜனவரி 1976

கேளு நாயரும் அவர் மகள் பாருகுட்டியும் ஒரு வெள்ளிக்கிழமை காலையில் என்னைத் தேடி வீட்டுக்கு வந்திருக்காவிட்டால் நான் இந்த அத்தியாயத்தை எழுதியிருக்கப் போவதில்லை.

கேளு நாயரைப் பற்றி அப்புறம் சொல்லிக் கொள்ளலாம்தானே? பாருகுட்டியைக் கவனிக்கலாம். பாருக்குட்டி இல்லை. பாருகுட்டி. பெயருக்கும் குட்டிக்கும் நடுவே மெய்யெழுத்தெல்லாம் அண்டாது.

மலையாளப் பெண் பெயர்களுக்கு ஒட்டாக ஒரு குட்டியைச் சேர்த்து பாருகுட்டி, அம்முகுட்டி, ஜானுகுட்டி, மோலிகுட்டி. இன்னும் செல்லமாக மாலூட்டி என்ற மாலுகுட்டி... இப்படி எல்லாம் கூப்பிடுவதில் போதை ஏற்படாத தமிழர்களை நான், சங்கரன் போத்தி என்ற அறுபது சதவிகிதம் தமிழனும் பாக்கி மலையாளியுமான நான் பார்த்ததே இல்லை. மலையாளப் படத்தில் பாவாடை மேல்சட்டை மட்டும் அணிந்த மதர்த்து நிற்கும் சுந்தரிகளை குட்டி என்று கதாநாயகன் சகஜமாகக் கூப்பிடுவதை அசூயையோடு கவனித்த என் ஆபீஸ் சகா ரவீந்திரன் மலையாளப் படம் பார்ப்பதையே நிறுத்திவிட்டார்.

'எமர்ஜென்சியிலே எத்தனை அதிகாரம் கவர்மெண்ட் தனக்குத் தானே கொடுத்திட்டிருக்கு. பத்திரிகையை எல்லாம் சென்சார் அதிகாரி சரி பார்த்து, அச்சடிக்கலாம்னு எழுத்திலே உத்தரவு கொடுத்தால்தான் அச்சுப் போடலாம். இதேபோல, மலையாளப் படத்தில் குட்டின்னு வந்தா

தயவு தாட்சண்யம் இல்லாம வெட்ட சென்சாருக்கு அதிகாரம் கொடுத்தா என்ன?'

ரவீந்திரன் கேட்பார். அவருக்கு இருந்த ஓரளவு மலையாளி நண்பன் நான்தான். ஆனால் என் வீட்டில் குட்டி அடைமொழிக்கு பாட்டி தவிர யாரும் இல்லை. பார்கவிகுட்டி என்றுதான் என் பாட்டி இன்னும் மணியார்டர் ஃபாரத்தில் கையெழுத்து போட்டு தியாகி மனைவி பென்ஷன் வாங்குகிறாள்.

வைக்கம் சத்தியாக்கிரகம் என்று சாதி களைந்து எல்லோரும் கோயிலில் நுழைய பெரியாரோடு சேர்ந்து நின்று போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் என்ற முறையில் தாத்தாவுக்கு தியாகி பென்ஷன் கிடைக்க ஆரம்பித்த இரண்டாம் மாதமே அவர் உயிரை விட்டார்.

என் அச்சன் யார் யாரையோ போய்ப் பார்த்து அந்த பென்ஷனில் அரை பங்கு பாட்டித் தள்ளைக்குக் கிடைக்க வழி செய்திருக்கிறார். ஓர் ஆயுர்வேத வைத்தியராக இருந்துகொண்டு அவர் ஆற்றிய அதிக பட்ச குடும்பக் கடமை இதுதான்.

கேளு நாயர் அச்சனைத்தான் பார்க்க வந்தார். அவருக்கு ரொம்ப நாளாக ஒரு பென்ஷன் வரவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார். இருபது வருஷம் ரயில்வேயில் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிக டிக்கெட் கிளார்க், அவ்வப்போது பாயிண்ட்ஸ்மேன், கேட்மேன், டெக்னீஷியன், எஞ்சின் ட்ரைவருக்கு எடுபிடி என்று பல வேலைகளும் பார்த்து, வயதானதால் வீட்டோடு இருக்கப்பட்டவர். ரயில்வே பென்ஷன் ஏதாவது தரவேண்டும் என்று அவர் அனுப்பிய மனு எல்லாம் இதுவரை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

எமர்ஜென்சி காலத்தில் நலிந்தவர்களுக்கு எல்லா ஒத்தாசையும் கவர்மெண்ட் செய்கிறது என்று கேள்விப்பட்டு, அச்சன் மூலம் இன்னொரு தடவை முயற்சி செய்ய வந்திருந்தார் கேளு நாயர். பாட்டியம்மாளுக்கு சிரமப்பட்டு, தியாகி குடும்பப் பென்ஷன் வாங்கிக் கொடுத்தவராச்சே. அச்சன் ஊரில் இல்லை என்று அவருக்குத் தெரியாது போனது.

கூடவே கூட்டி வந்த பாருகுட்டியை ஏதோ திட்டம் போட்டு அழைத்து வந்திருக்கிறார் என்று எனக்குத் தோன்றியது. இரண்டு வருஷம் முன்னால் பார்த்தபோது சோனியாக தலையில் கொஞ்சூண்டு முடியுடன் இருந்தவள் இப்போது கிண்ணென்று கோயில் சிற்பம்போல, ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம்போல நிற்கிறாள். தலைமுடி நிலத்தைத் தொடும்போல் அவ்வளவு நீளம், அடர்த்தி, நல்ல கறுப்பு. அவள் கண்ணும் கழுத்தும், தோளும் மற்றும்.

என்னைப் பார்க்கத்தான் பாருகுட்டியை கேளு நாயர் கூட்டி வந்திருக்கிறார் என்று திடமாக நம்பினேன்.

“கேளு கொச்சே, முழங்கால் ரெண்டுலேயும் வலி தாங்க முடியாம உசிரு போய்ட்டு வருது. தைலம் இருந்தா புரட்டக் கொடேன்”, பாட்டி விசாரித்தாள்.

ஐம்பது வயது, வழுக்கைத் தலை, வரையறை அற்ற தொப்பை விழுந்த வயிறு என்று கிழண்டு போயிருக்கும் கேளு நாயரை கொச்சு என்று அவருடைய பால்யத்தில் கூட யாரும் குழந்தையாகக் கூப்பிட்டிருக்க மாட்டார்கள். நாயர் பனியாக உருகினார்.

“தள்ளே, பாருகுட்டி தலைமுடி பார்த்தீங்களா? கருகருன்னு தரையை தொடறது. நானாக்கும் தைலம் காய்ச்சினது. அதை கொண்டு வரேன்.”

பாருகுட்டி தலைமுடி வளர காய்ச்சியதைப் பாட்டி முழங்காலில் தடவி அவள் அதிபயங்கரமாக கொரில்லா குரங்குபோல ஆவதாகக் கற்பனை தோன்ற, அதெல்லாம் ஆபீஸ் லீவு விட்ட தினத்தில் நடந்தால் போதும் என்று தீர்மானித்து வாசலை அடுத்து என் அறைக்குப் போனேன்.

நான்கு புத்தக அலமாரி நிறைய புத்தகம், நண்பர்கள் வந்தால் அரட்டைக்கு இரண்டு நாற்காலி. சின்னதாக ஒரு வட்ட மேஜை என்று இருக்கும் இடம் அது. இடமே மல்லிகைப்பூ வாசனையில் மிதக்க பாருகுட்டி என்னைத் தொடர்ந்தாள்.

“ஏன் பேசவே மாட்டேங்கிறே”, வட்டமேஜை மேல் உட்கார்ந்தபடி கேட்டாள். பாருகுட்டி. தலைமுடியை நெகிழ வாரி, முழங்கால் வரை

தொங்கியதை சுவாதீனமாக முன்னால் அள்ளிப் போட, என் முகத்தில் மூலிகைத் தைலமும், மரிக்கொழுந்தும் வாடிக் கொண்டிருக்கும் கதம்பமும் நெடியைக் கிளப்பி ஒரு வினாடி கண் இருள நள்ளிரவாக்கிவிட்டு அவள் தோளில் அமர்ந்தது.

இது அழகு ஆக்கிரமிப்பேதான். திட்டமிட்டு நடத்தப்படுவது. யார் திட்டமோ.

காலேஜில் இரண்டு வருடம் பின்னால், என் தங்கையோடு படித்தபோது கண்டுகொள்ளவே மாட்டாள். வர்கீஸ் செரியான் என்று பக்கத்து ஊர் கண்டனியில் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் மகன், நெடுநெடுவென்று உசரமாக, சதா உல்ஃப் என்று சொல்வதுபோல் உதட்டைத் துருத்திக் கொண்டிருக்கும் அவனோடு அவளுக்கு நல்ல சிநேகம். வர்கீஸ், சுல்தான் பத்தேரி என்ற புண்யஸ்தலத்தில், உதடு பெருத்த ஒரு மட்டாஞ்சேரிப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு ஒதுங்கி ஒரு வருடம் ஆகிவிட்டது.

“மாவட்டத்திலேயே நீளமான தலைமுடி எனக்குத்தான் இருக்கு. தெரியுமா?”

மெய்யாலுமா? முடிக்கணக்கை எல்லாம் யார் வைத்திருக்கிறார்கள்? எமர்ஜென்சியில் இதெல்லாம் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமோ?

“ரோமவர்த்தினி தைலக்காரங்க ஒவ்வொரு மாவட்டமா முடியழகி தேர்ந்தெடுத்தாங்க. நம்ம மாவட்டத்திலே என்னை செலக்ட் செஞ்சிருக்காங்க. இனி தமிழ்நாடு ஸ்டேட் ஃபைனல்ஸ் வரும்.”

“யார் இதை தீர்மானிச்சது?”

ரெண்டு மாசம் முந்தி, சசிவர்ணர் சிற்றரங்கத்தில், தாசில்தார் முன்னிலையில், எம்.பி வந்து தேர்ந்தெடுத்தாராம். தமிழய்யா கம்பநாடர், தமிழ் இலக்கியத்தில் தலைமுடி பற்றிப் பேசினாராம். வாட் அ லாஸ் எனக்கு.

நான் அவள் தலைமுடியைப் பார்த்தேன். முழித்திருக்கும் நேரம் எல்லாம் அதை போஷிப்பதைத் தவிர வேற காரியம் அவளுக்கு இருக்காது என்று

தோன்றியது.

தலைக்கு வெளியே இருப்பதற்கு செலவழிக்கும் நேரத்தில் பாதியாவது தலைக்கு உள்ளே இருப்பதற்காகச் செலவிட்டால் இந்நேரம் அவள் பி.எஸ்ஸி முடிக்க முடியாமல் மூன்று வருடமாக முடங்கிக் கிடக்காமல் அதுவும் கடந்து, மேலே எம்.எஸ்ஸியும், பி.எச்டியும் முடித்து காலேஜ் ப்ரொ·பசராக இருக்கலாமே.

இதை முதலில் இங்லீஷிலும் தொடர்ந்து தமிழ், முடிந்தால் மலையாளத்திலும் சொன்னால்?

வேணாம், மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷனில் கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் மூணாம் ப்ளாட்·பாரத்துக்கு வந்துகொண்டிருக்கிறது என்று அறிவிக்கிற மாதிரி இருக்கும்.

“அப்பா பென்ஷன் பத்தி கேட்க மட்டும் வரலே, நான் உன்னை பார்க்கத்தான் வந்தேன் முக்கியமா”, பாருகுட்டி விஷயத்துக்கு வந்தாள் ஒரு வழியாக.

‘சரி இன்றைக்கு காலை பத்தே முக்காலில் இருந்து நீ எனக்கு அதிகாரபூர்வமான காதலனாக இரு. நாம் நாளை மறுநாள் சாயந்திரம் ஊருணிக் கரையில் சந்தித்து வசந்தா ராகத்தில் அமைந்த இந்தக் கீர்த்தனையைச் சேர்ந்து பாடி காதல் புரியலாம்.’

- அப்படி அவள் சொன்னால் சுவாரசியமாயிருக்கும்.

“எங்களுக்கு பேங்க் லோன் வேணும்” என்றாள் அவள். எதுக்கு, முடி வளர்க்கவா? இல்லையாம். தேனீ வளர்க்கவாம். என்னது? தேனீ.

தேனீ ஒன்று இரண்டாகப் பறந்து வந்தாலே ஜாக்கிரதையாக அவற்றின் பாதையில் இருந்து விலகிப் போய்விடுவேன். கொட்டினால் கண்டபடி வலிக்கும். அதிலும் காணாத இடத்தில் கொட்டினால், வேறே வினையே வேண்டாம். தேனீ அடர்ந்து தேனடை மரத்தில் தொங்குவதைப் பார்த்தால் அந்தப் பக்கமே போவதைத் தவிர்த்துவிடுவேன். இங்கிலீஷ் சினிமாவில் பயங்கரம் தேனீ வழியாக நிறைவேறும் படங்களை மெட்றாஸில் நாள் முழுக்க காட்சி நடக்கும் சின்னஞ்சிறு ப்ளூ டயமண்ட்

தியேட்டரில் சௌகரியமாக உட்கார்ந்து பார்த்திருக்கிறேன். அந்தத் தேனீயை வளர்க்கக்கூட பேங்க் லோன் கேட்க வைத்திருக்கிறது எமர்ஜென்சி.

“தேனீயை வளர்த்தா கொஞ்ச நாள் போய் சாகும். அதை வச்சுக்கிட்டு என்ன பண்ணுவே? எதுக்கு லோன்? தேனடை கட்டறதை நீ எடுத்து வந்துடுவியா?”

அவள் மந்திரப் புன்னகை தவழ, என்னைக் கூர்ந்து பார்த்தாள். “நீயே வீட்டுக்கு வந்து பாரேன்.”

“இப்பவா? குளிச்சுட்டு ஆபீஸ் போகணுமே” என்றேன்.

“சாயந்திரம் வாயேன்”, உதட்டைக் கடித்துக்கொண்டு பார்த்தாள்.

“சாயந்திரம் கரப்பு ராஜா பார்க்க வரேன்னிருக்காரே…”

“யாரு கரப்பு ராஜா?” என்றாள் அவள். “காக்ரோச் கிங்?”

“இல்லே, யூனியன் லீடர். கறுப்பு ராஜான்னு பெயர். உன்னையும் என்னையும்போல பாதி மலையாளி சகா ஒருத்தர் அவர் பெயரை கரப்பு ராஜான்னு சொன்னதாலே நாங்களும் அதேபடிக்கு சொல்றோம்” என்றேன்.

பாருகுட்டி ரொம்ப கஷ்டப்பட்டு மரியாதைக்குச் சிரித்து வைத்தாள். சரி, ராத்திரி வாயேன் என்று சொல்லிவிட்டு அவள் தலை குனிந்துகொண்டதை ரசித்தேன். அந்தத் தலைமுடி பார்க்க நன்றாகத்தான் இருக்கிறது. தலைக்கு உள்ளே இருப்பதை யார் பார்க்கிறார்கள்?

“மலையாளம் க்ளாஸ் எடுக்கறியாமே?” என்னைக் கேட்டாள் பாருகுட்டி.

அது இன்னொரு கதை. ஏற்கெனவே சொல்லப்பட்டது பாதிதான். ஊரோடு பாதி வந்து மலையாள இலக்கியம் பற்றிய சொற்பொழிவுக்கு உட்கார்ந்ததால், டயலெடிகல் மெடீரியலிசத்தைக் கழற்றிவிட்டு மலையாளம் மட்டும் இப்போதைக்குப் போதும் என்று முடிவானது. நான்தான் முடிவு செய்தேன்.

தெருவில் முதிய வக்கீல்கள் நான்குபேர் என்னைக் கூப்பிட்டு வைத்து, “உன் சிநேகிதம் எதுவும் சரியில்லை, எதுக்காக சலூன்கடை மாடியில் லெனின் வாழ்க்கை வரலாறு சொல்லித் தரணும்?” என்று கேட்டார்கள்.

லெனின் வரலாறு எனக்கும் தெரியாது என்று அவர்களிடம் மரியாதையோடு சொல்ல, “அங்கே எல்லாம் போகாதே, காலம் கெட்டுக் கிடக்கு. பேங்க் உத்தியோகஸ்தனா, லெட்சணமா, லோன் கொடுத்துண்டிரு. பொழுது போகல்லேன்னா லைப்ரரி போய் பவான்ஸ் ஜெர்னல் படி, இல்லே, தியோசாஃபிகல் சொசைட்டியிலே மெம்பர் ஆயிடு எங்க மாதிரி” என்று முப்பது நாளில் முதுமை வர யோசனை சொன்னார்கள் அவர்கள்.

ஜெபர்சன் கொஞ்சம் அடக்கி வாசிக்கலாம் என்றார். அவருடைய டயலெடிகல் மெடீரியலிசம் வகுப்புக்கு பரோட்டாக் கடை வெங்கு தவிர யாரும் சேரவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது. ஆக, நான் மட்டும் சசிவர்ணா கல்யாண மண்டபத்தில் வாரம் மூன்று முறை மலையாள கிளாஸ் எடுக்கிறேன் - மலையாளம் எழுத, படிக்க, பேச, மற்றும் மலையாள இலக்கிய அறிமுகம்.

“நானும் மலையாள க்ளாஸுக்கு வரேனே” என்றாள் பாருகுட்டி.

“ராத்திரி ஒன்பது மணிக்கு ஆரம்பிச்சு பத்தரைக்கு முடிக்கறேன். பெண்ணுங்க யாரும் இல்லே. பாதிக்கு மேலே காலேஜ் வாத்தியார்கள், எனக்கு வாத்தியாரா இருந்தவங்க. பேங்க் ஃப்ரெண்ட்ஸ். மற்ற பேங்க், கவர்மெண்ட் செர்வெண்ட்ஸ்.”

“படிக்க வர்ற எல்லோரும் ஆணாவே இருக்கணும்னு எமர்ஜென்சி சட்டம் ஏதாவது வந்திருக்கா?” அவள் கண்ணை விரித்துக் கேட்டாள்.

“மோளே, போகலாமா, கொச்சன் குளிச்சுட்டு ஆபீஸ் போகட்டும்.” கேளு நாயர் சலுகை அறிவித்தபடி அவளை அழைத்துப் போனார்.

ஆபீஸில் நுழைந்தபோது, பழநி எதையோ மறைத்து எடுத்து வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

“என்னங்க, கல்லு தோசை கொண்டுவரேன்னு சொன்னீங்களே... அதுவா?” அவரைக் கேட்டேன்.

கல்லுத் தோசையும் கருவாட்டுக் குழம்பும் வீட்டில் விசேஷமான காலைப் பசியாறல் என்பார் அடிக்கடி அவர். எனக்கு அசைவம் சாப்பிடுவது பற்றி ஆட்சேபம் எதுவும் கிடையாது. விடிந்து எழுந்து முதல் காரியமாக கருவாட்டை வைத்துக்கொண்டு தின்பது சாத்தியமா என்றுதான் புரியாது.

“கருவாட்டுக் குழம்பு இல்லீங்க தம்பி, ரவித் தம்பிக்கு ஸ்பெஷல் அய்ட்டம். ஜீவா ஸ்டோர் ராமேசுவரம் பிள்ளை கொடுத்து அனுப்பினார். அவர்தான் மறச்சு கொண்டுபோங்கன்னார்.”

நான் பழநி கையில் வைத்திருந்த பத்திரிகையைப் பார்த்தேன். முரசொலி.

மறைத்து எடுத்து வந்து படிக்கிற பத்திரிகையா இது? படிக்க, எழுத, பேச எல்லாம் தணிக்கை, சகலருக்கும் சகலமானதற்கும் மேலே இருந்து யாரோ சதா கவனிக்கிற பயம், இதெல்லாம் எப்போது இங்கே வந்து கவிந்தது?

அரசாங்க அலுவலகங்களில் காலதாமதம் இல்லாமல் வேலை தொடங்கி, ரயிலை, பஸ்ஸை நேரத்துக்கு வரச் செய்துவிட்டு, மூச்சு விட, வாயைத் திறக்க அனுமதிக்க மாட்டோம் என்று அழிச்சாட்டியம் பிடிப்பது என்ன அரச தர்மம்?

போதாக்குறைக்கு போனவாரம், ஜனவரி எட்டாம் தேதியன்று ஜனாதிபதி ஆணை மூலம் இந்த நாட்டு மக்களின் எட்டு வகையான சுதந்திரம் முடக்கி வைக்கப்பட்டுவிட்டது. பேச்சு சுதந்திரம், அமைதியாக ஆயுதமின்றிக் கூடியிருக்க சுதந்திரம், தொழிற்சங்கம் அமைக்க சுதந்திரம், இந்தியா எங்கும் போய்வர சுதந்திரம், இந்தியாவில் எங்கும் வசிக்க சுதந்திரம், சட்ட விரோதமில்லாத எந்தத் தொழிலும், வேலையும் செய்ய சுதந்திரம், எந்த மதத்தையும் கடைப்பிடிக்க சுதந்திரம், ஜனநாயக முறையில் போராட சுதந்திரம் என்று அடிப்படை உரிமை

எல்லாம் பறிபோய் ஜனதா சாப்பாடு போட்டுக்கொண்டிருக்கிற வரலாற்று அபத்தமான சூழ்நிலை இது.

பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தேன். பெரியார் நினைவு நாள். பெரியார் சமாதிக்கு வந்தவர்கள் என்று போட்டு ஒரு சிறு பட்டியல். கூடவே வராதவர்கள் என்று இன்னொரு நீளமான பட்டியல். அந்தப் பட்டியலில் இருந்தவர்கள் எல்லாம் எமர்ஜென்சி நடவடிக்கையாக மிசாவில் சிறைபிடிக்கப் பட்டவர்கள்.

கவிந்த சோகத்தில் ஒரு நிமிடம் ஈடுபட்டு நிற்க ரவி பத்திரிகையை வாங்கிக்கொண்டார். “நீங்களும் இது படிப்பீங்கன்னு தெரியாது. தினம் வருதே. ஆனா ரகசியமா வச்சிருக்கோம்” என்றார் அவர்.

நான் ஜனசக்தி, தீக்கதிர், நவசக்தி, முரசொலி என்று முன்பெல்லாம் வேகமாகப் புரட்டிவிட்டுப் போவேன். அது ரானடே ஹால் லைப்ரரியில். இப்போது என்னமோ இந்தப் பத்திரிகைகளை ஆழ்ந்து படிக்கத் தோன்றுகிறது. முக்கியமாக சர்க்கார் கட்சியல்லாத பிறவற்றின் இதழ்களை.

மதியம் சாப்பிடப் போகும்போது மேனேஜர் சொன்னார், “நாட்டுச் செக்கு, தறிமேடை, தேனீ வளர்ப்பு, எது வேணும் உங்களுக்குன்னு ரீஜனல் ஆபீஸிலே கேட்கறாங்க. நாம ஜில்லாவுக்கு லீட் பேங்க். மத்த பேங்குகளையும் முடுக்கிவிட்டு லோன் கொடுக்க வைக்கற கடமை நமக்குண்டு. முதல் ஈட்டுலே எதை எடுத்துக்கலாம்னு நினைச்சுப் பார்த்தேன். ஒண்ணும் புரிபடலே.”

“தேனீ வளர்ப்பு என்னன்னு பார்க்கலாமே முதல்லே”, நான் மேலே பேசுவதற்குள் அக்கவுண்டண்ட் சொன்னார், “கேளு நாயர் அப்ளிகேஷன் நேத்துதான் வந்தது. உங்க மாமா இல்லே அவர்?” அவசரமாக மறுத்தேன்.

“சார், ஜாதி இல்லேன்னாலும், ஒரு அடையாளத்துக்காகச் சொல்றேன். நான் போத்தி. பாதி பார்ப்பனன். அவர் நாயர். எப்படி எனக்கு அவர் மாமா ஆக முடியும்?”

விட்டால் பாருகுட்டி வீட்டுக்காரனாக என்னை ஆக்கிவிடலாம்.

“அட, ஒரு பேச்சுக்கு சொன்னேன். ஐயர் வீட்டுப் பேச்சுலே எல்லாரும் மாமாதான், மாமிதான். அவங்க எல்லாம் வந்து இப்படி சண்டை போட்டா உலகம் எப்படி நடக்கும், சொல்லுங்க” என்றார் அவர் சமாதானமாக.

“சரி, நீங்களும் கேஷியர் கருப்பையாவும் சாயந்திரம் போய் அவர் என்னத்தை வளர்க்கறார், என்ன வருமானம் கிடைக்கும், எப்போ கிடைக்கும்னு எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு வாங்க. அப்ளிகேஷனை அப்புறமா பார்க்கலாம். அக்ரிகல்சர் ஆபீஸர் அடுத்த வாரம் வருவார். அவர் கிட்டேயும் கேட்டுக்கலாம். லீட் பேங்க் மீட்டிங் இருக்கு. நான் கிளம்பறேன்.”

சாயந்திரம் ஸ்கூட்டரைக் கிளப்பிக்கொண்டு வந்து கேஷியரை பில்லியனில் உட்கார வைத்து ஓட்டத் தொடங்கும் முன் அவர் ரகசியம் சொன்னார்:

“கீழே அடிபட்டு ஒரு மாசம் படுத்திருந்தேன். கொஞ்சம் மெல்லவே போங்க. கைகால்னா பாத்துக்கலாம். வெதர் சமாசாரமாச்சே.”

அவருடைய ஹைட்ரோசில் பயங்கள் இல்லாமல் செய்ய வண்டியை ஊர்கிற வேகத்தில் நகர்த்திப் போக, நான்காம் கியரில் ஓட்டிப் பழக்கப்பட்ட லாம்ப்ரட்டா ஸ்கூட்டர் விட்டுடுடா என்னை என்று கேவி அழுது, அமுதா டூரிங் டாக்கீஸ் பக்கத்தில் நின்றே விட்டது.

‘பனி இல்லாத மார்கழியா?’ என்று டி.எம். சௌந்தர்ராஜன் இலக்கில்லாமல் விசாரிக்கும் பாட்டு முடிந்து நியூஸ் ரீல் போடுகிற சத்தம். சாத்தப்பன் ஊருணிக் கரையில் இருட்டும் காற்றும் கலந்து வந்து கொண்டிருந்தது. இன்னும் இருநூறு மீட்டர் போனால் கேளு நாயர் வீடு.

“வண்டியை உருட்டிட்டுப் போயிடலாமா?” கேஷியரைக் கேட்டேன்.

“வேணாம், விட்டுக்கிட்டே போயிடலாமே?”

“உங்களுக்கு எங்கேயாவது படாத இடத்திலே பட்டு வீங்கிடுச்சுன்னா? ஏற்கெனவே அடிபட்டு படுத்திருந்திருக்கீங்க.”

“அது இருபத்தஞ்சு வருஷம் முந்தி, நான் ஏழாம் க்ளாஸ் படிச்சபோது.”

வண்டியைப் பேய் உதை உதைக்க அது கூச்சலிட்டுக்கொண்டு புறப்பட்டது.

தென்னோலை வேய்ந்து நிரந்தரமாகப் பந்தல் போட்ட கேளு நாயர் வீட்டு வாசலில் ஸ்கூட்டரை நிறுத்த, நான்கு நாய்கள் பாதையைக் கடந்து ஓடின. வாசல் கதவு மட்ட மல்லாக்கத் திறந்திருக்க உள்ளே கொல்லைப் புறம் வரை தெரிந்தது. ஒருத்தர் கூட தட்டுப்படவில்லை வீட்டில் எங்கேயும்.

“இந்த வீடுதானா?” கேஷியர் மீண்டும் கேட்டார்.

“ரொம்ப நாள் முந்தி வந்திருக்கேன்” என்றேன்.

“தேனீக்கு ராத்திரி கண்ணு தெரியுமோ?” அடுத்த கேள்வியை எடுத்து விட்டார் அவர். எனக்குப் பதில் தெரிந்திருந்தால் நான் அப்படியே ஸ்கூட்டரைக் கிளப்பிக்கொண்டு திரும்பியிருப்பேன். ரைட் ராயலாக நுழைந்திருப்பேனா.

உள்ளே பூ மணமும், முட்டை அடித்து ஊற்றி தோசை சுடும்போது ஓரம் கருகின வாசனையும், கூடை போட்டுக் கவிழ்த்து ஓரமாக வாசலில் வைத்த கோழிகளில் இருந்து கிளம்பிய திவ்விய சுகந்த வாடையும் சேர்ந்து எழுந்தன.

“அம்மாவா…”, நான்தான் கூப்பிட்டேன்.

“அவங்க அம்மா எதுக்கு வரணும்? நாயரை கூப்பிடுங்க” என்று மொழிக் குழப்பத்தை விதைத்தார் கேஷியர்.

“அம்மாவன் அப்படீன்னா மாமன்”, அவருக்குச் சொல்ல, “அவர் மகளை என்ன கூப்பிடுவீங்க?” என்றார் ஆர்வமாக. அவளை எதுக்குக் கூப்பிடணும்?

ஆனாலும் குட்டிப் பிசாசு மாதிரி பாருகுட்டிதான் உள்ளறையில் இருந்து வெளியே வந்தாள். தலைமுடியை விரித்து விட்டிருந்தாள். கிட்டதட்ட தரை வரை அது தட்டிக்கொண்டே வர, கண்ணை வேறே அகட்டி ஒரு முழு ஐடெக்ஸ் டப்பி கண்மையை வழித்துப் பூசிக் கருப்பாக்கி வந்து அவள் விழித்தாள். அடி வயிற்றில் பயம்தான் எட்டிப் பார்த்தது. அவள் வேண்டுமானால் காதல் பார்வை என்று நினைத்திருக்கலாம்.

“இப்பத்தான் வழி தெரிஞ்சுதா?” அவள் என்னைச் சம்பிரதாயத்துக்குக் கேட்க, “அப்ளிகேஷன்லே வீட்டு விலாசம் இருந்துச்சு, எடுத்து வர மறந்து தியேட்டர் பக்கம் போயிட்டோம்” என்று படு சீரியஸாக கேஷியர் பதில் சொன்னார்.விதி.

“அச்சன் முத்துப்பட்டி போனாரு. இன்னும் வரலை. வர்ற நேரம்தான். அம்மையை காப்பி எடுக்க சொல்லட்டா?”

எடுக்கட்டும் என்றேன். “அதை எடுப்பானேன், போட்டாப் போறாதோ?” என்று கேஷியர் அவள் உள்ளே போகத் திரும்பியதும் கேட்க, சுருக்கமாக “மொழி” என்றேன். இவரை இந்த நாய், பூனை, பாருகுட்டி, வாத்து, வான்கோழி உலகில் விட்டுவிட்டுத் தப்பிப் போய்விடலாம் என்று தோன்றியது.

பின்னால் இருந்து பார்க்க, பாருகுட்டி ரம்யமான யட்சிபோல தெரிந்தாள். இவளை இவ்வளவு தலைமுடியோடு கல்யாணம் செய்துகொண்டு எப்படி ராத்திரியில்...

மனதைத் தறிகெட்டுப்போக விடாமல் நெகேஷன் ஆஃப் நெகேஷன், க்வாலிட்டி சேஞ்ச் பற்றி எங்கேல்ஸ் சொன்னதை நினைவு கூர்ந்தேன். பாரு பாரு என்றார் எங்கேல்ஸும். கெப்ளர் தியரம் அடுத்து நினைவில் வர, கிண்ணென்று கையில் சிடுக்குவாரிச் சீப்போடு வந்தாள் பாருகுட்டி.

நாங்கள் வாசல் முன்னறை நாற்காலிகளில் உட்கார்ந்ததுமே ஏதோ கடிக்க உணர்ந்து துள்ளினோம். கேளு நாயர் மற்ற உயிரினங்களோடு, மூட்டைப் பூச்சியையும் சிறு அளவில் வளர்த்து வருவதாகத் தெரிந்தது.

“அது போன மாசம் நிறைய இருந்து மருந்து அடிச்சுக் கொலை செஞ்சாச்சு. இன்னும் கொஞ்சம் இருக்கு. அதுவும் இன்னிக்கு ராத்திரி போய் ஒழிஞ்சுடும்.”

தலை கலைத்து வாராமல் விட்ட யட்சிக் களையோடு அவள் சொல்ல, “இன்னிக்கா பௌர்ணமி?” என்று திடீரென்று சந்தேகம் கேட்டார் கேஷியர்.

நான் அமாவாசை, பவுர்ணமி எல்லாம் இருபத்தஞ்சு அம்சத் திட்டத்துக்குக் கிடையாது என்று சொல்ல, பாருகுட்டி சிவந்த நாக்கைத் துருத்திக் காட்டினாள். இன்னும் ஒரு மணி நேரம் அவளுடைய சார்ம் அஃபென்ஸிவ் ஆன அழகுத் தாக்குதலுக்கு ஆட்பட்டால் என்னை அவள் தலைமுடிக்குள் பிடித்துப் போட்டு, ஈரோடும் பேனோடும் இருட்டுச் சிறை பிடித்துவிடுவாள்.

“எதுக்கு லோன் அப்ளை பண்ணியிருக்கீங்க?”

கேஷியர் கேட்க, பாருகுட்டி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, சும்மாதான் என்றாள். சும்மா எல்லாம் பேங்க் கடன் கிடைக்காது என்று அவர் சொல்ல, திட்டப்படியான லோன் என்றாள் அவள்.

என்ன திட்டம் என்று கேஷியர் விடாமல் பிடித்தார். சளைக்காமல், ரேடியோ நாள் முழுக்கப் பாடும் பாடலைப் பாடத் தொடங்கினாள் பாருகுட்டி:

‘இருபதம்சத் திட்டம் அது இந்தியாவின் சட்டம், நம் இந்தியர்க்கு மட்டும், இனி இன்ப வாழ்வு கிட்டும்.’

இவ்வளவு அபத்தமாக ஓர் அரசு விளம்பரம் எப்போதுமே வெளியானதில்லை. பாருகுட்டியின் பாட்டை பாதியில் நிறுத்தினேன்.

“தேனீ வளர்ப்புக் கடன் தொகையை என்ன செய்வீங்கன்னு கேட்கறார்”, விளக்கினேன்.

“செலவு செய்வேன்” என்று கச்சிதமாகப் பதில் சொன்னாள் பாருகுட்டி.

“அது இல்லீங்க, தேனீ வளர்ப்பு எப்படி உங்க வாழ்க்கையை முன்னேற்றும்?” கேஷியர் தொடர்ந்து கேள்வி கேட்டார்.

“இப்படி எல்லாம் துருவித் துருவிக் கேட்டு கடன் தரக் கூடாதுன்னு எமர்ஜென்சி அறிவிப்பு இருக்கு. கொஞ்சம் அடக்கி வாசியுங்க” என்று அவர் காதில் சொல்லி அவரை ஃபீஸ் பிடுங்கி விட்டேன்.

“எங்கே தேனீ வளர்க்கறீங்க? கிச்சன்லேயா?”

நான் கேட்க, என் அறியாமையை எண்ணிச் சிரித்தாள் அந்தத் தலைவிரித்த கோல அழகி. அவள் சிரித்தபடி என் நாற்காலிக்குக் கீழே பார்க்க, பயந்து போய் சாடி எழுந்தேன். தேன் கூட்டில் உட்கார்ந்து கடி வாங்கி காலை அகல விரித்துக்கொண்டு நடந்து மீதி வாழ்க்கை கழியக் கூடாது. முக்கியமாக, பாருகுட்டியையே கல்யாணம் செய்துகொள்ள நேர்ந்தால்.

யட்சி கையில் டார்ச் விளக்கோடு பின்கதவைத் திறந்து, வாங்க என்று தலையசைத்துக் கூப்பிட்டாள்.

“ஆத்தா, நான் பிள்ளை குட்டிக்காரன், சாமி வந்து என்னை அடிச்சு நிமித்திடாதே” என்று வணங்கினார் கேஷியர். சமர்த்தாக அவளுக்குப் பின்னால் நாங்கள் நடந்தோம்.

தோட்டத்தில் ஒரு சிறு கூரை போட்டு ஒரு பெரிய பெட்டிபோல அமைப்பு. அங்கங்கே சின்னச் சின்ன சதுரமாக ஓட்டை. நடுவில் பெரிய கதவுபோல் ஒரு அமைப்பு. அது மூடி வைத்திருந்தது. மருந்துக்கு ஒரு தேனீயைக் கூட காணோம் எங்கேயும். கொல்லையில் தாழம்பூ பூத்த வாசம் காற்றில் கலந்து வந்தது. மார்கழிக் குளிர் காற்று. நான் மூச்சை உள்ளிழுத்தேன்.

“இதுக்குள்ளேதான் எல்லா தேனீயும் இருக்கு” என்றாள் பெட்டியைக் காட்டி.

“எத்தனை இருக்கு?”

ஒரு கூட்டம் என்றாள்.

“அப்படிச் சொன்னா எப்படி தாயீ? ஐநூறு? எழுநூறு?ஆயிரம்?”

கேஷியர் அடங்கவில்லை. கணக்கில் இருந்து பணம் எடுக்கும் யாருக்கும் அவர் கரன்சி நோட்டை ஒரு தடவைக்கு நான்கு முறை எண்ணித்தான் தருவார்.

‘நல்லவேளை சர்க்கார் நீளச் சதுரமா கரன்சி அடிக்கறதாலே பக்கத்துக்கு ஒண்ணா நாலு தடவைதான் எண்றார் நம்மாளு. அதுவே வட்டமா அப்பளம் மாதிரி கரன்சி நோட்டு போட்டிருந்தா எண்ணிக்கிட்டேயிருப்பாரு.’

பணம் எடுக்க வந்த எலக்ட்ரிசிடி போர்ட் லச்சுமணன் ஒரு தடவை சொன்னார். ஊரைக் கடந்து மாவட்ட அளவில் பரவிய பகடி அது.

எப்படி ராணித் தேனீயை முதலில் உள்ளே இருத்தியது, சிப்பந்தித் தேனீக்கள் தானே உள்ளே அடைந்தது எப்படி, என்ன ஆகாரம், தேனடை உள்ளே இருப்பது எங்கே, எப்படிப் பராமரிப்பது, தேன் எப்படி எடுப்பது, சுத்தப்படுத்துவது எப்படி, கூட்டுறவு சங்கத்துக்கு என்ன விலைக்கு விற்பார்கள் என்று தேனீ வளர்ப்பு பற்றிய சகல தகவல்களையும், தலையில் சீப்பைச் செருகிக்கொண்டு, வகுப்பு எடுப்பதுபோல் சொன்னாள் பாருகுட்டி.

தேனீ வளர்த்து, தேன் எடுத்து விற்றால் மாதம் ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். செலவு மாதம் இருநூறு ரூபாய்க்குள் முடிந்துவிடும் என்றாள் அவள், விளம்பரப் படத்தில் ஆஸ்ப்ரோ டாக்டர் மாதிரி. கேஷியர் கூட இல்லாமல் இருந்தால் அவள் கையைப் பிடித்துக் குலுக்கியிருப்பேன்.

“இந்த தேனீக்கெல்லாம் என்ன தீவனம் தினம் போடுவீங்க? எவ்வளவு தடவை போடணும்?” கேஷியர் விசாரித்தார்.

இவருக்கு பதிலாக மேனேஜரையே கூட்டி வந்திருக்கலாம் என்று தோன்றியது.

“மோளே...”

உள்ளே இருந்து சத்தம் கேட்க, “வரேன் இருங்க” என்று உள்ளே போனாள் அவள். குட்டிச்சாத்தான் குட்டிச்சாத்தானாக கறுப்பு நிறத்தில் கூடத்தில் ஓர் ஓரமாக ஏதோ நெட்டக்குத்தலாக உட்கார்த்தி வைத்து, மேலே அரைகுறையாக அழுக்குத் துணியால் மூடியிருந்ததைப் பார்த்தோம். எதுக்கும் விலகியே இருங்க என்று அது பக்கம் ஆர்வமாகப் போன கேஷியரை எச்சரித்தேன்.

‘லோன் கொடுக்க வந்தால் வந்தோம் கொடுத்தோம் என்று இருக்க வேண்டும். ரொம்ப இழைந்தால் ஓரமாகக் கிடத்திய குட்டிச்சாத்தான்களின் ஒன்றை வளர்க்க எடுத்துப் போகச் சொல்லி விடக்கூடும்.’

“மோளே, வாசல்லே ரெண்டு ஜோடி செருப்பு கிடக்கே. ஆரு வன்னதா?”

வாசலில் எங்கள் காலணிகளைப் பார்த்துவிட்டு கூப்பிட்டபடி உள்ளே வந்த நாயர் நாங்கள் தேனீ வளர்க்கும் இடத்தில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் திரிந்து கொண்டிருந்ததைக் கூர்ந்து பார்த்தார். அடுத்து, கூடத்தில் துணி போட்டு நிறுத்தியிருந்த கறுப்பு வடிவங்களையும் நோக்கினார்.

“வாங்க, வாங்க” என்றபடி அந்தக் களிமண் சிலைகளை நடுவாக நகர்த்தினார்.

“இது என்னங்க?” நான் கேட்டேன்.

“காவிலே நாகர் சிலையெ அடுத்து வைக்கறது. இங்கே ஐயனார் கோயில்லே மண்குதிரை வைக்கற மாதிரி” என்றார் அவர்.

குதிரை என்றால் குறைந்தபட்சம் நாலு காலாவது இருக்கவேண்டாமோ? இப்படி அடர்கறுப்பில் இவர் என்ன பிடித்து வைத்திருக்கிறார்?

அவர் முழுப் பாதுகாப்பாக ஜமுக்காளத்தைப் போட்டு அவற்றை மூடிவிட்டு எங்கள் பக்கம் அசட்டுச் சிரிப்போடு வருவதற்குள் சீப்போடு போன யட்சி, “அம்மாவுக்கு இடுப்புப் பிடிப்பு, நானே போட்டேன்” என்றபடி இரண்டு காப்பி டம்ளர்களோடு மறுபிரவேசம் செய்தாள்.

குடித்துப் பார்த்தேன். அவளோடு நாளை மறுநாள் சாயந்திரம் ஊருணிக்கரையில் சிட்டை ஸ்வரம் கல்பனா ஸ்வரத்தோடு வசந்தா ராகத்தில் குதித்துக் குதித்துப் பாடியபடி காதலிக்கும் கற்பனைக்கு உடனடியாகத் தடைச் சட்டம் கொண்டுவந்தேன்.

முட்டை வாடையடிக்கும் குவளையில் அவள் கொண்டுவந்ததற்கு என்ன பெயர் வேணுமானாலும் சூட்டலாம், காப்பி என்பது தவிர.

“அச்சா, எவ்வளவு ரூபாய் லோன் கேட்கலாம்? ஒரு அஞ்சு லட்சம்? அவங்க தரத் தயாரா இருக்காங்க.”

கேஷியர், “நாங்க... நாங்க...” என்று நடுங்கியபடி ஸ்வரம் இழுத்தார்.

இதேது, வேறு மாநிலக்காரர்கள் தடாலடியாகச் சேர்ந்துவிட்டார்கள், இந்த மெட்றாஸிலிருந்து வந்த ஒல்லிப்பிச்சான் பையனையும் சேர்த்து. குட்டிச்சாத்தானை எல்லாம் மந்திரம் போட்டு வீட்டிலேயே உக்கார்த்தி வைத்திருக்கிறார்கள். கடன் சிபாரிசு பண்ணாவிட்டால் ரத்தம் கக்கி ஒரேயடியாக மேலே போய்விடுவோமோ என்ற சாவுபயம் அவர் கண்களில் தெரிந்தது.

“இதை எல்லாம் விஸ்தரிச்சு சொல்லிட்டேதானே பொடி மோளே...”

கேளு நாயர் பிரியமாக மகளைக் கேட்க, ஆச்சு என்றாள் அவள்.

“என்ன பாலிலே காப்பி போட்டே பொடிமோளே?” என்று கேஷியர் தேனீ வளர்ப்பைப் பார்த்தபடி உறைந்து போயிருந்தபோது கேட்டேன்.

“ஆட்டுப்பால் இருந்துச்சு. மூலிகை போட்டுக் காய்ச்சினது. தொண்டை கட்டினா பிரிச்சு விடும். அதுலேதான் காப்பி டிகாஷன் ஊத்தினேன்.”

தொண்டையில் ஆயிரம் வாத்துகள் புகுந்து பாடச் சொல்லி வற்புறுத்தின.

‘இருபதம்சத் திட்டம் அது இந்தியாவின் சட்டம். நம் இந்தியர்க்கு மட்டும் இனி இன்ப வாழ்க்கை கிட்டும். அஞ்சு அம்சத் திட்டம் இது சஞ்சய் போட்ட சட்டம்.’

“எத்தனை தேனீன்னு கணக்கு சொன்னியாம்மா?”

கேளு நாயர் கேட்க, “ஓ, அஞ்ஞூறுன்னு சொல்லிட்டேன்” என்று மூஞ்சூறுபோல மூக்கைச் சுளித்தாள்.

“அஞ்ஞூறா, பாக்கி எங்கே போச்சு? போன வாரம் கீழ்ப் பெட்டியில் வச்சதும் சேர்த்தா ஆயிரத்தஞ்ஞூறு” அவர் புதுக் கணக்குச் சொன்னார்.

அந்த நேரம் பார்த்து கரண்ட் போனது. நான்கு பக்கமும் குட்டிச்சாத்தான் என்னைச் சுற்றிக் கூத்தாடுவதுபோல பிரமை. “இதோ வந்துடும், லோ டென்ஷன் ட்ரான்ஸ்ஃபார்மர் மாத்தறாங்க” என்றார் கேளு நாயர். அவருக்குத் தெரியாத துறை எதுவும் இல்லை போல.

“ஆயிரத்தைநூறா? அவ்வளவு தேனீ இருக்குமா என்ன?”

கேஷியர் பெட்டியின் மேல் கை வைத்தபடி சொன்னவர், கை வழுக்கி ஓரமாக எதையோ தட்டிவிட, மேலே கூரை ஒன்று ராமேஸ்வரம் பாம்பன் பாலம் கப்பல் போக தூக்கித் திறப்பதுபோல் திறந்தது. அவ்வளவுதான். ஒரு மேகக் கூட்டம்போல உள்ளே இருந்து தேனீக் கூட்டம் எழுந்து ஜிவ்வென்று பறந்து ரீங்காரமிட்டபடி வெளியே வந்தது.

“படு, படு” என்றபடி பாரு தரையில் படுத்து, என்னையும் இழுக்க நான் அவளோடு பாதுகாப்பாகத் தரையில் புரண்டேன். கேளு நாயரின் அன்புப் பிடியில் சிக்கி இன்னொரு ஓரம் கிடந்த கேஷியர் அடுக்கடுக்காகத் தும்மினார். பட்டணம் பொடியில் அடித்த உடம்பு கேளு நாயருக்கு. நியாயமாகப் பார்த்தால் பாரு அழுது கொண்டில்லாமல், தும்மிக்கொண்டேதான் பிறந்திருக்க வேணும்.

என்னைப் போர்த்தியிருந்த பாருவின் கூந்தலை விலக்கிப் பார்த்து அந்தகாரத்தில் அமிழ்ந்தபோது பொம்பளை வாசனை. மனதில் இச்சை. பயம்.

சில வினாடிகளில் அந்த வளர்ப்புத் தேனீக் கூட்டம் முற்றும் விலகி வெளியே பறக்க, கரண்ட் வந்துவிட்டது. நாங்கள் மெல்ல முன்னறைக்கு ஜாக்கிரதையாக நகர்ந்து பார்க்க, அங்கே காந்தி படம், நேரு படம், சுபாஷ் படம், ராஜாஜி படம், அப்புறம் பிரதமர் இந்திரா காந்தி படம்

முழுக்கக் கண்ணுக்குத் தெரியவில்லை. அத்தனை தேனீயும் அவர் முகத்தில்தான். கொஞ்சியதோ, கொட்டியதோ, தெரியாது.

“ராணித் தேனீ ஒய்வு ஒழிச்சலா வெளியே வந்தா அந்தப் படத்துலேதான் எப்பவும் போய் உட்காரும். கூடவே மத்த சிப்பந்திகளும் அங்கே போயிடும்.”

கேளு நாயர் விளக்கியபோது, நான் ஜாக்கிரதையாக பாருகுட்டியிடம் இருந்து விலகி நின்று “அது எல்லாம் மறுபடி இதே பாதையிலே கூட்டுக்கு வருமா?” என்று பயத்தோடு கேட்டேன்.

“ஈ வழி திரிச்சு வரில்ல” என்றாள் கியாரண்டியாக.

கேளுநாயரின் கைத்தாங்கலில் நான் என்ன ஆனேன் என்றுகூட கவனிக்காமல் விழுந்தடித்துக்கொண்டு வாசலுக்குப் போனார் கேஷியர். போனவர் போயேவிட்டார்.

“உனக்கு வசந்தா ராகம் பாட வருமா?”

நான் வெளியே வரும்போது பாருவைக் கேட்டேன்.

“க்ளாஸ் எடு” என்றாள் தடிமோள். ஓசை இல்லாமல், மார்கழிக் குளிர் மெல்ல இறங்கிக் கொண்டிருந்த வாசல். அங்கே நானும் பாருவும் மட்டும். ஸீரோ பல்ப் இருட்டில் நான் பாருவின் கையைப் பற்றினேன்.

“இப்படியே நடந்து ஊருணிக்கரைக்குப் போகணும்னு ஆசையா இருக்கு” என்றபடி நான் தளைதட்டும் கவிதையிலும் கனவிலும் மிதந்தேன்.

“எனக்கும் ஆசை”, பாருகுட்டி என் கண்ணைப் பார்த்தாள்.

“என்னவாக்கும் உன் ஆசை?”

“இந்திரா காந்திபோல ஒரே ஒரு நாள் மட்டும் தலைமுடி வச்சுக்கணும்.”

அத்தியாயம் 9

# பிப்ருவரி 1976

கு மரேசனைக் காணவில்லை. இரண்டு நாட்களாக குமரேசன் சிகையலங்கார நிலையம் பூட்டி வைத்திருக்கிறது.

நான்கு நாட்களில் செழித்த பஞ்சு மிட்டாய்த் தாடியைத் தடவியபடி நிற்கிற கோவாப்பரேட்டிவ் சொசைட்டி பிரசிடெண்ட் காளைலிங்கமும், முக்கால் வழுக்கைத் தலையில் ஓரமாக அரை மில்லிமீட்டர் வளர்ந்த அதீத முடியால் அசௌகரியம்கொண்ட ராமுடு வாத்தியாரும், ஒட்ட வெட்டிவரும்படி கட்டளையிடப்பட்டு காசும் கண்ணீருமாக ஒதுங்கும் சின்னப் பசங்களுமாக குமரேசன் கடைக்கு வெளியே கல் படியில் உட்கார்ந்து காத்திருந்து திரும்பிப் போகிறார்கள்.

இந்தத் தகவலை நான் எதற்காக மேனேஜரிடம் சொன்னேன் என்று தெரியவில்லை.

“குமரேசனுக்கு சிறுதொழில் கடன் கொடுத்திருக்கோமா?” அவர் அவசரமாக விசாரித்தார்.

நாங்கள் எந்தக் கடனும் தரவில்லை. ஏனென்றால் அவர் போட்டி-நட்பு பேங்கில் சேவிங்ஸ் கணக்கு, அங்கேயே புதுக் கத்தரிக்கோல், கத்தி வாங்கி கடையை விருத்தி செய்ய கடன் என்று அனுபவிக்கிறவர். அந்த பேங்க் நண்பர்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் ஊர்ஜிதமான செய்தி இது.

அந்த பேங்கில் புதுதாக மாற்றல் வாங்கி வந்த மேனேஜர் ஒருவர், குமரேசன் கடன் திரும்பக் கட்ட தாறுமாறாக காலம் எடுத்துக் கொள்வதால் அவரிடம் சரியான காலத்தில் திரும்பச் செலுத்தும் சமூகக் கடமையைப் பற்றி சொற்பொழிந்தாராம்,

“உங்களுக்கு செக்யூரிட்டி இல்லாம லோன் கொடுத்திருக்கோம். நினைச்சு பாருங்க. எவ்வளவு நம்பிக்கை உங்க மேலே.”

குமரேசன் கடைக்கு ஆள் வராத பிற்பகல் பொழுதில் அந்தப் பேச்சை கர்ம சிரத்தையாகக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு, ஒரு கல்யாண தாம்பூலப் பை நிறைய எதையோ அடைத்து மேனேஜரிடம் நீட்டினாராம்.

“இதெல்லாம் வெளிநாட்டுக்கே ஏற்றுமதி செய்யற பொருள். நான் கடனைக் கட்டாமல் போகமாட்டேன். எதுக்கும் சந்தேகத்துக்கு இதை பத்திரமா வச்சுக்குங்க. விக்கணும்னா சொல்லுங்க, நான் ஆள் தேடித் தரேன்.”

பெருந்தன்மையோடு குமரேசன் அந்த பேங்க் மேனேஜரிடம் சொன்னாராம்.

அந்தப் பை நிறைய நரைத்த, சிக்குப் பிடித்த, எண்ணெய் காணாத, சொளசொள என்று கொழும்புத் தேங்காய் எண்ணெய் நெடியடிக்கிற என்று கடையில் வாடிக்கையாளர்கள் தலையில் வெட்டிப் போட்ட தலைமுடிதான் கலந்து கட்டியாக அடைத்து இருந்ததாம்.

குமரேசன் ஏற்றுமதிப் பொருளில்தான் தொழில் பண்ணுகிறார். ஆனாலும் மயிரே போச்சு என்று விட முடியாது என்று அந்த மேனேஜர் முடிப்பையை சென்ட்ரல் ஆபீஸுக்கு அனுப்பி அவருடைய இந்த ஊர் வாசத்தை முடித்துக்கொண்டதாகக் கேள்வி. அப்புறம் யாரும் குமரேசனிடம் கடன் வசூல் என்று வாயைத் திறந்து கேட்கவில்லை இதுவரை.

இப்போது குமரேசனையே காணோம்.

ஒரு நாள், ஒரு மணி நேரம் கூட அவரால் எங்கேயும் தனித்து இருக்க முடியாது. கல்யாணம் கட்டாமலேயே நாற்பது வயது கடந்தவர் அவர்.

மஞ்சள் சில்க் சட்டையும், காக்கி நிஜாருமாக சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் உடுத்திதான் கத்தரிக்கோல் பிடிப்பார். அது தலையில் பேசத் தொடங்குவதற்குள் குமரேசன் வாய் பேச ஆரம்பித்திருக்கும். கூட இருந்து பேச ஆள் இல்லாமல் மூச்சு நின்றிருக்குமோ!

இரண்டே நாளில் குமரேசன் இல்லாமல் போன செய்தி எல்லோரையும் பிடித்துக்கொண்டு, பேச, அலச வேண்டிய அதிமுக்கியமான சமாசாரமாகிவிட்டது.

போன மாதம், ஜனவரியின் கடைசித் தேதி. கலைஞர் தலைமையிலான தமிழக அரசு அதிரடியாகக் கலைக்கப்பட்டது பற்றியோ, போன வாரம் நாடாளுமன்றம் லோக்சபாவின் ஆயுளை ஒரு வருடத்துக்கு நீட்டித்த சமாசாரத்தையோ பேசாமல், முருகேசனே செய்தியானார்.

காலையில் டபுள் கோச் டீசல் ரயிலில் மதுரை போக ரயில்வே ஸ்டேஷனில் காத்திருக்கும் மதுரை கலெக்டர் ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் ரயில்வே கிளார்க்கோடு அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஊருணியில் நல்ல தண்ணீர் தூக்கி வரப் போகும் பெண்பிள்ளைகள் கொலை, தற்கொலை, சாமியாராக மனம் பித்துப் பிடித்து அலையக் கிளம்பிப் போனது, பெண் சிநேகத்தால் வெளி நாட்டுக்கு, மதராஸுக்கு, பெல்லாரிக்கு ஓடிப் போனது, தீராத சீக்கு பிடித்து மதுராந்தகத்தில் ஆஸ்பத்திரி பெட் கிடைக்காமல் அங்கே தரையில் கிடப்பது என்று சகல விதமான வதந்திகளையும் சகலரும் சர்ச்சை செய்தார்கள்.

பேங்க் மேனேஜர், கடைக்கு சீல் வைக்கலாம் என்றார். எமர்ஜென்சி காலத்தில் அதெல்லாம் செய்தால் பேங்குக்கு சீல் வைக்கப்படும் என்று தாசில்தார் மிரட்ட இவர் அடங்கிப் போனார். தாசில்தார் மேன்மேலும் இப்படி தைரியமாகப் பேச மனத் தைரியம் அருளும்படி ஆபீஸில் படமாகத் தொங்கிய பிரதமரிடம் மனதில் விண்ணப்பித்தார்.

கழுகு பறந்து இரையைப் பார்த்து இறங்குவதுபோல் சைக்கிளில் வந்து சேர்ந்த நிருபர் கார்மேகம் ஆபீஸ் முடிந்த சாயந்திரம் என்னிடம்

கேட்டது குமரேசன் பற்றி இல்லை.

“கேளு நாயர் வீட்டுலே தேனீ எல்லாம் பிரதமர் ஃபோட்டோ மேலே தினசரி சாயந்திரம் அஞ்சு டு அஞ்சரை உக்கார்ந்து, கும்புடு போடற மாதிரி றெக்கையை உசத்தி வச்சுக்கிட்டு வழிபாடு நடத்தறதாமே... ஒரு நியூஸ் ஐட்டம் தமிழ்லேயும் இங்லீஷ்லேயும் இருபது வாக்கியத்துலே எழுதிக் கொடுங்க போத்தி. அடுத்த மாசம் ஏழெட்டு கல்யாணம். மொய் எழுத காசுக்காகும்” என்றார்.

“அது சரி, ஆர்டிஓ, இல்லேன்னா கட்சி பிரமுகர் யாராவது அதைப் படிச்சுட்டு தேனீயைக் கொட்ட விட்டு நடத்தற அவமரியாதைன்னு கேளு நாயரைப் பிடிக்க வந்துட்டா பேஜார்” என்றேன்.

பேஜார் என்றால் என்ன என்று மட்டும் கேட்டுவிட்டுக் கிளம்பினார் கார்மேகம். சைக்கிளில் ஏறியபடி அவர் சொன்னது, “நம்ம குமரேசன் வந்தாச்சு.” கடையில்தான் இருக்கிறார் என்று துப்பு கொடுத்துப் போனார்.

நானும் ஜெபர்சனும் குமரேசன் கடைக்குப் போனோம். தோழர் கையில் புது காப்பி மெயின்ஸ்ட்ரீம் பத்திரிகை.

எமர்ஜென்சியில் என்னென்னவோ பத்திரிகை தடைப்படுத்தப்பட, அடர்த்தியான சிவப்புப் பத்திரிகையான நிகில் சக்ரவர்த்தியின் மெய்ன்ஸ்ட்ரீம் வார இதழ் மட்டும் எந்தத் தணிக்கையும் தடையும் இன்றி வந்து கொண்டிருந்த காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்தபடி நடந்து கொண்டிருந்தேன்.

எழுதியவர், பத்திரிகை ஆசிரியர், அச்சுக் கோர்ப்பவர், அச்சடிப்பவர், கடைக்காரர், வாசிக்க வாங்கிய வாசகர் என்று யாருக்குமே புரியாத கடார் முடார் விஷயங்களை வாரா வாரம் தொடரும் போட்டு வழங்கிப் போவதால் மெய்ன்ஸ்ட்ரீமை சாய்ஸில் விட்டுவிட்டார்கள்போல.

இருக்கலாம் என்றார் ஜெபர்சன். ‘டிக்ஷனரி வெச்சு படிக்கற பத்திரிகையா இருக்கே’ என்று அவர் அவ்வப்போது சொல்வார். படித்து நான் பார்த்ததில்லை.

குமரேசன் கடையின் கதவு தள்ள உள்ளே திறந்துகொண்டது. மூன்று சுழல்நாற்காலிகள். வாடிக்கையாளர்கள் தலையையோ, முகத்தையோ குமரேசனிடம் ஒப்படைத்துவிட்டு, வெள்ளைத்துணி போர்த்திக் கண்மூடி அவற்றில் இருக்கும் கடை. பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகள் கடையைப் பிரதிபலித்த பிம்பத்தை மறுபடி பிரதிபலித்து, மகா விசாலமான இடமாக பொய் சொல்லிக் கொண்டிருந்தன. பத்துப் பேர் ஒரே வரிசையில் போனால் அறை நிறைந்து போகிற அகலம்தான் அதற்கு.

நட்டநடு நாற்காலியில் உட்கார்ந்து படுசோகமாகக் கடைச் சுவரில் மேலே வரிசையாக மாட்டி வைத்த காந்தி, நேரு தொடங்கி இந்திரா, ஹேமகாந்த் பருவா, ஜனார்தன் பூஜாரி வரைக்குமான தலைவர்களின் புகைப்படங்களை வெறித்துக் கொண்டிருந்தார் குமரேசன்.

அவர் பார்வை கொஞ்சம் கீழே பட்டால், முந்தானை விலகி பக்கவாட்டு போஸில் எல்லா நடிகைகளும் தரிசனமளிப்பார்கள். லாஜிக் இல்லாமல் ஷம்மிகபூரும் பக்கவாட்டில் எதற்கோ திரும்பி போஸ் கொடுத்துக் கொண்டிருப்பார். டிபிகல் சலூன்கடை படங்கள் அவை. அந்தப் படங்களை உற்பத்தி செய்து மலிவு விலையில் விற்க இருபதில் எந்த அம்ச அடிப்படையில் லோன் தரலாம் என்று யோசித்தேன்.

இரு கையும் நீட்டி சுவர்க்கத்திலிருந்து எதையோ விட்டெறியச் சொல்லி மேலே பார்த்து இறைஞ்சும் தோரணையில் குமரேசனின் உள்ளங்கைகள் மன்றாட விரிந்திருந்தன. நான் பக்கத்தில் போக, என்னையும் கடந்து சுவரில் கே.ஆர். விஜயா மேல் வெறுமனே கவிந்து அதற்கும் பின்னால் சுவரைத் துளைத்து சூனியத்தில் நிலை கொள்ளும் பார்வை அது.

“குருவம்மா, உனக்கு அவங்க செஞ்ச துரோகத்தை ஊர்ப் பொதுவிலே தைரியமா சொல்லு. எப்படி நியாயம் கிடக்காம போகும்?”

சலூன்கடையில் இல்லாத யாரோ பெண்ணிடம் ஆதரவாகச் சொன்னார் குமரேசன்.

“குருவம்மா யாரு?”

நான் கேட்டேன், ஜெபர்சன் குமரேசனின் மூக்குக்கு நேரே கை வைத்துப் பார்த்தார். “நாடி சீராத்தான் இருக்கு” என்றார் அவர்.

நான் குமரேசன் தோளைப் பிடித்து உலுக்க, அவர் “குருவம்மா, ஊரைக் கும்பிடு” என்று குரல் தழுதழுத்தார்.

கடையில் இருந்த பால்பண்ணை சொசைட்டி தலைவரும், வக்கீல் குமாஸ்தா அழகிரியப்பனும் சுருட்டு வாசனையோடு அடிவயிற்றைத் தடவிக்கொண்டு, “யாரோ மலையாள மந்திரம் போட்டு ஆளை அரை ஆளா ஆக்கிட்டாங்க” என்று அங்கலாய்த்தபோது நான் முறைத்தேன். கப்சிப் என்று திரும்பிப் போய்விட்டார்கள் இருவரும். இன்னும் ஒரு வாரம் ‘மலையாள மந்திரம்’ சகாயத்தில் என் கண்ணில் படமாட்டார்கள்.

அவசரமாகக் கதவு திறந்து நிருபர் கார்மேகம் உள்ளே ஓட்டமும் நடையுமாக வந்தார்.

“உங்களைத்தான் தேடிக்கிட்டு வந்தேன். அதுக்குள்ளே சீருடை வழங்கும் விழா பத்தி பேசணும்னு ஆர்.டி.ஓ ஆபீஸ்லே கூப்பிடறதா ஐயம்பிள்ளை சொல்லிட்டுப் போறார். சார், பேங்கு சார்.”

அவர் என் தாடையைப் பிடித்து “தயவு பண்ணுங்க போத்தி” என்றார்.

“என்ன ஆச்சு தோழர்?”

“கல்கத்தா இந்தி தெரியுமில்லையா உங்களுக்கு? தலை சீவிட்டு வாங்க. கேமரா இருக்கு.”

சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேச குமரேசனுக்கு மட்டும் உரிமை இருக்கா என்ன?

“குருவம்மா” என்றபடி எழுந்த குமரேசன், “நீ உத்தமி, நீ உத்தமி” என்றபடி இடைவெளி விட்டு இரண்டு தடவை சொல்லி நாற்காலியில் இடித்துக்கொண்டு தரைக்கு வந்தார்.

“நல்லா செஞ்சேனா?” அவர் என்னைத்தான் கேட்டார். என்னத்தை?

“எங்கேயோ இருந்து பொழுது போய்ப் பொழுது விடிஞ்சா தலைதலையா முடி வெட்டிக்கிட்டு, ரேசரை வச்சு உழுதுக்கிட்டே ஆயுசு முடிஞ்சுடும்னு நினைச்சேன். ஆனா அந்தப் பழநியாண்டி அப்படி இல்லேடா மகனேன்னு வாரி வழங்க வந்துட்டான் அப்பூ.”

என் தோளில் தட்டிச் சிரித்தார் அவர். கொஞ்சம் அதிகமாக ஏதோ கலக்கல் திரவம் உள்ளே போயிருக்கிறது போல. மேலதிக விவரம் விசாரித்தேன்.

“அது, தோழர், ராக்கிப்பட்டியிலே அழ அழ ராம அழ தோட்டம் இருக்கில்லே?”

“என்னதுங்க?”

“அழகாபுரி அழகப்பச் செட்டியார் மகன் ராமநாதன் செட்டியார் மகன் அழகப்பன் அண்ணாச்சி இருக்காரே, அவங்க தோட்டத்திலே ரகசியமா, வெளியே தெரிஞ்சு கூட்டம் எதுவும் கூட்டாம, நடக்குதுன்னு சொல்ல வந்தேன்.”

“என்ன நடக்குதுன்னுதான் கேக்கறேன்.”

“பிறகு சொல்றேன். இன்னும் பத்து நாள் கடையை எடுத்து வச்சிருக்கேன். அப்புறமா சீக்கிரமே மெட்றாஸ்தான். அங்கே கடை எல்லாம் நடத்த நேரம் இருக்காது. ஏதோ பழநியாண்டி சொல்றான். செஞ்சுட்டுப் போவோம். என்ன நான் சொல்றது...”

வாசலில் காரோ ரோடு ரோலரோ வந்து நிற்கிற சத்தம். எட்டிப் பார்த்தேன். ஒரு பழைய காரில் பனியன் என்று சுருக்கமாக அழைக்கப்படும் பலதொழில் மனிதர் ஹரன், ஹாரன் அடித்தபடி உட்கார்ந்திருந்தார்.

“யூனிட் வண்டி வந்தாச்சு” என்றபடி, குமரேசன் கல்லாவை சாவி போட்டுத் திறந்து இருந்த பணத்தை பையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

“வாங்க, நாம போகலாம், உங்க ஸ்கூட்டர்லே ஒரு அழுத்தல். போயிடலாம்” என்றார் நிருபர். எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் விளங்கியது.

சினிமாப் படம் எடுக்க ஒரு கோஷ்டி வந்திருக்கிறது. உலகிலேயே முதல் முறையாக ராக்கிப்பட்டியில் ரகசியமாக தனியார் தோட்டத்தில் ஊர்க்கூட்டம் நடக்கிற படப்பிடிப்பு. படத்தில் வங்காளி பேசும் ஒரு பெண் கதாநாயகி. கதாபாத்திரத்தின் பெயர் குருவம்மா. அவளை ஊர்ப் பொதுவுக்கு விசாரிக்கக் கூட்டிப் போகும் ஊர்ப் பெரியவர் குமரேசன். டன் கணக்காக வசனம் பேசும் வேடத்தை அவரைக்கொண்டு செய்ய வைத்திருக்கிறார்கள். அல்லது அவராக நிறைய சேர்த்துப் பேசி கதாபாத்திரமாகவே இரண்டு நாட்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

“போத்தி சார் வந்தாச்சு, போத்தி சார் வந்தாச்சு.”

எனக்கு முன்னால் குதித்து இறங்கி, மூச்சு விடாமல் சத்தம் போட்டுக்கொண்டு ஓடினார் கார்மேகம். தோட்டத்துக்கு உள்ளே புது வேட்டியை மண் தரையில் போட்டுத் தேய்த்து பழசாக்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அழுக்கு வேட்டி உடுத்தியவர்கள் ஒத்தாசை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு முக்காலியில் கல்லூரி எலக்ட்ரீஷியனான புலியேறு பெரிய மீசையை முறுக்கிக்கொண்டு, தலையை அல்லோல கல்லோலமாகக் கலைத்து விட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

“என்ன புலி, வில்லன் கேரக்டரா?” என்றேன் அவர் தோளில் தட்டி.

“இல்லே போத்தி, செகண்ட் ஹீரோ.” அவர் சிரித்தபடி இன்னொருவரை அறிமுகப்படுத்தி, “இவர்தான் ஃபர்ஸ்ட் ஹீரோ” என்றார். புலியேறுவையே கதாநாயகனாக்கி இருக்கலாம்.

“உன்னை நான் எப்போ இருந்து வச்சு இருக்கேன் தெரியுமா?”

கடமுடவென்று பள்ளிக்கூட காம்பௌவுண்ட் ஒதிய மரத்திடம் பேசியபடி வலதுகை மணிக்கட்டில் கட்டிய தோசைக்கல்லுக்கு மேல் ரெண்டு முள்ளு வைத்த ரிஸ்ட் வாட்சில் நேரம் பார்த்தார் நெடுநெடுவென்று

உயரமாக ஒருவர். இரண்டு வினாடிக்கு அப்புறம், “மனசுலே” என்று முடித்தார். ஒத்திகை போல. வில்லனாம்.

ஷூட்டிங் தொடங்க இருப்பதாக நிருபர் என்னிடம் அறிவித்தபடி தேடியது, வங்காளியில் சிரிக்கும் புதுமுகம் ஹீரோயினைத்தான் என்று தெரியும்.

“வில்லன் மேனரிசம், கவனிச்சீங்களா, பேசின வாக்கியம் முடிக்க முன்பு, எப்பவும் வாட்ச்லே டயம் பார்த்துப்பார். க்ளைமேக்ஸ்லே வாட்சை...”

அவர் குஷியாக மேலே போக, “கதையை எல்லாம் பொதுவிலே வைக்க வேணாமே” என்று கத்தரித்துக் கொண்டேன்.

“இது கூட நல்ல பஞ்ச் டயலாக்காக இருக்கும் சார்” என்றார் புலியேறு.

யாரோ வணக்கம் சொன்னார்கள். தழையத் தழைய வேட்டியும் ஜிப்பாவுமாக, கவிஞர் செம்மண். சின்னச் சின்னதாக பொதுப்பணித்துறை காண்ட்ராக்ட் எடுத்து சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். ஊரில் ஆபீஸில் ட்ரான்ஸ்ஃபர், ரிடையர் ஆவது, பூப்புனித நீராட்டு, காதுகுத்து, கல்யாணம், பத்தாம் நாள் காரியம் என்று வரும்போது தகுந்த முறையில் கவிதை எழுதித்தரச் சொல்லி இவரிடம்தான் போவார்கள்.

எழுதி வந்த கவிதையைச் சித்திரம்போல் அழகாக எழுதி படம் போட பள்ளிக்கூட ட்ராயிங் மாஸ்டரிடம் அடுத்தாற்போல் ஒரு நடை. அதை எடுத்துப் போய், இழவுக்குத் தவிர மற்ற கவிதைக்கெல்லாம் முருகேசன் படக்கடையில் கொடுத்து கண்ணாடிச் சட்டம் போட்டு வாங்குவது அடுத்த வேலை. அப்போது அந்தக் கவிதைக்கு அந்தஸ்து ஏகமாகக் கூடிவிடும். கவிதையை நம்பி இத்தனை உபதொழில் செழிக்கும் சூழ்நிலை.

“என்ன ஆசுகவி பாட வந்திருக்கீங்களா கவிஞரே?” என்று விசாரித்தேன்.

“பீஸு கவி”, அவர் கரன்சி நோட்டை எண்ணுகிற சின்முத்திரை காண்பித்தார். தமிழில் கவிதை எழுதி, காசு சம்பாதிக்க முடிந்த ஒரே கவிஞராக இருக்கும்.

“இந்த படத்திலே பாட்டு எல்லாம் நான்தான் எழுதறேன்” என்றார் செம்மண் பெருமையோடு.

“காதல் டூயட்லே இருபது அம்சத் திட்டம் வர்ற மாதிரி எழுதினதை டைரக்டர் ஒகே பண்ணிட்டார்.” பூரிப்புடன் சொன்னார் அவர்.

“காதலர்கள் சாத்தனூர் அணைக்கட்டுலே ஓடிப்பிடித்து விளையாடி பாடறபோது இருபது அம்சத் திட்டம் அங்கே ஏன் வரணும்?”

“காற்றும் கடவுளும் கவர்மெண்டும் இல்லாத இடம் எது?”

“அதுக்காக?”

“நாம காதல் பாட்டுக்குள்ளே சோவியத் நாட்டையே கூட்டி வந்திருக்கோம். இருபதும் அஞ்சும் என் டூயட்டுலே வரக்கூடாதா என்ன?”

சொல்லிவிட்டு செம்மண் பாட ஆரம்பித்தார். சீர்காழியை போலி செய்ய முயன்று தோற்ற குரல் அது.

‘சோவியத்தின் பெருமகளே நீ ஆடு எங்கள்

சொந்தத் தமிழ் மருமகளே நீ ஆடு...’

சீர்காழி கோபித்துக் கொள்வார். அவர் கோபித்துக் கொள்கிறாரோ இல்லையோ, நட்பு நாட்டைப் பரிகசிப்பதை, அதுவும் தேசமே இருபது அம்சத் திட்டத்தை அன்னையின் வழிகாட்டுதலோடு நிறைவேற்றி உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் தருணத்தில், சோவியத் யூனியனைப் பற்றி அபஸ்வரமாகப் பாடவைத்துக் கிண்டல் செய்வதை சர்க்கார் ஒருபோதும் அனுமதிக்காது. பாட்டை நிறுத்தி, செம்மண்ணுக்கு வாழ்த்து சொன்னேன்.

“கவர்மெண்ட் திட்டத்துக்கு சினிமாவிலே பிரசாரம் வச்சா உதவித்தொகை கிடைக்குமாம்” என்றபடி கவிஞர் சந்தத்தில் சிந்திக்கப் போனார்.

என்ன மாதிரி இருக்கும் அந்தப் பாடல் காட்சி?

பேங்க் மேனேஜர்கள் எல்லோரும் வரிசையாக, பெரிய பீப்பாய்களில் பணத்தைக் குவித்து வைத்து, டி.ஏ.எஸ் ரத்தினம் பட்டணம் பொடி விளம்பரத்தில் உலக்கையால் தொட்டியில் மூக்குப்பொடி இடித்தபடி காட்சி அளிக்கும் மீசைக்காரன்போல், காலை வினோதமான போஸில் மடித்து வைத்து உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிச் சுற்றி, ஒண்ணு, ரெண்டு, மூணு என்று இருபது அம்சங்களையும் பாடியபடி ஹீரோவும் ஹீரோயினும் ஓடிப் பிடித்து விளையாடுகிறார்கள். காமெடியனும் அவன் காதலியும் ஐந்தம்சத்துக்கு லிஸ்ட் போட்டபடி குறுக்கே புகுந்து ஓடுகிறார்கள். படுபயங்கரமான காட்சியாக இருக்கும் அது.

உள்ளே களேபரமான சூழ்நிலை. அதன் தீவிரம் கூடிக்கொண்டு போனது. அரிதாரம் பூசுவது என்றால் என்ன என்று கொஞ்சம்போல தெரிந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமைக் காலை நேரத்தைச் செலவு செய்து கற்றுக்கொள்ள வேண்டியதில்லை அதொன்றும். பசியாறாமல் வந்திருக்க வேண்டாம்.

அந்தக் கதாநாயகியைப் பார்த்து நான்கு வார்த்தை மரியாதைக்குப் பேசிவிட்டால் நிருபருக்கு கோஸ்ட் ஆகச் செயல்பட்டு எழுதித் தந்துவிடலாம்.

"சார், பேட்டி."

நிருபர் அழைத்து வந்த அந்தப் பெண் துடியாக இருந்தாள். நல்ல உச்சரிப்போடு இங்கிலீஷ் பேசினாள். எப்படி இந்தக் கும்பலில் வந்து சேர்ந்தாள் என்று புரியவில்லை. கேட்டேன்.

"நல்ல கதை, ஸ்டுடியோவுக்குள் போகாமல் நிஜமான சூழ்நிலையில் படப்பிடிப்பு, குறைந்த மேக் அப் இப்படி."

இதை எல்லாம் பேசிதான் கேட்டுக் குறித்து வைத்து பேட்டிக் கட்டுரையாக எழுத வேண்டும் என்றில்லை.

ஒரு மணி நேரம் கழித்து, எல்லோரும் ரவை உப்புமா சாப்பிட்டு, சாயா குடித்து மெல்ல அங்கே இங்கே திரிந்து, கேமராமேன் வெய்யில்

போயிடும் என்று பயமுறுத்த ஒரு வழியாக படப்பிடிப்பு தொடங்கியது.

கதாநாயகி முன்னால் வர, குமரேசன் பின்னால் முகத்தில் எல்லா பாவமும் காட்டியபடி நடக்க, அவரோடு கூட நான்கைந்து பேர் ஊர்ப் பெரியவர்களாக வந்தார்கள். வங்காளிப் பெண் ‘சபைக்கு வணக்கம்’ என்று கேமரா முன்னால் திரும்பத் திரும்பக் கும்பிட்டு விழுந்தாள்.

“நீங்க ரொம்ப உணர்ச்சி காட்ட வேணாம். சாதாரணமா சோகப்பட்டா போதும்.”

உதவி டைரக்டர் குமரேசனிடம் சொல்ல, சாதா சோகம் காட்டினார் அடுத்த ஷாட்டில். ஆனாலும், வெளுத்த உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

“டைரக்டர் வந்துடுவார். பத்தே நிமிஷம் இருங்க” ஓடிக்கொண்டிருந்த யாரோ என்னிடம் கரிசனமாகச் சொல்லிப் போனார்கள்.

என்னால் இருக்க முடியாமல் வண்டியை உருட்டிப்போய் கண் காணாத தூரத்தில் வைத்து ஸ்டார்ட் செய்து ஓட்டிப் போனேன்.

படம் என்ன, கதை என்ன, எப்போது முடியும் என்று தெரிந்தால் கொஞ்சம் போலவாவது அந்தக் கதாநாயகி சொன்னதுபோல் எழுதிவிடலாம். அவளுக்குத் தெரியுமா என்று சந்தேகமாக இருந்தது. வேறு யாருக்கும் தெரியவும் வாய்ப்பில்லைபோல.

அந்தப் படம் அப்புறம் வெளியாகவில்லை. எடுத்துப் போன ஃபிலிம் ரீல்கள் கேமரா தகராறு காரணமாக இருட்டு கவிந்த மாதிரி வந்திருந்ததை ப்ராசஸிங் நேரத்தில்தான் கவனித்தார்களாம்.

குமரேசன் கொண்டுபோன கடை வருமானத்திலும், தொழில் முன்னேறப் பெற்ற கைவினைஞர் கடனிலும் இன்னும் நான்கு நாள் உப்புமா சாப்பிட்டார்கள் என்று தெரிய வந்தது. ரவை வாங்கிய பணம் முழுக்க வந்து சேரவில்லை என்று பலசரக்கு ஆறுமுகம் சொன்னார்.

கவிஞர் செம்மண்ணுக்கு நெடுஞ்சாலைத்துறை காண்ட்ராக்ட் வேலைகள் பெரியதாக வர ஆரம்பிக்க, கவிதையா காண்ட்ராக்டா என்று பூவா

தலையா போட்டுப் பார்த்து, காண்ட்ராக்டைத் தேர்ந்தெடுத்தாராம். தமிழ்க் கவிதைக்குக் கொடுத்து வைக்கவில்லை.

சாமியே சரணம் ஐயப்பா என்று கறுப்பு வேட்டி கட்டி, தாடி மீசை காடாக வளர்த்து குமரேசனும் எலக்ட்ரீஷியன் புலியேறுவும் சபரிமலை போய் வந்து, பம்பையில் சினிமாக் கனவுகளைக் களைந்துவிட்டு வந்தார்கள். அவரவர் தொழிலில் மூழ்கி இருந்தாலும், அவர்கள் அப்புறம் பூத்திருவிழா நேரத்தில் சமூக நாடகங்களில், 'சினிமா புகழ்' என்று பெயருக்கு முன்னால் அடைமொழியோடு நடித்த கதை ரசமானது.

நான் அந்தப் பேட்டிக் கட்டுரையை எழுதவில்லை. அந்த நடிகையும் அப்புறம் என்ன ஆனார் என்று தெரியவில்லை.

அந்தப் படத்தை, முழுக் கறுப்பாகவே வெளியிட்டிருக்கலாம். நெருக்கடி நிலைமை காலத்தில் வேறு எப்படி எடுக்க முடியும்?

அத்தியாயம் 10

# மார்ச் 1976

கே ளு நாயர் என் தலையில் ஏதோ தேய்க்கிறார். அதை ஒரு பெரிய பித்தளைப் பாத்திரத்தில் நிறைத்து எடுத்து வந்தபடி நிருபர் நீட்டுகிறார். போதும், நேரம் ஆச்சு என்று மேனேஜர் எங்கிருந்தோ வந்து லோன் கொடுக்கக் கூப்பிடுகிறார். வாங்க போகலாம் என்று அவர் என் தோளைப் பற்றி அசைக்க, கிருஷ்ண பகவான் துயிலெழுந்ததுபோல, நான் காலையில் கண் விழித்தபோது நிஜமாகவே கால்மாட்டில் கேளு நாயரும் தலைமாட்டில் நிருபர் கார்மேகமும் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன்.

கலவரமான கனவில் தொடர்ந்து இருப்பதாக நினைத்துத் திரும்ப கண்ணை மூடிக்கொண்டேன்.

“கொச்சே, ஆபீஸ் போகணுமே...”

ஸ்கூல் போக அழிச்சாட்டியம் பிடிக்கும் குழந்தையை நைச்சியமாக எழுப்புகிற மாதிரி பாட்டித் தள்ளையின் குரலும் கேட்டது. எழுந்தே ஆக வேண்டியிருக்கிறது.

பின்னால் இருந்து பாட்டியின் சத்தம் வந்தது. முழங்காலில் எதோ தைலத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள் அவள். கேளு நாயர் உற்பத்தி செய்தது என்று சொல்ல வேண்டியதில்லை. ஆக, சாம்பிள் கொடுத்து என்னை ஈர்த்து இன்னொரு பேங்க் கடன் கேட்கப் போகிற முஸ்தீபில் இருப்பார் போல.

“கால்லே இருந்து சுறுசுறுன்னு ஏதோ உச்சந்தலைக்கு ஏறிட்டு இருக்கு.”

பாட்டி ரன்னிங் காமெண்டரி கொடுத்தாள். அவளுக்கு இனிமேலும் தலையில் முடி வளர்த்து பின்னிப் பூச்சூட்டி அழகு பார்க்க தாத்தா கூட இல்லை.

கேளு நாயர் கண்டுபிடிப்பை உள்ளங்கை நிறைய அள்ளி எடுத்துத் தேய்த்து முழங்காலில் முடி வளரும் சாத்தியம் பயமுறுத்தியது. ஒரு பேச்சுக்கு முழங்கால் வலிக்கு தைலம் வேண்டும் என்று அவள்தான் கேட்டாள் என்றால் உடனே எடுத்துக்கொண்டு கேளு நாயர் ஏன் ஓடி வரவேண்டும்? மிகப் பெரிய சதித்திட்டத்தின் ஒரு மிகச்சிறு சதவிகிதமாக அது இருக்கக்கூடும்.

“போனவாரம் உட்கார்ந்து சேர்மானங்கள்லே கொஞ்சம் மாத்தினேன். நாயுருவியும், சிறியநங்கையும் புதுசா சேர்த்திருக்கேன். மைலாஞ்சியை வஸ்த்ரகாயம் செஞ்சு அதுலே புகை வைச்சு.”

அவர் பாட்டியையும் அவள் மூலம் என்னையும் இம்ப்ரஸ் செய்ய செய்முறைத் தகவல்களை பூடகமான மொழியில் உற்சாகமாகச் சொல்லியபடி, “வாசனை எப்படி இருக்கு?” என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

“தூக்குது போங்க” என்றார் நிருபர் சம்மன் இல்லாமல் ஆஜராகி.

அவர் ஏன் தலைமாட்டில் உட்கார்ந்திருக்கிறார் என்று சைகையால் வினவினேன்.

நியாயமாகச் சொல்லப்போனால் அவருடைய தொண்ணூறு சதவிகிதம் வழுக்கையாகிப் போயிருக்கும் தலைக்குத்தான் கூந்தல் தைலம் தேவை. கேளு நாயர் தன் கண்டுபிடிப்புகளையும், செறிவாக்கிய படைப்புகளையும் சோதனை செய்து பார்க்க வேண்டியது நிருபர் போன்ற எப்போதும் துடியாக இருக்கிறவர்களின் தலைமேல்தான். என்ன செய்ய, அதற்குப் பைசா வருமானம் இல்லை. பாட்டிக்குக் கொடுத்தால் அவளும் நானும் கை நிறைய இல்லாவிட்டாலும் கணிசமாக வெகுமதி வழங்கக்கூடும்.

“நாயுருவியைப் போட்டதே உங்க கால் வலியை நினைவிலே வச்சுத்தான். எல்லாத்துக்கும் ஒரே ஔடதம்னு ஆனபடியால், எல்லா மூலிகைக்கும் நம்ம சர்வரோக நிவாரணியிலே இடம் இருக்கே?”

தனக்கு ஒரு மெரிட் சர்ட்டிஃபிகேட் கேட்டு வாங்க கேளு நாயர் காத்திருந்தபோது, நிருபர் “மினிஸ்டர் வரப் போறார். சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்” என்றார். கொட்டாவியை அடக்க முடியவில்லை.

“மேனேஜர் கிட்டே சொன்னா போதாதா, காலையிலே எழுந்ததும் முத்து முத்தா இருபது அம்சம் அத்தனைக்கும் நம்ம வம்சம்னு கொட்டாவி விட்டுக் குழல் ஊத வைக்கறீங்களே…” என்றேன்.

அவர் முதுகு மறைகிறவரை காத்திருந்துவிட்டு கேளு நாயர் சொன்னார்: “மோள்க்கு ஒரு விசேஷம்.”

நான் எந்த விதத்திலும் அதில் சம்பந்தப்படவில்லை என்று அவசரமாகச் சொல்லியபடி எழுந்து நின்றேன். சதியாலோசனையின் அடுத்த கட்டமோ… அப்படித்தான் தெரிகிறது.

“அய்யே, அதெல்லாம் இல்லே. என் மோள் பத்தி நானே சொல்வேனா அப்படியெல்லாம்? இது வேற விஷயம்.”

அவர் பொடி மட்டையை எடுத்துத் திறக்க, பிடுங்கி வைத்தேன். அவர் பொடி போடும்போது அருகிலிருந்தால், இன்று முழுக்க அவருக்கு ஆதரவுத் தும்மல் போட்டுக்கொண்டே இருக்கவேண்டி வரும்.

“விஷயம் என்னன்னு கேட்டா, பாருகுட்டிக்கு தலைமுடி வளர்ந்துகிட்டே இருக்கு” என்றார் நாயர்.

மினிஸ்டர் வருவதுபோல இன்னொரு முடித் தகவல். அதைக் கேளு நாயர் எடுத்து விடுவது தன் தைலத்தின் மகிமையைச் சொல்லித் தொழில் முன்னேற்றத்துக்காகக் கடன் வாங்க என்று இருக்கலாம்.

“எவ்வளவு வேணும்?” நான் கேட்க, அவர் அது இல்லை என்று தலையை இடவலமாக ஆட்டினார். புரியாமல் நான் பார்க்க, வல இடமாகவும் பொடிக்கடை வாசல் விளம்பரப் பொம்மை மாதிரி திரும்ப

ஆட்டி, “ஒரே நாள்லே ரெண்டு சென்டிமீட்டர் வளர்றது தலைமுடி” என்றார். அவர் கண்கள் பயத்தில் வெறித்து ஒரு வினாடி இருந்து சகஜ நிலைக்குத் திரும்பின.

“நல்லதுதானே” என்றேன் சமாதானமாக.

“நிச்சயமா இல்லே. ஒரு நாளுக்கு ரெண்டு சென்டிமீட்டர். ஒரு வாரத்திலே பந்த்ரெண்டு.”

பதினாலு இல்லையோ. ஞாயிற்றுக்கிழமை முடி வளராதோ? ஒரு மாசத்துலே ஐம்பது சென்டிமீட்டர் என்றார் அவர். திரும்ப கணக்கு பிசகு. இருந்தாலும் உண்மைதானாம்.

நிலைமையின் பயங்கரம் எனக்கு அப்போது உறைத்தது. இன்னும் ஒரு மாதம் போனால் அவளுடைய தலைமுடியைச் சுமந்துகொண்டு அவளுக்குப் பின்னால் வர சம்பளத்துக்கு ஆள் போடவேண்டிவரும்.

“எப்போது இருந்து இப்படி?”

நிஜமாகவே கரிசனத்தோடு கேட்டேன். அவ்வளவு முடியை வைத்துக்கொண்டு குளிக்க, பாத்ரூம் போக, தரையில் உட்கார்ந்து சாப்பிட, கட்டிலில் படுத்து உறங்க எப்படி சாத்தியம்?

“நான் இப்போ தினம் கண்டிக்கறேன்.” அவர் சமாதானமாகச் சொன்னார்.

“இதுக்காக பாருகுட்டியைக் கண்டித்து என்ன புண்ணியம்!”

“அந்தக் கண்டிப்பு இல்லே. மலையாளம். கண்டிச்சு. வெட்டிப் போடறது.”

புரிந்தது. தினமும் முதல் வேலையாக யாரோ பாருகுட்டியை உட்கார வைத்து அவள் கூந்தலில் ஏற்பட்டிருக்கும் அதிக நீளத்தைக் கத்தரிக்கோலால் களைந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு நிலையான தீர்வு இல்லை.

“பத்து வருடக் கணக்கை எழுதி பட்டியல் நீட்டுகிறோம்.”

மனதில் இருபது அம்சத் திட்ட விளம்பரம் வந்து போனது. இளைஞர் குழு சத்தம் எழுப்பி எமர்ஜென்சி கீதம் பாட இன்னும் பயங்கரமாக இருந்தது சூழல்.

கஃப்கா கதையில் பூச்சியாக மாறும் கிரிகர் சம்ஸாபோல ஆகப் போகிறாள் பாருகுட்டி.

இது ஞாயிறு சாயந்திரத்திலிருந்து நடக்கிறதாம். குடிசைத் தொழில் முன்னேற்றத்துக்காக மாதர் சங்கத்தில் ஒரு விழா நடத்தினார்களாம். காப்பியும் பிஸ்கெட்டும் கவர்மெண்ட் செலவில், கேளு நாயர் மூலம் சப்ளை செய்யப்பட்டதாம். கூட்டத்தில், தேனீ வளர்ப்பு பற்றி பாருகுட்டி மைக்கைப் பிடித்துப் பேசிக் கொண்டிருந்தபோதே தலையில் ஜிவ்வென்று ரத்தம் அதிகமாகப் பாய்ந்ததாக உணர்ந்து சீக்கிரமே பேசி முடித்து உட்கார்ந்தாளாம்.

தேனீ எப்படி வளர்ப்பது என்று அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், முதலில் அதற்காக பேங்க் கடன் எப்படி வாங்குவது என்று சகல மாதரும் ஆவலோடு கேட்க, கடன் நிபுணர்களான நிருபரும் கேளு நாயரும் பேசினார்களாம்.

நேற்றும் முன் தினமும் கடன் படிவம் எழுதி, புகைப்படம் எடுத்தாகிவிட்டது என்று தெரிந்தது. கடன் படிவம் வேறு பேங்கில் வாங்கினதாம். அதைப் பற்றி என்ன? எல்லா பேங்குக்கும் ஒரே முகம்தானே, அதுவும் எமர்ஜென்சியில் கொடு என்றால் கொடுக்க பேங்க் கிளை எல்லாம் சௌகரியமான இடங்கள்.

வீட்டுக்கு வந்து பார்த்தபோது தலைமுடி கூடி இருந்ததைப் பாரு கண்டுபிடித்தாளாம். அது வழக்கமாக கூடத்துச் சுவரில் இந்தியா - இந்திரா படத்துக்கு நேரே நின்றால் இந்தியா மேப்பில் மதுரை வரை இருக்குமாம்.

இப்போது கன்யாகுமரி வரை இருப்பது மட்டுமில்லாமல் அதையும் கடந்து இந்தியப் பெருங்கடலில் இறங்கிக் கொண்டிருக்கிறதாம்.

“திடீர்னு தலைமுடி ஏன் அதிகமாகணும்? சாப்பாட்டிலே ஏதாவது மாற்றம் உண்டா?” நான் கேட்டேன்.

“இல்லையே, சோறும் கூட்டானும், மெழுக்குபிரட்டியும், புட்டு, கடலையும், பழம்பொறியும் பின்னே, அயிலைமீன், மத்தி, செம்மீன், ஆடு, கோழி.”

உலகில் சகலமான வஸ்துகளையும் ஒரு பிடி தேங்காய் துருவிப் போட்டு பாருகுட்டி சாப்பிட்டுவிடக் கூடியவள் என்று புலப்பட்டது. ஆனால் வருடக்கணக்காக வரும் இந்த உணவுப் பெரும் பழக்கத்தில் எந்த மாற்றமும் இல்லை.

“வேறே, சோப் உபயோகிக்கறதுலே, தலைக்கு சீயக்காய் போடறதிலே, ஷாம்பு போடறதிலே எதாவது சேஞ்ச்?”

“ஒரு சேஞ்சும் இல்லே. நான் உண்டாக்கிக் கொடுத்த தைலம்தான் தலைக்குப் புரட்டுகிறாள் தினசரி.”

“சரி, அந்தத் தைலத்தில்... ஸ்டாப். நீங்க தைலத்திலே புதுசா மூலிகை ஏதோ...”

“ஆமா, தைலத்தில் புது வஸ்துகளாக நாயுருவி, சிறியநங்கை என்று சேர்த்துக் காய்ச்சிய பிறகுதான் இப்படி தலைமுடி பொங்கிப் பூரித்து வளருது.”

ஏன் அப்படிப் பண்ணினீங்க என்று கேளு நாயரைக் கேட்டேன்.

பாட்டித் தள்ளையோட முழங்காலையும் கவனிக்க வேண்டியிருக்கே என்று கரிசனம் காட்டினார் அவர்.

“அதுக்காக பாருகுட்டி தலைக்கும் பாட்டித்தள்ளை பார்கவிகுட்டி முழங்காலுக்கும் ஒரே சோசலிஷ மருந்து என்பது கொஞ்சம் ஓவர் இல்லையா அம்மாவா?”

“அதே கொச்சே” என்று இறங்கி வந்தார் அவர்.

“சரி, நடந்தது நடந்தாச்சு. இப்போ என்ன பண்ணணும்? நீங்க என்ன செய்யணும்? இதிலே நான் எங்கே வரேன்? பார்கவிகுட்டி பாட்டி எங்கே வர்றா? பாருகுட்டி தலையை விரிச்சுப் போட்டுக்கிட்டு எங்கே வர்றது?”

“அவளை மதுரைக்கு ராஜாஜி ஆஸ்பத்திரி கூட்டிப் போகலாம்னு இருக்கேன். கொஞ்சம் நீயும் கூடவே வந்தா ஒத்தாசையா இருக்கும்” என்றார் கேளு நாயர்.

“ஆபீஸ் இருக்கே...” என்றேன்.

“பொல்லாத ஆபீஸ்... நீ சேர், டேபிள் போட்டு உக்கார்ந்து கொடுக்கற லோனை வேற ஒருத்தர் கொடுக்க மாட்டாரா என்ன?” என்று துச்சமாக பேங்க் வேலையைக் காலால் எத்தினார்.

ஒரே ஒரு நாள் லீவு கேட்டேன். ஆயிரம் கிளைகளும் ஐயாயிரம் ஊழியர்களும் இருக்கப்பட்ட பேங்க், சங்கரன் போத்தியாகிய நான் ஒரு நாள் கேஷுவல் லீவ் எடுத்தால் தவித்துத் தடுமாறித் திசைகெட்டுப் போகும் என்பதை எனக்குப் புரிய வைக்க மேனேஜர் படாதபாடு பட்டார்.

ஒரு வழியாக அவருக்கு நம்பிக்கை டானிக் ஊட்டி, கூப்பிடு தூரத்திலிருக்கும் மதுரைக்குத்தான் போகிறேன். ஏதாவது குழப்பம் ஏற்பட்டு பேலன்ஸ் ஷீட் இடவல மாற்றத்தோடு நாளை முதல் எழுதப்படும் என்று சட்டம் வந்தாலும் கவலை இல்லை, அதற்காக ஆவன செய்யப்படும். உறுதி அளித்து வெளிவந்தேன்.

“ஸ்கூட்டர்லேயே போயிடலாமே. அட்ஜெஸ்ட் பண்ணி உக்காந்துக்கலாம்” என்றார் கேளு நாயர்.

மூன்று பேர், அதிலும் ஒரு உருப்படி, நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாகும் நீளமான தலைமுடி உள்ள கன்யகை. மதுரை போய்ச் சேர்ந்து திரும்ப முடியும் என்று உத்தரவாதம் கொடுக்க இயலாத காரணத்தாலும், ஸ்கூட்டரில் உபரி இடம் இல்லாத காரணத்தாலும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கேளு நாயரோடு ஸ்கூட்டரில் போய் அவர் வீட்டில் வண்டியை வைத்துவிட்டு, பாருகுட்டியையும் கூட்டிக்கொண்டு பஸ் ஸ்டாண்ட்

போனோம்.

ஜன்னல் ஓர சீட், முகமூடி காமிக்ஸ் புக், வெள்ளரிப் பிஞ்சு என்று பாருகுட்டியின் ரகவாரியான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. எல்லாம் என் செலவுதான்.

வண்டி கிளம்பும்போது பலாச்சுளை வேண்டுமென்று ஜன்னல் வழியே பார்த்து கூடைக்காரம்மாவை அவள் கூப்பிட நிர்தாட்சண்யமாக அந்தக் கோரிக்கையை நிராகரித்தேன். பலாப்பழ வாடை அடிக்கும் வாயோடு என் பக்கத்தில் அவள் இருக்க, ஒரு மணி நேரம் நான் உட்கார முடியாது. மூச்சு முட்டி இறந்து போவேன்.

ஜெயவிலாஸ் பஸ் மதுரை மதுரை என்று கூவி அழைத்தபடி தெருவோடு போனவர்களையும் மதுரைக்கு வர நப்பாசை காட்டியபடி ஊர்ந்தது. மணிக்கு இரண்டு மதுரை பஸ் என்று ஏற்பட்டது, ஆமாம், அதேதான், நெருக்கடி நிலைமை அமலானதும், மக்கள் நலத்துக்காக இருபதம்சத் திட்டத்தின் கீழ்...

இப்போதெல்லாம் ஒரு கைக்குட்டை வாங்கவேண்டும் என்றால் கூட பஸ் பிடித்து மதுரை போகிற கூட்டம் ஊரில் கூடிப் போயிருக்கிறது.

'மேலமாசி வீதிவரைக்கும் போனேன், கீழ மாரட் ஸ்ட்ரீட்லே மெஸ்ஸுலே சாப்பிட்டேன்' என்று படு கேஷுவலாக மதுரைத் தெருக்களை ஊர்ப்பெயர் சேர்க்காது 50 கிலோமீட்டர் தூரத்து சிறுநகரவாசிகளான நாங்கள் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறோம். மதுரையின் புறநகர் என்ற அடையாளம் கிடைக்கக்கூடும் விரைவில். செம்மண் பூமியின் வரலாற்றுச் சிறப்பு கொண்ட ஊர் என்ற பழைய பெருமை எல்லாம் யாருக்கு வேண்டி இருக்கிறது.

ஒரே ஒரு ஆறுதல். கோயிலுக்குப் போய் வந்ததை மட்டும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போனேன் என்பதுபோல் ஊர்ப் பெயரோடுதான் சொல்லப் பிடிக்கிறது சகலமானவர்களுக்கும்.

அரண்மனை வாசல் பக்கம் பூப்போட்ட கர்ச்சீபால் முகத்தை ஒத்திக்கொண்டு, பவுடர் மணக்கக் காத்திருந்த மதுரை கலெக்டர் ஆபீஸ்

ஸ்டெனோ கோகிலாவுக்காக பஸ் நின்றது. ஒரு பெரிய ப்ளாஸ்டிக் கூடையில் கமகமவென்று கொத்தமல்லி, இஞ்சி மணம் வர அவளுடைய பகல் சாப்பாடு பார்க்காமலேயே பசியைக் கிளப்பியது.

ராஜாஜி ஆஸ்பத்திரியில் பெயர், விலாசம் எல்லாம் பதிந்து சீட்டு வாங்கிக்கொண்டு உள்ளே போனால், ஒரு மணி நேரமோ, இரண்டு, மூன்று அல்லது ராத்திரி ஒன்பது வரையோ ஆகலாம். இது முதல் நிலைப் பரிசோதனைக்கு. அப்புறம் அடுத்த நாள், அடுத்த வாரம் என்று அடுத்த சந்திப்பு. மருந்து மாத்திரை அங்கேயே வாங்கிக்கொள்ளலாம்.

டாக்டர்களை சந்தேகம் கேட்டால், 'தெரிஞ்சு என்ன பண்ணப் போறே' என்ற மேட்டிமைப் பார்வையோடுதான் பதில் சொல்வார்கள். ஒன்றிரண்டு சிரித்த மூஞ்சி இளைய டாக்டர்களும் நடுவயதாவதற்குள் தொந்தியும் தொப்பையும், முன் வழுக்கை, பின் வழுக்கையும், சதா சிடுசிடுப்போடு கூடிய முகமுமாக ஆகிவிடுவார்கள். வழுக்கை சரி, தானே வருவது. தொந்தியோடு வரும் டாக்டர்கள்? வேண்டாம். இதற்குள் ஒரு சென்டிமீட்டர் பாருகுட்டியின் கூந்தல் வளர்ந்துவிடக்கூடும்.

"கத்தரிக்கோல் கொண்டுவந்திருக்கியா?" என்று விசாரித்தேன் அவளிடம்.

"இல்லையே... வாங்கிட்டு வரப் போறேன்னா காராசேவும் சேர்த்து வாங்கிட்டு வந்துடு" என்று ஆணையிட்டாள் அவள்.

நினைத்ததற்கு நேர்மாறாக ஆஸ்பத்திரி உள்ளே போக, அதாவது படிவம் பூர்த்தி செய்து சரிபார்த்து உள்ளே போக பத்து நிமிடம்தான் பிடித்தது. டாக்டரைப் பார்க்க இன்னொரு பத்து நிமிஷம் உட்காரவேண்டிப் போனது.

அவர் அவசரமாக உள்ளே நுழையும்போது எல்லோரையும் விட்டுவிட்டு கேளு நாயரிடம் கை குலுக்கி "ஐ யாம் லூக் தேவ ஆசிர்வாதம். காக்க வைத்ததுக்கு மன்னிக்கவும். இன்னொரு பேஷண்ட் அவசரமாக வந்தாங்க."

எல்லாம், ஆமா, அதேதான், இருபது அம்ச, இருபத்தஞ்சு அம்ச...

நாங்களும் இருக்க, அவர் பாருகுட்டியை பரிசோதிக்க ஆரம்பித்தார். நின்று, உட்கார்ந்து, மண்டி போட்டு என்று எதுவும் சரிப்படாமல், பெட்டில் படுக்கச் சொன்னார். வாயைத் திறங்க என்றார்.

முடிவளர்வதற்கு எதற்கு வாயைத் திறக்கணும்? வேண்டாம், கேட்டால் கோபித்துக்கொள்வார். நெருக்கடி நிலை வந்தாலும், மனுஷன் கோபித்துக் கொள்ளவும், துன்பப்படவும் அழவும், சிரிக்கவும் இன்னும் சுதந்திரம் உண்டு.

டாக்டர் என்றால் கருணை பொழியும் முகத்தோடு, நவராத்திரி சினிமாவில் டாக்டராக வரும் சிவாஜி மாதிரி சதா ஆசிர்வதித்துக்கொண்டு தேவ ஆசீர்வாதம் டாக்டர் இருக்க முடியுமா?

சரிதான், ஆனால் அவரும் சர்க்கார் உத்தியோகஸ்தர் அன்றோ. அவரை அவமதிப்பதும், ஆத்திரமடைய வைப்பதும் தேசவிரோதமான செயல் ஆகுமே.

குஜராத்தில் மக்கள் ஒட்டுமொத்தமாக இப்படி யாரையோ அவமதித்துத்தான் போன வாரம் அங்கே மாநில அரசை சீட்டுக் கிழித்து டிஸ்மிஸ் செய்துவிட்டார் இந்திரா காந்தி. கபர்தார்.

“வாயிலே புண் இல்லே. வயத்திலே இருக்கலாம்” என்றார் டாக்டர் பாருகுட்டி வாயில் டார்ச் அடித்துப் பார்த்த பிறகு.

“என்ன ஆகாரம் சாப்பிடறாங்க?”

கேளு நாயரை முந்திக்கொண்டு நான் அவளுடைய தலைமுடிப் பிரச்சனையைச் சொன்னேன்.

“இன்டரஸ்டிங், மனுஷர்கள் என்றால் தலைமுடி வளரத்தான் செய்யும். பலபேரோட பிரச்சனையே முடி கொட்டிப் போறதுதான். நீங்க அதிர்ஷ்டம் செஞ்சவங்க ஆச்சே.”

அவர் உற்சாகம் ததும்பும் முகத்தோடு பாருகுட்டியைப் பார்க்க அவள் வெட்கத்தோடு தலை கவிழ்ந்து கொண்டாள். விவஸ்தை இல்லாத வெட்கம். இங்கே எதுக்கு அது?

“எதோ க்ளாண்டுலர் இம்பாலன்ஸா இருக்கும். என்னன்னு தெரிஞ்சுதுன்னா சிகிச்சை ஆரம்பிக்கலாம்” என்றார் டாக்டர் யோசனையோடு தன் தாடியைத் தடவிக்கொண்டே. என்னமோ தோன்ற டார்ச் விளக்கை பாருகுட்டியின் கண்ணுக்குள் அடித்துப் பார்த்து நாக்கை நீட்டச் சொன்னார் அவர்.

அந்த வினாடியின் பயங்கரம் சொல்லவொண்ணாதது. யட்சிக் கதை, ரத்தக் காட்டேறி வேம்பயர் கதைபோல வெளிச்சம் போட்ட கண்ணும், திறந்த வாயுமாக அழகான லேடி ட்ராகுலாவாகத் தெரிந்தாள் பாருகுட்டி. அவள் வாயிலிருந்து குட்டிப் பிசாசு குதிக்கப் போகிறது என்பதுபோல் நாங்கள் பார்த்தபடி இருக்க, பாருகுட்டி கண்ணை மூடிக்கொண்டாள். அப்புறம் எழுந்திருக்கவே இல்லை.

“தூங்கிப் போயிட்டாங்க.”

அவசரமாகச் சொன்னார் டாக்டர். நாங்கள் வேறு எதையாவது நினைத்து பயந்து விடக்கூடாது என்ற பொறுப்பு தெரிந்தது அவர் குரலில்.

அவர் சொல்லவே அவசியம் இல்லாமல் பாருகுட்டியின் சன்னமான குறட்டை ஒலி அடுத்து ஆர்கெஸ்ட்ரா இசைபோல் ஒலிக்கத் தொடங்கியது. ஸ்வரம் தப்பாமல் ஒலியெழுப்பி உறங்கினாள் பாருகுட்டி.

“எழுந்ததும் கூட்டிப் போகலாம், அடுத்த செவ்வாய்க்கிழமை வாங்க” என்றார் டாக்டர்.

“நீங்க உங்க டெஸ்ட் எல்லாம் முடிச்சாச்சா?” என்று விசாரித்தேன். போதும், இது போதும் என்றார் அவர். ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், ஸ்டூல் சாம்பிள்?

“எதுவும் வேணாம். ஷி இஸ் பெர்ஃபெக்ட்லி ஆல்ரைட். தலைக்கு எண்ணெய் தடவாம ரெண்டு நாள் வச்சுப்பாருங்க. சரியாகலாம். எப்படி இருந்தாலும் அடுத்த செவ்வாய் வந்து காட்டிட்டுப் போங்க” என்றார் அவர்.

“முடி ஏதாவது சாம்பிளுக்கு வேணும்னா வெட்டிக்குங்க டாக்டர்” என்று பெரிய மனது பண்ணினார் கேளு நாயர்.

அதெல்லாம் ஒண்ணும் வேணாம் என்றபடி டாக்டர் வெளியே போகும்போது நிருபர் கார்மேகம் இன்னும் இரண்டு பேரோடு வேகமாக வந்து சேர்ந்தார்.

“நல்லவேளை, இங்கே எல்லாரையும் தெரியும். அதான் உடனே நீங்க எங்கே இருப்பீங்கன்னு தெரிஞ்சு வந்துட்டேன்” என்றார் அவசர உற்சாகத்தோடு.

“என்ன சார், என்ன விஷயம்? முடி விஷயமா ஏதாவது பிரச்சனையா?”

டாக்டர் உஷாராகிவிட்டார்.

“அதொண்ணும் இல்லை, எம் பொண்ணு என் தைலம் எங்க வீட்டு முடி...” என்று உளறினார் கேளு நாயர்.

“பத்திரிகையிலே இந்த முடி வளர்ச்சி அதிசயத்தை வெளிப்படுத்தத்தான் வந்தது. எம்.எல்.ஏ தேர்ந்தெடுத்த மாவட்டக் கூந்தல் அழகி, அகில உலக முடியரசி ஆகிறார்னு தலைப்பிலே நாளைக்கு செய்தி வரும் பாருங்க.”

கேமராவோடு வந்த ஒரு ஒல்லி ஆசாமி ஃப்ளாஷ் அடிக்க, கூட வந்த ஜிப்பாக்காரர் டாக்டரிடம் வயது கேட்டார். எதற்கோ அது.

அதெல்லாம் தர முடியாது என்று டாக்டர் மறுக்க, இந்தத் தகவல் ஆர்.டி.ஓ ஆபீஸுக்கு வேண்டி இருக்கு என்றார் மூன்றாவதாக வந்த நடுவயதுக்காரர்.

கஸ்பா டெபுடி தாசில்தார் என்றார் அவர். அப்படி என்றால் என்ன வேலை எனத் தெரியவில்லை. போகிறது. புரபேஷனரி ஆபீஸர் என்று பேங்கில் என்னை உட்கார வைத்துச் சம்பளம் கொடுக்கிறார்களே, கடன் படிவம் பூர்த்தி செய்து ரேகை புரட்ட வைப்பது தவிர என்ன வேலை இந்தப் பதவிக்கு உண்டு என்று நான் கேட்கிறேனா, இல்லை அவர்கள்தான் சொல்கிறார்களா?

“வெளியே போய் பேசுங்க, ப்ளீஸ்” என்றார் டாக்டர்.

வெளியே இரைச்சலாக இருக்க, பாருகுட்டி தன்பாட்டுக்கு உறங்கிக் கொண்டிருந்தாள். படுத்த இடத்தில் தூக்கம் என்று இருந்தால் பிரச்சனையே இல்லை. அது மற்றவர்களுக்கு. பெண்களுக்கு வேறு வினையே வேண்டாம்.

நான் எதிர்பார்த்ததுபோல் கேளுநாயர் தேனீயாகச் சீறி வந்து கொட்டவில்லை. டாக்டரும் சுமுகமாக வெளியே போய்விட்டார். நான் எனக்கு இதெல்லாம் சம்பந்தமில்லை என்று ஆலோசனை அறை வாசலில் நின்றேன்.

மதுரை நிருபருக்கு மூலிகைத் தைலம், சர்வரோக நிவாரணி ரோமவர்த்தினி பற்றி உற்சாகமாகச் சொல்லிக்கொண்டிருந்தார் கேளு நாயர். அந்த உற்சாகம் தொற்றி மதுரை நிருபரும் ஒரு புட்டி ரோமவர்த்தினி ஆர்டர் செய்யக்கூடும் என்று எதிர்பார்த்தேன். அவரோ நிஜமாகவே சாம்பிள் உண்டா என்று கேட்டார். கேளுநாயரின் சாம்பிள் வெறி அங்கங்கே தைலம் சாம்பிள் கொடுத்து காசு கிட்டாமல் போனதில் வந்ததாக இருக்கும்.

“நீங்க வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கப்பட்டவர் இல்லையா?” மதுரை நிருபர் கண்ணாடியைத் துடைத்துப் போட்டபடி கேளு நாயரைக் கேட்டார். நாயர் பலமாகத் தலையசைத்து மறுத்து, “ஞான் கொல்லங்கோடு சுதேசி” என்றார்.

“இந்திரா அரசின் மக்கள் நலத்துக்கான நடவடிக்கைகள் உங்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கின்றன என்கிறீர்களா?”

கேளு நாயர் முழிக்க, “இவங்க வீட்டு கூடத்துலே மோதிலால் நேரு, இந்திராம்மா, அப்புறம் அவங்க அத்தை அவங்க மாதிரியே ஆம்பளை கிராப் பண்ணியிருப்பாங்களே…” என்று பீடிகை போட்டார் நமது நிருபர். விஜயலட்சுமி பண்டிட்டா என்று எடுத்துக் கொடுத்தார் மதுரை நிருபர்.

“இல்லே ஓப்போள் நேரு.” கேளு நாயர் விடாமல் பிடிக்க, நான் ஓப்போள் என்றால் அக்கா, மலையாள பேச்சு வழக்கு என்றேன்.

என்னென்னமோ விதமாகக் கேட்டுச் சரணம் பாடி, ஒவ்வொரு சரணத்தின் முடிவிலும் பல்லவிக்குத் திரும்பி வருவது மாதிரி, “இந்திரா காந்தியின் இருபது மற்றும் சஞ்சய் காந்தியின் ஐந்தம்சத் திட்டத்தால் விளைந்த நன்மை இது. அப்படித்தானே” என்று கேட்க, வெறுத்துப் போய் இருபத்தைந்து அம்சத் திட்டத்தால்தான் வீட்டில் தேனீ வளர்த்து அதிக தேனும், அதனால் அதிக வருவாயும், அதனால் அதிக உணவும், அதனால் அதிக தலைமுடியும் வந்தது என்று கேளு நாயர் ஒப்புக்கொண்டார் ஒரு வழியாக. முடியே போச்சு.

பாருகுட்டியைக் கண் மூடிப் படுத்தபடி புகைப்படம் எடுத்து ‘எமர்ஜென்சியில் ஆனந்தமாகத் தூங்கும் அழகி’ என்று போடப் போகிறார்களே என்ற முன்யோசனையோடு, படம் எடுக்க வேண்டாம் என்று சொல்லி வைத்தேன்.

“அதெல்லாம் எதுக்கு ஃபோட்டோ, பாத்தா போதாதா எழுத?”

நிருபர்கள் எழுந்து சிரித்தபடி போஸ் கொடுக்கச் சொல்லி கேளு நாயரைப் புகைப்படம் எடுத்தார்கள். கழுத்து எலும்பும் கன்னத்து எலும்பும் பிரதானமாகத் தட்டுப்பட சர்க்கார் எமர்ஜென்சி விளம்பரத்தில் கடன் உதவி பெறும் மாடல் நலிந்தோர் மாதிரி இருந்தார் அவர். சட்டைப் பையில் பேனா உறுத்தலாகத் தெரிய அதை எடுத்து என்னிடம் கொடுத்து வைத்தார்.

புகைப்படம் எடுத்து, நான்கு கேள்விகள் கேட்டு, வேண்டிய பதிலும் கிடைத்த திருப்தியில் அவர்கள் கிளம்பினார்கள்.

“வாங்க, கேண்டீன் போய் வடையும் டீயும் சாப்பிட்டுப் போகலாம். இங்கே பருப்பு வடை நல்லா இருக்கும்” என்றார் நிருபர். ஆஸ்பத்திரி கேண்டீன் உணவை சிலாகிக்கிற, அதைச் சாப்பிட பஸ் பிடித்து வருகிறவரை இப்போதுதான் பார்க்கிறேன்.

இங்கே மக்னீஷியம் கார்பனேட் மிக்சர் கரைத்து ஊற்றி பருப்புவடை சுடுவார்கள்போல.

இதுவரை எதுவும் பேசாத ஆங்கிலப் பத்திரிகைக்காரர், கன்னடத்திலோ துளுவிலோ மெதுவாக ஏதோ கேட்டார். நமது நிருபர் “முடியை குறைக்க வந்திருக்காப்பலே” என்றார் அதற்குப் பதிலாக. இவருக்கு எல்லா பாஷையும் அத்துப்படி என்று அர்த்தமில்லை. கேள்வி என்று கேட்கப்பட்டால் அதற்கு ஒரு பதில் இருக்க வேண்டும் என்பதில் திடமான நம்பிக்கை வைத்தவர் இவர்.

ஆங்கிலேயர் வாட் என்று தொம்மென்று ஒற்றை வார்த்தை உதிர்க்க, இவர் தலையில் கத்தரிக்கோலால் நறுக்குவதுபோல் அபிநயம் பிடிக்க, அடுத்த பிரச்சனை ஆரம்பம்.

“அரசு நலத் திட்டத்தில் நலனடைந்த குடும்பம். அரசு விழாவில் மாவட்ட அளவில் சிறந்த, நீண்ட சிகைக்காகப் பரிசு பெற்றது, தாசில்தார் சர்ட்டிஃபிகேட் இல்லாமல் எப்படி அதை வெட்டிக் களைய முடியும்? நேஷனல் ட்ரஷர். தேசியச் செல்வம். சொல்லாமல் அதெல்லாம் கூடாது. டாக்டர் வைத்தியம் பார்த்து முடியைக் குறைக்க முயற்சி எடுக்கவும் கலெக்டர் பெர்மிஷன் வேணும். இருபதம்சத் திட்டத்தில் ஒழுங்குமுறைப்படி அனைத்தும் மக்கள் நலனுக்காக நடக்கும் வேளையில்...” எட்சட்ரா, எட்சட்ரா.

ஆங்கிலப் பத்திரிகைக்காரர் ஓயாமல் பேச இடையூறாக இருமல் வந்து சற்றே அடங்கினார். பருப்புவடை சாப்பிட நானும் நிருபர்களோடு போனேன்.

“இந்தியா வெர்சஸ் வெஸ்ட் இண்டீஸ் செகண்ட் டெஸ்ட் மேட்ச்லே சுனில் கவாஸ்கர் 156 ரன். பிஷன் சிங் பேடி எண்பத்துரெண்டு ரன்னுக்கு அஞ்சு விக்கெட். பிரமாதமான ஸ்கோர். செகண்ட் இன்னிங்ஸ் முடிக்க முடியாது.”

ஆங்கிலப் பத்திரிகையாளர் வடையைக் கடித்தபடி கிரிக்கெட் ஸ்கோருக்குப் போக, அடுத்த பத்து நிமிடம் கவாஸ்கரும் பேடியும், விவ் ரிச்சர்டும் மைக்கேல் ஹோல்டிங்குமாகப் பேச்சு நீண்டது.

நாங்கள் திரும்ப வந்தபோது கேளு நாயரோ பாருகுட்டியோ அங்கே இல்லை. ஒவ்வொரு வார்டாகப் புகுந்து புறப்பட்டேன் நான். நிருபர்கள் படை அலைய விரும்பாமல், அடுத்த வாரம் ப்ரிண்டில் வரும்படி கட்டுரை எழுதி வரும்படி வருவது பற்றிப் பேசியபடி காணாமல் போனார்கள்.

ஒரு வார்டிலும், கன்சல்டிங் அறையிலும், பாத்ரூம், எக்ஸ்ரே அறை என்று எங்குமே அச்சனும் மகளும் காணப்படவில்லை. அவர்களைத் தனியே விட்டுவிட்டு கேண்டீன் வந்திருக்கக் கூடாதோ.

நான் வெளியே ஆயாசத்தோடு நடந்தபோது ஆஸ்பத்திரி காவலாளி ஒருத்தர், “ஏகப்பட்ட தலைமுடியோட ஒரு பொண்ணு, கூடவே கெச்சலா ஒருத்தர், இப்பத்தான் ஆஸ்பத்திரி வாசல்லே தொண்டி பஸ் ஏறிப் போனாங்க” என்று தகவல் கொடுத்தார். தொண்டி பஸ் எங்கள் ஊர் வழியாகத்தான் போகும்.

நான் அடுத்த பஸ்ஸில் கிளம்பி நேரே பாருகுட்டி வீட்டுக்குப் போனால் அவள் படுத்திருந்தாள். கேளு நாயர் அவளைக் காட்டி இனிமேல் கடவுள்தான் அவளைக் காக்க வேணும் என்று சைகை செய்தார்.

சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்ததற்காக அவரைக் கண்டிக்க முடியாவிட்டாலும், மெதுவாகக் காரணம் கேட்டேன்.

பாருகுட்டி எழுந்து உட்கார்ந்து சுகவீனம் என்று சொல்ல, ஆஸ்பத்திரிவெளியே வந்து நின்ற பஸ்ஸில் உடனே ஏறி, நான் வரக் காத்திருக்காமல் வீடு திரும்பியிருந்தார் நாயர். வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது அவள் உடம்பு அனலாகக் கொதிக்க ஆரம்பித்திருந்ததாம்.

ஒரு மாதம்போல் டைபாய்டில் விழுந்து எழுந்தாள் பாருகுட்டி. எழுந்தபோது அவள் முடி இந்திரா காந்தி தலையலங்காரமாகச் சிறுத்து, நோ நான்சென்ஸ் கம்பீரத்தோடு காணப்பட்டது.

அதற்கு அப்புறம் அவள் தலைமுடி உக்ரமாக வளரவில்லை. சிறிய நங்கையோடு பெரிய நங்கை, நாயுருவியோடு நண்டுருவி என்று இன்னும் சில மூலிகைகளைச் சேர்த்துக் காய்ச்சிய தைலம் அவள்

சிகையையும் பாட்டியம்மாவின் மூட்டு வலியையும் கட்டுக்குள் வைப்பதாக, பிரியமாக என் கையைப் பற்றியபடி சொன்னார் கேளு நாயர். அவர் உள்ளங்கையில் முடி முளைத்திருந்தது.

அத்தியாயம் 11

# ஏப்ரல் 1976

“சி னிமா மெட்டுலே பாட்டு எழுதுவீங்களா?” பேங்க் கவுண்டருக்கு அந்தப் பக்கம் இருந்து இந்த விநோதமான கேள்வி எழுந்தபோது அங்கே கிட்டதட்ட இருபது பேர் நெருக்கி அடித்து நின்றுகொண்டிருந்தார்கள்.

எலெக்ட்ரிக் மாரிமுத்துதான் என்னை இப்படிக் கேட்டவர். கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் கேஷியரிடம் போய்விட்டார்.

மாதத்தின் முதல் வாரம் என்பதால் கரண்ட் சார்ஜ் என்று அழைக்கப்படும் மின்சாரக் கட்டணம் எல்லாத் தெருக்களிலும் இருந்து நிறைய வசூலாகி இருக்கும். அதெல்லாம் பேங்கில் தினசரி கொண்டுவந்து கட்டிவிட வேண்டும். மாரிமுத்து பரபரப்பாகச் செயல்படும் காலம் அது.

அதற்கு அப்புறம் மூன்றாம் வாரத்தில் பக்கத்து கிராமங்களில் பம்ப்செட் மோட்டார் மின்சாரக் கட்டணம் செலுத்தச் சொல்லி அலைய வேண்டியதும் அவர் வேலை. கட்டாவிட்டால் பரவாயில்லை. யார் யாரிடம் கேட்டார் என்று தகவல் வைத்திருக்க வேண்டும் என்பது ஆபீஸில் அவருக்கு இடப்பட்ட அரச கட்டளையாம்.

அது கிடக்கட்டும். நான் சினிமா மெட்டில் பாட்டெழுதும் நபராக அவருக்கு ஏன் தோன்றவேண்டும்?

இலக்கியப் பத்திரிகைகளுக்கு அதிகபட்சம் பதினைந்து வரிகளில் புதுக் கவிதை எழுதி அனுப்பி அது பிரசுரமானால் தெரிந்தவர்கள் வந்தவர்கள் போனவர்களுக்கு பிரதியைக் காட்டிக்கொண்டு போட்டி பேங்கில் ஒரு நண்பர் உண்டு. ஒரு தடவை எல்லோரையும் கூப்பிட்டு ஆனந்த பவனில் டிபன் வாங்கிக் கொடுத்து அந்த வாரம் அச்சில் வந்த அவர் கவிதையை எச்சில் கையோடு உரக்கச் சொன்னார் -

“நீ அருகில் இருந்தால்

ஒரு நாள் கூட

ஒரு நொடியாக நகர்கிறது.

நீ இல்லாத ஒரு நிமிடம்

ஒரு யுகமாகிறது.”

அல்வாவை அசைபோட்டபடி மற்றவர்களோடு சேர்ந்து நானும் கைதட்டி மகத்தான கவிதை என்று மனசறிந்து பொய் சொன்னேன் அப்போது. அதற்குத் தண்டனையாகத்தான் நான் மெட்டுக்குப் பாட்டெழுதும் ஆளாக இப்போது அடையாளம் காணப்பட்டேனோ.

“சார், கதை-வசனம்-பாடல் செஞ்சிருக்கீங்களா?”

அளவு குறைவாக வீசப்பட்ட பந்து அது. சந்திரசேகரின் சுழற்பந்து வீச்சைக் கவனமாகத் தடுத்தாடும் வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வீரர் அல்வின் காளிசரண் போல, ஜாக்கிரதையாகக் கவுண்டருக்கு அந்தப் பக்கம் குனிந்து பார்த்தேன். நாலடியாராக வெடக்கன் நின்று கொண்டிருந்தார்.

காசினிப்பட்டியில் பள்ளிக்கூட வாத்தியார் அவர். கணக்கு திறக்க வந்தது நான்கு மாதம் முன்பு. VEDAKAN என்று கணக்குத் திறப்பதற்கான படிவத்தில் பெயரைப் பார்த்து மிஸ்டர் வெடக்கன் என்று பாஸ்புக் தரும்போது கூப்பிட்டேன். அந்தப் பக்கம் இருந்து சகலரும் ஒரே குரலில் முழங்கினார்கள் - வேதக்கண். வேதக்கண்... வேதக்கண்...

அதுதான் அவர் பெயராம். இங்கிலீஷ் ஏமாற்றிய நாள் அது.

வேதக்கண் வாத்தியாருக்குப் படிப்பதில் அப்படி ஒரு ஈடுபாடு. தோளில் துணிப்பையில் எப்போதும் ஏதாவது புத்தகமும் பத்திரிகையும் யாராவது எங்காவது விநியோகித்த பிட் நோட்டீஸும் அங்கே பத்திரமாக இருக்கும். புத்தகம் ஒருநாள் தி.ஜானகிராமனின் அம்மா வந்தாள் ஆக இருந்தால் மறுநாள் கருங்குயில்குன்றத்துக் கொலையாக இருக்கலாம். அல்லது தமிழ்வாணனின் பேய் பேய்தான். எல்லாம் நூல்நிலையப் புத்தகங்கள்.

"லைப்ரரியிலே போய் கண்ணை மூடிக்கிட்டு அலமாரிப் பக்கம் போவேன். ஏதோ ஒரு அலமாரி, அங்கே கண்ணை மூடிக்கிட்டு எடுத்த ஏதோ ஒரு புத்தகம்."

இரண்டு நாள் அதை நடுவில் எங்காவது இருந்து படித்து இன்னும் நடுவிலேயே இருக்க, திரும்பிக் கொடுத்துவிடுவார். அவர் படிக்கும் பத்திரிகையும் அவர் தேர்வு இல்லை.

"கடையிலே போய் தமிழ் பத்திரிகை தாங்கன்னு கேட்பேன். என்ன கொடுக்கறாங்களோ அதை படிச்சுடுவேன்."

"ஆமா, சமயத்திலே அது இந்துநேசனா இருக்கும்." காத்திருந்து கிடைத்த சைக்கிள் கேப்பில் யாரோ குதிரை வண்டி ஓட்டினார்கள். இந்தப் பக்கத்துக் குடிமக்களுக்கே குசும்பு ஜாஸ்தி. உடம்போடு ஒட்டிப் பிறந்தது.

வேதக்கண் படிக்கிறாரோ என்னமோ, இந்துநேசனை நேசிக்கிற கூட்டம் நாங்கள். எமர்ஜென்சி கால பத்திரிகை சென்சார் ஒரு தடவை கூட இந்துநேசனைத் தடை செய்யவில்லை என்பதிலிருந்தே அதன் மகத்துவம் புரியும்.

வேதக்கண் வாத்தியாரும் அவருக்கு முன்பாக எலெக்ட்ரிக் மாரிமுத்துவும் என்னிடம் விசாரித்தது ஏதாவது குசும்புதானோ என்று நான் குழம்பிப் போய் நிற்க, பக்கத்தில் சீரக வாடை.

மேனேஜர்தான். சீரணம் சீராக சீரகம் சாப்பிடுங்கள் என்று, வேறு யார், பள்ளிக்கூட தமிழாசிரியர் கம்பநாட்டார் தான் எதுகையோடு அறிவுரை கொடுக்க, மேனேஜர் பக்கத்தில் வந்தாலே அஞ்சறைப்பெட்டி வாசனை.

“பாட்டு கட்டுவீரா?”

பாரதியார் பாரதிதாசனை சீரகம் மணக்கக் கேட்க, “நீங்களுமா சார்” என்றேன்.

“பின்னே உங்க பேரு போட்டிருக்கு?”

மேனேஜர் நான்காக மடித்த ஒரு நோட்டீஸை ஜிப்பா பையில் இருந்து எடுத்து நீட்டினார்.

அது நோட்டீஸ் என்று சொன்னால் சகலரும் ஆட்சேபிப்பார்கள். இந்தப் பக்கம் இருபது அம்சமும் அந்தப் பக்கம் ஐந்து அம்சமும், நடுவில் அம்மா, மகன், லோக்கல் பிரமுகர்களின் பயத்தில் உறைந்த தலைகளும், திடீரென்று நினைவுக்கு வர ஒரு விநாயகர். பிளந்த மார்பில் ஏசுநாதர். மூன்றாம் பிறைச் சந்திரன், நட்சத்திரம். கல்யாணப் பத்திரிகைபோல கந்தர்வர்கள் வேறே றெக்கை விரித்துப் பறந்து கொண்டிருந்தார்கள். எல்லாவற்றோடும் கீழே நடுத்தர சைஸில் தமிழ்நாட்டு அரசுச் சின்னமான கோபுரம், அதற்கு நேர் மேற்கே மத்திய அரசின் சிங்கச் சின்னம் அடித்திருந்தது.

சிங்கங்கள் எல்லாம் வாயை இறுக மூடி, கண்ணையும் அடைத்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. பெரிய எழுத்தில் தலைப்பு: இருபது - ஐந்து திட்டக் கலைவிழா.

மாநில மத்திய அரசு நிறுவனங்கள் பங்கு பெறும் இருபது அம்சத் திட்டக் கலைவிழா - நாடகம், நாட்டியம், இசை, பொம்மலாட்டம், மாறுவேடம்...

இருபது அம்ச நற்செய்தியோடு சிறப்பாக மகிழ்வித்த அலுவலகத்துக்கு எம்.பி, எம்.எல்.ஏ கைகளால் ஆயிரம் ரூபாய் பரிசு, நாள்: அடுத்த மாதம் முதல் தேதி. இடம்: சண்முகராஜா அரங்கம்.

போஸ்டரேதான். மடித்து எடுத்து வந்தால் நோட்டீஸ் ஆகிவிடுமா என்ன?

“பிரமாதம் சார்” என்று மேனேஜரிடம் நோட்டீஸைத் திரும்பித்தர, கவுண்டருக்கு எதிர்க் கவுண்டராக மொத்த ஒலி -

“உங்க பெயரை படிக்கலியா?”

மறுபடி வாங்கிப் படிக்க, ஒருங்கிணைப்பாளர்கள் என்று ஆறுபேர் குழு. இறுதியில் என் பெயரும். பெயருக்கு முன்னால், ‘கவிஞர்’.

“ஐயையோ, நான் இதெல்லாம் பேர் கொடுக்கலே சார். மெட்ராஸ்லே இருந்தா எப்பவாவது நாலு வரி எழுதுவேன். இங்கே சத்தியமா எழுதவே இல்லை. நான் பெரிய கவிஞனுமில்லை. விஷமிகள் யாரோ விளையாடி இருக்காங்க.”

ஜாக்கிரதையான தற்காப்புக்குத் தாவினேன்.

“நீங்க கொடுக்காட்டா மத்தவங்க விடுவாங்களா? நம்ம நிருபர் கார்மேகம்தான் மீட்டிங்லே உங்க பெயரை சிபாரிசு செஞ்சாராம். பாருங்க, உங்களுக்கு சொல்லாமலேயே நோட்டிஸ் அடிச்சாச்சு.”

மேனேஜர் சொல்ல, “சார், அந்தக் கவிஞர் பட்டம்...” யாரோ அடியெடுத்துக் கொடுத்தார்கள்.

“அதானே, பாட்டு கட்டுவீகன்னு சொன்னா இல்லே தெரியும்.”

இது கேஷியரிடம் பணம் கட்டிவிட்டு நிம்மதியாக வந்த எலெக்ட்ரிக் மாரிமுத்து. இனி அவருக்கு நாள் பூரா வேலை என்று எதுவும் இருக்காது.

மாதச் சம்பளம் கணக்கில் வரவு வைத்ததை எடுக்க வந்த தொழிற்பேட்டை ஊழியர்கள் ஒரு பெரும் படையாக உள்ளே வர அந்தக் கவித்துவமான உரையாடல் முடிவுக்கு வந்தது.

அது சாயந்திரம் வீட்டுக்குக் கிளம்பியபோது மறுபடி தொடங்கியது.

“நீங்க பாட்டு எழுதறதைப் பத்தி அந்தரத்திலே விட்டுட்டீகளே...” தேவகோட்டை பஸ்ஸை கோட்டை முக்கில் பிடிக்க ஓடும் முன்பு அக்கவுண்டண்ட் ஆரம்பித்து வைத்துப் போனார்.

“அதுவும் அந்த நிருபர் கைங்கர்யம்தான். எப்போவாவது மலையாளத்திலே நாலுவரி டயரியிலே எழுதி வச்சுப்பேன்.

அவ்வளவுதான்.”

“மலையாளத்துக்கும் தமிழுக்கும் என்ன வித்தியாசம்? நல்ல ஜலதோஷம் பிடிச்சிருக்கறபோது தமிழ்லே பேசினா மலையாளமாகத்தானே கேட்கும்?”

மேனேஜரின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று மலைத்தேன்.

“நம்ம ஆபீஸ் சார்பா ஒரு நாடகம் போடலாம். நீங்க இருபதம்சத் திட்டத்தை வச்சு ஒரு ஸ்கிட் எழுதிடுங்க.”

மேனேஜர் சொல்ல, ஸ்வீப்பர் சௌந்தரம்மா ஓரமாக உட்கார்ந்து சின்ன உரலில் புகையிலை இடித்தபடி சொன்னார்:

“நல்லதங்கா நாடகமா போடுங்க தம்பி. கிணத்துலே பிள்ளையைத் தள்ளுவா பாருங்க.”

அங்கே இருந்த மற்றவர்கள் பார்வை அவரை எங்கே தள்ளலாம் என்று எரிச்சல் பட்டது. அவர் சொன்னபடி நல்லதங்காள் நாடகம் போட்டால் என்ன? நவீன நல்லதங்காள். முடிந்தால் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து நல்லதங்காளை கிணற்றில் தள்ளியதாக முடித்துத் திரையை இறக்கலாம்.

“சார், நான் ஒருங்கிணைப்பாளன். வேற வேலை அது. நாடகம் எல்லாம் எழுதக் கூடாது.”

திடீரென்று நினைவுக்கு வர, வழுக்கிக்கொண்டு நழுவிப் போகப் பார்த்தேன்.

“அதெல்லாம் ஆர்.டி.ஓ கிட்டேயே ஃபோன் பண்ணி கேட்டாச்சு. அது ஒரு வேலை அரசாங்கம் சொன்னது. இது இன்னொரு வேலை. ஆபீஸ் சொல்றது.”

மேனேஜர் நறுக் என்று பதில் சொன்னது அவரே இந்த நாடக ஆக்கத்தை எல்லாம் எடுத்துக் கொள்ளலாமே என்று நினைக்க வைத்தது.

“பாவம் சார், போத்தி ரெண்டையும் கட்டிக்கிட்டு மாரடிக்க முடியாது. நாடகம் நான் எழுதறேன். அவர் அதை இயக்கட்டும்.”

ரவீந்திரன் உதவிக்கு வந்தார். கடவுளே கையைக் கொடுத்து ஆதரவு தந்த மாதிரி அது.

“சரி, செய்யுங்க. யார் கிண்டினா என்ன, அல்வா வந்தா போதும்.”

மேனேஜர் ஜெனரல் லெட்ஜர் செக் பண்ண கேபினுக்குள் போனார். நிச்சயம் இது வக்கணையாக எழுதிப் பார்த்த கை. பிடிச்சு இழுத்து உட்கார வைத்து எழுதக் கேட்டுக்கொண்டால், நமக்குத்தான் முதல் பரிசு.

இது நான் சொல்லவில்லை. ரவீந்திரன் சொல்ல நான் தலையாட்டினேன். ஆனால் யார் மணியைக் கட்டுவது?

இது ஒரு சனிக்கிழமை பகலில் நடந்தது. அடுத்து ஞாயிறும் அதற்கடுத்து திங்கள் அன்று மகாவீரர் ஜெயந்தி வந்ததால் அந்த நாளும் லீவு விட்டானது. ரவீந்திரன் வழக்கமாக லீவுக்குச் செய்வதுபோல் சொந்த ஊருக்குப் போகாமல், தங்கியிருந்த லாட்ஜ் ரூமில் பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு பரிட்சை எழுதுவதுபோல் அட்டையில் கிளிப் செருகி ஒரு கத்தைக் காகிதத்தை வைத்து எழுதித் தள்ளினார்.

திங்கள் சாயந்திரமே அதை ஒரு கட்டாகக் கட்டி எடுத்துவந்து என்னிடம் கொடுத்துவிட்டார். கிட்டதட்ட நூறு பக்கம். இதை நாடகமாக்கினால். ஒண்ணரை மணி நேரம் போகும். கொடுக்கப்பட்ட நேரம் நாற்பத்தைந்து நிமிடம் மட்டும்தான்.

“எடிட் பண்ணி ஏதாவது கூடுதலா இருந்தா குறைச்சுக்குங்க. கதைப் போக்கை மாத்திடாதீங்க.”

அந்த நாடக ஆசிரியர் படைப்பாளியின் கரிசனத்தோடு சொன்னார். படித்துப் பார்த்தேன். சென்டிமெண்டல் கதையில் சென்ட்ரல் கவர்மெண்ட் புகுந்திருந்தது.

பிள்ளையார் கோயில் பூசாரிக்குப் பெண் குழந்தை பிறந்து, கஷ்டப்பட்டுப் படிக்க இருபது அம்சத் திட்டத்தில் பேங்க் உதவி கிடைத்து, வேலை கிடைக்கிறது. லஞ்சம் வாங்குகிற மேலதிகாரியை இருபது அம்சத் திட்டத்தால் உத்வேகம் பெற்றுப் பிடித்துத் தருகிறாள் அவள். கணவன் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த இருபது அம்சத் திட்டத்தில் கடன் பெற்று கிராமத்திலேயே தங்கி உழைக்கிறான். தொலைதூர உறவில் குழந்தை பிறக்கிறது. இந்திரா என்று பெயர் வைத்து இருபது அம்சத் திட்டத்தில். போதும்.

வசனம் பல இடங்களில் இல்லை. வசனம் சேர்க்கவும் என்று அங்கெல்லாம் எழுதியிருந்தது. சில இடங்களில் தூக்கலாக அடுக்குமொழி. ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் வாளொடு முன் தோன்றிய மூத்த குடி’ என்று கம்பவுண்டர் நோயாளிக்கு எதையோ கலக்கிக் கொடுத்து குடிக்கச் சொல்வது உதாரணம்.

இது நல்லதங்காள் நாடகம் மாதிரி ராத்திரி பூரா ஆடினாலும் விடிந்ததும் பாதிதான் வந்திருக்கும். அடுத்த இரண்டு நாள் அதை எல்லாம் வெட்டிச் சுருக்கி, மாற்றிக் கொடுத்தேன்.

ரவீந்திரன் எழுதிய வசனத்தையும் மாற்றி எழுதி அங்கங்கே சுருக்கமாகப் புதுவசனம் சேர்த்து முக்கால் மணி நேர நாடகமாக்கினேன். பதினெட்டு கதாபாத்திரங்களில் இருந்து ஆறு பேர். சும்மா வசனம் இல்லாமல் வந்து போக இன்னும் ஆறு பேர். சமாளித்துவிடலாம்.

“நாடகத்தில் நடிக்க நம்மாளுங்களே இருக்கலாம்” என்று மேனேஜர் பெரிய மனசு பண்ணினாலும் யாரை நடிக்க வைப்பது? மதுரைக்கு ஃபோன் போட்டு ரீஜனல் ஆபீஸில் இருந்து ஆள் கேட்கலாம் என்றார் கேஷியர் கருப்பையா.

ரீஜனல் ஆபீஸில் இருந்து சப்ஸ்டிட்யூட் வர இது என்ன யாராவது சிக் லீவ் எடுத்தால் ஆளனுப்பும் ஆபீஸ் காரியமா?

பழநி சொன்னார், “எனக்கு காளைப்பட்டியிலே பொய்க்கால் குதிரை வாத்தியாரைத் தெரியும். அவருக்கு மூணு பசங்க. அவங்க நாலு பேரும்

வந்து செஞ்சு கொடுப்பாங்கபோல."

அவர் சொல்ல, யார் கதாநாயகி என்று கேட்டேன்.

"அவங்களுக்குள்ளாற அட்ஜஸ்ட் செஞ்சுப்பாங்க. பேட்டா பணம் மட்டும் தினசரி வேலை முடிச்சுப் போகும்போது கொடுத்திட்டா போதும்போல."

சாயந்திரம் வேலை முடித்ததும் எதிர்பார்த்தபடியே மேனேஜர் ரதத்தை எடுக்கச் சொல்லி பின்னால் உட்கார்ந்தார். காளைப்பட்டி போய்ச் சேரும்போது இருட்டி இருந்தது.

இறங்கும்போது மேனேஜர் தனக்குத்தானே ஓவென்று சிரித்தார். பயந்து போனேன். காத்து கருப்பு அடிச்சு அலமலர்ந்து போகிற ஆள் இல்லையே அவர். எதற்கும் பாதுகாப்பாக அரை அடி இடைவெளி விட்டு நின்று ஸ்கூட்டர் பெட்டியில் எப்போதும் வைத்திருக்கும் பேட்டரி லைட்டை அடித்தேன்.

"ஒண்ணுமில்லே. அந்த கம்பவுண்டர் கிட்டே வயித்துப் போக்கோட ஒருத்தன் போறான். அவர் சொல்றாரு. பாதகமலம். இப்போ நீ வந்திருக்கலேன்னா பாதகமலம் ஆகியிருக்கும்."

அவர் மறுபடி சிரிக்க, அவருக்கு என்னமோ ஆகிவிட்டது என்று உள்ளுணர்வு சொல்ல, வேற பாட்டு நினைவு வராமல் 'இருவிழி சிவந்து கனல்பொறி தெறிப்ப எடுத்தகை கதையினால் உருக்கி' என்று ஒப்பிக்க ஆரம்பித்தேன். அது சீறாப்புராணம்.

"கொடுமையான வயத்துப் போக்கு. அது பாதக மலம். மருந்து கொடுத்து நிறுத்தலேன்னா, கடவுளோட பாத கமலம்... நல்லா இருக்கா?"

எமர்ஜென்சி கஷ்டம் என்ன மாதிரி எல்லாம் உருவெடுத்து வருகிறது.

அவர் மறுபடி சிரிக்க, நான் போகவேண்டிய இடத்தைக் கண்டுபிடித்து வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

கறுப்புப் பூனை ஒன்று கத்தியபடி குறுக்கும் நெடுக்குமாகப் பாய, அதிகாரமாகக் குரல் கொடுத்தபடி ஒரு கடுவன்பூனை, கிட்டதட்ட

சிறுத்தைப் புலிக்குட்டி சைஸில் ஓடிவந்தது.

அது கிரீடை செய்யும் நேரம் என்று தெளிவாகத் தெரிந்தது. ஸ்கூட்டரில் ஏறி, டவுணில் இருந்து அதைப் பார்க்க இரண்டு பேங்குக்காரர்கள் வந்ததை அது விரும்பவில்லை என்பதும் தெரிந்தது.

மேனேஜர் மேல் விழுந்து பிராண்டப் போவதுபோல் அது போக்குக் காட்ட, அவர் பயந்து கத்தியதில் பாதகமலம் அனுபவப்பட்டது.

“வேம்புலி, சும்மா கெட.”

உள்ளே இருந்து வந்த நெட்டை மனிதர் சத்தமாகச் சொன்னார். அவர்தான் மாயழகு அண்ணாவியா என்று விசாரித்தேன்.

“ஆமா, நான்தான் அந்தப் பொசைகெட்ட பய” என்று விரக்தியாகப் பதில் சொல்ல, நான் நிச்சயம் ஒரு பெரிய மாறுதலை விளைவிக்கும் என்று அனுபவத்தில் அறிந்திருந்த அஸ்திரத்தை அடுத்து பிரயோகித்தேன்.

“பேங்குலே இருந்து வரோம். சார் மேனேஜர், நான் ஜூனியர் ஆபீஸர்.”

அவர் கேட்டதை நம்ப முடியாததுபோல் ஒரு வினாடி சுவரைப் பிடித்தபடி நின்றார். அடுத்து கூரையைத் தாங்குவதுபோல் இரண்டு கைகளையும் தென்னோலைக்குக் கீழே கொடுத்து குனிந்து நின்று என்னைப் பார்த்தார்.

“ரெண்டு நாள் முந்திதான் மனு கொடுத்தேன். இன்னிக்கு நீங்களே தேடி வந்துட்டீங்களே... அம்மா நல்லா இருக்கட்டும். அவர் மகன் சுகமா இருக்கட்டும்.”

மந்திரத்தில் ஆட்பட்டவராகக் கண்மூடிச் சொல்லியபடி இருக்க, நானும் மேனேஜரும் சுவாதீனமாக உள்ளே நுழைந்து திண்ணையில் உட்கார்ந்தோம்.

“நீங்க எந்த ஏரியாவிலே வர்றீங்க?”

மேனேஜர் பட்டும் படாமல் ஜாக்கிரதையாகக் கேட்க வழக்கமாகத் தொடுக்கும் அம்பை விட்டார்.

இந்த ஏரியா என்ற சொல் பலரால் பல சந்தர்ப்பங்களில் பல விதமாக அர்த்தமாக்கிக் கொள்ளப்படும். எந்த தாலுக்காவில் இருக்கீங்க என்பதிலிருந்து எந்த ஜாதி, உபஜாதி, கட்சி என்று சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் கேள்வியைப் புரிந்து கொள்ளலாம். மேனேஜர் இதில் என்ன மாதிரி பதில் வந்தாலும் பிடித்துக்கொண்டு மேலே பேச்சை வளர்ப்பார்.

“உங்க பேங்க் ஏரியாதான் சார், ரீஜனல் ஆபீஸ்லே உங்க ப்ராஞ்சில்தான் கொடுக்கறதா சொன்னாங்க. அவங்க கிட்டே மதுரையிலே நேரே கொண்டு கொடுத்துட்டேன்.”

அவருடைய ஜில்பாத் தலைக்கும், மீசை இல்லாத அப்பாவி முகத்துக்கும் ரொம்பவே வித்தியாசமான, விஷயம் தெரிந்த பேர்வழியாக இருந்தார் அவர். மேனேஜரும் சட்டென்று விஷயத்துக்கு வந்துவிட்டார்.

“அது ஒண்ணும் கயிட்டம் இல்லீங்க. நம்ம பசங்க கச்சிதமா செஞ்சு கொடுத்திடுவாங்க. கத்திச் சண்டை போடணும்னா ஐநூறு ரூபா கூடப் பிடிக்கும். டுயட் நாங்க பாடினா இருநூறு. வேறே யாராச்சும் பாடி வாய் அசைக்கணும்னா நூத்தம்பது. உங்க பட்ஜெட் என்ன?”

போகிற போக்கில் ஒவ்வொரு வரி வசனம் பேச, ஒவ்வொரு அடி நடக்க என்று கூட பிரித்துப் போட்டு வாங்கும் தொகையைச் சொல்லிவிடுவார்போல.

மேனேஜர் அசராமல், “அதெல்லாம் சரிதான். நீங்க நம்மாள் ஆகிட்டீங்க. எல்லாம் சரியா இருந்தா லோன் கொடுத்துடலாம். சரி வரட்டுமா?” என்று எழுந்தார். இது எதிராளியைப் பணிய வைக்க ஒரு ராஜதந்திரம்.

“அட என்ன அவசரம்... காப்பித்தண்ணி காச்சச் சொல்றேன். உள்ளே வரணும்... நீங்கள்ளாம் நம்ம எடத்துக்கு வரப்பட்ட மனுஷாளா சொல்லுங்கோ?”

முடிவு பார்ப்பனக் கொச்சைபோல இருக்கும்படி அவர் கேட்டது எனக்கானது. நீ ஐயரான்னு நேரில் கேட்க முடியாததால் அப்படி. நான் உடனே அதைத் தடுத்தாண்டு நான் ஐயர் இல்லை என்று தெளிவுபடுத்தினேன் -

“அதான் இப்ப வந்திருக்காக இல்லே” என்று மேனேஜரைக் காட்டிச் சொல்ல அவர் புரிந்ததாகத் தலையாட்டி, உள்ளே யாருக்கோ காப்பித்தண்ணி காய்ச்ச உத்தரவிடப் போனார்.

“பொம்பளை தூங்கிடுச்சுபோல. நான் பெறகு வச்சுத்தரேன்”, போன சுருக்கில் திரும்பியவர் கையில் ஒரு கனமான ஆல்பத்தோடு வந்தார்.

“பாருங்க, நம்ம புள்ளைங்கதான்.”

மேனேஜர் மரியாதைக்கு வாங்கிப் புரட்ட, நானும் எக்கிப் பார்த்தேன். விஜயசேனன், குந்தளகுமாரன், ராஜசிம்மன் போன்ற பெயர்களோடு அம்புலிமாமா கதைகளில் படமாக வரும் பாத்திரங்கள்போல உடையணிந்து கண்ணாத்தா கலைக்குழு என்று போட்ட படுதா கட்டிய மேடைகளில் உறைந்து நிற்கிற 'நம்ம புள்ளைங்க' எல்லோருக்கும் குறைந்தபட்சம் நாற்பதாவது வயது இருக்கும். இவர்களை நடிக்க வைத்து நாடகம் நடத்தினால் பார்க்க ஆள் வருமா என்பதில் இருந்து சந்தேகங்களின் பட்டியல் நீளும். நடத்திய நாடகத்துக்கு அரசின் ஆயிரம் பொற்காசுகள் பரிசு பற்றி சுத்தமாக மறந்துவிடலாம்.

“சரி போய் கலந்து பேசிட்டு சொல்றோம்” என்றார் மேனேஜர். பெண்பார்க்க வந்த கோஷ்டியில் பின்னால் உட்கார்ந்து வாழைக்காய் பஜ்ஜி சாப்பிடுகிற பெரிசுத்தனம் அவர் செய்கையில் தெரிந்தது.

நாங்கள் வெளியே வந்தபோது திடீரென்று நினைவு வந்தவராக பெரிசு என் காதில் கிசுகிசுத்தது -

“பொம்பளப் புள்ளைங்க யாராச்சும் அவங்க வகையிலே நாடகம் நடிச்சுக் கொடுக்க இருக்கான்னு கேட்டுடுங்க.”

நான் கேட்கவேண்டிய அவசியமே இன்றி அவர் குரலே நான்கு தெருக்களுக்குக் கேட்கும் சத்தத்தில் இருந்ததால் உடனே பதில்

கிடைத்தது.

"இல்லாம என்ன? என் தங்கச்சி பேத்தி பள்ளிக்கூடத்துலே படிச்சு முடிச்சு இப்போ வீட்டோட இருக்கு. வேற சைஸ்லே வேணும்னாலும் சொல்லுங்க. ஏற்பாடு பண்ணிடலாம்."

நான் அவரைப் பீதியோடு பார்த்தேன்.

"அவங்களையே கேட்கலாம்" என்றேன் அவசரமாக. மேல் விவரம் தர அவர் ரொம்பவே பிகு பண்ணிக் கொண்டார்.

மேனேஜர் "நாளைக்கு லோன் பத்தி பேசலாம், ஆபீஸுக்கு வாங்க" என்றதும் உடனே இடத்தைச் சொன்னார்.

அதே ஊர். அதே தெரு, ஆனால் இரண்டு வீடு தள்ளி. பேச்சு வார்த்தை நின்றுபோய் இருபது வருஷம் ஆகிறதாம்.

நாங்கள் உடனடியாக அங்கே நடக்க, அண்ணாவி தடுத்து நிறுத்தினார்.

"நீங்க இங்கே வந்துட்டு அங்கே போறதா இருக்க வேணாம். வண்டியை அங்கே அவுக வீட்டு வாசல்லே நிறுத்தி இறங்குங்க."

ஆக நான் மறுபடி உதைத்து, பின் இருக்கைப் பயணியை ஏறிக்கொள்ளச் சொல்லி இரண்டு வீடு தள்ளி நிறுத்தினேன். கண்ணில் ஏகத்துக்கு மை ஈஷிக்கொண்டு வந்து கதவு திறந்த பெண்ணிடம், "உங்க அம்மாவை கூப்பிடு" என்றார் மேனேஜர்.

"உள்ளே வாங்க, நான்தாங்க அம்மா" என்றாள் அவள். யாருக்கு அம்மா என்று மேனேஜரும் கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை.

"நாடகம் போடணும்" என்று மொட்டையாகச் சொன்னார் மேனேஜர். நான் அதை விரித்துச் சொல்ல ஏதுவாகத் தொண்டையைச் செருமிக் கொண்டேன்.

"நாடகம் எல்லாம் நடத்திக் கொடுத்திடலாமுங்க. பாட்டெல்லாம் பாடிக் கொடுத்திடலாமுங்க. ஆட்டம் எல்லாம் ஆடிக் கொடுத்துடலாமுங்க.

சிலம்பம் எல்லாம் சுத்திக் கொடுத்திடலாமுங்க” என்று வரிசையாக அந்த அம்மாள் அடுக்க ஆரம்பித்து, எங்களைப் பேசவே விடவில்லை.

“ஆர்டிஸ்டை கொஞ்சம் கூப்பிடுங்க” என்றேன். “கூப்பிடறதெல்லாம் கூப்பிட்டுடலாமுங்கோ. பேப்பர் போடுங்க” என்றாள் அவள் விரலால் ஏதோ சைகை செய்துகொண்டு. கூர்ந்து கவனித்துவிட்டு, “கரன்சி நோட்டு எண்ணற முத்திரை அது” என்று மேனேஜரிடம் ரகசியம் சொன்னேன், “அரக்கு சீல் மாதிரியா?” என்று புரியாமல் கேட்டார் அவர். “அட்வான்ஸ் வேணுமாம்.”

“அட்வான்ஸ் எல்லாம் கொடுத்திடலாமுங்க. லோன் மட்டும் கேக்காதீங்க” என்றார் மேனேஜர். அடுத்த பத்து நிமிடத்தில் அவரிடம் லோன் தவிர வேறெதுவும் கேட்க வேண்டாம் என்ற தகவல் பரிமாற்றம் தன்னிச்சையாக, பேச்சு எதுவுமின்றி நிகழ, “பேங்கு ஐயான்னு வந்ததுமே சொல்லியிருக்கலாமில்லே, அதென்ன தவிக்க விட்டுட்டுச் சொல்றது” என்று செல்லமாகச் சொல்லியபடி அந்தப் பேரிளம்பெண் உதட்டைக் கடித்துக்கொண்டு மேனேஜரைப் பார்த்த காதல் பார்வையில் நான் பயந்து போனேன்.

இவரை பத்திரமாக வீட்டில் ஆச்சியிடம் கொண்டுபோய்ச் சேர்த்தால்தான் என் ஸ்கூட்டருக்கு ஆபீஸ் வேலைக்காக பெட்ரோல் போட்ட பணத்துக்கு சார்ஜஸ் வவுச்சரில் கையெழுத்துப் போட இவர் நாளை மாடி இறங்குவார்.

அந்தம்மா உள்ளே போய், மெலிந்து ஐந்தடி உயரமான ஒரு இளம் பெண்ணோடு திரும்பி வந்தாள். தூக்கத்தில் இருந்து எழுப்பி விடப்பட்ட சிடுசிடுப்பு முகத்தில் தெரிய வந்த இளம்பெண் நாற்காலியில் அமர்ந்து அட்டணக்கால் போட்டுக்கொண்டு விட்ட இடத்தில் இருந்து உட்கார்ந்தபடிக்கே தூங்க ஆரம்பித்தாள்.

“நாடகம் முழுக்க வர்ற கதாபாத்திரம் இவங்களுக்கு. ஹீரோயினான்னு கேட்டா ஆமான்னு சொல்லலாம். ஏன்னா போடப்போற எல்லா நாடகத்திலேயும் ஹீரோ, ஹீரோயின், வில்லன், காமெடியன் எல்லாம் இந்திரா காந்திதான்.” நான் சொல்லி நிறுத்தினேன்.

“ஒரு பாம்பு டான்ஸ் சீன் வெச்சுடுங்க தம்பி. பொளந்து கட்டிடுவா என் மக.” பூரிப்போடு தாய்த் தெய்வம் மகளை நோக்கியது.

அந்தப் பெண் சட்டென்று கண் விழித்தாள். நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே நடு ஹாலில் நின்று பாம்பு மாதிரி வளைந்து ஆட ஆரம்பித்தாள். நாக்கு வெளியே நீண்டு அடங்க அந்தப் பாம்பு மேனேஜர் அருகில் வர அவர் நடுநடுங்கிக் கண்ணை மூடிக்கொண்டார். நான் விழித்துப் பார்க்க அது என் பக்கம் வந்ததைப் பாதியில் வாபஸ் வாங்கி அந்த அம்மாள் பக்கமாக நகர்ந்தது. பரம்பரை பரம்பரையாக நாகப் பாம்பு வளர்க்கிற குடும்பத்தில் வந்ததுபோல அவள் நாட்டியப் பாம்பைத் தலைதடவி உச்சி முகர பாம்பு ஆடியபடி இருந்தது.

“சொர்ணமுகியை ஒண்ணும் இல்லாம ஆக்கிடுவா என் மக. இந்த பாம்பு டான்ஸை எப்படியாவது கதையிலே கொண்டுவந்துடுங்க” என்றாள் அம்மா.

“அம்மா, இது இருபது அம்சத் திட்ட நாடகம். மிஞ்சிப் போனா, பாட்டு இப்படி வரும்.”

ஆல் இந்தியா ரேடியோவில் தினசரி காலை, மாலை, பகல், இரவு என்று எந்த நேரத்திலாவது யாருக்காவது நினைவுவர, உடனே ஒலிபரப்பிய சேர்ந்திசைப் பாட்டை நான் பாடிக் காட்டினேன் .

‘பத்து வருடக் கணக்கை எழுதிப் பட்டியல் நீட்டுகிறோம் - அதில் எத்தனை எத்தனை சாதனை கண்டோம் என்பதைக் காட்டுகிறோம் கணக்கைக் காட்டுகிறோம்... மன்னர் மகுடமும் செங்கோலும் நம் மண்ணில் நொறுங்கி விழுந்தாச்சு இன்னும் மானியம் ஏனென்றோம் - மன்னருக்கு இன்னும் மானியம் ஏனென்றோம் - அதிலெழுந்த போரினில் நாம் வென்றோம் பத்து வருடக் கணக்கை எழுதி... பதினாறடி வேங்கைப் புலியாகி - நம்நாட்டு நிதியுண்டு விளையாடி வந்த அந்தப் பதினாறு வங்கியை மக்களின் பேரிலே பட்டயம் செய்து விட்டோம் பத்து வருடக் கணக்கை எழுதி...’

“இவ்வளவுதானே. பண்ணிட்டா போச்சு. இதைப் பாடிக்கிட்டே பாம்பு ஆடட்டும். பாம்பு டான்ஸ் ஆடற ஹீரோயின் ஊர் ஊரா இருபது அம்சத் திட்டத்தை பரப்பப் போறான்னு புதுசா எழுதிச் சேர்த்துக்குங்க. எங்க ஊருக்குக் கூட போன வாரம் ஒரு கோஷ்டி வந்து இருபதுசாமி கதைன்னு புதுசா வில்லுப்பாட்டு கட்டிப் பாடிட்டுப் போச்சு. நல்ல கைதட்டு. ஒண்ணு செய்யுங்களேன். நம்ம செக்கோடை பொட்டல்லே வளைச்சுக்கட்டி பந்தல் போட்டு உள்ளே நாலடி உயரத்திலே பெரிசா மேடை கட்டி, கலர் லைட்டு சுத்த வச்சுடுங்க. ஆடித் தள்ளிடுவா எங்க மேனகாரச்சனா.”

நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனாள் அம்மா.

அது என்ன அப்படி ஒரு பெயர் என்று நான் யோசிக்கும் முன்னால் அவள் சொன்னாள்:

“அதான், சஞ்சய் காந்தியோட வீட்டுக்காரம்மா வள்ளி தெய்வானை மாதிரி ரெண்டு பேரு உண்டே. அதைச் சேர்த்து பேரை மாத்தி வச்சுட்டேன்.”

அவள் சொன்னபடிக்கு மேனகா சரிதான். ரச்சனா யார்? மேனேஜர் விழிக்க, அவர் காதில் பெயர் சொன்னேன்.

“ரக்ஷனான்னு... அது அவர் வீட்டுக்கார அம்மா இல்லே.”

“கல்யாணம் செஞ்சுக்காமலா? ஓ... வேற மாதிரியா?” மேனேஜர் கேட்டது எமர்ஜென்சிக் கோடைகாலத் தில்லியில் எதிரொலித்திருக்கும்.

அடுத்த நாள் மதியத்துக்கு மேல் நான் ஆபீஸில் பழைய லெட்ஜர்களும், கால் ஒடிந்த மூப்படைந்த நாற்காலிகளும் நிறைந்த ரிக்கார்ட் ரூமில் உட்கார்ந்து நாடகத்தை முழுசாக்கினேன். நாடகத்தில் நான்கு ஆண்கள். ஒரு பெண். நவீன நாடகச் சாயல் தர, ஒரு கட்டியங்காரன். அது நான்தான். யாராவது எதாவது சொதப்பினால், கட்டியங்காரன் சமாளிக்க வேண்டும்.

எல்லோருக்கும் பிடித்துப்போன ஏற்பாடு இது. கட்டியங்காரன் என்றால் தலைப்பா கட்டியவன் இல்லை என்று விளக்கிய பிறகும் விளங்காததால்,

தெருக்கூத்துலே கோமாளி மாதிரி என்று மேனேஜருக்குப் புரிய வைத்தேன்.

சாயந்திரம் ரச்சனாவும் அவள் அம்மாவும் வந்து சேர்ந்ததும் என்னமோ நாட்டியப் பேரொளி பத்மினியே தில்லானா மோகனாம்பாள் பட ஷூட்டிங்குக்கு வந்ததுபோல அவர்களாகக் கிளப்பிவிட்ட பரபரப்பு ஒரு பக்கம், இங்கே இருப்பவர்கள் ஏற்படுத்தியது இன்னொரு பக்கம் என்று களைகட்டியது.

“வசனத்தை கொடுத்துட்டீங்கன்னா நான் சொல்லிக் கொடுத்துடுவேன்” என்றாள் ரச்சனாவின் அம்மா. “ஏன் அதுவே படிச்சுக்காதா?” ரவீந்திரன் கேட்க, அவள் சீறிச் சினந்து, “அது இதுன்னு சொன்னா நாங்க நடிக்க மாட்டோம்” என்று கிளம்புகிறதாக அரை அடி எடுத்து வைத்தாள்.

லட்டும் போண்டாவும் காப்பியும் வர, கோபத்தை ஓரமாக வைத்துவிட்டு சாப்பாடானது. நான் நான்கு வசனம் சேர்த்து, பெண் கதாபாத்திரத்துக்கு இருந்த பக்கத்தை மட்டும் இன்னொரு முறை எழுதி அவளிடம் கொடுத்தேன். அப்புறம் அவள் தொந்தரவு இல்லாமல் போனது.

அந்தப் பெண்ணுக்கு வேற என்ன தெரியுமோ தெரியாதோ, தமிழைப் பிழையில்லாமல் உச்சரிக்கத் தெரிந்திருந்தது. ழவும் லவும் ளவும் அட்சர சுத்தமாக அவள் வாயில் புகுந்து புறப்பட்டன. ஆனால் ஞாபக சக்திதான் ரொம்பவே குறைவு.

க்ளைமாக்ஸில் இருபது அம்சம் எதெல்லாம் என்று ஒவ்வொன்றாகச் சொல்லி அதை நிறைவேற்றுவேன் என்று ஊர்ப்பொதுவில் சபதம் எடுக்க வேண்டும். அவள் சொல்லும்போது ஒரு ஒத்திகையில் எட்டும், அடுத்ததில் பதிமூன்றும்தான் மொத்தத்தில் வந்தது.

இது சரிப்படாது என்று பட, அவசரமாக ஒரு சிறு மாற்றம். பின்னணியில் கட்டியங்காரன் இருபதையும் சொல்ல, அவள் பாம்பு அபிநயத்தோடு உட்கார்ந்தபடிக்கு சாய்ந்து ஆடி, தரையில் அடித்துச் சபதம் எடுத்தாள்.

ரவீந்திரன், பழநி, கருப்பையா இவர்களோடு முதல் காட்சியில் மட்டும் வந்து அருள் புரியும் மகா கணபதியாக அக்கவுண்டண்டையும் பிடித்துப்

போட்டோம். அவருக்கு ஆசிகள், நல்லாசிகள் வாழ்க என்ற ஒற்றை வார்த்தைகளில் ஏதாவது ஒன்றை அவ்வப்போது உதிர்ப்பதும், கையால் அபய ஹஸ்தம் காட்டுவதும் மட்டும்தான் வேலை என்றாலும், மேனேஜர் கண்டிப்பாக இருந்தார்.

“சார், வசனத்தை எல்லாம் நல்லா காணாப் பாடமா படிச்சு வச்சுக்குங்க. சரியா அதது அததுக்கான இடத்திலே வரணும்.”

ரச்சனா உட்பட எல்லோருக்கும் வசனம் சொல்லித்தர பாருகுட்டியை ஏற்பாடு செய்தேன். அவள் எம்.எஸ்ஸி கெமிஸ்ட்ரி பட்டதாரி என்றும் நாடகத்தின் மேலும் இந்திரா காந்தி மீதும் இருந்த பேரன்பால் இங்கே வந்திருக்கிறாள் என்றும் பார்த்துப் பக்குவமாக மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் ரச்சனா, அவளுடைய அம்மாவிடம் சொல்லி வைத்தேன்.

அதிகாரமாகப் பேசிக்கொண்டு வாட்டசாட்டமாக வளைய வந்த பாருகுட்டியிடம் அவர்கள் சகல மரியாதையோடும் நடந்து கொண்டார்கள்.

கொடுத்த வசனத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்து நான்கு நாட்களில் எல்லாருக்கும் பாடமானது. நிறுத்தி நிதானமாக டைமிங்கோடு பேசத்தான் சிரமப்பட்டார்கள்.

அக்கவுண்டண்ட் விநாயகர் தன் பாத்திரம் மிகவும் பிடித்துப் போய் முதல் காட்சியில் மட்டும் அருள் பொழியாமல் மற்ற நான்கிலும் கூட வரவேண்டும் என்று அடம் பிடித்தார்.

“அடுத்த மாசம் ட்ரான்ஸ்ஃபர்னு தூக்கி அடிச்சுடுவாங்க, பாவம், ஆசைப்படறார், செஞ்சுடுங்க” என்று மேனேஜர் இஷ்டத்துக்கு எமர்ஜென்சி அரசாங்கம்போல் சகலத்திலும் மூக்கை நுழைத்து மாற்றச் சொன்னார்.

வேற வழி? இந்திரா காந்தி மேல் பாரத்தைப் போட்டு உப கடவுள் சஞ்சய் காந்தியைத் துதித்துவிட்டு மாற்றச் சொன்னபடி மாற்றி அமைத்தேன்.

அதேபோல் பழநிக்கு, சகலருக்கும் இருபதம்சக் கடன் கொடுத்து நாட்டை மேம்படுத்தும் பேங்க் மேனேஜர் பாத்திரம் கொடுத்திருந்தேன். நிஜ மேனேஜர் எதிரில் உட்கார்ந்து ஒத்திகையை மேற்பார்வை செய்யும்போது மேடை மேனேஜராக சுபாவமாக நடிக்க அவர் ரொம்பவே கஷ்டப்பட்டுப் போனார். சதா கை நடுங்குகிற, நாக்கு குழறும், உடம்பு சரியில்லாத மேனேஜராக அவரை மாற்றியதும் அவர் பாத்திரமாகவே மாறினார்.

ரவீந்திரன் கிராமத்துக்குப் போய் மேம்படுத்தும் கதாநாயகன். அவர் ரச்சனாவுக்கு இரண்டு அடி விலகி நின்று இருபதம்சத் திட்டம் வெற்றியடைந்தால்தான் திருமணம் என்று சூளுரைக்கும் காட்சியில் சுவரில் மாட்டி வைத்த இந்திரா காந்தியின் புகைப்படத்தில் ஒரு முனையில் அவரும், மறுமுனையில் கதாநாயகி ரச்சனாவும் தொட்டுக்கொண்டு வாக்குறுதி எடுத்துக் கொண்டார்கள்.

காந்தி சிலைக்கு இரண்டு பக்கமும் இருவரும் இருந்து காதல் வசனம் பேசுகிற மாதிரி ஜாக்கிரதையாக மாற்ற, “வேணாம் தம்பி, லவ் சீன் எல்லாம் தத்ரூபமா வரணும். அந்தத் தம்பியை ரச்சனா கால்மாட்டுலே உக்காரச் சொல்லுங்க” என்று அம்மா சொன்னார்.

தாசராக ரவீந்திரன் ரச்சனாவின் காலடியில் காட்சியளித்தார். ரச்சனா இரண்டே நிமிடம் ஆடும் பாம்பு நடனத்தின்போது அக்கறையுள்ள காதலராக மிருதங்கத்தைத் தோளில் மாட்டி தப்புத்தப்பாக வாசித்தபடி அவர் மூலையில் நின்றார்.

அவர்கள் மேடையில் ராணுவ நடை போட்டு காதல் கீதம் இசைக்க ஆகாசவாணியின் இருபதம்சப் பாட்டு கைகொடுத்தது.

கடலில் மீன்பிடிக்கப் போகிறவர்கள் ‘ஏலோ பாலீ ஏலோ ஏலம் ஏலேலம் பிடி ஏலம்’ என்று பாடிப் போவது பின்னணியில் ஒலிக்கத் தொடங்கும் சர்க்கார் சினிமா டூயட் அது:

‘இது போன வருசம்

ஆனி மாசம்

போட்ட முகூர்த்தம்.'

கேஷியர் கருப்பையாவுக்கு எமர்ஜென்சிக்கு எதிராகச் செயல்பட்டு, ரச்சனாவின் பாம்பு டான்ஸ் பார்த்து மனம் மாறி ஐந்தம்சத் திட்ட பிரசாரகனாக சைக்கிளேறி தெருவெல்லாம் மரம் வளர்க்கப் போகும் கதாபாத்திரம். மேடையிலேயே சைக்கிளை ஜாக்கிரதையாக விட்டுக்கொண்டு அவர் வாயசைக்க, பின்னணியில் இன்னொரு அரசு கீதம்:

'சாதனை வண்டி இது! பல வேதனை மைல்களைக் கடந்து நில்லாமல் செல்லும்.'

'மரம் வச்சவன் தண்ணி ஊத்தணும்னு இல்லே, மத்தவங்களும் ஊத்தலாம்' என்று அவர் அப்போது பேசவேண்டிய முத்திரை வசனம் மேனேஜருக்குப் பிடித்துப் போனதால் நாடகம் முடிவிலும் அதே வசனத்தை எல்லாரும் சேர்ந்து இந்திரா படத்துக்குக் கீழ் நின்று கை உயர்த்திச் சொல்வதாக - பிள்ளையார் தவிர - மாற்றியமைத்தேன்.

கலெக்டர் மீட்டிங்கில் என்னையும் அமைப்பாளர் பட்டியலில் சேர்த்திருந்தாலும், இன்னும் ஏழெட்டு அமைப்பாளர்கள் இருந்ததால் என்னை சௌகரியமாக மறந்து போனதும் நல்லதாகப் போனது. அமைப்பாளர்களுக்கான வாராந்திரக் கூட்டங்களுக்கு நான் போகாததால் முந்திரிப் பருப்பு பக்கோடாவும், நெய் வழியும் பாதாம் அல்வாவும் கள்ளிச்சொட்டுப் பால் காப்பியும் சாப்பிட முடியவில்லை. அதெல்லாம் ரசித்து உண்டு வந்த நிருபர் தவறாமல் அதைச் சொல்லிப் பாடுபடுத்தினார்.

இருபதம்சத் திட்டப் பாடல்களை யார் பாடினாலும் இழவு வீட்டு ஒப்பாரிபோல கேட்டதால், ஆல் இந்தியா ரேடியோவில் இருந்தே டு இன் ஒன் ரெக்கார்டரில் ஒரு கேசட் முழுக்க ஒலிப்பதிவு செய்து வைத்துக்கொண்டேன். மகத்தான சோகமாக இருந்தாலும் அதெல்லாம் அரசாங்கப் பாட்டாச்சே. அவ்வப்போது நிலைய வித்வான் தில்ரூபா வாசித்ததும் கைகொடுத்தது, நாடகத்தின் பின்னணி இசை அந்த கவர்மெண்ட் ம்யூசிக்தான்.

மேனேஜர் முன்னேற்பாடாக ரச்சனாவுக்கும் அவள் அம்மாவுக்கும் பெண்கள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ், பால்மாடு வளர்க்க பேங்க் கடனாக ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சம்மதிக்க, நாடகத்துக்கு வந்து போக பேட்டா பற்றி யாரும் மூச்சு விடவில்லை. போனால் போகிறதென்று தினசரி பத்து ரூபாய் பேட்டா கொடுத்தபோது அதை மறுப்புச் சொல்லாமல் வாங்கிக்கொண்டார்கள் அவர்கள்.

ஒத்திகை நேரத்துக்கு ஓவர் டைம் கிடையாது என்று ஆபீஸ் ஊழியர் நடிகர்களிடம் கறாராகச் சொல்லப்பட்டது. இல்லாவிட்டாலும் எமர்ஜென்சி காலத்தில் ஓவர்டைம் என்பது கெட்ட வார்த்தையாகி இருந்தது.

அக்கவுண்டண்ட் எடுத்த மகா கணபதி அவதாரத்துக்கு வாடகைக்கு யானைத் தலை முகமூடி கிடைக்காமல் போனது. எல்லா ஆபீஸிலும் நாடக ஒத்திகை என்பதால் பள்ளிக்கூட அலமாரியில் வைத்திருந்த இரண்டு தலைகளும் ஏற்கெனவே இரவல் வாங்கப்பட்டுவிட்டதே காரணம். என்ன போச்சு, கணேசனை உடனே கண்ணனாக்கி கையில் புல்லாங்குழலைத் திணித்தோம். இவ்வளவு தடியான கிருஷ்ணர் எங்கேயுமே இல்லை என்றார் ரவீந்திரன். ஏன், கதகளியில் இல்லையா என்று கேட்டேன். பதிலே இல்லை.

கலைவிழாவுக்கு முந்தைய தினம் சாயந்திரம் ஒரு சுவாரசியமான திருப்பம் நிகழ்ந்தது. மற்றவர்களுக்கு எப்படியோ எனக்கு சுவாரசியம்தான் அது.

ரச்சனா இறுதி ஒத்திகைக்கு வராமல் போனாள். தனக்கு உடம்புக்கு வந்தால்கூட பதறாத, ஆச்சி காய்ச்சலில் விழுந்தாலும் கலங்காத மேனேஜர் நிலைகுலைந்து போனார். அரசாங்க விருதுக் கனவு அலைக்கழிய, குரல் நடுங்க என்னிடம் சொன்னார்,

“போத்தி, வாரும், ஒரு நடை போய் என்ன ஆச்சுன்னு பார்த்துட்டு வந்துடுவோம். ரொம்ப சீரியஸா ஆயிடுச்சோ என்னமோ” என்று மருகினார். “யார் சார்?” என்று கேட்டேன். “அந்த அம்மாதான்.”

போனபோது வீடு பூட்டியிருந்தது.

“நாடக ஒத்திகைக்கு போயிருக்காங்க” என்றார் இரண்டு வீடு தள்ளி அண்ணாவி. “வரல்லயே” என்றேன் நான்.

“உங்களது இல்லே, அது சாயந்திரம் நடக்கறது இல்லியா... இது காலையிலே நடக்கறது, வட்டார பேங்க்” என்றார் அவர். மெல்ல முழுக்கதையும் தெரிய வந்தது.

எங்களிடமும், இருபதே கிலோமீட்டர் தெற்கே இருக்கும் செருகணியில் இன்னொரு பேங்கிலும் வெவ்வேறு நேரங்களில் ஒத்திகைக்கும், ஒரே நாளில் இரண்டு நாடகத்திலும் நடிக்கவும் ரச்சனாமேனகா பணம் வாங்கியிருக்கிறாள்.

நாங்கள் மொத்தம் நூறு ரூபாய் ஒத்திகைக்கு தினசரி பேட்டா மட்டும் கொடுத்திருக்கிறோம். லோன் இன்னும் கைக்குப் போகவில்லை. ஆனாலும் இப்படி இரண்டு இடத்தில் பரபரப்பாக எப்படி?

“இதுக்கெல்லாம் கவலைப்பட்டா முடியுமா? ரீஜனல் ஆபீஸ் சூப்பர்விஷனும் சென்ட்ரல் ஆபீஸ் இன்ஸ்பெக்டரும் ரிசர்வ் பேங்க் ஆடிட்டரும் ஒண்ணா ஒரே நாள்லே வந்தபோதே சமாளிச்சிருக்கேன். யார் கிட்டே?”

மேனேஜர் வேட்டியைத் திருத்திக் கட்டியபடி முழங்கினார். எனக்கு என்னமோ ரச்சனாமேனகா பாத்திரத்தை அவருக்காகத் திருத்தி எழுதச் சொல்வாரோ என்று ஒரு சந்தேகம் முளைக்கத் தொடங்கியது. வாய்விட்டுக் கேட்டுவிட்டேன்.

நாங்கள் திரும்பி வரும்போதே அடுத்த திட்டம் உருவாகிவிட்டது.

“கையிலே நெல்லிக்காயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலைவாங்களா?”

எதிர்காற்றில் மேனேஜர் சொன்னது புரியவில்லை. உள்ளங்கை நெல்லிக்கனியும், கையில் வெண்ணெயும் அவசரத்தில் குழம்பிப் போனாலும் அவர் சொன்னது ஏ க்ளாஸ் ஐடியா.

“அந்த நாயர் வீட்டுப் பொம்பளைப் பிள்ளை, உம்ம தோஸ்தி இருக்கே, அதை பிடிச்சுப் போடும்.”

கச்சிதமாகப் பொருந்திப் போனாள் பாருகுட்டி. பாம்பு நடனம் மட்டும் வேண்டாம் என்று வைத்தோம். நடந்துகொண்டே இருபது கட்டளைகளை அவள் சொன்னால் போதும்.

காலையில் காளைப்பட்டியில் இருந்து கடிதாசு எடுத்துக்கொண்டு யாரோ வந்தார்கள். அட்வான்ஸ் பேட்டா குறைவு என்பதால் வரமுடியாது என்று தப்புத் தப்பான இங்கிலீஷில் ரச்சனாவின் அம்மா எழுதி கீழே கோணலாகக் கையெழுத்து. வரவே வேண்டாம் என்று சொல்லி அனுப்பினோம் அப்போது.

நாடகம் அருமையாகப் போனது. அது தொடங்கும் முன் யாரோ காகிதக் கூழில் செய்த பிள்ளையார் தலையோடு நுழைய, அக்கவுண்டண்ட் உடனே அதைத் தலையில் கவிழ்த்துக்கொண்டார். கையில் புல்லாங்குழல் வேறு. சங்கீத கணபதி என்று கட்டியங்காரன் பேச்சில் சமாளிக்க வேண்டி வந்தது.

பாருகுட்டி விளாசித் தள்ளிவிட்டாள். காட்சியில் மற்ற பாத்திரங்கள் டயலாக் பேச ஒரு வினாடி தாமதமானாலும், ஒத்திகை நினைப்பில் அவளே அதைச் சொல்ல, கட்டியங்காரனான நான் என் தலையைப் பிய்த்துக்கொண்டு எப்படியோ ஒப்பேத்தினேன்.

பாரு தலையை விரித்து விட்டபடிதான் நாடகம் முழுக்க வந்தாள். காதல் காட்சியில் என்னைப் பார்த்துக்கொண்டே தயக்கமாக ‘போன வருடம் ஆனி மாதம்’ பாட்டுக்கு வாயசைத்தாள். போன வருடம் ஆனி மாதம் என்பது கடந்து போன வருடமான 1975ல் தமிழ் ஆனி மாதத்துக்கு உரிய இங்கிலீஷ் மாதமான ஜூன் என்பதையும் அது எமர்ஜென்சி கொண்டுவரப்பட்ட காலத்தைக் குறிக்கிறது என்கிற விசேஷ அர்த்தத்தையும் சொல்லி விளங்க வைத்தும் பாரு ஆர்ட் ஃபிலிம் கதாநாயகிபோல ஆகக் குறைவாகவே முகபாவம் காட்டினாள்.

ரவீந்திரன் கலக்கத்தோடு நின்று கிராமத்து மேக்கப்பில் ஏர் பூட்டி நடந்தார். பேர்பாடியோடு நடிக்கக் கூசியதால், அவரை வெள்ளை முழுக்கை பனியன் அணிய வைத்தோம்.

காதல் டூயட் காட்சியிலும் பிள்ளையார் வந்து இரண்டு கைகளையும் விரித்து இரண்டு தடவை உயர்த்தி, இருபது என்று புரிய வைத்து கைத்தட்டை அள்ளிப் போனார்.

மற்ற நாடகங்களை விட எங்கள் காட்சிக்கு மக்கள் ஆதரவும் விசிலும் கைதட்டும் அதிகமாக இருந்தது. பரிசு நமக்குத்தான் என்று மேனேஜர் சந்தோஷமாக முன் சீட்டில் உட்கார்ந்து உலகையே பெருமையோடு பார்த்தார். சென்ட்ரல் ஆபீஸில் ப்ரமோஷனுக்கான நேர்காணல் முடித்து, ரிசல்டுக்குக் காத்திருக்கும் ஆவல் அவர் முகத்தில் புலப்பட்டது.

ஆனால் எங்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை. போட்டி பேங்க் மேனேஜர் அடுத்து செய்த கதாகாலட்சேபம் எங்களிடமிருந்து அதைத் தட்டிப் பறித்துவிட்டது. அவர் கையில் சிப்ளாக்கட்டையோடு நின்று ஹரி ஹரி என்று ஆரம்பிக்க, பின்னால் கோயில் ஓதுவார் அதை ஹார்மோனியத்தில் வாசித்து சிவசிவ என்றார். இரண்டு கீர்த்தனை பாடி நடுவில் சங்கீத அறிவிப்பு -

‘நாளைக்கு நம் பேங்கில் சிறப்பு இருபதம்சத் திட்டக் கடன் வழங்குதல். காலை ஏழு மணியிலிருந்து இரவு ஏழு வரை நடக்கும் சிறப்பு லோன்மேளா. எந்த சான்றிதழும் வேண்டாம். எல்லாரும் வருக. கையை வீசிட்டு வாங்க. காசை வாங்கிட்டு போங்க…’

இதை எப்படியோ ராகம் போட்டு அடாணாவில் பாடி ரசிகர்களுக்குப் போகச் செய்ய, கலெக்டர் தொடங்கி எல்லாரும் வெகுவாக ரசித்துக் கைதட்டினார்கள். ஒருமனதாக நிச்சயித்து, அவருக்குப் பரிசு கிடைத்தது.

மேனகா ரச்சனாவுக்கும் அவள் அம்மாவுக்கும் எங்கள் வங்கி பசு வளர்ப்புக்காகக் கொடுத்த கடனை வைத்து தமிழ்நாடு முழுக்க பாலாறு பெருக்கெடுத்து ஓட வைத்திருக்கலாம். வாங்கிய கடனைச் சீராகத் திரும்பக் கட்டியிருக்கலாம். அவள் பாம்பு டான்ஸ் ஆடுவதை நிறுத்தியிருந்தால்கூட போதும். தேச சேவை பலவிதமானது ஆச்சே…

எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

அத்தியாயம் 12

# மே 1976

கா ந்தி வாத்தியார் நோட்டீஸ் வைத்தது சனிக்கிழமை பகல் நேரத்தில்.

மேலே எதுவும் எழுதாமல் நீள வாக்கில் ப்ரௌன் கலரில் ஒரு உறையை என்னிடம் அவர் நீட்டியபோது, எதற்கோ மனு எழுதிக் கொண்டுவந்திருக்கிறார் என்று நினைத்தேன்.

மனு என்பது அரசாங்க அதிகாரிக்குப் பொதுமக்களால் அளிக்கப்படுவது. அது பள்ளிப் பிள்ளைகளின் காம்போசிஷன் நோட்புக்கில் ஜாக்கிரதையாகக் கிழித்தெடுத்த தாளாக இருக்கக்கூடும்.

எவ்வளவு ஜாக்கிரதையாகக் கிழித்தாலும் அங்கங்கே பிசிறு இல்லாமல் பேப்பரை எடுக்கச் சாத்தியமே இல்லை. கிழித்த, ஓரம் ஒழுங்காக அமையாத காகிதத்தில் பெரும்பாலும் கறுப்பு மசிப் பேனாவால் எழுதப்படுவது மனு.

இது ஏதாவது பொதுக் காரியம் ஆக வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி அரசாங்க நடவடிக்கையைக் கோரவோ, மனுப் போடுகிறவருக்கு மனமுவந்து உதவக் கோரியோ இருக்கலாம்.

அரசுத் தரப்பில் அதிகாரி என்றில்லாமல் உள்ளூர் அலுவலகர்களிடமும் இதை சமர்ப்பிக்கலாம். மேலதிக உற்சாகத்தோடு சினிமாக் கலையுலகப் பிரமுகர்கள் சிலரிடமும் மனுக் கொடுப்பது உண்டு. அதற்கு அவர்கள் அரசாங்கத்தோடு ஏதாவது ஒரு விதத்தில் தொடர்புடையவர்களாக இருப்பார்கள் என்பதே காரணமாகலாம்.

எந்த விதத்திலும் அரசியல் பக்கம் போகாத நகைச்சுவை நடிகை அங்கமுத்து வந்தபோது கூட எங்கள் ஊரில் ஒருத்தர் ஆடு வளர்க்க உதவி சம்பந்தமாக அவரிடம் மனுக் கொடுத்தார்.

“அவருக்கு தெரிஞ்ச அதிகாரி யாராச்சும் இருந்தா அவங்க கிட்டே அதைக் கொடுப்பாங்க இல்லே...” இது சரியான வாதமாக ஊரில் ஏற்கப்பட்டது.

ஆனால் காந்தி வாத்தியார், தினசரி நான் ஒருமுறையாவது சந்திக்காமல் இருக்க மாட்டேன் அந்த நல்ல சிநேகிதரை. காலையில் கூட டீக்கடையில் அவரோடு ஒன்றாகத்தான் நின்று டீ குடித்தேன். மதியம் திடீரென்று மனுவோடு ஆஜராகி அதை என்னிடம் பக்தியோடு நீட்டக் காரணம் என்ன?

“போத்தி, எனக்கு கல்யாணம் ஆகப் போவுது” என்றார் காந்தி வாத்தியார்.

பின்னாலேயே வேதக்கண் வாத்தியார் நின்று அதை வெகுவாக ஆமோதித்தார்.

கல்யாணத்துக்குக் கடன் தேவையா? நான் கேட்டே விட்டேன்.

அதெல்லாம் ஒரு காசும் வேண்டாம். பின்னே, கல்யாணம் நடத்த இடம் தேடித் தரச் சொல்லியோ, போக்குவரத்து ஏற்பாடு செய்ய உதவச் சொல்லியோ கோரிக்கையா? எதுவும் இல்லை. பின்னே?

“இது திருமண அழைப்பிதழ் சார்” என்றார் காந்தி, உறையைப் பிரித்து நீளவாக்கில் மடித்த இன்விடேஷனை எடுத்துக்கொண்டே.

“உறையை அடிக்க தாமதமாகும்னு சொன்னாங்க. அதான் சாதா கவர்லே வச்சு நோட்டீஸ் கொடுக்க வேண்டிப் போச்சு.”

காந்தி வாத்தியார் மறுபடி உறையில் அழைப்பை வைத்து அன்பும் மரியாதையுமாக நீட்டினார்.

கிட்டதட்ட ஒரே வயதுக்காரர்களான நண்பர்கள் வட்டத்தில் தற்போது நடக்கும் முதல் நல்ல நிகழ்ச்சி காந்தி வாத்தியாரின் கல்யாணம்.

நான் மகிழ்ச்சியோடு அழைப்பைப் பிரித்துப் படித்தேன்.

‘கர்த்தர் சேர்த்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்’ என்று எழுதி இரண்டு பக்கத்திலும் இந்து கல்யாணப் பத்திரிகைபோல இறக்கை முளைத்த தேவதைகள் பறந்து கொண்டிருந்தார்கள். இந்தத் தேவதைகள் சிலுவையைப் பிடித்துக் கொண்டிருந்தது ஒரே வித்தியாசம்.

நல்ல கத்தரிப்பூ கலரில் அடித்த அழைப்பு இரண்டு பக்கத்தில் முடியாமல் ஒரு சின்னப் புத்தகம் அளவுக்கு நீண்டு போனது வித்தியாசமாக இருந்தது. பைபிளையே கல்யாணத்துக்கு அழைக்கிற சாக்கில் அடித்து இணைப்பாகக் கொடுக்கிறாரோ.

இடைக்காட்டத்தூர் ரோமன் கத்தோலிக்க மாதாகோயிலில் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை காலை ஏழரை மணிக்கு ரெபக்கா என்ற கன்யகையை புனிதப் பிதா, புனித சுதன், புனித பரிசுத்த ஆவி இவர்களின் ஆசீர்களோடும் உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்துகளோடும் காந்திதாஸ் என்ற அலெக்சாண்டர் காந்தி சாமியம்பலம் திருமணம் செய்துகொள்வதாக அழைப்பிதழ் தெரிவித்தது. காலை எட்டு மணிக்கு கர்த்தருக்கு நன்றியோடு கல்யாணக் காலைச் சிற்றுண்டி விருந்து.

அழைப்பின் அடுத்த இருபது பக்கமும் ‘உங்கள் நல்வரவை அன்போடும் ஆனந்தத்தோடும் வரவேற்கும்’ என்று போட்டு வரிசையாகப் பெயர்கள், ஊர்கள், உறவு முறை.

“என்ன செய்ய, போத்தி, சாதிசனம் யார் பெயரையும் விடமுடியாது. அது மட்டுமில்லே, பெயரையோ ஊரையோ உறவையோ போடறதிலே ஒரு சின்ன தப்பு இருந்தாக்கூட அரிவாளோட வந்துடுவாங்க. நம்மாளுங்க கல்யாணப் பத்திரிகை அடிக்கறதுன்னாலே ப்ரிண்டிங் ப்ரஸ்காரங்க பயந்து ஓடறது இதனாலேதான்.”

சரிதான்.

“அபிராமி பிரஸ்லேயும், ஆனந்தன் அச்சுக்கூடத்திலேயும் கேட்டுப் பார்த்தேன். ஸ்கூல் பசங்களுக்குக் கொடுக்க இருபதம்சத் திட்டக் கையேடு அடிக்கறதாலே இந்த இன்விடேஷன் வேலையை எடுத்துக்க

முடியலேன்னு சொல்லிட்டாங்க. அப்புறம் நம்ம குளோரியா பிரஸ் ஆரோக்கியசாமிதான், 'ரொம்ப கேட்கறீங்க, சரி பார்க்கலாம்'னு அரை மனசோட எடுத்துக்கிட்டார்."

அப்படியா...

"சர்ச்லே இருந்து பாதிரியார் சாமி ஒரு நடை போகவேண்டி வந்தது. பாவம் அவரும், எதமா பதமா எடுத்துச் சொல்லி தேவ ஆசீர் நிறையக் கிடைக்கும்னு கியாரண்டி கொடுத்து அடிக்க வைச்சார். எல்லோருக்கும் இந்த பின்னிணைப்புதான் பிரச்சனை போத்தி."

என்னவாம்?

"ராஜேஸ்வரி பிரஸ்காரர் சொல்றாரு. 'வாத்தியாரே, பேசாம ஏதாவது கவர்மெண்ட் ஆபீஸ்லே சொல்லி நூறு காப்பி இந்த ஜில்லா வாக்காளர் பட்டியல் வாங்குங்க. சும்மாத்தான் வச்சிருப்பாங்க. இப்பத்தான் இன்னும் இருபது வருசம் எலக்ஷனே வராதாமே. ஆக, கேட்டதும் தூக்கிக் கொடுத்துடுவாங்க', வாக்காளர் பட்டியலை. அதை அப்படியே பசை போட்டு பத்திரிகையோட ஒட்டிக் கொடுத்துடலாம். எப்படி?"

பிரமாதம்.

"நீங்க, மொதல் ரெண்டு பக்கத்தைப் படிச்சுட்டு கல்யாணத்துக்கு வந்து வாழ்த்தினா போதும், மனசுக்கு நிறைவா இருக்கும்" என்றார் காந்தி.

"வாழ்த்தினா மட்டும் போறாது சார், சாப்பிடணும்" என்றார் வேதக்கண் வாத்தியார்.

"இவர் எனக்கு ரெண்டோ மூணோ விட்ட மாமா ஆகிடறார் இந்தக் கல்யாணத்தாலே. அதான் கூடவே கூட்டி வந்துட்டேன்" என்றார் காந்தி வாத்தியார்.

"எமர்ஜென்சியிலே எதை எதையோ நேராக்கிய மாதிரி, கல்யாணப் பத்திரிகையிலே ரெண்டு பக்கத்துக்கு மேலே இருக்கக் கூடாதுன்னு இருபத்தொண்ணாவது அம்சமா போடலாமே..." என்றார் வேதக்கண்.

“அந்தம்மா நினைச்சா போட்டுட முடியாது மாமா, அதுக்கு மேலிடம் இருக்கு” என்றார் காந்தி வாத்தியார்.

“அலி அகமது ஜனாதிபதிதானே, குளிக்கப் போனாக்கூட அங்கேயே இருந்துக்கிட்டு ஆயிரம் காகிதத்திலே கைநாட்டு போட்டு அனுப்பிடுவாராமில்லே.” காந்தி வாத்தியார் சொன்னார். நான் அவசரமாகக் கைகாட்டி அவர்களை நிறுத்தினேன்.

“சுவரு, மரம், லேம்ப் போஸ்ட், பப்ளிக் கக்கூஸ் எல்லாத்துக்கும் காது இருக்கு. எமர்ஜென்சியை கிண்டல் பண்ணினா பிடிச்சுக்கிட்டு போயிடுவாங்க. மெட்ராஸ் டவுன் பஸ்ஸுலே இப்படித்தான் போன மாசம் ஒரு கண்டக்டர் இந்திரா காந்தியோட மூக்கு பத்தி பாசஞ்சர்கள் கிட்டே கிண்டல் பண்ணினாராம். பஸ்ஸிலே வந்த சிஐடி யாரோ பஸ்ஸை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய், கண்டக்டரை உள்ளே வச்சுட்டாங்களாம். எதுக்கு வம்பு வாத்தியாரே... கல்யாணம் வேறே வச்சிருக்கீங்க. கண்டுக்காம போயிடுங்க.”

நான்தான் சொன்னேன். இந்த எளிய ஜீவன்களை போராடத் தூண்டிவிட்டு அவர்கள் துன்பப்பட ஆரம்பிக்கும்போது விட்டுவிட்டு ஒன்றும் தெரியாததுபோல் ஓரமாக நாற்காலி போட்டு உட்கார மனசு இடம் கொடுக்கவில்லை.

அப்புறம் இரண்டு நாள் காந்தி வாத்தியாரும் வேதக்கண் வாத்தியாரும் கண்ணில் படவே இல்லை. நேரு பஜார் பக்கம் ஸ்கூட்டரில் போகிறபோது ஒரு தடவை காந்தி வாத்தியார் அவசரமாக மசூதிப் பக்கத்தில் சீனிவாப்பா சந்துக்குள் சைக்கிளில் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

அதேபோல, முத்துப்பட்டியில் ஒருத்தருக்கு கேரள லாட்டரியில் ஒரு லட்சம் கிடைத்ததாகத் தகவல் வர, பின் சீட்டில் மேனேஜரோடு அந்த அதிர்ஷ்டசாலியை வளைத்துப் பிடித்து டெபாசிட் போடவைக்க கிளம்பிப் போய்க் கொண்டிருந்தபோது வேதக்கண் வாத்தியார் இன்னும் நான்கு பேரோடு வியர்க்க விறுவிறுக்க கண்மாய்க் கரையில் ஏறிக்

கொண்டிருந்தார். பார்க்க, புன்னகை செய்ய, ஒரு வார்த்தை பேசக்கூட நேரமில்லாத அவசரம் அவர்களுடையது.

'பணம் கைக்கு வரட்டும், பார்க்கலாம்' என்று அந்த வட்டாரத்தில் எங்களையும் சேர்த்து பதினைந்து பேங்குகளுக்கு வாக்குறுதி கொடுத்திருந்த அந்த அதிர்ஷ்டசாலி கையில் வந்த பணம் ரொம்பவே கம்மி என்பதும் அதை வைத்து அவர் நாட்டுக்கோழிப் பண்ணை வைத்தார் என்பதும் தொடர்பில்லாத செய்திகள் என்றாலும் இந்த வரலாற்றில் பின்னால் ஏதோ ஒரு இடத்தில் அந்தக் கோழிப் பண்ணை வரலாம்.

வேதக்கண் வாத்தியார் அப்போதும் இதே உயரமான சைக்கிளில் கெந்திக் கெந்திப் பெடல் போட்டுக்கொண்டு எதிர் காற்றில் வருவார்.

சனிக்கிழமை சாயந்திரம் ரவீந்திரன் அறையில் நண்பர்கள் பொதுக்குழு அவசரமாகக் கூடியது.

அடுத்த சனிக்கிழமை காலையில் நம்ம ஆருயிர் நண்பர் காந்தி வாத்தியார் கல்யாணம் இருக்கு. என்ன பரிசு தருவது?

ஆளாளுக்குச் சின்னதும் பெரிசுமாக ஏதாவது உபயோகமில்லாத பொருளை - அது மில்க் குக்கராக இருக்கும் பெரும்பாலும் - அவருக்குக் கொண்டுபோய்த் தருவதற்குப் பதிலாக, எல்லோரும் சேர்ந்து கொஞ்சம் பெரியதாக, அவருக்கு ஏழெட்டு வருடமாவது பிரயோஜனப்படுவதாக ஏதாவது தரலாமே.

இந்த யோசனையை எல்லோரும் ஆளுக்கு ஒரு தடவை சொல்லி, பல முறை ஆமோதிக்க, அடுத்த கேள்வி, என்ன வாங்கலாம்?

அதுக்கு முன்னால், ஆளுக்கு எவ்வளவு தரலாம்?

"இது டிக்கெட் வச்சு வசூலிக்கற காரியமில்லை. ஆளாளுக்கு எவ்வளவு முடியுமோ, அம்புட்டு போட்டுக்கலாம். எவ்வளவு தர முடியும்னு ஒவ்வொருத்தரும் முதல்லேயே எழுதிட்டா ட்வென்டி பாயிண்ட் ப்ரோகிராம் மாதிரி அம்சமா திட்டம் போட்டு நடத்திக் கொடுத்துடலாம்."

பிரான்சிஸ் தங்கராஜ் கம்பீரமாக அறிவித்தார்.

“இருபது அம்சத்திட்டம் இருபத்தஞ்சாகி இனி நூறு அம்சத் திட்டமாகப் போறதாமே?” டெபுடி தாசில்தார் சேதுபதி கேட்டார்.

“சே, சே, அதெல்லாம் இருக்காது. ஒரு அம்சத்துக்கு ஒண்ணுன்னு கடன் லெட்ஜர் நூறு வச்சுக்க முடியுமா என்ன?” என்று ஆணித்தரமான வாதத்தை முன்வைத்தார் நம்ம கேஷியர் கருப்பையா.

ஆக, எல்லோரும் எழுதிய தொகையைக் கூட்டிப் பார்த்தால் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் வந்திருந்தது. இந்தப் பணத்துக்கு ஒரு எலெக்ட்ரிக் க்ரைண்டர், மிக்ஸி இரண்டும் வாங்கி வைக்கலாம் என்று முடிவு செய்தோம்.

நானும் ரவீந்திரனும் மொத்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு, வசூலான பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்றும் முடிவானது.

“டெல்லிக்கு போஸ்ட் கார்ட் போட்டு வாங்கினா, ஐஸ்பெட்டியே ஒண்ணுக்கு ரெண்டா இந்தப் பணத்துக்கு கிடைக்கும்” என்றார் பொதுப்பணித்துறை நடராஜன்.

அவருடைய ஐஸ்பெட்டி ரெஃப்ரிஜிரேட்டர்தான். தமிழ்ப் பத்திரிகைகளில் வரி விளம்பரம் செய்து டில்லி கம்பெனிகள் சல்லிசு விலைக்கு விற்கும் எலெக்ட்ரானிக் பொருட்களுக்கு அவர் பெரிய விசிறி.

நடராஜன் பதினைந்து ரூபாய்க்கு டில்லியில் இருந்து டிரான்சிஸ்டர் ரேடியோ வாங்கி அது விபிபியில் வந்தது இரண்டு மாதம் முன்னால். அந்த வினோதமான டிரான்சிஸ்டர் ரேடியோ திடீரென்று ஐரோப்பா கண்டத்தில் ஏதோ மூலையில் இருக்கும் ரேடியோ ஸ்டேஷன் கூட எடுக்கும். இன்னொரு நாள் போலீஸ் கண்ட்ரோல் ரூமில் ஹலோ ஹலோ என்று பேசுகிறதெல்லாம் ஒலிபரப்பும். ஒரு நாள் முழுக்க கீச்சுகீச்சென்று சக்கரத்தை நகர்த்தி வரும் எல்லா ஸ்டேஷனிலும் ஒரே மாதிரி எமர்ஜென்சி சங்கீதத்தைக் கேட்க வைத்தது அந்த டிரான்சிஸ்டர். இன்னொரு நாள் முழுக்க ஒரு ஸ்டேஷனில் யாரோ சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். வெளிநாடாக இருக்கும்.

அன்றைக்கு ரேடியோவை ஸ்விட்ச் ஆஃப் செய்து மாடப்புரையில் வைத்தவர் அடுத்து நான்கு வாரம் அதன் பக்கமே போகவில்லை. என்றாலும் சைக்கிளில் போகும்போது பேச்சுத்துணைக்கு அதை விட்டால் சரிப்படுவது வேறேதும் இல்லை என்று புலப்பட, தில்லி ரேடியோ திரும்ப இயங்கத் தொடங்கியது.

ரேடியோ வாங்கியதிலிருந்து அவர் தில்லி தாசனாக, எமர்ஜென்சி பாட்டு, பேச்சு எல்லாம் தவறாமல் கேட்க ஆரம்பித்தார். எண்ணைச் சொன்னதும் இருபத்தைந்து அம்சத் திட்டத்தில் அந்த எண்ணுக்கான விளக்கத்தை ஆ, ஒ, உம் என்ற உச்சபட்ச ஒலிகளோடு அவரால் பாட்டாகப் பாட முடியும்.

மற்றபடி டிரான்சிஸ்டர் ரேடியோவை நானும் மற்ற பலரும் செய்தி கேட்கவும் விவித்பாரதியில் சினிமாப் பாட்டு கேட்கவும்தான் உபயோகித்தோம். அதுவும் கிஷோர் குமார் பாடாத பாடல்கள் மட்டும்.

ஆராதனா சினிமாவில் அற்புதமாக 'மேரே ஸப்னோம் கி ராணி' போன்ற பாடல்களை எஸ்.டி. பர்மன் இசையில் பாடிய கிஷோர் குமாரை ஐந்தம்ச, இருபதம்ச சமாசாரங்களைப் பற்றி பம்பாய் பேரணியில் பாடவரச் சொல்லி சஞ்சய் காந்தி கட்டளையிட்டபோது கிஷோர், மாட்டேன் போய்யா என்று சொல்லிவிட்டாராம். அதிலிருந்து அவர் பாட்டு எதுவும் ஆகாசவாணியில் வருவது கிடையாது. விவித்பாரதி கிஷோர் பாட்டு இல்லாமல் தடுமாறுகிறது.

தப்பித்தவறி ஒரு கிஷோர் குமார் பாட்டு ஒலிபரப்பாகி அது சஞ்சய்க்குத் தெரிந்துவிட, பிரதமர் மாளிகையில் ஒரு பின்னறைக்கு செய்தி-ஒலிபரப்புத்துறை அமைச்சரை இளவல் வரவழைத்து, 'என்ன ம-வுக்கு மினிஸ்டரா இருக்கே' என்று சட்டையைப் பிடித்து உலுக்கி வைது தீர்த்ததாக ஒரு வதந்தி அங்கங்கே முணுமுணுப்பாகப் பரவியது.

கிஷோர் குமார் எமர்ஜென்சி பாட்டுப்பாட வரமாட்டேன் என்று சஞ்சய் காந்தியிடம் முகத்தில் அடித்தாற்போல் சொன்னதற்குக் காரணம், அவர் எமர்ஜென்சி எதிர்ப்பாளர் என்பதில்லையாம். கூப்பிட்ட இடத்துக்குப் போய் தொண்டை வரளப் பாடினால், ஒரு பைசா கூட அந்தக்

கூட்டத்தினர் அதற்கு சன்மானம் தரமாட்டார்கள் என்ற முன்னனுபவம்தான் காரணமாம்.

ரேடியோவில் செய்தி கேட்பது வேறு மாதிரி சமாசாரம். ஆகாசவாணி என்ற ஆல் இந்தியா ரேடியோவில் செய்திகள் எல்லா மொழியிலும் மணிக்கு ஒரு முறை வரும்தான். ஆனால் ஆகாசவாணி சொன்ன செய்தி முழுக்க ரீல் சுற்றுவதாகவும், சொல்லாத செய்தி மறைக்கப்பட்ட முக்கியமான தகவலாகவும் இருந்ததால் ஆகாசவாணியை விலக்கி வைத்தோம்.

விவித்பாரதியின் இடத்தை இலங்கை ரேடியோவும், ஆகாசவாணியின் தேசிய நடுநிலைச் செய்தியாளர் அந்தஸ்தை பி.பி.சியும் பிடித்தன.

போன மாதம், ஏப்ரல் பதிமூன்றாம் தேதி புதுதில்லியில் ஜும்மா மசூதி பக்கம் சஞ்சய் காந்தியின் உத்தரவின் பேரில், குடிசைப் பகுதிகளை இடித்தது பற்றியும், அங்கே இருந்த ஆயிரக்கணக்கானவர்கள் எதிர்த்துப் போராடியபோது துப்பாக்கிச் சூடு நடத்தி நூற்றைம்பது பேர் குண்டுபட்டு இறந்தது பற்றியும் மூச்சு விடாத ஆகாசவாணியில் நிலைய வித்துவான் தில்ரூபா வாசித்துக் கொண்டிருக்க, பிபிசி விரிவாக, விரைவாகச் செய்தி அளித்துக் கொண்டிருந்தது ஓர் உதாரணம்.

அதெல்லாம் சரிதான். அல்லது சரி இல்லைதான். ஆனாலும் கல்யாணப் பரிசாக தில்லி ரேடியோ சரிப்படாது. இத்துணூண்டுக்கு அது நிறக்காது. தில்லி தயாரிப்பு ரிப்ரிஜிரேட்டர் வந்து சேர்வதற்குள் குழந்தை குட்டியோடு வெட்டிங் அனிவர்சரியே கொண்டாடி விடுவார்கள்.

அப்புறம், நமக்கெதுக்கு ரிப்ரிஜிரேட்டரும் மற்றதும்? யாருக்காவது ஜில்லென்று சோடா கலர் தரவேண்டும் என்றால், ஆனந்தா ஐஸ் ஃபேக்டரியில் ஒரு ரூபாய்க்கு கை நிறைய சீவிச் சீவி சின்னத் துகளாக ஐஸ் கொடுப்பார்கள். அதைப் போட்டுக் குடித்தால் அடிமுதல் தலை வரை நாள் முழுக்க ஜில் என்று இருக்கும். அடுத்த நாள் தொண்டை கட்டும்தான். அதற்காகப் பார்த்தால், குளிர்ச்சி கிடைக்குமா?

பேச்சை வளர்க்க வேண்டாம். சரி, மிக்ஸி, கிரைண்டரே வாங்கித் தரலாம் என்று முடிவானது. தில்லியில் இல்லை. அது ஏமாற்றுகிறவர்களின் நகரம். இங்கேயே வாங்குவோம்.

முடிவானால் போதுமா, எங்கே வாங்குவது? இந்த ஊரில் பெரிய கடை என்று வைத்தால் திலீப் ஃபேன்ஸி ஸ்டோர்தான். அங்கே பிளாஸ்டிக் பொருள்தான் பிரதானமாக இருக்கும். பள்ளிப் பிள்ளைகள் எடுத்துப் போகும் கரடி பொம்மை வாட்டர் பேக், புத்தகப் பை, பிளாஸ்டிக் அஞ்சறைப் பெட்டி, அவசரமாகச் செய்து போட்ட பிளாஸ்டிக் பொம்மைகள் இத்யாதி. இந்திரா காந்தி பொம்மைக்குக்கூட மூக்கு சப்பையாக, முகம் தெளிவில்லாமல் இருக்கும். எங்கேயோ, எதோ ஒரு பேங்கில் இதெல்லாம் செய்து அடுக்க லோன்மேளா வைத்து எமர்ஜென்சி லோன் கொடுத்திருப்பார்கள்.

வேண்டிய சரக்கு எதுவோ, கெடிலாக் காரில் இருந்து எலெக்ட்ரிக் அடுப்பு வரை எதைக் கேட்டாலும் ‘அடுத்த வாரம் வாங்க, எடுத்து வைச்சிருக்கேன்’ என்று வாக்கு தத்தம் செய்வார் உரிமையாளர் கோமஸ். யாரும் அடுத்த வாரம் வந்து கேட்டதாகச் சரித்திரம் இல்லைதான்.

மதுரை போய் வேண்டிய சரக்கைக் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று ஒரே மனதாக முடிவு செய்யப்பட்டது. ஒன்று, இரண்டல்ல, மொத்தம் பதினைந்து பேர் ஞாயிறு விடிகாலையிலேயே ஜெயவிலாஸ் பஸ்ஸில் பிக்னிக் போவதுபோல் கோலாகலமாக மதுரை கிளம்பினோம். குளிர்ந்த காற்று தவழும் காலை ஏழு மணிக்கு மீனாட்சி அம்மன் கோயில் வாசலில் நின்ற எங்களில் கிறிஸ்துவ பிரான்சிஸ், முஸ்லிம் ஹமீது இவர்களோடு கீழை மார்க்சீயரான ஜெபர்சனும் அடக்கம்.

“சந்நிதிக்குப் போறவங்க போய் தொழட்டும். இந்த இடத்துக்குள்ளே, பொற்றாமரைக் கரையிலே உட்கார்ந்து கோபுரத்தை அண்ணாந்து பார்த்தபடி இருக்கறதே மனதுக்கு ஆறுதலான விஷயம். இதுக்கு நான் ஒரு ஆத்திகனா, இந்த மதத்தைச் சார்ந்தவனாக இருக்கணும்னு கிடையாது.”

ஜெபர்சன் சொன்னபோது யாரும் மறுக்கவில்லை. அது ஒரு பதினைந்து நபர் கூட்டம். அந்த நிமிடத்திலாவது ஆக்கபூர்வமாக சிந்திக்கும்.

நான் சாமி சந்நிதியில் தொழுதுவிட்டு அம்மா வீட்டில், அவள் இருப்பிடத்தில் மனமுருகி நின்றேன். அந்த நிமிடம் வரை என்னை ஆன்மிகத்திலிருந்து அகற்றி நிறுத்திய வாசிப்பும், கற்றதும், கேட்டதும், பேச்சும், பழக்கமும் விலகி நிற்க, எத்தனையோ பரம்பரைகளின் எச்சமாக மனதையும் உயிரையும் பரிசுத்தமாக்கும் சிந்தனைகள் சூழ்ந்திருக்க, அம்மா மீனாட்சியிடம் நான் கண்ணில் நீர் வழியக் கைகூப்பித் தொழுதேன். அங்கேயே இருந்துவிடலாம் என்று தோன்றியது.

வேறு எங்கும் உலகில் எந்த மூலையிலும் கிடைக்காத அமைதி அது. பனிமலைச் சிகரங்களிலும், நீல நதி நடக்க இருபுறமும் விரியும் ஆற்றங்கரைகளிலும், பசுமை பரப்பும் நிலப் பரப்பிலும் தட்டுப்பட்டு, மன அவசம் நீங்கிய நினைவுப் பரப்பில் மெல்ல எழுந்து வரும் பேருணர்வு அது.

கோயிலிலிருந்து வெளிவரவே எட்டரை ஆகிவிட்டது. தங்கம் தியேட்டர் பக்கம் எங்கள் குழு நடக்க, கோயில் பார்க்க வந்த வெளியூர் டூரிஸ்டுகள் என்று முடிவு செய்த ப்ரோக்கர்கள் லாட்ஜ், ரூம் மற்றதெல்லாம் குறைந்த கட்டணத்தில் ஏற்பாடு செய்து தருவதாக ஆசை காட்டி கூடவே வந்தார்கள்.

டவுன்பஸ் பிடித்து மதுரை வந்த புறநகர்க் கோஷ்டி இது என்று தெளிந்த அவர்கள் உடனே பின்வாங்கி, பியர் வேணுமா என்று கேட்டார்கள். விடிந்ததும் பியர் குடிக்கிற சந்ததியில் பட்டவர்கள் இல்லை என்று நாங்கள் விளக்க, காணாமல் போனார்கள்.

கோஷ்டியாக மெஸ்ஸில் படியேறினோம். இருபத்துநான்கு மணி நேரமும் மல்லிகைப்பூ இட்லியும் கெட்டிச் சட்னியும் கிடைக்கும் மெஸ் அது. கிடைப்பது இருக்கட்டும், இருபத்து நான்கு மணி நேரமும் இட்லி சாப்பிட மதுரையில் ஆள்படை உண்டு என்பதே சந்தோஷமான சமாசாரமாகப் பட்டது. அதைப் பங்கு வைத்துப் பரிமாறியபடி சாப்பிட்டு,

காப்பி உபசாரமும் முடிந்து வீதிகளில் நடக்க, ஒவ்வொரு கடையாகத் திறந்து கொண்டிருந்தது. கூட்டமும் தெருவெங்கும் பெருகி வர, இன்னொரு பரபரப்பான மதுரை தினம் அது.

சாயந்திரம் கல்யாணம் நிச்சயம் செய்து ராத்திரி தேவையான எல்லாம் வாங்கி முடித்து, அடுத்த நாள் காலையில் விமரிசையாகக் கொண்டாடி முடித்து விடலாம் இந்த மதுரையில் என்று ஊர்க்காரர்களும், நாற்பத்தெட்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்து பஸ்ஸில் வந்தாலும் ஊரோடு ஒத்து வாழும் நாங்களும் சேர்ந்து சொல்வது எந்தக் காலத்தில் ஓய்ந்தது?

எலெக்ட்ரிக் பொருள் விற்கும் கடைகள் மேலமாசி வீதியில் இருந்தன. அதெல்லாம் பத்து மணிக்கு மேல் சாவகாசமாகத் திறக்கும் அல்லது விடுமுறை எடுத்துக்கொண்டு அடைத்திருக்கும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

விடுமுறையாக இருந்தாலும் கடையைத் திறந்து எங்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் இயக்கிக் காட்டவும் விற்பனை செய்யவும் மேனேஜரின் உறவுக்காரர்கள் வைத்திருந்த கடைக்குப் போகச் சொல்லியிருந்தார் அவர். உறவுக்காரர்களின் தொலைபேசி எண்களை எல்லோருமே காகிதத்தில் எழுதி சட்டைப்பையில் வைத்திருந்தோம். பொருட்காட்சியில் தொலைந்து போன குழந்தைபோல சட்டைப் பையில் காகிதத்தைப் பிடித்துக்கொண்டு மேலமாசிவீதிக்கு வர, எல்லாக் கடையும் ஊருக்கு முன்பே திறந்திருந்தது.

அடுத்த ஒரு மணி நேரம் விற்பனை செய்யக் காத்திருந்த மலையாளத் தமிழ் பேசும் விற்பனையாளரை ஏகத்துக்குக் கஷ்டப்படுத்திவிட்டோம்.

கிரைண்டரில் அரைத்துக் காட்ட ஊற வைத்த அரிசி, உளுந்து என்று தயாராக இருந்தார் அவர். என்ன விகிதத்தில் இந்தக் கலவை இருக்க வேண்டும், இதற்குப் போடுகிற அரிசி வீட்டில் ஆட்டுக்கல்லில் போடும் அதேதானா இல்லை காஷ்மீர், வடநாடு பாஸ்மதி அரிசி வேணுமா, அரைத்து எடுக்கும்போது மெஷின் ஷாக் அடித்தால் என்ன செய்ய வேண்டும், - எண்டெ அம்மை மேலே ப்ரோமிஸ் - உங்க அம்மை

மேலே ப்ராமிஸ் - அது ஷோக் எல்லாம் அடிக்காது, கேட்டோ... எதுக்கும் காலிலே ரெப்பர் செருப்பு இடலாம்...

ஆளுக்கு ஒரு கேள்வியை எறிந்து பதில் வாங்கி மெஷினை அரைக்கச் செய்ய விசையைத் திருகினால் அது தேமேன்னு கிடந்தது. அடுத்த நிமிடம் ஆரம்பமான பரபரப்பு ஐந்து நிமிடம் நீடித்தது. கரெண்ட் கட் என்று யாரோ கண்டுபிடித்துச் சொல்லாவிட்டால் நாங்கள் மிக்ஸி, கிரைண்டர் வேண்டாம் என்றே முடிவு கட்டி இறங்கிப் போயிருப்போம்.

மிக்ஸியை ஏனோ ஓட்டிப் பார்த்து வாங்கவில்லை. அவ்வளவு நேர்த்தியான டிசைனில் இருந்த எலெக்ட்ரிக் கருவியில் பிழை வராது என்று நம்பினோம். என்றாலும் கடை சிப்பந்திகளுக்கு மதிய நேரத்தில் பழச்சாறு பிழிய வைத்திருந்த அதே கம்பெனி மிக்ஸியை இயக்கி ஆளுக்கு ரெண்டு வாய் ஆரஞ்ச் ஜூஸ் கொடுத்தார்கள். தரக்கேடு இல்லாத பழச்சாறு. நல்ல மிக்ஸி.

வாங்குவது இவ்வளவு பொறுமையாக, நேரம் எடுத்துச் செய்யவேண்டிய காரியம் என்றால் அதைக் கல்யாணப் பரிசாகக் கொடுக்க கலர் காகிதம் ஒட்டிப் பெட்டியில் அடைப்பது இன்னும் கொஞ்சம் சிரமம். பின்னர் அதைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது இன்னும் எட்டு மடங்கு கடினமானது. அதற்கெல்லாம் பார்த்தால் முடியுமா?

மிக்ஸி பெரிய அட்டைப் பெட்டியில் வருகிறது. பெட்டி மேல் கலர் காகிதம் ஒட்டலாம்தான். ஆனால் அவ்வளவு பெரிய பார்சலை எப்படித் தூக்கிப் போவது? அதை வைத்துக்கொண்டு பஸ் ஏறி உள்ளே வைத்துக்கொண்டு பயணம் செய்து... நடக்கிற காரியமில்லை.

கிரைண்டர் பீமசேனன் மாதிரி வலுவானது. வாழ்க்கையிலேயே முதல் முறையாக அதை வாங்கும் அனுபவம். பெரிய ஆட்டுக்கல் சைஸில்தான் கிரைண்டர்கள் அங்கே கிடைத்தன. அதிலும் ஆகப் பெரிசு எங்கள் பட்ஜெட்டில் வந்துவிட்டதால் தேர்ந்தெடுக்கப்பட்டது. பேக்கிங் எல்லாம் இல்லை. முக்கியமாக நடுவில் சுற்றி வரும் கல் குழவி. அதற்கு அட்டைப் பெட்டி கிடையாது.

உள்ளூரிலேயே வாங்கினால் எப்படி டெலிவரி கொடுப்பீர்கள் என்று விற்பனையாளனைக் கேட்டேன்.

“கடையிலேயே ரெட்டை மாட்டு வண்டி இருக்கு. இதைன்னு இல்லே, ஃப்ரிட்ஜ், ஃபேன் இதெல்லாம் கூட வண்டியிலே போட்டு அனுப்பினா, மூணு மணி நேரத்துலே போய்ச் சேர்ந்துடும்.”

“எங்க அட்ரஸ்லேயும் அப்படி மாட்டுவண்டி டெலிவரி கொடுக்கலாமே.”

“கொடுக்கலாம். ஆனா பாருங்க, போக முப்பது, வர முப்பதுன்னு மாட்டுக்கும் கஷ்டம். ஓட்டறதும் சிரமம்.”

“அதென்னங்க பெரிய சிரமம், அங்கங்கே நிறுத்தி மாட்டுக்கு ரெஸ்ட் கொடுத்துட்டு நாங்களே ஓட்டிப் போயிடறோம். வெள்ளையும் சள்ளையுமா நின்னா மாட்டு வண்டி ஓட்ட மாட்டோம்னு நினைக்கறீங்களா அண்ணே?”

“வண்டியை ஒருத்தர் மட்டும் ஓட்டிட்டு வரணும். நீங்க பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்தா வண்டி எப்படி நகரும்? பாவம் இல்லையா அந்த மாடு.”

ரவீந்திரன் யோசனை சொன்னார். லாரி கம்பெனியிலே கேட்டுப் பார்க்கலாமே. எத்தனையோ விதமான சரக்கை எல்லாம் லாரி முழுக்கத் திணித்து எடுத்துப் போகிற எந்த லாரியைக் கொண்டுவந்து இதையெல்லாம் ஏற்ற? அது எப்போது வந்து, ஊருக்கு இதையெல்லாம் நசுங்காமல், பழுதாகாமல் எப்படி கொண்டுபோய்ச் சேர்க்க?

கடை முதலாளியும் மேனேஜருக்கு உறவுமானவர் எதிர்பாராத விதமாக உதவிக்கு வந்தார். அவருடைய அம்பாசிடர் காரில் கொண்டுபோய் இறக்கிவிட்டு வரலாம் என்று சொன்னபோது அத்தனை பேரும் நன்றியோடு பார்த்தோம்.

கார்கள் சொற்பமாக இருந்த காலம். டாக்சிகள் அந்தப் பக்கம் அபூர்வம். காரை யார் ஓட்டுவது, பெட்ரோல் யார் போடுவது போன்ற கேள்விகளுக்கே இடமில்லாமல், அதெல்லாம் நம்ம வகை செலவினம் என்று சொல்லிவிட்டார் முதலாளி.

கார் டிக்கியில் கிரைண்டர் சமர்த்தாகப் போய் உட்கார்ந்தது. திரும்ப டிக்கியை மூட சிரமமாக இருந்ததால் அதைக் கயறு கொண்டு வெளியே கட்டி எப்படியோ பாதுகாப்பு செய்து கொடுத்தார்கள். காரில் கேஷியர் கருப்பையாவும், ஹமீது சாரும் போக, நாங்கள் பஸ்ஸில் ஜலசா பாடிக்கொண்டு வந்து சேர்ந்தோம்.

பஸ் கோட்டை வாசலுக்குள் கோட்டை முனியாண்டி கோயில் திரும்பி நுழையும்போதே சுபாஷ் போஸ் பஜார் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. தெருவை அடைத்துக்கொண்டு இருபது முப்பது பேர் நின்று பெரிய குரலில் பேசுகிற, எமர்ஜென்சி காலத்துக்கு இசையாத சூழ்நிலை அது. அவசரமாக நாங்கள் பஸ்ஸை விட்டு இறங்கினோம்.

“இந்த லிஸ்ட் எங்களுக்கு உடன்பாடு இல்லே.”

நகர்நல முன்னணி என்ற ஊர்நலனுக்கான சங்கத் தலைவர் வேதரத்தினம் சத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்க, எனக்குத் தெரிந்த பள்ளிக்கூட ஆசிரியர்களில் இருபது முப்பது பேர் அவருக்கு முன்னால் பதற்றமாக நின்று கொண்டிருந்தார்கள். வேதக்கண்ணும் காந்தியும் அவர்களில் உண்டு.

“இப்போ உடன்பாடு இல்லேன்னா எப்படி அண்ணே?”

வேதக்கண் வாத்தியார் கேட்டார்.

“அறுத்துக்க எடுத்த பெயர்லே அவங்களோட சம்மதம் இல்லாம அவனுங்களையும் சேர்த்துக்கிட்டதா அந்தப் பயலுங்க சொல்றாங்க. அந்த ரெண்டு உருப்படிதான் பிரச்சனை” என்றார் குத்தூஸ் மரைக்காயர். வணிகர் சங்க உபதலைவர் அவர்.

யாரை அவர் சுட்டுகிறார் என்று கேட்டால் ஊரில் காவல் காக்க வந்து சேர்ந்த நேபாளி கூர்க்காகள்தான் இப்படிப் பின்வாங்கினார்களாம்.

காந்தி வாத்தியாரை அருகில் கூப்பிட்டோம்.

“அவங்க ரெண்டு பேரையும் நாங்க குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷனுக்கு ஆள் பிடிச்சு லிஸ்டுலே போடலே. அவங்களா கடைசி நிமிஷத்துலே வந்து சேர்த்துக்கச் சொன்னாங்க. அரிசி அஞ்சு கிலோ, முப்பது ரூபா பணம் இதெல்லாம் உண்டுன்னு தெரிஞ்சு அவங்களா வந்தவங்க, இப்போ சொல்றாங்க, பாஷை புரியாததாலே, கண்ணுலே காடராக்ட் இலவச சிகிச்சை முகாம்னு நெனச்சுட்டோம்...”

அட கடவுளே... அப்புறம்?

“அவங்க மேலே தப்பு சொல்ல மாட்டேன். புரியாமலும் போயிருக்கலாம். இங்கே நம்மாளு யாராவது அவங்களை தடுத்திருக்கலாம். ஏதோ என் தலையிலும் வேதக்கண் வாத்தியார் தலைமேலும் விழுந்திருக்கு. கணக்கை சரியாக்க வேற வழியே இல்லேன்னா இருக்கவே இருக்கு நமக்கு.”

என்ன இருக்கவே இருக்கு? நான் காந்தியைப் பார்க்க அவர் தலையைக் கவிழ்ந்து கொண்டார். கல்யாண மாப்பிள்ளைக்கு ஏற்பட்ட உற்சாகமும் மகிழ்ச்சியும் எல்லாம் போய், சாவி கொடுத்து நடக்க வைக்கப்பட்ட பொம்மை மாதிரி இருந்தார். வேதக்கண் வாத்தியார் ஒரு சாயலுக்கு பொடிக்கடை வாசலில் தலையை ஆட்டியபடி இருக்கும் மீசைக்காரர் பொம்மை மாதிரி இருப்பார். இப்போது தலை குனிந்த மீசைக்காரர் அவர்.

“வேதக்கண்ணு சார், கல்யாண வேலையை கவனிக்கலியா? கணக்கு வழக்கு எல்லாம் வேற யாராவது பார்க்கட்டும். நீங்க வெளியே வாங்க” ரவீந்திரன் சொல்லியும் அவர் நகர்கிற வழியாகக் காணோம்.

“என்னமோ சொன்னீங்களே, காந்தி?”

“அதான் சொல்றேன். இருக்கவே இருக்கு ஒரு வழி. நான் குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்கறேன். வேதக்கண் சாரும்தான். அவரோட கணக்கிலே நான், என்னோட கணக்குலே அவர். இன்னும் நாலு மாசம் கழிச்சு மாத்து ஆபரேஷன் செஞ்சுக்கிட்டு நார்மல் ஆகிடறோம். என்ன,

புதுப் பொண்டாட்டி கிட்டே சொன்னா புரிஞ்சுக்கப் போறாங்க. நாலு மாசம் ஒரே ஓட்டமா போயிடாதா?”

அவர் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

நாங்கள் ஒரே குரலில் அப்படிச் செய்யக் கூடாது என்றோம்.

“அது தவிர வேற எது வேணும்னாலும் பேசுங்க. முடிவு செஞ்சாச்சு.”

“என்னிக்கு ஆபரேஷன்?”

ரவீந்திரன் மெல்லிய குரலில் கேட்டார்.

“அடுத்த ஞாயிறுதான் குடும்ப நல முகாம் வச்சிருக்கு. கலெக்டர் ஆரம்பிச்சு வைக்கறார்.”

“அடுத்த ஞாயிறு கல்யாணம் இருக்கே...” என்றேன் நான்.

“கல்யாணம் காலையிலே ஏழு மணிக்கு. இது முற்பகல் பதினொரு மணி.”

சொல்லும்போதே காந்தி வாத்தியார் இன்னொரு தடவை அழும் நிலைக்குப் போயிருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை. நான்கு மணிக்கே எழுந்தாகிவிட்டது. ஒரு கூடை நிறைய பூ வாங்கி கல்யாணத்துக்கு எடுத்துப் போக நான் ஏற்பாடு செய்திருந்தேன்.

சந்தைப் பக்கம் பூக்கடை வைத்திருக்கும் மூக்கையா விடிகாலையில் வந்தால், தோட்டத்தில் பறித்து வந்த புத்தம்புதுப் பூவாக ரோஜாவும், ஜவ்வந்திப் பூவும் தருவதாகச் சொன்னார். மரிக்கொழுந்து கூட தர முடியுமாம்.

ஆனாலும், சர்ச்சில் மரிக்கொழுந்து எல்லாம் அனுமதிப்பார்களோ தெரியாது என்பதால் வேண்டாம் என்று வைத்தேன்.

வாசலில் இரண்டு குதிரை வண்டிகள் நின்றன. ஒன்றை ரவீந்திரனின் லாட்ஜுக்கு அனுப்பி, அங்கே இருந்து மிக்ஸி, கிரைண்டர், இடம்

இருந்தால் ரவீந்திரன் அதில் இடைக்காட்டத்தூர் சர்ச் பயணப்பட ஏற்பாடானது.

முதல் மாடி அறையில் இருந்து அன்பளிப்பை நகர்த்தி எடுக்க கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். எப்படியாவது ரவீந்திரன் சமாளித்துவிடுவார்.

காரில் கொண்டுவந்து அங்கே இறக்கி விட்டார்கள். என் வீட்டுக்குக் காரைப் போகச் சொல்லி அதிகம் உபத்திரவம் கொடுக்க வேண்டாம் என்று ரவீந்திரன் ஒரு வாரம் தன் அறையில் அவற்றை வைத்துக் கொண்டார். சீட்டு விளையாடாத வாரம் அது. அறையில் கூட்டம் சேர்ந்து யாராவது எதாவது குமிழைத் திருகி பரிசுப் பொருட்களை ஒரு வழி செய்துவிட வாய்ப்பு இருந்ததால் அந்த முடிவு.

"மூக்கையா கடைக்கு போய் பூவை எடுத்துக்கிட்டு இடைக்காட்டத்தூர் சர்ச்சுக்கு போயிடுங்க" என்று இன்னொரு குதிரை வண்டிக்காரர் அழகர்சாமியிடம் சொல்ல, அவர் "நீங்க வரலையா தம்பி?" என்று கேட்டார்.

"நான் பின்னாலேயே ஸ்கூட்டர்லே வரேன்."

அனுப்பிய பிறகுதான் மூக்கையாவுக்குப் பூவுக்கான பணத்தைத் தரவில்லையே என்று நினைவு வந்தது. பரவாயில்லை, ரவீந்திரன் அறையிலிருந்து தளவாடங்கள் எப்படி நகர்ந்து கொண்டிருக்கின்றன என்று பார்த்துவிட்டு வரும்போது மூக்கருக்குப் பணம் அடைத்து விடலாம்.

ரவீந்திரன் அறையில் இருந்து மிக்ஸி, கிரைண்டரைக் கீழே இறக்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோருக்கும் பரிச்சயமான நேபாளி கூர்க்காக்கள்.

எனக்கு வணக்கம் சொன்னார்கள் இருவரும். எப்படி இருக்கீங்க? இந்திக்குத் தாவினேன். பள்ளிக்கூடத்தில் எட்டியாகக் கசந்தாலும், கல்லூரி முடிக்கும்போது சொந்த அக்கறையில் அந்த மொழியையும் படித்தது நல்லதாகப் போனது. சென்னைக்கு முன்னால் இரண்டு வருடம் பம்பாயில் ஜஹாங்கீர் மியூசியத்தில் வேலை பார்த்தபோது இந்தி

வசப்பட்டிருந்தது தினசரி வாழ்க்கைக்கு உதவியாக இருந்தது. திணிக்காத வரை எம்மொழியும் எம் மொழியே என்று அங்கே இந்தியில் மொழிபெயர்த்துச் சொன்னேன் நண்பர்களிடம். இப்போது இங்கே இவர்களோடு பேசவும் அம்மொழிதான்.

“இந்த பேக்கேஜுக்குள் என்ன இருக்கு தெரியுமா?”

கேட்டேன். தெரியாது. எங்கே போகிறது தெரியுமா? ஊஹூம். காந்தி வாத்தியார் தெரியுமா? அவர்கள் ஒரு வினாடி மௌனமாக இருந்தார்கள். அப்புறம் தெரியும் என்றார்கள்.

அவருக்கு இன்னிக்கு கல்யாணம் என்றேன். உள்ளபடிக்கு சந்தோஷப்பட்டார்கள் அந்த சாமானிய மனுஷர்கள். எனக்கும் சந்தோஷம்தான். கூடவே வருத்தமும் என்றேன்.

“கல்யாணம் முடிந்து அவர் கருத்தடை ஆபரேஷனுக்குப் போகிறார், என் நண்பர் ஒருத்தர் இப்படியான சூழ்நிலையில் இருந்தால் எனக்கு எப்படி வருத்தம் இல்லாமல் இருக்கும்?” நான் கேட்டேன்.

அவர்கள் அழ ஆரம்பித்தார்கள்.

“எங்க தப்புதான் அண்ணா. ஆபரேஷனுக்கு பெயர் கொடுத்துவிட்டு அப்புறம் யாரோ சொன்னதால் மறுத்துவிட்டோம். அதனால்தான் வாத்தியார் இப்படியான இக்கட்டில் இருக்கிறார்” என்றார்கள்.

“கட்டாயமாக குடும்பக் கட்டுப்பாடை வடக்கு பக்கம் திணிக்கிறதாகச் சொன்னார்கள். எது எப்படியோ, இங்கே இதுவரை அப்படி எதுவும் கட்டாயமான அறுவை சிகிச்சை இல்லை. உங்களுக்கு விருப்பம் இல்லாமல் கருத்தடை ஆபரேஷன் நடக்காது, இங்கே இருக்க, வேலை பார்க்க, பேசிப்பழக, கொடுக்கும் சம்பளத்தை வாங்கிக்கொள்ள அது நிபந்தனை இல்லை. நீங்கள் இதை நேரடியாக காந்தி வாத்தியாரிடம் சொல்லியிருந்தால் கடைசி நிமிஷத்தில் வேற வழியில்லாமல் அவரும் இன்னொருத்தரும் அவர்களாகவே ஆபரேஷன் டேபிளில் படுக்க வேண்டியதில்லை.”

நான் சொல்லிக்கொண்டு போகும்போதே, தெருவில் வேகமாகப் போன கார் நின்றது.

“போத்தி, எடோ போத்தி...” காருக்குள் இருந்து குதித்து இறங்கிய டவாலி சேவகன் கூப்பிட்டிருக்க முடியாது. அந்த விடிகாலைப் பொழுதிலும் டவாலி என்ற அந்த அலங்காரத்தோடு கீழ் உத்தியோகஸ்தர் தரும் மரியாதையோடு பயணப்படுவது யார்? குரல் பழக்கமானதாக இருக்கிறதுதான்.

உள்ளே இருந்து தழையத் தழைய உடுத்திய எட்டு முழ வேட்டியும் வெள்ளை ஜிப்பாவும், நெற்றியில் சந்தனக் கீற்றுமாக இறங்கியவன் உடனே நினைவு வந்தான். மோகனகிருஷ்ணன் அங்கமாலி. கல்லூரியில் என் சகா.

மலையாளத்தில் முக்கியமான இளைய தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவன் அவன். ‘ஆன கதகள்’ என்ற பெயரில் யானைகளைப் பற்றி ஒரு சிறுகதைத் தொகுப்பு சமீபத்தில் கொண்டுவந்திருக்கிறான். அவன் இங்கே டவாலி சேவகர்கள் சூழ என்ன செய்கிறான்?

“நான் ஐஏஎஸ் பரிட்சை பாஸ் பண்ணி இப்போ உங்க ஜில்லாவுக்கு கலெக்ட்டர்டா. நேத்துதான் பதவி ஏத்துக்கிட்டேன். இன்னிக்கு இங்கே ஒரு...”

சட்டென்று அவனை நிறுத்தச் சொல்லிக் கைகாட்டி, “இப்போ எங்கே போறே, முசாபரி பங்களாதானே?” என்று கேட்டேன்.

“அங்கேதான்.”

“நீ போ, வரேன்.”

அவனிடம் சாங்கோபாங்கமாக எல்லாம் சொல்ல வேண்டும். காந்தி வாத்தியார் கல்யாணத்துக்கு அவர் சார்பில் நானே கலெக்டர் மோகனகிருஷ்ணனை அழைத்தால் என்ன!

இடைக்காட்டத்தூர் சர்ச் ரோஜாப்பூ வாசனையில் அமிழ்ந்திருந்தது. சாமந்திப் பூ தூவிய பாதை. சர்ச்சுக்குள் பிரார்த்தனை மேடை வரை

அழகாகக் கோலம் போட்டு வைத்திருந்தார்கள். பாருகுட்டி வேலை அது என்று சொல்லாமலேயே புரிந்துகொண்டோம். அவளுக்கும் அவள் அச்சனுக்கும் நோட்டீஸ் வைக்க காந்தி வாத்தியார் மறக்கவில்லைதான்.

சர்ச் நிறைந்து இருந்தது. மணவாளனின் நண்பர்கள் என்ற தகுதியில் எங்கள் குழுவுக்கு ப்ளாஸ்டிக் நாற்காலிகளைப் போட்டு உட்கார சர்ச்சுக்குள் பிரார்த்தனைக் கூடத்தை ஒட்டி, நடைபாதையோடு சேர்த்து இடம் ஏற்படுத்தி இருந்தார்கள். அங்கே நாங்கள் எல்லோரும் அமர்ந்த பிறகு மீதி இடம் ஆகக் கொஞ்சமாகத் தோன்றியது.

வயதான பெண்களும் குழந்தைகளும் நின்று கொண்டிருக்க நாங்கள் அங்கே உட்கார வேண்டாம் என்று நாற்காலிகளை வெளியே கொண்டுவந்தோம். நின்று பேசியபடி உள்ளே கூட்டுப் பிரார்த்தனையும் விவாகமும் நடைபெறக் காத்திருந்தபோது, பாதிரியாரும் உதவியாளர்களும் சைக்கிள்களில் வந்து இறங்கினார்கள்.

“பாதிரியார்கள் ஸ்கூட்டர் வாங்க பேங்குலே லோன் எதுவும் தர மாட்டீங்களா?”

இன்னாசி முத்து பாதிரியார் மேனேஜரைக் கேட்டார்.

“இருபது அம்சத் திட்டத்திலே வர்ற மாதிரி நீங்க தொழில் செய்யலியே ஃபாதர்” என்றார் போட்டி பேங்க் மேனேஜர். இரண்டு மேனேஜர்களும் மொய்ப் பணத்தை டிபாசிட் போட வாங்க என்று இல்லாமல் நட்புக்காக கௌரவ பாத்திரங்களாக அந்த எளிய திருமணத்துக்கு வந்திருந்தார்கள்.

“உங்களுக்கு இருபது, எனக்கு மூணுதான்” என்றார் இன்னாசி பாதிரியார். “ஆமா, பிதா, சுதன், பரிசுத்த ஆவி, புனிதமான இந்த மூவரும் நிக்கவும் நடக்கவும், ஓடவும் ஓடி நிலைக்கவும் எப்பவும்போல எல்லாருக்கும் கிருபை செய்யட்டும்.”

சின்னஞ்சிறு பிரார்த்தனையை எங்கள் அனைவருக்காகவும் காற்றில் ஏற்றி அனுப்பியபடி உள்ளே போனார் அவர்.

கீதம் என்று அறிவிக்கப்பட, நாங்களும் உள்ளே போனோம். எல்லோரோடும் சேர்ந்து மண்டியிட்டு இருக்க, பைபிளைத் திறந்து

பாதிரியார் படித்தார் - ‘பாடம் 21 - நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.’

பிள்ளைகள் ‘என் தேவனே உம்மோடு’ பாடினார்கள். அடுத்து கல்யாணம் அறிவிப்பு. காந்தியும் மணப்பெண்ணும் நடந்து வந்து பாதிரியார் முன் மண்டியிட, இருவரிடமும் கல்யாணத்திற்கு சம்மதம்தானா என்று கேள்வியும் ஆம் என்று பதிலும். மோதிரம் மாற்று. கல்யாணம் நிறைவு.

சர்ச் வளாகத்துக்குள் கார் கடந்து வந்து நிற்கிற சத்தம். என்னைத் தவிர எல்லோரும் அங்கே பார்த்தார்கள்.

கலெக்டர் மோகனகிருஷ்ணன் ஒரு பெரிய பூச்செண்டோடு சர்ச்சுக்குள் வந்தார். செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு வரவேண்டுமா, செருப்புக் காலோடு நுழையலாமா என்று ஒரு தயக்கம் ஒரு வினாடி. அவர் செருப்புகளை வெளியே விட்டுவிட்டு வந்ததை மகிழ்ச்சியோடு பார்த்தேன்.

நானும் வெளியேதான் வைத்திருந்தேன். என் வழிபாடும் அவற்றைக் களையத்தான் சொன்னது. மற்றவர்கள் காலணியோடு கடவுளிடம் போகலாம். எனக்கு அது விதிக்கப்பட்டதில்லை. கலெக்டருக்கும்.

ஒவ்வொருத்தராக தம்பதிகளை வாழ்த்தினோம். கலெக்டரும் வரிசைக் கடைசியில் நின்று வாழ்த்தும்போது காந்தி வாத்தியார் காதில் ஏதோ சொன்னார். நூறு வாட்ஸ் பல்ப் போட்ட மாதிரி உடனே காந்தி வாத்தியார் முகம் மலர்ந்தது.

சர்ச் வளாகத்திலேயே சாப்பாடு சமைத்துப் பரிமாற வகை செய்திருந்தார்கள். ஒரு பொங்கல், கேசரி, வடை. சின்னக் குழந்தைகள் இன்னும் ஒரு கை கேசரி சாப்பிட்ட இனிப்பை முகத்தில் காட்டி இருக்க, நாங்கள் ஓரமாக நின்றபடி சாப்பிட்டு முடித்தோம்.

கலெக்டரும் ஒரு ஸ்பூன் பொங்கலும் ஒரு விள்ளல் வடையும் சாப்பிட்டு விடைபெற்றுப் போகும்போது என்னைப் பார்த்துச் சிரித்தார்.

“சரிதானேடா?”

அவர் தன்னையும் அறியாமல் ஒருமைக்கு மாற நானும் மனம் திறந்து சிரித்தேன். ஊருக்குத்தானே கலெக்டர் அவன், எனக்குக் கல்லூரி சிநேகிதன்தானே.

சார், கேசரி சாப்பிடுங்க, கலர் சொல்லட்டா... இப்படி அடுத்து வந்த உபசரிப்புகளைப் புன்சிரிப்போடு கடந்தேன்.

“உங்க சிநேகிதர் கிட்டே சொல்லி, சர்ச் இடிஞ்சு கிடக்கிறதை கட்ட சர்க்கார் உதவி செய்யச் சொல்லுங்க. கர்த்தர் ஆசீர்வாதம் அவருக்கும் உங்களுக்கும் எப்பவும் உண்டு.”

பாதிரியார் சொன்னதற்கு மட்டும் தட்டமுடியாமல் சரி என்றேன். மோகனகிருஷ்ணன் அங்கமாலியிடம் கட்டாயம் சொல்லவேண்டும்.

நாங்கள் மிக்ஸி, கிரைண்டரை காந்தி வாத்தியாரிடம் கொடுத்தபோது மேனேஜர் அவரிடம் சொன்னார்:

“மாவாட்ட கத்துக்கிடும் ஓய். இது ரெண்டும் நீர்தான் இனி உபயோகிக்கணும். அவங்க ஸ்கூல் போய் மத்த காரியம் செஞ்சாலே போதும்.”

காந்தி வாத்தியார் மனமாரச் சிரிக்க, கேசரி இனிப்பும் சிவப்புமாக முகம் ஒளிர புது மணப்பெண் சிரித்துத் தலைகுனிந்து கொண்டார்.

“கலெக்டர் என்ன சொன்னார்?”

நான் காந்தி வாத்தியாரைக் கேட்டபோது வேதக்கண் வாத்தியாரும் பக்கத்தில் வந்து நின்றார்.

கலெக்டர் என்ன சொன்னார்?

‘வாத்தியாரே, ஆபரேஷன் கணக்கு சரியா வரலேன்னு நீங்களே அதுக்குள்ளே நம்பரா போக வேணாம். போய்த்தான் ஆகணும்னா என் பெயரை சேத்துக்குங்க. அதுக்கு தேவையே இல்லாம, ஜில்லா முழுக்க

இந்த ஆள் பிடிக்கற முகாம் நடத்த வேண்டாம்னு உத்தரவு போட்டிருக்கேன். வரட்டுமா?'

அத்தியாயம் 13

# ஜூன் 1976

ச னிக்கிழமைக்கே உரிய அசமஞ்சத்தனம்.

அதுவும் அரை நாள் பேங்க் வேலை பார்த்து வீடு திரும்பி உடனடியாக அமிழ காரியம் ஏதும் இல்லாமல் சலித்துக்கொள்ளும் பிற்பகல் பொழுது.

பொதுவாக அந்த அரைநாளிலும் நான்கு மணி நேரம் மேலதிக ஆபீஸ் வேலைக்காகச் செலவழித்து, சாயந்திரம் ஐந்து மணிக்கு எடுத்து வைத்து ஏறக்கட்டி ஷட்டரை இறக்குவது வாடிக்கை. இன்றைக்கு இது பிற்பகலும் இல்லாமல் சாயந்திரமும் இல்லாமல் பகல் நாலு மணி.

ஆபீஸிலேயே ஸ்கூட்டரை வைத்துவிட்டு, ரவீந்திரன் தங்கியிருக்கும் லாட்ஜ் பக்கம் நடந்தேன். அந்த அறையில் ராத்திரி ஏழு மணிக்கு ஜமா சேர்ந்து ஜமுக்காளத்தை விரித்து சீட்டு விளையாட ஆரம்பித்தால் மெஸ் அடைக்கிறவரை மும்முரமாக ஆடுவார்கள். ஊர் வம்பும் கூடவே கிடைக்கும்.

இவர்கள் வந்து போனதும்தான் கோனார் மெஸ் அடைப்பது என்ற நியமம் இருந்ததால், ராத்திரி பத்து மணிக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடப் போவார்கள். திரும்பி வந்து நடுராத்திரி வரை சீட்டு தொடரும்.

காலையில் பத்து அடிக்க இரண்டு நிமிஷம் முன் ரவீந்திரன் எமர்ஜென்சி ஒழுங்கு நடவடிக்கை பற்றிய பதைபதைப்போடு அரக்கப் பரக்க ஓடி வருவது இந்த நடுராத்திரிக் கூத்தின் விளைவுதான். ஒரு நிமிடம்

தாமதமாக வந்தாலும் வருகைப் பதிவேடு மேனேஜருக்குப் போய்விடும். பின்விளைவுகள் எதுவுமாகலாம்.

சாயந்திரம் லாட்ஜில் ரவீந்திரன் அறையில் சீட்டு விளையாடுகிற நால்வர், பின்னால் பக்க பலமாக இன்னும் நால்வர். வெளியே பால்கனியில் நின்று தெருவை வேடிக்கை பார்க்கும் நான்கைந்து பேர்.

வேலைக்குச் சேர்ந்த, மனுப்போட்டுக் காத்திருக்கிற உள்ளூர் இளைஞர் கூட்டம் அவ்வப்போது இங்கே ஆஜராகிவிடும். பால்கனியில் நிற்க சனி, ஞாயிறு சாயந்திரம் இடம் கிடைக்க ரிசர்வ் செய்ய வேண்டியிருக்கும்.

அங்கே இருந்து பார்த்தால், ஊருணிக்குக் குடிதண்ணீர் எடுக்கப் போகும் பெண்களை நிதானமாக ஸூம் டௌன் பார்வையில் கண்டு களிக்கலாம் என்பதே காரணம். பார்க்க மட்டும்தான் அனுமதி. கருத்து சொல்ல இல்லை.

இன்றைக்கு பால்கனியில் யாருமில்லை. சீட்டுக் கட்டும் பிரிக்கப்படவில்லை. ரவீந்திரன் சித்தப்பாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டு மதுரை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள். ரவீந்திரன் நேற்றே மதுரைக்குப் போயாகிவிட்டது.

பக்கத்து அறை பூட்டி இருந்தது. எதிர் அறையில் தங்கும் போட்டி பேங்க் தோழர் ரத்னகுமாரும், எலெக்ட்ரிசிட்டி முருகேசனும் கோடாங்கிப்பட்டியில் பூசாரியைப் பார்த்து ஆருடம் கேட்கக் கிளம்பிப் போயிருக்கிறார்கள்.

அவர்கள் படிக்கிற திராவிட எழுத்து, குளித்துத் துவட்டிக்கொள்ளும் இரண்டு வண்ணத் துண்டு, கலைஞரைப் போலி செய்து மூக்கால் பேசும் தமிழ், நான்கு வரி திருமண வாழ்த்து எழுதினாலும் அடுக்குமொழி இதை எல்லாம் கடந்து கோடாங்கிப்பட்டி பூசாரி குறி சொல்வதையும் கேட்பதையும் வாழ்க்கையில் முக்கிய விஷயமாகக் கருதியிருக்கிறார்கள்.

இரண்டு வாரம் முன்னால் சர்வோதய இயக்கத் தலைவரும், எமர்ஜென்சி ஆதரவாளருமான வினோபா பாவே ஏனோ எதிரிகளின் பட்டியலில் சேர, அவருடைய பௌனார் ஆசிரமத்தில் போலீஸ் தேடுதல் நடத்தி,

ஆசிரமம் நடத்திய பத்திரிகையை சர்க்கார் நிறுத்திப் போட்ட செய்தியை இவர்களிடம் சொன்னபோது சேர்ந்து கேட்ட ஒரே கேள்வி: இந்திக்காரரா?

போத்தி நீங்களும் வரலாமே என்று என்னையும் ஜோசியம் கேட்கக் கூப்பிட்டார்கள். போத்தி செத்துப் போனாலும் ஜோசியம் பார்க்க மாட்டான். இங்கே உட்கார்ந்து வெட்டி அரட்டை அடிக்க அவன் தயார்தான்.

ரவீந்திரனிடம் இருந்து வாங்கி வைத்த அறைச் சாவியால் திறந்து உள்ளே போக, அறையைச் சுத்தம் செய்ய லாட்ஜ் ஊழியரும் வந்து சேர்ந்தார். அவர் வேலை முடித்து தண்ணீரும் பிடித்து வைத்து, போகும் வரை என்னை அங்கே இருக்கச் சொல்லியிருக்கிறார் ரவீந்திரன்.

"இருட்டற முந்தி அறையை பெருக்கச் சொல்லியிருக்கேன் போத்தி. விளக்கு வச்சதும் பெருக்கினா, நல்லதில்லே. அந்தி சாயறதுக்கு முந்தி, அது இல்லேன்னா காலையிலே எப்போ வேணுமானாலும் பெருக்கி மெழுகலாம்."

தன் நம்பிக்கையைத் துல்லியமாகச் சொல்லியிருந்தார் ரவீந்திரன்.

இருட்டிய பிறகு பூச்சி, புழு அதிகமாக வெளிக்கிளம்பும் என்பதால் அதற்கு முன்பே முடிக்க வேண்டும். அந்தி நேரத்தில் வெளிச்சம் இல்லாமல் இருப்பதால் சரியாகச் சுத்தம் செய்ய முடியாது இப்படி அததற்கு ஆதரவாக சான்றும் சொல்வார் அவர்.

துப்புரவு நடந்து கொண்டிருக்கும்போதே அடுத்த அறையைத் திறந்தபடி பிரான்சிஸ் எட்டிப் பார்த்தார். கவர்மெண்ட் ட்ரஷரியில் வேலை பார்க்கிறவர். அப்படித்தான் சொல்லப் பிரியப்படுவார். அவர் அலுவலக முகப்பில் அரசுக் கருவூலம் என்று நல்ல தமிழில் பலகை இருக்கும். கருவூலரே என்று ஹமீது, இவர் போட்டி பேங்கில் தட்டச்சர், கூப்பிட்டால், கையெடுத்துக் கும்பிட்டு, 'கருவேலமரம்னு திட்டறதை விட, ஒதிய மரம்னு சொல்லுங்க, மனசுக்கு ஒகந்ததா இருக்கும்' என்பார்.

ஒதிய மரம் கையில் ஆரஞ்சு மிட்டாய்ப் பொட்டலத்தோடு வந்தார்.

"போத்தி, எடுத்துக்குங்க."

என் கையில் ஒரு குத்து ஆரஞ்சு மிட்டாய் அள்ளி வைத்தார். பார்த்தபோதே எச்சில் ஊறுகிற சமாசாரம் அது. எதைக் கொண்டாடுகிறார் என்று விசாரித்தேன்.

“அம்மா எமர்ஜென்சி கொண்டுவந்து நேத்தோட ஒரு வருஷமாவுது. அதோடு கூட இன்னொரு தகவல். நான் இங்கே ட்ரஷரியிலே வேலைக்கு சேர்ந்து, அதுவும் நேத்தோட ஒரு வருஷம் ஆச்சு. ஒரே கொண்டாட்டம்தான் போங்க.”

“நீங்க வேலைக்கு சேர்ந்ததுக்கு ஆண்டுவிழா வேணுமானா உங்க கூட கொண்டாடறேன். எமர்ஜென்சிக்கு என்னத்துக்காக திதி திவசம் எல்லாம்?”

நான் கொஞ்சம் சூடாகவே கேட்டேன். கேட்ட பிறகு தோன்றியது. இவ்வளவு நிஷ்டூரமாக திதி திவசத்தை இழுத்து அவர் மகிழ்ச்சியில் மண் அள்ளிப் போட்டிருக்க வேண்டாம்.

“சாரி, வேற ஏதோ நினைவுலே இருந்தேனா, வாய் வார்த்தையிலே அதான் வந்து விழுது” என்று பாதி உண்மை சொல்லி மன்னிப்புக் கோரினேன். அந்த ஆரஞ்சு மிட்டாய் புளித்துக் கிடந்தது.

சுவர் ஓரமாகப் போட்டிருந்த மர மேஜைமேல் மானாமதுரை மண்கூஜாவில் நிறைத்து வைத்த ஊருணித் தண்ணீரைக் குவளையில் பிடித்துக் குடித்துவிட்டு அவர் உற்சாகமாகச் சிரித்தார்.

நான் ஜன்னல் அருகே போய் மேடையில் உட்கார்ந்தேன். அவர் சுவரில் சாய்ந்து தரையில் அமர்ந்தபடி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். இனி அவர் அரை மணி நேரம் குறையாமல் பேசுவார்.

“வேலைக்கு சேர்ந்த நாள் முழுக்க ஆபீஸ்லே தாசில்தாரை, டெபுடி கலெக்டரை, ஹெட் கிளார்க்கை இப்படி பலரையும் போய்ப் பார்த்து நானா என்னை அறிமுகப்படுத்திக்கிட்டு, வேலையிலே சேர்ந்திருக்கேன்னு சொல்லவேண்டி வந்தது. எல்லாரும் முதல் கேள்வியா கேட்டது டென் ஏ ஒன் போஸ்டிங்கா? அதாவது டெம்பரவரியான்னு கேட்கறாங்க.

இல்லே, சர்வீஸ் கமிஷன் பரிட்சை எழுதி வந்திருக்கேன்னு சொன்னதும் கிட்டதட்ட எல்லாருக்கும் ஏதோ ஒரு பொறாமை. அவங்க மச்சான், மகன், தங்கச்சி பேரன் இப்படி யாராவது சர்வீஸ் கமிஷன் பரிட்சையிலே தோத்துப் போய் அடுத்த படையெடுப்புக்கு தயாராகி இருப்பாங்க.

இந்தக் கருப்பன் வேலையிலே சேர்ந்துட்டானே அப்படி ஒரு வெறுப்பு. வேலை எல்லாம் நேரம் காலம் பார்க்காம பார்க்கவேண்டி வரும். காலேஜ்லே கட் அடிச்சுட்டு ஜோதிலட்சுமி தொடை வரைக்கும் வழிச்சுக்கிட்டு ஆடற சினிமா பார்க்கப் போகிற சமாசாரம் இல்லே கருவூல வேலை. சொல்றாங்க, போத்தி.

நான் கேட்காமலேயே எச்சரிக்கை கொடுத்துட்டு டிரஷரி வாசல் கடையிலே சிகரெட் குடிக்க, டீ குடிக்கன்னு அவங்க அவங்க போனாங்க. பத்து நிமிஷம் சீட்டுலே உக்கார்ந்து வேலை பார்த்தா, அடுத்த ஒரு மணி நேரம் சிரம பரிகாரமா அரட்டை, தீனி, பாத்ரூம் போறது இப்படி சில வேலை.

அன்னிக்கு ஜன்னலுக்கு வெளியே இருந்து வயசான நாலஞ்சு பேர் என்னையே பார்த்துக்கிட்டிருந்தாங்க. யார்னு விசாரிச்சதும்தான் தெரிஞ்சது ரிடையர்ட் வாத்தியார்கள் அப்படீன்னு. பென்ஷன் ஆர்டர் சரி பார்க்க வரச்சொல்லி வந்திருந்தாங்களாம். பாவம் நாள் பூரா பரிதாபமா உள்ளே பாத்துக்கிட்டு வெய்யில்லே மர பெஞ்சுலே வியர்த்து விறுவிறுத்து உட்கார்ந்திருந்த அவங்களை, உள்ளே இருக்கற யாரும் லட்சியமே செய்யலே.

மதியம் கூட்டமா மெஸ்ஸுக்கும் ஓட்டலுக்கும் சாப்பிடப் போனாங்க எல்லாரும். என்னை வர்றியான்னு கூட யாரும் கூப்பிடலே. அதனாலே என்ன, எனக்கு வாயிலே வார்த்தை இல்லையா என்ன, கையிலே காசு இல்லியா என்ன, நானும் கடைத்தெருவிலே ஒரு ஓட்டல்லே சாப்பிடப் போனேன்.

உங்களுக்குதான் நம்மூருப் பழக்கம் தெரியுமே... புது மனுஷர் யாராச்சும் தட்டுப்பட்டா, யாரு, என்ன, தேசாந்தரியா வந்து போறவங்களா, இல்லே, வேலை விஷயமா வந்தவங்களான்னு

விசாரிச்சுத் தெரிஞ்சுக்கலேன்னா அடுத்த வேளை சோறு தொண்டைக்குழிக்குள்ளே இறங்காதே.

ஓட்டல் மாதிரி இடத்திலே இது மாதிரி விசாரிப்பு என்ன சாதின்னு தெரிஞ்சுக்கவும்தான். ஷெட்யூல்ட் கேஸ்ட் அப்படீன்னா, தக்க விதத்திலே சொல்லி அடுத்த நாள்லே இருந்து வராம இருக்க வழி பண்ணிடுவாங்க.

அவரும் கேள்வி மேலே கேட்கறார். நான் பிடி கொடுக்காம பதில் சொல்லிக்கிட்டிருந்தேன். யாரா? ஓட்டல்காரர். ஐயர் ஓட்டல் இல்லே. திருநெல்வேலி மண்பானை சமையல் கடை. காலையிலே போனா தங்கந்தங்கமா தோசையும் தொவயலும் தருவாங்க. ரெண்டு மணி வெய்யிலுக்கு தோசை காஞ்சு போயிருந்தது. இட்லி புளிச்சுக் கெடந்தது. சோறு இல்லே. தீர்ந்து போயிடுச்சாம்.

பாருங்க தம்பி, நம்ம ஊர் டிரஷரியிலே வேலை பார்த்துத்தான் இப்போ மெட்றாஸ்லே கலெக்டர், கோட்டையிலே ஆபீஸ் சூப்பரண்ட்டு, ஏன், வெளி மாகாணத்துலே பெரிய பதவின்னு நல்லா வந்துருக்காங்க பல பேரும்.

ராசியான இடம் ஆச்சே உங்க ஆபீஸ். நான் அப்பப்ப ஏதாச்சும் காரியத்துக்காக வர்றது உண்டுதான். பழைய டிரஷரி ஆபீஸர் எனக்கு வேண்டப்பட்டவர். பழையன்னா ஒரு இருபது வருஷம் முந்தி. இப்போ நீங்க வேண்டப்பட்டவராயிட்டீங்க. வரும்போது பார்க்கலாமில்லையா? என்ன பேரு சொல்லணும்?

பிரான்சிஸ் தங்கராஜ்னு பெயரைச் சொன்னதும் கொஞ்சம் நிலைகுலைஞ்சு போயிட்டார்னா பார்த்துக்குங்க போத்தி. சரி, ஏதோ விவகாரமான பயதான்னு நினைச்சிருக்கணும். ஆர்.சியா ப்ராட்டஸ்டண்டான்னு அடுத்த கேள்வி.

சிவப்பழமா கழுத்திலே கொட்டை கட்டி, நெத்தியிலே பட்டை அடிச்சு உட்கார்ந்து கல்லாவிலே காசை வாங்கிப் போட்டுக்கிட்டிருக்கிற அவருக்கு ரோமன் கத்தோலிகனா, புராட்டஸ்டண்டா அப்படி ரெண்டு பிரிவு இருக்குன்னே தெரிஞ்சிருக்க நியாயமில்லே.

ஆனா நான் அரிஜனான்னு கண்டுபிடிக்கணும்னா அதுக்காக ராக்கெட் சயன்ஸ் கூட தேவையா இருந்தா படிச்சு வச்சுப்பாங்க. அதான் ஆர்.சியா, புராட்டஸ்டண்டா? இதுலே இருக்கு சூட்சுமம். கத்தோலிக்கன் எல்லாம் ஏகப்பட்ட வருஷம் முந்தி வேதத்துலே ஏறினவன். பரம்பரை பரம்பரையா கிறிஸ்துவன். இந்த நூறு வருஷத்துலே வேதத்துலே ஏத்தப்பட்டவங்க புராட்டஸ்டண்ட். அவங்கள்ளேயும் பட்டியல் சாதிசனம்தான் அதிகம். அதை வச்சி நதிமூலம் ரிஷிமூலம் கண்டுபிடிச்சுடலாமே.

நான் புராட்டஸ்டண்ட்னு சொல்லி அடக்க முடியாம, மேலே சொன்னேன். எங்க தாத்தா சேரியிலேதான் இருந்தார். பறை அடிச்சு தாக்கல் சொல்றவர். அப்பாதான் மதம் மாறிட்டார். அப்புறம் நாங்க எல்லாரும்.

சாப்பிட்டு துட்டைக் கொடுத்தேன். ஒண்ணும் சொல்லாம வாங்கிப் போட்டுக்கிட்டாரு. நாளைக்கு நானே நம்ம பையன் மூலம் எடுப்பு சாப்பாடு கேரியர்லே வச்சு சுடச்சுட அனுப்பிடறேனே. இப்படி காஞ்ச தோசை எதுக்கு தின்னுக்கிட்டு கஷ்டப்படணும்?

நைச்சியமாக் கேட்டார் அவர். பரவாயில்லேன்னுட்டேன்.

ஆபீஸ்லே தன்னந்தனியா உட்கார்ந்து யோசிச்சேன். அப்போதான் தோணிச்சு. இங்கே ஆபீஸ்லே இவங்க முகத்தைத் திருப்பிக்கறதுக்கும் நான் அரிஜனா இருக்கறதுதான் காரணமா. ஆமா, அதுவேதான்னு புரிஞ்சது.

பொழுது சாஞ்சு லாட்ஜுக்கு வரேன். திருச்சி ரேடியோவை யாரோ எங்கேயோ டிரான்சிஸ்டர்லே வச்சிருக்காங்க. அது திருச்சி ரேடியோதான். அந்த நேரத்திலே நிலைய வித்வான் வீணை வாசிச்சிட்டு இருந்தார். சிலோன் ரேடியோ முடிஞ்சிருக்கும்போல.

பக்கத்து ரூம் போனா அங்கே ஹமீது சார்தான் ரேடியோ கேட்டுக்கிட்டிருந்தார். அவர் பெயர் அப்போ தெரியாது. நேரே போய் நான் யாருன்னு கூட சொல்லாம, யார் போய்ட்டாங்க சார், சென்டர்லேயா ஸ்டேட்லேயான்னு கேட்டேன். யார் போய்ச் சேர்ந்தாலும்

லீவு உண்டே. அதுவும் வேலையிலே ஜாயின் பண்ணி அடுத்த நாளே லீவுன்னு வந்தா வேணாம்னா சொல்லப் போறேன்?

ஹமீது சார் நான் யாருன்னு கூட கேட்கலே. ரேடியோவிலேயே கருத்தா இருந்தார். அஞ்சு நிமிஷம் வித்வான் கச்சேரி பண்ணிட்டு இருக்கார். அவர் வேற வேற ஸ்டேஷன் வச்சுப் பார்த்தாலும் வீணை, வயலின், கோட்டு வாத்தியம், தில்ரூபா இப்படி ஏதேதோ வருதே தவிர பேச்சு சத்தமே இல்லே.

செத்துப் போனா திருவாசகம் சொல்வாங்களே, அது எங்கே? நானும் கேட்டுக்கிட்டே நிக்கறேன். அப்போ அறிவிப்பு வருது. நாளைக்காலை ஏழு மணிக்கு பிரதமர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். அடுத்த நிகழ்ச்சி, நிலைய வித்வான் ஜலதரங்கம் வாசிப்பார்.

அப்புறம் ராத்திரி ஒன்பது வரைக்கும் ஹமீது சார் கூடத்தான் உட்கார்ந்திருந்தேன். அவர்தான் சொன்னார், எமர்ஜென்சி அறிவிச்சிருக்காங்க தம்பின்னு.

நான் சரிதான்னேன். நம்ம ஊர்லே அப்பப்போ நூத்து நாப்பத்து நாலு, ஒன் ஃபார்டிஃபோர் ஆர்டர் போடுவாங்க, நாலு பேருக்கு மேலே கூட்டமா நிற்கவோ, நடந்து போகவோ தடை விதிக்கப் பட்டிருக்குன்னு மைக்செட் கட்டிக்கிட்டு தெருத்தெருவாச் சொல்வாங்களே, அதை கொஞ்சம் பெரிய அளவிலே செஞ்சிருக்காங்க போல,

தில்லியிலே இருந்து பெரிசா ஆயிரத்து நாப்பத்துநாலு போட்டிருக்காங்களா இருக்கும். அப்படி நினைச்சுக்கிட்டுத்தான் ஹமீது சார் கூட பரோட்டா கடைக்குப் போனேன். பரோட்டா கடைக்கு எமர்ஜென்சி வந்து சேரலே போல. அங்கே சாப்பிடறவங்க சாப்பிட்டுட்டுத்தான் இருந்தாங்க.

ஜெபர்சன் வாத்தியாரும், அவர் ஜெபர்சன்னு அப்புறம்தான் தெரியும், அவரும், அவரோட கட்சிக்கார சிவப்புத் துண்டுகளும் ராத்திரி நேரத்திலேயும் கடைக்கு முன்னாடி கூட்டமா நின்னு ஏதோ

பேசிட்டிருந்தாங்க. நாங்க அவங்க பக்கத்துலே போனதும் கப்சிப் ஆயிட்டாங்க.

வாத்தியார் மத்தவங்களை அனுப்பி வச்சுக்கிட்டு என் பக்கத்து நாற்காலியிலே உக்காந்து சொன்னாரு. 'யாரு எக்கேடு கெட்டா என்ன, நாம கொத்து பரோட்டாவும் வீச்சு பரோட்டாவும் சாப்பிடுவோம். வீட்டுக்குப் போய்த் தூங்குவோம். வேற எதுக்கு ஜீவிதம்? என்ன சொல்றீங்க தோழர்?'

இது என்னைப் பார்த்து. நான் பரோட்டா தின்னுக்கிட்டு அவர் கிட்டே வெள்ளந்தியா சொன்னேன், 'நூத்து நாப்பத்துநாலு போட்டிருக்காப்பலே. டெல்லியிலேயே சொல்லிவிட்டிருக்காம்.

பாருங்க, நல்லா படிச்ச பிள்ளை, நூத்து நாப்பத்து நாலுங்கறார். அதான் உலகம். சரி நாம பரோட்டா தின்போம்.

அவருக்கு என்ன கஷ்டம் என்று புரியாமல் சாப்பிட்டு அறைக்கு வந்தேன். அடுத்த நாள், ஜூன் இருபத்தாறு, வியாழக்கிழமை. காலையிலே எழுந்திருக்கும்போதே ஏழு மணி. எனக்கு முன்னாடி ஹமீது எழுந்து டிரான்சிஸ்டரை கைப்பிடிச் சுவர்லே வச்சுட்டு ஷேவ் பண்ணிக்கிட்டே கேட்டுட்டிருக்கார். பட்டாபட்டா அண்டர்வேர், வழிச்சுக் கட்டின லுங்கி, அழுக்கு வேட்டி, வாளி, பனியன் இப்படி ஆம்பளை சாம்ராஜ்யம் இந்த லாட்ஜ். இதிலே ஒரே ஒரு பெண்குரல், இந்திரா காந்தி குரல் டிரான்சிஸ்டர்லே கேக்குது.

'நாட்டில் எதிரிகள் ஊடுருவி இருக்கிறார்கள். பெரிய அளவில் நாசம் விளைவிக்கப் போகிறார்கள். இங்கேயும் சிலர் அவர்களுக்கு ஆதரவு தருகிறார்கள். இந்தியா சீர்குலைந்து அழியாமல் தடுக்க நான் நெருக்கடி நிலையைத் தற்காலிகமாக பிரகடனம் செய்கிறேன்.'

இந்திராம்மா சொல்லிக்கிட்டிருக்க, நான் ஒரு நிமிஷம் கேட்டுட்டு குளிக்கக் கிளம்பினேன். அப்போ எமர்ஜென்சியோட மகத்துவம் தெரியலே. பத்தே நாள்லே நாடே ஒழுங்கா, நேர்மையானதாக,

சோம்பேறித்தனம் இல்லாததாக, லஞ்சம் இல்லாம, வேலை சுறுசுறுப்பா நடக்கறதா மாறிடுத்து.

டிரஷரியிலே யாரும் அதுக்கு அப்புறம் என் ஜாதியைக் கேட்கலே. திருநெல்வேலி மெஸ் சாப்பாட்டுக் கடை இருக்கற தெருவிலே போனா, முதலாளி ஓடி வந்து கையைப் பிடிச்சுக்கிட்டு சொல்றார் - 'அன்னிக்கு சொன்னதை மனசுலே வச்சுக்காதீங்க. குண்டியிலே கொப்பளம் பழுத்து உடைவேனான்னு சதி பண்ணிட்டு இருந்துச்சு. அந்த வேதனையிலே வாய் எதையோ பேசியிருக்கும். எல்லாம் ஒட்டுமொத்தமா மறந்துட்டு சாப்பிட வாங்க.'

அப்படி மன்றாடினார் அவர். நான் ஒண்ணும் சொல்லலே. உட்கார்ற இடத்துலே கொப்புளம் என்ன ஆச்சுன்னு கூட கேட்கலே. வேட்டியை அவுத்துக் காட்டினார்னா.

அதுக்கு அப்புறம் பொற்காலம்தான் போத்தி. நான் ரெண்டு வாரத்துக்கு ஒரு முறை ஊருக்குப் போறபோது பார்க்கறேன். எல்லாருக்கும் ஏதாவது பேங்க் லோன் வாங்கியிருக்காங்க. யோக்கியமா அதை வச்சு தொழில் செஞ்சுக்கிட்டோ வியாபாரம் நடத்திக்கிட்டோ இருக்காங்க. நல்ல முன்னேற்றம் தெரியுது அவங்க இருப்புலே. சந்தோஷமும் தெரியுது. ஏதாவது உடம்பு முடியலே யாருக்காவதுன்னா போய்ச் சொன்னா போதும், ப்ரைமரி ஹெல்த் சென்டர்லே இருந்து டாக்டர் ஓட்டமா ஓடி வரார்.

என்ன, குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்குங்க அப்படீன்னு அப்பப்ப யாராவது வந்து சொல்றாங்களாம். நான் நம்ப பசங்களை சஞ்சய் காந்தி பேரவை ஆரம்பிச்சு ஒரு குச்சுலே அவர் படத்தையும் இந்திராம்மா படத்தையும் மாட்டி வைக்க சொல்லிட்டேன். குடும்பக் கட்டுப்பாடுன்னு யாராவது வந்தா, அங்கே கொண்டுபோய் நிறுத்தி, தில்லியில் இருந்து எங்களுக்கு தலைவர் கிட்டே இருந்து உத்தரவு வரும், அப்போ நாங்க வரோம் அப்படீன்னு சொல்லி அனுப்பச் சொல்லியிருக்கேன். ஒரு கஷ்டமும் இல்லே யாருக்கும்."

பிரான்சிஸ் நீளமாகப் பேசி நிறுத்தினார்.

“இது இல்லை என் எமர்ஜென்சி அனுபவம்” என்றேன் பிரான்சிஸிடம். “ஆனாலும் என்ன, உங்க சந்தோஷத்திலே நானும் சந்தோஷமாகப் பங்கெடுத்துக்கறேன்.”

மேஜையில் வைத்த காகிதப் பையில் இருந்து இன்னொரு ஆரஞ்சு மிட்டாயை எடுத்து வாயில் போட்டுக்கொண்டேன். இனித்தது.

அத்தியாயம் 14

# ஆகஸ்ட் 1976

"போத்தி, ஜெனரல் மேனேஜர் கூப்பிடறார். ஓடிவாங்க."

மேனேஜர் அறையிலிருந்து வேட்டி தடுக்க ஓடி வந்தார்.

நான் சாவதானமாக டோக்கனை எடுத்து எதிரே நின்ற வேதக்கண் வாத்தியாருக்குக் கொடுத்தபோது மேனேஜர் தாமே செக் பின்னால் அந்த டோக்கன் நம்பரை அவசரமாக எழுதினார்.

"கொஞ்சம் இருங்க, இவரை தெய்வங்கள் கூப்பிடுது" என்று சொல்லி என்னை நெட்டித் தள்ளிக்கொண்டு உள்ளே போனார். நான் சிவனே என்று அவர் இழுத்த இழுப்புக்குக் கூடவே போய்க்கொண்டிருந்தேன்.

"கட் பண்ணிட்டு கூப்பிடறேன்னார். நேரே உள்ளே போய் என் சீட்டுலே உக்காந்துடுங்க."

மேனேஜர் சலுகை அறிவிக்க, வேண்டாம் என்று உள்ளே போய் அவர் மேஜைக்கு எதிரே வாடிக்கையாளர் உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்தேன். ஜி.எம்மின் ட்ரங்க் கால் எந்த நிமிடமும் வரலாம்.

போன மாதம் மதுரையில் ஒரு லோன் மேளாவுக்கு தலைமை வகிக்க தலைமை அலுவலகத்திலிருந்து எங்கள் ஜி.எம் என்ற ஜெனரல் மேனேஜர் நூருணி ராமச்சந்திரன் முத்துஸ்வாமி சார் வந்து போனதிலிருந்து போத்தி, வா என்று அழைத்துத் தலையில் கட்டப்படும் கூடுதல் வேலைகள்.

லோன் மேளா விழாவுக்கெல்லாம் எங்கள் தொகுதியில் எம்.பி.தான் கதாநாயகன். மெல்லிய மீசை வைத்துக்கொண்டு, நிறைய பவுடர் அடித்துக்கொண்டு ஆஜராகும் அவர் சில சமயம் மத்திய அரசு ஜூனியர் அமைச்சர்கள் சிலரையும் அழைத்து வருவார்.

வேற மாநிலத்து எம்.பிக்களாக தில்லி போய் அமைச்சராகி சகல சௌபாக்கியத்தோடும் அவ்வப்போது கையைத் தூக்கி ஹாங் ஹாங் என்று முழங்கி, மினிஸ்ட்ரி அதிகாரி யாராவது எழுதிக் கொடுப்பதை இரண்டு வரி லோக்சபையில் படிப்பவர்கள் இந்தக் கும்பல். அதிலும் ஒருவரி 'இந்திரா, சஞ்சய் காந்திக்கு ஜே' என்று முழங்குவதாக இருக்கும்.

துண்டுச் சீட்டு தேவைப்படாத இன்னும் சில பாகவதர்கள், பிரதமர் வாழ்த்தில் தொடங்கி, இருபது அம்சத் திட்டத்தை ராகம் - தானம் - பல்லவி விஸ்தாரமாகப் பாடி, ஐந்து அம்சத்தை அடுத்து துக்கடாவாக இசைத்து கச்சேரியே நிகழ்த்துவார்கள்.

பிறகு நாங்கள் பேங்கிலிருந்து வழங்க தயார் செய்து வைத்திருந்த கடன்களை பிரசாதம் விநியோகிப்பதுபோல் இந்திரா பெயர் முழங்கக் கொடுத்துவிட்டு அடுத்த மேளாவுக்கு ஓடுவார்கள்.

எம்.பி வரமுடியாமல் போன ஒரு புண்ணிய தினத்தில் 'எம்.பி இல்லேன்னா என்ன, பேங்க் ஜெனரல் மேனேஜர்கள் என்ன செஞ்சிட்டு இருக்காங்க. அவங்களை போய்ட்டு வரச் சொல்லுங்க' என்று தில்லியில் எமர்ஜென்சி ஆட்சியில் இரு கண்களான ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பி.என். ஹக்ஸரோ, ஆர்.கே. தவானோ அல்லது வங்கித்துறை அமைச்சர் ஜனார்த்தன் பூஜாரியோ திருவாய் மலர்ந்தருள, லோன் மேளாவுக்கு எங்கள் ஜெனரல் மேனேஜர் முத்துசாமி கிளம்பி வந்து சேர்ந்தார்.

"போத்தி, நீ ஜி.எம்மை கவனிச்சுக்க."

அகஸ்மாத்தாக மதுரை ரீஜனல் ஆபீஸில் பவர்லூம் லோன் வழங்க என்ன எல்லாம் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிந்துகொள்ளப் போயிருந்தேன்.

‘விசைத்தறி நிறுவ கடன் வழங்குவது எந்தக் கம்பசூத்திரமும் இல்லை. வாங்கிக்கொண்டு வணக்கம் சொல்லி, ஃபோட்டோவுக்கு போஸ் கொடுத்துவிட்டுப் போக இருபதுக்குக் குறையாதவர்கள், அதுவும் பெண்கள் இருந்தால் போதும், நாளை சாயந்திரமே வழங்கிவிடலாம்.’

ரீஜனல் ஆபீஸ் விளக்கியது. மதுரையில் சாயந்திரம் கல்யாணம் நிச்சயமாகி காலையில் நடத்துவதை விட விரைவானது இது. நான் கேட்டுக் குதூகலம் அடைந்த பொழுதில்தான் ஜி.எம் வரவு அறிவிக்கப்பட்டு என்னை அனுப்பி வைத்தார்கள்.

நான் டாக்சியில் ஏறும் முன்னால் எந்த ஃப்ளைட் என்று அப்போது கேட்காமல் இருந்தால் இப்படி ஜி.எம்மின் தொண்டனாக இன்னும் ஓடிக் கொண்டிருக்க மாட்டேன். போனேன் வந்தேன் ஜி.எம் கிடைக்கலே என்று திரும்பி வந்திருப்பேன்.

“ஃப்ளைட்டா? நல்ல வேளை, கேட்டியே... அதெல்லாம் எம்.பி, மினிஸ்டர் இப்படி பெரிய தெய்வங்களுக்குத்தான். ஜி.எம் நமக்கு பெத்த பேருன்னாலும் அவரோட எலிஜிபிலிடி ரயில்லே ஃபர்ஸ்ட் க்ளாஸ். ஜிகுஜிகுன்னு வந்துட்டிருக்கார். இன்னும் ஒரு மணி நேரத்திலே மதுரை ஜங்க்ஷனுக்கு வந்து சேர்ந்துடுவார். அங்கே போ.”

நான் மதுரை ஜங்க்ஷன் நேரடியாகப் போகமுடியாமல் சிலபல வேலைகள்.

ஜி.எம்முக்கு ரொம்ப இஷ்டம் என்று என்னிடம் இருபது ரூபாய் எடுத்துக் கொடுத்து கோயில் பக்கம் மேலச்சித்திரை வீதி நெய் மிட்டாய்க் கடையில் கால் கிலோ அல்வாவும் ஒரு பொட்டலம் எக்ஸ்ட்ரா காரம் பட்டாணி சுண்டலும் - எக்ஸ்ட்ரா காரம்னு குறிப்பா கேளுங்க. சாப்பிட்டா உட்கார்ற இடம் ராக்கெட் கொளுத்தின மாதிரி தகிக்கும். ஜி.எம்முக்கு லகரி இதுமேலே - எடுத்துச் சொல்லி, வாங்கிப் போகச் சொல்லியிருந்தார் ரீஜனல் மேனேஜர்.

அவர் சொந்த ஊர் ஹைதராபாதுக்குத் திரும்பப் போக அல்வா தூண்டில் போடுவது புரிந்த நான் நாகப்பட்டணம் ஸ்வீட் ஸ்டாலுக்குப்

போக, அல்வா ஒரு பத்து நிமிஷம் கிண்டி முடிச்சு வந்துடும் என்று இருக்கச் சொன்னார் கடைக்கார அம்பி ஐயர்.

“அதுவரைக்கும் இதெல்லாம் உங்களுக்கு.”

ஒரு பெரிய தட்டில் இருக்கப்பட்ட ஸ்வீட் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வைத்து நீட்டி என் வாயை அடைத்தார். ஜி.எம் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று நான் அங்கேயே நம்நம்மென்று இனிப்பு தின்றபடி நின்றேன்.

பதினைந்து நிமிடம் தாமதமாக நான் மதுரை ஜங்ஷனுக்கு இனிப்போடு போய்ச் சேர, எமர்ஜென்சி ரயில் நேரம் தவறாமல் வந்து, நின்று சிரம பரிகாரம் செய்துகொண்டு திருவனந்தபுரத்துக்குப் போயே போய்விட்டது.

ஜெனரல் மேனேஜர்? பிளாட்பாரத்தில் ஓரமாக பெஞ்சில் ஹோல்டாலோடு உட்கார்ந்து மலங்க மலங்க முழித்துக் கொண்டிருந்தவருக்கு பேங்க் அதிகாரி தோரணை இருந்தது. நான் பக்கத்தில் போக சட்டென்று எழுந்து நின்றார்.

இப்படி யாரைப் பார்த்தாலும் எழுந்து நிற்பது தோரணையில் ஒரு பாகம். இவர்தான் ஜெனரல் மேனேஜர். கேட்டேன். ஆமா, நானேதான். நீங்க யார்?

சொன்னேன். மாப்பிள்ளை முறுக்கு மாதிரி மனநிலையில், ஒரு கடைநிலை அதிகாரியான என்னிடம் எல்லாம் வல்ல ஜெனரல் மேனேஜர் சீறி விழுந்தார்:

“ஏய், பத்து மணிக்கு ரெயில் தீவண்டி ஆப்பீஸிலே எத்தும்னு வெச்சா நீ பத்தரய்ய்க்கு வந்து நிக்கறாய்.”

அட, மலையாளமும் தமிழும் ஏதோ சதவிகிதத்தில் கலந்த தமிழ். பாலக்காட்டு சாயல். நம்ம பேட்டை. இந்த மனுஷரை இன்னும் ஒரு மணி நேரத்தில் நாய்க்குட்டிபோல என் பின்னால் வரச் செய்யப் போகிறேன்.

“சார், அப்போளொஜிஸ். இத ஒண்ணு கழிச்சுட்டு என்னெ சகாரிக்கணம்.”

அம்பி ஐயர் புண்ணியத்தில் ஜி.எம் பூவரச இலையில் பொதிந்த இனிப்பை காலை ஆகாரமாக உண்டு மகத்தான திருப்தி அடைந்து என்னைப் பார்த்து ஆதரவாகச் சிரித்தார்.

“இனிமேல் இந்த ஃபங்க்ஷன் நடந்தேறற வரைக்கும் நீ என்னை விட்டு எங்கேயும் போயிடாதே. We have formed a Palghatan association right now, here.”

அவர் அதற்கு அப்புறம், வா என்றால் வந்தார். இரு என்றார் இருந்தார். நட என்றால் நடந்தார்.

லாட்ஜில் சவுகரியமான, காற்றோட்டமான ரூமுக்கு மாற்றித் தர ஏற்பாடு செய்தேன். சூடான இட்லி, வடை, காப்பி அவர் அறைக்கே வந்து சேர ஏற்பாடு செய்து, அவர் வேண்டாம் வேண்டாம் என்று சொல்ல எடுத்துப் பரிமாறினேன்.

ஜி.எம்முக்கு நான் காப்பி ஆற்றித் தருவதை யாராவது ஃபோட்டோ எடுத்திருந்தால் அடுத்த தலைமுறைக்கு நீதிபோதனை செய்கிற ஆவணமாக அது இருக்கும். முக்கியமாக, ரீஜனல் மேனேஜர் கண்ணில் பட்டால் ஜி.எம் அடியார் கூட்டத்தில் அவர் வெகுவாகப் பின் தங்க, நான் முன்னேறியிருப்பதை எக்ஸ்ட்ரா காரம் சுண்டல் சாப்பிட்டு ஏற்பட்ட ஆசனவாய் எரிச்சலோடு பார்த்துக் கொண்டிருப்பார்.

“கோயிலுக்கு போய்ட்டு ஆபீஸ் போகலாமா?”

நான் கேட்க, பச்சைக் குழந்தைபோல தலையாட்டிவிட்டு உடனே சட்டையைப் பொத்தான் ஏறுமாறாகப் போட்டபடி கிளம்பிவிட்டார்.

“சார், பேண்ட்?”

“இன்னிக்கு நம்ம ஆபீஸ்தானே? ஃபங்க்ஷனுக்கு பேண்ட் போட்டா போறாதோ?”

அவரை வற்புறுத்தி சலவை வேட்டி உடுத்தி வரவைத்தேன். இரண்டு அடி தெருவில் வைத்திருக்க மாட்டோம், ஜி.எம் அவசரமாகக் கேட்டார், "போத்தி, அந்த கார சுண்டல் கொண்டுவந்தியே, அதை ரூம்லேயே விட்டுட்டேனே. எடுத்துண்டு வர்றியா?"

வந்தேன். தெருக்கோடியில், முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்று சுண்டல் பொட்டலத்தைக் காலி செய்தார் ஜெனரல் மேனேஜர். ஆ ஊ என்று ரேடியோவில் இருபது அம்சத் திட்டப் பாட்டுக்கு கோரஸ் ஒலிப்பதுபோல் காரம் தாங்காமல் நாக்கைத் துருத்தியபடி கூட வந்தார். பெட்டிக்கடையில் நன்னாரி சர்பத் வாங்கிக் கொடுத்து அந்தக் காரச் சுண்டலின் உக்ரத்தை மட்டுப்படுத்தினேன். பத்து நிமிடத்தில் ஆபீஸ் போய்ச் சேர்ந்து சுண்டல் உபயத்தால் வயிறு கலகலவென்று சுத்தமாகி வர, என்மேல் பிரியம் கூடுதலான புன்னகை சிந்தினார் ஜெனரல் மேனேஜர்.

அடுத்த நாள் சென்ட்ரல் மினிஸ்டர் பங்கேற்கும் லோன் மேளாவுக்கு முன் எங்கள் ஜெனரல் மேனேஜரை நன்றாகக் குழைந்து வெந்த அரிசி பதத்துக்கு ஆக்கிவிட்டேன். சட்டை கலர் என்னவாக இருக்க வேண்டும் என்பதிலிருந்து, "என்ன பேசப் போறீங்கன்னு என் முன்னாலே ஒத்திகை பார்த்திடுங்க, அங்கே போய் ஏதாவது ஒண்ணுக்கு ரெண்டா சொல்லிடக்கூடாது" என்று ஹோட்டல் அறை மத்தியில் நின்று பேசச்சொல்லி ட்யூஷன் எடுத்தேன்.

என் கட்டுப்பாடும் அதிகாரமும் அவர்மேல் கூடிக்கொண்டு போக அவர் என்மேல் காட்டிய பிரியமும் அதிகரித்துக்கொண்டே போனது. பள்ளிக்கூட ஆண்டுவிழா நாடகத்தில் நடிக்க சின்னக் குழந்தைக்கு அபிநயம், டைமிங், உச்சரிப்பு சொல்லித் தருவதுபோல, "கையை உயர்த்தி விரித்து உள்ளங்கையைப் பார்க்கிற மாதிரி வச்சுக்கிட்டு சொல்லுங்க சார். இந்த நாட்டுப் பொருளாதாரத்தை முன்னால் எடுத்துப்போக பாரதப் பிரதமர் அவர்களின் இருபதம்சத் திட்டத்தையும் திரு சஞ்சய் காந்தி அவர்களின் ஐந்தம்சத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த எங்கள் வங்கி ராமனுக்குத் தொண்டு செய்த அணில்போல் செயல்படுகிறது."

அவர் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட அதேபோல ஈசானிய மூலையில் போய்நின்று கையை உயர்த்திப் பேசக்கூடிய திறமை வரப்பெற்றவரானார்.

ஜெனரல் மேனேஜர் லோன் மேளாவில் பேசப் போவதற்கு முன் கொஞ்சம்போல கொறித்துவிட்டுப் போக ஏற்பாடு செய்தேன்.

“ரொம்ப சாப்பிட்டுப் போனா தூக்கம் வந்துடும். தூங்கி விழுந்துக்கிட்டா மினிஸ்டர் மீட்டிங்லே முக்கியமான சொற்பொழிவு ஆற்றுவீங்க?”

கப்சிப் என்று அரை இட்லி மட்டும் தொட்டுக்கொள்ள ஏதுமில்லாமல் சாப்பிட்டு போதும் என்று கிளம்பியவரை நிறுத்தி இடுப்பில் பெல்ட் போட்டு வரச் சொன்னேன்.

“சார், கொடவயிறு அதிகமா தெரியறது. தொந்தி குறைய தினம் நடக்கப் போறதில்லையா?”

உரிமையோடு கேட்டு பெல்ட்டை இன்னும் இறுக்கிப் போட்டுக்கொள்ளச் சொன்னேன்.

“என்னத்தை வாக்கிங், ஜாகிங் போக, போத்தி? விடிஞ்சு எழுந்தா ஆயிரம் அக்கப்போரு. உங்க பிராஞ்சிலே என்ன விசேஷம்?”

“ஏன் சார், பிள்ளையாண்டு இருக்கறமா, என்ன விசேஷம்ன்னு சொல்ல? ட்வென்டி பாயிண்ட் எகனாமிக் ப்ரோகிராம்லே ஜில்லாவிலேயே அதிக லோன் கொடுத்திருக்கறது நாமதான் சார்.”

“அதுலே கால்வாசியாவது திரும்ப வருமா?”

அவர் சந்தேகத்தோடு கேட்டார். என்ன ஒரு நம்பிக்கை. கால்வாசி திரும்ப வருமாமே.

“இப்படி வாரி வாரி வழங்கிட்டே இருந்தா நாளைக்கு ரிடையர் ஆகும்போது என் க்ராஜுவிட்டியும், ப்ராவிடண்ட் ஃபண்டும் கிடைக்குமோ என்னமோ.”

“அதெல்லாம் ஜாம்ஜாம்னு கிடைக்கும் சார். என்ன கவலை? ஆமா, எக்ஸ்ட்ரா காரம் சுண்டல்லே எலுமிச்சம் பழம் பிழிவாங்களா?” பேச்சை மாற்றினேன்.

“பிழிஞ்சா அம்சமா இருக்கும்.”

இருபது அம்சமாவா?

“உன் தலை.”

அச்சன் மாதிரி இருந்தார் அப்போது.

டை கட்டிக்கட்டுமா? கேட்டவரை, “வேணாம் சார், மினிஸ்டருக்கு நீங்க மட்டும் டை கட்டி வந்தா தாழ்வு மனப்பான்மை வந்துடும். சட்டையை பேண்டுக்குள்ளே டக் இன் பண்ணிக்குங்க” என்று மடைமாற்றினேன்.

ஐம்பது சில்லறை வயசுக்கு ஸ்தூல சரீரத்தோடும் ஜெனரல் மேனேஜர் களையோடும் பொதுக் கூட்டத்துக்குக் கிளம்பினார் ஜெனரல் மேனேஜர்.

மீட்டிங் முடிஞ்சு நேரே மெட்ராஸ் ரயிலை ராத்திரி பிடிக்கணும் என்று சொல்லியிருந்தேன்,

“ஏம்பா ரூமிலே குளிச்சுட்டு உடுத்திட்டு அப்படியே வந்துட்டேன். திரும்ப அங்கே போக வேணாமா?”

“அதெதுக்கு? நான் அங்கே இருக்கறதை பேக் செஞ்சு ஸ்டேஷனுக்கு அனுப்பிடறேன்.” வாக்குக் கொடுத்தேன். அவர் முகத்தில் அலாதி திருப்தி.

மீட்டிங் கூட்டிப் போனேன். சொல்லிக் கொடுத்தபடி இம்மி பிசகாமல் பேசி ஜெனரல் மேனேஜர் கைதட்டை அள்ளிப்போனார். வேற வழியின்றி அமைச்சரும் அவருடைய பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டு ஜி.எம் அரசியலுக்கு வந்தால் அவர் கட்சியிலேயே இணைத்துக்கொள்ள ஆவன செய்யப்படும் என்றாரே பார்க்கணும்.

வருங்கால மினிஸ்டர் கனவுகளில் மிதந்துகொண்டு மெட்ராஸ் திரும்ப எக்ஸ்ப்ரஸ் ரயிலைப் பிடிக்கும் அவசரத்திலும் எனக்கு

ஆயிரத்தொண்ணு தடவை நன்றி சொல்ல மறக்கவில்லை ஜி.எம் சார். இது போனமாதக் கதை.

டெலிஃபோன் மணி அடித்தது. ட்ரங்க் கால். ஜெனரல் மேனேஜர்தான் கூப்பிட்டார்.

“போத்தி, எப்படி இருக்காய்?”

“தரக்கேடில்லே சார்.”

“உன்னோட சகாயம் வேண்டியிருக்கு.”

“நாகப்பட்டிணம் நெய்மிட்டாயா சார்?”

“ஏய் அது ஒண்ணும் வேண்டாம். அல்வா, ஜிலேபி, லட்டுன்னு திங்க வேண்டியது, ஷுகர் ஏறி டாக்டருக்கு அழ வேண்டியது. இதுவே வேலையாப் போச்சுன்னு மாமி வசுதிட்றாள்.”

“சாரமில்லே சார், நீங்க அடுத்த ப்ராவஸ்யம் இங்கே வரும்போது நான் ஒளிச்சு வாங்கித் தரேன் அதொக்கெ.”

“ஏய், அடுத்த பிராவஸ்யம் வந்தாச்சு.”

கார சுண்டல் சாப்பிட்ட மாதிரி எனக்கு வயிற்றில் கலவரமாக ஏதோ செய்தது. இன்னொரு முறை இவருக்கு ஆண்டுவிழா நாடக ஒத்திகை நடத்திக் கொடுத்து, உடுப்பெல்லாம் மாட்டிக் கூட்டிப் போய் வரணுமா?

“ஒண்ணுமில்லே, ஞாயிறாழ்ச்ச மினிஸ்டர் ராமேஸ்வரத்திலே பிஷரி லோன் கொடுக்கறார்.”

“சார், அவர் எங்கே கொடுக்கறதுக்கு. நாம் வழங்கினா அவர் எடுத்துக் கொடுப்பார்”, என்று நான் இடைவெளியில் கோல் போட்டேன்.

“ஏய், எமர்ஜென்சி நேரம், அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. ஃபோனுக்குக்கூட காது இருக்கும்” என்றார் ஜி.எம்.

மினிஸ்டரை கிண்டல் செய்கிறவன் சர்க்கார் விரோதி என்று அவருடைய உலக முக்கியத்துவம் வாய்ந்த தொலைபேசியை ஒட்டுக் கேட்பவர்கள் உன்னிப்பாகக் கேட்டு, போட வேண்டிய இடத்தில் போட்டுக் கொடுத்து

விடுவார்கள். ஜெனரல் மேனேஜர் ரிடையர் ஆகி கட்சியில் இணைந்து மினிஸ்டர் ஆவது பாதிக்கப்படலாம்.

அத்தைக்கு மீசை முளைக்கட்டும், சித்தப்பாவாக்க இன்னும் நேரம் இருக்கு என்று சொல்ல நினைத்துச் சொல்லாமல் விட்டேன். என்னதான் சகஜமாகப் பழகினாலும், நாளைக்கு ப்ரமோஷனில் தில்லியோ பம்பாயோ நான் போவதை இறுதி மட்டத்தில் தீர்மானிக்கப் போகிறவர் இவர்தான்.

உரிமை எடுத்துக் கொள்வதெல்லாம் நிரந்தரமானதில்லை. ப்ரமோஷனும் உத்தியோகத்தில் தொடர்ந்து மேலே போவதும்தான் சாஸ்வதமான நிம்மதியைக் கொடுக்கும்.

ஜெனரல் மேனேஜர் தெய்வமேதான். நான் கர்ப்பகிரகத்துக்குள் உரிமையோடு நின்று ஆராதிக்கும் உபாசகன்.

“கச்சை கட்டி ராமேஸ்வரம் போய் வெற்றிக்கொடி நாட்டிட்டு வாங்க சார்” என்றேன் உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு.

“கச்சை எங்கே கட்ட? அதை மதுரை ஓட்டல் முறியிலே விட்டுட்டு வந்தாச்சே. நீ சரியா கவனிக்கலே. அதான் சொல்லுவேன்.”

புகாரைக் கூட மெல்லிய ஆற்றாமையோடு சொல்லுவதல்லாமல் அவரால் இனி என்மேல் ஜென்மத்தில் கோபப்பட முடியாது என்று புரிந்தது. இவ்வளவு பழமாகக் கனிந்தவருக்கு ஒரு சின்ன உதவி கூட நான் செய்யக் கூடாதா?

“சொல்லுங்க சார், என்ன செய்யணும் நான்? அல்வா தவிர. அது உதவியில்லே. கடமை.”

சென்டிமெண்டை டச் பண்ண அவர் இன்னும் உருகியபடி சொன்னது இதுதான்:

மதுரைக்குச் சூறாவளி சுற்றுப்பயணம் வந்தபோது லாட்ஜ் அறையிலேயே அவருடைய உள்ளாடையை விட்டுவிட்டாராம்.

“புத்தம்புது டான்டக்ஸ் அண்டர்வேர்பா. டார்க் நீலக் கலர். எக்ஸ்ட்ரா லார்ஜ் சைஸ். ரெண்டே ரெண்டு தடவைதான் போட்டது. தோய்ச்சு காயப்போட்டேன். ஈரமா இருந்தாலும் பரவாயில்லை, கவர்லே போட்டு எடுத்துண்டு வந்துடுன்னு உங்கிட்டே சொல்ல விட்டுப் போச்சு. கல்லு மாதிரி.”

அண்டர்வேர் கல்லு மாதிரி எப்படி இருக்க முடியும் என்று புரியவில்லை.

“நீ போய் லாட்ஜிலே கேளு. நிச்சயம் எடுத்து வச்சிருப்பா.”

“சார், அடுத்த கெஸ்ட் வந்ததும் ரூம்லே காலி பண்ண விட்டுட்டுப் போன எல்லாத்தையும் வழிச்செடுத்து அந்தப் பக்கமா தூக்கிப் போட்டிருப்பாங்க.”

“நீ எதுக்கும் போய்ப் பாரு. அப்புறம் பகவான் விட்ட வழி.”

ஜனநாயகம் பறிபோனாலும் ஜட்டி காணாமல் போனாலும் எல்லாம் பகவான் விட்ட வழி.

“சரி, பார்க்கறேன் சார்” என்றேன் நிச்சயமாக இதெல்லாம் நடக்கப் போவதில்லை என்ற திடமான நினைப்போடு.

“குட் பாய், அதை ஆள் அனுப்பி எடுத்துண்டு நீ சனிக்கிழமை காலம்பற போட்மெயில் உங்க ஊர் ஸ்டேஷனுக்கு வர்ற நேரத்துக்கு வந்துடு. நான் ரயில்லே இருந்தே உன்கிட்டே வாங்கிக்கறேன். லேட்டா வந்துடாதே. கைக்கெட்டினது இடுப்புக்கு எட்டாம போயிடும்.”

ஜெனரல் மேனேஜர் ஃபோனை வைத்துவிட்டார்.

என்ன, என்ன என்று மேனேஜர் தொடங்கி, ஸ்வீப்பர் சௌந்தரம்மா வரை துளைத்து எடுத்துவிட்டார்கள்.

“இது ஆம்பளைங்க சமாசாரம்” என்று சௌந்தரம்மாவை மட்டும் விலக்க முடிந்தது.

“என்னமோ போ, நீ சின்னப் பிள்ளையா இருக்கறபோது ஒரு பக்கமா விதை...”

அவள் சாங்கோபாங்கமாக நடுஹாலில் ஆரம்பிக்க ஐந்து ரூபாய் கொடுத்து காபி, டிபன் சாப்பிடச் சொல்லி அனுப்பினேன். மற்றவர்களுக்கு சொல்லியே ஆகவேண்டிப் போச்சு.

ஆர்வமாகக் கேட்ட மேனேஜர் கூட கடைசியில் சிரிக்க ஆரம்பித்தார். ஆபீஸே சேர்ந்து சிரித்தது.

“ஏன் சார், என்னை ரீஜனல் ஆபீஸுக்கு அனுப்பி அவர் கண்ணுலே பட வச்சதே நீங்கதான். சிரிக்கறதுன்னு வச்சுட்டீங்க. நல்லா சிரிங்க சார் சிரிங்க.”

அவர் சிரிப்பதை நிறுத்தவே இல்லை. ரவீந்திரன்தான் பிராக்டிகலாகப் பேச ஆரம்பித்தார்.

“சரி, அண்டர்வேரை தலையிலேற்றி கனக விசயர் கல் சுமந்த மாதிரி சுமந்து போகணும்னு விதின்னா செஞ்சுட வேண்டியதுதான். அடுத்த வருஷம் போத்திக்கே டெல்லி போய் இப்படி கொண்டுபோய்க் கொடுக்க, போட்டு விட ஆள்படை கிடைச்சுடும். இப்போ ஹோட்டலுக்கு ஒரு கால் போட்டு பார்க்கலாம் ஜட்டி அங்கேதான் இருக்கா, காணாம போயிடுச்சான்னு.”

“ஆபீஸ் ஃபோன்லே ஆபீஸ் வேலை இல்லாததுக்கு டிரங்க் கால். மூணு ரூபா ஆகுமே” என்றார் அக்கவுண்டண்ட்.

“நான் மானஸ்தன். எல்லா ஃபீஸும் கொடுத்திடறேன் சார்” என்றேன் ரோஷமாக.

“ஜெனரல் மேனேஜர் மானம் மறைக்கற சமாசாரம் இது, எப்படி ஆபீஸ் விஷயம் இல்லைங்கறீங்க? சார்ஜஸ் போட்டு டெபிட் பண்ணிக்க வேண்டியதுதான். இதர செலவினம்” கேஷியர் கருப்பையா உறுதியாகச் சொன்னார்.

“சரி, ஜட்டி அங்கே இல்லேன்னா?”

நான் கேட்டேன்.

“அதான் சைஸ் தெரியும், கலர் தெரியும். அப்புறம் என்ன? புதுசா ஒண்ணு வாங்கிக் கொடுத்துடுங்க.”

மேனேஜர் வழிமுறை சொன்னார்.

“அது எப்படி சார், புதுசா இல்லே இருக்கும்?” லாஜிக் பிழையைச் சுட்டிக் காட்டினேன்.

“ரெண்டு நாள் பழசாக்கிட்டு கொடுங்க” என்றார் அவர்.

“நான் போட்டுக்கிட்டா?”

“அதெல்லாம் எனக்கு தெரியாது. போட்டுப்பீங்களோ, வைகைக்கரையிலே மணல்லே புரட்டி வந்து குழாய்லே துவைப்பீங்களோ... அந்த லுக் வந்தா போதும்.”

ஐம்பதே கிலோமீட்டர் தூரத்தில்தான் மதுரை. ஆனாலும் டெலிஃபோன் ஆஸ்திரேலியா கண்டத்தில் இருக்கப்பட்ட ஊருக்குப் பேசுகிற மாதிரி சக்தி எல்லாம் திரட்டிப் பேசவேண்டியிருந்தது. போதாக்குறைக்கு லாட்ஜ் மேனேஜர் இல்லாமல் உரிமையாளர்தான் ஃபோனை எடுத்தது. காது கொஞ்சம் பழுது அவருக்கு.

ஒரு மாதிரிச் சொல்லி விஷயத்தைப் புரியவைத்தபோது, “அவர் இருந்த ரூமிலே அடுத்து வேறே யாராவது வாடகைக்கு வந்திருப்பாங்களே...” என்றார்.

“சரி இருங்க, பார்த்துட்டு வரச் சொல்றேன். ரூம் நம்பர் என்ன சொன்னீங்க?”

சொன்னேன். ஃபோனை எடுத்து வைத்துவிட்டு, லாட்ஜ் பையனைக் கூப்பிட்டு “மாஸ்டர் கீ போட்டு இந்த ரூமைத் திறந்து உள்ளே கோமணத்துணி இருக்கான்னு பார்” என்று ஆணையிட்டார் அவர்.

“அது டான்டெக்ஸ்” என்று தெருக்கோடியில் கேட்க நான் கத்தியதை அவர் கேட்டிருக்க மாட்டார். ஃபோனைக் காதிலே வைத்து கன்னத்து சதை அமுங்கிப் போகக் காத்திருக்க, பையன் வந்து சொன்னதை ஒலிபரப்பினார்.

“சீலையும், ப்ளவுஸூம் பெரிசா சித்தானைக்கு போடற மாதிரி பாடியும் இருக்காம் சார்.”

மெயிலை வழிமறித்து நான் பழைய பாடியை ஜி.எம்மிடம் கொடுக்கும் காட்சி மனதில் வந்து போனது.

சரி, புது டான்டெக்ஸ் வாங்கி பழசாக்கிவிட்டுக் கொடுக்க வேண்டியதுதான்.

“சார், நாளைக்கு லீவு வேணும். மதுரையிலே போய் ஜெனரல் மேனேஜருக்குத் துணி எடுக்கணும். பழசாக்கணும்.”

சாயந்திரம் கிளம்பும்போது கோரிக்கை விடுத்தேன்.

“ஏன், நம்ம மூக்கையா அம்பலம் கடையிலே கிடைக்காதா என்ன?” அக்கவுண்டண்ட் அக்கறையாக விசாரித்தார்.

“சார், அந்த மாதிரி சமாசாரம் இல்லே. கோடு போட்ட துணி டிராயர் இல்லே. டான்டெக்ஸ். அது எப்படின்னா...”

அக்கவுண்டண்ட் ரெடிமேட் உள்ளாடை காலத்துக்கு முற்பட்டவர். புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்.

“பசுமாடு லோன் நூத்தம்பது பேப்பர் பிராசஸ் பண்ணணும். நீங்க இல்லாம எப்படி மாடு வாங்கறது?”

“ஒரு நாள் தாமதமாக பசுமாடு லோன் டாக்குமெண்ட் வாங்க ஏற்பாடு செய்யலாமே. எப்படியும் சாங்க்ஷன் ஆகி வர பத்து நாளாவது ஆகும். பெரிய தொகையாச்சே.”

“நீங்க நினைக்கறது அப்படி. இன்னிக்கு போனா, இந்த வாரக் கடைசியிலே லோன் சாங்க்ஷன் ஆகி வந்துடும். இப்போ லோன் சாங்க்ஷன் பண்ணிட்டு அப்ளிகேஷன் வாங்கிக்கச் சொல்ற காலம்.”

மேனேஜர் சொல்லிக் கொண்டிருக்க தொலைபேசி அடித்தது. பேங்க் ஷட்டரை இறக்கும் நேரத்தில் யார்? ஜெனரல் மேனேஜர்தான்.

“போத்தி, இன்னொரு ஐடியா. ராமேஸ்வரம் தனியாத்தானே போறேன். கூட பேச்சுத் துணைக்கு நீயும் வந்துடேன். ராமேஸ்வரம் லோன்மேளாவுக்கும் உன்னோட நிர்வாகமும் கூடி இருக்கட்டும். வரச்சே உங்க ஊர்லே எறங்கிக்கறேன். எதோ பசுமாடு லோன் கோகுலம் மாதிரி நூறு இருநூறு பசு வாங்க கேட்டிருக்கேளாமே. என்னை அந்த பேப்பர் எல்லாம் பார்த்துட்டு, முடிஞ்சா லோன் வாங்கப் போறவாளையும், பசுமாடுகளையும் பார்த்துட்டு வரச் சொல்லி இருக்கா, சென்ட்ரல் ஆபீஸ்லே.”

நான் மேனேஜரிடம் இதைச் சொல்ல, பேய்க்கு வாழ்க்கைப் பட்டாச்சு என்றபடி மாடி ஏறினார். “என்னது அது?” ஆச்சி சத்தம் கேட்டது.

சனிக்கிழமை காலையில் எட்டு மணிக்கே பரபரப்பானேன். ஒன்பதேகால் மணிக்குத்தான் ராமேஸ்வரம் போகும் மெயில் எங்கள் ஊர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரும்.

அக்கவுண்டண்டை கவுண்டர் திறக்கச் சொல்லிவிட்டு மேனேஜரே என்னோடு வந்து ராமேஸ்வரப் பயணத்துக்கு வழியனுப்பி வைத்தார். அவர் தயாரித்துக் கொடுத்த காலை ஆகாரம் ஒரு ஸ்டெயின்லெஸ் தூக்கிலும், தோளில் மாட்டிய ஃப்ளாஸ்கில் காப்பியுமாக மெசஞ்சர் ரத்தினம் எங்களோடு ரயில் வரக் காத்திருந்தார்.

ராமேஸ்வரம் போகும் ரயில் அந்த நேரத்தில் வழக்கமாக திருச்சி போகிற டீசல் கோச் வண்டி குறுக்கிட்டுக் கடந்து போவதால் தினமும் ஐந்து பத்து நிமிஷம் ஷண்டிங்குக்காக நிற்கும். அதற்குள் பலகாரம், காப்பி முடித்து ஏனத்தை வாங்கிக்கொண்டு போகலாம் என்று மேனேஜர் திட்டம்.

என் காலுக்குக் கீழே ரெக்சின் பயணப்பையில் உடுப்புகளோடு கூட அதிமுக்கியத்துவம் வாய்ந்த, இரண்டு நாள் பழசாக்கப்பட்ட ஜி.எம் உள்ளாடையும் பத்திரமாக இருந்தது. அவருடையது என்று தரவேண்டியது. அந்தப் பணத்தை சார்ஜஸ் வவுச்சர் போட்டு வாங்காமல் ரீஜனல் மேனேஜரே கொடுத்திருந்தார்.

வண்டி பத்து நிமிடம் தாமதமாக வந்து சேர்ந்தது.

“ஏய், போத்தி, கேரிக்கோ. வண்டியை விட்டுண்டு போயிடுவான்” என்றார் பதற்றத்தோடு ஜெனரல் மேனேஜர்.

“அதெல்லாம் சொல்லி வச்சிருக்கு சார், நீங்க டிபன் சாப்பிடற வரைக்கும் நிற்கும்” என்றேன் நான்.

“நீர் எம்டன்” மேனேஜர் சொன்னார். இவரும் இதை நம்பிவிட்டார். நல்ல வேளையாக உள்ளபடிக்கே வண்டி நின்று ஷண்டிங்கும் முடிய கிட்டதட்ட இருபது நிமிடம்.

புறப்பட்டபோது அவருடைய உடுப்பை எடுத்துக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். வேண்டாம், உடனே அதைக் கொடுப்பது சரியாக இருக்காது. ராமேஸ்வரம் போன பிறகு சாவதானமாகக் கொடுத்துக் கொள்ளலாம்.

மானாமதுரை தாண்டி ராமநாதபுரம் வந்தபோது விபூதி மணக்க ஒரு முழுக்கைச் சட்டைக்காரர் வண்டியில் ஏறினார். அவர் என்னை ஒதுக்கிவிட்டு ஜெனரல் மேனேஜரையே உற்றுப் பார்த்தார்.

“ஸ்வாமி, ராமேஸ்வரம் யாத்ரைக்கா?” “அதே” என்றார் இவர் சகல முக்கியத்துவமும் முகத்தில் தெரிய, மிடுக்கான குரலில்.

“அங்கே கர்மங்கள்...”

“எல்லாம் உண்டு. என் குடும்ப புரோகிதர் இருக்கார்.”

சொல்லிவிட்டு என்னிடம் “எத்தனை பசுமாடு தரப்போறே, ஓராயிரமா?” என்று கேட்க, அந்த உயர்ந்த மனிதர் பெரும் மரியாதையோடு என்னைப் பார்த்தார். ஆயிரம் பசு கோதானம் செய்கிற இவனைப் பிடித்துக்கொண்டால் இந்தக் கிழவரைவிட உபயோகமாக இருக்கும் என்று அவருக்குப் பட்டிருக்க வேண்டும்.

“பெரிய அளவிலே கோதானம் பண்ணப் போறீங்களா? அதை எல்லாம் ரயில்லேதான் ஏத்தி சமுத்திரத்தைக் கடந்து கொண்டுவரணும். மெயில்லே முடியாது. ஸ்பெஷலா குட்ஸ் ஏற்பாடு பண்ணி.”

அவர் சம்மன் இல்லாமல் ஆஜரானார்.

“ஓய், அவர் ராமேஸ்வரத்திலே கோதானம் செய்ய புறப்பட்டு வரலே. இது உள்ளூர் உத்தியோகம். நாங்க பேங்கு மனுஷா. நாலும் பேசிப்போம். அஞ்சும் பேசிப்போம். இருபதும் பேசிப்போம். நீர் ஏன் மூக்கை நுழைக்கறீர்?”

ஜெனரல் ஒரு எகிறு எகிறினார். அந்த மூக்கர் இறங்கிப் போய்விட்டார்.

நான் பால் மாடு கடன் கேட்டு வந்திருக்கிறவர்களின் விவரம் சொல்ல ஆரம்பித்தபோது இரு என்று சைகை காட்டினார் அவர்.

“சுழி பார்த்து மாடு பிடிக்கணும். பல இடத்திலே ஏற்கெனவே இந்த மாடுதான் வாங்கணும்னு தீர்மானிச்சிருப்பா. எதோ அகஸ்மாத்தா கண்ணுலே படற மாதிரி பாசாங்கு பண்ணி அங்கே இங்கே கொஞ்சம்போல சுத்தி அந்த மாட்டுக்காரனைப் பிடிச்சுடுவா. தெரிஞ்சுக்கோ. லேக்டேடிங் பீரியட்லே இருக்கறச்சே லோன் ஹாலிடே தரணும். முடிஞ்சதும் ரீபேமெண்ட்.”

தடதடவென்று சொல்லிக்கொண்டே போனார். விஷயம் தெரிந்த ஜெனரல் மேனேஜர்தான்.

“பால்மாடு லோன் கொடுக்கறதுக்கு அனுபவம் வேணும். ப்ராஞ்ச் மேனேஜரா நான் ஈரோட்டுலே கொடுத்திருக்கேன். வாங்கினவா எல்லாம் கிரமமா திருப்பிக் கட்டி இப்போ அமோகமா இருக்கா. கடன் வாங்கின ஒவ்வொருத்தரை மட்டுமில்லே, அவங்க வாங்கின மாட்டையும் எனக்குத் தெரியும். மாட்டுத் தாவணியிலே, மாட்டு லோன் கேட்டவனோடு நாள் முழுக்க அலைஞ்சிருக்கேன். வாங்கி அதுக்கு பிராண்ட் பண்ணணும்னு சென்ட்ரல் ஆபீஸ்லே நம்ம பேங்க் சீல் அனுப்பினா. மெமோ கொடுத்தாலும் சூடெல்லாம் போட மாட்டேன்னுட்டேன். பசு அம்மா மாதிரி. அடையாளம் காண்றதுக்கு அம்மாவுக்கு சூடு போடுவாளா?”

சொல்லிக்கொண்டே போன அவரை நான் ஒரு புது மரியாதையோடு பார்த்தேன்.

“சார், ஆயிரம் பால்மாடு வச்சு பராமரிச்சு ஒரு பண்ணையே நடத்தற அனுபவம் இருக்கு உங்களுக்கு” என்றேன்.

“பண்ணை என்ன, கோசாலையே நடத்துவேன். ரிடையர் ஆனதும் அதுதான் வைக்கணும்னு வச்சிருந்தேன். பார்க்கலாம். வேற எப்படியோ. முந்திரிப் பருப்பு சுட்ட மாதிரி ஆகாம இருக்கணும்.”

அவர் முகம் ஒரு வினாடி இறுகிப் பிறகு சகஜ நிலைக்கு வந்தது. ஒரு சுக்கும் புரியவில்லை. பெரிய மனிதர்கள் எல்லோரும் அவ்வப்போது மனக்குகைக்குள் கம்பளிப் பூச்சிபோல சுருண்டு கொள்வார்கள். பேசாமல் விட்டுவிட வேணும் அப்போது.

“பேங்க் ஜெனரல் மேனேஜர்னா கேவலமான ஜீவிதம்டா போத்தி. எம்.டி திட்டுவார். ரிசர்வ் பேங்க் காறி உமிழும். எவன் எவனோ எமர்ஜென்சி, இருபது, அஞ்சு, அம்மா, பிள்ளைன்னு ராத்திரியிலே ஃபோன் பண்ணி பெரிய தொகையா உடனே கடன் கொடுன்னு கேட்பான். கொடுக்கல்லேன்னா தில்லியிலேருந்து ஃபோன் வரும். ஸ்டேட் பேங்க் சேர்மன் தல்வார் கதை தெரியுமோ? அவர் ஒரு சிமெண்ட் கம்பெனிக்கு அவா நிர்வாகத்தை மாற்றி நல்லபடியாக்கினாத்தான் தொடர்ந்து கடன் தருவேன்னு சொல்லியிருந்தார். அதெல்லாம் சொல்ல நீர் யார்? வாயை மூடிண்டு கடன் கொடும் அப்படீன்னு பெரிய இடத்து லெவல்லே நெருக்கல். மிரட்டல். மாட்டேனுட்டார் தல்வார். அஞ்சு அம்சம் இருபது அம்சம் கிட்டே அந்த சேர்மனை வீட்டுக்கு அனுப்பணும்னு சொன்னதாம். அந்த மனுஷருக்கு இப்போ பத்து நாள் முந்தி, திடீர்னு அவர் கேட்காமலேயே பதிமூணு மாச ஸ்பெஷல் லீவு கொடுத்து லீவுலே போ, திரும்ப வராதேன்னு அனுப்பிட்டாளாம். பெரிய பேங்க் சேர்மனுக்கே அப்படின்னா, அற்ப ஜி.எம் நான், ஆடிக்காத்துலே பறக்க வேண்டியதுதான்.”

வெளியே விரையும் தரிசையே பார்த்தபடி இருந்தார் அவர்.

“நீங்க ஆல்வேஸ் ஸ்டடி சார். ஆட்டு லோன், மாட்டு லோன்னு, மீன் லோன், வேன் லோன்னு நிறைய உங்க அனுபவத்திலே இருந்து தெரிஞ்சுக்கணும்போல.”

நான் பேச்சை மாற்றி, வங்கிக் கடன் கதையை வளர்த்தேன்.

“பின்னே இல்லியா. இப்படித்தான் ஆட்டு மந்தை லோனும். ஒரு கிடா, பத்து ஆடுன்னு லோன் கொடுத்தாச்சு. போஸ்ட் சாங்ஷன் இன்ஸ்பெக்ஷன் போனா ஆடு எல்லாம் இருக்கு. கடாவைக் காணோம். கேட்டா பதில் என்ன தெரியுமா? ‘லோன் கிடைச்சா கடா வெட்டி பூசை போடறேன்னு ஐயனாருக்கு நேர்ந்துட்டிருந்தேன், அதான்’ அப்படீன்னு சிரிக்கறான். என்ன பண்ண? இன்னொரு கிடா வாங்கச் சொன்னேன்.”

“ஏன் சார், கிடா இல்லாம ஆட்டு லோன் கொடுக்க முடியாதா?”

நான் கேட்க அவர் அடக்க முடியாமல் சிரித்தார்.

“அது அப்புறம் அதே பத்து ஆடா மட்டும் இருந்து செத்துப் போகும். இனப்பெருக்கம் பண்ண வேணாமா?”

அதானே.

“இப்படித்தான் மாட்டுக்கு சினை பிடிக்க மாட்டேங்குது. அதான் பால் இல்லே. பணம் கட்ட முடியாது... என்கிட்டே சொல்றான். நானா அசருவேன்? யார் இதுக்கெல்லாம் பொலிகாளையை வாடகை விடறான்னு தெரியுமே. பசுமாட்டுக்கு அம்மாவனாயிட்டேன். ஏங் கேக்கறே போ. சினை பிடிக்காம எப்படிப் போகும்?” கேட்டபடி பாத்ரூம் போய்விட்டு வந்தார்.

“ஆக, பசுமாடு வாங்க லோன் வேணுமாக்கம், கொடுத்துடலாம்.”

திரும்ப வந்து உட்கார்ந்தார். பால்மாட்டுக் கடனை விட்டுவிட்டு ராமேஸ்வரத்தில் மீன்பிடி படகு, வலை வாங்க கடன் தருவதற்குத் தாவி விட்டார்.

“மீன்பிடிக்க லோன் கொடுக்கறதும் பசுமாடு லோன் மாதிரிதான். விஷயம் தெரியாம தர முடியாது. உச்சிப்புளி ப்ராஞ்சிலே நான் கொடுத்திருக்கேன். வலை வாங்கிக் கொடுத்தேன். ஒரு மாசம் மட்டும் லோன் அடைச்சான். அப்புறம் எப்போ போனாலும், ‘ஆம்பளையாள்

இல்லே, கடல் மேலே போயிருக்கார்...' அப்படி ஒரே டயலாக்தான் சொல்லுவாளா இருக்கும்."

உம் கொட்டினேன்.

"ஆம்பளை இல்லாத வீட்டிலே லோன் கேட்டு சும்மா படி ஏற முடியாது. நம்ம தங்கவேலு ஜியார்ஜ் டவுன்லே பெர்சனல் லோன் கொடுத்துட்டு ஜெண்ட்ஸ் இல்லாத நேரத்திலே போய்க் கேட்டிருக்கான். குய்யோ முறையோன்னு அந்த அம்மா கத்தி, பேங்குக்காரன் கையைப் பிடிச்சு இழுத்தான், ரேப் பண்ண வந்துட்டான்னு புகார் எல்லாம் கொடுத்து, தங்கவேலுவுக்கு ரெண்டு இன்க்ரீமெண்ட் கட். நீ பார்த்து நடந்துக்கோ."

நடந்துக்கறேன் என்றேன். வலை வாங்க கொடுத்த லோன் என்ன ஆனது?

"அங்கேதான் இருக்கு சூட்சுமம். ஒவ்வொரு அமாவாசை அன்னிக்கும் அவங்க யாரும் கடலுக்கு போறதில்லே. நல்ல சாப்பாடு, மத்தது, பூரணமா ரெஸ்ட். ஆக, அமாவாசை என்னிக்கு வரும்னு பார்த்து அன்னிக்கு அங்கே போயிடுவேன். பாவம் ஏஜண்ட், நிறைஞ்ச நாள்லே தேடி வரார். வெறுங்கையா அனுப்ப வேணாம்னு பணம் கட்டிடுவாங்க. ஆமா அப்போ எல்லாம் மேனேஜர் ஏது பேங்கிலே, நாங்க எல்லாம் ஏஜண்ட்தான். கடன் முச்சூடும் கிரமமா வசூலாச்சு. வராக் கடன்னு ஒரு இனமே தெரியாது."

அவர் சொல்லிக்கொண்டே போக நல்ல சமுத்திரக் காற்றும், சாப்பிட்டதும் சேர்ந்து சரியான தூக்கம் வந்தது. விழித்துப் பார்த்தபோது பாம்பன் பாலத்தின்மேல் ரயில் போய்க் கொண்டிருந்தது.

ஜெனரல் மேனேஜர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"சிரம பரிகாரமொக்கெ கழிஞ்ஞோடா போத்தி? இப்போ அனுமாருக்கு அசுர பலம் வந்த மாதிரி உனக்கும்."

என் தோளில் தட்டிச் சிரித்தார். கண்ணாடி கிடைத்திருந்தால் நிச்சயம் முகம் பார்த்திருப்பேன்.

வெளியே பார்த்து, “தங்கச்சிமடமா, இப்போ வந்துடும் ராமேஸ்வரம்” என்றார். இந்தப் பக்கத்தில் ப்ராஞ்ச் மேனேஜராக எட்டு மாதம் இருந்தும் ஒருதடவை கூட ராமேஸ்வரம் போனதில்லையாம்.

“காசி போய் அப்புறம் ராமேஸ்வரம் போகணும்னு வீட்டுலே சொல்லிட்டா. காசி போக எத்தனையோ வருஷம் ஆச்சு. ஆக்ராவிலே மேனேஜரா இருந்தபோது. அது பத்து வருஷம் முந்தி. ஆமா, உனக்கு என்ன எல்லாம் மீன் வகை இருக்கு, எவ்வளவுக்கு போகும் ஒவ்வொண்ணும்னு தெரியுமோ? நாளைக்கு மீன்பிடிக்க லோன் கொடுத்தா என்ன பண்ணுவே வசூல் பண்ண?”

“ஒரு கவலையும் இல்லே சார், கடன் வசூலைப் பத்தி எதுக்கு கவலைப்படணும்? கொடுக்கறதுதான் முக்கியம்.”

அவர் என்னை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தார். “நீ ஜி.எம் என்ன, மேனேஜிங் டைரக்டராகத்தான் ரிடையர் ஆகப் போறே” என்றார்.

“நான் இல்லை. நீங்க. ஜி.எம் இப்போ. மேனேஜிங் டைரக்டரா, உன்னதமான பொசிஷன்லே ரிடையர் ஆகப் போறீங்க பார்த்துக்கிட்டே இருங்க” என்றேன்.

“நானா, பெருந்தொகை ஒரு முந்திரிப்பருப்பு எக்ஸ்போர்ட்டருக்கு உடனே லாங் டெர்ம் லோன் தரணும்னு போன வாரம்தான் கால் வந்தது. மேலே நம்ம சென்ட்ரல் ஆபீஸ் ஆறாவது மாடியிலே இருக்கப்பட்டவா என்னைக் கூப்பிட்டு உடனே ஜி.எம்மா லட்சணமா ரெகமண்ட் பண்ணி நோட் போட்டு அனுப்புன்னார். இன்ஸ்பெக்ஷன் போய்ப் பார்த்தேன், தகர டப்பா யூனிட். ஐம்பதாயிரம் கூட பெறாது. நேற்றைக்கு ரயிலடிக்கு கிளம்பிண்டிருக்கேன். கூப்பிட்டு, லோன் இந்த க்ஷணமே ரெகமண்ட் பண்ணுன்னு திரும்பவும் ப்ரஷர்.”

அவர் சங்கடமாகச் சிரித்தார்.

“அப்புறம் சார்?”

“அப்புறம் மங்களாபுரம்தான்.”

விட்டுத்தள்ளு என்று சைகை காட்டினார்.

“மங்களாபுரம் தெரியுமா? மங்களூர்னு மண்டுகங்கள் சொல்லும். மங்களாபுரம் பார்ட்டிதான் முந்திரிக்கொட்டை லோனுக்கு நிக்கறது.”

“சார், ராமேஸ்வரத்திலே புரோகிதர் வேண்டியிருக்குமா?”

வண்டியில் ஏறிய புரோகித ப்ரோக்கர் விசாரித்தார்.

“சாம்பசிவ சாஸ்த்ரிகள், அடைய விளஞ்சான் குடும்பம்” என்று ஜி.எம் அடையாளம் சொல்லிக் கேட்க, “அவர் வியோகமாகி நாலு வருஷமாச்சு. வேற சாஸ்திரிகள் கிட்டே கூட்டிப் போகலாமா?” என்று வந்தவர் ஆர்வமாகக் கேட்டார்.

“ஒண்ணும் வேணாம், நீங்க சவுகரியம்போல வாங்கோ. நான் இருக்கேன். இல்லேன்னா என்ன போச்சு? ஆவியா இருந்தாவது பிதுர் காரியம் பார்த்து கொடுக்கறேன்னு வாக்குதத்தம் பண்ணியிருக்கார் எங்க சாஸ்திரிகள். நான் பாத்துக்கறேன்.”

“அது சரி, பேஷா செய்யுங்கோ அண்ணா” என்று வலிந்து பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டு அவர் போக, “போத்தி, இதெல்லாம் பிசினஸுக்கு ஆள் பிடிக்கற உத்தி. காசு வரணும்னா இருக்கறவரையே இல்லைன்னு சொல்லிடலாம். அத்தனையும் பொய்” என்றார் ஜி.எம்.

“போனவாரம் கொழும்புலே அது என்ன பேரு… அணிசேரா நாடுகள் மகாநாடு… NAM… கூட்டத்திலே வச்சு இந்தியாவிலே பத்திரிகை தணிக்கையே இல்லேன்னு நம்ம பிரதமர் புளுகினாரே, அது மாதிரியா?” என்று கேட்டேன்.

“அது கிடக்கு, இந்த ஹோல்டாலை உன் மாமனாரா வந்து இறக்குவார்? கைகொடு.”

மேல் தட்டில் இருந்த மகாபெரிய மூட்டை ஒன்றைக் காட்டினார் ஜி.எம். உயிரைத் துச்சமாக மதித்து அதை இழுத்துத் தள்ளிக் கீழே கொண்டுவந்தபோது ராமேஸ்வரம் வந்துவிட்டது.

நல்ல ஹோட்டலில் ஞாபகமாக அவரோடு எனக்கும் பக்கத்திலேயே அறை வாடகைக்கு எடுத்திருந்தார் ஜி.எம்.

“சார், எனக்கு பெரிய ஹோட்டல் ரூம் எல்லாம் தங்க அனுமதி இல்லே. பேங்க் காசு தரமாட்டாங்க” என்றேன்.

“இந்த ரெண்டு ரூமுக்குமே பேங்க் ஒரு பைசா அடைக்காது. நான்தான் சந்தோஷமா தர்றேன். நீ இதுக்கு மேலே இதைப் பத்தி ஒண்ணும் பேசாதே. கேட்டியா?”

ரூமுக்குப் போனதுமே தட்டுச்சுத்து வேட்டிக்கும் அரைக்கை சட்டைக்கும் மாறி வெளியே கிளம்பிவிட்டார் ஜெனரல் மேனேஜர்.

“இங்கே நம்ம நூருணி ஸ்வதேசி உன்னிமாங்கா பரமேசரன் ஓட்டல் வச்சிருக்கான். காளன் ஸ்பெஷலிஸ்ட். இந்தப்பக்கம் பண்ற மாட்டு மூத்திர திரவ பதார்த்தமான மோர்க்குழம்பு இல்லே காளன். கெட்டியா நல்ல புளிப்பும் காரமுமா இருக்கும். இந்த நாலஞ்சு தெருவிலேதானே ஓட்டல் எல்லாம் இருக்கு. தேடினா பாலக்காட்டான் ஓட்டல் கெடச்சுடும். வா, போகலாம்.”

அவரோடு ஒரு மணி நேரம் சுற்றியும் நூருணி பரமேஸ்வரன் கெட்டியான விழுதாக காளன் பரிமாறும் பாலக்காட்டு ஓட்டல் கண்ணில் படாமல் போக, ஒழுங்காக குஜராத்தி பவனில் சப்பாத்தியும் கத்தரிக்காய்க் கறியுமாக பகல் உணவு.

சாப்பிட்டு வெளியே வர அந்த ஓட்டலின் முதல் மாடிக்கு கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

“வா விஸ்தரிச்சு முறுக்கலாம்” என்று அவர் கொழுந்து வெற்றிலை மேயப் போய்க் கீழே தாம்பூலம் விற்கிற கடையில் கேட்க பீடாக்காரன் சொன்னான் -

“சார், பரமேஷ்வர் பால்காட் ஓட்டல் அது. இங்கிலீஷ்லே போர்ட் வச்சிருக்காங்க. போஜ்புரியிலே வச்சிருக்க வேணாமோ.”

பரவாயில்லே, நம்மை அவன் போஜ்பூரிக்காரன்னு நினைச்சுட்டான் என்று மகிழ்ந்தபடி கூட நடந்தார் ஜெனரல் மேனேஜர்.

சுடச்சுட முந்திரியும் பாதாமும் வறுத்து அத்திப்பழத் துண்டுகளோடு தரும் கடை வாசலில் கூட்டம். போய் வாங்கிட்டு வந்துடட்டா என்று கேட்டேன். முந்திரின்னாலே அலர்ஜி என்று மறுத்துவிட்டு கோயிலை நோக்கி நடந்தார்.

தாம்புக்கயறு கட்டிய இரும்பு வாளியோடு வந்த வழிகாட்டியோடு போய் கோயிலுக்குள் இருக்கும் தீர்த்தம் எல்லாம் ஒன்று விடாமல் இரைத்து ஊற்ற, தலை நனைத்து சந்தோஷமாகக் குளித்தார் ஜி.எம்.

சாயந்திரம் கந்தமான பர்வதம் போய் பாறையில் ஏறி காற்றும் கடலும் ஆகாசம் தொட்டு நிற்பதை அனுபவித்துக் கண்ணை மூடியபடி நின்றார்.

“அதோ இருக்கு பாருங்க, தொலைவுலே தெரியுதே... அதான் தனுஷ்கோடி, பத்து வருஷம் முந்தி அடிச்ச புயல்லே அழிஞ்சே போச்சு.”

நான் சுட்டிக் காட்டினேன். வேறெதுவும் செய்யத் தோன்றாமல் கன்னத்தில் போட்டுக்கொண்டு அவர் சொன்னார்:

“ஹரஹரான்னு இங்கேயே இருந்துடலாமான்னு இருக்கு. கோயில்லே கைடு உத்தியோகம் கூட எதேஷ்டம் இல்லே நூருணி பரமேஸ்வரன் கடையிலே எலை எடுத்துப்போடற உத்தியோகம்.”

“சார், உங்களுக்கும் எனக்கும் பேங்கு வேலை தவிர வேறெதுவும் தெரியாது.”

“வாஸ்தவம்தாண்டா போத்தி” என்றார்.

ஞாபகமாக நூருணி பரமேஸ்வரன் ஓட்டலில் ராச்சாப்பாட்டுக்காகப் படியேற, ‘குக்கிங் கேஸ் தீர்ந்து போய் சப்ளை வரல்லே. இருக்கற சிலிண்டர் லீக் ஆகிண்டிருக்கு. கெரசினும் ஆகக் கம்மியா இருக்கு. இனி நாளைக்குத்தான். விடிகாலை காப்பி டிபன் அஞ்சரைக்கு கிடைக்கும். திருஷ்ணாபள்ளி ராமேஸ்வரம் பேசஞ்சர் நடு ராத்திரி ஒரு மணிக்கு வரும். அதிலே நாலு சிலிண்டர் வரும்’ என்றார்கள்.

“என்னமோ எனக்கு போறதுக்கு மிந்தி இங்கே சாப்பிட்டுப் போக அதிர்ஷ்டம் இல்லே.”

அவர் நூருணி பரமேஸ்வரனின் ஹோட்டல் கல்லா பிரதிநிதியிடம் சொன்னார். ஓட்டல் நாலு கை மாறி உடுப்பிக்கார ஹெக்டே ஒருவரிடம் தற்போது இருக்கிறதாம். ஆனா குக் எல்லாம் நூருணிதான், கேட்டியா?

“நாளைக்கு பட்டினி… காலையிலே ஆறரைக்கு வந்துடு. சாஸ்த்ரிகள் யார் கிடைச்சாலும் சரிதான். தர்ப்பணம் முடிச்சுட்டு வந்து உடுத்திண்டு லோன்மேளா போயிடலாம். மதியம் ரெண்டு மணிக்குத்தான் ஃபங்கூஷன்.”

“சார், அந்த டான்டெக்ஸ்?”

“ஒண்ணும் ஓடிப்போகாது. காலம்பற கொடு.”

கொடுக்க முடியவில்லை. நடு ராத்திரிக்கு மாரடைப்பில் எங்கள் ஜெனரல் மேனேஜர் காலமாகிவிட்டார். இந்தப் போத்தி பத்து வருடம் முன்பு முத்தச்சனைப் பறிகொடுத்த மாதிரி அழுதது அப்போதுதான். நானும் சென்னைக்கு, ஜி.எம் படுத்திருக்க. வேனில் போனேன். சவ சம்ஸ்காரத்தின்போது கூடவே இருந்தேன்.

முந்திரிப் பருப்பு லோன் கொடுக்காமல் அவர் போய்ச் சேர்ந்ததில் சிறு ஆறுதல் எனக்கு. என்ன மாதிரி அழுத்தம் அவருக்கு வந்திருக்கும் என்று எங்களுக்கெல்லாம் தெரியும்.

ரீஜனல் மேனேஜர் கலந்துகொள்ள, லோன்மேளா சிறப்பாக நடந்தது. அந்த மேனேஜர் இல்லை என்றால் இந்த மேனேஜர். சாவி தீர்ந்த பொம்மைக்குப் பதிலாக, சாவி கொடுக்கப்பட்ட இன்னொரு பொம்மை. எமர்ஜென்சி உலகம் பொம்மைகளால் ஆனது.

அத்தியாயம் 15

# அக்டோபர் 1976

“தீ பாவளிக்கு துணி எடுக்க லோன் வாங்க, இருபதம்சத் திட்டத்திலே எந்த அம்சம் சரிப்படும்?”

நிருபர் அக்கறையாக விசாரித்தார்.

“அது ஐந்தம்சத் திட்டத்திலே இல்லே வரும்? குடும்பக் கட்டுப்பாடு.”

கேஷியர் கருப்பையா சீரியஸாகச் சொன்னார்.

“குடும்பத்தைக் கட்டுப்படுத்தினா, லோனே தேவை இல்லையே…” என்றார் மேனேஜர்.

எமர்ஜென்சி அறிவித்தபின் வரும் இரண்டாவது தீபாவளி இது.

சின்னக் கரடி என்று பெயர்கொண்ட சிங்கம்புலி சைக்கிளில் வந்து பேங்க் எதிரே கால் ஊன்றி நின்றபடி மெகஃபோனில் கூவினார்:

“வங்கிகள் வாங்கிகளாக இருக்கக் கூடாது, வழங்கிகளாக இருக்க வேண்டும்.”

“வேண்டும், வேண்டும்.” கூடவே சைக்கிள்களில் வந்த நான்கைந்து பேர் சேர்ந்து கூவிக் கைதட்டினார்கள். எல்லோர் சைக்கிளிலும் பிரதமர் படம் ஒட்டிய தட்டி, ஹேண்டில்பாரில் சாய்த்து நிறுத்தப்பட்டிருந்தது.

“ஜனநாயகம் தழைக்க வேண்டும்.” சத்தம் குறைத்து அடுத்த கூவல்.

“வேண்டும், வேண்டும்.” லேசான கைதட்டல் ஒலி.

‘எல்லா அதிகாரமும் மக்களுக்கே’, அவர் வாய்க்குள் சொல்லிக்கொண்டார். யாரும் ஆதரித்து முழங்கவில்லை.

சிங்கம்புலி பால்பண்ணையில் கணக்கு எழுதி ஓய்வு பெற்றவர். அவ்வப்போது ஏதாவது கூட்டம் என்று கிளம்பிவிடுவார்.

“பிரசார சைக்கிள் பேரணி தம்பி இது.”

என்னிடம் அந்த ஐந்து சைக்கிள் பேரணியைக் காட்டிச் சொன்னார். நல்லதுங்க என்றேன். அது எமர்ஜென்சி எதிர்ப்பு சைக்கிள் பேரணி என்று நாம் பொருள் கொள்ளவேண்டும் என்பது சிங்கம்புலியின் விருப்பம். அதற்கு பேரணியைப் பார்த்துக்கொண்டு நிற்கும் நண்பர்கள் ஒரு தடவை உரக்கக் கைதட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு.

நான் மறக்காமல் கைதட்டியதோடு இல்லாமல் தட்டுங்க சார் என்று மேனேஜரையும் விஷயம் புரியாமல் கைதட்ட வைத்ததில் சிங்கம்புலிக்கு ஒரே சந்தோஷம்.

“நாளை சாயந்திரம் கண்டனி நாவன்னா ஆனா துக்க தினம் மீட்டிங் இருக்கு வந்துடுங்க” என்றபடி கிளம்பிப் போனார் அவர்.

ஒன்றை மட்டும் சொல்லியே ஆகவேண்டும். சிங்கம்புலிக்கும் ஜெபர்சனுக்கும் அவ்வளவாக ஒத்துப் போனதில்லை. இவர் காவி அணிந்து வலம் போனால், அவர் சிவப்புத் துண்டு போட்டு இடம் போவார். காவியும் சிவப்பும் சந்தித்துக் கொள்வதும் அபூர்வம்தான். எமர்ஜென்சி நேரத்தில் அது அறவே இல்லை.

இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை சிங்கம்புலியும் இன்னும் சில நண்பர்களும் பட்டையாக விபூதி, குங்குமம் அணிந்து காவித் துண்டோடு துக்கதினம் கொண்டாடுவார்கள். மறைந்தவரின் ஆத்மா நல்ல கதிக்குப் போகப் பிரார்த்தனை செய்வார்கள்.

யாராவது எங்கேயாவது சமீபத்தில் இறந்திருந்தால் அவர்களுக்கான துக்கதினம் என்று எளிய லாஜிக் இதன் பின்னணியில் உண்டு.

ஆகஸ்டில் பின்னணிப் பாடகர் முகேஷ் இறந்ததற்காகத் துக்கம் அனுஷ்டித்தார்கள். செப்டம்பரில், மராத்திய எழுத்தாளரும், மொழிபெயர்ப்பில் தமிழர்களிடையே பிரபலமானவருமான வி.எஸ்.காண்டேகர் மறைவுக்கு அடுத்த துக்கம் காத்தார்கள்.

இதெல்லாம் ஒரு சாக்குதான் என்றும் அவர்கள் துக்கம் கொண்டாடியது இன்னும் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் எமர்ஜென்சிக்காகத்தான் என்றும் அவர்கள் அவ்வப்போது அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு காதில் கிசுகிசுப்பார்கள்.

காண்டேகர் துக்க தினக் கூட்டம் என்று அறிவித்து விவேகானந்தா ஆரம்பப் பள்ளியில் ஏழெட்டு பெஞ்சுகளை இழுத்துப் போட்டு மூன்றாம் கிளாஸ், நான்காம் வகுப்புக்கு நடுவே இருந்த ஸ்கிரீன்களை நகர்த்திவிட்டு இடம் ஏற்பாடு செய்து கூட்டம் நடத்தினார் சிங்கம்புலி. கூட்டத்தில் எத்தனை பேர் காண்டேகர் கதைகளைப் படித்திருப்பார்கள் என்று தெரியவில்லை.

“போத்தி, நீங்க காண்டேகர் பத்தி பேசுங்க முதல்லே.” அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார். எனக்கு காண்டேகர் என்ற பெயர் மட்டும்தான் தெரியும். அவர் எழுதிய எந்த நாவலும் படித்ததில்லை. இதைச் சொன்னேன்.

“அதனாலே என்ன, துக்கம் பொதுவானதுதானே, எல்லோருக்கும் புரியும். நீங்க பேசுங்க. கூட்டுப் பிரார்த்தனை செய்யறபோது நீங்க ப்ரேயரை படிங்க, அது போதும்” என்றார் சிங்கம்புலி.

“இன்னிக்கு மூக்குக் கண்ணாடி போட்டுட்டு வரலே, போட்டுக்கிட்டு வந்து இன்னொரு நாள் படிச்சு துக்கம் அனுஷ்டிக்கறேன்” என்று சொல்லிவிட்டேன்.

அவர் சம்மதித்து, கிட்டதட்ட ஒரு மணி நேரம் பொத்தாம்பொதுவாக காண்டேகரின் எழுத்து எப்படி ஆத்மாவைத் தொடுகிறது என்று விலாவாரியாக விவரித்துச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

நடுநடுவே நம் துக்கத்துக்கும் துயரத்துக்கும் யார் காரணம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று முழங்கினார். அது மறைமுகமான எமர்ஜென்சி எதிர்ப்பு என்று அர்த்தம் செய்துகொள்ள வேண்டுமாம். அவரும் அப்போதெல்லாம் கை தட்டச் சொல்லி எனக்குக் கண்காட்டினார்.

சோனியான என் கைதட்டு சத்தம் போதாமல் சிங்கம்புலி உடனே பாட்டுப் படிப்பதில் இறங்கினார்.

'மகான் காண்டேகர் பெயர் சொல்லுவோம், மாண்புறு சிந்தனை வழிசெல்லுவோம்.'

இந்தப் பாட்டை அவர் கென்னடி, கோல்வால்கர், டால்ஸ்டாய், பட்டினத்தார், தாயுமானவர் என்று பலருக்கும் நினைவு அஞ்சலி செலுத்தும்போது பெயரை மட்டும் அந்தந்த சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி மாற்றி சத்தம் போட்டு பாடிப் பழக்கப்படுத்தியிருக்கிறார்.

அவர் குரல் காத்திரமாக இருப்பதால் யார் பெயரில் இப்படி இரங்கல் பாட்டு பாடினாலும் முடிக்கும்போது பலத்த கைதட்டு வரும்.

"கண்ணை மூடிட்டுக் கேட்டா அப்படியே சீயாழி கோவிந்தராஜன் அசரீரி பாடற மாதிரி இருக்கு."

என் பின்னால் இருந்த ஜவுளிக்கடை காசியாப்பிள்ளை நெகிழ்ந்து போய் என் தோளில் தட்டினார். பின்னால் திரும்பிப் பார்க்க, கண்களில் கண்ணீர் திரள, போயிட்டாரே என்று கையை அசைத்துக் காட்டினார். காண்டேகர் மட்டும் பார்த்திருந்தால் ஏன் உயிரை விட்டோம் என்று அவரும் காசியாப்பிள்ளையோடு கூடச் சேர்ந்து ஒரு பாட்டம் அழுதிருப்பார்.

முகேஷ் துக்கதினத்தன்று 'மகான் முகேஷின் பெயர் சொல்லுவோம்', 'சிற்பி முகேஷ் பெயர் சொல்லும் பொழுதிலே' என்று துக்க கானங்களைப் பாடி அடுத்து இன்னும் கூடுதல் துக்க அனுஷ்டானம் என்று எமர்ஜென்சி பாட்டை எல்லாம் வரிசையாகப் பாட ஆரம்பித்தார் சிங்கம்புலி.

சேர்ந்திசை என்று சர்க்கார் திட்டத்துக்கும் எமர்ஜென்சிக்கும் ஆதரவாகத் தாளம் மாற்றிப் போட்டு இசையமைத்து கூட்டமாக இளைஞர்களும் இளம் கன்னியரும் பாடிய பாடல்கள் அவை. தினம் கவர்மெண்ட் ரேடியோவில் அவற்றைச் சதா கேட்டுக் கேட்டு அலுத்துப் போனாலும் வக்கீல் குமாஸ்தா நாராயணனுக்கு மலமிளக்கி மருந்து அவைதான்.

"யூரல் மலைகளின் சாரல் மழையில்'ன்னு உச்ச ஸ்தாயிலே பாடறதைக் கேட்டா எங்கே எங்கேன்னு வயிறு கலகலன்னு வழி விட்டுடுது தம்பி."

நாராயணன் வாங்கிய புது டிரான்சிஸ்டர் அவருக்கு பர்கோலாக்ஸ் ஆகத்தான் பெரும்பாலும் பயன்பட்டது.

"இது தாமசவர கமனா கூட பாடும். ஆனா எனக்கு கேட்க பொறுமை இல்லே" என்றார் என்னிடம். தாமசவர கமனா இல்லேங்க என்றேன். அது தெலுங்கு, உங்களுக்குத் தெரியாது தம்பி என்று என்னை அடக்கிவிட்டார்.

முகேஷ் நினைவுக் கூட்டத்தில் நானும் பாடுவேன் என்று உட்கார்ந்துவிட்டார். நல்லவேளையாக இருபதம்சத் திட்டப் பாடல்களை சிங்கம்புலி இசைக்கத் தொடங்கியதும் வயிற்றைக் கையால் பிசைந்தபடி அவசரமாக எழுந்து போனார் நாராயணன். எமர்ஜென்சி கீதங்களுக்கு என்ன எல்லாம் உபயோகம்!

ஆபீஸுக்கு எதிரே டாக்டர் வீட்டு வாசலில் சத்தமான லட்சுமி வெடி வெடிக்க ஆரம்பித்தபோதுதான் தீபாவளி நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

நிருபர் 'அடுத்த வாரம் அரசாங்க தீபாவளி கொண்டாட்டம், கலெக்டர் ஊருக்கு வருகிறார்' என்று சுபச் செய்தி அறிவித்தார். கலெக்டர் என்னதான் ஆருயிர் நண்பன் என்றாலும், வந்து போகும்போது அந்த லோன், இந்த லோன் என்று புள்ளிவிவரம் தரச் சொல்லிக் கழுத்தறுப்பார்கள்.

எல்லா லோனும் ஏறுமுகமாக எப்போதும் இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத எமர்ஜென்சி நிபந்தனை.

ஆபீஸ் வேலையோடு இந்த அரசாங்க வேலையும் செய்வது கட்டாயம். தீபாவளியன்றைக்கு மீட்டிங் வைத்து வீட்டில் இருக்க முடியாமல் செய்யப் போகிறார்களே என்று கவலையோடு மேனேஜரைப் பார்த்தேன்.

அவரும் அதே நினைப்பு மனதில் ஓடவோ என்னமோ, “நான் தீபாவளிக்கு முந்தின நாள் சகலை வீட்டுக்கு விருந்தாடப் போறேன். பிள்ளையார்பட்டி பயணம்” என்று என்னை தொந்தரவு படுத்த வேண்டாம் என்று மறைமுகமாகத் தெரிவித்தார்.

நானும் ஊருக்குக் கிளம்பலாமா என்று யோசித்தபோது நிருபர் சொன்னார்:

“தீபாவளிக்கு ரெண்டு நாள் முந்தியே அரசாங்கக் கொண்டாட்டம். கலெக்டர் பேச்சு, ரிப்போர்ட், விவாதம் எல்லாம் வேணாம். முடிஞ்சா கலை நிகழ்ச்சி, அனாதைக் குழந்தைகளுக்கு உடை, ஸ்வீட் அன்பளிப்பு, அவங்களோடு கூட பட்டாசு வெடிக்கறது இப்படி நடத்தணும்னு சொல்லிட்டார்.”

நான் மோகனகிருஷ்ணனை நன்றியோடு நினைத்துக் கொண்டேன்.

ஆபீஸுக்குக் கிழக்கில் இருக்கும் வீடுகளிலும் தீபம் ஏற்றி வைத்து கனமான ஐப்பசி இருட்டை அழகாக விலக்கிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டது. தெரு முழுக்க விளக்கு வெளிச்சம் பரவ, பேங்க் மட்டும் மூடப்பட்டு இருட்டில் கிடந்தது. குடியிருக்கும் தெருவில் பேங்க் வைத்திருப்பதன் அபத்தத்தைத்தான் நாங்கள் உணர்ந்து கொண்டிருந்தோம். யாருக்காக வங்கியோ அவர்கள் நடுவில் அது நடப்பது நல்லதுதானே என்று இன்னொரு மனசு சொன்னது.

மேனேஜர் மாடியேறிப் போய்விட்டார். நிருபர் நேற்று ஏதோ விருந்தில் ஜிலேபி சாப்பிட்ட வைபவத்தை ரசனையோடு சொல்லிக்கொண்டு போக, எதையோ செய்யாமல் மறந்து போனதாகத் தோன்றத் தொடங்கியது.

ஆபீஸ் வேலையில் ஏதாவது பாக்கி இருக்கிறதா? இல்லை. ஜெனரல் லெட்ஜர் ஒரே ஸ்ட்ரோக்கில் டாலி ஆகி இரண்டு மணி நேரமாகிறது. ஏதாவது வாங்க நினைத்து மறந்துவிட்டதா? எது மறந்தாலும் மதுரை

போகும்போது நினைவு வந்துவிடுவது வாடிக்கை. நாளை சனிக்கிழமை என்பதால் பகலுக்கு மேல் அங்கேதான். வேற என்ன?

சட்டென்று நினைவு வந்தது. கல்லூரிப் பேராசிரியர் கணேசபாண்டியனின் புத்தகம்.

அது உடனடியாகத் தேவைப்படுகிறது. அவருடைய புத்தகம்தான் அது. எனக்குப் படிக்கக் கொடுத்திருந்தார். ப்ரன்ஸ் கஃப்கா எழுதிய குறுநாவல்களின் தொகுப்பு. மெடமார்ஃபசிஸ் என்ற பிரபலமான குறுநாவல் அதில் ஒன்று. தூங்கி எழுந்த க்ரிகர் சமோஸா ஒரு பெரிய பூச்சியாக மாறும் சர்ரியலிசக் கதை அது.

நீங்க படிக்கவேண்டிய எழுத்தாளர்களிலே ஒருத்தர் கஃப்கா என்று சொல்லி என்னிடம் கொடுத்திருந்தார். ஆபீஸுக்கு வந்தபோது பணம் வாங்கக் காத்திருக்கும் நேரத்தில் படிக்க என்று எப்போதும் ஏதாவது புத்தகத்தைக் கொண்டுவருவார் அவர். சிரத்தையாகப் படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு அவரிடம் விசாரிக்க, கஃப்கா கதைத் தொகுதி என்னிடம்.

நான் வாங்கி எடுத்துப்போய் மெடமார்ஃபசிஸ் மட்டும் முழுவதாகப்படித்தேன். லோன் அப்ளிகேஷன் பார்க்கும் மும்முரத்தில் மற்றதைப் படிக்க நேரம் கிடைக்கவில்லை. இந்த இரண்டு மாதத்தில் மட்டும் நான்கு லோன் மேளாக்கள் என்பதால் ஓடிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம்.

சரி, கணேசபாண்டியன் கேஷ் வாங்கக் காத்திருக்கும்போது படிக்கிற மாதிரி நாம் லோன் அப்ளிகேஷனோடு மேளாவுக்குப் போகிறபோது கொஞ்சம் கொஞ்சமாகப் படித்தால் முடித்துவிடலாமே. பையத் தின்னால் பனையும் தின்னாம் என்று பழஞ்சொல் இருக்கிறதே. இப்படி நினைப்போடு கஃப்காவைக் கூடவே எடுத்துப் போனேன்.

போன இடங்களில் வேறு கூடுதல் வேலை ஏதாவது மாட்டியது. ‘ஜவந்திப் பூ மாலை வேண்டாம் அமைச்சருக்கு மல்லிகை மாலை போடலாம். போய் மாற்றிக்கிட்டு வாங்க.’ இப்படி ஒரு கோரிக்கை

எனக்கு விடப்பட்டது. அமைச்சர் என்ன கல்யாணம் முடிந்து விருந்தாடவா வருகிறார், மல்லிகைப் பூவைக் கையில் சுற்றிக்கொண்டு டான்ஸ் பார்க்கக் கிளம்பிவிட்டாரா? சர்க்கார் விழாவில் மல்லிகை மணத்தால் சரிப்படுமா?

நான் வல்லடியாகப் பேச அதுவும் சரிதான் என்று ஆர்.டி.ஓ விட்டுக் கொடுத்தார். ஜவ்வந்தி மாலையோடு அமைச்சர் உட்கார்ந்திருந்ததைப் பார்க்க சாதனை செய்து முடித்த பெருமை எனக்கு. அசையாமல் கண்ணையும் மூடியபடி உட்கார்ந்திருந்தது உயிரில்லாத மாதிரி தெரிந்தாலும், அந்த மஞ்சள் மாலை அழகுதான்.

கஃப்கா எல்லாம் அப்புறம் படிக்கலாம். இது அல்லவோ முக்கியம் என்று தினசரிக் கடமைகளில் மூழ்கியது தொடர்ந்தது.

ஜெபர்சன் அப்படியான ஒரு பரபரப்பான மாலைப் பொழுதில் என்னைப் பார்க்க வந்தபோது, இது என்ன மாதிரி புத்தகம் தோழர் என்று கேட்டார். சொன்னேன்.

“என்னது, மனுஷன் பூச்சி ஆகிடுவானா? விட்டலாச்சாரியார் சினிமாவிலே சகலமானவங்களையும் ஆடு, மாடு , கழுதைன்னு இன்டர்வெல்லுக்கு முந்தி மாறுவாங்க. குட்டிச்சாத்தான் வேலை இங்கிலீஷிலும் உண்டா என்ன?”

நான் அவரை உட்கார்த்தி வைத்து பத்து நிமிடம் சர்ரியலிசம் என்றால் என்ன என்று வகுப்பு எடுத்தேன்.

“சர்ரியலிசம், ஃபேன்டஸி, மேஜிக்கல் ரியலிசம் இப்படியானவை இலக்கிய உத்திகள் என்று அறியப்படும்” என்று ஆரம்பித்ததுமே அவர் உறங்கிப் போய்விட்டார்.

ஆனாலும் தளராமல், என் கையில் இருந்த கஃப்காவை வாங்கிக்கொண்டார்.

“நான் ஒரு வாட்டி இதை படிச்சுப் பார்க்கறேன். அது என்ன சர்ரியலிசம்னு தெரியுதான்னு வந்து சொல்லறேன். கம்யூனிசமே இன்னும்

முழுக்கப் பிடிபடலே. இந்த இசம் எல்லாம் எப்போ தெரிஞ்சு வச்சுப்பேனோ” என்றார்.

அவர் மெடமார்ஃபஸிஸ் புத்தகத்தோடு பெருமிதமாக நடந்து வெங்கு பரோட்டா கடைக்குப் போக, அங்கே சந்நியாசி கம்யூனிஸ்ட் ஒருத்தரைப் பற்றிப் பேச்சு நடந்ததாக அப்புறம் தெரிவித்தார்.

சமஸ்கிருதத்தில் ஈடுபாடுள்ள சந்நியாசியாகத் துறவு பூண்டு மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குப் போனவராம் அவர். கேரளத்தில் திருத்தல்வாதிகளுக்குத் தலைவர் என்று தோழர் சொல்ல, வெங்கு வெகுண்டான்:

“அது எப்படி எங்களை திருத்தல்வாதின்னு சொல்லலாம். உங்க எல்லாருக்கும் உயிர்ப்பிச்சை போட்டு எடுத்துக்கிட்டது நாங்கதான். திருத்தி இருந்தா உங்க உசிரை இல்லே எடுத்து விட்டிருக்கணும்.”

இப்படி ஆக்ரோஷமாகச் சொன்னானாம் வெங்கு. சாப்பிடாமலேயே பரோட்டாக் கடையிலிருந்து வெளியே போகத் திரும்பியதாகவும் அதற்குள் சண்டை எல்லாம் தீர்ந்து திரும்ப தோழர் தோழர் என்று நட்பு பழையபடி எட்டிப் பார்த்ததாகவும் சொன்னார் ஜெபர்சன்.

சண்டை மும்முரத்தில் புத்தகத்தை பரோட்டா ஸ்டாலில் ஏதோ ஒரு டேபிளில் விட்டுவிட்டு வேட்டியைத் திருத்திக் கட்டிக் கொண்டிருக்கிறார் அவர். சமாதானமானபோது புத்தகத்தைக் காணோமாம்.

அப்புறம் தெரிய வந்தது, சாப்பிட வந்த யாரோ அதை எடுத்துப் போய் திரும்பிக் கொண்டுவந்து கொடுக்கச் சோம்பல் பட்டு காந்தி வீதியில் நாலு தெருக்குழாய் சேர்ந்து இருக்கும் பொது இடத்தில் ஓரமாக இருந்த உலர்ந்த மேடையில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

அந்தப் புத்தகத்தை எடுத்து வந்து என்னிடம் கொடுத்த ரிக்ஷாக்காரர் ராஜு இதைச் சொன்னார். நான் மறுபடி ஜெபர்சனுக்கு அதைக் கொடுத்தேன்.

அப்படி கஃப்கா ஜெபர்சன் வாத்தியாரோடு நாட்டுக்கோட்டைக்கு சவாரி விட்டு இரண்டு மாதமாகிவிட்டது. அதற்கு அப்புறம் ஒரு வாரம்போல

தினமும் அவரிடம் ‘எத்தனை பக்கம் கஃப்கா படிச்சீங்க?’ என்று நான் கேட்பதும், ‘இதோ, புரட்சி வந்ததும் ஆரம்பிச்சுட வேண்டியதுதான், சுபாஷ் சந்திரபோஸ் திரும்பி வந்ததும் படிக்கப் போறேன்’ என்று ஏசுவின் மறு வரவு தவிர மற்ற எல்லா எதிர்பார்ப்பையும் அவர் சொல்வதும் வழக்கமாகப் போனது.

மறு வரவு மேல் அவருக்குப் பெரிய நம்பிக்கை இல்லை. ‘மறுமுறை ஏசு வரலாம். ஆனால் இங்கே இருக்கற அநியாயத்தைத் தாங்க முடியாம திரும்பிப் போயிடுவார்’ என்பார் வாத்தியார். எப்படியோ கஃப்கா அவருக்கு வசப்படாமல் நாட்கள் நகர, நானும் விசாரிப்பதை நிறுத்தி வேறு வேலையில் கவனம் செலுத்தப் போனேன்.

இரண்டு நாள் முன் ஆபீஸில் இருக்கும்போது புரஃபசர் கணேசபாண்டியன் தேடி வந்தார். மதுரையில் ஒரு சிம்போசியம் அடுத்த வாரம் இருக்கிறதாம். இலக்கியக் கூறுகள் பற்றியாம் அது. அது என்ன விஷயம் என்று கேட்க ஆசைதான். ஆனால் ஆபீஸ் நேரத்தில் இலக்கியம் பேச, அதுவும் எமர்ஜென்சி காலத்தில் அப்படிப் பொழுது போக்க மனம் ஒத்துழைக்கவில்லை.

விஷயம் என்ன என்றால், புரஃபசர் சார் அந்தக் கூட்டத்தில் கஃப்கா, ஜேம்ஸ் ஜாய்ஸ் பற்றி எல்லாம் பேச இருக்கிறாராம். மெடமார்ஃபசிஸ் புத்தகம் இல்லாமல் நிகழ்த்தவேண்டிய உரையைத் தயாரிக்க முடியாதுதான். சோதனைக்கு, ஜெபர்சன் ஒரு வாரமாக வரவேயில்லை.

கணேசபாண்டியன் இன்னொரு முறை தேடிக்கொண்டு வருவதற்குள் ஜெபர்சனிடம் இருந்து புத்தகத்தை வாங்கிக்கொண்டு வந்துவிட வேண்டும் என்பதைத்தான் மறந்து போனேன். இப்போது நினைவு வர, உடனே போகத் தூண்டுதல்.

“அப்புறம் நாட்டு நடப்பு எப்படி?” நிருபர் கேட்டார். அவருக்குத் தெரியாமல் என்ன நடந்திருக்கப் போகிறது?

“காந்தி ஜெயந்தியன்னிக்கு காந்தியோட சீடர் கிருபளானியை காந்தி சமாதியிலே வச்சு அரெஸ்ட் பண்ணினதைப் பற்றி என்ன

நினைக்கறீங்க?"

"அது எதுக்கு போத்தி சார்? நல்லதா வேற ஏதாவது சொல்லுங்க."

"நடக்கட்டும், சொல்றேன்... இப்ப என்ன செஞ்சுட்டிருக்கீங்க?"

அவர் கடலைக்கடையில் வாங்கிய காகிதக் கூம்பிலிருந்து சுவாரசியமாக நிலக்கடலை எடுத்துக் கொறித்துக் கொண்டிருந்தார். "தீபாவளி ஜவுளி எடுக்கப் போகலாமான்னு யோசிச்சிட்டிருக்கேன்" என்றபடி கூம்பை என்னிடம் நீட்டினார் அவர்.

"அதுக்கு லோன் வேணும்னீங்களே..."

"அது சும்மா மேனேஜரை கலாட்டா பண்ணறதுக்கு. நான் வருஷம் பிறந்ததுமே தீபாவளி, பொங்கல் செலவுக்காக ரிகரிங் டெபாசிட்லே சேமிக்க ஆரம்பிச்சுடுவேன்" என்றார் அந்த விவரமான மனுஷர்.

"அப்போ உங்களுக்கு கவலை இல்லே. இன்னிக்கு துணி எடுக்காம, நாளைக்கே எடுத்துக்குங்க. இப்போ என்னோட வாங்க."

பெருமாள் கோயில் தெருவில் போகும்போது புகையும் பட்டாசு வாடையுமாக முன்பனிக்கால ராத்திரி கவிய ஆரம்பித்ததும் ஒரு அழகாகத்தான் இருந்தது. அந்த வேதியியல் பொருள் எல்லாம் சுவாசிக்கக் கூடாதவை என்று டாக்டர் சொல்வார். ஆனால் புதுத்துணி, முறுக்கு சுட எடுத்த சுட்ட எண்ணெய், தீபாவளி மலர் மணத்தோடு பட்டாசு வாடையும் சேர்ந்ததுதானே தீபாவளி வாசனை?

ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் தோத்தாத்திரி ஐயங்கார் குழந்தை மாதிரி குதூகலத்தோடு சரவெடி கொளுத்திப் போட்டு ஓடி வந்தது ஸ்கூட்டரை நோக்கி. ப்ரேக் பிடித்து நிறுத்தினேன். அவரை நான் பள்ளியில் படிக்கும்போது ஒரு நாளும் இத்தனை மகிழ்ச்சியோடு பார்த்ததில்லை.

"என்னப்பா, ஆபீஸ் வேலையா கிளம்பிட்டியா?" அவர் கையில் வெடி கொளுத்த வைத்திருந்த மட்டிப்பால் ஊதுவத்தியை என் புறங்கையில் சுடும் தூரத்தில் பிடித்தபடி பொக்கைவாய்ச் சிரிப்பைச் சிந்தினார்.

காந்திவீதியில் திரும்ப, ஒரே இரைச்சலாக வர்த்தக ஒலிபரப்பு. அது இந்த ஊருக்கு மட்டுமே உண்டான சிறப்பு. தீபாவளிக்கு ஒரு வாரம் முன்னால் ஊரில் இருக்கும் சவுண்ட் சர்வீஸ்காரர்கள் எல்லாரும் திரௌபதை அம்மன் கோயிலில் ஆளுக்கொரு கும்பிடு போட்டுவிட்டு ஒரு கூட்டம் போடுவார்கள்.

தீபாவளிக்காக லோக்கல் கடைகள், டீக்கடை, ஹோட்டல், ஜவுளிக்கடை, ஃபேன்ஸி ஸ்டோர் இப்படி ஒரு கடை விடாமல் விளம்பரம் செய்யக் கட்டணம் வசூலிப்பார்கள். மொத்தம் ஆறு சவுண்ட் சர்வீஸ்கள் ஊரில் உண்டு. காலை ஒன்பது மணியில் இருந்து ஏதாவது சவுண்ட் சர்வீஸில் இருந்து ராத்திரி ஒன்பது வரை விளம்பரங்களை சினிமா கானங்களோடு சிலோன் ரேடியோ ஸ்டைலில் ஒலிபரப்புவார்கள்.

ஒவ்வொருவருக்கும் இரண்டு மணி நேரம் தினசரி ஒலிபரப்பக் கிடைக்கும். அது திங்களன்று காலை ஒன்பதிலிருந்து பதினொன்று என்றால் செவ்வாயன்று வேறு நேரமாக இருக்கும்.

இந்தத் தொடர் ஒலிபரப்புக்காக விளம்பரம் வாங்குவது, எழுதுவது, ஒலிபரப்புவது என்று சகலமானதற்கும் ஒற்றுமையாக வேலை பிரித்துக் கொள்ளத்தான் திரௌபதை அம்மன் கோயில் மீட்டிங். விளம்பரக் கட்டணம் வசூலானதையும் தீபாவளி இனாமாகக் கடைகள் தரும் பணத்தையும் பிரித்துக் கொள்ளவும் இந்தக் கூட்டம் உதவும்.

கடைகள் மட்டுமில்லாமல், நுட வைத்தியசாலை, பசுமாடு கன்று ஈன காளையை அடுத்து விடும் சேவை, எலெக்ட்ரீஷியன் இப்படியான இனங்களிலும் விளம்பரங்கள் காதில் விழும்.

இப்போது ராஜா சவுண்ட் சர்வீஸ் உச்ச சத்தத்தில் வெங்கடேசா காப்பித்தூள் நயம் பீப்ரி கொட்டை வறுத்து அரைத்து என்று சாங்கோபாங்கமாக காப்பிப்பொடி விற்கும் கடைக்கு விளம்பரம் தந்து கொண்டிருக்கிறது.

நான்கைந்து விளம்பரம் ஒரு கொத்தாக ஒலிபரப்பி முடிந்து ஏதாவது சினிமாப்பாட்டு வரும். போன வருடம் எலந்தப் பழம் தினசரி நூறு

தடவை கேட்கக் கிடைத்ததாக ஆபீஸில் பழநி சொன்னார். இந்த வருடமும் அதைப் போட்டால் கேட்கத் தடை இல்லை என்றார் அவர்.

திடீரென்று எமர்ஜென்சி பாட்டு ராஜா சவுண்ட் சர்வீஸில் இருந்து ஒலிபரப்பானது.

‘ கள்ளக் கடத்தல் முதலை எல்லாம் உள்ளே பதுங்குறான்.’

கடைத்தெருவின் சத்தத்தை மீறி கவர்மெண்ட் சங்கீதம் ஒலித்தது.

தீபாவளி, பொங்கல் எல்லாம் இனிமேல் புறங்கழுத்தில் சர்க்கார் உஷ்ண மூச்சு விட்டபடி பார்த்துக் கொண்டிருக்கத்தான் நடக்கும்போல.

‘பத்து வருசக் கணக்கை எழுதிப்

பட்டியல் நீட்டுகிறோம்.’

எனக்கு அந்தப் பாட்டைக் கேட்கவே உடம்பே பற்றி எரிகிற மாதிரி இருந்தது. எதையும் கவனிக்காமல் வண்டியை ஓட்டிப் போனேன்.

நிருபரைப் பின்னால் வைத்துக்கொண்டு வண்டி ஓட்டுவதில் ஒரு சௌகரியம். அசந்து மறந்து கூட ஒரு வினாடி கண்மூட விடமாட்டார். ஏதாவது ஊர்க்கதை பேசிக்கொண்டு வருவார்.

வண்டி ஊர் எல்லையைக் கடந்து நாட்டுக்கோட்டைக்குப் போகும் பாதையில் திரும்ப, அவர் என் காதுப்பக்கம் குனிந்து கௌரிஸ்வரா மெடிக்கல்ஸில் கோடாப்ரீன் வாங்கப் போனதைச் சொல்லிக்கொண்டு வந்தார் -

“ரெண்டே ரெண்டு வாங்கிட்டு வான்னு பையனை அனுப்பிச்சா ரெண்டு அட்டை வாங்கிட்டு வந்து நிக்கறான். அத்தனை வச்சுக்கிட்டு என்ன பண்ண? சரி, இன்னும் ஒரு வருஷம் ராவணன் மாதிரி எட்டு தலை இருந்தாலும் தலைவலி, கொடச்சல்னு வந்தா சமாளிச்சு கடத்திடலாம்னு வச்சுக்குங்க. அட, இவன்தான் சின்னப்பய கேக்கறான் விஷயம் தெரியாம. மருந்துக்கடை வச்சிருக்கற அளகேசன் செட்டியாருக்கு தெரிய வேணாமா? என்னமோ போங்க.” ராவணனின் பாக்கி ரெண்டு தலை

எங்கே போச்சு என்று தெரியவில்லை. கேட்டால் அனுமார் வாலாக அடுத்த கதை வந்துவிடும்.

வண்டியைக் கப்பி ரோட்டில் திருப்பினேன். மேடு பள்ளத்தோடு சாலை போட்ட சுவடே இல்லாமல், இன்னும் இரண்டு கிலோமீட்டர் இப்படித்தான் ரோடு இருக்கும்.

“மாவட்ட கல்வி அதிகாரி பெண்ஜாதிக்கு நாட்டு வைத்தியர் கிட்டேதான் பெரும்பாடு நிக்க மருந்து வாங்கிக் கொடுத்தேன். வைத்தியன் நம்ம ஆளுங்க யாரும் இல்லே பாத்துக்குங்க. ஆந்திராவிலே இருந்து கிளம்பி வருஷம் முச்சூடும் இந்தியா பூரா கையிலே கோலும் மருந்துமா வர்றவங்க. பாத்திருப்பீங்களே... சல்லிசு விலை. ஆனா நல்லா கேக்கும். அந்தம்மா தீண்டலே நின்னு போச்சு பாத்துக்குங்க.”

“ஐயே, அதை பாக்க வேறே செய்யணுமாம் தேனம்மே...”

ஊருக்குச் சற்று வெளியே, அடைத்து வைத்த ஆரம்ப சுகாதார நிலைய வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்த இளம் பெண்கள் அவர் சொன்னதைக் கேட்டு அடக்க முடியாமல் கலகலவென்று சிரித்தபோது தர்மசங்கடமாகப் போனது. நகைக்கும் இளம்பெண்கள் வந்த ரம்மியமான இரவுப் பொழுது அது.

“ரிபோர்ட்டர் சார், கொஞ்சம் பேசாம வாங்க” என்று வேண்டுகோள் விடுக்க, அவர் வெள்ளைப் படுதல் மருந்து என்று அடுத்து ஆரம்பிப்பதற்கு முன் நல்ல வேளையாக ஜெபர்சன் வாத்தியார் குடியிருந்த தெரு வந்துவிட்டது. வண்டியை நிறுத்தி இறங்கினோம்.

“இங்கே எல்லாம் தீபாவளி கொண்டாட்டமே இல்லே பாருங்க” என்றார் பெருங்குரலில் நிருபர்.

“அப்படி இல்லே, இன்னும் ஏழெட்டு நாள் இருக்கே தீபாவளிக்கு. ஊர்னு இருந்தா பண்டிகை கொண்டாடாம இருப்பாங்களா என்ன?”

நான் கேட்டபடி எந்த வீடென்று தெரியாமல் நின்றேன். ராத்திரி ஏழரைக்கே எல்லா வீடுகளிலும் கதவடைத்திருந்தன. தெருவில் அலைந்து திரிந்த சோனியான நாய்கள் உக்கிரமாகக் குரைக்கத்

தொடங்கின. ஸ்கூட்டரைப் பார்த்துத்தான் அதிக பட்சம் குரைப்பு இருந்தது தெரிந்தது.

நிருபர் கையில் எப்போதும் சுமந்து போகும் லெதர் பையை அச்சுறுத்தும்படியாக வீசி ஓஓவென்று முழங்க, நாலு கால் பாய்ச்சலில் அவை ஓடி மறைந்தன.

"லெதர் பையைப் பார்த்தாலே பயம் அதுங்களுக்கு."

நிருபர் பெருமையாகச் சொன்னார். உள்ளே என்ன வச்சிருக்கீங்க என்று கேட்க நினைத்தேன். வேண்டாம். அதற்குள் பிரதமர் படம் இருப்பதாகச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. நான் என்னை அறியாமல் ஏதாவது எமர்ஜென்சி எதிர்ப்பாகச் சொல்லி வைப்பேன். வம்பே வேண்டாம். வாய்க்குப் பூட்டுப் போட்டேன்.

நாங்கள் நின்ற வீட்டு வாசல்களில் ஒன்றில் மட்டும் மாடத்தில் சிலுவை வடிவத்தில் கலர் பல்ப் மின்னி மின்னி அணைந்து கொண்டிருந்தது. இது ஜெபர்சன் வாத்தியார் வீடாக இருக்கலாம்.

ஒரு வாரமாக அவர் கண்ணில் படாமல் இங்கேதான் ஏதோ வேலை மும்முரமாக இருக்கிறார்போல. கதவைத் தட்டினேன். யாரும் திறக்கவில்லை. உள்ளே இருந்து சத்தம் கூட வரவில்லை.

"யாரும் இங்கே இல்லை, அடுத்த வீட்டுக்கு போகலாம்."

நிருபர் சொன்னார். ஒரு சாயலுக்கு, ராப்பிச்சைக்காரர்களின் பேச்சுபோல இது இருந்தது.

அந்த வினாடியில் கதவு திறக்க, மெல்லிய சிடுசிடுப்போடு ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

"என்னங்க வேணும்?"

ஜெபர்சன் வாத்தியாரைப் பார்க்கணும் என்று சவுண்ட் சர்வீஸ் குரலில் சொன்னார் நிருபர்.

“அவரை இப்போ பார்க்க முடியாது. மேலுக்கு ரொம்ப முடியலே” என்றாள் அந்த மத்திய வயதுப் பெண்.

“நீங்க யாரு?” கேட்டபடி வந்ததும் பெண்தான். இளம் வயதுதான்.

“நான் பேங்கிலே வேலையா இருக்கேன். போத்தின்னு பேரு...” சொல்லி முடிப்பதற்குள், “ஓ போத்தி சாரோ, வரூ, வரூ. ஜெப்பேட்டனு வல்ய சூக்கேடா” என்று மலையாளத்தில் வரவேற்பு. கூடவே கவலை தரும் செய்தி.

சூக்கேடு என்றால் என்ன என்று ரகசியமான அடுத்த தெருவுக்குக் கேட்கும் குரலில் நிருபர் விசாரித்தார். சுகக் கேடு. உடம்பு சரியில்லை. அந்தப் பெண் கவலையோடு சொன்னாள்.

“நீங்க?” நான் கேட்டேன்.

“ஆயாள ஜெப்பேட்டன்னு வேறெ ஆர் விளிக்கும்?” அவள் திரும்பக் கேட்டாள்.

ஆமாம், ஜெபர்சன் மனைவிதான் அவள்.

“காம்ரேட் உள்ளே இருக்காரா?”

நான் கேட்க, வாத்தியார் மனைவி அவசரமாகத் தன் வாயில் கை வைத்து பேசாதே என்று சைகை காட்டினாள்.

“ஏங்க, ஏதாவது தொத்துநோயா வந்திருக்கா?”

நிருபர் அதிர்ச்சியோடு ஒரு அடி பின்னால் வைத்தார்.

“அதெல்லாம் இல்லே, இந்த நோய்க்கு டாக்டர் மருந்து கொடுத்து சரியாக மாசக் கணக்குலே ஆகும். நாட்டு வைத்தியம்தான் செஞ்சுட்டிருக்கோம். சீக்கிரம் குணமாயிடும்.”

அவள் சொல்ல, ஜெபர்சனுக்கு என்னதான் வியாதி என்று அறிந்துகொள்ள ஆர்வம் அதிகமாகிக்கொண்டே போனது. அது வைசூரிபோல இருந்தால்? மனம் விசாரித்தது. இருக்க முடியாது.

தேசிய அளவில் எமர்ஜென்சி வருவதற்கு நான்கு வருஷம் முன்பே இந்தியாவில் இருந்து வைசூரி நோய் ஒழிந்து போய்விட்டது. எமர்ஜென்சி வந்த பிறகு வேற தொற்றுநோய் எதுவும் புதியதாக வரவில்லை.

ஏதோ ஒன்று, ஓடியாடித் திரிந்து கொண்டிருந்த ஜெபர்சனை வீட்டுப் படி கடந்து தெருவில் இறங்க விடாமல் முடக்கிப் போட்டிருக்கிறது. இந்த வீட்டுக்குள் இருளில் எங்கேயோ அவர் வியாதியோடு படுத்திருக்கிறார். வீட்டார் ஏதோ சொல்ல முடியாத ரகசியத்தை பத்திரமாகப் பாதுகாக்கிறார்கள். அவரை யாருடைய கண்ணிலும் படாமல் மறைத்து வைத்ததுபோல.

“காம்ரேட்...”

நான் அடுத்து மறுபடியும் எடுக்க, அந்த வார்த்தையே சொல்லக் கூடாதாம். ஜெபர்சன் மனைவி கண்டிப்பாகச் சொன்னாள்.

“சகா, தோழர், எதுவும் இந்தப் படி கடந்து உள்ளே வரலாகாது. வைத்தியர் கண்டிப்பா என்கிட்டே சொல்லிட்டுப் போயிருக்கார். அதை கடைப்பிடிக்கலேன்னா, ரொம்ப கஷ்டமாகி தலையை விட்டு இறங்கி முகத்திலே எல்லாம்...”

அவள் சட்டென்று நிறுத்தினாள். ஏதோ தகவலை அதிகமாகத் தெரியப்படுத்திய கவலை முகத்தில்.

உள்பக்கமாகச் சார்த்தியிருந்த கதவின் பின்னால் இருந்து யாரோ பலகீனமான குரலில் அலோ அலோ என்று கூப்பிட்ட மாதிரி கேட்டது.

ஜெபர்சன்தான். உள்ளே வாங்க என்று அதேபோல் சத்தமே இல்லாமல் அவர் அழைத்தார். நானும் நிருபரும் உள்ளே போகத் தயாராகும்போது அந்தம்மா நிருபரைக் காட்டி “இவர் இங்கேயே இருக்கட்டுமே, கண்டனி வாத்தியார்தானே, நானும் டீச்சர்தான். பேசிட்டிருக்கோம். நீங்க போய்ப் பார்த்துட்டு சுருக்கா திரும்பிடுங்க” என்றாள்.

“பரவாயில்லே, அவரும் வரட்டும்” என்றார் வாத்தியார். கால் கழுவி நாங்கள் உள்ளறைக்குப் போனோம்.

சீக்காளி படுத்திருக்கும் வாடை மூக்கில் குத்த உள்ளே கும்மிருட்டாக இருந்தது.

“வைத்தியர் சொல்லியிருக்காரு. வெளிச்சம் ஆகாதாம். அதான் இருட்டிலேயே படுத்திருக்காரு.”

ஜெபர்சன் வாத்தியார் மனைவி சொல்லியபடி சுவரில் தடவி சுவிட்சைப் போட ஸீரோ வாட்ஸ் பல்ப் உயிர் பெற்று இருட்டுக்கு அடிக்கோடு போட்டது.

கட்டிலில் பழந்துணிபோல சுருண்டு கிடந்தார் ஜெபர்சன் வாத்தியார். அவர் இடது கன்னம் முழுக்கக் கொப்புளம். மேல் உதட்டிலும் அதுதான். என்ன வியாதி என்று தெரியாமல் அவரைப் பார்க்க, அவர் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்தார். தலையில் கட்டியிருந்த சிவப்புத் துணித் தலைப்பாகையை சரியாக்கிக் கொண்டார்.

“என்ன பார்க்கறீங்க? இது அக்கின்னு சொல்வாங்க. இங்கிலீஷ்லே ஹெர்பீஸ்னு பேர். இந்த வயசுலே வர்றது அபூர்வம். வந்திருக்கு” என்றார் ஜெபர்சன்.

நினைவு வந்துவிட்டது, ஆரம்பப் பள்ளியில் படித்தபோது எதிர்வீட்டு ராகவனுக்கு இப்படி வந்து ஒரு மாதம் பள்ளிக்கூடம் வராமல் கிடந்தான். குலாளர் தெருவிலிருந்து கண்ணப்ப வேளார் தினம் களிமண் எடுத்து வந்து சுத்தப்படுத்தி ராகவனின் கன்னம் எல்லாம் தடவிக் காய்ந்ததும் இதமான சூட்டோடு வைத்த தண்ணீர் ஊற்றிக் கழுவி விடுவார். அவர் தினசரி புதுசாகக் கொண்டுவந்த களிமண் சட்டியில்தான் ராகவன் தயிர்சாதம் சாப்பிடுவான். சாப்பிட்டு முடித்ததும், களிமண்ணில் தகடு மாதிரித் தட்டி அதில் எதையோ கீறி ராகவனின் தலையில் வைத்துக் கட்டிவிட்டுப் போவார் வேளார். அது சிங்கப்படம் என்றும் தலையில் சிங்கம் வைத்துக்கொண்டால் சீக்கிரம் அக்கி குணமாகிவிடும் என்றும் ராகவனின் அம்மா சொன்னாள்.

அது தொற்றுநோய் இல்லாமல் இருந்தாலும் கொப்புளம் உடைந்து சீழும் ரத்தமும் வெளியேறலாம் என்பதால் ராகவன் வீட்டுக்குப் போக

எங்கள் எல்லோருடைய வீடுகளிலும் தடை விதிக்கப்பட்டிருந்தது. என்றாலும் அங்கே எட்டிப் பார்த்துவிட்டுத்தான் விளையாடப் போவோம்.

அதற்கு அப்புறம் யாருக்கும் அக்கி வந்ததாக நினைவு இல்லை. அந்த வியாதி தவிர வேற எதற்கும் கண்ணப்ப வேளார் மருத்துவம் பார்த்ததாகவும் ஞாபகம் இல்லை.

கண்ணப்ப வேளார் வைத்தியம் பார்க்கிறாரா என்று ஜெபர்சனைக் கேட்டேன். நான் கண்ணப்ப வேளாரைப் பார்த்து இருபது வருடம் இருக்கும். அவருக்கு அப்போதே எழுபது சொச்சம் வயது.

"இவரும் வேளார்தான். நம்ம சிங்கம்புலி வேளார்" என்றாள் ஜெபர்சன் வாத்தியார் மனைவி. ஆமாம், இரங்கல் கூட்டப் புகழ் சிங்கம்புலிதான்.

"அவரா, கண்ணப்பப் பெரிசுக்கு கடைசித் தம்பி" என்று கூடுதல் தகவல் கொடுத்தார் என் பின்னால் நின்ற நிருபர். "உங்களுக்குத்தான் தெரியுமே, கொஞ்சம் இப்படி", நெற்றிப்பொட்டில் விரலைச் சுழற்றி அபிநயம் பிடித்தார்.

"அதுனாலே என்ன, உடம்பு சரியானா போதும்' அவரை அடக்கினேன். காவியோ சிவப்போ, மற்றவர்கள் வாயைத் திறக்கக்கூடத் தயங்கும் சூழ்நிலையில் அபத்தமாகவாவது குரல் எழுப்புகிற எல்லோரும் வாழட்டும்.

ஜெபர்சன் சாப்பிடுவது பத்தியமாக பருப்பும் சோறும்தானாம். தினசரி வேளார் மண்பாண்டம் புதிதாகக் கொண்டுவந்து அதில்தான் ஆகாரமாம். களிமண் பூசிக் காயவைத்து முகம் கழுவுதலும் உண்டாம். சரி, சிங்கப் படம்?

வாத்தியார் தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்க்க, தலையில் துணி வைத்து பேண்டேஜ்போல கட்டியிருந்ததற்கு நடுவே சுட்டிக் காட்டினார். மங்கிய ஸீரோ வாட்ஸ் பல்ப் வெளிச்சத்தில் சரியாகத் தெரியாமல் நின்றேன். ஜெபர்சன் படுக்கைப் பக்கம் இருந்து டார்ச் விளக்கை எடுத்துக் கொடுத்தார்.

டார்ச் வெளிச்சத்தில் பார்க்க, ஏதோ பத்திரிகையில் வெளியாகிக் கத்தரித்து எடுத்து அட்டையில் ஒட்டி வைத்த பிரதமரின் பழைய கார்ட்டூன் படம். மூக்கு ஏகமாக நீண்ட படம் அது. எமர்ஜென்சி காலத்துக்கு முந்தியது. இப்போது அப்படி யாராவது கார்ட்டூனிஸ்ட் வரைந்தால், அவருடைய மூக்கும் முகமும் காணாமல் போயிருக்கும். வரைந்த பத்திரிகையும் அடுத்த இதழ் வெளிவந்திருக்காது.

"சிங்கப் படம் எழுதிக் காத்திருக்கறதை விட, மகாராஜா, மகாராணி இப்படிப் படம் வச்சா இன்னும் விரசா குணமாயிடும்னார் வேளார்."

ஜெபர்சன் மனைவி அழுத்தந்திருத்தமாகக் கூறினாள். அதே அழுத்தத்தோடுதான் தோழர் தலையில் பிரதமர் படத்தைக் கட்டி வைத்திருக்கிறார் அவர்.

"போன வாரம் ரொம்ப உக்கிரமா இருந்துச்சு, கொப்புளம் கிளம்பி வரவர ஒரே வலி, எரிச்சல். இப்போ பரவாயில்லே" என்றார் ஜெபர்சன்.

"ஆமா, வேளார் சொல்லிட்டார், வீட்டுலே அந்நியர் படம் எதுவும் மாட்டக்கூடாது. சிவப்பே அண்டக்கூடாது. சிவப்புத் துண்டு, பேச்சு, புத்தகம்னு எதுவும் இருக்கக் கூடாது. உடம்பு சரியானதும் திரும்ப எடுத்து வச்சுக்குங்க அதெல்லாம்னுட்டார்" என்றாள் ஜெபர்சன் மனைவி.

லெனின், ஸ்டாலின் படங்கள் படுக்கைக்குக் கீழே கழற்றி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். வீட்டுக்குள் யாராவது வந்தால் சிவப்புச் சிந்தனையோ பேச்சோ இல்லாமல் அந்தம்மா கவனித்துக் கொண்டதும் நினைவு வந்தது. தோழர் என்று அழைக்கக் கூடத் தடை.

சரி, புத்தகம் எல்லாம் எங்கே?

அடுத்த வீட்டில் வச்சிருக்கு.

"ஏதோ இவ நம்பறா கண்ட கருமாந்திரத்தையும். சரி, ஆகறபடி ஆகட்டும்னு நான் பாட்டுக்கு படுத்துட்டேன். புரட்சிக்காரன் எதிர்ப்படுகிற தடை எல்லாம் நிரந்தரம் இல்லே, அதெல்லாம் புரட்சியைத் தூண்டும் காரணி. வரும்போது புரியும், தடை இல்லே, மாற்றம்தான் நிரந்தரம்னு."

ஜெபர்சன் வாத்தியார் ஏதோ பேசிக் கொண்டிருக்க, அவர் வாயை மூடினாள் மனைவி.

“நீங்க நம்பலேன்னா என்ன, குணம் தெரியுது இல்லே?”

“அது மண்பாண்டத்துலே சமைச்சு சாப்பிடறதாலே. சுத்தமான களிமண்ணைப் பத்துப் போட்டுக்கறதாலே.”

ஜெபர்சன் மெல்லிய குரலில் சொல்லியபடியே நித்திரை போய்விட்டார்.

“கிளம்பலாமா?” என்றார் நிருபர். ஆரஞ்சுப் பழங்களும் ஆப்பிள் பழங்களும் வாங்கி வந்திருக்கலாம் என்று தோன்றியது. இன்னும் இரண்டு நாளில் அடுத்து ஒருதடவை வரும்போது வாங்கி வரலாம் என்று தீர்மானம்.

கிளம்பிய நேரத்தில்தான் கஃப்கா நினைவு வந்தார். ஜெபர்சன் வாத்தியார் மனைவிக்கு கஃப்கா கதைகள் தெரிந்திருக்காது. அக்கி வந்து இந்திரா படம் தொங்கவிட்டு சிகிச்சை அளிக்கும் மும்முரத்தில், தெரிந்திருந்தாலும், நினைவு இருக்காது அவருக்கு. என்றாலும், கேட்டுப் பார்க்கலாம்.

கேட்டேன். கஃப்காவும் அடுத்த வீட்டுக்குத்தான் குடி பெயர்ந்திருந்தார்.

இருங்க, வந்துடறேன் என்று போனாள். ஐந்து நிமிடத்தில் அங்கேயிருந்து வயதான ஒரு ஆச்சியோடு திரும்ப வந்தார். ஆச்சி கையில் ஆச்சரியகரமாக கஃப்கா.

வணக்கம் சொன்னேன். நிருபருக்கு ஏற்கெனவே அறிமுகமானவராம். அவருக்கு இந்திரா காந்தி, சஞ்சய் காந்தியைக் கூட பழக்கம்தான்.

“பெரியாச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஹெட்மிஸ்ட்ரஸ் ஆக இருந்து ரிடையர் ஆனாங்க, அந்தக்கால எம்.ஏ, எல்.டி.”

நிருபர் சொன்னார். வாய் பிளந்து நின்றேன்.

“இந்தப் புத்தகம் நல்லாத்தான் இருக்கு. ரெண்டே நாள்லே படிச்சுட்டேன். ஆனா ஒண்ணு. பூச்சியா மாறின மனுஷன் அப்படியே

சாகறதா முடிச்சிருக்கக் கூடாது. ஆண்டவனை, அவங்களுக்கு ஏசு நாதரா, சரி அவரை சதா பிரார்த்தனை செஞ்சு ஒரு அற்புதம் நடந்து அவன் மனுஷனா மறுபடியும் மாறினதா முடிச்சிருந்தா, நம்பிக்கையை சொல்றதா இருக்கும். அதுதானே நல்ல கதை? செத்து என்ன பிரயோஜனம்?"

"அற்புதம் எல்லாம் நடந்தா நல்லா இருக்கும்" என்றேன் நான்.

"நடக்காம என்ன, நம்ம நாயர் வீட்டுலே தினம் சாயந்திரம் ஆறரை மணிக்கு அவர் பெட்டியிலே வச்சு வளர்க்கற தேனீ எல்லாம் வெளியே பறந்து வந்து இந்திரா காந்தி படத்துலே உக்காந்து றெக்கையை மேலே உசத்தி சத்தம் போட்டு மரியாதை செஞ்சுட்டு திரும்பிப் போகுதே. அது மாதிரி அங்கேயிங்கே நடந்துக்கிட்டுத்தான் இருக்கு. நம்பினா வருவது நல்லதாச்சு."

நிருபர் வேட்டியைத் திருத்திக் கட்டியபடி சொன்னார். அடுத்து கேளு நாயர் வீட்டுத் தேனிக்கள் பற்றி வேறெங்காவது அவர் சொல்லும்போது அவை இந்திரா படத்தில் உட்கார்ந்து இருபது அம்சத் திட்டப் பாடல் இசைப்பதாக அந்தச் செய்தி இன்னும் கொஞ்சம் வளர்ந்திருக்கும்.

நான் பெரியாச்சிக்கு நன்றி சொல்லி புத்தகத்தோடு வெளியே வந்தேன். அடுத்து கஃப்கா நினைவு தினத்தில் கண்ணம்மை ஆச்சியைப் பேசச் சொல்லி, கூடவே மெடமார்ஃபசிஸ் கதைக்கு புது வெர்ஷன் எழுதி நான் படித்து, சிங்கம்புலியை 'மகான் கஃப்காவின் பெயர் சொல்லுவோம்' பாடச் செய்யலாம். கஃப்கா படிக்காத ஜெபர்சன் தலைமை வகிக்கட்டும். எமர்ஜென்சியில் கஃப்காவைக் கொண்டாடாவிட்டால் நான் கரப்பாகிவிடுவேன்.

அத்தியாயம் 16

# அக்டோபர் 1976

முத்துகிட்டு பெயரைப் போலவே விநோதமான பேர்வழி. விவேகானந்தா ஆரம்பப் பள்ளியில் என் பெஞ்ச்மேட்.

ஸ்டானிஸ்லாஸ் வாத்தியார் ‘ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்’ என்று ராகம் போட்டு தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தபோதே, பசிக்குது என்று தொப்பையைத் தடவியபடி கிளம்பி விடுவான். பள்ளிக்கூடத்துக்கு மேற்கே, சந்தைப்பேட்டையில் ஆரம்பித்து, சிவன்கோயில் வடக்கு வீதிக்குச் சரசரவென்று இறங்கும் மஜீத் தெருவில்தான் வீடு.

முத்துகிட்டு ஐந்தாம் வகுப்பு தாண்டவில்லை என்பதால் அவனை மறந்துதான் போனேன். ஒரு லோன்மேளாவில் அவனை மறுபடி சந்தித்தேன்.

இரண்டு வாரம் முன்பு ஒரு மினி லோன்மேளா நடத்தவேண்டிய சூழ்நிலை.

ஆமாம், லோன்மேளா என்ற கடன் வழங்கு விழாவிலும் மினி, ரெகுலர் சைஸ், லார்ஜ் என்று பிரிவுகள் உண்டு. ஒரு சௌகரியத்துக்காக நாங்கள் பேங்க்காரர்கள் ஏற்படுத்திக்கொண்டது அதெல்லாம்.

ஐநூறு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு ஒரே நாளில் வழங்கினால், அது மாபெரும் மேளா. முன்னூறுக்குக் கீழ், நூறுக்கு

மேலே இருந்தால் பெரும் விழா, நூறு வரை என்றால் குறும் விழாவான மினி மேளா.

மாபெரும் விழாவுக்கு மத்திய அமைச்சர் வர, பெரும் விழாவில் எம்.பி வழங்க, மினி மேளா மேனேஜரோ, ஊர்ப் பிரமுகர்களான ரிடையர்ட் கலெக்டர், கஸ்பா தாசில்தார் இப்படியானவர்கள் தலைமை ஏற்கவோ நடைபெறுவது வாடிக்கை.

இந்த மினி மேளாதான் போன வெள்ளியன்று பேங்க் கட்டடத்திலேயே நடந்தது.

மினி லோன்மேளாவில் மொத்தம் பத்து கடனாளர்கள். எட்டு பெண்களுக்கு தக்ளி, ராட்டை வைத்து நூல் நூற்க ஆளுக்கு ஆயிரம் ரூபாய். இன்னும் ஒருத்தர் சுபாஷ் பஜாரில் கடை வைத்திருக்கிறார்.

அவர் ஒண்டிப்பிலி துரைராஜு நாயுடு. காலை முதல் ராத்திரி வரை இவர் கடையில் கிடைக்கும் சர்பத் பிரசித்தமானது. ஊற வைத்த சப்ஜா விதை, கடல்பாசி, வேகவைத்த சேமியா, கடையில் ஊர்கிற எறும்பு, தெருவோடு போகிற யானை என்று சகலமானதையும் போட்டு மேலே ஒரிஜினல் ஒண்டிப்பிலி சர்பத் ஊற்றி அவர் ‘அடித்துக் கொடுக்கும்’ கலக்கி சர்பத் அதுவும் நைட் எடிஷன், ஊரில் மக்கள்தொகைப் பெருக்கத்தை அதிகரிக்கத் தூண்டுதலாகச் செயல்படுவதாக ஒரு பொதுவான புகார் உண்டு.

என்றாலும் அந்த ருசிக்காக புகாரைப் புறம் தள்ளி ஊர் மக்கள் மகத்தான ஆதரவு தந்து கொண்டிருக்கிறார்கள்.

போட்டிக் கடை போட்டு நாகர்கோவிலில் இருந்து வந்த ஒரு சைவர் சரஸபெரில்லா என்ற பெயர் வரும் சர்பத்தைக் கலக்கிக் கொடுக்க, அந்த வாசனையே பிடிக்காத ஊர்க்காரர்கள், ‘அதென்ன சரசத்துக்கு வரீயளான்னு யார் மாதிரியோ லச்சையில்லாம கூப்பிடறது? நம்ம நாயுடு போடற ஒண்டிப்பிலிதான் சர்பத்து. இவன் கடையிலே குடிச்சா முன்னாடி கட்டும், பின்னாடி புடுங்கி விடும்’ என்று பெரும்பான்மையாகக் கருத்துத் தெரிவித்து போட்டியைக் கவிழ்த்தார்கள்.

இந்த ப்ராடக்ட் யுத்தத்துக்கு நாயுடுதான் ஸ்பான்சர் என்று பரவலான கருத்து நிலவியது.

இதில் முக்கிய சேர்மானத்தின் சரியான பெயர் ஒண்டிப்பிலி சர்பத். விஷயம் தெரியாத யாராவது ஒண்டிப்புலி சர்பத் என்று ஏதாவது பேசும்போது சொல்லிவிட்டால் போதும், நாயுடு கண் சிவக்க ரௌத்ர பீமனாக கோபத்தைக் காட்டி, சொன்னவரை நார்நாராகக் கிழித்து விடுவார்.

'அது புலி இல்லே. பிலி. நூறு புலி வலிமை அதுக்கு உண்டு. ஒண்டிப்பிலி சர்பத் தயார் செய்து அனுப்பறது சாதாரண குடும்பம் இல்லே. சேதுபதி ராஜா, மருது ராஜா காலத்துலே இருந்தே அரண்மனைக்கு சர்பத் கொண்டுபோய் தினம் கொடுத்து வந்தவங்க. வெள்ளைக்காரன் எவ்வளவோ கெஞ்சியும் அவனுக்கு காளையார்பட்டியிலே கொண்டுபோய் தரலையே. ஒண்டிப்பிலி சர்பத்து செய்யற ரகசியம் பிள்ளைத்தாயம்மன் மேலே சத்தியம் செஞ்சு ரகசியமா வச்சு ஒரே குடும்பத்துக்குள்ளேதான் தலைமுறை தலைமுறையா வருது. அந்த மகா எசன்ஸிலே இருந்துதான் நமக்கு புட்டியிலே அடைச்சு வர்ற சர்பத் அனுப்பறாங்க. நெருக்கமானவங்க அதுனாலே எனக்கு மட்டும் ஸ்பெஷல் சரக்கு வரும். மகா எசன்ஸ்க்கு அடுத்த லெவல்லே இருக்கற எசன்ஸ் அது. ஓனரே போத்தல்லே போட்டுத் தருவார். அதுலே ஒரு பாட்டில் எசன்ஸ்லே இருந்து தினசரி உபயோகத்துக்கு ஐம்பது பாட்டில் சர்பத் செய்யலாம். செய்முறை சொல்லிக் கொடுத்திருக்கார். நான் ஆகக் கொஞ்சமாத்தான் லாபம் வச்சு நம்ம மகாஜனங்களுக்கு சர்பத் அடிச்சு விக்கறேன். சேர்மானச் செலவு வேற. ஒரு கிளாஸ் ஐம்பது பைசாவுக்கு இந்த ஜில்லாவிலேயே வேறே எங்கேயும் கிடைக்காது ஒண்டிப்பிலி ஸ்பெஷல் சர்பத்.'

அவர் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட சமூகநல ஊழியர் ரோலுக்காக எட்டுமுழ வேட்டி, மேலே கிட்டதட்ட கெண்டைக்கால் வரை பாதிரியார் அங்கிபோல் வழியும் சட்டை என்றுதான் சைக்கிளில் சுற்றி வருவார். லோன் கேட்டு வந்தது முதல் அவர் கதர் உடுக்க ஆரம்பித்தார். ஐந்து

நிமிடத்துக்கு ஒரு தடவை ஜெய்ஹிந்த் என்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஸ்டைலில் கட்டைக் குரலில் சொல்ல ஆரம்பித்து இருமிக் கொண்டிருப்பார்.

கடைசி நிமிட சோதனையாக கடன் ஆவணங்களை - ஒரு சுக்கும் இல்லை - சரிபார்த்தேன். ஒரு அச்சடித்த அப்ளிகேஷன் ஃபாரத்தில் இரண்டு கையெழுத்து, பிசினஸ் இம்ப்ரூவ்மெண்ட் என்று யாரோ கடன் வேண்டியிருப்பதன் காரணமாகக் கிறுக்கிக்கொடுத்தது. போதும், சரிதான்.

இந்திரா ஒண்டிப்பிலி ஸ்டால். கடைக்கு எப்போது பெயர் வைத்தார் தெரியவில்லை. கடையை விருத்தி செய்து பீரோ, பீங்கான், கிளாஸ் வாங்க, ஒண்டிப்புலி - ஆமாம், ஒண்டிப்புலிதான் - சர்பத் கொள்முதல் செய்ய என்று இரண்டாயிரம் ரூபாய் கடன் தொகையைச் செலவழிக்கப் போகும் மார்க்கம் பற்றிச் சுருக்கமாக அப்ளிகேஷன் இறுதியில் சொந்தமாக அல்லது வேற யாரோ சொல்லி, எழுதிய குறிப்பு:

'வாங்கியாக இல்லாமல் வழங்கியாக நம் வங்கி திகழட்டும். பாரத அன்னையின் இருபது அம்சத் திட்டக் கடனுதவியை இந்திரா ஒண்டிப்புலி சர்பத் ஸ்டாலுக்கு வாரி வழங்கக் கோருகிறேன். ஜெய்ஹிந்த்'.

"அண்ணே, அது என்ன ஒண்டிப்புலி சர்பத்? நீங்க ஒண்டிப்பிலி ஆச்சே. பிராண்டை மாத்திட்டீங்களா?" நாயுடுவைச் சீண்டிப் பார்த்தேன்.

தேள் கொட்டிய மாதிரி திடுக்கிட்டு எழுந்தவர், "ஐயோ, அப்படியா எழுதிட்டேன்? வேணாம், இதை வச்சுக்கிட்டு கடனே வேணாம். ஒண்டிப்பிலின்னு இன்னொரு மனு எழுதிக் கொடுங்க தம்பி. கையெழுத்து போட்டுடறேன். உங்களுக்கும் மனசு நிம்மதி, எனக்கும்தான்."

அவர் மிகையாக வருத்தப்பட்டு நெற்றியில் பட்டையாகப் போட்டிருந்த நாமத்தின் நடுவே நரம்பு துடிக்க முறையிட்டார். பரவாயில்லே, மாத்திக்கலாம் இங்கேயே. நான் அடித்து எழுதியதுக்குக் கீழே மனசே இல்லாமல் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். கையெழுத்து இல்லை அது. பெயரை கார்ட்டூன் வரைந்தது.

“என்னண்ணே, துரைராஜு நாடுன்னு எழுதியிருக்கீங்க? தமிழ்நாடு தெரியும். இதென்ன புதுசா?”

கேஷியர் கருப்பையா மனுவை வாங்கிப் பார்த்துவிட்டுக் கேட்க, நாயுடு விக்கி அழும் பதத்திற்கே போய்விட்டார்.

“கையெழுத்துதானே, அவரோட பெயர், அவரோட கை. என்ன போட்டாலும் கையெழுத்துதான். தொடர்ந்து அப்படியே போடணும். அவ்வளவுதான்.”

ரவீந்திரன் சொன்னபடி மனுவை மற்ற பூர்த்தியான அப்ளிகேஷன்கள், புரோநோட்டுகளோடு வைத்தார்.

கடைசி லோன் ஃபாரத்தில்தான் கையெழுத்து இல்லை. வீட்டில் செக்கு வைத்து ஆட்டிய நல்லெண்ணெய் சிறு அளவுகளில் நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு விற்கவும், போத்தலில் அடைத்து மளிகைக் கடைகள் மூலம் வியாபாரம் செய்யவும், மொத்தமாக விளக்கெண்ணெய் வாங்கி மூலிகை போட்டுப் பதப்படுத்தி மிகச்சிறு போத்தல்களில் ஊற்றி விற்பதற்காகவும் இந்திரா எண்டர்ப்ரைசஸுக்கு நடப்புக் கணக்காக மூவாயிரம் ரூபாய் கடன்.

கேஷ் கிரடிட் என்ற அந்த நடப்புக் கணக்குக்காக, நல்லெண்ணெய் பரணிகளையும் விளக்கெண்ணெய் அடைத்து வரும் பீப்பாய்களையும் பேங்க் பூட்டுப் போட்ட கோடவுனில் வைத்து அவ்வப்போது வசூல் தொகை செலுத்தி ரிலீஸ் செய்கிற ஏற்பாடு. கடன் பெறுகிறவர் முத்துகிருஷ்ணன். மஜீத் தெரு.

“யாருப்பா இது? லோன் பார்ட்டியை நான் பார்த்ததே இல்லையே? வெளக்கெண்ணெய் விக்கறதுக்கு என்ன லோன்?”

நான் கேட்டபோது, படி ஏறிக் கொண்டிருந்த பேர்வழியைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுப் போனேன். முத்துகிட்டு. இருபது வருஷத்தில் உயரமும் கனமும் கூடியிருந்ததே அல்லாமல் அவனுக்கு அன்று கண்ட அதே முகம்தான். கண்ணில் வயதுக்குப் பொருந்தாத குழந்தை விஷமத்தனம் தெரிந்தது.

முத்துகிட்டு சதுரங்களும், முக்கோணங்களும், செவ்வகங்களுமாக ஒன்றோடு ஒன்று கோர்த்து செய்தித்தாளால் ஆன ஒரு சிக்கலான காகிதச் சங்கிலியைக் கையில் பிடித்தபடி வந்து கொண்டிருந்தான்.

“கையெழுத்துல்லாம் போட முடியாதுன்னு சொல்லிடு. அப்புறம் யார் இதெல்லாம் செஞ்சு எடுத்துட்டு வர்றது?”

சத்தம் போட்டுக்கொண்டே உள்ளே வந்தவனை “டேய், முத்துகிட்டு, எப்படிடா இருக்கே?” என்று நான் கேட்க ஒரு வினாடி திகைத்து நின்றான். அவன் யாரோடு பேசிக்கொண்டு வருகிறான் என்று பார்த்தேன். யாருமே அவனோடு இல்லை.

“போத்தி, நீ இந்த பள்ளிக்கூடத்திலேதான் படிக்கிறியா?”

என்னைப் பார்த்ததும் கையில் சுமந்து வந்த காகிதச் சங்கிலிகளை தரையில் போட்டுவிட்டுப் பக்கத்தில் ஓடிவந்து கட்டிக்கொண்டான். அவன் தீராத குழந்தை வாடையோடு இருக்க நான் மீசையும் கண்ணாடியுமாக வியர்த்து நிற்கும் இருபத்தாறுக்காரனாக மாறிவிட்டிருக்கிறேன் என்று தோன்றியது.

“படிக்கலேடா. பேங்க். வேலை பார்க்கிறேன். நீ என்ன பண்ணிட்டிருக்கே?”

நான் கேட்க, அவன் உடனே தரையில் கிடந்த காகிதச் சங்கிலிகளைக் காட்டிச் சொன்னான்:

“இந்திரா காந்தி கனவிலே எஸ்.எஸ்.ரஜூலா கப்பல்லே வந்து சொல்லிட்டுப் போனாங்க. தினம் இப்படி செஞ்சு ஸ்கூல்லே கொண்டுபோய்க் கொடு. கணக்கு படிக்கிற பிள்ளைகளுக்கு ரெம்ப உதவியா இருக்கும்னு. அதான் செஞ்சிட்டிருக்கேன். இதை நீ வச்சுக்க. ஸ்கூலுக்கு வேற தரேன்.”

நான் அந்த முக்கோணங்களையும் அவற்றிலிருந்து நீளும் செவ்வகங்களையும் பார்க்க, பக்கத்தில் வந்து நின்ற மெசஞ்சர் ரத்தினம்,

“ஆள் கொஞ்சம் லூசு. சூதானமா நடந்துக்குங்க அவன் கிட்டே.”

கிசுகிசுத்துவிட்டு வாசலுக்குப் போனார். “வந்துட்டியா, உன்னைத்தான் தேடிட்டு இருந்தது” என்று அங்கே அவர் யாரையோ வரவேற்றார்.

“அண்ணே, நீயும் கையெழுத்து போடப் போறியா?”

முத்துகிட்டு விசாரித்தவரை அவனுடைய மூத்த சகோதரன் கோவிந்தன் என்று தெரியும். குடும்பத் தொழிலான எண்ணெய்ச் செக்கு வைத்து வியாபாரம். நல்ல வருமானம் என்று அவருடைய தொப்பையே சொன்னது. இவர் பெயர் இல்லையே முத்துகிருஷ்ணன். முத்துகிட்டுவின் முழுப்பெயரா?

சட்டென்று சுதாரித்துக் கொண்டேன். முத்துகிட்டுவை நாற்காலியில் உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு அவன் அண்ணன் கோவிந்தனை உள்ளே மேனேஜர் அறைக்குக் கூட்டிப் போனேன்.

“இந்த லோன் உங்க தம்பி பெயர்லே வாங்கறீங்களா?”

“ஆமா, அதான் சரியாப் பட்டுது. அவனையும் உக்கார வச்சு ஒரு வேலை பார்க்க வச்சதா இருக்கும். மீதி லோன் மாதிரி இல்லே தம்பி. நான் யோக்கியமா திருப்பிக் கட்டிடறேன். இந்த ஜில்லாவிலேயே இருபது அம்ச லோன் வாங்கி திருப்பிக் கட்டற ஒரே பார்ட்டி நானாத்தான் இருக்கும். கேஷ் கிரடிட் வேற. உங்க முழுக் கண்காணிப்பிலேதான் என் விளக்கெண்ணெய் வியாபாரமே நடக்கப் போகுது. நல்லா வரும்னு கண்டத்தூர் ஜோசியர் சொல்லியிருக்கார். அவர் சொல்லித்தான் பேரே வச்சது, ‘இந்திரா எண்டர்ப்ரைசஸ்’."

வழக்கமாக வைக்கிற பெயர்தானே? நான் பார்த்தது புரிந்தோ என்னமோ, அவர் மேலே பேசிக்கொண்டே போனார்:

“ஜோசியர் ஆரம்பத்திலே சொன்னார் விளக்கெண்ணெய் விற்பனை நிலையம்னு பெயர்லே வரணும். வேணுங்கப்பட்டவங்க பெயரை முன்னே பின்னே வச்சுக்கலாம். நாலு எழுத்து மட்டும்தான் அதுக்கு வரலாமாம். நான் யோசிச்சு பார்த்தேன். பாரத பிரதமர் பெயரை விளக்கெண்ணெய்க்கு முன்னே போட்டாலும் பிரச்சனை, பின்னாலே போட்டாலும் பிரச்சனை, சும்மா விட்டாலும் மொட்டடீர்னு இருக்கும்

விளக்கெண்ணெய் விற்பனை நிலையம். அதான் யோசிச்சு இந்திரா எண்டர்ப்ரைசஸ். கண்டத்தூர் ஜோசியர் இதே இருக்கட்டும்னுட்டார்."

அவர் பெயர்க்காரணம் சொல்ல நான் மெல்லச் சொன்னேன்:

"நல்லது அண்ணே. நல்ல பெயர்தான். நல்லா வரட்டும் பிசினஸ். ஒரு சின்ன விஷயம்... வீட்டுலே வேற யாரு இருக்காங்க, சொல்லுங்க. டாக்குமெண்டை அவங்க பெயர்லே போட்டுடலாம்."

"ஏன் அவங்க பெயர்லே போடணும்?"

அவர் குரலில் எரிச்சல் தெரிந்தது. மேனேஜர் எழுந்து நின்றார்.

"போத்தி, இதை அப்புறம் வச்சுக்கலாம். லோன் கொடுத்து முடிச்சுடட்டும். ரத்தினம், மாலை எங்கே?"

"சார், லோன் கொடுக்கறதுலேதான் சிக்கல்."

"என்ன சிக்கல்?"

மேனேஜருக்கும் எரிச்சல் தொற்றிக்கொண்டதுபோல.

"மனநிலை பாதிக்கப்பட்டவரோட கடன் ஒப்பந்தம் போட்டா செல்லுபடி ஆகாதே. நான் உங்களுக்கு சொல்லணுமா? இவர் தம்பி அதோ இருக்கார் பாருங்க."

மேனேஜர் பார்த்தார். வெளியே முத்துகிட்டு நாக்கைத் துருத்திக்கொண்டு ஒரு செலான் காகிதத்தைக் கூம்பாகச் சுருட்டிக் கொண்டிருந்தான்.

"கோவிந்தன், வீட்டுலே வேற யார் பெயர்லேயாவது இந்த லோன் மாத்திக்கலாமா? கல்லாவிலே வியாபாரம் எல்லாம் உங்க தம்பி பார்த்துக்கறதுலே ஆட்சேபணை இல்லே. ஆனா லோன் டாகுமெண்ட் வேணாம்."

நாங்கள் சொன்னதை கோவிந்தன் நல்லவேளையாகப் புரிந்துகொண்டார்.

"ஒண்ணும் பிரச்சனை இல்லை. வீட்டுலே அவங்க பெயர்லே வாங்கிக்கலாம்."

வெளியே நின்று கொண்டிருந்த அவருடைய வகை ஆள் யாரிடமோ சொல்லி கோவிந்தன் அவருடைய மனைவியைக் கூப்பிட்டு விட்டார்.

இதோ வந்துடுவாங்க என்று காத்திருப்பு நீண்டு போக, லோன்மேளா தொடங்கிவிட்டது.

நூல் நூற்க லோன் வாங்கிய பெண்களுக்கு பேங்க் சார்பில் காதி வஸ்திராலயத்தில் தக்ளியும் வாங்கி பரிசாக அளிக்கப்பட்டது. ஒரு தக்ளி பதினாலே பைசா. அதற்கு நான்கு இடத்தில் பில்லை சரிபார்த்து கையெழுத்துப் போட்டு ரசீது கொடுத்த எங்கள் நண்பர்களான காதி வஸ்திராலயத்து நிர்வாகி, அலுவலர்களும் வருகை புரிந்து லோன் கொடுத்தபோது கைதட்டி எங்களோடு காராபூந்தி சாப்பிட்டு காபி குடித்தார்கள்.

நூல் நூற்கப் போகும் அந்தப் பெண்களை நான் கேட்டேன்: "ஆயிரம் ரூபாயை வச்சுக்கிட்டு என்ன பண்ணுவீங்க?"

"நூல் நூத்து, சிட்டம் போட்டு, வேற பேங்கிலே இருபதம்ச லோன் போட்டு வாங்கி இருக்கற தறியிலே நெய்து, புடவைகளை குஜராத்துக்கு அனுப்பி, வித்து, லாபம் கண்டு, பங்கு பிரிச்சுப்போம்." எம்மாடி.

இந்திராவின் அதிர்ஷ்டம் இப்படி கிராமம், நகரம்தோறும் திரளும், அவர்மேல் நம்பிக்கை மிகுந்த கூட்டம். அவர்களை அணிதிரட்டி பூஸ்டர் ஷாட்டாக உபரியாக தொடர்ந்து பொதுக்கூட்டம், ரேடியோ, பத்திரிகை மூலமாக மேலதிக நம்பிக்கை அளிப்பது இதெல்லாம் வேறே எங்கெல்லாம் எப்படியோ, இங்கே மிகச் சரியாக நடக்கிறது.

இந்திரா காந்தி இந்தப் பெண்கள் எல்லோருக்கும் ஆதர்சமாகி இருந்தார் என்பது அவர் பெயரை கண்கள் பனிக்க இவர்கள் உச்சரித்துப் பேசுவதில் தெரிந்தது.

ஆறரை மணிக்கு விழா முடிந்து, நூற்கும் பெண்கள் போக நான்கு கைக்குட்டை டால்கம் பவுடர் வாசனையோடும், கண்மை ஓரமாக ஈஷியும் நாற்காலிகளுக்குக் கீழே கிடந்ததைக் குனிந்து எடுத்தேன். அதென்னமோ பெண்கள் கைக்குட்டைகளைத் தவறவிடத் தவறுவதே இல்லை.

சொற்பொழிவுகளை முடித்து மீதி லோனை எல்லாம் ஒவ்வொன்றாக ஒன்பது பேருக்கு மட்டும் கொடுக்கும்வரை முத்துகிட்டுவும் அவர் சகோதரரும் பின்னால் உட்கார்ந்திருந்தார்கள். முத்துகிட்டு சௌந்தரம்மாவிடம் பழைய நியூஸ்பேப்பர் நிறையக் கேட்டு வாங்கி சதுரமும், வட்டமும், முக்கோணமுமாக காகிதச் சங்கிலிகள் செய்து தள்ளிக் கொண்டிருந்தான்.

சாத்விகமான எமர்ஜென்சி காலத்துப் பத்திரிகைகளுக்கு மிகப் பெரிய பயன்பாடு அது.

கோவிந்தன் மனைவி சிரத்தை எடுத்து சிங்காரித்துக்கொண்டு சாயந்திரம் ஆறே முக்காலுக்கு வந்து சேர்ந்தாள். லோன் டாகுமெண்ட் போடலாமா என்று கேட்டபோது “போடுங்க, போடுங்க, அதுக்குத்தானே ஓடி வந்திருக்கேன்” என்று விட்டேத்தியாக பதில் சொன்னாள்.

“பெயர்?”

“சாலாச்சி.”

“விசாலாட்சிங்களா?”

“இதோ பாருங்க, இது என் பெயர். எது கரெக்டுன்னு எனக்கு தெரியுமா உங்களுக்கு தெரியுமா?”

“சாலாச்சி கோவிந்தன். சரியா?”

“அவர் கிட்டேதான் தனியா எண்ணெய் செக்கை அடமானம் பிடிக்கச் சொல்லிட்டீங்களே? இங்கேயும் எதுக்கு கோயிந்தமும் குந்தாணியும்?”

ஒரு வழியாக ஒரு மணி நேரம் எடுத்து அந்த அப்ளிகேஷனைப் பூர்த்தி செய்து கையெழுத்து வாங்கி, கடன் அளிப்பு அறிவிப்புக் கடிதத்தைக் கையில் கொடுத்தோம்.

“நாளைக் காலையிலே வந்தா அக்கவுண்ட் ஓப்பன் பண்ணிடலாம்.”

“நாளைக்கு ஒரு பாட்டில் விளக்கெண்ணெய் கொடுத்து அனுப்பறேன். இலவசமாத்தான். நீங்க சாப்பிடறீங்களோ, வீட்டுலே பிள்ளைங்களுக்குத்

தரீங்களோ, உடம்புக்கு நல்லது.”

சாலாச்சி போகும்போது சொல்லிப் போனாள். மேனேஜர் ஏற்கெனவே அதைச் சாப்பிட்ட மாதிரிதான் முகத்தை வைத்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் இந்திரா எண்டர்ப்ரைசஸ் கணக்கு திறக்கும் முன்னால் நான் முத்துகிட்டு சகோதரர்களின் வியாபார ஸ்தலத்தைப் பார்வையிட்டு வரவேண்டும் என மேனேஜர் விரட்டினார். ஆமாம், ஸ்தலம்தான்.

“எங்கே சார் போகணும்?”

“மஜீத் ரோடு.”

மஜீத் ரோட் பக்கம் சிவ ஸ்தலமாக கோயில்தான் இருக்கிறது. வியாபார ஸ்தலத்துக்கு எங்கே போக?

‘வாயிலே இருக்கு வார்த்தை போத்தி.’

காலையில் எட்டு மணிக்கே போய், லாம்ப்ரட்டா ஸ்கூட்டரில் இருந்தபடி சுற்றுமுற்றும் பார்க்க, எதிரே நாமம் பதித்த வீட்டுக் கதவு ஒருக்களித்துத் திறந்தது. முத்துகிட்டு வெளிப்பட்டு காகிதச் சங்கலிகளோடு அவசரமாக வெளியே போனான்.

அவனைப் பெயர் சொல்லி அழைப்பதற்குள் அவனுடைய அண்ணன் கோவிந்தன் பின்னாலேயே வந்து, கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினார்:

“ஒளுங்கா லட்சணமா உள்ளே உக்காந்து சோலி மயித்த புடுங்குடா. லண்டா லண்டான்னு ஊரு சுத்தறதெல்லாம் பொறவு வச்சுக்கலாம்.”

முத்துகிட்டு நின்று நாய், நரி, நந்தவனத்துக் கிளி எல்லாம் கோவிந்தனோடு கெட்ட செய்கை செய்யட்டும் என்று வைதான். ஆக்ரோஷமாக அவரைக் காகிதச் சங்கிலிகளால் தாக்கப் போனவன், என்னைப் பார்த்து பூசலை நிறுத்தி, சாத்விகமாகக் கேட்டான்:

“பள்ளிக்கூடம் போறியா போத்தி? பெல் அடிச்சாச்சா?”

நான் கால் ஊன்றியபடி ஸ்கூட்டரில் சும்மா இருக்க, ஹேண்டிலை இழுத்து அசைத்து, "போத்தி நீ ...த்தி" என்று கடைவாயில் எச்சில் வடியக் களிப்போடு கெட்ட வார்த்தை சொன்னான். கொஞ்சம் அசந்திருந்தால், இவனுக்கு மூவாயிரம் ரூபாய் கடன் கொடுத்திருப்போம்.

"போத்தி தம்பி வாங்க, நானே இன்னும் ஒரு அவர்லே வந்து கணக்கு திறந்திருப்பேனே... நீங்க எதுக்கு இவ்வளவு தூரம் வந்துக்கிட்டு?"

அண்ணன் அவசரமாக வரவேற்றார்.

இந்திரா எண்டர்ப்ரைசஸ் நிறுவனத்தைப் பார்வையிட பேங்கின் தூதுவனாக வந்திருக்கும் விவரம் தெரிவித்தேன். அப்ப உள்ளே வாங்க என்றார் சாவதானமாக.

என்னது, சுவரிலும் வாசலிலும் சின்னதும் பெரியதுமாக ஏகப்பட்ட நாமம் எழுதி, வாசலில் அவரைப் பந்தலும், ஓரமாக பழைய மரபெஞ்ச் ஓரத்தில் சுருட்டி வைத்த ஜமுக்காளம் தலகாணியுமாக, உள்ளே முட்டை ஆம்லெட் போடுகிற வாடையோடு திகழும் இந்த இடம்தான் இந்திரா எண்டர்ப்ரைசஸா? ஆம், அப்படித்தான்.

உள்ளே போக முன் அறை வாசலில் மாக்கோலம் போட்டு மாவிலைத் தோரணம். நீலமும் மஞ்சளுமாக நான்கு பக்கமும் நாமம் வரைந்து இந்திரா எண்டர்ப்ரைசஸ் என்று எழுதிய பலகை சுவரில். இதுதான் வியாபார ஸ்தலம்.

"இங்கே என்ன வியாபாரம் பண்ணுவீங்க?"

"அப்ளிகேஷன்லே கொடுத்திருக்கேனே, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய். சீக்கிரம் புத்துருக்கு நெய், டால்டா கூட விக்கற திட்டம் இருக்கு."

"அது சரிதான், கஸ்டமர் வந்தா எப்படி எங்கேயிருந்து எண்ணெய் தருவீங்க? கேஷ்கவுண்டர் எங்கே?"

"அதெல்லாம் வெள்ளைக்காரன் கடையிலே எண்ணெய் வித்தா வேண்டியது. நமக்கெதுக்கு?" கோவிந்தன் சீரியஸாக விசாரித்தார்.

“யாராவது எண்ணெய் வாங்க வந்தா இங்கே நின்னு ஏனத்தை கொடுப்பாங்க. நாங்க யாராச்சும் உள்ளே போய் ஊத்தி எடுத்திட்டு வருவோம். எண்ணெயைக் கொடுத்தா காசு, அதையும் உள்ளே போய் வச்சுட்டு பாக்கி சில்லறை வேணும்னா தருவோம்.”

“காசு கொடுத்ததுக்கு ரசீது?”

“அதெதுக்கு? நாம நாணயமானவங்க. ரசீதெல்லாம் கொடுக்கற வழக்கமில்லே எப்பவுமே.”

“இங்கே விளக்கெண்ணெய் எப்படி விப்பீக?”

“முத்துகிட்டு இங்கே ஓரமா உக்காந்துப்பான். குப்பி ஒண்ணு ஒரு ரூபான்னு கொடுப்பான். இந்த சிட்டையிலே வித்த விபரம் எழுதிப்பான். அம்புட்டுதான்.”

“அவர்தான் வெளியே போயிட்டிருக்காரே?”

“அவன் கிடக்கான் கோட்டிக்கார பிள்ளை. உக்காருடான்னா உக்காந்துட்டுப் போறான். ஏமிரா முட்டுகிட்டு, காது?”

முத்துகிட்டு போனவன் போனவன்தான். கோவிந்தன் மனைவி காலில் பெரிய சிலம்புகளோடு சத்தமெழுப்பி வந்து பெரிய சாவி இரண்டை அவரிடம் கொடுக்க, அதில் ஒன்றை என்னிடம் நீட்டினார் கோவிந்தன்.

“இந்தாங்க, இந்த கோடவுன் சாவி. ஆமா, உங்க கிட்டே ஒண்ணு இருக்கட்டும், என் கிட்டே ஒண்ணு.”

“ரெண்டு சாவியும் போட்டாத்தான் கோடவுன் கதவு திறக்கறதா செய்ய முடியாதா? தச்சு ஆசாரி எங்கே? கருமான் எங்கே?”

“போத்தி, விளையாடறீங்களா? அவங்க எல்லாம் ரெண்டு தலைமுறை முந்தி இருந்தவங்க. இப்போ வைகுந்தத்திலே பரமபதத்துலே உக்கார்ந்து சோபானப்படம் வச்சு விளையாடிட்டிருப்பாங்க.”

“வேற வழியே இல்லை. பேங்க்தான் முழுப் பொறுப்போடு இருக்கணும் உள்ளே வைக்கிற பொருளுக்கு. அந்த சாவியையும் கொடுத்திடுங்க.

நாங்களே ரெண்டும் வச்சுக்கறேன்” என்றேன். உடனே கொடுத்துவிட்டார்.

அது சரி, கோடவுன் எங்கே?

உக்கிராண அறையைக் காட்டினார்.

நூறு வருஷமாவது பழையதாக இருக்கும் பெரிய கதவு. நாலு நாமமும், ஓரமாக, றெக்கை கட்டிப் பறக்கும் கந்தர்வர்களுமாக மியூசியத்தில் வைக்கவேண்டிய கலைப்பொருள் அது.

“சாவி கொடுங்க போத்தி.”

அவர் கொடுத்ததில் ஒன்றை நானே கதவில் போட்டுத் திறக்க முயற்சி செய்ய, கந்தர்வர்கள் கெக்கெ என்று சிரித்தபடி பறந்தார்கள். கதவு திறக்கவே இல்லை.

கோவிந்தன் சாவியை வாங்கி, கதவுக்கு முன் நாற்பத்தைந்து டிகிரி கோணலாக நின்று காலை கதவில் வைத்து அழுத்தி தெலுங்கில் ஏதோ சொல்லி, சாவியை சாவித் துவாரத்தில் வைத்துத் திருக, கதவு பிகு பண்ணிக்கொண்டு திறந்தது.

உள்ளே கும்மிருட்டாக இருந்த அங்கே போய் கோவிந்தன் எலெக்ட்ரிக் லைட் சுவிட்சைத் தட்ட, அதையே மேலும் தட்ட, சுவரிலும், உயரம் குறைந்த மேற்கூரையிலும் அடுத்துத் தட்ட, கர்ர் என்று அலுத்துக்கொண்டு ட்யூப்லைட் ஒரு மாதிரி ஒளிவிட்டது. அப்புறம் அணைந்தே போனது.

கண்ணைச் சிறுத்துப் பார்த்தேன். மர பெஞ்ச் மேல் நான்கு சின்ன வயது பீமன் அல்லது மினி முத்துகிட்டு சைஸ் பீப்பாய்கள். தரையில் மாவடு ஊறுகாய் சேமித்து வைக்கிறதுபோல் ஏழெட்டு பீங்கான் ஜாடிகள்.

“விளக்கெண்ணெய் ஸ்டாக் பீப்பாய்லே, நல்லெண்ணெய் ஜாடியிலே. லோனுக்கு அடமானம் இது ரெண்டும்.”

வெளியே வந்தபடி சொன்னேன்: “கோடவுன் உள்ளே எழுதி வைக்கணுமே...”

“இருக்கே.”

அவர் காட்டிய சுவரில் நான்கு பக்கமும் நாமத்தோடு நமோ நாராயணா. சற்றுக் கீழே ஆணி அடித்து மாட்டிய வெள்ளி வெங்கடாஜலபதி படம்.

“இந்தப் படம் சரிதான். பேங்க்கில் அடமானம் வைத்த பொருட்கள் உள்ள இடம்னு போர்ட் வேணும்.”

“வச்சுட்டா போச்சு. பெயிண்டரை எழுதச் சொல்லிடறேன்.”

“நீங்க எதுவும் செய்ய வேண்டாம். நாங்க பேங்கிலே இருந்து தரோம்.”

“இம்புட்டு செஞ்சவன் நான் தகரத்துலே ஒரு போர்ட் எழுதி வைக்க மாட்டேனா? என்ன படம் போடணும்? இந்திரா அம்மாவா சஞ்சய் சாரா?”

நான் அதெல்லாம் வேண்டாம் என்று கையைக் காட்டினேன். அவர்கள் கடனுக்கு அடமானமாக உள்ளே வைத்திருக்கும் எண்ணெய்க் கணக்கைப் பட்டியல் போடச் சொல்லி கையெழுத்தோடு வாங்கிக் கொண்டேன்.

ஆக, இந்திரா வியாபார ஸ்தலத்துக்கு பேங்க் கணக்கு திறக்கலாம்.

“இன்னும் ஒரு ஒரு மணி நேரம் கழிச்சு வாங்க, ஏற்பாடு எல்லாம் செஞ்சு வைக்கறேன்.” பூட்டி, சாவிகளோடு புறப்பட்டேன்.

ஆபீஸில் பரபரப்பு. மேனேஜர் அறையில் எட்டிப் பார்த்தேன். அவர் முன்னால் எகிப்து பழைய ஜனாதிபதி நாசருடைய மூக்குபோல் நீண்ட மூக்கோடு ஒரு மத்திய வயதுக்காரர் உட்கார்ந்திருந்தார். இங்கே எல்லா ஊழியர்களுக்கும் பழக்கமானவர் என்று தெரிந்தது. யாரென்று ரவீந்திரனை விசாரித்தேன்.

“சீனுவாசனை தெரியாதா? என்ன போத்தி சொல்றீங்க?” ஆச்சரியப்பட்டுப் போனார் அவர். “நம்ம ஸ்டாஃப்தான். ஆறு மாசம் லீவிலே இருந்தார். ஸ்பெஷல் லீவு. இப்போ ஜாயின் பண்றார்.”

“ஆறு மாத லீவில் எங்கே போனார்?”

“ஒரு சின்ன தகராறு. அது முடிஞ்சு அவரை கட்டாயமா ஓய்வெடுக்கச் சொல்லிட்டாங்க.”

“சம்பளம்?”

“அதெல்லாம் மேனேஜருக்கு தெரியும், சென்ட்ரல் ஆபீஸுக்கு தெரியும். சீனிவாசனுக்கு தெரியும். நமக்கு யார் சொல்றாங்க?”

தகராறு செய்கிறவராகத் தெரியவில்லை அந்த சீனுவாசன். என்ன பதவி என்று விசாரித்தேன். கோடவுன் கீப்பர் என்றார்கள். சரிதான், புதுசாக முத்துகிட்டு வீட்டு உக்ராணத்தையும் இவர் மேற்பார்வையில் சேர்க்கலாம்.

சீனுவாசன் வேட்டியை இடுப்பில் இறுக்கிக்கொண்டு வெளியே வந்தார். நேரே என்னிடம் வந்து நின்றார். “உங்க பெயர் சீனுவாசனா?” அவர் கேட்க, “சங்கரன் போத்தி” என்றேன்.

“அப்போ, நான்தான் சீனுவாசன். அது சீனுவாசன் சீட்.”

என் நாற்காலியைக் காட்டினார்.

“வேற நாற்காலி இருக்கு உங்களுக்கு, வாங்க.”

மெசஞ்சர் ரத்தினம் அவரைக் கிட்டதட்ட தள்ளிக்கொண்டு போக என் இருக்கையையே ஏக்கத்துடன் பார்த்தபடி போனார் சீனுவாசன்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவரைப்பற்றி முழுக்கத் தெரிந்துகொண்டேன். வயது நாற்பத்தைந்து. இருபத்திரண்டு வருஷம் எக்ஸ்பீரியன்ஸ். அந்த அனுபவத்துக்கு வேறே யாருமென்றால் ஆபீஸராக அல்லது அக்கவுண்டண்ட் ஏன் மேனேஜராகக் கூட எதாவது தெலுங்குதேசக் கிளையில் கிரமமாகக் குப்பை கொட்டிக் கொண்டிருப்பார்கள். இவர் இன்னும் அன்று கண்டதற்கு அழிவில்லாமல் கோடவுன் கீப்பராகத்தான் இருக்கிறார். மகா அப்பாவி. பயம் நிறைய உள்ள மனுஷர். யார் எது சொன்னாலும், அதைக் கொஞ்சம் தோரணையோடு சொன்னால் உடனே நம்பிவிடுவார். நான்கைந்து பேராக ஏதாவது வேண்டும் என்று கேட்டால் செய்துவிடுவார். பரம சாது.

லீவு போட்டுவிட்டு அப்பாவுக்கு திவசம் செய்து முடித்து அடுத்தநாள் ஆபீஸுக்கு வந்த இவரிடம், நேத்து எப்படி போச்சு என்று யாரோ கூட வேலை பார்க்கிறவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

“அது ரொம்ப நன்னா போச்சே, சாஸ்திரிகளுக்கு வடை பாயசத்தோட சாப்பாடு. பித்ருக்களும் அவா மூலம் வந்து சாப்பிட்டுப் போனா” என்றிருக்கிறார்.

“சாஸ்திரிக்கு சாப்பாடு போட்டீங்க, எங்களுக்கு கிடையாதா?” என்று விடாமல் பிடிக்க, சாயந்திரம் தெக்கிணி ஐயர் கடையிலிருந்து அல்வா, காராசேவு, வெங்காய வடை, காப்பி இவர் செலவில்.

வீட்டில் முன்னோருக்கு திவசம் செய்ததற்காக ஆபீஸில் வெங்காய வடை பார்ட்டி கொடுத்த ஒரே மனுஷர் சீனுவாசனாகத்தான் இருக்கும்.

ரொம்ப இவரை சீண்டிக் கொண்டிருந்தாலும் அந்த சாது மிரண்டு காடு கொள்ளாது போகவும் சந்தர்ப்பம் உண்டு என்று தெரிந்தது. பத்து வருஷங்களுக்கு முன் அப்போதைய டைப்பிஸ்ட் ரகுநாதன் ஏதோ கிண்டல் செய்து கொண்டிருக்க, சும்மா சிரித்தபடி கோடவுன் ரெஜிஸ்தர் உள்ளிருப்பை புதுப் பட்டியலிலிருந்து மாற்றிக் கொண்டிருந்தாராம் சீனுவாசன்.

ரொம்ப கீழாக ஏதோ டைப்பிஸ்ட் சொல்ல ஓவென்று கர்ஜித்துக்கொண்டு எழுந்த சீனுவாசன் டைப்ரைட்டரைப் பிடுங்கி, தலைக்கு மேலே உயர்த்தி அவரை நெருங்க, டைப்பிஸ்ட் வெலவெலத்துப்போய் சுவரோடு சரிந்து மயக்கம் போட்டுவிட்டாராம். தொப்பென்று மேஜை மேல் டைப்ரைட்டரை வைத்துவிட்டு சீனுவாசன் பாதி ஆபீஸ் நடக்கும்போதே வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டாராம்.

ரீஜனல் ஆபீஸ் என்கொயரி வந்து விசாரித்து சீனுவாசன் மேல் குற்றம் இல்லை என்று தீர்ப்பு சொல்லி, டைப்ரைட்டரை ஆபீஸில் தலைக்கு மேல் தூக்கியதற்காக ஒரு இன்க்ரிமெண்டை இரண்டு மாதம் தள்ளிப் போட்டார்களாம்.

ஆபீஸ் டைப்ரைட்டரில் இசட் என்ற எழுத்து ஒரு தடவைக்கு இரண்டு தடவை தட்டினால்தான் பதியும் என்கிறபடி சிக்கியிருக்க சீனுவாசனின் டைப்ரைட்டர் சுமந்த அவதாரம் ஒரு காரணமாம்.

ஆறு மாதம் லீவில் போக என்ன காரணம்? ஆபீஸில் வேற ஏதாவது யாரோடாவது சண்டையா என்று கேட்டேன்.

அப்படி எதுவும் இல்லை. பௌர்ணமி காலங்களில் சாயந்திரம் நிலைகுலைந்து மனநிலை குழம்பி இருப்பதால் நிறைய ஓய்வு வேண்டும் இவருக்கு என்று மதுரையிலும் சென்னையிலும் வைத்துப் பார்த்த மனோதத்துவ நிபுணர்கள் சொன்னதால் ஆறு மாதம் சிறப்பு விடுமுறை அரைச் சம்பளத்தில் தரப்பட்டதாம் இதுவரை.

"போத்தி தம்பி, நல்லா இருக்கீங்களா?"

உள்ளே வந்தவர் சொல்லியபடி கடந்து போக, லெட்ஜரைப் புரட்டிக் கொண்டிருந்த நான் திரும்பிப் பார்த்தேன். பழைய நகராட்சி வார்ட் கவுன்சிலர். மத்தியில் செல்வாக்கு உள்ளவர் என்று எல்லோரிடமும் சொல்வதோடு, சென்ட்ரல் மினிஸ்டர்கள் ஒவ்வொருத்தரும் ஷிஃப்ட் வைத்துக்கொண்டு அவரோடு டெலிஃபோன் அரட்டை அடிப்பதாகச் சொல்வதை பேங்கிலும் வெளியிலும் எல்லாரும் சீனுவாசன்போல சரிசரி என்று கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம். எந்தக் கதையில் எந்தப் பாம்போ.

முனிசிபாலிடி காலம் முடிந்து உள்ளாட்சித் தேர்தல் வராததால் அவர் இன்னும் மாஜி கவுன்சிலராகத்தான் இருக்கிறார். சொந்தமாக ஒரு அச்சகம் வைத்திருக்கிறார். ஆமாம், இந்திரா அச்சகம்தான். காலமானார் நோட்டீஸ்களும், இரங்கற்பாவும் சீரிய முறையில், குறைந்த கட்டணத்தில், அதி விரைவாக அடித்துத் தரப்படும்.

கவுன்சிலர் பதவி பறிபோனாலும், வாய் விட்டெறியும் அதிகாரம் அதே வீச்சில்தான் இருக்கிறது. சென்ட்ரல் மினிஸ்டர் கூட லோன்மேளா லோனைக் கொடுத்துவிட்டு சமர்த்தாகக் கும்பிடு போட்டு அடுத்த மேளாவுக்குக் கார் ஏறிப் போவார். எம்.பி கூட கெத்தாகப் பேசி அப்புறம்

பார்க்கலாம் என்று விடைபெற்றபடி அம்பாசடர் காரில் ஏறுவார். ஆனால் இந்த கவுன்சிலர் அடக்க முடியாமல் ஆடக் கூடியவர்.

கொஞ்ச நேரத்தில் மெசஞ்சர் ரத்தினம் வந்து மேனேஜர் சார் கூப்பிட்டார் என்று சுபச் சேதி சொல்லிவிட்டுப் போனார். கவுன்சிலர் ஏதோ பெரிய தொகையாக கடன் கேட்டு வந்திருக்கிறார் என்று யூகித்தபடி போனேன்.

உள்ளே மாஜி கவுன்சிலர் மேனேஜரிடம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

“அதென்ன பாரதப் பிரதமர் பெயர் வச்சிருந்தா லோன் கொடுத்திடுவீங்களா? அதுவும் எப்படி? லேபிள் நம்ம பிரஸ்ஸிலேதானே அச்சுப்போட வந்தாங்க. இந்திரா நல்லெண்ண, அதுவாவது பரவாயில்லே, சஞ்சய் விளக்கெண்ண. நம்ம தேசத் தலைவர்களை, சுதந்திரம் கிடைக்க செக்கிழுத்த மக்கள் தலைவர்களை அவமதிக்கிறது இது. ஒரு பெட்டிஷன் போட்டேன்னா நீங்க கூண்டோட ட்ரான்ஸ்ஃபர் ஆகிடுவீங்க. நல்ல வேள, புரூஃப்பு பாத்தபோதே அந்தக் கண்றாவியை எல்லாம் மாத்தச் சொல்லி எல்லோரையும் காப்பாத்தினேன். புதுசா பேரு நான்தான் வச்சேன். இந்தியா வெளக்கெண்ணெய், இளையோர் நல்லெண்ணெய். சரிதானே?”

மேனேஜர் நடுங்குவது தெரிந்தது. அக்கவுண்டண்ட்டும். மற்றபடி எல்லோரும் உன்னால் ஆனதைப் பார்த்துக்கோ என்று வீராப்பாக நின்றோம். எல்லோரையும் காப்பாற்ற இவரென்ன மகாவிஷ்ணுவா? அப்புறம், பிரதமரோ இளவலோ சுதந்திரம் கிடைக்க செக்கிழுத்ததாக எனக்கு நினைவில்லை.

“வீட்டுக்குள்ளே விளக்கெண்ணெய் விக்கறதுக்கு நாட்டு வரிப்பணத்தை கடனா வாரிக் கொடுப்பீங்க, நான் தேசிய அளவிலே மலிவு விலையிலே சலவை சோப் செய்யறதுக்கு கடன் கேட்டேன்... என் சவுக்காரம் மார்க்கெட்டுக்கு வந்தா, சன்லைட், செல்லம் சோப் இதை எல்லாம் ஒண்ணுமில்லாம ஆக்கிடும். வெறும் இருபத்தையாயிரம்தான் கேட்டேன். உங்க ரீஜனல் ஆபீஸ்லே லோன் தரமாட்டேனுட்டாங்க. ஆயிரத்தைநூறு ரூபா லோன் தரோம். புண்ணுக்கு போடற போரிக் பவுடர்

பண்ணுங்கன்னு ஐடியா வேறே தராங்க. அது வெறும் சலவை சோப் இல்லே. சஞ்சய் சலவை சோப்."

எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ முடித்துவிட்டு சிவந்து வழிந்த முகத்தை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார்.

ஒரே ஆச்சரியமாக இருந்தது. ரீஜனல் ஆபீஸில் இவரை நம்பி ஆயிரத்தைநூறு கொடுக்கத் தயாராக இருந்தவர்கள் சஞ்சய் சலவை சோப் என்ற பெயரைக் கேட்டு இடியோசை கேட்ட நாகமாக நடுங்கி, பணம் தராமல், துட்டு கிடையாது என்று மறுத்தார்களா? அந்த ஆபீஸர் இன்னும் மதுரை ரீஜனல் ஆபீஸிலா வேறு எங்கேயாவது தண்ணீர் இல்லாத இடத்திலா தெரியவில்லை.

கவுன்சிலர் சொல்லும் நான்கு மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்களுக்கு அடுத்த மாதம் நடைபெறும் மேளாவில் ஆளுக்கு ஆயிரம் கடன் தருவதாக மேனேஜர் துண்டைப் போட்டுத் தாண்டாத குறையாக வாக்குறுதி தர கவுன்சிலர் கம்பீரமாகப் புன்னகைத்தபடி போனார்.

பகல் சாப்பாட்டுக்கு எல்லோரும் சேர்ந்து கிளம்பிக் கொண்டிருந்தார்கள். என்ன விஷயம் என்று கேட்டேன். சீனுவாசன் திரும்ப வேலையில் வந்ததற்குப் பாராட்டாம். அவர்தான் காசு தருகிறாராம். நான் வீட்டுக்குப் போய் வந்தேன்.

இரண்டு நாள் கழித்து பிரச்சனை முத்துகிட்டு வடிவில் வந்து சேர்ந்தது. ஆபீஸ் திறந்ததும் கையில் காகிதச் சங்கிலிகளோடு சுறுசுறுப்பாக ஆஜரான அவன் நேரே என்னிடம் வந்து, அதை நீட்டி, "இது பண்ணி ஸ்கூல்லே தரப் போறேன். ஒரு லட்சம் ரூபா லோன் கொடு. இந்திரா ரிங்ஸ்னு பெயர் வச்சிருக்கேன்" என்றான்.

"இதுக்கெல்லாம் லோன் கிடையாதுப்பா" என்று நைச்சியமாகச் சொன்னேன்.

"அதெல்லாம் எனக்கு தெரியாது, கொடுக்கறியா இல்லே அந்தாள் மேலே கல்லெடுத்து எறியட்டா?"

அந்த ஆள் என்பது மூக்கைச் சொரிந்துகொண்டு கேபினில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மேனேஜரை.

“செஞ்சுடுவார் சார்” என்று ரத்தினம் ஆர்வத்தோடு பீதியைக் கிளப்ப, நான் “ரெண்டு லோன் ஒரே வீட்டுலே தர முடியாது முத்துகிட்டு. உங்க வீட்டிலே ஏற்கெனவே விளக்கெண்ணெய் விக்க லோன் வாங்கியாச்சே...” என்றேன்.

“எங்க வீட்டிலே நீதான் ரெண்டு லோன் கொடுத்திருக்கியே... இன்னொண்ணு கொடு.”

“இல்லே ஒண்ணுதான்.” நானும் முத்துகிட்டு ஆகிக் கொண்டிருக்கிறேனா?

“ரெண்டுடா போத்தி. விளக்கெண்ணெய் லோன், ஒண்டிப்பிலி லோன்.”

“அது சர்பத் கடை நாயுடுவுக்குன்னா கொடுத்திருக்கு.”

நான் லா பாயிண்ட் வக்கீலுக்கு எடுத்துக் கொடுத்த குமாஸ்தா மாதிரி ஒரே போடாகப் போட, அவன் ஒரு வினாடி என்னையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னான்:

“அதையும் அண்ணன் வாங்கிக்கிட்டாரே நாயுடு மாமாகிட்டே இருந்து.”

ஒன்றும் புரியாமல் அவனையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

“அடுத்த வாரம் வரேன். லோன் எடுத்து வை. ஒத்த ரூபா நோட்டா கொடு. அதான் சில்லரை மாத்த சௌகரியம்.”

முத்துகிட்டு காகிதச் சங்கிலிகளோடு இறங்கிப் போய்விட்டான்.

ஒரு வாரம்போல் அவனைக் காணவில்லை. சர்கூட்லே இருக்காரு என்றாள் ஸ்வீப்பர் சௌந்தரம்மா. அதாவது காலையில் வீட்டை விட்டுக் கிளம்பி கையில் காகித வளையங்களோடு தரையையே பார்த்தபடி யாரோடும் ஒரு வார்த்தைகூட பேசாமல் ஊரை நான்கு திசையிலும் எல்லை வரை போய்ச் சுற்றி மதியத்துக்கு வீடு திரும்புவதை தினசரி

செய்கிறானாம். சர்க்யூட்டிங் என்று அதற்கு எலெக்ட்ரிசிட்டி போர்டில் யாரோ பெயர் வைத்திருக்கிறார்கள்.

சர்க்யூட்டோ, வேறொண்ணோ, பேங்கில் படி ஏறாமல் இருந்தால் சரிதான்.

சனிக்கிழமை அரைநாள் ஆபீஸ். அதுவும் பன்னிரண்டு மணிவரைதான் கவுண்டர் என்று ஏகக் கூட்டம். தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, முத்துகிட்டுவின் மதனி வந்து சேர்ந்தாள். குளித்துத் தலையாற்றியபடிக்கு தலைமேல் குற்றாலத்துண்டோடு எப்படி தெருவோடு நடந்து வந்தாளோ.

“விளக்கெண்ணெய் வேணும்” என்று அவள் என்னிடம் கேட்டபோது கவுண்டரில் பல தலைகள் உயர்ந்தன.

“கையோட வந்து திறந்து எடுத்துக் கொடுங்க. அவர் செவுத்திலே கிறுக்கப் போயிட்டார். இவன் பேப்பரை கிழிச்சு தூக்கிட்டு கிளம்பிட்டான். நான்தான் இடையிலே மாட்டிக்கிட்டேன். நாலஞ்சு பேர் பிரசவ வீடுகள்லே இருந்து எண்ணெய்க்கு வந்துட்டாங்க. அப்புறம் வான்னு எம்புட்டு தடவை திருப்பியனுப்ப முடியும்? பெரிய துன்பமாப் போச்சு. வீட்டு கூடத்திலேயே நாங்க பாட்டுக்கு பீப்பாயெல்லாம் வச்சுக்கலாமில்லே.”

அவள் புகார் சொல்ல, பேங்க் கோடவுன் என்றால் என்ன என்று விளக்கத் தொடங்கினேன்.

“இருக்கட்டும் அதெல்லாம், உலையிலே சோத்தை பொங்க வச்சுட்டு வந்திருக்கேன். வந்து எடுத்துக் கொடுத்துட்டு போங்க.”

நான் கோடவுன் கீப்பர் சீனுவாசனை அனுப்பினேன். இரண்டு வீதி கடந்துதான் என்றாலும் குதிரை வண்டியில் ஜல்ஜல் என்று கெத்தாகக் கிளம்பிவிட்டார் அவர்.

“அதென்ன முத்துகிட்டு அண்ணனும் அவன் மாதிரியே கொஞ்சம்...?”

கவுண்டர் முடித்துவிட்டு கேஷியர் கருப்பையாவைக் கேட்டேன்.

“இல்லேல்லே... அப்படி ஒண்ணுமில்லே.”

“பின்னே அவர் சம்சாரம் சொல்லிச்சே... செவுத்திலே கிறுக்கப் போயிட்டார்னு.”

“அதுவா, அவர் மலேரியா எராடிகேஷன் ப்ரொகிராம் இருக்கே, அதான் என் எம் ஈ பி, வீடு வீடா மலேரியா இருக்கான்னு கேட்டு கொய்னா மாத்திரை கொடுப்பாங்களே... அந்த வேலை. தினம் ஏதாவது ஒரு கிராமத்திலே, ஊர்லே இருக்கப்பட்ட தெருவிலே வீடு வீடாப் போய் மலேரியா ஒழிப்புக்காக வீட்டுச் சுவர்லே பென்சிலாலே சதுரம் வரைஞ்சு அட்டெண்டென்ஸ் மார்க் பண்ணுற உத்தியோகம், கவர்மெண்ட் ஜாப்தான். பிக்கல் பிடுங்கல் இல்லாதது.”

அந்த வருமானத்தோடுதான் எண்ணெய் விற்று கூடுதல் வருமானம், டால்டாவும் புத்துருக்கு நெய்யும் கூட விற்கத் திட்டம். அதற்கு இருபதம்சத் திட்டத்தில் பேங்க் லோன். நன்றாக இருக்கட்டும்.

இரண்டு மணிக்கு ஷட்டரை இறக்கி ஏறக்கட்டிவிட்டு சாப்பிடக் கிளம்பியபோது முத்துகிட்டுவின் அண்ணன் கோவிந்தன் வந்து கூச்சலிட்டார்.

“ஏன் இந்தாளை அனுப்புனீங்க, எண்ணெய் பேரல் எடுத்துத் தர?”

அவர் சீனுவாசனைக் காட்ட அவர் சிவனே என்று சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். காதில் எதற்காகவோ பென்சில் செருகியிருந்தார்.

“அந்தாள் இந்தாள் எல்லாம் வேணாம், அவரும் பேங்க் ஊழியர்தான்” என்றேன்.

“என்னத்தை, மரைகழண்ட கேசு.”

சீனுவாசன் சிரித்தார். கருப்பையா சண்டைக்குப் போய்விட்டார்.

“அவர் வேலையை அவர் பார்த்துட்டு போறார். யாரைப் பத்தியும் அவமானகரமா சொல்ல வேணாம். நாங்க ஸ்ட்ரைக் நடத்த வேண்டி இருக்கும் இன்னொரு முறை நீங்க இன்சல்ட் பண்ணினா.”

கோவிந்தன் இறங்கி வந்தார்.

“ஏன், சரக்கு ஏதாவது குறைஞ்சிருக்கா கோடவுன்லே?” மேனேஜர் கேட்டார்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை.”

“ராங் டெலிவரி கொடுத்துட்டாரா?”

“இல்லே.”

பின்னே என்ன பிரச்சனை?

அவர் மென்று முழுங்கியபடி சொன்னார், “பொம்பளை ஆளுங்க இருக்கப்பட்ட வீடு. அவ குளிச்சுட்டு இருக்கறபோது பாத்ரூம் வாசல்லே வந்து நின்னா என்ன அர்த்தம்?”

“என்ன அர்த்தம்னா என்ன அர்த்தம்? வீட்டோட, உள்ளாற கோடவுன் வச்சா இப்படித்தான் வரும். உங்க ஒய்ஃப்தானே குளிச்சு தலையாத்திக்கிட்டே ஓடி வந்து உடனே டெலிவரி தரணும்னு சொன்னது.”

நான் கேட்க, இன்னொன்று உரைத்தது. அந்தம்மா வந்து அரைமணி நேரம் கழித்துத்தான் சீனுவாசனை அனுப்பியது. சாலாச்சியம்மாள் ஒரு நாளைக்கு எத்தனை முறை குளிப்பாள்?

வேடிக்கை பார்த்தபடி நின்ற சௌந்தரம்மா வாய்விட்டே கேட்டுவிட்டார். கோவிந்தன் சட்டென்று அமைதியாகி முணுமுணுத்தார்:

“ஏதோ பார்த்து செய்யுங்க, அவரோட எனக்கு என்ன விரோதம்... எல்லாரும் தாயாப் பிள்ளையா பழகறோம். நமக்கெல்லாம் ஒரே இந்தியத் தாய் அவங்கதான். டில்லியிலே இருக்காங்க.”

முத்துகிட்டு கூட இதைவிட கோர்வையாக, அர்த்தத்தோடு பேசுவான்.

சாயந்திரம் ரவீந்திரன் அறைக்கு நடந்து போகும்போது துரைராஜு நாயுடு கடையில் கலக்கி சர்பத் குடித்தேன். சர்பத் அடித்துக் கொடுத்த நாயுடு முகம் வாடி இருந்தது. ஏகாதசி, விரதம் என்றார்.

நாளைக்கு இல்லையோ ஏகாதசி? போத்தி நாலு தலைமுறையாக சோழியை உள்ளங்கையில் வைத்துக் குலுக்கி விசிறிப் போட்டு ஜோசியம் பார்த்த குடும்பத்தில் பிறந்து விழுந்தவனாக்கும். உறக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் திதி, நட்சத்திரம் பிசகில்லாமல் சொல்வேன் தெரியுமோ.

நாயுடு ஒன்றும் தோன்றாமல் நெற்றி நாமம் சுருங்கச் சிரித்தார். எனக்குள் இருந்த பேங்க் ப்ரபேஷனரி ஆபீஸர் உஷாராகிவிட்டான். கேட்டேன்.

“உங்க கிட்டே சொல்றதுக்கு என்ன தம்பி? ரெண்டாயிரத்துலே ரொக்கமா ஆயிரம், டிரா∴ப்டா ஆயிரம் கொடுத்தீங்களே, அதுலே பணத்தை மலேரியாக்காரர் எடுத்துக்கிட்டார். அவருக்கு கொடுக்க வேண்டிய தொகை இருந்தது. நீங்க கவலைப்பட வேணாம். நான் பேங்குக்கு எப்பாடும் பட்டு மாசாமாசம் கட்டிடறேன்.”

“இதான் இந்திரா வியாபார முன்னேற்றமா?”

அவர் வெறுமனே சிரித்தார்.

இதைத் தெரிந்து நான் ஒன்றும் செய்ய முடியாது. மேனேஜரிடம் சொன்னால், ‘அவங்க தொழில் முன்னேற்றத்துக்குன்னு வாங்கின லோன் பணத்தை செலவழிச்சது எப்படின்னு நாம் கேட்க முடியாது. ரொம்ப நோண்டினா, ட்ரான்ஸ்∴பர்லே தூக்கி அடிச்சுடுவாங்க. விடுங்க’ என்பார். கண்டும் காணாமல் போகிற சில சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

“லோன் டிரா∴ப்டை மாத்தி ஒண்டிப்பிலி எசென்ஸ் வாங்கிட்டீங்களா?”

“ஓ, மதுரையிலே போய் வாங்கி வந்துட்டேன்.”

எங்கே அது? கடைக்குள் சுட்டிக் காட்டினார். எலுமிச்சம்பழம், வெட்டிவேருக்கு இடையிலே ஒரு பாட்டில். அவ்வளவுதானா ஆயிரம் ரூபாய்க்கு வரும்?

“ஒண்டிப்பிலி எசென்ஸ் மீதி ஆயிரத்துக்கு வாங்கினது இதுதானா?”

அவர் தயங்கி கடைக்குள் நிறுத்தி இருந்த பழைய அலமாரியைத் திறந்து காட்ட, அட்டைப் பெட்டியில் ஐந்து பாட்டில் எசென்ஸ்.

“டிராஃப்டை ஒண்டிப்பிலி கம்பெனி மூலம் மாத்தி ஐநூறு ரூபாய்க்கு கொள்முதல் செஞ்சேன். மீதி காசு கையிலே இருக்கு.” அவர் தயங்கினார்.

“காலையிலே சர்பத் குடிக்க வந்திருந்தீங்கன்னா இந்த பாட்டிலும் இருந்திருக்காது.”

“ஏன், வீட்டுலே வச்சிருப்பீங்களா?”

“இல்லே, மலேரியாக்காரர் வீட்டுலே. சீனுவாசன் அங்கே இருந்து பகல்லேதான் எடுத்து வந்து தந்தார்” என்றார் நாயுடு.

சத்தியமாக முதலில் ஒன்றும் புரியவில்லை. மெல்ல நிலைமை அர்த்தமானது.

பேங்க் லோன் தொகை ஆயிரத்தைப் பிடுங்கிக்கொண்டதோடு, ஒரிஜினல் நன்னாரி ஒண்டிப்பிலி எசென்ஸ் பாட்டில்களையும் கோவிந்தன் நாயுடுவிடம் இருந்து வலுக்கட்டாயமாக எடுத்துப்போய் வீட்டு எண்ணெய் கோடவுன் ஆக நாமகரணம் செய்யப்பட்ட உக்கிராணத்துக்குள் வைத்திருக்கிறார். டிராஃப்ட் மாற்றியதில் பாக்கி இருக்கும் ஐநூறைக் கேட்டு நச்சரித்திருக்கிறாராம். கொடுத்தால்தான் எசென்ஸைத் திரும்பத் தருவேன் என்று பிடிவாதமாம்.

சரிதான், எசென்ஸ் எப்படி திரும்ப உங்க கிட்டே வந்தது நாயுடு?

அது ஒரு சுவாரசியமான கதை.

பகலில் சின்ன விளக்கெண்ணெய் பீப்பாயை சாலாச்சி அம்மாளுக்கு டெலிவரி கொடுக்க நான் அனுப்பிய கோடவுன் கீப்பர் சீனுவாசன் டெலிவரி கொடுத்த கையோடு அங்கே வேறே என்ன எல்லாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்று பார்த்திருக்கிறார். விளக்கெண்ணெய், நல்லெண்ணெய். அப்புறம் சம்பந்தமில்லாமல் மேஜை அடியில் வைத்திருந்த ஒண்டிப்பிலி எசென்ஸ். இங்கே எதுக்கு

அது? தடதடவென்று அட்டைப்பெட்டியை குதிரை வண்டியில் ஏற்றிக்கொண்டு யாருக்கும் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து திரும்பியிருக்கிறார். நேரே நாயுடு சர்பத் கடைக்கு சவாரி.

“ஒண்டிப்பிலின்னா நீங்க மட்டும்தானே? வெளக்கெண்ணெய் கடையிலே அது எதுக்குன்னுதான் எடுத்து வந்துட்டேன் நாயுடு. பிடியுங்க.”

குதிரை வண்டியில் இருந்தபடிக்கே நாயுடுவைக் கூப்பிட்டுக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாராம் சீனுவாசன். திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல கோவிந்தன் துடிப்பது அதனால்தான்.

“வெய்ட், எண்ணெய் வச்ச கோடவுன் உள்ளே ஒண்டிப்பிலி எசென்ஸ் பெட்டியை வச்சிருந்தாரா முத்துகிட்டு அண்ணன்? அந்த ரூமுக்கு, அதான் கோடவுனுக்கு சாவி பேங்கிலேதானே இருக்கு. கதவை எப்படி திறந்து பெட்டியை வச்சாராம்?”

நான் சந்தேகம் கேட்க, நாயுடு நரைமீசையை நீவிக்கொண்டு சிரித்தார்.

“போங்க தம்பி. சிரிக்க வைக்காதீங்க. உங்களுக்கு இந்த ஊர் மனுசங்களையும் தெரியாது, மரக்கதவையும் தெரியாது.”

அடுத்த வாரம் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி திரும்ப இடம் மாற்றம். புது தில்லி லாஜ்பத் நகர் கிளையில் உடனே போய் ஜாயின் செய்ய வேண்டும்.

அம்மாவும் அச்சனும், ஏன் பாட்டியும் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக இன்னும் பத்து வருடம் இருக்க அவர்கள் உடம்பிலும் மனதிலும் பலம் இருப்பதாகச் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

“உத்தியோகத்திலே மேலே வரணும். அதான் முக்கியம்.”

பாட்டி திரும்பத் திரும்பச் சொன்னாள்.

பாருகுட்டியைப் பெண்பார்க்க கோட்டயத்திலிருந்து யாரோ ஒரு மேனோன் வந்த தினத்தில் ஊரை விட்டுக் கிளம்பினேன். பேங்கில் பழக்கமான பலரும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்பி வைத்தார்கள்.

சீனுவாசனும், ஒண்டிப்பிலியும், விளக்கெண்ணெய் மண்டிக்காரரும்,கவுன்சிலரும் அந்நியோன்யமாகப் பேசியபடி அங்கே இருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் அத்தனை முகங்களையும் குரலையும் நினைவில் சுமந்து தில்லிக்குப் புறப்பட்டேன்.

வாழ்க்கை சத்தமின்றி சுவடு மாறி சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டது. நினைவுகள் உதிரத் தொடங்கி அப்புறம் ஒன்றுமில்லாமல் போனது.

## புது_தில்லி

அத்தியாயம் 17

# நவம்பர் 1976

பி ளாஸ்டிக் பூங்கிண்ணத்தில் எனக்கு விஸ்கி வார்த்தார்கள்.

கிண்ணத்தில் வைத்திருந்த ஒற்றை ரோஜாப்பூவை ஜகதீஷ் எடுத்ததையும், கொசு விழுந்து மிதந்த தண்ணீரை வாஷ்பேசினில் கொட்டியதையும், சிரித்துக்கொண்டே விஸ்கியும் சோடாவும் அந்தக் கிண்ணத்தில் நிறைத்ததையும் நான் பார்த்துக் கொண்டிருந்தபோது பேங்க் கவுண்டரில் செக் புக் கேட்டு ஓவியர் உசைன் வந்து நின்றார்.

நாதமுனி நாயுடு ப்ராஸ் பேண்ட் கோஷ்டி 'ராமபக்தி சாம்ராஜ்யம்' என்று சுத்த பங்களா ராகத்தில் வாசித்தபடி பேங்குக்கு வெளியே சுற்றி வந்தது.

வெங்காயம் சாப்பிட்டு வந்த, கையிடுக்கில் வியர்த்த முதுபெண்கள் என்னிடம் பஞ்சாபியில் ஏதோ கேட்டு சண்டை பிடிக்கத் தயாரானார்கள். பாஸ்புக் என்ட்ரி போட்டு லாகவமாக என் மேஜைக்கு எறிந்தபடி, போனமாதம் கல்யாணம் ஆன பாயல் அஹூஜா அழகாகச் சிரித்தாள்.

"பாயல் சிரிப்பு என்ன அழகா இருக்கு..." நான் உரக்கச் சொன்னேன்.

"பாயல் இருக்கட்டும், இதான் பாட்டியாலா பெக், உனக்கு ஸ்பெஷலா அளந்து கொடுத்திருக்கேன், முழுங்குடா" என்றான் ஜகதீஷ். "போத்தி, கல்ப் இட்" என்றார் சீஃப் மேனேஜர் அகர்வாலும். மூன்றாவது ரவுண்ட் விஸ்கி.

சிரிப்பு. கூட்டமாக 'சியர்ஸ்'. உள்ளே இறங்கும் திரவம் தீயாகத் தகித்து ரத்தத்தில் உடனே கலந்து உச்சந்தலைக்கு ஏறி, என்னை உயரத்

தூக்கி ஆரஞ்சு மேகங்களுக்கு நடுவே நிறுத்த, இதமான நவம்பர் குளிரோடு தில்லி.

இது என்னுடைய இருப்பிடம். க்வார்டர்ஸ். அப்படித்தான் சொல்கிறார்கள். முதல் மாடிக் குடியிருப்பு. ராத்திரி பன்னிரண்டு மணி வரை ஒரு கூட்டம் என்னோடு இங்கே இருக்கிறது. பிடிக்கிறதோ இல்லையோ முன் அறையில் அவர்களோடு உட்கார்ந்து, சிரித்து, கைதட்டி, சியர்ஸ் சொல்லி, சாப்பிடப் போகும்போது பர்ஸ் எடுத்துக்கொண்டு நடந்து, நடுராத்திரிக்குச் சற்றுமுன் வீட்டுக்காரர் முன்கதவைப் பூட்டிவிட, கதவில் ஏறி உள்ளே குதித்து, காலையில் தலைவலியோடு ஆபீஸ் கிளம்பி... வாழ்க்கை போகிறது இப்படி.

தெற்குத் திசையில் பிறந்து வளர்ந்து சுகஜீவனம் செய்திருந்த போத்தி எப்போதாவது கள்ளு குடிப்பான். மாமிசம் சாப்பிடுவான். எப்போதாவது சிகரெட் பற்ற வைத்து இரண்டு இழுப்பு இழுத்து, இருமிக்கொண்டே தூர எறிவான். இப்போது தினசரி ராத்திரி மாமிசம் தின்பவன் அவன். குடியும் மும்முரம். சார்மினார் சிகரெட்டை ஆபீஸ் நேரத்தில் கூட ஐந்து நிமிடம் வெளியே நின்று பற்றவைத்து, புகையைத் தீர்க்கமாக உள்வாங்கி அனுபவிக்கிறவன்.

அப்புறம் பெண்கள். அங்கே பார்த்தது போன்ற பெண்கள் இல்லை இங்கே. பார்வை இசகுபிசகாக எங்கோ விழுந்தாலும் பாதகமில்லை. கண் நிலைகுத்திப் போய்ப் பார்க்கிறது மட்டும் இல்லை என்றால் போதும்.

முழுநாளும் அழகான பஞ்சாபிப் பெண்களின் அண்மையில்தான் கழிகிறது. அந்த மகிழ்ச்சியில் அவர்களில் சிலர் கல்யாணமானவர்கள் என்பது அபஸ்வரமாக ஒலித்து அப்புறம் மனதில் அலையடிக்கும் சிருங்கார சாகரத்தில் அந்த நினைவு மெல்லக் கரைந்து போகிறது.

போத்தி நாள் முழுக்க பெண் நினைப்போடு வலம் வருகிறான். தினசரி ராத்திரி விஸ்கியும் ரம்மும் குடிக்கும்போது அவர்கள் எல்லோரும் பக்கத்தில் வந்து இழைவதாகக் கற்பனைகள் சிறகடித்துப் பறக்கின்றன.

குடிக்காமல் இருந்தாலும் அப்படித்தான் இருக்கும். இந்த நவம்பர் குளிருக்கு இதமான நினைப்பு அதெல்லாம். இன்னும் அதிகக் குளிரோடு டிசம்பர் வந்து கொண்டிருக்கிறது.

இங்கே வந்து பத்து நாட்களாகின்றன. மதராஸின் அந்நியோன்யமும், பம்பாய் தரும் பிரமிப்பும் இங்கே கிட்டாது. நூறு கிராமங்களை அடுத்தடுத்து அமைத்து, பெரிய கட்டடங்களையும், சமாதிகளையும், நீண்டு விரியும் பூந்தோட்டங்களையும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஏற்படுத்தி, சதா காற்றில் நெய்யும், பராத்தாவும், குருமாவும், மீன் வறுப்பதும் திடமாகத் தங்கி நிற்க, குளிரக் குளிர இரவும், நிதானமும் இல்லாமல், பரபரப்பும் இல்லாமல் கடந்து போகிற நாட்களுமாக தில்லி என்னை வரவேற்று இருக்கச் சொன்னது.

இந்தப் பத்து நாளில் ஊர் நினைவு அவ்வப்போது வந்து போனது. ஊரை நினைக்கும்போது பேங்கும், பேங்கை நினைக்கும்போது நண்பர்களும், அவர்களை நினைக்கும்போது இருபது அம்சத் திட்டக் கடனும், இருபது அம்சத் திட்டத்தை நினைக்கும்போது எமர்ஜென்சியும் மனதில் தட்டுப்படும்.

எமர்ஜென்சியின் ஊற்றுக்கண் தில்லி. இங்கே அது நினைவில் வராதா?

“சோல்ஜர்ஸ் சேவா கஸ்டமர் மேஜர் வினோத் மாதுர் நேத்து சேஃப் டெபாசிட் லாக்கர் ஆபரேட் பண்ண வந்தபோது அவரை நிக்க வச்சுட்டு மேஜர் ட்ரஹான் பொண்டாட்டியோட லாக்கர் ரூமிலே போய் கதவை சாத்திக்கிட்டியாமே...”

இன்னொரு அலை சிரிப்பு.

“அவரை நிக்க வைக்கலியே, உக்கார சொல்லிட்டுத்தானே உள்ளே போனோம்... போனேன்.”

“கல்பனா ட்ரஹான் அடுத்த தடவை லாக்கர் ஆபரேட் பண்ண வந்தா அந்தம்மா கிட்டே இதமா, பதமா சொல்லு, ஸ்லீவ்லெஸ் ப்ளவுஸ் போட்டுக்கிட்டு வந்தா, கஷ்கத்துலே சிரைச்சுக்கணும். இல்லையோ, கையைத் தூக்கிப் பேசறதையாவது குறைச்சுக்கணும்.”

கீழே இருந்து வீட்டுச் சொந்தக்காரர் வாஸ்வானி எந்த நிமிடமும் படி ஏறி வரலாம். அவருக்கு ரத்தக் கொதிப்பு ஏறினால் உடனே தணிக்கத்தான், அறை வாசலுக்கு அருகில் பெரிய சோபாவில் சீஃப் மேனேஜர் அகர்வால் பியரோடு உட்கார்ந்திருக்கிறார்.

“ஆனாலும் புது ஆபிஸர் பையன் ரொம்பவே சுறுசுறுப்புன்னு கல்பனா ட்ரஹான் சொல்றாங்க. உன்னைத்தான். சுத்திச் சுத்தி வந்துட்டிருக்கியாம், வேலைதான் ஆக மாட்டேங்கிறதாம்.” இது அகர்வால் சாப் போட்ட கூக்லி.

கஸ்டமர்கள் புது ஆபீஸர்களை உடனே கண்டுபிடித்து விடுவார்கள். ஆபீஸே குளிருக்காக ப்ளேசரும், கம்பளி ஸ்வெட்டரும், உல்லன் பேண்டும் போட்டு நடமாடுவார்கள். கம்பளி இல்லாத கெட்டித் துணி சட்டையும் இரண்டு நாள் முள்ளுத்தாடியுமாக, காலில் ஷூ போடாமல் செருப்பு போட்டு நடமாடுகிறவர்கள் தெற்கே இருந்து புதிதாக தில்லி போன என் போன்ற இளம் அதிகாரிகள்தான்.

நான் ஷூ போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு சாயம் போன ஸ்வெட்டர் கூட மாட்டியிருக்கிறேன். முத்தச்சன் போட்டுக்கொண்டு பரம்பரைச் சொத்தாக விட்டுப் போனது அது. காலரில் சியவனப்ராஸ லேகியம் மணக்கும்.

“போத்தி, வா, புறப்படலாம். இப்பவும் போகாட்டா தாபா அடைச்சுடுவான்.”

ஜகதீஷ் என் தோளில் தட்டி எழுப்ப, கொஞ்சம் தடுமாறி அலைபாய்ந்து அப்புறம் நிமிர்ந்து நின்றேன்.

மொத்தம் பத்துப் பேர் கூடியிருக்கிறோம். எல்லோரும் எங்கள் பேங்க் அதிகாரிகள். சீஃப் மேனேஜரும் உண்டு. இதில் எட்டுப்பேர் நான் வேலை பார்க்கும் லாஜ்பத் நகர் கிளையிலும், ஒருத்தர் கோல்ப் லிங்க்ஸ், இன்னொருத்தர் ஜன்பத் பிராஞ்சில் இருப்பவர்கள். என்னைச் சேர்த்து நான்கு தெற்கத்தியர், நான்கு பஞ்சாபி, ஒரு வங்காளி, ஒரு

குஜராத்தி. எல்லோரும் ஆண்கள். பெண்கள் மேல் மோகம் சற்றும் கலையாதவர்கள்.

என் ஸ்கூட்டர் இன்னும் வந்து சேரவில்லை. சொந்த ஊரிலிருந்து சென்னை, அங்கேயிருந்து இரண்டாயிரம் கிலோமீட்டர் வடக்காக நகர்ந்து தில்லி. அந்தப் பழைய ஸ்கூட்டர் பயணம் தாங்குமா?

பெட்ரோலை சுத்தமாக வடித்துவிட்டு, சணல் சாக்கு வைத்து சக்கரங்களையும், உடல் பகுதியையும் மூடிக் கட்டி, ஹேண்டிலில் இன்னொரு துணியால் இறுக்கக் கட்டி, கண்ணாடியைப் பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்டு ஊரிலிருந்து, கூட்ஸ் வண்டியில் ஸ்கூட்டரைத் தூக்கிப் போடும்போது என் உடம்பு வலித்தது. நலமாக வந்து சேரவேண்டும்.

“போத்தி, பின்னாலே ஏறிக்கோ. தூங்கிடாதே. மப்பு கம்மிதானே?”

ஜஸ்பீர் விசாரித்தான். சர்தார்ஜி. எத்தனை குடித்தாலும் ஒரு தடவை பாத்ரூம் போய்விட்டு வந்தால் நிதானத்துக்கு வந்துவிடுவான். பேச்சு மட்டுமில்லை, வண்டி ஓட்டுகிறதும் நிதானமாகத்தான் இருக்கும். ஆபீஸில் வேலை பார்க்கும்போதும் அந்த நிதானம் தட்டுப்படும். அங்கே பரபரப்பு இல்லாமல் தன் வேகத்தில் அவன் வவுச்சர் ரிலீஸ் செய்து கொண்டிருக்க, சீறிச் சினந்து வாடிக்கையாளர்கள் வெளியே நிற்பார்கள். ஒருத்தரும் ஜஸ்பீரோடு ஒரு வார்த்தை சண்டை பிடிக்கமாட்டார்கள். அவன் உடல் வாகு அப்படி. இந்தக் கூட்டத்திலேயே சீனியர். முப்பதுகளில் அடியெடுத்து வைத்தவன். ஜஸ்பீருக்கு மேலதிக சீனியர், சீஃப் மேனேஜர்தான். நாற்பதுகளில் நடமாடும் அங்கிள்.

சீஃப் மேனேஜர் காரைக் கிளப்ப ஐந்து நிமிடம் ஆனது. பேங்க் உடமையான அம்பாசடர் கார். லாஜ்பத் நகர் கிளையில் சீஃப் மேனேஜராக வந்த நான்கு பேருக்கு அலுங்காமல் நலுங்காமல் பயணம் போக உதவி செய்த அந்தக் கார் அகர்வால் சாப் தலைமைக்கு வந்ததும் செல்ஃப் ட்ரைவிங் என்று அவரே ஓட்டிப் போகும்போது ஏகத்துக்குத் தகராறு செய்கிறது.

மேனேஜரின் கார் டிரைவர் என்ற உத்தியோகம் இல்லாமல் போனதால் டிரைவராக இருந்தவர் ரீஜனல் ஆபீஸில் மெசஞ்சராக அலைய வேண்டாமல் நிம்மதியாக வேலை செய்கிறாராம். அவரைத் திரும்பக் கூப்பிட்டு கார் பற்றிய பிரச்சனைகளை அவரையே பார்த்துக்கொள்ள விடலாமே என்று எல்லோரும் அகர்வால் சாப் அவர்களைக் கேட்டு அலுத்துப் போயிற்று.

நிறையப் புகையை குளிர்கால இரவில் கிளப்பிக்கொண்டு மேனேஜர் கார் ஸ்டார்ட் ஆக, ஜகதீஷும் அவசரமாக ஏறிக்கொண்டான். வாசலில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரும், மோட்டார் பைக்குகளும் உயிர்பெற்று சீறிப் பாய அந்த ஊர்வலம் லாஜ்பத் நகர் பகுதி ஒன்றிலிருந்து சென்ட்ரல் மார்க்கெட்டுக்குப் புறப்பட்டது.

சென்ட்ரல் மார்க்கெட்டில் நுழைந்ததுமே இடது வசத்தில் பஞ்சாபி தாபா. மற்ற எந்த நேரத்தையும் விட அதிகக் கூட்டத்தோடு காணப்பட்டது. ராத்திரி பத்தரை மணிக்கு விழுங்கிய விஸ்கி உடம்புக்குள் ஏதேதோ ரசாயனங்களைக் கட்டவிழ்த்துவிட்டு என்னை முழுக்க ஆக்கிரமித்திருந்தது.

மிகச் சிறந்த அழகியாக நான் கருதும் பாயல் அஹுஜாவைப் பற்றிய சீரிய சிந்தனை ஒன்றை எல்லோரும் அறிந்துகொள்ள ஏதுவாக சத்தமாகச் சொல்ல, ஜகதீஷ் அவசரமாக என் வாயைப் பொத்தினான்.

சீஃப் மேனேஜர் ஜெய்ராம்ஜிகி என்று உரக்கச் சொல்லியபடி இரண்டு பெஞ்ச் பின்னால் போய் உட்கார்ந்து கொண்டார். என்னிடம் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார் அவர்.

“எமர்ஜென்சி டைம். அதுவும் இது டில்லி. ஆபாசமா பேசினா சென்ட்ரல் மார்க்கெட்டை சுத்தி ஓட வச்சுடுவாங்க. மொட்டைக் கட்டையா ஓடணும்.”

ஆக, போதை தலைக்கேறிய ஒரு வெள்ளிக்கிழமை ராத்திரியில், பரபரப்பான லாஜ்பத் நகர் சென்ட்ரல் மார்க்கெட் நுழைவாயிலில் பெரிய சூளைகளில் கோழியும் உருளைக் கிழங்கும் ஆட்டு மாமிசமும் வெந்து

கொண்டிருக்கும் பஞ்சாபி தாபா என்ற சாப்பாட்டுக்கடை மர பெஞ்சில் எமர்ஜென்சி என்னிடம் திரும்ப வந்து சேர்ந்தது.

“படுத்துக்கணும்னா தப்பா? எந்த ஊரிலே?” நான் கேட்டேன்.

லட்சுமண் கௌடா முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டு ஜகதீஷிடம் அதை விசாரிக்க, அவன் என் தோளில் தட்டிச் சொன்னான்:

“தனியா படுத்துக்கணும்னா பிரச்சனையே இல்லே. சக சயனத்துக்கு குடும்ப ஸ்த்ரீ வேணும்னுதான் கேட்கக் கூடாது. துன்மார்க்கா, அவளை விடுடா.”

விசிறியடித்து ருமாலி ரொட்டி சுட்டுக் கொண்டிருந்த அழுக்கு சிவப்பு ஸ்வெட்டர்காரன், கச்சிதமான பச்சை ஸ்வெட்டரில் சிரிக்கும் பாயல் ஆகி, ‘சாப்பிட்டு படுத்துக்கலாம்’ என்றாள். ‘படுத்துக்கிட்டு சாப்பிடலாம்’ என்றேன்.

“இவன்களை அனுப்பிச்சுடு.”

நான் தலையாட்டியபடி உட்கார்ந்திருந்தேன்.

“போத்தி முழு மப்புலே.” ஜகதீஷ் அறிவிக்க விவஸ்தையே இல்லாமல் எல்லோரும் கைதட்டினார்கள். நானும்.

ஜஸ்பீர் எங்கள் கூட்டத்தில் இருந்து விலகி, எதிரே மிட்டாய்க் கடையிலிருந்து சுடச்சுட காரட் அல்வா ஒரு பெரிய அட்டை டப்பா நிறைய வாங்கி வந்தான்.

சீஃப் மேனேஜர் ருமாலி ரொட்டியை அதற்குள் அவசரமாகச் சாப்பிட ஆரம்பித்திருந்தார். மென்றபடியே என்னைப் பார்த்து, “போத்தி, உனக்கு இந்தி பேச மட்டும் தெரியுமா, எழுதவுமா?” என்று விசாரித்தார்.

“பேச மட்டும் வரும் சார், அதுவும் பம்பாய் மோஸ்தர் அப்பண், ஏ பாஜு , ஓ பாஜு, பரோபர் ஹோ கயா இந்தி” என்றேன்.

“எத்தனை ஏ ஜோக் சொல்லத் தெரியும்?” அவர் கேட்க மனதில் கணக்குப் போடத் தொடங்கினேன்.

“ஒரு நூறு?” இருக்கலாம்.

“நீ என்ன பண்றே, அதெல்லாத்தையும் பாம்பே இந்திக்கு மாத்தி, நாம தண்ணி போடறபோது பாயல், சஷி, ஷபானா, ஊர்மிளா, நஜ்மா, வீரா... இப்படி யார் நினைவுலே வந்தாலும் உடனே சொல்லு. வடிகால் அதுதான் உனக்கு இனிமேலே.”

ஜஸ்பீர் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தான். அந்த ஆறடி சர்தார் குனிந்து நிமிர்ந்து சிரித்தது பார்க்க சுவாரசியமான காட்சியாக இருந்தது.

எல்லோருக்கும் ரொட்டியும், ஷாஹி பனீரும் மட்டன் குருமாவும் வந்து சேர்ந்தன. பசி உக்கிரமாக மேலெழ உண்ணத் தொடங்கினேன்.

ஜஸ்பீர்தான் மோட்டார்பைக்கில் பின்னால் ஏற்றிக்கொண்டு கொண்டுவந்து குவார்ட்டர்ஸில் விட்டான். நல்லவேளை வீட்டுச் சொந்தக்காரர் வாஸ்வானி இரும்புக் கதவைச் சார்த்தவில்லை. இல்லாவிட்டால் நான் கதவில் ஏறி அந்தப்பக்கம் பத்திரமாகக் குதிக்கும்வரை ஜாக்கிரதையாகப் போய்ச் சேர்கிறேனா என்று பார்த்துக்கொண்டு நிற்பதும் ஜஸ்பீரின் வேலையாகும்.

அடுத்த நாள் சனிக்கிழமை. அரைநாள் ஆபீஸ், ஒன்பதிலிருந்து ஒரு மணி வரை நடந்தேற வேண்டியது, அதுவும் இதுவுமாக ஏதேதோ சில்லரை வேலைகள் வந்து குவிய மூன்று மணிக்கு அன்றைய வேலை முடிந்தது.

“போத்தி, பஹாட்கஞ்ச் போறேன், வர்றியா?” ஜஸ்பீர் கேட்டான்.

“அங்கே என்ன இருக்கு?”

“நியூ டெல்லி ரயில்வே ஜங்ஷன். என் புவா, ரோஷ்னி ஆண்ட்டி சிம்லா போக ரிசர்வ் பண்ணணும்.”

“என் ஸ்கூட்டர் வந்துடுச்சான்னு கூட பார்க்கணும்” என்றேன்.

புதுதில்லி ரயில்வே ஜங்ஷனில் நுழைந்ததுமே, சட்டென்று கவனத்தில் பட்டது இத்தனை கூட்ட நெரிசல் உள்ள இடம் ஒரு காகிதக்

குப்பையோ, பிளாஸ்டிக்கோ, கந்தல் துணியோ வழியில் எங்கும் கிடக்காமல் சுத்தமாக இருந்தது.

மெட்ராஸ் சென்ட்ரல் ஸ்டேஷனில் ரயில் ஏறும்போது அந்தப் பெரிய நிலப்பரப்பு அங்கங்கே குப்பையோடுதான் இருந்தது. ரயில் நேரத்துக்கு வந்து, நேரத்துக்குக் கிளம்பினால் போதும் என்ற கவலையே அங்கே ரயில்வேக்காரர்களை முழுக் கவனத்தோடு கொண்டு செலுத்துவதாலோ என்னமோ, மற்ற எதையும் பற்றி அவர்களுக்குக் கவனிக்க நேரமில்லை.

அப்புறம் மதராஸிகள் சாத்விகமானவர்கள். தெருவில் ஒரு குப்பை கிடந்தால் மிதிக்காமல் விலகி நடந்து போவார்கள். ரொம்ப அதிகமாக இருந்தால் ஹிந்து பத்திரிகைக்கோ, எக்ஸ்பிரஸ்ஸுக்கோ 'லெட்டர்ஸ்டுதி எடிட்டர்' பகுதிக்கு ஒரு கடிதத்தை ஜாக்கிரதையான இங்கிலீஷில் எழுதித் தபால்பெட்டியில் போட்டுவிட்டு மறந்துவிடுவார்கள்.

இங்கே ஹிந்து பத்திரிகைக்கு எழுதமாட்டார்கள். காலையில் தினம், நான் முதல் மாடியில் குடியிருக்கும் வீட்டின் இரண்டாம் மாடி தனிக் குடித்தன வராண்டாவுக்குக் கீழே இருந்து வீசிப் போடும் இந்திப் பத்திரிகைக்கு எழுதலாம். குப்பை இல்லாவிட்டால் ஏன் எழுதவேண்டும்?

ஜஸ்பீர் ரிசர்வேஷன் கவுண்டருக்கு முன் போய் நின்றான். எட்டு ஜன்னல்களின் முன் பெரிய வரிசைகள். என்றாலும், வேகமாக அந்தப் பாம்புகள் நகர்ந்து கொண்டிருந்தன.

வந்து சேரவேண்டிய ரயில்களின் பட்டியல், புறப்பட வேண்டியவற்றின் விவரம் எழுதிய இரண்டு பெரிய போர்டுகளை ஒரு நிமிடம் நின்று படித்தேன்.

ஒரு நிமிடம் கூட ஒரு வண்டியும் தாமதமாக வரவில்லை. ஏதாவது ரயில் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே வந்து சேர்ந்துவிட்டதா? நேரத்துக்கு முன் கிளம்பிவிட்டதா? தெரியவில்லை. எமர்ஜென்சியில் இரண்டுக்கும் அனுமதி கிடையாது.

'பேச்சைக் குறை, வேலையைப் பார்' அறிவிப்புப் பலகைகள் அந்நியமாக இந்தியில், நியான் விளக்குகளோடு எழுந்து நின்று

பயமுறுத்துகின்றன.

மாலை ஐந்து மணிக்கே இருட்டிக்கொண்டு வந்தது. ஜஸ்பீரும் நானும் சரக்கு டெலிவரி ஆபீஸைத் தேடிக் கண்டுபிடித்து அங்கே போக, ஸ்கூட்டர் வந்திருந்தது. புக்கிங் ரசீது, ஆர்.சி புத்தகம் எல்லாம் கொடுத்து சோதித்த பிறகு அடுத்த பத்தாவது நிமிடம் ஸ்கூட்டர் டெலிவரி ஆனது.

பெரிய சரக்கு வண்டியில் ஏற்றி அதை நாங்கள் நின்ற இடத்துக்கே ரயில்வே ஊழியர்கள் இருவர் கொண்டுவந்து இறக்கினார்கள்.

இவர்களுக்கு பக்ஷீஷ்? நான் ஜஸ்பீரைப் பார்த்தேன்.

"அப்படின்னா என்ன?" என்று கேட்டான் அவன். அந்த ஊழியர்கள் போயிருந்தார்கள்.

"Emergency at work - எமர்ஜென்சி அட் ஒர்க்."

ஜஸ்பீர் சொன்னபோது ஆர்ட்டிகிள் an சேர்த்து an emergency என்று சொல்லவேண்டியதில் an முழுங்கப்பட்டு பயமுறுத்துவதாக ஒலித்தது அது.

"போத்தி, சாவி கொடு" ஜஸ்பீர் கேட்டான்.

நான் மும்முரமாகச் சாக்குத் துணிகளை எடுத்துக் கொண்டிருந்தேன். ஷீல்டில் வலது பக்கம் சிறிய நசுங்கல் தவிர வேற ஒரு சேதாரமும் இல்லை ஸ்கூட்டருக்கு. கையோடு கொண்டுபோயிருந்த கண்ணாடியை மாட்டி ஸ்க்ரூவைத் திருகிவிட்டு ஜஸ்பீரிடம் சாவியை எடுத்துக் கொடுத்தேன்.

பிரியமான நண்பன் மீண்டும் வந்து கூடச் சேர்ந்துகொண்ட சந்தோஷமும் நிம்மதியும் எனக்கு வந்தது.

ஷீலா தியேட்டர் பக்கம் ஒரு பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட வண்டியைத் தள்ளிக்கொண்டே போனோம். சத் ஸ்ரீ அகால் என்று எதிர்கொண்ட சர்தார்ஜி பெரியவர், முகத்தில் பெட்ரோல் அடிக்கத் தயாராக பம்ப் குழாயோடு சிரித்தபடி வரவேற்றார்.

“சித்தப்பா, நான் அப்பாவி ஆம் ஆத்மி. பெட்ரோல் அடிச்சு கொளுத்திடாதீங்க.”

ஜஸ்பீர் இரண்டு கைகளையும் தூக்கி இறைஞ்ச நான் ஸ்கூட்டர் கவிழ்ந்து விடக்கூடாது என்ற பயத்தில் முன்னால் பாய்ந்தேன். “ஏன் கவலைப்படறே?” ஜஸ்பீர் லாகவமாக அதைக் காலால் தாங்கி நின்றான்.

“அஞ்சு லிட்டர் போடுங்க, சர்தார் சாகப்” என்றேன்.

“பைத்தியமா உனக்கு. வண்டி இப்போதான் ஊர்லே இருந்து வந்திருக்கு. ஓடறதான்னு பார்க்கணும். சரியா ஓடலேன்னா மெக்கானிக் கிட்ட தரணும். சொல்லப்போனா நல்லா ஓடினாலுமே ஒரு சர்வீஸ் முழுக்க பண்ணிட்டு ஓட்டறது நல்லது. பெட்ரோல் டாங்க் நிறைச்சு சர்வீஸுக்கு யாராவது விடுவாங்களா என்ன?”

இரண்டு லிட்டர் பெட்ரோல் மட்டும் பெட்ரோல் பங்கில் போட்டு வண்டியைக் கிளப்பினோம். ஆச்சரியகரமாக இரண்டே உதையில் வண்டி ஸ்டார்ட் ஆகிவிட்டது. நான் ஓட்ட ரெடியாக நின்றேன்.

“வேணாம். நீ மெட்ராஸ்லே ஓட்டியிருக்கலாம், இங்கே ட்ராஃபிக்கே வேற மாதிரி. ஓரமாப்போனா பின்னாலே வந்து மோதிடுவாங்க. முன்னாலே இருந்து குறுக்கே வந்து முட்டிடுவாங்க.”

“பின்னே எப்படித்தான் போக?”

டவுன் பஸ் ஒன்று மோதுவதுபோல் வளைவு திரும்பி வேகமாக வந்து பின்னால் உரசிக்கொண்டு போனது.

“பார்த்தியா, நிக்கறபோதே இப்படி, ஓட்ட ஆரம்பிச்சா?”

ஜஸ்பீர் முன்னால் உட்கார்ந்து என்னைப் பின்னால் பில்லியனில் அமரச் சொன்னான். எப்படித்தான் ஓட்டறதாம்? தள்ளிக்கிட்டே லாஜ்பத் நகர் போயிட வேண்டியதுதானா?

“ஒரே வழி நட்ட நடு ரோடுலே ஓட்டறதுதான். சிவப்பு விழுந்தா முன்னாலே போறவன் நின்னா மட்டும் நின்னா போதும். மஞ்சள் எல்லாம் கணக்கிலேயே வராது. நடுவிலே போனாத்தான் நீ

வந்துட்டிருக்கேன்னு தெரியும். அப்புறம் ஜாக்கிரதையா இருப்பான், எதிரே ராங்க்லே வர்றவனும் பின்னாலே தொரத்தற பஸ்ஸும். இன்னொண்ணு, எவ்வளவு ஹாரன் சத்தம் கேட்டாலும் கவலையே படக்கூடாது. நம்ம கிட்டே ஹாரன் இருந்தா நாமளும் அடிப்போம் நமக்கு இல்லே. அவனுக்கு இருக்கு, அடிக்கறான். அம்புட்டுத்தான்.”

வண்டி கிளம்பி ஷீலா தியேட்டர் பக்கம் திரும்பப் போனது.

“இந்தியாவிலேயே முதல் எழுபது எம் எம் திரை வந்த தியேட்டர் இதுதான். இங்லீஷ் படம்தான் எமர்ஜென்சி வந்த வரைக்கும் போட்டுட்டிருந்தாங்க. இப்போ...”

ஜஸ்பீர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு சிறிய ஊர்வலம் கடந்து போனது. தோளில் தமுக்கு மாட்டிய இரண்டு பையன்களும், பறையோடு ஒரு இளைஞனும் வேகமாக அடித்துப் போக முன்னால் இரண்டு பையன்கள் பெண் வேடம் போட்டு ஆடிக்கொண்டு போனார்கள். பின்னால் வந்தவர் பப்பரமுட்டு கலர் நோட்டீஸ் விநியோகித்தபடி போனார்.

ஊரில் நான் குழந்தையாக இருந்தபோது, அது இருபது வருடம் முன் இருந்த சூழ்நிலை. இந்தியத் தலைநகரில் கலர் நோட்டீஸ் என்னைத் தொடர்ந்து வந்து குழந்தையாகக் கைநீட்டி அலைபாய வைத்தது.

“போத்தி, ரொம்ப ஆடாதே. வண்டி சாஞ்சிடும்.”

ஜஸ்பீர் வேகத்தை ஆகக் குறைத்தபடி சொல்ல, இரண்டாம் கியரில் லாம்ப்ரட்டா தடுமாறி தீனமாக அலறியது. கொஞ்சம் நிறுத்திப் போகலாம் என்றபடி காலை ஊன்றினான் அவன்.

அந்த முடுக்குச் சந்தில் பிரதானமாக ஒரு பானிபூரி கடை இருந்தது. பக்கத்தில், தாமிரப் பாத்திரத்தில் வெற்றிலை மிதக்க தாம்பூலம் விற்கும் பான் கடை. சுனில் தத் ஃபுல் சூட்டில் நிற்கும் படம் எழுதிய விளம்பரப் பலகையோடு ஒரு தையற்கடை அடுத்து. சட்டென்று சந்து அங்கே முடிய எதிராக ‘னாய் கா துக்கான்’ என்ற முடிதிருத்தகம். பானிபூரி கடை தவிர மற்ற கடைகள் எல்லாம் அடைத்திருந்தன.

என்ன சினிமா? ஜஸ்பீர் கேட்டான். நோட்டீஸில் படித்துச் சொன்னேன் -

"லைலா மஜ்னு. ரிஷிகபூர், ரஞ்சிதா, டானி டென்ஸோங்க்பா."

"ரஞ்சிதா இல்லே, ரஞ்சிதா கவுர். சர்தாரிணி." ஜஸ்பீர் பிரியத்தோடு சொன்னான்.

"ஏன் இன்னும் கிராமத்திலே சினிமா விளம்பரம் பண்ற மாதிரி செஞ்சுட்டிருக்காங்க?" நான் கேட்டேன்.

"அவங்க ஆடியன்ஸ் கிராமத்திலே இருந்து வந்து இங்கே எடுபிடியா, சர்வரா, ஆபீஸ் பியூனா, பேப்பர் போடறவனா வேலை பார்க்கறவங்க. அவங்க தொகை குறைஞ்சிட்டிருக்கு."

"ஏன் குறையணும்? வேற இடத்துலே வேற வேலை கிடைச்சு போறாங்களா?"

"அப்படி இருந்தாத்தான் நல்லா இருக்குமே..."

அவன் பானிபூரிக்கு வாயைத் திறக்க அப்புறம் சத்தம் இல்லை.

"ஏன் ஜனம் கொறஞ்சுடுச்சு?"

மீண்டும் கேட்டபோது அவன் சொன்ன பதில், "குடும்பக் கட்டுப்பாடு." அவ்வளவு பேரா செஞ்சுக்கிட்டாங்க?

ஜஸ்பீர் காசு கொடுத்துவிட்டு வண்டியை ஸ்டாண்ட் எடுக்கும்போது சொன்னது - "செஞ்சு விட்டாங்க."

என்னது?

"அஞ்சம்சத் திட்டத்திலே நாலாவது அம்சம் என்ன?"

என்னைத்தான் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் சொல்வேனே. "குடும்ப நலன்."

"வேலைக்கு ஆகாது. என்ன மீனிங்? அதைச் சொல்லு."

"குடும்ப நலன் என்ற குடும்பக் கட்டுப்பாடு."

"உங்க ஊர்லே குடும்பக் கட்டுப்பாடு உண்டா?"

எனக்கு காந்தி வாத்தியார் ஆள் பிடிக்க அலைந்தது நினைவு வந்தது. கூடவே கலெக்டர் மோகனகிருஷ்ணன் அது வேண்டாம் என்று நிறுத்தி வைத்ததும். சொன்னேன்.

"அந்த மாதிரி இங்கே ஒரு கலெக்டர் என்ன, ஜனாதிபதி கூட சொல்ல முடியாது."

முத்தார் சாயபுவின் குப்பி வீட்டுக்காரர் பேச்சு இப்போது நினைவு வந்தது. எல்லாம் ஒரே நேர்கோட்டில் சேர்கிறது. எமர்ஜென்சி என்று அந்தக் கோட்டைச் சுற்றி ஒரு வளையம் விரிவாகிக்கொண்டே போகிறது.

"போன வருஷம் ஜும்மா மஜீத் பின்னாடி இருக்கற குடிசை ஏரியாவிலே வலுக்கட்டாயமா ஆட்களை லாரியிலே ஏத்திப் போய் அறுத்து விட்டு ஆயிரம் ரூபாய் ஆளாளுக்குக் கொடுத்திருக்காங்க. அதுவும் பல கைகளைக் கடந்து அவங்களுக்குப் போய்ச் சேரும்போது வெறும் சில நூறு மாத்திரம்."

ஐயய்யோ. எமர்ஜென்சி தாமதமாக உணரப்படும் மிளகாய்க் காரம்போல் தலைக்குள் தாக்கியது.

"இது ஒண்ணும் இல்லே. இப்படி அறுத்து விட்டு அனுப்பினதாலே பயந்து போய் உத்தர பிரதேசம், பீகார்லேருந்து வந்து வீட்டுவேலை செய்யற ஒரு பெரிய கூட்டமே ஊருக்குத் திரும்ப ஓடிப் போயிடுத்து. தில்லியிலே வீட்டுவேலை உதவிக்கு இப்போ ஆளில்லை."

நான் தொலைவில் வெறித்தபடி இருந்தேன். நகர்ந்து போன சினிமா ஊர்வலத்தின் சத்தம் தூரத்தில் கேட்டது.

"இஞ்சின் இப்போ சூடு குறைஞ்சிருக்கும்."

ஜஸ்பீர் சொல்ல அந்த சூடெல்லாம் மேலே ஊர்ந்து ஏறித் தகிக்கிறதாக உணர்ந்தேன்.

ஜஸ்பீர் ஓட்டிய வேகத்துக்கு ஈடு கொடுத்து என் லாம்ப்ரட்டா சீராக நகர்ந்து கொண்டிருந்தது. காற்று இல்லாத, விளக்குகள் மெல்ல ஒளிரத் தொடங்கிய குளிர்கால முன்னிரவு. ஜஸ்பீர் பேசிக்கொண்டே வந்தான்.

“ஆபீஸ்லே வேலை பார்க்கற நேரமும் நண்பர்களோடு இருக்கற நேரமும் தவிர சதா வீட்டுக்கு ஓடி குடும்பத்தோடு இருக்கணும்னு ஒரு படபடப்பு எல்லோருக்கும் வந்திருக்கு. எல்லோரும் எமர்ஜென்சியிலே ஏதோ ஆபத்தை எதிர்பார்க்கறாங்க. போதாக்குறைக்கு லோக்சபா ஆயுசை இன்னும் ஒரு வருஷம் நீட்டிச்சுட்டாங்க. ஏற்கெனவே இப்படி சட்ட விரோதமான, ஜனநாயக விரோதமான நீடிப்புலேதான் அந்த அவை இருக்கு. நோ எலெக்ஷன் இனிமேல். இருக்கற கொஞ்சநஞ்ச உரிமையும் இனி பறி போகும். லாங் லிவ் டெமாக்ரசி.”

வண்டி நின்றுவிட்டது. லோதி கார்டன் பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாத பெரிய வீதியில் ஸ்கூட்டர் நின்று போய் நாங்கள் மட்டும். பெட்ரோல்? இருக்கு. ரிசர்வ்லே வந்து கூட முக்கால் லிட்டர் வரும். பின்னே?

தள்ளுங்க சார் தள்ளுங்க... தக்கா லகாயியே சாப்... தக்கா லகாயியே.

ஜஸ்பீரை சும்மா வரச்சொல்லிவிட்டு நான்தான் ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு போனேன்.

“இங்கே, அடுத்த லெஃப்ட்லே திரும்பி உடனே ரைட் எடுத்தா ஒரு மெக்கானிக் கி துக்கான் உண்டு.”

ஜஸ்பீருக்கு தில்லியில் ஸ்கூட்டர், மோட்டார் பைக் மெக்கானிக்குகள் கடை வைத்திருக்கும் எல்லா இடமும் தெரிந்திருந்தது. இவன் கூட வந்தது என் நல்ல காலம். தனியாக நான் ஒன்றும் செய்திருக்க மாட்டேன். நவம்பர் குளிரும், தில்லி இரவும், நின்று போன ஸ்கூட்டரும் என்று கணையாழிக்கு மனதில் புதுக்கவிதை எழுதிக் கொண்டிருந்திருப்பேன்.

பத்துக் குறடுகளையும், ஸ்பேனர்களையும் சுவரில் மாட்டிக்கொண்டு தலையில் சிகையை வெள்ளைத் துணியால் கட்டிய சர்தார் பையன்கள் கடையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். நடுவயது சர்தாரும் அவர் மனைவியும் சேர்ந்து ஒரு மோட்டார்பைக்கில் சக்கரத்தைப் பொருத்தி கோட்டம் பார்த்து சரிசெய்தபடி ‘வாஹே குரு’ என்று குரு

வந்தனையோடு வரவேற்றார்கள் ஜஸ்பீரை. ராம்ராம் ஜி என்று என்னையும்.

“இதென்ன, வெடிமருந்து எல்லாம் கொண்டுவந்திருக்கே...”

சர்தார் இந்தியில் சொல்லிவிட்டு, கால் சுன் என்று பஞ்சாபிக்குத் தாவி விட்டார். அவர் மனைவி “பைட்டியே பாய்சாப்” என்று அன்போடு ஒரு ஸ்டூலை ஒர்க்ஷாப் களேபரங்களுக்கு இடையே நகர்த்தினாள்.

என்ன வெடிமருந்து? என் ஸ்கூட்டர் நம்பர் ப்ளேட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு சிரித்தாள் அவள்.

டி.என்.டி என்று தமிழ்நாடு, திருநெல்வேலி ரெஜிஸ்ட்ரேஷன் வண்டி. ஓ, டிஎன்டி, ட்ரை நைட்ரோ டொல்யூன். வெடிமருந்து. விவகாரமான சர்தார்.

அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். அந்தப் பெண் வரிசையாக இரண்டு பெரிய மோட்டார் சைக்கிள்களை ஓட்டி வந்து உள்ளொடுங்கி நிறுத்தினாள். பையன்கள் அவளிடம் சொல்லிக்கொண்டு இருட்டில் நடந்து போனார்கள். நாங்கள் நான்கு பேர் மட்டும், கதவுகள் அடைக்கத் தயாரான ஒர்க்ஷாப்பில்.

அவசரமான பரஸ்பர அறிமுகங்கள். வண்டியை இனிமேல் பழுது பார்க்க முடியாது. நாளைக்குத்தான். இல்லை, நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை, நாளை மறுநாள் சர்தார் லுதியானா போகிறார். புதன்கிழமை சாயந்திரம் வண்டி ரெடியாக இருக்கும்.

“வாங்களேன். சாய் குடிச்சிட்டு போகலாம்” என்றார் சர்தார்.

“வீடு கடைக்குப் பின்னால்தான் இருக்கு, வாங்க... வேற எங்கே இந்தக் குளிர்லே இஞ்சி சாயா கிடைக்கும்?” சர்தாரிணி கூப்பிட்டாள். ஜஸ்பீரைப் பார்த்தேன். போகலாம் என்றான்.

“தமிழ்நாட்டிலே எல்லாம் எப்படி இருக்கு?”

வீட்டில் மோடாவை இழுத்துப் போட்டுவிட்டு சர்தார்ஜி விசாரித்தார். அவ்தார் சிங். அதுதான் அவர் பெயர்.

“எல்லாமே ரொம்ப பாசிட்டிவ் ஆகத்தான் இருக்கு. அங்கே போய் இங்கே நிலவர பயத்தைச் சொன்னா நம்பக்கூட மாட்டாங்க” என்றேன்.

“உங்களுக்கு, மதராஸ்லே எப்பவும் கஷ்டப்பட வேண்டாத சூழ்நிலை. வடக்குலே தொடர்ந்து வந்த யுத்தத்திலே ஒண்ணு கூட விந்திய மலைக்கு அப்பால் நீண்டு போகலே. சுதந்திரப் போராட்டத்திலே கஷ்டப்பட்டீங்க. ஆனா அங்கே தீவிரவாதம் தலை தூக்கினது அபூர்வமாகத்தான்.”

சர்தாரிணி சிரிப்பு மாறாமல் சொன்னாள். அமர்ஜீத் கௌர் அவள் பெயர்.

“ஏற்கெனவே தாடிவாலா எல்லாரும் விரோதின்னு பார்க்க ஆரம்பிச்சிருக்காங்க. ஆமா, சீக்கியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இங்கே இனியும் இருக்க முடியுமா இல்லே பிரிவினை நேரத்திலே போனது மாதிரி போகணுமான்னு தெரியலே”, அவ்தார்சிங் சொன்னார்.

“1947ல் சர்தார்களும் இந்துக்களும் குடும்பத்தோட லாகூர்லே இருந்து தில்லி வந்தபோது முஸ்லிம்கள் தில்லியில் இருந்து லாகூர் போனாங்க. இப்போ சர்தாரும் முஸ்லிமும், ரெண்டு பேருமே தில்லியிலே இருந்து சேர்ந்து எங்கேயோ போகவேண்டி வரும் போல.”

சர்தாரிணி சாயாவுக்காக தேநீர் இலையும், பாலும் சேர்த்து அடுப்பில் கொதிக்க வைத்தபடி கூறினாள்.

“வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா சொல்லுது இது வரைக்கும் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேர் எமர்ஜென்சியிலே மிசாவிலே கைது ஆகி உள்ளே இருக்காங்களாம்” என்றேன். அவ்தார் சிங் சிரித்தார்.

“அதிலே நாற்பதாயிரம் நாங்கதான், தான் உண்டு வேலை உண்டுன்னு இருக்கப்பட்ட சர்தார்ஜிகள். இது பெரிய வேடிக்கை. ஏன்னா, இந்தியாவோட ஜனத்தொகையிலே ரெண்டு சதவிகிதம்தான் நாங்க. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்தா ஒரு சர்தாரை முழுசாக் கூட அரெஸ்ட் பண்ண முடியாது. யாராவது ஒரு சர்தார்ஜியோட தலப்பாவை மட்டும்தான் அரஸ்ட் செஞ்சிருக்கணும், தலப்பாவுக்கு உள்ளே தலை

இருந்தாலும் இல்லாம போனாலும் பெரிய வேறுபாடு எதுவும் வந்துடாது." சிரித்தார்.

Self depreciative humor. தன்னையே கிண்டல் செய்துகொள்ளும் நகைச்சுவை. அதுதான் உங்கள் எல்லோரையும் இன்னும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது சர்தார் சாப்.

சர்தாரிணி மணக்க மணக்க சாயா எடுத்து வந்தாள். வாஹே குரு. ஜஸ்பீரோடு நானும் வாழ்த்தினேன்.

ஒரு வாய் சூடான டீ குடித்தபடி அவ்தார் சிங்கைக் கேட்டேன்:

"சேர்ந்து எதிர்க்காம, கூட்டமா ஓடிப்போக பயம் எப்படி வந்தது? ஏன் வந்தது?"

"பயப்பட வச்சுட்டாங்க. பயம் வந்தா எல்லோரும் எதிரியா தெரிவாங்க. அடி எடுத்து வைக்கறபோது நம்பிக்கை விலகிப் போயிடும். அடுத்த அடி எங்கே கொண்டுபோகும்னு தெரியாத, நிச்சயமில்லாத நிலைமை. சாமானியனா அவன் பாட்டுக்கு ஏதாவது வேலை பார்ப்பான். எப்போவாவது ரிலாக்ஸ் பண்ணணும்னா சரக்கு அடிப்பான். தியேட்டர்லே ரெண்டாம் ஷோ பார்த்து ராத்திரி திரும்பி வரும்போது சினிமா டிக்கெட்டை பத்திரமா பாக்கெட்லே வச்சுக்கிட்டிருப்பான். திறந்திருக்கற கடையிலே பன்னு பிச்சுத் தின்பான். டீ குடிப்பான். ஜர்தாபான் போடுவான். ஏக்தம் சிம்பிள் ஆத்மி இங்கே எல்லோரும். அவங்க சினிமா படம் பார்க்க வராம, ரெண்டாம் ஷோ நடத்த முடியலேன்னு தியேட்டர்லே நைட் ஷோவையே கேன்சல் பண்ணிட்டாங்க. ராத்திரி நடக்கற டீக்கடை க்ளோஸ். பான்கடை கிடையாது." சர்தார் சாப் மெல்லிய குரலில் பேசிப்போனார்.

"Cascading effect" என்றான் ஜஸ்பீர்.

"பயம் இருந்தா வீட்டை விட்டு வெளிக்கிளம்பவே யோசிப்பான். சினிமாவுக்கு எந்த ஷோ போகவும் பயப்படுவானே. அது ஏன் செகண்ட் ஷோ பார்க்க மட்டும் ஆள் வரல்லே?" நான் கேட்டேன்.

“செகண்ட் ஷோ படம் நடந்திட்டு இருக்கறபோதே எல்லாக் கதவையும் சார்த்தி, படம் பார்க்க வந்தவங்களை பெரிய பெரிய ட்ரக்குலே ஏத்திட்டு பரீதாபாத் கூட்டிப் போய் அறுத்து விட்டு அனுப்பிட்டாங்கன்னு வதந்தி...”

“இது அஞ்சம்ச திட்ட பயமுறுத்தலா?”

“ஆமா, அது இன்னும் கொடூரம். அரசாங்கத்திலே எந்தப் பதவியிலும் இல்லாத ஒருத்தர் ஆர்டர் போட்டு ஒரு அமைப்பே வாலைக் குழைச்சுக்கிட்டு நரகல் தின்கிற அவலம்.”

“மத்தியதர வர்க்கத்துக்கு கட்டாய குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் பயம் இருக்காதுதானே...” நான் கேட்டேன். அப்படி இல்லையென்று தலையாட்டினார் சர்தார்.

“சம்பளத்திலே பிடிச்சு சேர்த்துட்டு வர பிராவிடண்ட் ஃபண்டுலே லோன் வாங்கணுமா? குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செஞ்சுக்கிட்டதுக்கு சர்ட்டிஃபிகேட் காட்டினாத்தான் கடன் கிடைக்குமாம். வேலையிலே சேரணும்னா வெட்டி அறுத்துக்கணும்னு இனிமேல் புதுசா கண்டிஷன் போடலாம்”, அவர் நைந்த சிரிப்போடு சொன்னார்.

சர்தாரிணி ஃப்ரிட்ஜிலிருந்து பெரிய கத்தரிக்காய்களை எடுத்து வைத்துவிட்டு ரொட்டிக்கு மாவு பிசைய ஆரம்பித்தாள்.

“தீதி, என்ன மெனு?” ஜஸ்பீர் கேட்டான்.

“பேங்கன் பர்த்தா, பூந்தி ராய்தா. சாப்பிடறீங்களா?”

“கத்தரிக்காயைச் சுட்டுக் கறி, பச்சடி சாப்பிடறீங்களான்னு தீதி கேட்கறாங்க” ஜஸ்பீர் மொழிபெயர்க்க, நான் வேண்டாம் என்று மரியாதையோடு தலையசைத்தேன்.

ஜோடியாக அழுக்கு, பிசுபிசுப்பு, கூட்டம், புகை என்று பாராமல் முழுநாளும் அந்தத் தம்பதி தொழிலிலேயே அக்கறையாகச் செலவழித்திருப்பார்கள். ஓய்வும் தனிமையும் இல்லையோ அவர்களுக்கு இப்போது வேண்டுவது.

நாங்கள் சொல்லிக்கொண்டு கிளம்பினோம்.

காலையில் ஆபீஸ் கொஞ்சம் நெரிசல் குறைவாக இருந்தது. கவுண்டரில் இருந்தபடி பாயல் அஹூஜாவும் இன்னொரு சேவிங் கணக்கு கிளார்க் ஆன விமலும் - பெண்தான், விமல் மிஸ்ரா - தலையைத் திருப்பி என்னோடு அரட்டை அடிக்க ஆர்வம் காட்டினார்கள்.

“வீக் எண்ட் என்ன பண்ணினே?”

பாயல் ஆர்வத்தோடு விசாரிக்க, விமல் அவள் காதில் ஏதோ கிசுகிசுத்தாள்.

சீச்சீ என்றாள் பஞ்சாபி அழகி. என்னவாக இருக்கும்? மனசு தறிகெட்டு ஓடத் தொடங்கிவிட்டது. ஆபீஸ் நேரத்தில் அந்தச் சிந்தனைகள் வரவேண்டாம் என்று ஒதுக்கினாலும் திரும்பத் திரும்ப அவைதான் தலையெடுத்து வந்தன.

நல்ல வேளையாக மிசஸ் கன்னா பாஸ்புக் அப்டேட் செய்ய வந்தாள். கடற்படை மூத்த அதிகாரியின் மனைவி. தில்லியில் கடல் இல்லை என்றாலும் அட்மிரல் கன்னாவின் மனைவியுடைய அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது.

“ஒண்ணும் அவசரமில்லே, நாளைக்கு கொடு, போதும். பாயல், உன் காதுலே தொங்கட்டான் ரொம்ப அழகா இருக்கு. எப்படி இவ்வளவு அழகா இருக்கீங்க ரெண்டு பேரும்?”

மிசஸ் கன்னா கேட்டாள். ரொம்பவே நல்ல மூடில் இருந்தாள். அவளுடைய பாராட்டைப் பெற்ற இரண்டு சேவிங்ஸ் பேங்க் கிளார்க்குகளும் நெக்குருகி நின்றார்கள்.

“மதராஸி சோக்ராவுக்கு இதெல்லாம் அங்கே கிடச்சிருக்காது, என்னடா குழந்தே, சரிதானே?”

என்னை நோக்கி ஒரு கூக்ளி வீசி மூக்கைப் பெயர்த்துவிட்டுக் கிளம்பினாள் அவள்.

“வீக் எண்ட் நான் சினிமா போனேன். தரியாகஞ்ச் மோதி மஹால்லே பகல் சாப்பாடு. ஜீஜாஜியும் அக்காவும் கூப்பிட்டதாலே, கரோல்பாக்

வந்து, ரோஷன் டி குல்ஃபியிலே ஜில்லுனு குல்ஃபி. போதாக்குறைக்கு கோகோ கோலா."

பாயல் ரத்தச் சிவப்பில் லிப்ஸ்டிக் போட்ட உதடுகள் அசையச் சொன்னாள். அந்த அளவு லிப்ஸ்டிக் போட்டால் பேசும்போதே உதடு ஒட்டிக்கொண்டு விடலாம். நான் இங்கே பிறந்திருந்தால் இவளைக் கல்யாணம் செய்துகொண்டு, ஒட்டிய உதடுகளை என் உதட்டால் பிரித்து... வேணாம். ஆபீஸ்.

" நாங்களும் சினிமா போனோம்" என்றாள் விமல்.

"நானும் சினிமா போனேன், ஷீலா தியேட்டர்லே லைலா மஜ்னு."

இரண்டு பேரும் உடனே வெடிச்சிரிப்பு சிரித்தார்கள். பாயலால் பேச முடியவே இல்லை. அவள் குனிந்து கவுண்டரில் தலை சாய்த்துச் சிரித்ததைப் பார்க்கவே இன்னொரு தடவை ஷீலா தியேட்டர் போய் வரலாம்.

"அரிசியா, கோதுமையா?" விமல் கேட்டாள்.

"அரிசிதான்" என்றேன் புரியாமல். இன்னொரு சிரிப்பு.

"அது அஞ்சு கிலோ இது அஞ்சு கிலோ வாங்கியிருக்கலாமே" என்றாள் விமல்.

எதுக்கு, யார் கிட்டே?

"ஷீலா தியேட்டர் பக்கம் சின்ன வயசுப் பசங்க நடமாட யோசிப்பாங்க" என்றாள் அவள். அவ்தார்சிங் சொன்னது நினைவு வந்தது உடனே.

சோல்ஜர்ஸ் சேவா கரண்ட் அக்கவுண்ட் கஸ்டமர் மேஜர் வினோத் மாதுர் கம்பீரமாக கிட்டதட்ட ஆறரை அடிக்கு வந்து நின்று "குட் நூன் ப்யூட்டிஃபுல் லேடீஸ்" என்றார். என்னைப் பார்த்து "நல்லா இருக்கியாடா சேம்பேரி குண்டா" என்றார். யாரோ அவருக்குத் தப்புத் தப்பாகத் தமிழ் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒன்று இரண்டாக கஸ்டமர்கள் வந்து போக கவுண்டர் முடியும் பிற்பகல் இரண்டு மணி.

“ஷீலா தியேட்டர் உள்ளே போகலே. அதனாலே ஆப்பரேஷன் எதுவும் இல்லே. ஆனா, அதென்ன அரிசி, கோதுமை?” பாயலைக் கேட்டேன்.

இரண்டு பேரும் நெருங்கி வந்து என் எதிரே நின்று வா, சாப்பிட்டு வரலாம் என்று தள்ளிப் போகாத குறையாகக் கூடவே கூட்டிப் போனார்கள். ஜகதீஷ் மாடியில் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் பிரிவில் இருந்து இறங்கி வந்தவன் முறைத்தான்.

இன்றைக்கு சாயந்திரம் குடிகாரர் மாநாட்டில் இது சர்ச்சை செய்யப்படும். காதில் புகை வர இப்போதே பொறாமை மேலெழுந்து தெரிகிறது. இரண்டு அப்சரஸ்கள் அணைத்துக் கூட்டிப் போக எல்லோருக்கும் வாய்ப்பு உண்டா என்ன?

கேண்டீன் உள்ளே அடுப்பு அருகே போய் ஒரே நிமிடத்தில் சாம்பார் சாதமும் எலுமிச்சை சாதமும் இரண்டு பெரிய தட்டுகளில் குவித்து வாங்கி வந்தாள் பாயல். நீண்ட வரிசையில் சீஃப் மேனேஜரே காத்திருக்கிறார். அவர் பாயலாக இருந்தால் நிற்க வேண்டாம்தான்.

“இன்னிக்கு வேலை பார்க்கிற அம்மா வந்துட்டாங்க” என்றாள் விமல். ‘எமர்ஜென்சிப் பிசாசு, வீட்டை இடிச்சு இடத்தப் பிடுங்கி போதாக்குறைக்கு குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷனும் செஞ்சு விட்டுது. இப்போ வீட்டு வேலைக்கு இங்கே ஆள் கிடையாது’.

தெரியும் என்றேன். ஜஸ்பீர் சொன்னதைத் தொடர்ந்து, அதெல்லாம் உண்மைதான் என்று விவரித்துக் கூற இவர்களிடம் மேலும் தகவல் உண்டு.

“வீட்டு வேலை செய்யற ராம்துலாரி குடும்பத்தோட உத்தர பிரதேசத்திலே மொகல்சராய் பக்கம் சொந்த கிராமத்துக்கு போய் கிட்டதட்ட ஒரு வருஷம் ஆச்சு. இனிமேல் எங்கே திரும்பி வரப்போகுதுன்னு நினைச்சேன். வேலைக்கு வேற ஆளும் அமையலே. பார்த்தா, சனிக்கிழமை விடிகாலையிலே அந்தம்மா வந்து நிக்குது.

என்னன்னு கேட்டா கிராமத்திலே கஷ்டம் அதிகமா இருக்காம்" விமல் சொன்னாள்.

"போத்தி, சாப்பிடு. நாங்க பேசிக்கிட்டே சாப்பிடுவோம். நீ ஒரு வேலை செஞ்சா ஒண்ணுதான் செய்வே போல. பேசினா சாப்பிட மாட்டே. சாப்பிட்டுக்கிட்டிருந்தா பேச மாட்டே..." பாயல் சிரிப்பில் சிநேகிதம் தெரிந்தது.

"ஆமா, சூயிங் கம் மென்னுக்கிட்டு நடக்க எனக்கு கஷ்டம்."

எப்போதோ படித்து சரியான நேரத்தில் நினைவு வந்த ஜோக்கைச் சொல்ல அவர்கள் சிரித்ததில் புரை ஏறிவிட்டது பாயலுக்கு. மெல்லத் தலையில் தட்டினேன். ஊம் என்று உறுமல் பின்னால் இருந்து கேட்டுக் கடந்து போனது. சீஃப் மேனேஜர்.

"கிராமத்திலே என்ன பிரச்சனை?" விமல் கொண்டுவந்திருந்த ரொட்டியையும், சீத்தாப்பழ சப்ஜியையும் ரசித்து மென்றபடி கேட்டேன்.

"வேறென்ன, இந்த நாசமாப் போன எமர்ஜென்சிதான். வீட்டு ஆம்பளைங்க குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக்காட்டா கிராமத்துலே தங்க முடியாதுன்னு மிரட்டலாம். பகல்லே வேலைக்குப் போக பயமா இருக்காம். பிடிச்சுட்டுப் போய் அறுத்துடறாங்களாம். ராத்திரியிலே வீட்டுக்குள்ளே தூங்கிட்டு இருக்கறபோது கதவை உடச்சுக்கிட்டு வந்து தூக்கிட்டுப் போயிடறாங்களாம். எல்லா வீடுகள்லே இருக்கப்பட்ட பதினஞ்சு வயசுக்கு மேற்பட்ட ஆம்பிளைங்க எல்லாம் ஊர்ப் பொதுவிலே உட்கார்ந்து ராத்திரி பேசிட்டிருந்து, வெட்டவெளியிலேதான் படுக்கறாங்களாம்."

"பொம்பளைங்களை வீட்டுலே தனியா விட்டுப் போக முன்னே எல்லாம் அஞ்சுவாங்க. இப்போ இருபதம்சத் திட்டத்தாலே அது இல்லை போல. ஆம்பிளங்கதான் பயப்பட வேண்டியிருக்கு." பாயல் சிரித்துக்கொண்டே சொன்னாலும் குரலில் வெறுப்பு தெரிந்தது.

"இந்த மாசம் பிறந்தபோது உத்தரபிரதேச கிராமப்புறத்திலே நூத்து எண்பது விவசாயிகளை வளைச்சு பிடிச்சு குடும்பக் கட்டுப்பாடு

ஆபரேஷன் வலுக்கட்டாயமா செஞ்சு விட்டதா பிபிசியிலே நியூஸ் கேட்டேன். போனமாசம் முசாஃபர்பூர் பக்கத்துலே அறுத்துக்க வரமாட்டோம்னு போராட்டம் நடத்தின கிராமத்துக்காரங்களை துப்பாக்கியாலே சுட்டதிலே நூத்துக்கணக்கான பேர் செத்துட்டாங்களாம். இதுவும் பிபிசி நியூஸ்தான்” என்றேன்.

“நல்லா இருப்பாங்கங்கறே?” பாயல் என்னைப் பார்த்து கேட்டபோது நான் அவள் லஞ்ச் பாக்ஸில் இருந்து மேதி பராத்தாவைப் பிய்த்தெடுத்துக் கடித்துக் கொண்டிருந்தேன்.

வட இந்தியா என்ற பெரிய நிலப் பிரதேசமே பயத்தில் உறைந்திருக்கிறது. கீழ் மட்டத்தில் வாழ்வாதாரத்தையே சிதைத்து, தனி நபர் சுதந்திரத்தைக் காலில் மிதித்து, குடியிருப்பை இடிப்பதும், பலவந்தமான குடும்பக் கட்டுப்பாடுமாக யூத வதைமுகாம்போல நீண்டு போகிற துயரம் அது.

மேம்பட்டவர் வட்டாரத்தில் இது அரசியல் தொடர்பான பயம். கவலை. எதிர்க்க யாரும் இல்லாமல் அத்தனை தலைவர்களும் மிசா சட்டத்தின்கீழ் சிறையில். பத்திரிகை தணிக்கை ஆகி ஆகி, எழுதும் முன்னால் எண்ணமாக இருக்கும்போதே தணிக்கை செயல்படுகிறதாகத் தோன்றுகிறது. இதை சர்வாதிகாரம் என்று ஏன் யாரும் வாய் திறந்து சொல்வதில்லை என்றால், சொன்னவர்கள் எல்லோரும் உள்ளே. மற்றவர்களுக்கு, ஆமாம், பயம். குனியச் சொன்னால் முட்டி போடும், தவழ்ந்து தரையை நக்கும் அளவு பயம்.

விநோபா பாவே போன்ற மகான்கள் ‘ஒழுங்குமுறைக் காலம்’ என்று துதிபாடிப் போற்ற, சோவியத் யூனியன் இரும்புத் திரை நாடுபோல் இந்தியா ஒரு கதர்த்துணித் திரை நாடு. கதருக்கு அதுதான் கடைசி பயன்.

புதன்கிழமை சாயந்திரம் ஒரு மணி நேரம் பெர்மிஷன். ஸ்கூட்டர் எடுத்து வரப் போகவேண்டும்.

ஜஸ்பீரைத் தேடி முதல்மாடியில் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் பிரிவுக்குப் போனேன். அந்தப் பகுதியே நிலநடுக்கம் வந்த மாதிரி நடுங்கிக் கொண்டிருந்தது. வேறு ஒன்றுமில்லை. எனக்கு முந்தைய பேட்ச் ஆபீஸர் ஒருத்தர். அவருடைய புரிதல் காரணமாக பேங்க் வேலையில் அனர்த்தம் நிகழ்ந்திருந்தது. ஜஸ்பீரும் தீயை அணைப்பதில் மும்முரமாக இருந்தான்.

“ஸ்கூட்டர் டெலிவரி வாங்க அவ்தார்சிங் சர்தார்சாப் கிட்டே நாளைக்கு போகலாமே” என்றான் அவன், ஒரு நிமிடம் அவகாசம் கிடைத்தபோது.

“இல்லே, ஏற்கெனவே மூணு நாளாச்சு. நான் எடுத்து வரேன்”, சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். வழி சரியாகத் தெரியாதுதான். அங்கங்கே நின்று நின்று விசாரித்து வரத் தெரியும். அது போதும்.

இந்த ஒழுங்கு குறைந்த போக்குவரத்தில் நானும் எப்படி ஓட்டி வர? நடுரோட்டில் ஜஸ்பீர் சொன்ன மாதிரி, ஓட்டி வந்த மாதிரி வண்டியைச் செலுத்திப் போக தைரியம் போதாது. எப்படியோ ஓரமாகவே ஒட்டி ஒதுங்கி வாழலாம். துணிச்சலோடு கிளம்பிவிட்டேன்.

இந்தியா கேட் பக்கம் போய் பஸ்ஸில் இறங்கி, வலம் போய் இடம் போய் மெக்கானிக் ஒர்க்ஷாப்புக்குப் போய்ச் சேர்ந்துவிட்டேன். நேரே அங்கே போக பஸ் இருக்கக் கூடும். அல்லது ஏழெட்டு பேரை ஏற்றிப் போகும் முரட்டு மோட்டார் சைக்கிள் போன்ற ஃபட்ஃபட். அதில் போனால் என் இந்தி பேசும் திறமை முழுமையாகப் பரீட்சிக்கப்பட்டு தோல்வியுற வாய்ப்பு உண்டு என்பதால் அதையெல்லாம் தவிர்த்து வந்த வழிக்கே திரும்பப் போனேன்.

சர்தாரிணி அமர்ஜித் கவுர்தான் ஒர்க்ஷாப்பில் ஏதோ ஒரு மோட்டார் பைக்கின் வேகத்தை அதிகரித்துக் குறைத்துக் கொண்டிருந்தார். சர்தார் அவ்தார் சிங்கைக் காணவில்லை. என் லாம்ப்ரட்டா ஸ்கூட்டரையும் காணோம்.

எங்கே என்று சர்தாரிணியை விசாரித்தேன். சாயா குடிக்கறியா என்று பதிலுக்குக் கேட்டாள்.

“வேணாம். இருட்டறதுக்குள்ளே திரும்பணும். ஸ்கூட்டர் எடுத்துக்கலாமா?”

“பாய்சாப், கண் பார்வை பழுது இல்லியே? மாலைக்கண்ணா என்ன... இப்படி ராத்திரிக்கு அப்புறம் கண் சரியாத் தெரியாதுன்னு சொல்ல காரணம்?”

“இல்லே அமர்ஜித் தீதி. புதுசா இந்த ஊர்லே ஓட்டறேன். பகல்லே ஓட்டவே பழகலே. ராத்திரின்னா கேட்கவே வேணாம்.”

அவள் கருணை பொழியும் சிரிப்பைச் சிந்தினாள்.

“அப்படி பயம்னா கவலைப்படாதே. நான் ஓட்டிப் போய் லாஜ்பத் நகர்லே பத்திரமாக் கொண்டுபோய் விடறேன். நீ பில்லியன்லே உக்காந்துட்டு கண்ணை மூடிட்டு வா.” செய்தாலும் செய்வாள் தீதி.

பக்கத்து டீக்கடைக்கு இங்கிருந்தே கைதட்டி சைகை செய்து டீ வரவழைத்தாள். சுமாரான டீ.

“நீங்க போட்டுக் கொடுத்த மாதிரி இல்லே” என்றேன்.

“என்ன செய்ய? ராத்திரி ஏழு வரைக்கும் வேலை இங்கேதான். வீட்டுக்கு போய்ட்டு வந்துட்டிருந்தா வேலையிலே கவனம் சிதறிப்போகும்.”

நான் டீ குடித்தபடி சுற்றுமுற்றும் பார்க்க, “ரெண்டு நிமிஷம் அந்த சிம்மாசனத்திலே ஒக்காரு” என்று மர முக்காலியைக் காட்டினாள். இருந்தேன். மோட்டார்பைக்கில் இருந்து இறங்காமல், அதன் மண்டையைப் பிரித்து ஹெட்லைட் அசம்பிளியைச் சரிபார்த்தபடி பேசினாள்:

“நேத்து ராத்திரிதான் நாங்க வந்திருக்க வேண்டியது. ஆனா போன வேலை முடிஞ்சு நேத்து பகல்லேயே திரும்பியாச்சு. பசங்க வீடு பக்கத்திலேன்னாலும் கூப்பிடலே. லீவுன்னு சொல்லியாச்சு, அனுபவிக்கட்டுமே முழுசா. ரெண்டு மணிக்கு கடையைத் திறந்து ரெண்டு பைக், ஒரு ஸ்கூட்டர் வேலை முடிச்சோம். ரெண்டு பேரும்தான். வேற உதவி இல்லே. அடுத்து உன் வண்டியை எடுத்துக்கிட்டார் சர்தார்

சாப். கார்பரேட்டரை க்ளீன் பண்ணி போட்டு, இஞ்சினை கொஞ்சம் ட்யூன் பண்ணி, கியர் அசெம்ப்ளியை சரிப்படுத்தி, இண்டிகேட்டர் லைட்டும் எரிய வச்சுட்டோம்."

"அது ஊர்லேயே எரிஞ்சது இல்லே தீதீ."

"ஆமா... கனெக்ஷன் மிஸ்டேக். எப்படி எரியும்? அது தப்பு கனெக்ஷன்னு உங்க ஊர்லே சொல்ல மாட்டாங்களா?"

நான் ஒன்றும் சொல்லாமல் சிரித்தேன். இண்டிகேட்டர் விளக்கு எரிந்தால் சரிதான். அதுவும் இந்த ஊரில். நாமாவது விதிப்படி வண்டி ஓட்டலாமே.

"ராத்திரி ஏழு மணிக்கு வேலை முடிஞ்சு டெலிவரி எடுத்துக்கறதுன்னா வரலாம்னு சொல்ல உங்க ஆபீஸுக்கு, ஜஸ்பீர் பாய்க்கு ஃபோன் பண்ணினார் சர்தார். எடுக்கவே இல்லை யாரும்."

நாங்கள் ராத்திரி தீர்த்தவாரியில் மூழ்கிக் கொண்டிருந்த பொழுது அது.

"எனக்கு ஆஸ்துமா மருந்து காலியான விஷயம் நினைவு வந்தது. லோதி கார்டன்லே மருந்துக்கடைக்கு போகலாம்னு கிளம்பினார் அவர். நாங்க சொந்தமா ஒரு ஸ்கூட்டர் கூட வச்சிருக்கலை. ஊர் ஸ்கூட்டர் எல்லாம் எங்க வண்டிதான். தினம் அஞ்சாவது நிக்குது. எதுக்கு அனாவசியமா இன்னொண்ணு?"

"புரியுது தீதி."

"அவர் ஒன்பது மணியைப்போல சாப்பிட்டு மருந்துக்கடைக்கு எடுத்துப் போனது உன் ஸ்கூட்டரைத்தான். பெட்ரோல் போட்டு டேங்க் நிறைச்சுக்கிட்டு கிளம்பிப் போனார்."

பிரமாதம் என்றேன். இப்போதைக்கு பெட்ரோல் போட வேண்டாம். ஸ்கூட்டர்தான் எங்கே என்று தெரியவில்லை. அவள் மோட்டார்பைக்கின் தலையைப் பழையதுபோல் மூடி ஆப்பரேஷன் சக்ஸஸ் என்றாள். அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியபடியே சொன்னாள்:

"எங்க சர்தார்ஜி கோல் மார்க்கெட் உள்ளே போகும்போது பக்கத்து தெருவிலே ஒரு பெரிய லாரி நிக்குது. வலுக்கட்டாயமா அங்கே இருந்த

தினக்கூலி கட்டடத் தொழிலாளிங்களை குடும்பத்திலே இருந்து பிரிச்சு இழுத்துட்டு வந்து வண்டியிலே ஏத்திட்டு இருக்காங்களாம். அது உள்ளூர் போலீஸ் இல்லே. மதராஸிகள். உன்னை மாதிரி.”

கேடுகெட்ட எமர்ஜென்சி என்றேன் உண்மையிலேயே அதன் கசப்பு நாவிலும் புத்தியிலும் படிய.

“நாலஞ்சு பேர் எல்லாரும் சர்தார்கள், வண்டியை எடுக்கக் கூடாதுன்னு கோஷம் போட்டுட்டிருந்தாங்க. இவரும் போய்ச் சேர்ந்து குரல் கொடுக்க நிலைமை சரியில்லைன்னு புரிஞ்சு வண்டி யாருமில்லாம போனதாம். ஆனால் இவரை பிடிச்சுக்கிட்டாங்க. போதாக்குறைக்கு டி என் டி அப்படீன்னு தமிழ்நாடு ரெஜிஸ்ட்ரேஷன்வண்டி. இங்கே இந்த வண்டி எப்படி வந்தது? யாராவது பயங்கரவாதிக்கு பின்னாலே இருந்து வேலை பார்க்கறியா இப்படி…”

அப்புறம்? அவர் என்ன ஆனார்? என் ஸ்கூட்டர் என்ன ஆச்சு? டெடரிஸ்ட் (டெரரிஸ்ட்??) ஸ்கூட்டர் என்று என் வண்டியைப் பிடித்து, என்னையும், சீஃப் மேனேஜர் அகர்வாலையும் கூட பிடிப்பார்களா? அதேன் அகர்வால் சாப்? ப்ரமோஷனும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று ஊருக்கே திரும்பிவிடலாமா? ஸ்கூட்டரை என்ன பண்ணுவது?

“கீ ஹோயா?”

குரல் மாறி இருந்தது. பஞ்சாபியில் பேசியபடி அவ்தார்சிங் சாப் வந்திருந்தார். அவர் வேகமாக ஓட்டி வந்து நிறுத்தியது என் ஸ்கூட்டரை.

“என்ன ஆச்சு சர்தார் சாகிப்? பிரச்சனை ஒண்ணும் இல்லையே?” இங்கிலீஷில் வழக்கம்போல விசாரித்தேன்.

“ஒரு பிரச்சனையும் இல்லேப்பா.”

சரி என்று தலையாட்டிவிட்டு துணுக்குற்று அவசரமாகத் தலையைத் தூக்கிப் பார்த்தேன்.

அந்தக் கடைசி வாக்கியத்தை சர்தார்ஜி நல்ல தமிழில் சொல்லியிருந்தார்.

“அவங்க கிட்டே தமிழ்லே பேசினேன். வண்டி தமிழ்நாட்டு வண்டி அண்ணா, ஆளு பேங்க் ஆபீஸர். அங்கே எல்லா வண்டிக்கும் நான்தான் மெய்ண்டனென்ஸ் காண்ட்ராக்ட். மதராஸி பேங்க். மதராஸி ஸ்கூட்டர்தான் நிறைய, இது மாதிரின்னு எடுத்துச் சொன்னேன். தமிழ்லே பேசினதும் ஊர் அபிமானம் வந்துடுச்சு அவங்களுக்கு. சர்தார்ஜி ரொம்ப சந்தோஷம். எங்களுக்கும் இப்படி குடும்பக் கட்டுப்பாட்டுக்கு பிள்ளை பிடிச்சு சாக்குலே கொண்டுபோக கஷ்டமாத்தான் இருக்கு. என்ன பண்ண? பார்டர் செக்யூரிடி ஃபோர்ஸ். இங்கே ட்யூடி. ஆடுடா ராமான்னா ஆடிட்டு இருக்கோம். நீங்க ஏன் வலிய வந்து கஷ்டத்துலே மாட்டணும்? போய்க்கிட்டே இருங்க. உங்க தலையெழுத்து நல்லா இருக்கக் கண்டு எங்க கிட்டே மாட்டினீங்க. போங்க.”

ராத்திரி பதினொரு மணிக்கு ஸ்கூட்டரில் வந்து இறங்கியிருக்கிறார் அவ்தார் சிங். அதுவரை சர்தாரிணி பட்ட துன்பம் சொல்ல ஒண்ணாதது.

“எப்படி சாஹப் உங்களுக்கு தமிழ் தெரியும்?”

நான் லாம்ப்ரடாவில் ஏறி அமர்ந்தபடி ஆங்கிலத்தில் கேட்டேன். அபத்தம் புரிய தமிழுக்கு மாறி அதையே திரும்பக் கேட்டேன்.

“ஏன் தெரியாது? மெட்ராஸ்லே ஜெனரல் பேட்டர்ஸ் ரோடுலே, மவுண்ட் ரோடை ஒட்டி, எங்க மாமா மோட்டார் ஸ்பேர் பார்ட் கடை வச்சிருக்கார். அங்கே நாலு வருஷம் அப்ரெண்டிஸ் ஆக இருந்ததிலே நல்லா தமிழ் தெரியும். கெட்ட வார்த்தை சொல்லட்டுமா?”

“நீ முதல்லே கிளம்பு தம்பி”, சர்தாரிணி சொன்னது பஞ்சாபியில். இருந்தாலும் புரிந்தது.

பாயலிடம் பஞ்சாபி கற்றுக்கொண்டால் என்ன என்று யோசித்தபடி பத்திரமாக வண்டி ஓட்டிப் போனேன். நான்கு நல்ல வாக்கியமாவது தெரிய வேண்டும்.

நீ ரொம்ப அழகா இருக்கே. குல்ஃபி சாப்பிடலாமா?

வழியைப் பார்த்து ஓட்டுடா. லாம்ப்ரட்டா பஞ்சாபியில் சத்தம் போட்டது.

அத்தியாயம் 18

# டிசம்பர் 1976

சௌ ந்தரம்மா ரெயில் கம்பார்ட்மெண்டை விட்டு இறங்கியது மற்றவர்கள் எல்லோரும் வெளியே வந்ததற்கு அப்புறம்தான்.

மொத்தம் பத்துப் பேர். நடக்க ஆரம்பித்த சிறு குழந்தையும், துறுதுறுவென்று ஓடிக்கொண்டே இருக்கிற ஐந்து வயதுச் சிறுவனும் அதில் உண்டு.

நான் சௌந்தரம்மா இறங்க கைகொடுத்து பத்திரமாகத் தரையில் சேர்ப்பித்து, கம்பார்ட்மெண்டுக்குள் மறுபடி நுழைந்து ஏதாவது இறக்க விட்டுப் போயிருக்கிறதா என்று பார்த்தேன். சீட்டில் பாதி தின்ற ஒரு வேர்க்கடலைப் பருப்பு பொட்டலம் மட்டும் ஓரமாகக் கிடந்தது. எடுத்து வெளியே போட்டுவிட்டு நானும் இறங்கினேன்.

சௌந்தரம்மா இடுப்பில் முடித்து வைத்த சுருக்குப்பையிலிருந்து புகையிலையை உருட்டி எடுத்தாள்.

“ஆத்தி, இதான் டெல்லிப் பட்டணமா?”

அந்த செம்மண் பூமிக்கிழவி அழகாக ஆச்சரியப்பட்டு, தில்லி ரயில்வே ஜங்ஷனில் எங்கள் ஊரை சிருஷ்டித்தாள்.

“இதேதான். நல்லா பாத்துக்குங்க, அப்புறம் பார்க்கலேன்னு சொல்லிடக்கூடாது” என்றேன்.

“அதென்ன பார்க்காமலா போகப் போறோம்?”

சௌந்தரம்மா பரபரவென்று குனிந்து லக்கேஜில் அவசரமாகத் தேடி எடுத்து நீட்டினாள் -

“இந்தா பிடி ஓலைக்கொட்டான் கருப்பட்டி. பிரியமா திம்பியே...”

“ஏன் ஆத்தா, வீட்டுக்கு போய்த்தான் கொடுக்கறது அதை.”

நான் வாங்கியபடி சொன்னேன்.

“மறந்து போயிடுமே ராசா மகனே”, சௌந்தரம்மா புகையிலையை அதக்கிக்கொண்டு சிரித்தாள். எங்கள் ஊர் பேங்க் கிளையில் ஸ்வீப்பர் சௌந்தரம்மா. லட்சாதிபதி சௌந்தரம்மா.

போன வாரம் எனக்கு ஒரு இன்லண்ட் லெட்டர் வந்தது.

‘கோட்டை மாரியம்மன் துணை. தாமரைக்குளம் ஐயனார் துணை. வேம்புலிநாதர் துணை. திரௌபதி அம்மன் துணை. பிள்ளைவயல்காளி துணை. கொட்டகுடி கருப்பாயி துணை. தம்பியாபிள்ளை போத்தி சௌகரியம் பற்றி தக்கவரை வைத்து எழுதச் செய்ய வேண்டியது. வேளாவேளைக்கு நல்லபடி சாப்பிட்டு நல்லா ராத்தூங்கி எழுந்து சுகமாக இருக்கும் விவரம் தெரிவிக்க வேண்டியது. சைக்கிள் இதர துவிசக்கர வண்டி வாகனாதிகளை ஜாக்கிரதையாக ஓட்டிப்போக வேண்டியது. நானும் எங்க பொம்பளை சவுந்தரத்தம்மாளும் சின்னப்பிள்ளையில் தம்பி உங்களுக்கு விதைக்கொட்டை வீங்கினது சொஸ்தப்படுத்தினதை ஞாபகம் வைத்து இதமாப்பதமாக நடக்கிற தாக்கல் அனுப்பச் சொல்ல வேண்டியது. ஊரில் மழையும் வெள்ளாமையும் கோட்டை கருப்பையன் புண்ணியத்தில் நடக்கிறதாகத் தம்பியாபிள்ளை அறிய வேண்டியது. நான் கோயிலில் தவில் வாசிப்பதை நடக்கும் நள வருஷம் புரட்டாசி மாசம் 1உ தேதியிலிருந்து நிறுத்திவிட்டேன். வாத்தியத்தை கட்டித் தூக்கிப் போகமுடியாமல் வயசான காலத்து பலகீனம். வேற தவில்காரப் பையனை திருக்கோஷ்டியூரிலிருந்து வரச்சொல்லி ஏற்பாடு பண்ணி அவனும் முந்தாநாள் வந்து சேர்ந்து சுமாராக வாசிக்கிறான். சாதகம் தேவை. அங்குவிலாஸ் புகையிலை அங்கே கிடைக்கும் விவரம் எழுதச்

சொன்னால் சௌகரியமாக இருக்கும். சவுந்தரத்தம்மாள் சொல்லி இதை எழுதினது அவங்களோட புருஷன் கருப்பசாமி என்கிற தவில் கருப்பையா பிள்ளை. நாங்கள் அடுத்த ஞாயித்துக்கிழமை உச்சயினி வீரமாகாளி துணையாக தில்லி வருகிறோம். சவுந்தரத்தம்மாளுக்கு லாட்டரி சீட்டில் லட்ச ரூபாபோல பணம் வரக்கூடுமாக இருப்பதை தம்பி தயவுசெய்து யாரிடமும் சொல்ல வேண்டாம். நேரே பார்க்கும்போது மைத்த தாக்கல் எல்லாம் விவரமாகக் கேட்டுக்கொள்ள வேண்டியது. தல்லாகுளம் மாரியம்மன் துணை. செல்லூர் கருப்பணசாமி துணை.'

எல்லா சாமியும் துணையிருக்க வேண்டும் வழக்கமான இன்லண்ட் லெட்டர் என்று ஆபீஸ் அவசரத்தில் மேலோட்டமாகப் படித்து அனுமானம் செய்து சட்டைப்பையில் போட்டு வைத்திருந்தேன்.

வாரக் கடைசியில் வேற வழியே இல்லாமல் ஆறு நாள் போட்டிருந்த துணி எல்லாம் சோப்புநுரையில் அமிழ்த்தி அலசிக் காயப்போடும் நேரம்.

போடுவதற்கு முன் சோதித்துப் பார்க்க, சட்டையில் இருந்து எடுத்தது இரண்டாக மடித்த இந்த இன்லண்ட் லெட்டரை. பாத்ரூமில் உட்கார்ந்து நிதானமாகப் படிக்க ஆச்சரியகரமாகப் புலப்பட்ட இரண்டு தகவல்கள் -

சௌந்தரம்மாவுக்கு ஏதோ லாட்டரியில் லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது. அவள் ஞாயிற்றுக்கிழமை, அதாவது இன்றோ, அடுத்த வாரம் இதே நாளோ இங்கே வரப் போகிறாள். இன்றைக்கு இருந்தால்?

அடித்துப் பிடித்து ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடியது நல்லதாகப் போக, இதோ சௌந்தரம்மா விஜயம் ஆரம்பமாகி விட்டது.

ஆட்டோ ரிக்ஷா பிடிக்க வெளியே வந்தோம். சௌந்தரம்மாவும் அவள் வீட்டுக்காரர் தவில் வித்வான் கருப்பசாமி பிள்ளையும் மட்டும் வருகிறார்கள் என்று நான் எதிர்பார்த்தது தவறு. இஷ்ட மித்திர பந்துக்களோடு அவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

“ஏன் ஆத்தா, ஒரு ட்ரங்க் கால் போட்டு தாக்கல் சொல்லியிருக்கலாமில்லே?”

சௌந்தரம்மாவைக் கேட்க அவளோடு வந்த, மிக இளையவராக இருந்தவர் பதில் சொன்னார் -

“சார், உங்க மேனேஜரும், ரவீந்தரன் சாரும் ரெண்டு நாள் முயற்சி எடுத்தாங்க. சாயந்திரம் நெம்பர் கிடைக்கும்னு போட்டா ஹலோ ஹலோவுக்கு மேலே கேக்கறதில்லையாம் போல.”

என் மாப்பிள்ளை என்று அவரைக் காட்டிச் சொன்னவர் சௌந்தரம்மாவின் கணவர் கருப்பசாமி தவில்காரர். அந்தக் காலத்து மனுஷர். கோயில் ஐயர்போல நரைத்த முடியில் சின்னதாகக் குடுமி கட்டி இருந்தார் அவர்.

குழுவின் இதர உறுப்பினர்கள் சௌந்தரம்மாவின் தங்கச்சி மகள், மகள், மகள் வயிற்றுப் பேரன், பேத்தி, தங்கச்சி, தங்கச்சி மகள் வீட்டுக்காரர், மகள் வீட்டுக்காரர், தங்கச்சி வீட்டுக்காரர் என்று நின்ற வரிசையில் அறிமுகப்படுத்தப்பட, எல்லோருக்குமாக ஒரு வணக்கம் சொன்னேன்.

“உங்க ஆபீஸ்லே ஃபோன் மாறிடுச்சா?”

தங்கை மகள் வீட்டுக்காரர் கேட்டார்.

“இல்லையே.”

சாயந்திரம் கால் வந்ததுதான். இரண்டு ஹலோ ஹலோவுக்கு மேல் கேட்கவில்லை. அப்புறம் வேலை மும்முரத்திலும், முடித்து ஷட்டரை இறக்குவதிலும் மறந்து போய்விட்டது. ஏழு மணிக்கு வந்த கால் எல்லாம் தாகசாந்திக்குப் போகிற மும்முரத்தில் கவனிக்கப்படாது போகும்.

எப்படியோ, ஒரு பத்து நபர் குழுவை, எத்தனை நாள் என்று தெரியவில்லை, நான் இங்கே என் வீட்டில் வைத்துப் பராமரிக்க வேண்டும். அவர்களுக்கு தில்லியில் ஆகவேண்டியது நடந்து முடிய ஒத்துழைக்க வேண்டும்.

இதோடு ஆபீஸுக்கும் தினசரி போய் வரவேண்டும். சாயந்திரம் - ராத்திரி விஸ்கி விழாவை வேண்டுமானால் ஒரு வாரம் தள்ளிப்

போடலாம். மற்றவை நடந்தேற வேண்டியவை.

முதலில் இவர்கள் எல்லோருக்கும் ஆகாரம். ஒரு ஜனதா ஸ்டவ் மட்டும் வைத்துக்கொண்டு ஒரு பாக்கெட் பால், இன்ஸ்டன்ட் காபி பவுடர் என்று சமாளித்துக் கொண்டிருப்பது இப்போது நடக்காது. என்ன செய்யலாம்?

மூன்று ஆட்டோ போதுமென்றார்கள் சௌந்தரம்மா குடும்பத்துப் பெண்கள். எடுக்கறதுதான் எடுக்கறோம், நான்காக எடுத்தா கொஞ்சம் சவுகரியமா உட்கார்ந்து போகலாமே என்றார்கள் ஆண்கள். நான்கு ஆட்டோ ஏற்பாடானது.

“தம்பி, நீங்க ஒரு பைசா செலவு பண்ணக்கூடாது. இதெல்லாம் எங்க வகை” என்றார் தவில்காரர். ஒரு சின்ன நிம்மதி நிஜமாக எட்டிப் பார்த்தது.

எல்லோருமே நல்ல கம்பளி ஸ்வெட்டர் போட்டு, மஃப்ளர், சால்வை என்று வந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது.

“எங்க குடும்பத்துலே எட்டு பேர் ஆர்மியிலே இருக்காங்க. வரும்போதெல்லாம் கம்பளித்துணியை விட்டுட்டுப் போயிடுவாங்க. பத்திரமா எடுத்து வச்சிருந்தோம் என்னிக்காவது வேண்டியிருக்கும்னு. இப்போ பாருங்க...” கூட்டத்தில் யாரோ சொன்னார்கள். பெரிய கூட்டுக் குடும்பமாக அவர்கள் இருக்கக்கூடும்.

நான் என் பழைய காஷ்மிலான் ஸ்வெட்டரைப் பார்த்துக் கொண்டேன். இந்த வாரமாவது புது ஸ்வெட்டர் வாங்கிப் போட்டுப் போகாவிட்டால் பாயல் அஹூஜா மதிக்க மாட்டாள். அவள் மதித்தாலும் கூடிக்கொண்டே போகும் குளிர் மதிக்காது.

பாயல் என்ன செய்து கொண்டிருப்பாள் இப்போது? ஞாயிற்றுக்கிழமை காலை இங்கே பெண்கள் சாவதானமாக உடம்பில் கடுகு எண்ணெய் புரட்டி வாசலில் நாற்காலி போட்டு உட்கார்ந்து அரட்டை அடித்து, காய்கறி வண்டிக்காரன் வர, கூட்டு பேரமாக வெங்காயம் வாங்கிவிட்டுத் தலைகுளித்து ஆறவைத்துக் கொண்டிருப்பது வழக்கம். பாயலும் வெய்யில் காய்ந்துகொண்டு உட்கார்ந்திருப்பாள். கடுகு எண்ணெய்

வாடை பிடிக்க மனசு ஏங்கியது. நாளைக்கு அவள் வரும்போது மிச்சமிருக்கும்.

பாயலை இறக்கிவிட்டு, நான் ஸ்கூட்டரைக் கிளப்பினேன். ஒன்றன் பின் ஒன்றாக அந்த நான்கு ஆட்டோக்களும் என்னைப் பின்பற்றி வந்தன.

லாஜ்பத் நகர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே சி பிளாக்கும் ஐ பிளாக்கும் சந்திக்கிற இடத்தில் வீடு. அடுத்த வீடு வரை ஐ பிளாக் ஆக இருப்பது ஏதோ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு என் வீட்டில் தொடங்கி சி பிளாக் ஆகிவிடும். அதற்கு அடுத்து தெரு வளைந்து திரும்பி பி பிளாக். தபால்காரர் இடம் தெரியவில்லை என்று தபால் கொடுக்காமல் போக இந்த அட்ரஸ் குழப்பம்தான் காரணம்.

இங்கேயே இருக்கப்பட்டவர்களுக்கே குழப்பம் ஏற்படுவதால், யாராவது வருவதாகச் சொன்னால் நானே நேரே இரண்டு கிலோமீட்டர் முன்னே டிபன்ஸ் காலனிக்கோ ரயில்வே கேட் கடந்து ஜங்க்புராவுக்கோ போய் எதிர்கொண்டு கூட்டி வருவதை கடைப்பிடிக்கிறேன்.

சௌந்தரம்மா அண்ட் கம்பெனிக்கு மொழிப் பிரச்சனையும் உண்டு என்பதால் புதுதில்லி ரயில்வே ஜங்ஷனுக்கே பஹாட்கஞ்ச் கடந்து போகவேண்டிப் போனது.

அப்புறம் சௌந்தரம்மாவுக்குப் பாதுகாப்பு வேற வேண்டியிருக்கிறது. ஆட்டோவில் இருந்தபடி என்ன பரிசு, எப்போது எங்கே கிடைக்கும் என்றெல்லாம் கேட்க முடியாது. வீட்டுக்குப் போகும்வரை பொறுமை தேவை. வீடு வந்துவிட்டது.

பத்துப் பேர் என்னோடு படியேறி முதல் மாடி அபார்ட்மெண்டுக்குப் போவதை கீழ்த்தளத்தில் வீட்டுச் சொந்தக்காரர் போஜ்ராஜ் வாஸ்வானி, அவர் மனைவி, செல்ல நாய் ஆகியோர் கவலையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலே மொட்டைமாடியில் அஸ்பெஸ்டாஸ் கூரை அடைத்த இரட்டை அறை குடியிருப்பான பர்சாதி. வெளியே ஏர் ஃபோர்ஸ் ரமன் கன்னா நாற்காலி போட்டு உட்கார்ந்து, ஹுக்காவைக் கொளுத்தி புகை விட்டபடி எனக்குக் கையாட்டினான்.

ஞாயிற்றுக்கிழமை காலைநேரம் இட்லி தோசை சாப்பிட நான் போவேன் என்று கன்னாவுக்குத் தெரியும். கரோல்பாக் நடராஜன் மெஸ்ஸோ, லோதி எஸ்டேட்டில் கன்னடா ஸ்கூல் மெஸ்ஸோ, என்னோடு போனால் உத்தமமான மதராஸி சிற்றுண்டியும் ஃபில்டர் காப்பியும் கிடைக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். 'நானும் வரேன், சாம்பாரும் இட்லியும் சாப்பிடலாம்' என்று கூடவே கிளம்பிவிடுவான்.

கன்னா கூட சாப்பிடப் போவதில் ஒரு சந்தோஷம் அவனுடைய காரில் போகலாம். தினசரி ஆபீஸிலும் முடித்து தண்ணி பார்ட்டிக்காகவீட்டிலும் பார்க்கும் அதே முகங்களை ஞாயிறன்றாவது தவிர்க்கலாம்.

ரமன் கன்னா முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. இப்படி ஒரு கூட்டம் சொந்த பந்தத்தை வீட்டில் வைத்துக்கொண்டு இட்லி தோசை சாப்பிட நான் வரப்போவதில்லை என்பதைத் தெரிந்ததால் ஏற்பட்டது அது.

"போத்தி சாப்ஜி."

வாஸ்வானி சத்தமாகக் கூப்பிட்டார். ஏறிக் கொண்டிருந்த படியில் நின்றபடி கேட்டேன், "என்ன சார்?"

"வீட்டுக்கு விருந்தாளிகள் வந்திருக்காங்க போலிருக்கு."

இதை ஜாக்கிரதையான ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு, சிந்தி பாஷைக்கு இந்தி வேஷம் போட்டுவிட்ட மிக்சர் மொழிக்குத் தாவினார். இது எனக்கும் இங்லீஷ் தெரியும் என்று நிலைநிறுத்தி, சொந்த பாஷையில் புகார் சொல்ல.

என்ன சொல்வார் என்று தெரியும். நான் வரும் முன் ரஜோரி கார்டன் கிளையில் இருந்த ஒரு நாயர் இங்கே குடும்பத்தோடு குடி இருந்திருக்கிறார். தினசரி தேங்காய் உடைக்க சமையலறை மேடைமேல் கல்லையும், அரிவாளையும் வைத்துத் தட்டி வீட்டை உடைத்துவிட்டார் என்று ஓயாத சண்டை அவரோடு வாஸ்வானி போட்டிருக்கிறார்.

நாயர் தலைச்சேரிக்கு மாற்றலாக, தேங்காய் யுத்தங்கள் ஓய்ந்து, சாத்விகமான போத்திக்கு ஃப்ளாட் கைமாறியதில் வாஸ்வானிக்கு சந்தோஷம்.

கல்யாணமாகாத பையன். வீடு தங்குவது அபூர்வம். தண்ணீர்ச் செலவு, மொட்டைமாடியில் துணி உலர்த்த இடம் இப்படி எதுவும் தேவை இருக்காது என்பதால் வாஸ்வானி குடும்பத்துக்கே எல்லா வளமும்.

ஸ்கூட்டர் நிறுத்தக் கூட வீட்டு காம்பவுண்டில் இடம் ஒதுக்காது வெளியில் விடச் சொல்லிவிடலாம் என்று கணக்குப் போட்டோ என்னவோ, என்னை வரவேற்றுக் குடிவைத்திருந்தார் அவர்.

வாஸ்வானியின் நம்பிக்கை பொய்யாக வீட்டில் குடிக்க முடியாத என் சகாக்களான ஆபீஸர், மேனேஜர் வகையறாவும், பிரம்மச்சாரி குடியிருப்பு என்பதால் இங்கே படை எடுத்துவிட்டார்கள். தேங்காய் உடைக்கவில்லைதான். பியர் பாட்டில் உடைபடும் சத்தம் ரகளையாகக் கேட்டபடி இருக்கிறது.

வாஸ்வானியும் அவர் மனைவியும், இரண்டு மகள்களும் கீழ் போர்ஷனில் இருக்கிறார்கள். நானும் என் தலைக்கு மேல் ரமன் கன்னாவும் இருந்து கொடுக்கிற வாடகையில்தான் அவருடைய வீட்டுச் செலவு முழுவதும்.

'நல்ல மனுஷர். ஆனால், முதல்லே சாத்தான் பத்து நிமிஷம் வாயிலே வருவான். அவன் போனதும் தெய்வம் வரும். அவர் வீட்டம்மாவும் அதேபடிதான்' என்று லட்சுமண் கௌடா சொல்லியிருக்கிறான்.

விளக்கை அணைத்துவிட்டு ஆபீஸ் போ, கக்கூஸில் இன்னும் தண்ணீர் விடு, ஜன்னலை எல்லாம் வாரம் ஒரு முறை துடை, தரை அதிர நடக்காதே, சமையல்கட்டில் அவ்வப்போது ஃப்ளிட் அடித்து கொசு, கரப்பான் பூச்சி இல்லாமல் ஆக்கு, ஜட்டியை வெளியே காயப்போடாதே என்று சில்லறை உபதேசங்களை தினசரி பைஜாமா போட்ட கிருஷ்ண பகவானாக எனக்கு அருள்வார். நான் கேட்டுவிட்டு அச்சா என்று தலையாட்டிவிட்டு நகர்ந்துவிடுவேன். மற்றபடி துவைத்துப் போட்ட அண்டர்வேரைப் பார்த்து என்மேல் தெருவோடு போகும் மகளிர் மையலுறுவார்கள் என்று நம்பத் தயாரில்லை.

இன்றைக்கு பெரிய குறையாக ஏதோ சொல்லப் போகிறார்போல. சாத்தான் வரும் அறிகுறிகள். தேவனும் சீக்கிரம் வரட்டும்.

நான் இறங்கிப் போனேன்.

"சாய் குடிக்கிறியா? அத்ரக் தட்டிப் போட்டது."

இஞ்சி தட்டிப்போட்ட டீ, இந்தப் பஞ்சாபிகள் அப்பாவி மதராஸிகளை வீழ்த்தும் அஸ்திரம். குடித்துவிட்டு கூறுகெட்ட மதராஸிகள், இஞ்சி தின்ற குரங்காகச் சொன்னபடி கேட்டு ஆடுவார்கள் என்று இவர்களுக்கு ஐதீகம்போல. தேநீர் உபசாரத்தை மரியாதையோடு, வேண்டாம் என்று மறுத்தேன்.

மிசஸ் வாஸ்வானியின் இந்திரா காந்தி ஸ்டைல் தலைமுடி அவளைப் பார்க்கப் பயங்கரமானவளாக்கி இருந்தது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கதர்ப் புடவை அணிந்து, வாஸ்வானி கீழ்ப்படிதலுள்ள ட்ரைவராக ஜாக்கிரதையாகக் கார் ஓட்ட, அவள் வெளியே போய்வருவதைப் பார்த்திருக்கிறேன். இப்போதும் கதர்ப் புடவை. வெளியே போகத் தயாராக இருக்கிறாள்.

அவளோடு கூட ஒரு நடுவயதுப் பெண். அடுத்த தெரு. அவர் மஹிளா சமூக சேவை அமைப்பு உபதலைவர் என்று அவளை என்னிடம் ஒருமுறை அறிமுகப்படுத்தினாள் மிசஸ் வாஸ்வானி.

'உன் உதவி வேணும், ஆபீஸ்லே, உங்க கஸ்டமர்லே குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்க யாராவது ரெடின்னா சொல்லு' என்று என்னிடம் ஆள் பிடிக்கச் சொல்லியிருக்கிறார் அந்தத் தோழி அம்மாள்.

அப்படி கூட்டி வரும் ஒவ்வொருத்தருக்கும் ஐநூறு ரூபாய் அந்த மனுஷருக்கும், கூட்டி வந்தவருக்கு இருநூறும் உடனடியாக விநியோகிக்கப்படுமாம்... ஞாயிற்றுக்கிழமையும் சம்பாதிக்க உசிதமான வழி என்றாள் அவள்.

"எங்க திராவிட வேதம், குடும்பக்கட்டுப்பாடு செய்யச் சொல்றவங்க எல்லாம் ஐயோன்னு மென்னி முறிஞ்சு, ரத்தம் கக்கிச் சாவாங்கன்னு

சொல்றது” என்றேன் அவளிடம். இப்போதெல்லாம் மூஞ்சியைத் திருப்பிக்கொண்டு போய்விடுகிறாள்.

அவள் இப்போது வந்திருக்கிறாள். அந்தம்மா என்னைக் காலி செய்ய வைத்து விரட்ட வாஸ்வானிகளுக்கு ஏதாவது சொல்லிக் கொடுத்திருப்பாளோ.

“இன்னிக்கு தண்ணி கம்மியாத்தான் வருது டெல்லி கார்ப்பரேஷன் பைப்பிலே.”

மிசஸ் வாஸ்வானிதான் ஆரம்பித்தாள். அது முழுப் பொய். ஜமுனா நதியில் கரைபுரண்டு குளிர்கால வெள்ளம் போய்க் கொண்டிருக்கிறது. தில்லி நகரம் கார்ப்பரேஷன் குழாயில் எவ்வளவு விநியோகித்துச் செலவழித்தாலும் இங்கே தண்ணீர்ப் பஞ்சம் வந்து, மாநகரம் தெற்கத்தி தரிசுபோல் காய்ந்து போகப் போவதில்லை. செலவழிப்பதால் நதியில் பிரவாகம் கட்டுக்குள் இருக்க உதவ முடியும். அடுத்த மாதம் இமயமலையில் பனிப்பாறைகள் உருக, கங்கையிலும் யமுனையிலும் வெள்ளம் கரைகடந்து பொங்கும்.

நான் விளக்குவதற்குள் வாஸ்வானி அவர் வீட்டை வாடகைக்கு விடப் போட்ட காண்ட்ராக்டோடு வந்துவிட்டார்.

“ஒரு குடும்பம் வசிக்கத்தான் ஒப்பந்தம். பத்து இருபது பேர் ஒரே நேரத்தில் வந்து தங்க இது சத்திரம் சாவடி இல்லை.”

“இருபது பேர் உன் கூட வந்திருக்காங்க. அவங்க குளிக்க, துணி துவைக்க, மற்ற உபயோகத்துக்குன்னு இந்தத் தெருவிலே செலவழிக்கிற தண்ணி முக்கால் பாகம் நம்ம வீட்டுலேதான் செலவாகும். கார்ப்பரேஷன் மட்டுமில்லே, பக்கத்து வீட்டுக்காரங்க கூட திட்டறாங்க.” இது மிசஸ் வாஸ்வானி.

“எமர்ஜென்சி நேரமா இல்லேன்னா உங்க எல்லோரையும் பத்து நிமிஷத்திலே வெளியே நிறுத்தியிருப்போம். பேங்க், ஆபீஸர், இதெல்லாம் அப்புறம். மதராஸ்லே இருந்து வந்தோமா இருந்தோமா

மூணு நாலு வருஷம் கழிச்சு திரும்பிப் போனோமான்னு இருக்கணும். இது உங்க ஊர் இல்லே.”

எனக்கு சுரீர் என்று வந்தது.

“இது உங்க ஊரும் இல்லே வாஸ்வானி சாப். 1947லே தேசப் பிரிவினை வந்தபோது இப்போ பாகிஸ்தான் சிந்து மாகாணமா இருக்கற இடத்திலே இருந்து துரத்தப்பட்டு அகதிகளா வந்தவங்க நீங்க. நேரு சர்க்கார் உங்களிலே ஒருத்தரைக் கூட கைவிடாம, இருக்க பட்டா போட்டு லாஜ்பத் நகர்லேயும் ஜங்புராவிலேயும் இடமும், தொழில் செய்ய பண உதவியும் செஞ்சு கொடுத்தாங்க. நான் வந்தேறின்னா நீங்களும் அதேதான்.”

சொல்ல முடியும். வரலாறு. சொல்ல முடியாது. எமர்ஜென்சி நேரத்தில் அரசுடமையாக்கப்பட்ட பேங்க் ஆபீஸர் என்ன பேசினால் அரசு விரோதம் ஆகும்? அதுவும் தலைநகரத்தில்? தெரியாது.

“ஏதோ வந்துட்டாங்க. இருந்து குளிச்சு சாப்பிட்டு இன்னிக்கு ராத்திரிக்குள்ளே கிளம்பச் சொல்லு. இல்லேன்னா உங்க சீஃப் மேனேஜர் கிட்டே பேச வேண்டி இருக்கும்.”

வாஸ்வானி சொல்லியபடி உள்ளே போக நான் ஏதும் பேசமால் வெளியே வந்தேன்.

“என்ன தம்பி, உதவி என்ன வேணும்னாலும் கேளு, தரேன்னு சொல்றாங்களா?” சௌந்தரம்மா கேட்டாள். சிரித்து வைத்தேன்.

“எம்மேலேதான் குத்தம். சொல்லிட்டு வந்திருக்கணும். நான் கிளம்பறேன்னு கேட்டு தங்கச்சி குடும்பமும், எங்க ஆளுங்களும் சேர்ந்துக்கிட்டாங்க. கையிலே பெருந்தொகைக்கு சீட்டு இருக்கே. பத்திரமாக் கொண்டு சேர்த்து காசாக்க வேணுமேன்னு எல்லோருக்கும் பதைபதைப்பு.”

அவள் அங்கலாய்த்தாள். இவர்களை எங்கே அனுப்ப? இவர்களுக்கு இங்கே என்னை விட்டால் யாரைத் தெரியும்?

அரைமணி நேரம் கழித்து மினு வாஸ்வானி படியேறி வந்தாள். வாஸ்வானியின் மூத்த மகள். ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டியில் தில்லியின் வரலாற்றை ஆய்வு செய்துகொண்டிருக்கிறாள்.

கூடவே அவளுடைய தங்கை பிரியம்வதா. அடுத்த வருடம் காலேஜ் போகப் போகிறவள். இரண்டு பேரும் கையில் ஸ்டெயின்லெஸ் பாத்திரங்களோடு வந்தார்கள்.

“பாய் சாகப்.”

என்னைத்தான் கூப்பிடுகிறார்கள். அண்ணா என்ற அந்த அழைப்பில் நான் கரைந்து போனேன். பாசாங்கு இல்லாத பாசம் அது.

“அப்பா அம்மா ஏதோ அவசரத்திலே பேசிட்டாங்க. அவங்க கிட்டே ஒரு வார்த்தை முன்கூட்டியே நீங்க சொல்லிட்டு, இப்படி இவங்க எல்லோரும் வந்திருந்தா ஒண்ணும் சொல்லியிருக்க மாட்டாங்க.”

நான் சொல்லியிருக்கலாம்தான். விழுத்துப்போட்ட சட்டையை ஒரு நாள் முன்னால் துவைத்திருந்தால் கூட தவில் கருப்பசாமி பிள்ளை எல்லா தெய்வங்களையும் துணைக்கு அழைத்து, அங்குவிலாஸ் புகையிலை கிடைக்கிற விவரம் கேட்டு, தில்லி பயணம் பற்றி ஒரு வரி போனால் போகிறது என்று எழுதி அனுப்பிய லிகிதம் முழுக்கப் படிக்கக் கிடைத்திருக்கும். முன்கூட்டியே படித்திருப்பேன்.

இது என்னம்மா? அவர்கள் கையில் வைத்திருந்ததைப் பார்த்துக் கேட்டேன்.

“குழந்தைகளுக்கு பால். இது ஆப்பிள், ஆரஞ்ச், வாழை. இது நேற்று செய்து வச்சிருந்த ரொட்டியை சூடு பண்ணி எடுத்து வந்திருக்கேன். ஆம்லெட்டும் போட்டு எடுத்து வந்திருக்கேன்.”

மனது நிறைந்துவிட்டது. என்றாலும்...

“பெரியவங்க கோவிச்சுக்கப் போறாங்கம்மா, நீங்க எடுத்து வந்திருக்கீங்களே...”

“யாரு, அம்மாவா? அவங்க கிச்சன்லே இன்னும் ரொட்டி பண்ணிட்டு இருக்காங்க. போதுமோ போதாதோன்னு. டாடி காலு கடையிலே பால் வாங்கிட்டு வர கிளம்பிப் போயிருக்கார். சின்னப் பிள்ளைங்க. ரயில்லே என்ன சாப்பிடக் கிடச்சுதோன்னு சொல்லிக்கிட்டிருந்தார்.”

தேவன் வந்துவிட்டதாக திடமாகத் தெரிந்த நிமிடம் அது.

வார்த்தையை நான் விட்டிருந்தால் எவ்வளவு அனர்த்தமாகி இருக்கும். கீழே இருந்து எல்லாம் போதுமா என்று சத்தம். வாஸ்வானி சாப்தான். நான் நின்றபடிக்கு இருகரம் குவித்து மனம் ஒப்பி வணங்கினேன்.

எல்லோருக்கும் நல்ல பசி. பிகு பண்ணிக்கொள்ள டவுன் ஆட்கள் இல்லை யாரும். குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை வயிறு நிறையச் சாப்பிட்டார்கள். ரொம்ப நாள் கழித்து எனக்கும் மனமும் வயிறும் நிறைய ஒரு ஞாயிற்றுக்கிழமை விடிந்திருக்கிறது.

பத்தே நிமிஷத்தில் அவர்களுடைய பயணத் திட்டம் புரிய வந்தது.

சௌந்தரம்மா மதுரையில் சாதிசனம் வீட்டுப் பெண் சடங்கானபோது பஸ் பிடித்துப் போய் சருவப்பானை அன்பளிப்பு கொடுத்து, கோழி அடித்துப் போட்ட விருந்து சாப்பிட்டு வந்திருக்கிறாள். மதுரை பஸ் ஸ்டாண்டில் டிக்கெட்டுக்கு சரியான சில்லறை இல்லாமல், பத்து ரூபாயை உடைக்க பஞ்சாப் லாட்டரி டிக்கெட் வாங்கச் சொன்னது சௌந்தரம்மா வீட்டுக்காரர்.

“நூறு டிக்கெட்டை காட்டினான். ஆனா நான் அசரலியே. எதை எடுத்தா பணம் விளும்னு கண்ணாத்தா சொல்லிட்டே இருந்தா. நான் அதை எடுத்து...”

சௌந்தரம்மா புனைகதை சொல்லிக் கொண்டிருந்தாள். மகள் இடையில் புகுந்தாள்.

“வேணாம் ஆத்தா, முழுக்கதை சொன்னா ரெண்டு இன்டெர்வெல் விட வேண்டியிருக்கும். கதைச் சுருக்கம் போத்தி அண்ணே, இதான். அந்த டிக்கெட்டுக்கு ஒரு பெரிய லகரம் ப்ரைஸ், இங்கே தில்லியிலே மெயின் டீலர் கிட்டே சீட்டைக் கொடுத்திட்டா கையோடு வாங்கிட்டு போகலாமாம்.

அதுவரைக்கும் இங்கே பக்கத்திலே ஊர் எல்லாம் பாத்துட்டு, முக்கியமா தாஜ் மகால் பாத்துட்டு, ஊருக்கு அடுத்த ஞாயிறு பயணம் வச்சிருக்கோம். டிக்கெட் எல்லாம் ரிசர்வ் பண்ணியாச்சு.”

“குளிச்சுட்டு கிளம்புங்க. உள்ளூர்லே பாக்க வேண்டியதை பாத்து முடிச்சுடலாம்.” அந்த அவசரமாகக் கூடிய அவையைக் கலைத்தேன்.

மிசஸ் வாஸ்வானி, வெந்நீருக்கு கீழே கீஸர் போட்டிருந்ததால், குழாயைத் திறக்க இதமான சூட்டில் தண்ணீர் வந்து விழுந்தது. சரசரவென்று ஆளுக்கு ஐந்து நிமிடத்துக்கு மேலே எடுத்துக் கொள்ளாமல் குளிக்க, குழந்தைகளைக் குளிப்பாட்டி உடுப்பு போட, சலவைத் துணி அணிய என்று அடுத்த ஒரு மணி நேரத்தில் எல்லோரும் வெளியே போகத் தயாராகிவிட்டார்கள். நான்தான் கடைசியில் குளிக்கப் போய் நேரம் அதிகமாக எடுத்துக்கொண்டேன்.

“பஸ்ஸிலேயே போயிடலாம். லாஜ்பத் நகர் பஸ் ஸ்டாண்ட் கூப்பிடற தூரம்தான்.”

நான் உற்சாகமாக நடக்க, புது ஊரைச் சுற்றிப் பார்க்கும் ஆர்வத்தோடு அந்தக் கூட்டம் என்னோடு நடந்து வந்தது.

லோதி கார்டன், இந்தியா கேட், கன்னாட் ப்ளேஸ் என்று வழமையாக டூரிஸ்டுகள் சென்று பார்க்கும் சுற்றுலாத் தலங்கள் இருக்கட்டும் என்று விலக்கி வைத்து சௌந்தரம்மா இஷ்டப்பட்டது கோயில்.

“தம்பி இங்கே முருகன் கோயில் வந்திருக்குன்னு சொன்னாங்களே... போய் பழனியாண்டியை பாத்துட்டு வந்துடுவோமே. ஊர்லே இருந்து அவதி அவதியா கிளம்பி வந்துட்டேன். குன்னக்குடி கூட போக முடியலே.”

லாஜ்பத்ராய் வீதி, ஹவுஸ்காஸ் வழியாக ஆர்.கே.புரத்துக்கு பஸ் எடுத்துப் போய்ச்சேர கிட்டதட்ட இரண்டு மணி நேரமானது. நானும் அந்தக் கோயிலைப் பார்த்ததில்லை. மூன்று வருடம் முன்பு கும்பாபிஷேகம் நடந்து ஜேஜே என்று தமிழ், மலையாள, ஆந்திர,

கன்னட சுவடுகளாக விரியும் திராவிட பக்த கும்பலோடு கம்பீரமாக நிற்கும் கோயில். சௌந்தரம்மா ரகசியம் பேசுகிற குரலில் கூப்பிட்டாள்:

“போத்தி தம்பி...”

“என்ன ஆத்தா? காவடி எடுக்கணுமா? குன்னக்குடி போகலேன்னு கொறைப்பட்டுக்கிட்டீகளே?”

“அட போ தம்பி, காவடி என்ன பால்குடமே எடுத்துடலாம், ஆனா அதுக்கு முதல்லே வேண்டிக்கணும். இப்போ வேண்டிக்கிட்டா அடுத்த முறை வரும்போது பூர்த்தி பண்ணிடணும். அடுத்த தடவை இங்கிட்டு வருவேன்னு நினைக்கறே?”

“ஏன் ஆத்தா, நீ நூறு வருஷம் புகையிலைக் கட்டை அதக்கிக்கிட்டு ஊர் உலகம் எல்லாம் சுத்திட்டு இருக்கப் போறே பார். நாந்தான் கிழவனா ஒரு மூலையிலே உக்காந்திருப்பேன்” என்றேன்.

அதற்குள் சௌந்தரம்மா கொண்டுவந்திருந்த துணிப்பையில் இருந்து இன்னொரு சணல் பையை எடுத்து, அதற்குள் இருந்து ஒரு சுருக்குப் பையைத் திறந்து, உள்ளே நீளவாட்டில் இருக்கும் லெதர் பர்ஸை எடுத்து அதையும் திறக்க, அம்மாடி என்றேன்.

பின்னே இல்லையா? விட்டலாச்சார்யா படத்தில் ஏழு கடல், ஏழு மலை தாண்டி, பாம்பும் கழுகும் சுற்றி இருக்க நடுவே இருக்கும் தீவுக்குக் காந்தாராவ் போய்க் கைப்பற்றும் மந்திர மோதிரம் மாதிரி அத்தனை பாதுகாப்போடு பரிசு பெற்ற லாட்டரிச் சீட்டு அங்கே இருந்தது.

தீபாராதனைத் தட்டில் வைத்து முருகன் காலடியில் சேர்த்து ஆசி வாங்கிக் கொள்ளலாம் என்ற சௌந்தரம்மாவின் கோரிக்கையை உடனே நிராகரித்தேன். நடுவில் எங்கேயாவது சீட்டு காணாமல் போனாலோ, அல்லது தீபாராதனைத் தட்டில் தீநாளம் தீண்டிப் பார்த்தாலோ பிரச்சனை.

“இங்கே இருந்தே சீட்டை அவருக்குக் காட்டி கண்ணுலே ஒத்திக்கிட்டு திரும்ப வச்சுடுங்க. தேங்கா, பழம் வச்சு நைவேத்தியம் செஞ்சு கும்புட்டுக்குங்க.”

“போத்தி தம்பி சொன்னா சரியாத்தான் இருக்கும். அவங்க மலையாள பூமியிலே ஒரு கோயில் விடாம குருக்களய்யா ஆச்சே.”

அந்தக் கூட்டமே என்னைக் கையெடுத்துக் கும்பிட கூசிப் போனது. சார்மினார் சிகரெட் ஊதிக்கொண்டு, ராத்திரியில் விஸ்கியும் பியருமாக மிதந்து, அமிழ்ந்து, கல்யாணமான பாயல் அஹுஜாவோடுமனசில் தகாத காரியம் பார்க்கும் போத்திக்கு இதெல்லாம் ரொம்பவே அதிகபட்ச மரியாதை. கும்பிட்டு முடித்து வெளியே வந்தோம்.

“தம்பி, ஒரு விசயம்...”

சௌந்தரம்மா தயங்கினார்.

“சொல்லுங்க ஆத்தா.”

“ஒண்ணுமில்லே. நாங்க இப்படி படை பட்டாளமா வந்து உன்னை தொந்தரவு படுத்தக்கூடாதுன்னுதான் நெனச்சோம். ஆனா வந்து கால் ஊணி ஒரு வாய் காப்பித்தண்ணி குடிக்க, குளிச்சு தெளிக்க, பிள்ளைங்களுக்கு பால் காய வச்சுக் கொடுக்க, உன்னை விட்டா யாரு இருக்கா நான் போக?”

அவளோடு சேர்ந்து நானும் கண் கலங்கினேன்.

“அது பரவாயில்லே ஆத்தா...”

“என்ன பரவாயில்லே. கல்யாணம் ஆகி குடும்பத்தோட இருந்தா பரவாயில்லேதான். நீ ஆபீஸுக்கு போவியா, எங்களை கவனிப்பியா? அதான் சந்தானம் டாக்டர் கிட்டே கேட்டு இதோ பாரு வாங்கியாந்திருக்கேன்.”

இன்னொரு சீட்டை பைக்குள் பைக்குள் திரும்பத் தேடி எடுத்து நீட்டினாள். இதுவும் லாட்டரிச் சீட்டா?

“எனக்கு வேணாம் ஆத்தா.”

நான் கிண்டல் செய்தபடி அந்தச் சீட்டைப் பார்க்க ஒரு விலாசம். பிர்லா மந்திர் பக்கம்.

“இவங்க தங்கியிருக்க குறைவான காசு வாங்கிட்டு இடம் தர்றாங்களாம். போய்ப் பார்க்கச் சொன்னார் டாக்டரு. கொஞ்சம் முடிச்சுக் கொடுத்துடேன்.”

சௌந்தரம்மா கெஞ்சினாள். அதற்குள் குழந்தைகள் அழவே, பக்கத்தில் ஒரு ஆந்திரா மெஸ்ஸில் நுழைந்து, கொண்டுவந்த பாலோடு இன்னும் கொஞ்சம் வாங்கிக் கொடுக்க திட்டம்.

“நல்லா கொழைய வடிச்ச சாதம் இருக்கு. பப்பு போட்டு பில்லல தினனிவண்டி.”

வயதான பெரியவர் நாமத்தோடு உட்கார்ந்து சொன்னார். பிள்ளைகளுக்கு பருப்பு சாதம் மட்டுமில்லாமல் பெரியவர்களுக்கும் நல்ல காரமான ஆந்திரா சாப்பாடு கிடைத்தது அங்கே. நான் போகவேண்டிய சாப்பாட்டுக்கடை பட்டியலில் அந்த இடத்தையும் சேர்த்துக்கொண்டேன்.

தடதடதடவென்று பெரிய மோட்டார்சைக்கிள்போல நகர்ந்த, பிரம்மாண்டமான ஒரு சர்தார்ஜி ஓட்டிப் போக நகர்ந்து வந்த வாகனத்தில் நான் இதுவரை ஏறியதில்லை. அதில் இரண்டு இறக்கையிலும் கூரை கட்டி, பலகை வைத்து பயணிகள் உட்கார்ந்து இன்றைக்கு முழுக்க ஊரும் பொறுமை ஆச்சரியகரமானது. ஆனால் பஸ் கிடைக்காத இந்த நேரத்தில் அது சரிப்படுமா தெரியவில்லை.

“பாயிசாப், எங்கே கிளம்பிட்டீங்க?”

வண்டி ஓட்டிவந்த சர்தார்ஜி விசாரித்தார், தலைப்பாகையில் செருகிய குண்டுசியை எடுத்து புறங்கையில் குத்திக்கொண்டபடி.

இந்து மஹா சபா என்றேன். அவர் சிறு ஆச்சரியத்தோடு பார்த்தார். அப்படித்தான் நினைத்தேன்.

மலைமந்திரில் கிளம்பி சர்தார் படேல் ரோடில் இறங்கினோம். நல்ல வேளையாக மூன்று ஆட்டோக்கள் சிரமமின்றிக் கிடைக்க, பூங்கா தெரு வழியே மந்திர் மார்க்.

கம்பீரமான கட்டடம். பிர்லா மந்திர் கோயிலுக்கு அருகே இன்னொரு கோயில் மாதிரி ஒரு பார்வைக்குத் தெரிந்தது. நீண்டு உயரும் படிகள். உள்ளே நீரூற்றும், மரங்களும், செடிகொடிகளுமாக ரம்மியமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்றாலும் தோளில் குறுக்காக ஜோல்னா துணிப்பை மாட்டியபடி அங்குமிங்குமாகப் பலர் நடந்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே உச்ச சத்தத்தில் ஆசிரியர் சொல்ல, பிள்ளைகள், அல்லது பெண்கள் சேர்ந்து திரும்பச் சொல்ல, ஏதோ வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

ஷெல் ஃப்ரேம் மூக்குக் கண்ணாடியோடு மேஜைக்கு முன் அமர்ந்திருந்த பெரியவர் முன்னால் இரண்டு பேர் நிற்க பஞ்சாயத்து.

மரம், செடிகளுக்கு காலையில் தண்ணீர் ஊற்றியானதா இல்லையா என்று விசாரணை. நான் போய் நின்றதும், அது உடனடியாக முடிவுக்கு வந்தது.

ராம்ராம் என்று விசாரணை நீதிபதி சொல்ல, முன்னால் நின்றவர்கள் தலையில் குல்லாவை திரும்ப வைத்தபடி ராம்ராம் சொல்லி அப்பால் போனார்கள்.

நான் கொஞ்சம் முன்னால் போக, அதற்குள் திடுமென்று பழைய புராணப் படத்தில் கடவுள் பிரத்தியட்சமாவதுபோல் சடாமுடியும் மழுங்கச் சிரைத்த முகமுமாக ஒரு பஞ்சகச்ச வேஷ்டிக்காரர் வந்து, வகுப்பில் நிறையப் பேர் வந்திருப்பதால் அடுத்த அறையில் பூட்டி வைத்திருக்கிற ப்ளாஸ்டிக் நாற்காலிகளை உடனடியாக அனுப்ப வேண்டும் என்று கோரினார்.

நோஞ்சானாக ஒரு அம்மா, தலையைப் போர்த்தியபடி, ஒரு வார்த்தை, ஒரு ராம்ராம் என்று கலந்து சொல்லியதன் சாராம்சம் - புத்தகக் கடையில் துளசிதாசரின் ராமசரிதமானஸ் மூலமும் உரையும் கேட்டு யாரோ காத்திருக்கிறார்கள். மாடியில் இருந்து எடுத்து அனுப்ப வேண்டும்.

டெலிஃபோன் ஓயாமல் அடித்துக் கொண்டிருக்கிறது. வயதான சந்நியாசி ஒருவர் “மண்டைவலி தலையையே பிளக்கிறது. கோடாப்ரின் வேண்டியிருக்கு” என்று முறையிட்டபடி ஓரமாக நின்றார்.

இத்தனை வேலைக்கு நடுவே எங்களுக்கு அறை வாடகைக்கு வேண்டும் என்று அவரிடம் எப்படிச் சொல்வது? அந்த இடத்தின் சூழ்நிலையைப் பார்த்தால் போர்டிங் அண்ட் லாட்ஜிங் உலகம் மாதிரி தெரியவில்லை. சாரி, அடுத்த கட்டடத்துக்குப் போங்க என்று எந்த வினாடியும் அவர் துரத்திவிடுவார்.

மேஜை டிராயரைத் திறந்து சன்னியாசிக்கு கோடாப்ரின் எடுத்துக் கொடுத்து, சமையலறையில் வெந்நீர் வாங்கி அதோடு கூட முழுங்கச் சொல்லிவிட்டு, மற்றவர்களை இருக்கச் சொல்லிக் கையசைத்து, அப்புறம் என்னைப் பார்த்தார்.

“என்ன விஷயமாக வந்திருக்கீங்க? இவங்க எல்லாம் யார்?” அவர் எங்கள் குழுவைப் பார்த்துக் கேட்டார்.

சுருக்கமாக யார் என்று விவரம் சொன்னேன். சபாவில் இரண்டு மூன்று நாள் தங்க அறை வாடகைக்குக் கிடைக்கும் என்று எங்களுக்கு வேறு யாரோ வழிகாட்டியது தப்பாக இருக்கலாம் என நான் உடனடியாக வருந்தத் தொடங்கினேன். அவர் கால் சென்டிமீட்டர் சிரித்தபடி சொன்னார்:

“அதுவும் உண்டுதான். பின்னால் எட்டு ரூம் வெளியூர், முக்கியமா வெளி மாநிலத்தில் இருந்து யாத்திரை வருகிறவங்களுக்காக இருக்கு. இது இந்து மகாசபாங்கறதாலே இந்துவா இருக்கணும் இங்கே தங்க வர்றவங்க. பணம் பெருத்தவங்களுக்கு இடம் இல்லே. ஏழைப்பட்டவங்களுக்குத்தான் அது. ஒரு நாள் முப்பது ரூபா வாடகை. சாப்பாடு, டீ, காப்பி எதுவும் எதிர்பார்க்கக் கூடாது. மூணு ரூம் தரச் சொல்றேன். அதுக்கு மேலே முடியாது.”

எல்லாவற்றுக்கும் தலையாட்டினேன்.

“வெளியே இறங்கி வலது பக்கமா நேரே பின்னாலே போனா, சின்னதா ஒரு கட்டடம் இருக்கும். அங்கே மாதவ் அதிகாரின்னு ஒருத்தர் இருப்பார். ஆமா, பெயர்லேயே அதிகாரி. கோபால் கோட்ஸே அனுப்பினதா சொல்லுங்க. ஆமா, அந்த கோட்ஸே என் தம்பிதான்.”

நான் ஆச்சரியப்பட்டு நிமிர்ந்து பார்த்தேன். சாரி என்றேன். ஏன் என்று தெரியவில்லை.

“ரொம்பப் பேர் நான் யார்னு சொன்னதும் இப்படித்தான் ஆச்சரியப்படறாங்க. நாதுராமை நாம் யாரும் மறக்கக் கூடாதுங்கறதுக்காக அவன் பெயரை தினமும் பத்து தடவையாவது சொல்றேன்.”

“ஓகே சார். ரைட் சார்.” இந்த எதிர்வினை போதாது என்று பட, “சாரி, உங்களை தொந்தரவு படுத்தறோம். இப்போ இருக்கற அரசியல் நிலைமையிலே ஏற்கெனவே உங்களுக்கு கஷ்டம் வந்திருக்கும். நான் வேற கும்பலை கூட்டி வந்து...”

புத்தகக் கடையில் வைக்க ராமாயணம் கேட்டு வந்த பெண்மணி உள்ளே புகுந்து சொன்னார்:

“நோ நோ நோ. கவர்மெண்ட் மூலம் எந்த கஷ்டமும் இல்லை. எங்க சர்க்கார்தானே அது. நாங்க செய்ய வேண்டியதை அது செய்யுது. விரசா செய்யுது. விரிவா நடக்குது அதெல்லாம். இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கு.”

நான் சும்மா இருந்தேன். சரியும் தப்பும் சுட்டுக்காட்டி கட்சிகட்ட நான் யார்?

“சரி, அவங்க காத்திருக்காங்க.”

அந்தப் பெரியவர் மற்றவர்களைக் காட்ட, “பணம் எவ்வளவு கட்டணும் சார்?” என்று கேட்டேன்.

“ரெண்டு நாள் வாடகை அட்வான்ஸ். அதை இப்போ கட்டிட்டு போயிடுங்க. சாயந்திரத்துக்குள்ளே வந்துடணும்.”

நான் நன்றி சொல்லிக் கிளம்பினேன். தவில் கருப்பசாமி பிள்ளையிடமும் செளந்தரம்மாவிடமும் விஷயத்தைச் சொன்னேன். இடம் நல்லா இருக்கு என்று அவளுடைய தங்கை மாப்பிள்ளை சிலாகித்தார்.

“குளிருக்கு அடக்கமா பெரிய கல்லுக் கட்டடம். வாசல்லே வேர்க்கடலை வறுத்து விக்கற வாசனை அடேயப்பா...”

எல்லோரும் சிலாகித்து தங்குமிடப் பிரச்சனை தீர்ந்ததாக நிம்மதி மூச்சு விட, செளந்தரம்மா என்னை ஓரமாகக் கூப்பிட்டாள்.

“போத்தி தம்பி, அந்தப் பெரியவுக ஏதோ சொன்னாங்களே...”

“ஆமா, சாதா ஆளுங்களுக்குத்தான் ரூம் தருவாங்களாம். நீங்க லட்சாதிபதின்னு அவர் கிட்டே சொல்லலே.”

“போ தம்பி, கையிலே வர்ற வரைக்கும் அதெல்லாம் நிச்சயம் இல்லே. அதைச் சொல்லலே.”

“வேற எதைச் சொல்றீங்க?”

“பேரு சொன்ன மாதிரி இருந்துச்சே...”

“ஆமா, அதிகாரின்னு ஒருத்தரை பாத்து பணம் கட்டணும். நான் பேங்கிலே அதிகாரி மாதிரி அவர் இங்கே போல. பேரே அப்படி அமைஞ்சு போச்சு.”

“அதைச் சொல்லலே தம்பி.”

“பின்னே வேற எதை ஆத்தா?”

“அந்த மகாபாவி பேரை சொன்ன மாதிரி இருந்துச்சே...”

“எந்த மகாபாவி?”

“என் வாயாலே வேற அதைச் சொல்லணுமா? அந்த மகராசன், சத்தியவான் காந்தியாரை கொன்னானே அந்தப் பயதான்.”

“யாரு கோட்ஸேயா?”

“ஆமா, போய் கோலிசோடா வாங்கி வாயை கொப்பளிச்சுட்டு வா. அந்தப் பேரைச் சொல்லக்கூட கூடாது.”

“ஆத்தா, அது ஒரு குடும்பப் பேரு. அதை பலபேர் வச்சிருப்பாங்க.”

“என்னமோ போ, எனக்கு வேணாம்.”

“வேணாம்னா நீங்க வச்சுக்காதீங்க. நொரநாட்டியம் பண்றீங்களே...”

“அந்தப் பெரியவரு கொலைகாரன் பேரை ஏன் சொன்னாப்பல?”

“ஆமா, அவரோட சொந்தத் தம்பிதான் நாதுராம் கோட்ஸே. காந்தித் தாத்தாவை போட்டுத் தள்ளின ஆளு.”

“நெனச்சேன். அந்த மூஞ்சை எப்பவோ தினத்தந்தியிலே பார்த்திருக்கேன். இது மாதிரித்தானிருக்கும்.”

“இப்ப என்ன செய்யணுங்கறே ஆத்தா?” நான் சிரித்தபடி கேட்டேன்.

“இங்கே இன்னும் ஒருநிமிஷம் கூட இருக்கக் கூடாது தம்பி. வாங்க, போகலாம்.”

சௌந்தரம்மா குரலில் உறுதி தெரிந்தது. அவளை வற்புறுத்த விரும்பவில்லை. மூத்த கோட்ஸேயிடம் அப்புறம் வருவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். வரமாட்டோம் என்று அவருக்குத் தெரிந்திருக்கும்.

யாரும் எதுவும் பேசாமல் வெளியே வந்தோம். திரும்பி அந்த முன்வாசலைப் பார்த்தேன். அங்கே யாருமில்லை.

“இப்போ பகல் நாலு மணி. ஆறு மணிக்கு இருட்டிப் போயிடும். அதுக்குள்ளே காந்தி சமாதி, ராஷ்ட்ரபதி மாளிகை பாத்துடலாமா? காந்தி சமாதி இந்த ஆத்தாவுக்கு ஸ்பெஷலா போறது.”

சிரிப்பை விதைக்க முயன்றேன். யாரும் சிரிக்கவில்லை.

“நாளைக்கு பாத்துக்கறோமே தம்பி. எப்படியாவது நாங்களே இடம் பார்த்து போயிடறோம். இப்பதிக்கு கொஞ்சம் கிறுகிறுன்னு வருது. தலை சாச்சு படுக்க இப்போதைக்கு உங்க வீடுதாம்பா இருக்கு.”

அவள் வேண்டுதலோடு சொல்ல, “எங்கேயும் நீங்க போக வேண்டாம். என் வீட்டிலேயே இருங்க. ஏற்பாடு செஞ்சுடலாம்” என்றேன். வாஸ்வானி குடும்பம் நிச்சயம் உதவுவார்கள். ஆனால் நாளை பரிசுச் சீட்டை பஞ்சாப் அரசாங்க பிரதிநிதியிடம் ஒப்படைப்பது, அதற்கான நடவடிக்கைகள்... லீவு போட விடுவார்களா பேங்கில்?

யோசித்தபடி அவர்களை ஜங்க்புரா போக வந்து நின்ற பஸ்ஸில் ஏற்றி நானும் ஏறிக்கொண்டேன். லாஜ்பத் நகர் வரும்போது சாயந்திரம் ஐந்து மணி. சௌந்தரம்மா மட்டுமில்லை, எல்லோருமே உறங்கிவிட்டார்கள். அசதிதான்.

ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு தாபாவுக்குப் போய் பத்துப் பேர் சாப்பிட ரொட்டி, உருளைக்கிழங்கு சப்ஜி, கத்தரிக்காய் கூட்டு ஆர்டர் கொடுத்தேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் ஆளனுப்பி டெலிவரி செய்கிறேன் என்று அனுப்பி வைத்தார் தாபாக்கார பஞ்சாபி.

தமிழ்க்காரர் வைத்திருக்கும் ஆல் பர்பஸ் கடையில் மிக்சர், காராசேவு, ராணி, குமுதம், கடலை மிட்டாய் என்று கலந்து கட்டியாக வாங்கிக்கொண்டேன். பால் வாங்கிவர மறந்து போக, பொடிநடையாக ஏ ப்ளாக் போய் மிட்டாய்க்கடையில் காய்ச்சிய பால் வாங்கி வந்தேன். வெற்றிலை பாக்கும் வாங்கியிருக்கலாமோ.

கீழே வாஸ்வானி வீட்டில் சாயந்திரம் டெலிவிஷனைப் போட்டிருக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் டெலிவிஷனில் சினிமாப் பாட்டு போடுவார்கள். நான்கு பாட்டு முடிந்து ஒரு பழைய இந்தி சினிமாப்படம் வரும். எமர்ஜென்சியைக் கொண்டுவருவதற்கு சற்று முன்னால், தில்லி போட் கிளப்பில் ஜெயப்ரகாஷ் நாராயண் பேசும் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்துக்கு எதிர்க்கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்கு மக்கள் போகாமல் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பதற்காக இந்திரா அரசாங்கம் முயற்சி எடுத்து, டெலிவிஷனில் புத்தம்புது சினிமாப்படமான ‘பாபி’ திரையிடப்பட்டது. அந்த ஒரு தடவைதான் டிவியில் புது சினிமா வந்தது.

இப்போது, டெலிவிஷனில், இந்தியில் நீளமாகப் பேசிய பிறகு அரதப்பழசு இந்தி சினிமாப் பாட்டு ஒலித்தது. 'டாக்சி ட்ரைவர்' படத்தில் குரல் நடுங்க தலத் மொகம்மது பாடிய 'ஜாயெ து ஜாயே கஹாங்'. அது முடிந்து பேச்சு.

சட்டென்று தமிழ்ப் பாட்டு - 'அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்…'

கீழே இருந்து வாஸ்வானியின் மூத்த மகள் மினு ஓடி வந்தாள். "போத்தி, சீக்கிரம் வா. மதராஸி பாட்டு. அயிராம் படம். அயிராம் தில் ஒருவான்."

ஆயிரத்தில் ஒருவன் என்றபடி நான் கீழே போக பாட்டு கிட்டதட்ட முடிந்திருந்தது.

"உன் விருந்தாளிகளுக்கு என்ன திட்டம் வச்சிருக்கே?" வாஸ்வானி கேட்டார். திரும்ப வந்த சாத்தானா?

மங்கிய விளக்கு வெளிச்சத்தில் சிட் அவுட்டில் பழைய மோடாவில் உட்கார்ந்து முழுக் கதையும் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். சௌந்தரம்மாவுக்கு லாட்டரி விழுந்த செய்தியை மட்டும் மறைத்து விட்டேன். சொன்னால் நாளைக் காலை லாஜ்பத் நகர் முழுக்கத் தெரிந்திருக்கும் அது.

ரூம் ஹீட்டர் ஒன்றை பெட்ரூமிலிருந்து எடுத்து என்னிடம் கொடுத்தார் அம்மா வாஸ்வானி.

"உன் ஹீட்டர் போதாது. இதை ஹால்லே போட்டுக்கோ."

வாங்கிக்கொண்டு படி ஏறும்போது நாளைக்கு வேற இடம் பார்த்துக் கொள்வார்கள் என்றேன். நல்லது என்றார் வாஸ்வானி. எங்கே? தெரியாது.

ஒன்பது மணிவரை சாப்பிட்டுவிட்டு ஊர்க்கதை பேசிக் கொண்டிருந்தோம்.

நான் புறப்பட்டு வந்து இந்த இரண்டு மாதத்தில் ஒன்றும் மாறவில்லை என்று தோன்றியது. நிறைய மாறியிருக்கிறது ஊர் என்றும் பட்டது.

காரணம் கண்டுபிடிக்க சிரமம் இல்லை. போத்தியின் உலகமும் சௌந்தரம்மா உலகமும் வேறுவேறானவை. அவ்வப்போது அவை சந்தித்துக்கொள்ளும். இயல்பான சந்திப்போ அல்லது இதுபோல் லாட்டரிச் சீட்டு ஏற்படுத்திக் கொடுப்பதோ.

பேசிக் கொண்டிருக்கும்போதே சௌந்தரம்மா தங்கை மாப்பிள்ளை நெளிந்தார். என்ன சார், டாய்லெட்டா என்று விசாரித்தேன்.

“அது இல்லே தம்பி.” பின்னே வேறே என்ன?

“வெத்திலை தீர்ந்து போச்சு. சீவலும் இல்லே. போய் இந்தப் பக்கம் ஏதாவது கிடைக்குதான்னு பார்க்கறேன். வாக்கிங் போன மாதிரியும் இருக்கும்.”

குளிருமே என்றேன் உடனே.

“பரவாயில்லே, தம்பி. இந்த ஸ்வெட்டர் இங்க்லாண்ட்லே இருந்து பெரியப்பாரு மகன் கொண்டுவந்தது. அங்கே எப்படி வந்ததுன்னா காஷ்மீர்லே இருந்து இறக்குமதியாம். பாருங்க, அங்கே இங்கே சுத்தி நம்ம ஊர் சரக்கு நம்ம கிட்டே வந்துடுது” என்று சிரித்தார் அவர்.

அவருக்கு இந்தக் குளிர் தாங்கக்கூடியது என்றால் போத்திக்கு என்ன போச்சு?

“இங்கனக்குள்ளே கடைகண்ணி ஏதாவது இருக்குமா?”

“என்ன மாதிரி?”

“நம்ம பொருள் வாங்கறதா... வெத்திலை, சீவல், வாசனை சுண்ணாம்பு...”

எனக்குத் தெரிந்திருக்கும் என்று அவர் நிச்சயமாக நினைக்கிறார். யோசித்துவிட்டுச் சொன்னேன் -

“இங்கே ரயில்வே கேட் பக்கம் பொறம்போக்குலே குடிசை போட்டு சில தமிழ்க்காரங்க இருக்காங்க. முந்தியெல்லாம் சேலம் பக்கம் இருந்துதான் இப்படி புறப்பட்டு வருவாங்க. இப்போ தெற்கிலே எங்கெல்லாமோ

இருந்து வர்றவங்க... முக்கியமா, பொம்பளை ஆளுங்க வீட்டு வேலை செய்வாங்க, ஆம்பிளைங்க ரயில்வே கேங்க் கூலி, இல்லே சின்னச் சின்னதா உதிரி வேலை. இந்தி சரளமா பேசுவாங்க. வந்து ஒரு வருஷத்திலே பேசக் கத்துக்கிடுவாங்க. கையிலே பணம் அதிகம் புழங்கினா, செலவும் அதிகம்தான். சென்ட்ரல் மார்க்கெட் ஓட்டல்லே இருபது ரூபாய் கொடுத்து மசாலா தோசை வாங்கித் தின்ன நாம யோசிப்போம். பக்கத்துலே உக்காந்து அவங்க சர்வ சாதாரணமா சாப்பிட்டு பார்சலும் வீட்டுக்கு வாங்கிப் போவாங்க. அவங்க இடத்துலே தெருவிலேயே காடா விளக்கு வச்சு நம்மூர் சீவல் பாக்கு வித்திட்டிருக்கறதை பார்த்திருக்கேன்" என்றேன்.

அங்கே கடா மார்க் சாராயமும் ரொம்ப தெரிந்தவர்கள் என்றால் உள்ளே இருந்து எடுத்துக் கொடுப்பார்கள் என்று நண்பன் சாமிநாதன் சொல்லியிருக்கும் விஷயம் நினைவு வந்தது. அதை இவரிடம் சொல்லவேண்டாம் என்று தீர்மானம் செய்திருந்தேன்.

பேச்சு தொடர்ந்து கொண்டிருக்க, அவர் லுங்கியும் செருப்பும், மேலே யாரோ யாருக்கோ எப்போதோ போர்த்திக் களைந்த பொன்னாடையுமாக படி இறங்கிப் போனதைப் பார்த்தேன்.

பேண்ட் போட்டுப் போகச் சொல்லலாமா? லுங்கியை மட்டமாகப் பார்க்கும் ஊர் இது. வேண்டாம். பக்கத்தில்தானே, கூப்பிடு தூரத்தில் லாஜ்பத் நகர் கிழக்கு ரயில்வே ஸ்டேஷன் பக்கத்து ரயில் கேட்டுக்குத்தான் போகிறார். கடந்து போனாலும் ஈராஸ் தியேட்டர். அதுக்கு மேலே ஞாயிற்றுக்கிழமை ராத்திரி குளிரில் பார்க்க என்ன இருக்கிறது? மிஞ்சிப் போனால் பதினைந்து நிமிடத்தில் திரும்பிவிடப் போகிறார்.

சுவர்க்கோழிகள் கிரீச்சிடும் பனிக்கால இரவில் நடந்து போனவர் திரும்பி வரவில்லை.

பதினைந்து நிமிடம் அரை மணியாகி, அது ஒரு மணி நேரமாக நீண்டு கழிந்து போனது. வழி தப்பிப் போய் எங்கேயாவது அலைந்து கொண்டிருக்கிறாரா?

நான் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு பஸ் ஸ்டாண்ட், சென்ட்ரல் மார்க்கெட், மூல்சந்த், ஜங்க்புரா, ஹஸ்ரத் நிஜாமுதீன் என்று சுற்றுவட்டாரம் முழுக்கப் போய் வந்தேன். மிக நிதானமாக வண்டி ஓட்டிப் போய் தெருவில் நடந்து போகிற எல்லோரையும் நின்று நின்று பார்த்துப் போனேன். அவரைக் காணோம்.

ஒரு மணி நேரத்தில் வீடே வேற மாதிரி ஆகிவிட்டது. சௌந்தரம்மா பெரிதாக அழ ஆரம்பித்து அடக்கிக்கொண்டு விசும்பினாள். வீட்டில் இருந்த மற்ற பெண்கள் ஒரே நேரத்தில் பேச ஆரம்பித்து பாதியில் விசித்தழத் தொடங்கினார்கள். குழந்தைகள் நிறுத்தாமல் உச்சத்தில் குரலெடுத்தன.

கருப்புசாமி பிள்ளை எங்கள் சீஃப் மேனேஜரிடம் சொல்லி ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டார். அவர் வீட்டு ஃபோன் நம்பர் எங்கள் யாருக்கும் தெரியாது. கீழே வாஸ்வானியிடம் உதவி கேட்கலாம் என்று போய் வாசல் அழைப்பு மணியை ஒலித்தேன். அது வேலை செய்யவில்லை. நடு ராத்திரியில் கதவைத் தட்ட மனம் இல்லாமல் திரும்பி வந்தேன்.

எங்கள் வீட்டுக்குப் பின்னால் இருக்கும் தெருவில் சுஷ்மா சர்மா என்ற, அரசியலில் ஈடுபடும் சுப்ரீம் கோர்ட் வக்கீலும் மாணவர் இயக்கமான வித்யார்த்தி பரிஷத்தில் முக்கிய ஆளுமையான அவருடைய கணவரும் இருப்பதாக ஜஸ்பீர் ஒரு குடிமும்முர ராத்திரியில் சொன்ன நினைவு. எமர்ஜென்சியில் அவர்கள் வீடு காலி செய்துகொண்டு வேறெங்கோ போய்விட்டதாகவும் கேட்ட நினைவு.

கிட்டதட்ட ராத்திரி ஒரு மணிக்கு வீட்டு வாசலில் நான்கைந்து பேர் நின்று தமிழில் கூப்பிட்டார்கள்.

“போத்தி சாருங்களா?”

நான் விடுவிடுவென்று கீழே ஓட, சேலம் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் நான்குபேர் கூடவே மலங்க மலங்க முழித்தபடி சௌந்தரம்மா தங்கை மாப்பிள்ளை.

“மூல்சந்த் கிட்டே போலீஸ் வேனில் நாலஞ்சு பேரோடு உக்காந்திருந்தார். அது அறுத்துக்க ஆளை கட்டாயப்படுத்தி கூட்டிப் போற கூட்டம். அதிலே எப்படி போனார்னு தெரியலே. இவர் தமிழ்லே வீட்டுக்கு போகணும் லாஜ்பத் நகர்னு புலம்பிட்டிருந்தாரா, நின்னு பார்த்தோம். நம்ம ஆளுன்னு புரிஞ்சுது.”

அவர் சேலத்துக்கார ஆள்தான் என்று போலீஸிடம் சொல்லி அவரை விடுவித்துக் கூட்டி வந்திருக்கிறார்கள் அவர்கள் இருப்பிடத்துக்கு. வீடு எங்கே என்று கேட்டால் அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. நல்ல வேளை, லாஜ்பத் நகர் ரயில்வே ஸ்டேஷன் எதிரே, போத்தி... இப்படி சில துப்புகளை வைத்து கூட்டி வந்து விட்டார்கள்.

முழு நூறு ரூபாயை அவர்களுக்கு எடுத்து நீட்டி நன்றி சொல்லிவிட்டு தொலைந்துபோய் வந்தவரோடு வீட்டுக்குள் நுழைந்தேன்.

ஆரத்தி எடுக்காத குறைதான். அப்புறம் வெகுநேரம் அவரிடம் ஏதோ எல்லோரும் கேட்க, தயங்கித் தயங்கி ஒரே பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

“ஏத்தி விட்டாங்க... ஏத்தி விட்டாங்க...”

நான் எப்போது உறங்கினேனோ தெரியாது.

காலையில் அவர்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவையான பால், சாப்பாடுக்கு வாஸ்வானி குடும்பத்தின் காலில் கும்பிட்டு விழாத குறையாக வேண்டப் போனேன். அதற்குத் தேவை இல்லாமல் அவர்களே மனமுவந்து உதவி செய்தார்கள். ஆபீஸுக்கு அரை மணி நேரம் தாமதமாகப் போனேன்.

அட்டெண்டன்ஸ் சீஃப் மேனேஜர் கேபினுக்குப் போய்விட்டது அதற்குள். மற்ற நாட்களில் தாமதமாக வருவது, எச்சரிக்கை செய்து இனி மறுபடி நேராமல் உறுதி எடுக்கவேண்டிய தவறு. எமர்ஜென்சியில் இதற்கே இன்க்ரிமெண்ட், ப்ரொமோஷன் எல்லாம் இல்லாமல் போகலாம். உடனடியாக ட்ரான்ஸ்ஃபர் ஆகலாம். சீஃப் மேனேஜர் அறைக்கு விரைந்து, தாமதமாக வந்த காரணத்தை விவரமாகச் சொன்னேன்.

“இதுக்கா கஷ்டப்படறே?”

அகர்வால் சாப் துச்சமாகச் சிரித்தார்.

“நம்ம ஆபீஸ் ஸ்டாஃப்தானே அந்தப் பாட்டியம்மா? லாட்டரி பணத்தை நம்ம பேங்குலே, அட, உங்க ஊர்லேதாம்ப்பா, போடுவாங்களா?” கேட்டார் அவர்.

“வேற எங்கே சார் போட? இதுக்கு ஸ்டாப் இன்ட்ரெஸ்ட் ஒரு பெர்சென்ட் அதிகமா வருமே.”

சீஃப் மேனேஜருக்கு வேண்டிய கரோல்பாக் விடுதிக்காரரிடம் சொல்லி உடனடியாக - காலைச் சாப்பாடு முடிந்த கையோடு - சௌந்திரம்மாள் குடும்பம் அங்கே குடிபெயர்ந்தது.

அடுத்த நாள் பரம்வீர் நேகி என்கிற இமாசல பிரதேசத்திலிருந்து குடியேறிய சீனியர் கிளார்க் ஒருவரை அனுப்பி லாட்டரிச் சீட்டை பஞ்சாப் அரசிடம் ஒப்படைத்து ரசீது வாங்கி வந்தானது. இரண்டு நாள் சென்று நேகி திரும்பப் போய் அந்தப் பணத்துக்கு ட்ராஃப்ட் வாங்கி வந்து டெலக்ராபிக் ட்ரான்ஸ்பரில் ஊரில் சௌந்தரம்மா கணக்குக்கு வரவு வைக்க அனுப்பியானது. லட்ச ரூபாய் இல்லை, எழுபதாயிரம் மட்டும். வரி போக அவ்வளவுதான்.

நேகி, ட்ராஃப்ட் சுணங்காமல் வர அங்கே இங்கே கொஞ்சம் சாய்பானி சாப்பிடக் கூப்பிட்டு உபசரித்த வகையில் செலவழித்த நாற்பது ரூபாயை நான் அவனுக்குக் கொடுத்தேன்.

வேண்டாம் என்றான் முதலில். இது என் வகை மனுஷர்களுக்கான செலவு. நான் போயிருக்க வேண்டியது. போனாலும் முடிந்திருக்குமோ தெரியாது. சீராக நடத்திக் கொடுத்ததற்கு அவனுக்கு நன்றி சொல்ல, அந்த மலையின் மைந்தன் ஊருக்கு வித்தியாசமாக, எமர்ஜென்சிக்கு நன்றி சொல்லச் சொன்னான் என்னை. முன்னொரு காலத்தில், லாட்டரி விழுந்த பரிசுச் சீட்டுக்குப் பணம் வாங்க நாலாயிரம் ரூபாய் செலவு பிடிக்குமாம்.

சௌந்தரம்மா பேங்க் ஊழியர் என்று கேள்விப்பட்டு எங்கள் பிராஞ்சில், கரோல்பாக்கில் இருக்கும் பெண் ஊழியர்கள் எல்லோரும் அந்தக் குடும்பத்தை அவ்வப்போது போய்ப் பார்த்து அடுத்த நான்கு நாட்கள் அன்போடு கவனித்துக்கொண்டார்கள். ஆண் ஊழியர்களும் அப்படியே.

“போத்தி தம்பி, நான் டில்லிக்கு வந்தபோது உன்னை மட்டும்தான் தெரியும், இப்போ எனக்கு இருபது தம்பி, தங்கச்சி, பேத்தியா இருக்குதுங்க. தெரிஞ்சிருந்த ஓலைக்கொட்டான் கருப்பட்டி இன்னும் கொஞ்சம் வாங்கியாந்திருப்பேன். நம்ம புள்ளைங்க ஆசை ஆசையா திங்கும். ”

சௌந்தரம்மா உணர்ச்சிவசப்பட்டாள். பணிக்கர் ட்ராவல்ஸில் தம்பி தங்கச்சிகள் ஏற்பாடு செய்து கொடுக்க, சௌந்தரம்மா குடும்பம் நானே இன்னும் பார்க்காத ஹரித்வார், ரிஷிகேஷ், மதுரா, ஆக்ரா என்று அட்டகாசமாக டூர் அடித்து வந்து ஊர் திரும்பியது.

தங்கச்சி மாப்பிள்ளை மட்டும் அடுத்து நான்கு மாதங்கள் தனியாக எங்கும் போகப் பயந்து போய் இருந்ததாக போஸ்ட் கார்டில் தவில் கருப்புசாமி பிள்ளை தாக்கல் தெரிவித்தார்.

கொல்லங்குடி காளிக்கு பிரார்த்தனை செய்து அவருக்கு சொஸ்தமானதாகவும் அதற்காக ஆடு வெட்டியதாகவும் எழுதியிருந்தார் அவர். எழுபதாயிரம் ரூபாயை என்ன செய்தார்கள்?

அத்தியாயம் 19

# ஜனவரி 1977

ம ற்ற எந்த நாளையும் விட அந்தச் செவ்வாய்க்கிழமைக் காலை வெப்பமாக இருந்தது.

இவ்வளவுக்கும், இதமாக இருபது டிகிரி செல்ஷியஸில் பாதரசம் நிலைத்து நின்ற அழகான தினம் அது. டிசம்பரில் தில்லியை அன்போடு சுற்றிப் படர்ந்து பின்னிய குளிர் இன்னும் தன் அணைப்பை விடாமல் மயக்கிக் கொண்டிருக்கும் காலைப் பொழுது.

ஜனவரி மாதப் பனிக்காலை நேரத்துக்குப் பொருத்தமில்லாமல், சசி குப்தா அழுது கொண்டிருந்தாள்.

லட்சணமான பெண். அமைதியான அழகு. பாயல்போல ஆளை அடிக்கும் வனப்பு இல்லை. மனசு ஈடுபட்டு அது தப்பு என்று தெரிந்தாலும் மறுபடி மனதை வீழ்த்திக் கொள்ளை கொள்ளும் மாயம் இல்லாத வனப்பு அது. முக்கியமாக சசியின் புன்சிரிப்பு. சிரிக்கும்போது சசியின் அழகு விஸ்வரூபம் எடுக்க, அந்த நிமிடத்தில் மற்ற சுந்தரிகள் காணாமல் போவர், பாயல் உட்பட.

டால்ஸ்டாய் மார்க் கிளையிலிருந்து எங்கள் லாஜ்பத் நகர் கிளைக்கு ட்ரான்ஸ்ஃபரில் வந்திருந்த தேவதை சசி. இருப்பிடம் இங்கேதான் லாஜ்பத் நகர் இரண்டாம் பகுதியிலோ மூன்றாவதிலோ இருக்கிறதாம். சாவகாசமாக சரியான விலாசம் விசாரிக்க வேண்டும். அதற்கு முன் புன்னகை தேவதையின் கண்ணீர்.

சிரித்துச் சிரித்து மனசில் நிறையும் சசி குப்தா அழ யார் காரணம் என்று கேட்டால் ரொம்பவே தயக்கத்தோடு நம்ம லட்சுமண் கௌடா என்றுதான் சொல்லவேண்டி வரும்.

அந்நியச் செலாவணி ஆபீஸரான லட்சுமண் அவனுடைய பிரிவில் கிளார்க்காக வந்திருக்கும் சசியை சென்ட்ரல் ஆபீஸ் போகவேண்டியஒரு கடிதத்தை, அவசரத்துக்கு டைப் அடிக்கச் சொல்லியிருக்கிறான்.

டால்ஸ்டாய் மார்க் கிளையில் டைப்பிஸ்டாக நியமனம் ஆகி, ஒருநாளைக்கு குறைந்தது முப்பது கடிதமாவது டைப் அடித்து அடித்து கை வலித்து தோள் வலி கண்டு மிகவும் பிரயத்தனப்பட்டு கிளார்க்காக உத்தியோக மாற்றம் வாங்கி இங்கே வந்திருக்கிறவளை டைப் அடிக்கச் சொன்னால்?

முடியாது என்று மறுத்தவள் காபி குடிக்க கேண்டீன் போனபோது தன் அனுமதி பெற்றுப் போகவில்லை என்று லட்சுமண் சத்தம் போட்டிருக்கிறான்.

எம்ப்ளாயீஸ் யூனியன் ப்ராஞ்ச் செக்ரட்டரி விஷ்ணுப்ரசாத் அகர்வால் விஷயம் தெரிந்து லட்சுமணிடம் சண்டைக்குப் போயிருக்கிறான். லட்சுமண் காலையில் காரமாக பசியாறி வந்திருப்பானோ என்னமோ, அவனிடமும் சீறி விழ, சிலிர்த்துக்கொண்டு கிளம்பிவிட்டான் விஷ்ணுபிரசாத்.

“லட்சுமண், நீ பிராஞ்சுக்கு சர்வாதிகாரி இல்லை. உன் டிபார்ட்மெண்டில் யாரும் இனி உன்னைக் கேட்க மாட்டாங்க. அவங்களா இஷ்டப்பட்டா அவங்க வேலை செய்வாங்க.”

எமர்ஜென்சி முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறதா என்ன? ஒரு வாரமாகவே குடும்பக் கட்டுப்பாடு பிரசார வேன்களும், பீஸ் ஸூத்ரிய் கார்யக்ரம் - இருபது அம்சத் திட்டம் என்று சதா ஒலிக்கும் ஆகாசவாணி பிரசாரப் பாட்டுகளும் குறைவாகி உள்ளன. கிஷோர் குமார் சினிமாப் பாடல் ஒரு வருடத்துக்கு அப்புறம் ஆகாசவாணி விவிதபாரதியில் நேற்று

ஒலிபரப்பானது. இங்கே, பேங்கில், எமர்ஜென்சிக்குப் பொருத்தமில்லாத யூனியன் போராட்ட முஸ்தீபுகள்.

“எமர்ஜென்சி இருக்கு. நீ இஷ்டத்துக்கு ஆட முடியாது.”

லட்சுமண் மிடுக்காகச் சொன்னான்.

“அதை வச்சு இனிமேலும் பயமுறுத்த முடியாது. கமான் காம்ரேட்ஸ்.”

தொழிற்சங்க காரியதரிசி விஷ்ணுபிரசாத் அவனை விட மிடுக்காகப் பதில் கொடுத்தான்.

விஷ்ணுபிரசாத் கை காட்டி கவுண்டருக்கு அப்புறம் இருந்து கூப்பிட்டான்.

“வாங்க, எல்லாரும் வெளியே போய் சாயா குடிச்சுட்டு வரலாம். கிளம்புங்க.”

அடுத்த நிமிஷம் முப்பத்தைந்து கிளார்க்குகளும் சாயா குடிக்க தெருக்கோடி கல்லுராம் கடைக்கு ஒருசேர எழுந்து போய்விட்டார்கள்.

கடைநிலை ஊழியர்கள் நான்கு பேரும் இதில் அடக்கம் என்றாலும் குறிப்பிட்டுச் சொல்லாத காரணம் அவர்கள் ஏற்கெனவே பெரும்பாலான நேரம் கல்லுராம் கடையில்தான் இருப்பார்கள் என்பதே.

கவுண்டரில் வந்து நின்று ஒரு காக்கிச் சட்டைக்காரர் கூப்பிட்டார் -

“மதுரா போக டாக்ஸி சொல்லியிருந்தீங்களே... இந்த ஆபீஸ்தானா? லீவா என்ன இன்னிக்கு?”

ஆளில்லாத கவுண்ட்டரைப் பார்த்து அரற்ற அவருடைய சந்தேகத்தைப் போக்க நான் இதோ வந்துட்டேன் என்று கைகாட்டி மேனேஜர் கேபினுக்குப் போனேன். சீஃப் மேனேஜர் அகர்வால் சாப் லட்சுமணிடம் அவன் தரப்பு நியாயத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

“கவனமா இன்ஸ்பெக்ஷன் பண்ணிட்டு வரணும், ரொம்ப கஷ்டப்பட்டு உனக்கு இன்னிக்கு கவுண்டர் ஆபீஸர் ட்யூட்டி போடாம மேனேஜ் பண்ணிட்டிருக்கோம். இது சம்பள விடுமுறை இல்லே. வேலை நாள்தான்.”

கைப்பையைப் பத்திரமாகப் பிடித்தபடி, எஸ் சார் என்றேன். பகல் நேரங்களில் அவர் சீஃப் மேனேஜர். சாயந்திரம் என் அபார்ட்மெண்டில் மிதமாகத் தண்ணியும் அரட்டையும் அடித்து அவசரமாக வீடு போகும் மிடில் க்ளாஸ் மிடில் ஏஜ் நண்பர்.

“கையிலே என்ன?” அவர் விசாரித்தார். “சோல்சர்ஜ் சேவா ஸ்டாக் ஃபைல்தான்” என்றேன்.

கூடவே ஒரு மஞ்சள்துணி செம்பும் உண்டு. பாட்டி உண்டியலில் போட்டு சேகரித்த கிட்டதட்ட ஐநூறு ரூபாய். மதுரா போனால் கிருஷ்ண ஜென்மபூமிக் கோயிலிலும் அயோத்யா போனால் ராம ஜென்ம பூமி ஆலயத்திலும் கொண்டு செலுத்த வேண்டியது. நான் கிருஷ்ணன் கோயில் ஊருக்குப் போகிறேன்.

நானும் ஆனந்தசாரதியும் சீஃப் மேனேஜரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டோம்.

ஆனந்தசாரதி நேரு ப்ளேஸ் பிராஞ்சில் இருந்து வருகிறவன். என் முந்தைய பேட்ச் மேட். அவனும் நானும் சேர்ந்து பேங்கில் தொழில் சம்பந்தமான கடன் வாங்கியவர்களின் வேலை இடங்களுக்குப் போகிறோம். கச்சாப் பொருளும், விற்பனைக்குத் தயாரான பொருளும், உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கும் பொருளும் இவ்வளவு உண்டு என்று வாடிக்கையாளர்கள் காட்டிய ஸ்டாக் கணக்கு சரியாக இருக்கிறதா என்று கண்டு வரும் வேலை இது.

ஸ்டாக் இன்ஸ்பெக்ஷன். வேலை ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் முடிந்துவிடக்கூடும். மதுரா போக மூன்று மணி நேரம், வர மூன்று மணி நேரம். மதுராவில் வேலை முடித்து கிருஷ்ண ஜென்ம பூமி போய் வழிபட்டு திரும்ப இன்னொரு மணி நேரம். திரும்பி வரும்போது கண்ணபிரான் புராணத் தொடர்புடைய விருந்தாவன் என்ற பிருந்தாவனத்தில் கோயில்களை அவசரமாக தரிசிப்பதற்கு ஒரு மணி நேரம்... ஆக, காலை பத்து மணிக்குக் கிளம்பினால், ராத்திரி எட்டுக்கு தில்லி திரும்பலாம்.

மதுராவில் தொழில் கூடம் வைத்துள்ளதாக, எங்கள் கிளையில் உள்ள ஒரு கணக்குக்கும் நேரு ப்ளேஸ் கிளையில் உள்ள இன்னொரு கணக்குக்கும் நாங்கள் இருவரும் ஸ்டாக் சோதனை செய்யப் போகிறோம். எங்களுக்கான டாக்சி செலவை இரண்டு கிளைகளும் பகிர்ந்து கொள்ளும். எமர்ஜென்சி நேரச் சிக்கனம் இது.

“மெட்ராஸோட போயிடலாம்னு இருக்கேண்டா” என்றான் சாரதி டாக்சியில் ஏறும்போது.

“எப்படி முடியும்? நாம் இங்கே வந்ததே நவம்பர்லேதானே? இன்னும் நிறைய நாள் இருக்கே அடுத்த போஸ்டிங்குக்கு...” நான் கேட்டேன்.

“இங்கே ஒட்டிக்கிட்டிருந்தாத்தானே அடுத்த போஸ்டிங்குக்கு காத்திருக்கணும்? பிடுங்கிட்டுப் போனா?” சரிதான். பேப்பர் போடப் போகிறான். ராஜினாமா கடுதாசு.

“வேலையை விட்டுட்டு என்ன பண்ணுவே?”

“சிட்டி பேங்க், சார்ட்டர்ட் பேங்க், ஹாங்காங் ஷாங்காய் பேங்க் நாலு இருக்கே, அதுலே ரெண்டு பேங்க் இண்டர்வ்யூ முடிச்சாச்சு. ஹாங்காங் பேங்க் அடுத்த வாரம். சிட்டி பேங்க் வந்துட்டிருக்கு. நாலுமே வேலையிலே சேரச் சொன்னா ஆச்சரியமில்லே.”

நான் அவனை ஆச்சரியத்தோடும் புது மரியாதையோடும் பார்த்தேன். என் அறிவுக்கும் அனுபவத்துக்கும் அந்த வெளிநாட்டு பேங்குகளில் தோட்டவேலைக்குக் கூட மனுப்போட தகுதி இருக்குமோ என்னமோ.

உள்மனம் ரெண்டாக உடைந்து ஒரு பகுதி அங்கலாய்த்தது. அதன் பார்ட் டு நக்கலாகச் சிரித்தது.

சாரதி கான்வெண்ட் இங்கிலீஷ் பேசுகிறவன். அதுதான் அவனுடைய துருப்புச் சீட்டு. மற்றபடி பேங்க் தொழில் நடைமுறை அறிவெல்லாம் என்னைப்போலதான்.

ஆக நானும் இங்கிலீஷ் தோரணையாகப் பேசக் கற்றுக்கொண்டால் அதெல்லாம் யோசிக்கலாம். இலக்கணப் பிழையில்லாமல் இங்கிலீஷ்

எழுதத் தெரிந்து என்ன பிரயோஜனம்? எங்கேயாவது சந்தித்தால், நான் யாரென்று நினைவு வைத்துக்கொண்டு, ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் முதுகில் தட்டிப் பாராட்டுவார். அந்த சந்தோஷத்தில் ஒரு நிமிடம் அமிழ வேண்டுமானால், படித்த இங்கிலீஷ் பயன்படலாம். பேச்சு பெப்பெப்பே என்று இருந்தால் கால்காசு அதனால் பிரயோஜனமில்லை.

மற்றபடி சாரதி கரோல்பாக் அஜ்மல்கான் வீதியில் அலைவதற்குப் பெயர் போனவன். சாயந்திரம் மயங்கி ராத்திரி ஆக நாள் தேயும் நேரத்தில் கூட்டமாக கரோல்பாக் போகும்போது, ரோஷன் டி குல்பி கடைக்குக் கட்டாயம் போய் குல்பி சாப்பிட வேண்டும் என்று உயிரை வாங்குவான். என்னிடமிருந்தும் லஷ்மண் கௌடாவிடமிருந்தும் வலுக்கட்டாயமாக ஸ்கூட்டர் ஹெல்மெட்டுகளை வாங்கி இடுப்பின் வலமும் இடமும் வைத்து, அவற்றைப் பக்கவாட்டில் கைகளை விரித்து பற்றிப் பிடித்து வருவான்.

ஆண்களும் பெண்களும், முக்கியமாக ஆரோக்கியமான பஞ்சாபிப் பெண்கள், குல்பியும் பானிபூரியும் சாப்பிட தெருவோடு கூட்டமாகப் போகிற நேரமும் அதுதான்.

“ஜாக்கிரதை, யார் மேலேயாவது இசகுபிசகா எங்கேயாவது இடிக்கப் போறது.”

நான் கவலைப்பட்டு ஹெல்மெட்டை வாங்க முனைந்தால், தரமாட்டேன் என்று இறுக்கிக்கொண்டு சாரதி சொல்வான்:

“இடிக்கத்தான்.”

காமராஜ் தெரு, ராஜாஜி தெரு, கௌடில்யர் வீதி என்று நான் இன்னும் புகுந்து புறப்படாத வீதி எல்லாம் கடந்து கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

அம்பாசடர் காருக்கே உரிய பரந்து விரிந்த இருக்கைகளும் நடுவே விரிவான இடைவெளியுமாக, நேர்த்தியாக இல்லாவிட்டாலும் வசதியான கார். பின்னால் மூன்று பேரும் முன்னால் ட்ரைவர் தவிர இரண்டு பேரும் எந்த சங்கடமும் இட நெரிசலும் இல்லாமல் பயணம் போகலாம்.

வெயில் காலம் என்றால் ஆகச் சிறந்த ஏர்கண்டிஷன் அம்பாசடர் காரில் இருப்பதுதான்.

கார்க் கண்ணாடியைக் கடந்து குளிர் எலும்பில் ஊடுருவிக் கொண்டிருந்தது. நான் என் கேன்வாஸ் ஷூக்களை இன்னும் இறுகக் கட்டியபோது ஆனந்தசாரதியின் காலைப் பார்த்தேன். புத்தம்புதிய ஸ்போர்ட்ஸ் ஷூக்கள்.

எவ்வளவு ஆச்சு என்று விசாரித்தேன். இதுக்கெல்லாம் கூடப் பணம் செலவழிப்பாங்களா என்ன என்றான். தீபாவளி பரிசாம். நான் தீபாவளி முடிந்துதான் வந்தேன் என்பதால் இங்கத்திய வழக்கம் அனுபவத்தில் தெரியாது. ஆனாலும், கேள்விப்பட்டிருக்கிறேன்.

தீபாவளிக்கு இரண்டு நாட்கள் முந்தி கரண்ட் அக்கவுண்ட் வாடிக்கையாளர்கள் மும்முரமாகி விடுவார்களாம். அவர்கள் என்றல்ல மொத்த தில்லியுமே பிஸியாகிவிடும். ஆப்பிள், ஆரஞ்ச் என்று பழக்கடையில் விலைபோகாமல் அடுக்கி இருந்த சரக்கெல்லாம் அரைவிலை, கால்விலையில் கிலோ கணக்காக வாங்கப்பட்டு, பாலீஷ் போட்டு கண்ணாடிபோல மினுமினுக்க வைக்கப்படும்.

அடுத்து சோனியான முந்திரிப்பருப்புகள் குவியல் குவியலாக சற்றே வறுபட்டு வைக்கப்படும். கொஞ்சம் பழசானாலும் பழைய மதுபோல 1940களில் வாங்கி பாக்கி இருந்த உலர் திராட்சை வெந்நீரில் கழுவி உலர்த்தப்பட்டு அதுவும் எடுத்து வைத்துக் கொள்ளப்படும்.

பிளாஸ்டிக் கும்பாக்கள் பத்து ரூபாய்க்கு ஆறு என்று லாஜ்பத் நகர் சென்ட்ரல் மார்க்கெட்டில் சீப்படும். அதெல்லாம் முக்கிய தேவை இப்போது. கூடவே புகையிலைக் காகிதம் மாதிரி பச்சை, சிவப்பு, மஞ்சள் என்று செலஃபோன் காகிதம்.

முந்திரியும் திராட்சையும், ஆப்பிளும் ஆரஞ்சும் சமயத்தில் கொய்யாவும் காகிதம் சுற்றி கும்பாவில் இட்டு, அதையும் சுற்றிக் கலர்க் காகிதம் பொதிந்து வைத்தால் ஒரு தீபாவளிப் பரிசு தயார்.

இதை பாதி தில்லி மீதி தில்லிக்கு தீபாவளிக்கு முந்தைய நாள் 'தீவாலி சுப்காம்னா' என்று வாழ்த்து சொல்லி வீடு தேடிச் சென்று அளித்து வரும்.

தீபாவளியன்று காலையில் மீதி தில்லி முதல் பாதி தில்லிக்கு மறுபரிசு கொடுத்து வாழ்த்து சொல்லித் திரும்பும்.

பேங்க் ஆபீஸர்கள் வீடுகளில் தொழில்முறை கரண்ட் அக்கவுண்ட் வாடிக்கையாளர்களான வர்த்தகர்களும், சிறு தொழிலதிபர்களும் சென்ட்ரல் மார்க்கெட்டில் கடை வைத்திருக்கும் வியாபாரிகளும் அளித்து வாழ்த்திப் போவதால் வீடு முழுக்க பழ வாசனையாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

முக்கியமான பதவியில் இருப்பவர்கள் இப்படிப் பழம் பெரும் பெருமக்களாவதோடு, ப்ரஸ்டிஜ் குக்கர், பால் குக்கர், ஒரு லிட்டர் வால் பாத்திரம் என்று உருவாக்கப்பட்ட ஸ்டெயின்லெஸ் பாத்திரங்களிலும் புளிப்பு திராட்சை அடைத்து வாங்கிக் கொள்வார்கள். அதிலும் மேன்மையானவர்கள் கரன்சி நோட்டு வாங்குவார்கள் என்றும் ஐதீகம்.

எந்த கஸ்டமர் தெய்வமோ இவனுக்கு ஸ்போர்ட்ஸ் ஷூ பரிசு அளித்துவிட்டுப் போயிருக்கிறது.

வண்டி பார்லிமெண்ட் தெருவில் புகுந்தது. எனக்குப் பழக்கமான வீதிகளில் இதுவும் ஒன்று என்பதால் சுவாரசியமாகப் பார்த்தபடி வந்தேன்.

சர்தார் படேல் பவன் வாசலில் சுட்ட மக்காச்சோளமும், வறுத்த நிலக்கடலையுமாகக் கொறித்தபடி ஒரு பெரிய ஆபீஸ் கூட்டம் நின்றது.

எமர்ஜென்சி நேரத்தில் இப்படிப் பழைய காலம்போல் வெய்யில் காயும் கூட்டம் போடக் காரணம்? குளிர் விட்டுப் போய்க் கொண்டிருக்கும் சூசனைகள்.

வண்டி தேசிய நெடுஞ்சாலைக்குத் திரும்பியது. இனி கிலோமீட்டர் கணக்காக தரிசும் பசுமையும் மாறிமாறி வரும். சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன். கீழே விழுந்த ஃபைலை மடியில் வைத்துக்கொண்டேன்.

“சோல்ஜர்ஸ் சேவா” என் கையில் வைத்திருந்த ஃபைலில் எழுதிய பெயரைப் படித்தான் சாரதி.

“சௌண்ட் பார்ட்டியா?” அவன் கேள்வி புரியவில்லை என்றேன்.

சோல்ஜர்ஸ் சேவா கணக்கு வைத்திருக்கிறவர் மேஜர் வினோத் மாதுர். ரிடையர்ட் மிலிடரி ஆபீஸர். யுத்தத்தில் காதருகே ஷெல் வெடித்து, இடது காது கேட்காது என்பதால் அரை சௌண்ட் பார்ட்டி மட்டும்தான் அவர். சொன்னேன்.

“அது இல்லே, நல்ல துட்டு கம்பெனியா?” விடாமல் குடைந்தான் சாரதி.

ரிடையர்ட் மேஜர் அவரைப்போல் ரிடையர்ட் ஆன சிப்பாய்களைக் கூட்டி வைத்து ட்ரெய்னிங் கொடுத்து, டவல், பிரஷ், பினாயில், உடுப்புக்கு பொத்தான், சீப்பு, சலவை சோப்பு என்று பலதும் பண்ண வைக்கிறார்.

அதையெல்லாம் பாதுகாப்பு அமைச்சக காண்ட்ராக்டில் ஆர்மி தாவளம் அடித்து தங்கியிருக்கும் இடங்களில் டெலிவரி செய்கிற பிசினஸ்.

குடிசைத் தொழில்போல் நடத்துவதால், ஒவ்வொரு மாதமும் செய்து டெலிவரி தருகிற பொருட்களின் மதிப்பு, மிஞ்சினால் இருபதாயிரம் ரூபாய் இருக்கலாம். இதில் தொழிலாளர்களுக்குக் கொடுத்த கூலி போக மேஜருக்கு ஒரு மாதம் ஐயாயிரம் கூட லாபம் வராது.

“சாவுகிராக்கி பார்ட்டியா இருக்கும்போல” என்றான் சாரதி.

சாவை நேரில் கண்டு விழித்துப் பார்த்து தோற்று ஓடச் செய்த பார்ட்டி என்று சொல்ல நினைத்தேன். 1972 ஆம் வருடம், பங்களாதேஷ் யுத்தத்தில் பாகிஸ்தான் ராணுவத் தலைவர் நியாஸி இந்தியப் பாதுகாப்புப் படையிடம் சரணடைந்தபோது எடுத்த உலகப் பிரசித்தியான புகைப்படத்தில் நியாஸி பின்னால் மேஜர் மாதுர் நிற்பார். யுத்தத்தை நடத்தி ஜெயித்து வந்த வீரர்களில் அவரும் முக்கியமானவர். ஆனால் அவரது நடப்புக் கணக்கு, உலக அரங்கில் பெரிய கம்பெனிகளோடு போட்டி போட முடியாமல் தோற்றுக் கொண்டிருக்கிறது.

சாரதி கண்ணை மூடிக்கொண்டான். நான் சோல்ஜர்ஸ் சேவா ஃபைலைப் பிரித்து கடந்த ஒரு வருடத்தில் எப்படி கச்சாப் பொருள் வாங்கி, விற்பனைக்கு பொருள் உருவாக்கி ஸ்டாக் வைத்து விற்றிருக்கிறார்கள் என்று பார்த்தேன்.

ஸ்டாக் பட்டியலில் ஒரு வரியைப் படிக்க ஆச்சரியப்பட்டேன். இஞ்சி மொரபா. ஐந்து கிலோ பாக்கெட் நாலு.

இஞ்சி மொரபாவுக்கு சாமானியன், படைவீரர் என்று வேறுபாடு இல்லை. மேஜரும் குழுவும் கைத்தொழிலாக ராணுவ வீரர்களுக்கு இஞ்சி மிட்டாய் செய்கிறார்கள். கிடக்கட்டும். என்னையும் உறக்கம் தழுவிக்கொண்டது.

“ட்ரைவர், விருந்தாவன் வர்றதுக்கு இன்னும் எவ்வளவு தூரம்?” சாரதி குரல் தேசலாக ஒலித்துப் போனது.

“சாப், இன்னும் ஒரு மணி நேரத்துலே அங்கே போயிடலாம்.”

“எவ்வளவு தூரம் போகணும்?”

“கிட்டதட்ட ஐம்பது கிலோமீட்டர்.”

“எவ்வளவு போயிருக்கோம்?”

“பாதி கடந்தாச்சு.”

“சரி, சத்திக்ரா வரும்போது சொல்லு.” அப்புறம் கார் ஓடும் சத்தம் மட்டும்தான் சீராகக் கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று எனக்கு விழிப்பு வந்தது. ஆபீஸ் வேலையாகப் போகிறான் போத்தி. உறங்க இல்லை.

“மதுரா வந்தாச்சா?”

நான் ஃபைலை கையில் வைத்திருந்த ப்ரீஃப் கேஸில் வைத்தபடி கேட்டேன்.

“சத்திக்ரா சாப்”, டாக்சி ட்ரைவர் சொன்னார்.

“மதுராவா? அதுக்குள்ளே என்ன அவசரம்?” சாரதி கேட்டான்.

“என்ன அவசரமா? நாம் வந்திருக்கறது ஸ்டாக் இன்ஸ்பெக்ஷன் செய்ய” என்றேன் குரல் என்னை அறியாமல் உயர.

“அதத்தான் செய்யப் போறோம். உனக்கு என்ன சந்தேகம்? முதல்லே விருந்தாவன். அங்கே கோயில் எல்லாம் தரிசிச்சு அப்புறம் மதுரா…” சகஜமான குரலில் சொன்னான் சாரதி.

“என்னது? விருந்தாவன் போறோமா இப்போ? வேலையை முடிச்சு திரும்பறபோது விருந்தாவன் பார்க்கலாம். எங்க ப்ராஞ்சிலே சொல்லி அனுப்பின ஸ்கெட்யூல் அதுதான்” என்றேன்.

“அதெல்லாம் முடியாது. இங்கே முடிச்சுட்டுதான் மதுரா.” சாரதி அடம்பிடித்தான்.

இந்தத் தகராறு எங்கே முடியும் என்று புரியாமல் ட்ரைவர் வண்டியை ஓரம் கட்டி நிறுத்தினார்.

“இன்னும் அஞ்சு கிலோமீட்டர்லே விருந்தாவன். அதைப் பார்க்காமல் போகலாம்னு சொல்றியா?” சாரதி கேட்டான்.

“இந்த ரூட்டுலே என் கிட்டே முன்னாடி சொல்லாம நீ வண்டியை போகச் சொன்னதே தப்பு” என்றேன் அவனிடம்.

“நீ கேட்கலியே…”

இது எங்கே முடியும் என்று தெரியவில்லை. திரும்பிப் போனால் மதுரா போய்ச் சேர, இன்னும் ஒரு மணி நேரம் ஆகலாம். அதற்கு இங்கே விருந்தாவனில் கோயில் எல்லாம் தரிசித்துவிட்டு ஒரு மணி நேரம் தாமதமாக சோல்ஜர்ஸ் சேவா உற்பத்தி நிலையத்துக்குப் போகலாம் என்று முடிவு செய்தேன்.

பகல் பன்னிரண்டு மணி பதினைந்து நிமிடம். கிட்டதட்ட பாதி நாள் வேலை செய்யாமல் அலைந்து கொண்டிருப்பது மனதில் வலித்தது. இது எமர்ஜென்சி உண்டாக்கிய உளைச்சல் இல்லை.

“சரிடா போத்தி, உம்முனு உக்காந்து வராதே. மூணு கோயில். கடகடன்னு பார்த்துட்டு மதுராதான். ட்ரைவர், நோ சேஞ்ச்.

விருந்தாவன்.” சாரதி நட்புக்கரம் நீட்டி என் கையைக் குலுக்கியபடி சொன்னான்.

“அம்பாசடர் கார்லே அதிக பட்சம் என்ன வேகம் போகலாம்?”

அவன் கேட்க, “மணிக்கு அறுபது கிலோமீட்டர் சாப்” என்றார் ட்ரைவர். “கிருஷ்ணன் கிட்டே வேண்டிக்குங்க. ட்ராஃபிக் நெரிசல் இருக்கக் கூடாது. ஒண்ணரை மணிக்கு கிளம்பி ரெண்டு மணிக்கு மதுரா போயிடலாம்.”

நான் உற்சாகத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டேன். அவனும் நானும், அடுத்த ஒரு மணி நேரம் கிருஷ்ணனுக்கும் பலராமனுக்குமான கோயில், பிரேம் மந்திர் என்ற காதல் கண்ணனின் கோயில், ஸ்நேக பீஹாரி கோயில், பாகல் பாபா மந்திர் என்ற கிறுக்குச்சாமி கோயில் இப்படி ஓடி ஓடிப் பார்த்து அங்கங்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டு, பங்கே பிஹாரி கோயில் அருகே நெடுஞ்சாலையில் திரும்பினோம்.

“சரியாச் சொன்னா இந்தப் பக்கம் மொத்தம் எண்பத்துநாலு கிருஷ்ணன் கோயில் இருக்கு. அத்தனையும் தரிசிக்க ஆயிரம் கிலோமீட்டர் கிழக்கிலே, கல்கத்தாவிலே இருந்து கூட வந்துக்கிட்டே இருக்காங்க.” ட்ரைவர் சொன்னார்.

“விருந்தாவன் ஆஸ்ரமங்களிலே இருக்கற ஏழை விதவைகளையும், அநாதையா திரியற பசுக்களையும், குரங்குக் கூட்டத்தையும் பார்க்க வேணாமா?” அவர் அடுத்துக் கேட்டார்.

“நேரம் இல்லை, அதோடு கூட அந்த பாவப்பட்ட பெண்களை அடச்சு வச்சு மிருகக் காட்சி சாலை மாதிரி பார்க்கறது தப்பு இல்லியா?”

“அப்படீங்கறே... ஆனா, நீ போய்ப் பார்த்தா கட்டாயம் ஏதாவது உதவி செய்வே. போகலேன்னா அது இல்லாது போயிடுமில்லே” என்றான் ஆனந்த சாரதி. எனக்குத் தெரியவில்லை. சொன்னதுபோல் இரண்டு மணிக்கு மதுரா வந்துவிட்டது.

மதுரா மியூசியம் பக்கத்தில் நிறுத்தச் சொன்னான் சாரதி.

“அதோ, அங்கேதான் என் கஸ்டமர் ஒர்க் ப்ளேஸ். ஒரு நிமிஷம் இரு, வந்துடறேன். டைம் ஆகாது. காட் ப்ராமிஸ்.”

அவன் நாக்கைத் துருத்திக்கொண்டு ஓடி இரண்டு நிமிஷத்தில் திரும்பினான். அவனோடு கூட வந்த வழுக்கைத் தலையர் எனக்குப் பரிச்சயமானவர். தவுலத்ராம்ஜி. போனமாதம் வரை மேஜரின் சோல்ஜஸ் சேவாவில் கணக்கு வழக்குப் பார்க்கும் வேலை செய்துகொண்டிருந்தபோது ப்ராஞ்ச் வந்திருக்கிறார். மத்திய அரசு கஸ்டம்ஸில் சீனியர் கிளார்க் ஆக ரிடையர் ஆகி தவிர்க்க முடியாத காரணத்தால் இன்னும் வேறு வேலைக்குப் போகிறவர்.

“மேஜர் சாப் கொடுத்த சம்பளம் பத்தலே. அதான் இங்கே கணக்கு எழுதிட்டிருக்கேன்.”

அவர் சிரித்தார். நைந்து போன சிரிப்பு அது.

சாரதி கண்காட்ட தவுலத்ராம் உடனே சாவி கொடுத்த பொம்மை மாதிரி சொன்னார்:

“சார், உள்ளே வந்து ஒரு கிளாஸ் பியர் குடிச்சுப் போகலாமே. முதலாளி பேங்குலே இருந்து யாராவது வந்தா ஜில்லுனு பியர் கொடுத்து உபசரிக்கச் சொல்லியிருக்கார்.”

அவர் என் அச்சன்போல், வயதிலும் உருவத்திலும். போன மாதம் வரை பேங்க் ஸ்டேட்மெண்ட்டோடு சோல்ஜர்ஸ் சேவா கணக்குகளை சரிபார்க்க என்னோடு அமர்ந்தபோது அசாத்தியமான அக்கவுண்டன்ஸி அறிவைப் புலப்படுத்தியவர்.

தவுலத்ராம், இப்போது புது வேடத்தில் லாட்ஜ் எடுபிடி மாதிரி - சாப்ஜி என்ன வேணும்னாலும் சொல்லுங்க ஏற்பாடு செய்யறேன்... டீ, பியர், ரம், மற்றது...

“வேகமா ஒரு கல்ப். வாயேன்.” சாரதி கூப்பிட்டான்.

போத்தி மிடாக் குடியன். ஆனால் வேலை நேரத்தில் அது எதுவும் பக்கத்தில் அண்ட விடமாட்டான். மரியாதையோடு வேண்டாம் என்று

விலக்குவான்.

“நீ முடிச்சதும் எனக்கு இந்த நம்பருக்கு ஃபோன் பண்ணு. அஞ்சரை மணிக்கு வந்து பிக் அப் பண்ணிக்கறேன்” என்று சோல்ஜர்ஸ் சேவா நம்பர் கொடுத்துவிட்டுக் கிளம்பினேன்.

“எங்கே சாப் போகணும்?” ட்ரைவர் கேட்டார்.

“குர்ஜர் மார்க்கெட்” என்றேன்.

“அங்கே நாலாவது வரிசையிலே, தூத்பேடா யாதவ் ஸ்வீட்ஸ் பக்கம்...”

தவுலத்ராம் விலாசம் சொல்லி உதவினார். அவர் கௌரவமாக இருந்த இடம். அங்கேயே இருந்திருக்கலாம்.

பத்து நிமிடத்தில் சோல்ஜர்ஸ் சேவா. பழைய காலத்து வீடு. மிலிட்டரிக்காரர்களின் வீடுகளின் பொதுவான அம்சமான பசுமையான தோட்டம். வளர்ப்பு நாய் காம்பவுண்டுக்குள் தெரிந்தது. உள்ளே போனேன்.

மேஜர் சாப் பைப்பில் புகை விட்டபடி உட்கார்ந்திருந்தவர் எழுந்து வரவேற்றார்.

“நல்லவேளை இப்போவாவது வந்தே. வெளியிலே போகற தினசரி காரியம் இருக்கு.”

என்ன இருக்கப் போகிறது? இவர் போல தரைப்படை, விமானப்படை, நேவி என்று அதிகாரம் செலுத்தி இருந்து ரிடையர் ஆன சக மேஜர், மைனர்களோடு கூடிக் குலாவி நிம்மதியாக பியரும் ஜின்னும் குடிக்கிற பரிபாடிதான் நான் வந்த காரணத்தால் நின்று போயிருக்கும். பரவாயில்லை ஒரு நாள் குடிக்காவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது. போத்திக்குள் இருந்த குடிகாரன் காரணம் இல்லாமல் சிரித்து கப்சிப் என்று அமைதியானான்.

நான் அந்த இடத்தில் முதலில் தேடியது, பேங்க் அங்கே இருந்த சரக்குகள் எல்லாவற்றையும் அடமானமாக எடுத்திருக்கிறது என்று

அறிவிக்கும் ஹைபாதிகேஷன் பலகையை. முன்னறையில் அப்படி ஒன்று இல்லை.

“உள்ளே இருக்கலாம், இல்லேன்னா பரவாயில்லே. நான் ப்ராஞ்சிலே வந்து வாங்கிக்கறேன்.” மேஜர் சொன்னார்.

சொத்தையான ஆர்க்யுமெண்ட். வைக்க வேண்டும் என்று மனதில் பட்டிருந்தால் இந்நேரம் அது இருக்குமே. பேங்கும் சரி மேஜரும் அவருடைய தொழிலும் சரி, போத்தி வந்துதான் புதிதாகக் கிளம்பி வந்த சமாசாரம் இல்லையே.

ஒழுங்கீனங்கள் பட்டியலில் முதல் ஐட்டமாகச் சுட்டவேண்டியது இது. மனதில் குறித்துக்கொண்டு அந்த வேலையிடத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன்.

பழைய கட்டடம். உள்ளே நீளமாகப் போய்க் கொண்டிருந்தது. 1800களின் இறுதியில், மேஜரின் பாட்டனார் கட்டியதாம். அவரும் பட்டாளத்துக்காரர். வெள்ளைக்காரன் ஆர்மியில் படை வீரராக இருந்து சுபேதார் ஆக ரிடையர் ஆனாராம். நான்கு தலைமுறை சிப்பாய்க் குடும்பம்.

தாத்தா கட்டி வைத்தது ஸ்ட்ராங்கான கல் கட்டடம் என்பதால் பழுது பார்க்க அவ்வளவாக செலவழித்ததில்லை என்று அவர் சொல்ல ஆச்சரியம்தான்.

நூற்று இருபத்தைந்து வருடங்களாக நின்றிருக்கும் இந்தக் கட்டடத்தை மேஜரின் பாட்டனார் இங்கே கட்டிக் கொண்டிருந்தபோது கையில் அகப்பையும் கரண்டியும், தலையில் சும்மாடு வைத்துச் சுமந்த வெங்கலப் பானைகளுமாக என் முப்பாட்டனார் திருப்பணித்துறையிலிருந்து மதுரைக்கு சமையல் தொழிலே முதலீடாக வாழ்க்கை தொடங்க வந்திருப்பார். ஆனால் அவர் கட்டிய வீடு என்று காட்ட என்னிடம் ஏதுமில்லைதான்.

பிளைவுட் அடித்து அறை அறையாகத் தடுக்கப்பட்டிருந்த இடத்தில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கைந்து பேராக வேலை

செய்துகொண்டிருந்தார்கள்.

அவர்களில் சிலர் கையால் மரத்திலிருந்து குழித்து எடுத்து அகப்பைகளும், சிறு மரக் கரண்டிகளும் செய்கிறவர்கள். இன்னும், சிறு யந்திரத்தில் கடைந்து மர பொம்மையாக ராமனையும் கிருஷ்ணனையும் உருவாக்குகிறவர்கள். தறியில் கைத்தறித் துண்டு, பெட்ஷீட், கச்சா பனியன் நெய்து கொண்டிருக்கிறவர்கள், ஊறுகாயும் சர்பத்தும் கைபடாமல் தயாரிக்கிற முது பெண்கள் என்று அங்கே ஒரு பலதொழில் நிறுவனமே ஆர்ப்பாட்டமில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு அறை நிறைய தையல் இயந்திரங்களில் பெரும்பாலும் பெண்கள், உறங்கும்போது அணியும் லூசான அங்கி, கைத்தறிச் சட்டை, தலையில் அணிய உருமால் என்று தையல் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் பெண்களும், ஊறுகாய் தயாரிக்கும் முதுபெண்டிரும் வீர மரணம் அடைந்த சிப்பாய்களின் குடும்பத்திலிருந்து வருகிறவர்களாம். முக்கியமாக 1972 யுத்தத்தில் மரித்தவர்களின் விதவைகள். ஆர்மியில் ஃபேமிலி பென்ஷன் ஆகக் குறைவு என்று சொன்னார் மேஜர். தலையாட்டி வைத்தேன்.

பகல் இரண்டரை மணி. பசி உயிர்போனது. சாப்பிடலாம் வாங்க. மேஜர் கூப்பிட்டார்.

ஒவ்வொருவரும் கொண்டுவந்திருந்த சாப்பாட்டுப் பாத்திரத்தோடு மெயின்ஹாலுக்கு வந்தார்கள். மேஜரும் தன் பெரிய டிஃபன் கேரியரோடு வந்து நின்றார்.

இரண்டு பெரிய பாத்திரங்களில் சப்பாத்தியும் பூரியும், ஆலு பரத்தாவும் நிறைக்கப்பட்டன. நான்கைந்து சிறிய பாத்திரங்களில் பருப்புக் கூட்டு, கத்தரிக்காய்க் கறி, உருளைக் கறி, இப்படி வகை பிரித்து பதார்த்தங்கள் நிரம்பின.

“இங்கே எல்லாரும் கொண்டுவந்த சாப்பாட்டை மற்றவங்களோடு பகிர்ந்துதான் சாப்பிடறோம். எங்களுக்குள்ளே ஜாதியும் மதமும்

கிடையாது. ஒரே நிபந்தனை, கொண்டுவரும் சாப்பாடு சைவச் சாப்பாடாக இருக்கணும்.” மேஜர் சொன்னார்.

சப்பாத்திகளையும் கூட்டு, பருப்பையும் சூடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். சாப்பிடும் முன், கூட்டுப் பிரார்த்தனை இருக்கும் என்று எதிர்பார்த்தேன். நடக்கவில்லை.

ஒரு தட்டில் எனக்கும் விளம்பினார்கள். திருப்தியான, வீட்டுச் சாப்பாடு. ஒவ்வொரு ரொட்டியும், ஒவ்வொரு கரண்டி பதார்த்தமும் ஏதோ ஒரு வீட்டில் அன்போடு யாரோ குளிர்காலத்தைப் பொருட்படுத்தாது விடிகாலையில் எழுந்து சிரத்தையோடு சமைத்து யாருக்கோ கட்டிக் கொடுத்து அனுப்பியது.

“மிஞ்சற சாப்பாட்டை எல்லாம் பக்கத்திலே ஏழைப் பிள்ளைங்களுக்கான ஸ்கூல் இருக்கு. அங்கே கொடுத்துடுவோம். குழந்தைகள் பட்டினி கிடக்கவேண்டாம்னுதான் இங்கே சீக்கிரமே சாப்பிட்டுடுவோம். நீங்க வந்ததாலே இன்னிக்கு அது தாமதமாயிடுத்து. நோ ப்ராப்ளம்.”

நான் சாரதியையும் என்னையும் மனதில் திட்டிக் கொண்டிருந்தேன். ஒரு மணி நேரம்தானே லேட் என்றான் சாரதி. அது எந்தமாதிரி எங்கே பாதிக்கிறது.

மதிய உணவு முடித்து, ஸ்டாக் சரிபார்க்கக் கிளம்பினேன். இரண்டு அறை நிறைய ஆர்மிக்கு விற்பனைப் பொருளாக அனுப்பத் தயாராக உற்பத்தி செய்த பொருட்கள். மர ஸ்பூன்களில் ஆரம்பித்து மர நாற்காலி வரை கிட்டதட்ட நூறு ஐட்டங்கள். புது ஸ்டாக் ஸ்டேட்மெண்டை நீட்டினார் மேஜர்.

“சாரி, இது போன வாரமே கொடுத்திருக்கணும். ஆள் இல்லே. தவுலத்ராம் ஜி கிடையாது. வேற இடத்துலே வேலைக்கு போயிட்டார்.”

“பார்த்தேன் மேஜர். மதுராவிலே நுழைஞ்சதும் அவரைத்தான் முதல்லே பார்த்தேன்.”

“பாவம், கவர்மெண்ட் சீனியர் அசிஸ்டெண்டா ரிடையர் ஆகியும் பொண்ணு கல்யாணம், பிள்ளைக்கு படிக்க, ஊர் சுத்த செலவுன்னு

பி.எஃப், கிராஜுவட்டி எல்லாம் செலவாகி மிச்ச பென்ஷன் போதாம வயசான காலத்திலே வேலைக்குப் போறார். ஒரு ஐநூறு ரூபா அதிகமா கொடுத்தான்னு சுபாஷ் கிட்டே வேலைக்கு போயிட்டார். என்ன பண்ண? நான் கொடுக்க முடியலே. அவன் கீழ்த்தரமான சேடிஸ்ட். இவர் கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டரா இருந்தபோது அவனை விரட்டு விரட்டுன்னு விரட்டி வரி வாங்கினதுக்கு இப்போ மாசம் ஆயிரத்தைநூறு சம்பளம் கொடுத்துட்டு நாய் மாதிரி நடத்தறான் ப்ளாக்கார்ட்... அவர் இருந்த பதவிக்கு, வேணாம், அவர் வயசுக்கு மதிப்பு தர வேண்டாமா. பன்றிப்பயல்...”

அவர் திட்ட பொறுமையாக ஸ்டாக் ஸ்டேட்மெண்டைப் படித்துக் கொண்டிருந்தேன்.

மரப்பாச்சி பொம்மைகள் ஐநூற்றிருபத்தைந்து. மேஜரின் உதவியாளர் பெண்மணி எண்ணிக்கை சொன்னது, ஐநூற்றிருபத்தொன்று. நாலு காணோம். நூறு ரூபாய் இருக்கும் அடக்க விலை. மர பொம்மைகள் வெளியில் விற்கவாம்.

“வேறெதிலாவது அடுக்கியிருக்கும், தேடினால் கிடைக்கும்” என்றார் மேஜர்.

ஆர்மி மேஜராக பெரிய படைப்பிரிவைத் தலைமை வகித்துப் போய் மிகப்பெரும் போரில் வெற்றிவாகை சூடியவர், ஒரு கத்துக்குட்டி பேங்க் ஆபீஸர் முன் பொறுமையாக உட்கார்ந்து நூறு ரூபாய் மதிப்புள்ள மரப்பாச்சி காணாமல் போனதற்கெல்லாம் விளக்கம் சொல்வது அபத்தமான சூழ்நிலையாக இருந்தது.

நான் அவராக இருந்தால், ‘போங்கடா பேங்கும் ஆச்சு மயிரும் ஆச்சு, ஒரு லோன் எழவும் வேணாம்’ என்று சீயென்று வரத் தூக்கிப் போட்டுப் போயிருப்பேன். மேஜர் அமர்த்தலாக பைப் புகைத்தபடி வெளியே போனார்.

கைக்கடியாரத்தில் நேரம் பார்த்தேன். பிற்பகல் நான்கு மணி. இன்னும் பத்து ஐட்டம்தான். முடித்துவிட்டால் நேரே கண்ணன் பிறந்த இடத்துக்

கோயிலில் ஒரு நிமிடம் நுழைந்து தரிசனம் செய்துகொண்டு ஓடி வரலாம்.

அப்புறம் சாரதியைக் கூட்டிக்கொண்டு தில்லி சலோதான்.

கோயிலே ஒரு சிறை மாதிரி அமைச்சிருப்பாங்க என்று அச்சன் சொல்லியிருக்கிறார். அவர் என் வயதில் இந்தியா முழுக்க ஆன்மிகச் சுற்றுப்பயணம் போய்த் திரும்பியவர்.

"ஸ்டேட்மெண்ட்லே அடுத்த ஐட்டம் என்ன?"

மேஜரின் உதவியாளரைக் கேட்டேன். ஸ்டேட்மெண்டை எடுத்துப் பார்த்தார். என்னிடம் தரவில்லை அதை. "அது, அது வந்து..." அவர் தடுமாறினார். நான் அவர் கையில் இருந்து ஸ்டாக் ஸ்டேட்மெண்டை வாங்கப் பார்த்தேன்.

கொஞ்சம் இருங்க என்று அவர் அதைத் தராமல் அறைக்கு வெளியே பார்க்கிறார். நானும் வற்புறுத்திக் கேட்டேன். ஊஹும், தருவேனா என்று ஒரு பிடிவாதம்.

"சார், ப்ளீஸ், அந்த ஸ்டேட்மெண்ட் வேணும்."

நான் கண்டிப்பாகச் சொன்னேன். மேஜர் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

"அடுத்த ஐட்டம் ஸ்போர்ட்ஸ் ஷூக்கள். மொத்தம் எண்பது ஜதை. அதில், ஐம்பது ஜதை புதியது. பழைய ஷூக்களை அறுத்து, செப்பனிட்டு, சீர் செய்து தைத்து, புதியதாக இன்னொரு முப்பது ஜதை. எல்லா ஷூவும் 4, 5, 6 சைஸில் ஏதோ ஒன்றுதான். முன்னது ஜதைக்கு நூறு ரூபாய். பின்னது ஜதைக்கு முப்பது ரூபாய். மொத்த அடக்கவிலை ஐயாயிரத்து தொள்ளாயிரம் ரூபாய். சரிதான். அந்த ஷூ எல்லாம் எங்கே?"

"இது ஆர்மி காண்ட்ராக்ட்லே வராது சார்" என்றார் உதவியாளர். "இருக்கட்டும், ஸ்டாக் ஸ்டேட்மெண்ட்லே காட்டினதாலே, கணக்குலே வருமே" என்று கேட்டேன். பதிலே இல்லை. மேஜரைப் பார்த்தேன்.

“இரண்டு மணி நேரத்துக்கு முந்தி வந்திருந்தா எல்லாம் இருந்திருக்கும்” என்றார் மேஜர் பைப்பில் இன்னொரு முறை புகை வலித்துக்கொண்டு.

இரண்டு மணி நேரத்துக்கு முன்னால் இருந்தது என்றால் இப்போ எங்கே போச்சு? செருப்புக்குக் கால் முளைத்து தானே நடந்து போயிருக்கலாம்.

“கொடுங்க, மாத்திக் கொடுக்கச் சொல்றேன்.”

மேஜர் ஸ்டாக் ஸ்டேட்மெண்டுக்குக் கை நீட்டினார்.

“இல்லை சார், இதை நேத்திக்கு க்ளோசிங் ஸ்டாக்குன்னு கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கீங்க. இதன்படிக்கு நானும் இதுவரை செக் பண்ணி சரிபாத்துட்டேன். இப்போ வேறே ஒண்ணு மாத்தித் தரேன்னு சொல்றீங்களே...”

நான் சத்தம் போடாமல் முறையிடும் குரலில் கேட்டேன். அவரிடம் சத்தம் போட்டு சண்டை வலிக்க நான் யார்? எமர்ஜென்சி சர்க்காரில் எத்தனை பேரோடு பழக்கமோ... பேங்க் மேல்மட்டத்தில் எத்தனை பெரிசுகளோடு பியர் சாப்பிட்டு ஏ ஜோக் அடித்துச் சிரித்துக் கொண்டிருக்கும் நட்பு வளையமோ.

“சரி, புதுசா எழுதிக் கொடுக்க வேணாம். அதிலேயே அடிச்சுட்டு எழுதித் தரேன்.” அவர் சொல்ல மனதில் நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன்.

“கிட்டதட்ட ஆறாயிரம் ரூபா மதிப்புள்ள சரக்கு இல்லே. அதனாலே உங்க கடன் நிலுவைக்கான ட்ராயிங் பவர் நாலாயிரம் ரூபா குறையும். அப்போ, கரண்ட் அக்கவுண்ட் ஓவர் ட்ராஃப்ட்லே ஓடிடும். பெரிய நடைமுறைப் பிசகாயிடும். நான் ரிபோர்ட் பண்ணியே ஆகணும்.”

மனதில் இன்னும் ஆழமாகக் கணக்குப் போட்டு, ஓவர் ட்ராஃப்ட் ஆயிரம் ரூபாய்க்கு மேலே இருக்காது என்று தெரிந்துகொண்டேன். என்றாலும் தப்பு தப்புதானே? விலாவாரியாக ஷூ கணக்கு காட்டிவிட்டு, எங்கே அதெல்லாம் என்று கேட்டால் காக்கா கொண்டுபோயிடுத்துன்னு சொல்வது மேஜருக்கு அழகா?

“அந்த ஷூ எல்லாம் வெளியே போயிடுத்து ரெண்டு மணி நேரம் முந்தி.”

கொசுவைத் தோளில் இருந்து தட்டுகிறதுபோல் என் தோளில் தட்டிவிட்டு மேஜர் சிரித்தபடி நகர்ந்தார்.

வெளியே போச்சுன்னா அதை விற்றதுக்கு பில், வந்த வரவு எல்லாம் இருக்கணுமே... விடாமல் பிடித்தேன்.

திரும்பிப் பார்த்த மேஜர், வா, போகலாம் என்றார். எங்கே?

“பக்கத்திலேதான். என் கார்லே போய்ட்டு வந்துடலாம்.” போனோம்.

கொஞ்சம் பழையதாக ஆனால் சுத்தமாக இருந்த கட்டடம். பள்ளிக்கூடம். ஏதோ விழாபோல இருக்கிறது. உள்ளே மட்டும் கேட்கும் தணிந்த சத்தத்தில் ஒலிபெருக்கி. பள்ளிக்கூட மைதானத்தில் விழா.

நீளமான காரிடரில் நடந்தபோது காந்தி படம், நேரு படம், ஜெயப்ரகாஷ் நாராயண் படம் மட்டும் மாட்டியிருந்தது கண்ணில் பட்டது. மைதானத்தில் பேசுகிறவரும் அவர்களைப் பற்றித்தான் பேசுவது காதில் விழுந்தது.

சாரே ஜகாங் சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா என்று இக்பால் கவிதையைச் சொல்லி யாருக்கும் எதற்கும் பயப்படாதீர்கள், அநீதிக்கு அடிபணியாதீர்கள் என்று கூறிக் கொண்டிருந்தார் அவர்.

நான் பார்த்த எங்கள் ஊர்ப் பள்ளி விழா எல்லாம் இருபதம்சத் திட்டப் பிரசாரமும், இந்திரா புகழ் பாடுதலுமாகத்தான் போகும். பாடப் புத்தகங்களும் இனி எந்நேரமும் திருத்தி வந்துவிடலாம். எமர்ஜென்சியும், பழைய குடியிருப்பைக் கலைப்பதும், கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடும், சஞ்சய் பெரும் புகழும், இளம் தலைமுறைக்குக் கல்வியாக ஊட்டப்படலாம். வடகொரியா இங்கும் வர வாய்ப்பான சூழல் அது. கம்போடியாவும் போல்பாட்டும் கூட இங்கே உருவாகக் கூடும். இந்தப் பள்ளி எத்தனை நாள் தாக்குப் பிடிக்கும்?

பெற்றோரைக் கட்டாயப்படுத்திப் பிள்ளைகளை பள்ளியில் இருந்து எடுத்துவிடலாம். ஜெயஜெய என்று துதிப்பாடல் சொல்லித்தரும் மற்ற பள்ளிகளில் அவர்கள் சேர்ந்து, சோர்ந்து போகலாம். ஆனால் என்ன, இந்த நிமிடத்தில் அவர்களுக்கு சுதந்திர சுவாசம்.

“பள்ளிக்கூட கரஸ்பாண்டெண்ட் உங்க தமிழ்க்காரர்தான். நாடியப்பன். ஹவில்தாராக இருந்து ரிடையர் ஆகி இங்கே ஏழைப் பசங்களுக்காக, முக்கியமா, பீகார்லே இருந்து வேலைக்கு வந்த பரம ஏழைகளோட பிள்ளைகளுக்காகப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கார். எமர்ஜென்சி எதிர்ப்பாளர். சத்தமான எதிர்ப்பு. அகதிகளோட குடியிருப்பை புல்டோசர் வச்சு ராத்திரியோட ராத்திரியா தரைமட்டமாக்கினபோது இந்த ஸ்கூல் ஒரு வாரம் வேலை செய்யலே. அகதிகளா பசங்களும் பெற்றோரும் இங்கேதான் தங்கியிருந்தாங்க. யாருக்கும் பயப்படாம, நாடியப்பன் ஜிதான் அதே இடத்திலே திரும்ப குடிசை போட்டு அவங்க எல்லாரையும் குடியமர்த்தினார். நான் அப்போ உதவி செஞ்சேன். அதுலே கொஞ்சம் பெருமை எனக்கும் உண்டு.”

மேஜரின் கண்கள் மின்னின. ஒரு விசில் சத்தம். போட்டிகள் ஆரம்பமாகின்றன என்று அறிவிப்பு, நூறு மீட்டர் ஓட்டப் பந்தயம். பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுமிகள் புறப்படும் இடத்தில் ஓடத் தயாராக வந்து நின்றார்கள். எல்லோர் கால்களிலும் புது ஷூக்கள் மின்னின.

“ஸ்பான்சர்ட் பை சோல்ஜர்ஸ் சேவா. நம்ம வாழ்த்துகளோடு ஓடறாங்க. எல்லாரும் மிகமிக ஏழைப்பட்ட குடும்பத்திலே இருந்து வந்தவங்க. இருபது ஜோடி ஷூ கணக்கு வச்சுக்கோ.” மேஜர் சொன்னார்.

“இன்னிக்கு காலையிலே கிட்டதட்ட எல்லா பெற்றோரும் வந்து பிள்ளைங்களுக்கு ஸ்போர்ட்ஸ் ஷூ கேட்டாங்க. கொஞ்சம் கொஞ்சமா ஒரு வருஷத்திலே ஷூவுக்கான விலையை அடைச்சிடறோம்னு கோரிக்கை. நோ க்ரெடிட். டேக் இட் ஃப்ரீன்னு இலவசமாவே கொடுத்திட்டேன். இன்னும் நூறு ஜோடி தரணும். அடுத்த மாசம் பார்க்கலாம்.” மேஜர் சிரித்தார்.

ஸ்டாக் ஸ்டேட்மெண்டில் இருந்து காணாமல் போன ஷூக்கள் அந்தச் சிறுமிகள், சிறுவர்களின் கால்களில் உயிர்கொண்டு துள்ளி ஓடியாடி வென்றும் தோற்றும் பங்கு பெறுதலின் மகத்துவத்தைச் சொல்லின. ஒரு தலைமுறை ஓட, தன்னால் ஆன உதவி செய்த திருப்தியோடு சிரிக்கும் மேஜருக்கு மனதில் சல்யூட் வைத்தேன்.

கடியாரத்தில் நேரம் பார்த்தேன். நாலரை மணி. ஜென்ம பூமி கோயில் போய்த் திரும்ப நேரம் இல்லை. சாரதி காத்திருப்பான்.

“ஸ்டாக் ஸ்டேட்மெண்ட் மாத்தி நாளைக்கு அனுப்பிடுங்க” என்றேன். இவர்கள் ஏமாற்றுக்காரர்கள் இல்லை.

மேஜரிடம் சொல்லிக்கொண்டு நான் வந்த டாக்சியில் புறப்பட்டேன். பள்ளி வழியாகத்தான் சாரதி இருக்கும் இடத்துக்குப் போகவேண்டும். அங்கே ஒரு வினாடி நிறுத்தி பள்ளிக்குள் ஓடினேன். முத்தச்சியின் காணிக்கையை நாடியப்பனிடம் கொடுத்து முன்கதைச் சுருக்கம் சொன்னேன்.

“இதுலே ஐநூறு ரூபா இருக்கு சார். பள்ளிக்கூடத்துக்கு வச்சுக்குங்க.”

அவர் முகத்தில் பெரும் மகிழ்ச்சியின் சுவடு தெரிந்தது. நான் கொடுத்த காணிக்கையால் மட்டும் வந்திருக்காது அது.

“இந்தப் பணம் ஜென்மபூமியிலே இருக்கற சின்னச் சின்ன கிருஷ்ணன்களுக்கும் கண்ணம்மாக்களுக்கும் செலவாக உடனே போகட்டும். இன்னிக்கு ரொம்ப விசேஷமான நாள் தம்பி” என்றார் நாடியப்பன்.

“ஆமா, வெறும்வாய் ஆகாத செவ்வாய்” என்றேன்.

“அது மட்டுமில்லே. ஒரு பெரிய அராஜகம் முடிவுக்கு வந்துட்டிருக்குன்னு சொல்ற தினம் இது.” நான் புரியாமல் நாடியப்பனைப் பார்த்தேன்.

“லோக்சபா கலைச்சதா இந்திரா அறிவிச்சிருக்காங்க. எலெக்ஷன் வருது.” எனக்கும் அவருடைய மகிழ்ச்சி தொற்றிக்கொண்டது.

“நல்ல நாள் வந்துட்டிருக்கு.”

அவர் சொன்னதை மனதார ஆமோதித்தேன். மஞ்சள் துணி சுற்றிய அந்த உண்டியலை அவரிடம் ஒப்படைத்துத் திரும்பினேன்.

நான்கு பெரிய டப்பாக்களோடு சாரதி காத்திருந்தான். ஸ்போர்ட் ஷூக்கள் என்று புரிந்தது.

“ஸ்டாக் இன்ஸ்பெக்ஷன் சக்சஸ்...” அவன் சிரித்தபடி வண்டியில் ஏறினான். “எனக்கும்தான்” என்றேன். கார் நகர்ந்தது.

அத்தியாயம் 20

# பிப்ரவரி 1977

மூ த்த அமைச்சர் ஜகஜீவன்ராம் இந்திரா அரசில் இருந்து ராஜினாமா செய்த புதன்கிழமை காலை நேரம்.

பேங்க் கவுண்டர் திறக்கக் காத்திருந்த ரிடையர்ட் பட்டாளக்காரர் ஸ்க்வாட்ரன் லீடர் அமர்ஜித் சிங், கவுண்டர் மேல் வைத்திருந்த ப்ளாஸ்டிக் தட்டில் இருந்து ஒவ்வொரு குண்டுசியாக எடுத்து பொறுமையாகத் தன் தலைப்பாகையில் குத்திக் கொண்டிருந்தார்.

வாடிக்கையாளர்களின் அடையாளக் கையெழுத்துகள் கொண்ட ஸ்பெசிமென் சிக்னேசர் காகிதங்களைத் தொகுத்து பைண்ட் செய்த புத்தகங்களை ஜாக்கிரதையாக என் மேஜை ஓரம் அடுக்கியபடி அவரையே பார்த்தேன்.

“எங்கேப்பா உன் சகா, பட்டா?” குண்டுசி கொள்ளைக்கு நடுவே அமர்ஜித் சிங் கேட்டார்.

“இன்னும் எழுந்திருக்கலே சாப். இந்தக் குளிர்லே ஒரு டீ கூட போட முடியலே. கை நடுங்குது. பட்டா ரெண்டு நாளா நடுங்கிட்டிருக்கான்” என்றேன்.

பட்டாவின் முழுப்பெயர் சுந்தரேஷ் பட்டா. கன்னடக்காரன். அவனைச் சுற்றி எழுந்த பல சின்னச் சின்ன சரித்திரங்கள் அவனைப் பரவலாக அறியச் செய்தவை. புதிதாக ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது இப்போது.

பேங்க் கவுண்டரே நூறு வாட்ஸ் பல்ப் போட்டதுபோல் ஒளிர்ந்தது. டெலிவிஷனில் நியூஸ் வாசிக்கும் ஷபானா சுல்தானா அங்கே நின்று கொண்டிருந்தார். அவசரமாக ஓடி செக்கை வாங்கி நானே பாஸ் செய்து, இரண்டாவது கையெழுத்துக்கு அக்கௌண்டண்டிடம் ஓடினேன்.

ஒரு குறுஞ்சிரிப்போடு பார்த்த பாயல் நான் ஸ்பெசிமென் சிக்னேசரை எடுக்கக் குனிந்தபோது காதில் சொன்னாள்:

“உல்லு கா பட்டா. அழகான பொண்ணு வந்தா ஓடி ஓடி வேலை பார்ப்பியே…”

‘உல்லு கா பட்டா’வின் அதிரடியான மொழிபெயர்ப்பு ஆந்தைக் குழந்தை. முட்டாள் என்று அர்த்தம். டெலிவிஷன் நட்சத்திரத்தின் மேல் அழகு சார்ந்த அசூயை காரணமாக இப்போது எனக்கும் பாயலால் பட்டம் சூட்டப்பட்டது.

ஷபானாவை பிம்பமாக மாலை நேரத்தில் டெலிவிஷனில் பார்க்க முடியும். பாயல், பகலில் நேரில் வந்து கூடவே இருக்கும் சல்வார் கமீஸ் தேவதை.

பாயலா, ஷபானாவா என்றால் நான் யோசிக்காமல் பாயலுக்கு வோட்டுப் போடுவேன். இந்த விஷயத்தில் நானும் பட்டாவும் அப்படித்தான். இதற்கு என்றில்லை, எதற்குமே யோசிக்காமல் துணிவான் அவன்.

பட்டா சென்ட்ரல் ஆபீஸில் மனித வளத் துறையில் இருந்தபோது ஆபீஸர்கள் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை பேங்க் செலவில் விடுமுறைப் பயணம் போகும் சலுகையான லீவ் ட்ராவல் கன்செஷன் பகுதியை நிர்வகித்து வந்தான். கையிலிருந்து முதலில் காசு செலவழித்து விடுமுறையில் போய் வந்து அவர்கள் ரயில் டிக்கெட்டுகளையும், பிற செலவுக் கணக்குகளையும் சமர்ப்பிப்பார்கள். அவற்றைச் சரி பார்த்து பாஸ் செய்து அவர்களுக்குப் பணம் கிட்ட வழிசெய்வது பட்டாவின் வேலை.

விடுமுறை பயணச் செலவுக்கான தொகை கேட்டு ஓர் ஆபீஸர் அனுப்பிய கோரிக்கையை மேனேஜிங் டைரக்டருக்கே அனுப்பிய

சாதனை செய்தவன் பட்டா.

“கரண்ட் அக்கவுண்ட் ஆபீஸர் நாரங் வயிறு சரியில்லேன்னு டாய்லெட்டிலே குடியேறிட்டான். கொஞ்சம் அங்கேயும் கவனிச்சுக்க. டாய்லெட்டை இல்லே, கரண்ட் அக்கவுண்ட் கவுண்டரை. கவனமா பார்த்து செக் பாஸ் பண்ணு.”

பட்டா விசாரத்தில் இருந்து வெளியேற, அகர்வால் சாப் எனக்கு இண்டர்காமில் ஆணையிடுகிறார்.

“நாரங் நாலு நாள் பழைய கிச்சடியை ஃப்ரிட்ஜ்லே வச்சு சாப்பிடற ஆள். வயிறு கெடாம என்ன செய்யும்?”

பாயல் அங்கலாய்த்தாள். கிளியரிங் செக் எல்லாம் போஸ்ட் செய்து வரக் காத்திருந்தேன். பட்டா இன்னும் வரவில்லை. இன்னும் அரை மணி நேரம் வராவிட்டால் அவன் லீவு போடணும். போடுவான். சட்டதிட்டப்படி நடக்கிறவன் பட்டா. தெரியாவிட்டால் தேவைப்பட்டால், ஜனாதிபதியிடம்கூட போய்க் கேட்க அஞ்ச மாட்டான். சங்கரன் விவகாரத்தை மேனேஜிங் டைரக்டரிடம் கொண்டுபோய் ஒரு வழி பண்ணிய மாதிரி.

லட்டு சங்கரன் என்று ஒரு ஆபீஸர். ஐந்தடி, ஐம்பதுக்கும் குறைவான கிலோகிராம் எடை, சாதுவான சிரிப்பைச் சதா ஒட்ட வைத்த முகம் என்று வரும் அவர் சாதனையாளரும் கூட. மொத்தம் பத்து குழந்தைகள். குழந்தைகள் என்றால் குழந்தைகள் இல்லை. இவருக்கு நாற்பத்தெட்டு வயது. கடைசிப் பிள்ளைக்கு ஆறு வயது. முதல் பிள்ளை இருபது வயது. நடுவில் வேறு வேறு வயதுகளில் பிள்ளைகள், பெண்கள். எல்லோரும் சங்கரன் சம்பாத்தியத்தில்தான் உயிர்வாழ்கிறார்கள்.

பிள்ளை பிறக்கும்போது ஆபீஸில் லட்டு கொடுத்து கொண்டாடுவதால் அவர் ‘லட்டு சங்கரன்’.

லட்டு சங்கரனுக்கு எண்பது வயதில் அம்மாவும், எண்பத்தைந்து வயதில் அப்பாவும் கூட உண்டு. அவருடைய பராமரிப்பில் இருப்பவர்கள்.

எட்டு வருஷமாக பேங்க் காசு கொடுக்கும் 'லீவ் ஃபேர் கன்சஷன்' விடுமுறை எடுக்காமல் திடீரென்று ஒரு வாரம் எடுக்கிறார். பதினான்கு நபர் அணி அணிவகுத்து சென்னை - கல்கத்தா விமானம் ஏற, ஏர் ஹோஸ்டஸ்களே வசீகரிக்கப்பட்டு இவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

போய்விட்டு வந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு ட்ராவல் பில் போட்டு பணம் கேட்டு நீட்ட, அதிகாரியான பட்டா மயக்கம் போட்டு விழாத குறை.

இவ்வளவு பெரிய தொகையை தனக்கு மேலதிகாரியாக வாய்த்த யாரும் கொடுக்கச் சொல்ல மாட்டார்கள் என்றுபட, நேரே மேனேஜிங் டைரக்டர் கேபினில் யாருமில்லாத நேரத்தில் ஃபைலைக் கொண்டுபோய் வைத்துவிட்டான் பட்டா. ஆறாம் மாடியில் ஒரே ஒரு டாப் மேனேஜ்மெண்ட் அதிகாரியான எம்.டி பணி இடம் அது. அங்கே போகவே அவரவர்கள் தயங்குவார்கள்.

பட்டா ஃபைலை வைத்துவிட்டு எம்.டி அறை எப்படி இருக்கிறது என்று சாவகாசமாக அங்கே மாட்டியிருந்த நவீன ஓவியங்களின் பிரதிகள், தஞ்சாவூர் ஓவியம், புகைப்படங்கள் என்று வரிசையாகப் பார்வையிட்டிருக்கிறான். நடுவில் இங்கே நாரங் மாதிரி வயிறு கலகலக்க மேனேஜிங் டைரக்டரின் டாய்லெட்டுக்குள் போய்த் திரும்பும்போது, எம்.டி வந்துவிட்டார்.

நாரங் வந்துவிட்டான். "கேன் அண்ட் உட் கணக்கு ஓவர்ட்ராஃப்ட்லே போறது. கிளியரிங் செக் வேற உண்டு" என்றேன் உடனடி பிரச்சனையைக் கோடி காட்டி. அவன் வயிற்றைத் தடவிக்கொண்டு திரும்பப் போய்விட்டான்.

"வணக்கம் சார், உங்களை ஒருநிமிஷம் பார்க்க வந்தேன். வயிறு கலகலன்னுடுத்து. அதான் உள்ளே போய்... தண்ணியே இல்லே சார்."

பட்டா பக்கத்து வீட்டுக்காரரிடம் பேசுகிற தோதில் ஆரம்பிக்க, "நீங்க யாரு, எங்கேயிருந்து வர்றீங்க?" என்று பொறுமையிழந்து கேட்டிருக்கிறார் எம்.டி.

“இதே ஆபீஸ்தான், முதல்மாடி, மனிதவளம்.”

தன் பிசினஸ் கார்டையும் கொடுத்து, ‘கூப்பிட்டுடாதீங்க சார், மத்த வேலையே நெட்டி முறியது’ என்று அங்கலாய்த்திருக்கிறான். அந்த நிமிடத்தில் எம்.டிக்கு அவனைப் பிடித்துப் போனதாகத் தெரிகிறது.

அவனை உட்காரச் சொல்லிவிட்டு அவன் கொண்டுவந்த ஃபைலைப் பார்த்துவிட்டு, ஏன் இதை எங்கிட்டே கொண்டு வந்திருக்கே என்று கேட்டிருக்கிறார்.

“பெரும் தொகை சார், ஒரு ப்ளேன் நிறைய உட்கார்ந்து போயிருக்காங்க.”

“போகட்டுமே, உனக்கென்ன போச்சு. அவர் குடும்பம் அவர் கூட்டிப் போயிருக்கார்.”

“அதுக்காக பத்து பிள்ளையா? ரொம்ப அதிகம் சார்.”

“என்ன பண்ணணும்கிறே?”

“ஐந்து அம்சத் திட்டப்படி ஆப்பரேஷன் பண்ணிட்டிருக்கலாமே.”

“நாம் பேங்க் நடத்தறோம். ஆஸ்பத்திரி இல்லே.”

சிரித்துவிட்டு அந்த ஃபைலை கையெழுத்துப் போட்டு பாஸ் செய்து, இனிமேல் இப்படியான சில்லறை விஷயங்களைத் தனக்கு அனுப்ப வேண்டாம் என்று சொன்ன அந்த எம்.டி போன மாதம் பதவிக் காலம் முடிந்தபோது தில்லி வந்திருந்தார். கண்டேவாலா ஸ்வீட்ஸ் கடை தூத்பேடாவோடு மறக்காமல் போய்ப் பார்த்துவிட்டு வந்தான் பட்டா.

கவுண்டரில் பரபரப்பு. மேஜர் ஜெனரல் சாம் மகேஷ் ஷா தடதடவென்று என் டேபிளுக்கு எதிரே நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து, “சீக்கிரம் வா, லாக்கர் ஆபரேட் பண்ணணும். நிறைய வேலை இருக்கு. அப் அப்” என்று அன்போடு ஆணையிடுகிறார்.

வேகமாக நடக்கும் அவரோடு நான் உள்ளே ஓட ஆபீஸே வேடிக்கை பார்த்தது. இந்த வயதிலும் ஹீரோதான் அவர். ரிடையர் ஆனால் என்ன?

மேஜர் ஜெனரல் தன் பாதுகாப்புப் பெட்டகத்தைத் திறந்து ஏதோ வைக்கவோ எடுக்கவோ செய்ய, நான் வெளியே காத்திருந்தேன். பட்டா என்ன ஆனான்? ஏன் இன்னும் வரவில்லை? சாப்பிட்டுக் கொண்டிருப்பானோ? தாபா திறந்திருக்காதே. வேறென்ன சாப்பிடுவான்? எல்லா ஆபீஸர்களும் ஸ்டாக் செய்து வைத்திருக்கும், தீபாவளிப் பரிசாக வந்த உலர் திராட்சையா? ரோட்ரிக்ஸ் மாதிரி முந்திரிப் பருப்பா?

பிரான்சிஸ் ரோட்ரிக்ஸ் என்ற கோவாக்கார ஆபீஸர் ஆபீஸ் வேலையாக ஹைதராபாத் போய் மூன்று நாள் இருந்து திரும்பியபோது சாப்பாட்டுச் செலவாக தினம் ஐநூறு ரூபாய் கட்டிய பில் பட்டாவிடம் வந்தது. அவரைக் கூப்பிட்டு அவ்வளவு தொகை வரக் காரணம் கேட்டிருக்கிறான் பட்டா. சாப்பிட்டேன் என்றிருக்கிறார் அவர் சுருக்கமாக.

‘காலை பசியாற என்ன சாப்பாடு?’ ‘வறுத்த முந்திரிப் பருப்பு.’

‘பகலுக்கு?’ ‘நெய்விட்டு வறுத்த முந்திரிப் பருப்பு.’

‘ராத்திரி?’ ‘வேகவைத்து நெய் விட்டுக் கிண்டிய முந்திரி உப்புமா.’

‘சாயந்திரம் முந்திரி பக்கோடா சாப்பிட்டதையும் சேர்த்துக்கணும்’ என்று பிரான்சிஸ் ரோட்ரிக்ஸ் விளக்கி இருக்கிறார்.

‘நாலு வேளையும் முந்திரிப் பருப்பு மட்டும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்கும் ஆபீஸரின் செலவுக் கணக்கைப் பார்வையிட்டு பாஸ் செய்ய வாய்ப்பு அளித்த பேங்குக்கு நன்றி. அவருக்கு இதெல்லாம் ஜீரணமாக பேங்க் செலவில் ஜெலூசில் ஒரு பாட்டிலும், வயிறு சரியாக டல்கோலாக்ஸ் பேதி மருந்தும் வாங்கித் தர சிபாரிசு செய்கிறேன்.’

நீளமாக எழுதிக் கையெழுத்துப் போட்டு அசிஸ்டண்ட் ஜெனரல் மேனேஜருக்கு நோட் போட்டான் பட்டா.

இண்டர்காம் ஒலித்தது. மேலே பேங்கின் அந்நியச் செலாவணித் துறையில் இருந்து ஜஸ்பீர். “ஃபேஷன்ஸ் அபேரல் சைகோன் எக்ஸ்போர்ட் பில் டிஸ்கவுண்ட் பண்றேன். கரண்ட் அக்கவுண்ட் க்ளியரிங் முடிச்சுடாதே. எங்கே போனான் நாரங்?” என்று இரைந்தான்.

நாரங் மேனேஜரிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டானாம். எப்படி இருக்கு கதை? அவன் இருக்கட்டும். பட்டா ஏன் இன்னும் காணோம்?

மனிதவளத் துறையை விட்டு இங்கே தில்லிக்கு பட்டா வந்து சேர்ந்தது, எமர்ஜென்சி தொடங்கிய 1975 ஜூன் 25 ஆம் தேதிக்கு நான்கு நாட்கள் கழித்து.

பெங்களூர் சென்டரல் ஆபீஸில் அந்தத் துறையில் ரொம்ப நாட்களாக இருக்கும் அதிகாரி சுனிதா தாஸும் வங்காளி, அசாமியப் படங்களில் நகைச்சுவை துணைக் கதாபாத்திர வேடத்தில் வரும் அவருடைய கணவரும் தில்லி சுற்றிப் பார்க்க வந்தபோது பட்டாவோடுதான் தங்கியிருந்தார்கள்.

எல்லோரும் வீட்டுக்கு வந்த விருந்தாளிகளுக்கு இந்தியா கேட்டும், ஜனாதிபதி மாளிகையும் கொண்டுபோய்க் காட்டினால், பட்டா சிடியா கர் போனான். அந்த உயிர்க் காட்சி சாலைக்கு சுனிதா தாஸும், அவள் வீட்டுக்கார வங்காள காமெடியனும் போன நேரத்தில் சிம்பன்ஸி குரங்குகள் தீவிரமான இனப்பெருக்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால் தாஸ் மோஷாய் கூண்டுக்குள் வீசிய பட்டாணிக்கடலையை வாங்கிக் கொள்ளாது போடா வெண்ணெய் என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, ஏற்கெனவே செய்து கொண்டிருந்ததைத் தொடரப் போய்விட்டனவாம்.

முகம் சிவந்த சுனிதா தாஸ் ‘வாட் இஸ் திஸ்?’ என்று பட்டாவிடம் கோபத்தோடு கேட்டிருக்கிறாள். அவன் ஓடிப்போய் மிருகக் காட்சிசாலை அதிகாரி கெட் அப்பில் இருந்த யாரோடோ பேசிவிட்டு வந்து சொன்னது:

‘ஐந்து ரூபா டிக்கெட்டுக்கு சிம்பன்ஸி குரங்குதானாம். நூறு ரூபாய் கொடுத்தா சிங்கம் புலி இப்படி பார்க்கலாமாம்.’

பட்டாவின் சம்பள உயர்வு இன்னும் வராததற்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று பட்டாதான் சொன்னான்.

“சப் கதம் ஹோ கயீ சாப்.”

கரண்ட் அக்கவுண்ட் கிளார்க் ஷோபா சந்த்வாகர் ஐநூறு கிளியரிங் செக்குகளை ஒரு மணி நேரத்தில் நேர்த்தியாக தலையணை சைஸ்

லெட்ஜர்களில் போஸ்ட் செய்து முடித்து சிறு ஓய்வுக்காகக் கிளம்பிக் கொண்டிருக்க, வியப்பும் மரியாதையுமாக வழியனுப்பி வைத்தேன்.

“மராட்டி அக்கான்னா உனக்கு ரொம்ப பிடிக்கும் இல்லே... பம்பாய்க்கே ட்ரான்ஸ்ஃபர் கேட்டுப் போய் உதட்டழகிகளை பார்த்துட்டிருக்கலாமே...” இது விமல் விடுத்த அம்பு.

“ஒவ்வொரு ஊர்ப் பொண்களுக்கும் ஒவ்வொண்ணு” என்று பொதுவாகச் சொல்ல, “நீ எதைத் தேடி இங்கே வந்திருக்கேன்னு தெரியுமே” என்றாள் பாயல்.

அறிவைத் தேடி என்றேன் பகவான் புத்தர் போல. மூஞ்சி என்றாள் அவள். அது மட்டும்தானா என்ன...

பட்டாவைக் கேட்டால் போட்டு உடைப்பான். ஆள்தான் வரவில்லை இன்னும். மேனேஜர் அறையில் இருந்து அவனுடைய வீட்டுச் சொந்தக்காரருக்கு ஃபோன் செய்து பார்க்கலாமா?

தொலைபேசி மத்தியதர வர்க்கத்துக்குத் தொட்டுவிடும் தூரம் எனினும் கைக்கெட்டாத கனவாக இருந்த ரெண்டுங்கெட்டான் காலத்தில் ஊர் விட்டு ஊர் டெலிஃபோனில் ட்ரங்க் கால் போட்டுப் பேச ஒரு மாத சம்பளம் கூட சமயத்தில் செலவழிந்துவிடும். பெங்களூருக்கு அவ்வப்போது பந்து மித்திரர்களோடு அரட்டை அடிக்க பட்டாவுக்குக் கிடைத்தது சீஃப் மேனேஜரின் டெலிஃபோன்.

அவர் வேலை முடிந்து கிளம்பும்போது வழக்கமாக டெலிஃபோனுக்குப் பூட்டு போடமாட்டார். பட்டா ஆபீஸில் எல்லோரும் வேலை முடித்து வீடு போகப் பொறுமையாகக் காத்திருந்து, மெல்ல சீஃப் மேனேஜர் கேபினில் புகுந்து, இருட்டுக்கு நடுவே ஊர் உலகமெல்லாம் அழைத்து ஆபீஸ் செலவில் தொலைபேசி விடுவான்.

இரண்டு மாதம் முன்னால் இப்படி இருளோ என்று கிடந்த ஆபீஸில் அவன் சீஃப் மேனேஜர் கேபினில் மும்முரமாக ட்ரங்க் கால் அரட்டையில் மூழ்கியிருக்க, செக்யூரிட்டி கார்ட் தர்யா சிங் கதவெல்லாம் அடைத்துப் பூட்டி இறங்கிப் போய்விட்டார்.

உள்ளே பொறிக்குள் எலிபோல மாட்டிய பட்டாவுக்கு நல்லவேளை சீஃப் மேனேஜர் வீட்டு டெலிஃபோன் நம்பர் தெரிந்திருந்ததால் கிட்டதட்ட ராத்திரி ஒன்பதுக்கு சீஃப் மேனேஜர் அகர்வால் சாப் அவர்களை பைஜாமா, முண்டா பனியனில் பாதி பிய்த்துத் தின்ற ஆலு பராத்தாவோடு ஆபீஸுக்கு ஓடி வரவைத்து விடுதலை பெற்றான்.

அந்தக் கதை தில்லி, பம்பாய், கல்கத்தா, மதராஸ், பெங்களூர் என்று சகல கிளைகளிலும் இன்னும் வெற்றிகரமாக வலம் வந்துகொண்டிருக்கிறது.

இரண்டு நாட்களாக பட்டா ஆபீஸ் வரவில்லை. காரணம், ஜனாதிபதி ஃபக்ரூதீன் அலி அகமத் அவர்கள்.

ஜனாதிபதி மாளிகை ஊழியர்களுக்கு ரீஜனல் ஆபீஸ் சிபாரிசில் புதிதாக வந்திருக்கும் கறுப்பு-வெள்ளை டெலிவிஷன் பெட்டிகள் வாங்க எங்கள் வங்கிக்கிளை மூலம் கடன் கொடுக்கப்பட்டது.

இன்னும் சில கவர்மெண்ட், தனியார் ஆபீஸ் ஊழியர்களுக்கும் இப்படிக் கடன் வழங்கப்பட்டு, அவர்களில் சிலர் திருப்பிக் கட்டவில்லை. அந்த நபர்கள் வேலை செய்யும் அலுவலகத்தின் நிர்வாகிக்கு, அன்னார் சம்பளத்தில் பிடித்துக் கடன் தொகையை உடனே பேங்குக்குச் செலுத்தச் சொல்லி கோரிக்கை விடப்பட்டபோது, தவணைக் கடன் நிலுவை எல்லாம் ஜரூராக வசூலாகியது.

அதைப் பின்பற்றி, ஜனாதிபதி மாளிகை ஊழியர்கள் சிலர் டெலிவிஷன் செட் லோன் திருப்பிக் கட்டாதபோது, கடன் பிரிவில் மூன்றாம் ஆபீஸராக இருந்த பட்டா, தன் கடமை அக்கடன்களை வசூலிப்பது என்று உணர்ந்து உடனே செயல்பட்டான். அவன் வராக்கடன் பற்றி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் சாராம்சம் இது-

‘அரசுடமையான வங்கிகளில் குறைந்த கட்டணத்துக்கு கடன் பெற்றவர்கள் அப்படிப் பெற்ற தொகையை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தினால்தான் இருபதம்சத் திட்டத்தின்படி நலிந்த எல்லோருக்கும் அத்தொகையைப் பயன்படுத்தி புதுக் கடன் வழங்க முடியும் என்பது

ஜனாதிபதியாகிய தாங்கள் அறியாததல்ல. உங்கள் மாளிகை அலுவலர்களான... (பெயர், பதவி விபரம்) எம்மிடம் வாங்கிய டெலிவிஷன் பெட்டிக் கடனை மாதாமாதம் செலுத்த உறுதிமொழி கொடுத்தாலும் அப்படிச் செய்யவில்லை என்று உம் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். அவர்களின் மாதச் சம்பளத்தில் இருந்து மாதம் நூற்று முப்பது ரூபாய் ஒவ்வொருவருக்கும் பிடித்து, எங்களுக்கனுப்பக் கோருகிறோம். புதிய பாரதம் காண தோள் கொடுப்பீர்.'

இதெல்லாம் பட்டாவே உத்வேகம் கூடிய மொழியில் சுமாரான ஆங்கிலத்தில் எழுதியது. அனுப்பிவிட்டு எல்லோரிடமும் பெருமை அடித்துக் கொண்டிருக்க, ஒரு மணி நேரத்தில் ரீஜனல் ஆபீஸ், அதற்கடுத்து சென்ட்ரல் ஆபீஸ் என்று வரிசையாக எங்கள் கிளைக்கு தொலைபேசி ஜெனரல் மேனேஜர், எக்சிக்யூடிவ் டைரக்டர், ஏன், மேனேஜிங் டைரக்டர் என்று ஆளாளுக்கு எங்கள் சீஃப் மேனேஜர் அகர்வால் சாப் அவர்களை வறுத்தெடுத்தார்கள்.

மத்திய நிதியமைச்சர் கூட அவருக்கு தொலைபேசி வைது தீர்த்ததாக வதந்தி.

ஜனாதிபதி, உப ஜனாதிபதி, பிரதமர் போன்ற உன்னதப் பதவியில் இருப்பவர்களுக்கு பேங்க் கிளைகள் என்ன காரணத்தைக் கொண்டும் எவ்விதமான கடிதமும் எழுதக் கூடாது என்று நாடு முழுக்க உள்ள கிளைகளுக்கு சென்ட்ரல் ஆபீஸ் சர்க்குலர் அனுப்பி உத்தரவிட்டது. மற்ற பேங்குகளும் இது மாதிரி சுற்றறிக்கைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனவாம்.

"பட்டா, நானும் நீயும் உள்ளே போயிடுவோம். எமர்ஜென்சி. ஜாக்கிரதையா இரு. யாருக்கும் லெட்டர் போடாதே." சீஃப் மேனேஜர் முந்தாநாள் சொன்னதிலிருந்து பட்டாவுக்கு அஸ்தியிலே ஜுரம். பயமோ பயம்.

இரண்டு நாட்களாக அவனுடைய அபார்ட்மெண்டில் முடங்கிக் கிடக்கிறான். நேற்று ஜகதீஷ் சாயந்திரம் போய் வலுக்கட்டாயமாகக் கூட்டி வந்து டேபுக் எழுதச் சொன்னான்.

குட்டிச்சாத்தான் உபாசகன் மாதிரி போர்வையைப் போர்த்திக்கொண்டு வந்து உட்கார்ந்து வேலை முடித்துப் போனான் அவன். அவனுக்கு லீவு மார்க் பண்ண வேண்டாம் என்று பச்சாதாபத்தோடு சொல்லிவிட்டார் அகர்வால்.

“இன்னிக்கும் ராத்திரி உடையார்பாளையம் தர்பார்தானா போத்தி?”

லட்சுமண் கௌடா கேட்டான். தமிழ்நாட்டில் வெள்ளைக்காரன் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உடையார்பாளையம் என்ற ஊர் சமாசாரம் அது. அங்கே சுகவாசிகளாக பகல் முழுவதும் சீட்டு, அரட்டை என்று சிலரும், வயல்வேலை என்று பலரும் பொழுது போக, ராத்திரி காடா விளக்கும் அகல் விளக்கும் கொளுத்தி உட்கார்ந்து வரிக் கணக்கும், வசூல் கணக்கும் எழுதும் வழக்கம் இருந்ததாம். பட்டா தில்லியில் உடையார்பாளையத்தைத் தொடங்கி விட்டிருக்கிறானாம்.

“இன்னிக்கு பாருங்க. பட்டா வெற்றி வீரனா இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்து நிற்பான்.”

நான் சொல்ல, லட்சுமண் சிரித்தான். விமல் அஹூஜாவும் பாயலும் சிரித்தார்கள். பாயல் ஏலம் மணக்க என் அருகில் வந்து கேட்கிறாள்:

“ராத்திரி டே புக் பட்டா எழுதட்டும். நீ ஜெனரல் லெட்ஜர் போஸ்ட் பண்ணு. இங்கே ராத்திரி மோகினிப் பிசாசு நடமாட்டம் உண்டாம். நீ முந்திக்கிட்டா உனக்கு. பட்டா முந்திக்கிட்டா அவனுக்கு. என்ஜாய்...”

அந்த மோகினி வேற மோகினிகளைப் பற்றி நூல் விட்டுப் பார்க்க, நான் அந்தரத்தில் மிதந்தேன்.

நான் சொன்னது போலவே பதினொரு மணிக்கு, அரை மணி நேரம் தாமதமாக, மூன்று பீஸ் சூட், மஞ்சள் டை, காலில் கான்வாஸ் ஷூ என்று யோசித்துச் செய்துகொண்ட அலங்காரத்தோடு பட்டா ஆஜராகிவிட்டான்.

சிரிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டு அவனை உள்ளே சென்ட்ரல் ஆபீஸுக்கு மாதாந்திர ஸ்டேட்மெண்ட்களை அனுப்பும் பிரிவுக்குப் போகச் சொன்னார் அகர்வால் சாப்.

“ரிசர்வ் பேங்க் ஸ்டேட்மெண்ட் போடணும். போன மாசம் போட்டது இருக்கும். பார்த்து அதேபோல் போட்டுடு” என்று அவர் சொல்ல உற்சாகமாக மாடிப்படி ஏறினான் பட்டா.

அதே நேரத்தில் பேங்க் வாசலில் காரும் வேனும் வந்து நிற்க, ஒரு கூட்டம் புகைப்படக்காரர்களும் நிருபர்களும் உள்ளே வந்தார்கள். எல்லோரும் பட்டாவிடம் பேச வந்தவர்கள்.

நான் பட்டா தூங்கிக் கொண்டிருக்கிறான் என்று சொன்னது முழுப் பொய். பட்டா இன்றைக்கு விடிகாலையிலேயே, டெல்லிக்கும் குளிர்காலத்துக்கும் பொருந்தாத நாலரை மணிக்கே எழுந்துவிட்டான்.

நான் எழுந்திருக்கும் நேரம் அது. உடம்புக்குள் ஒரு பயலாஜிகல் கடிகாரம் என்னை எழுப்பி விட, நான் எழுந்து, நான்கு வீடு தள்ளி பட்டாவின் முதல்மாடி ஃப்ளாட்டுக்குப் படியேறி கதவைத் தட்ட, உடனே சுறுசுறுப்பாகக் கிளம்பிவிட்டான். அவன் காலில் பார்த்தேன். அவனும் ஸ்போர்ட்ஸ் ஷூதான் போட்டிருந்தான்.

அவனுடைய நாள் நல்ல விதமாகத் தொடங்கினால் முழுநாளும் அப்படிப் போகும் என்று நான் நம்பிக்கை கொடுத்திருக்கிறேன். ஜனாதிபதிக்கு கடன்பாக்கி லெட்டர் அனுப்பியதெல்லாம் காராபூந்திபோல சப்பை விவகாரம். அது முடிந்து அவனை யாரும் இனி கவனிக்கக் கூட மாட்டார்கள் என்று எடுத்தோதி காலையில் வெளியே போய் நல்ல காற்றை சுவாசித்து நடந்துவிட்டு வரலாம் என்றேன் அவனிடம். உடனே சரி சொல்லிவிட்டான்.

“எங்கேடா போகலாம்?”

பட்டா கேட்க, அவன் ஸ்கூட்டரை எடுக்கச் சொன்னேன். “அது ஓடினா நிக்காது, நின்னா ஓடாதுடா” என்றான்.

உண்மைதான். சாவியை எடுத்தபிறகு கூட அந்த ஸ்கூட்டரின் டு ஸ்ட்ரோக் இஞ்சின் லேசில் நிற்காது. பட்டா அதன் புட்டத்தில் தட்டி கன்னடத்தில் ஒரு அதட்டல் போட நின்று போகும் அது. இரண்டு நாட்களாக குளிரில் நிற்கிறதால் லேசில் ஸ்டார்ட்டும் ஆகாதுதான்.

என் ஸ்கூட்டரிலேயே இரண்டு பேரும் கிளம்பினோம்.

“இன்னும் இருட்டா இருக்கு. தெரு நாய் எல்லாம் இந்தியிலே கொலைச்சுக்கிட்டு பின்னாலேயே ஓடி வந்துடப் போறது.”

பட்டா சொல்ல அவனை அடக்கினேன். இங்கே நாய் கிடையாது. எப்போதாவது நரி வந்து போகும். ஓரிரு முறை வழி தப்பி வெளியே காடு மாதிரி புதர் மண்டிய பிரதேசத்திலிருந்து சிறுத்தை வந்து பிடிபட்டுப் போனதாக, பிற்பகல் லாக்கர் ஆப்பரேட் செய்துவிட்டு அரட்டை அடிக்க உட்காரும் பஞ்சாபி முதுபெண்டிர் சொல்லி இருக்கிறார்கள்.

“லோதி கார்டன் போறோம்.” நான் லாலா லாஜ்பத் ராய் ரோடில் வண்டியைத் திருப்பினேன்.

லோதி தோட்டத்தில் அந்த ஐந்து மணிக்கும் கணிசமான கூட்டம் இருந்தது. ஓடுகிறவர்களும் நடக்கிறவர்களுமாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள் எல்லோரும்.

“ஓடலாமா, நடக்கலாமா?”

நான் கேட்டேன்.

“ஓடலாம். டயர்ட் ஆனா நடக்கலாம்.”

அவன் கொடுத்த தீர்வு சரிதான். ஓட ஆரம்பித்தோம்.

காதருகில் குளிர் காற்று குறுகுறுவென்று பேசிப் போனது. பனிக்காலக் காலை நேரத்து தில்லிக்குப் பகிர்ந்துகொள்ள நிறைய இருக்கிறது. உடன்படுகிறவர்களோடு பகிரப்படும் சந்தோஷ சமாசாரம் அவை எல்லாம்.

செடிகளும் மரங்களும் அடர்ந்து பரந்த புல்தரைகளுமாக ஓட ஓட நிலப்பரப்பு நீண்டு எங்களை அரவணைத்துக் கொண்டது. இன்று முழுதும் இதுவே வேலையாக இங்கேயே இருக்கலாம் என்று தோன்றியது.

வேண்டாம்டா, டாய்லெட் போகறதுக்கெல்லாம் கஷ்டம் என்று திரும்பவும் ப்ராக்டிகல் ஆனான் பட்டா.

நாங்கள் ஓடிக் கொண்டிருக்கும்போது பின்னால் சிறு சத்தம். நான் திரும்பிப் பார்க்க பிரமித்துப் போய்விட்டேன்.

பாபு ஜகஜீவன் ராம் வந்து கொண்டிருந்தார். மத்திய அரசில் செல்வாக்கு மிகுந்த அமைச்சர் அவர். இந்த இரண்டு வருடங்களாக எப்படியோ மௌனமாக இருந்து வருகிறார். வெளியே போய் மிசா சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கிற அதிருப்தியாளர் தலைவர்களோடு இவரையும் அகற்றாமல் இருக்கக் காரணம் ஒடுக்கப்பட்ட இனத்தின் தலைவர் என்ற சிறப்பு இவருக்கு இருப்பதால் என்று ஊரில் ஜெபர்சன் இவரைப் பற்றிப் பேச்சு வரும்போது சொல்லி இருக்கிறார். பாபு என்று காந்திஜியை அழைத்ததுபோல் இவரையும் அழைக்கிறார்கள்.

மெல்ல நடந்து போகிறார். நான்கடி இடைவெளி விட்டு உயரமும் ஆகிருதியும் உள்ள ஒருவர் அவரையும் எதிரே, அருகே வரும் மற்றவர்களையும் ஜாக்கிரதையாகப் பார்த்தபடி நடந்து வருகிறார். அவருக்கான போலீஸ் காவலராக இருக்கக்கூடும். ஒரு மத்திய அமைச்சருக்கு எமர்ஜென்சி நேரத்திலும் அவ்வளவுதான் பாதுகாப்பு.

ராம்ராம். அவர் பெயரையே அவருக்குச் சொல்லி கடந்து போனவர்கள் காலை வணக்கமும் வாழ்த்தும் சொன்னார்கள். நான் சுறுசுறுப்பாக ஒரு குட்மார்னிங் சொல்லி இந்த நாள் இனிய நாளாக அமையட்டும் என்று அவரை வாழ்த்தினேன். முகம் மலர கை கூப்பி என் வாழ்த்துகளை ஏற்றுக்கொண்டது மட்டுமில்லாமல், பதில் வாழ்த்தும் சொன்னார் அவர்.

பட்டாவுக்கு அவர் யாரென்று தெரியவில்லை. அவனுக்கு அரசியல் தொடர்பு மிகக் குறைவு என்பதைச் சொல்லியாக வேண்டும். எந்தச் செய்தித்தாளையும் அவன் படித்துக் கொண்டிருந்து நான் பார்த்ததில்லை. மற்ற செய்திகளைப் படிக்காவிட்டாலும் விளையாட்டு, சினிமா இந்த இரண்டில் குறைந்த பட்சம் ஒன்றிலாவது ஆர்வம் இல்லாமல் இருப்பவர்கள் ஆகக் குறைவு. அந்த மைனாரிட்டியில் இவனும் அடக்கம்.

“யாருப்பா, கொஞ்சம் பூசினாப்பலே இருக்காரே...”

அவன் விசாரிக்க, அவசரமாக அவன் வாயைப் பொத்தினேன். செக்யூரிட்டிக்கு தமிழ் தெரிந்திருக்கலாம். எதற்கு வம்பு. அவர் யார் என்று சுருக்கமாகச் சொன்னேன்.

“அஞ்சு மணிக்கு லோதி கார்டன்லே ஜாகிங் வந்தா கேபினட்லே நம்பர் டூவைப் பார்க்க முடியுது பார்” என்றேன்.

“நீ சொன்னேன்னு விடிய முந்தி ஒரு காப்பி கூட இல்லாம ஓடி வந்து என் நம்பர் டூவை இன்னிக்கு பார்க்க முடியாதுபோல் இருக்கே” என்றான் அவன். டர்ட்டி ஃபெல்லோ.

“போகறபோது கன்னடா ஸ்கூல் கேண்டீன்லே சுடச்சுட டிஃபனும் வாய் பொள்ளிப் போகிற மாதிரி நெருப்புத் திரவமாக ஃபில்டர் காப்பியும் வாங்கித் தரேன். போற வழியிலேயே நீ குத்த வச்சுடுவே.” கியாரண்டி கொடுத்தேன்.

“கன்னடா ஸ்கூல் மெஸ் திறக்கலேன்னா?” அவன் சந்தேகத்தைக் கிளப்பினான்.

“காலு கடையிலே ஆம்லெட், ஏலக்கா டீ.”

நாங்கள் காலையில் பசியாறுவது பற்றிப் பேசியபடி ஓடிக் கொண்டிருந்தபோது திரும்பவும் பரபரப்பு. வயதான இன்னொரு பெரிய தலைவர். அவரும் எங்கள் பாதையிலேயே நடந்து வந்துகொண்டிருக்கிறார். செளத்ரி சரண்சிங்.

“செளத்ரி வரார். எதிர்க்கட்சித் தலைவர். அந்தக் காலத்துலே காங்கிரஸ்தான். எமர்ஜென்சியிலே உள்ளே இருந்தார். ஜெயில்லே இருந்து விட்டுட்டாங்கபோல...” பட்டா அறிந்துகொள்ளச் சுருக்கமாகச் சொன்னேன்.

“ஏது, அஞ்சு மணிக்கு வந்தா, நீ சொன்ன மாதிரி ரெண்டு தலைவர்கள் வாக்கிங் வர்றாங்க. நாலு மணிக்கு வந்தா ஜனாதிபதியே வந்திருப்பாரோ... மூணு மணிக்குன்னா ப்ரைம் மினிஸ்டர் வருவாரா?”

“கம்முனு ஓடி வா.” நான் வேகத்தைக் குறைத்தேன்.

சௌத்ரி வரக் காத்திருந்த மாதிரி பாதையை விட்டு ஒதுங்கி ஜகஜீவன் ராம்பாபு நின்றிருந்தார். சௌத்ரி மெல்ல நடந்து ராம்பாபுவுக்குக் கை குவித்தார்.

உள்ளே ஏழெட்டுப் பேர் ஓடி வரும் ஓசை. ஜகஜீவன் பாபுவின் செக்யூரிட்டி காவலர் அவர்களை நிறுத்தினார்.

“இன்றைக்கு பரபரப்பான தகவல் ஏதாவது எதிர்பார்க்கலாமா?”

அவர்கள் இரைந்து அந்த இரண்டு தலைவர்களையும் பார்த்துக் கேட்க, பாபுவும் சௌத்ரியும் அவர்களை லட்சியமே செய்யாமல் கைகளை பரஸ்பரம் பற்றிக்கொண்டு பேச ஆரம்பித்தார்கள்.

மெல்லிய பனிமூட்டம் அவர்களைச் சுற்றித் திரையாகச் சூழ்ந்தது. லோதி தோட்டத்தில் பாதியை மூடி மறைத்த மூடுபனிப் படலம் அது. கண்ணைக் கவிந்துகொண்டு நான் பார்க்க, சட்டென்று அவர்களோடு இன்னொருவரும் சேர்ந்துகொண்டது தெரிந்தது. பட்டா மாதிரி ஆகிருதி பனியில் தெரிந்தது.

பக்கத்தில் அவசரமாகப் பார்த்தேன். அவனைக் காணோம். பாதி ஓடிக் கொண்டிருக்கும்போது குறுக்கே ஓடி தலைவர்களோடு சேர்ந்து நிற்கிறான்.

ஒரு வினாடி கும்பிடுகிறான் அவர்களை. அடுத்த வினாடி, சரண்சிங் அவன் தோளில் தட்டுகிறார். இன்னொரு நொடியில் ஜகஜீவன்ராமின் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொள்கிறான். அடுத்த நிமிடம் அவர் அவனை அணைத்துத் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்கிறார். அடுத்து சௌத்ரிக்கும் பாதம் தொட்டு நமஸ்காரம். அணைப்பு.

இரண்டு பக்கத்திலும் இரண்டு முதியவர்களும் ஆளுக்கொருவராக பட்டா கையைப் பற்றி நிற்க பனிக்கு இடையே புகைப்படம் எடுக்க முடியாத பத்திரிகை புகைப்படக்காரர்கள் பொறுமையிழப்போடு அப்படியும் இப்படியுமாக ஓடுகிறார்கள்.

இன்னும் இரண்டு நிமிஷம் உயிர் சிநேகிதர்கள் போல அந்த இரண்டு முதியவர்களோடு பேசிவிட்டு பட்டா என் பக்கம் ஓடி வருகிறான். இப்போது அவனைத் துரத்தியபடி பத்திரிகைக்காரர்கள்.

நான் அவனை வாசல்பக்கம் வரும்படி சைகை காட்டிவிட்டு ஓட ஆரம்பித்தேன்.வாசலில் நிறுத்திய ஸ்கூட்டரில் நானும் பட்டாவும் கிளம்பிப் போக பின்னால் சத்தம் ஓயவில்லை.

லோதி எஸ்டேட் கன்னடா ஸ்கூல் கேண்டீன் பள்ளி விடுமுறை என்பதாலோ என்னவோ வெளியாட்களுக்குத் திறந்திருந்தது. இட்லி தோசை அடியார்க்கு அடியார்கள் தில்லியில் வாய்க்கு ருசியாக ஏதாவது ஊர்ப் பக்குவத்தில் கிடைக்காதா என்று அலைந்து திரிந்து அல்லல் படுவதைக் கொஞ்சமாவது குறைக்க கேண்டீன்காரர்கள் நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.

“மூணு உலகப் பெருந்தலைவர்களும் என்ன பேசிட்டிருந்தீங்க?”

தோசை தின்றுகொண்டே பட்டாவை விசாரித்தேன்.

“ஜனாதிபதி என்மேலே மனவருத்தமா இருக்கார். தப்பு என்பேர்லேதான். அவருக்கு கடிதாசு போட்டுட்டேன் அப்படி ஆரம்பிச்சு என் தலை உருள்ற பிரச்சனை பற்றி ரெண்டு பேர் கிட்டேயும் சுருக்கமா சொன்னேன். ஏதாவது சகாயம் செய்யமுடியுமான்னு கேட்டேன். ரெண்டு பேரும் நாங்க பாத்துக்கறோம்னாங்க. ஏங்க, ஒருத்தர் எதிர்க்கட்சி, ஜெயில்லே இருந்து வந்திருக்கீங்க போல இருக்கு. இன்னொருத்தர் இந்திராம்மா போட்ட கோட்டைத் தாண்டாதவங்க. எப்படி நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து செய்வீங்கன்னு கேட்டேன். நாங்க சேர்ந்தாச்சுன்னு ரெண்டு பேரும் சொன்னாங்க. காலைத் தொட்டு அந்தப் பெரிசுங்களைக் கும்பிட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கிட்டேன்.”

பேங்க் வாசலில் வந்து நின்ற பத்திரிகைக்காரர்கள் பட்டாவிடம் விசாரிக்க அவன் அமைதியாக நடந்து போய் பின்கதைச் சுருக்கம் சொன்னான். சீஃப் மேனேஜர் அவசரமாக வந்து அவர்களிடம் ரகசியமாகப் பேசி,

“பட்டா சொல்வது எதையும் ரொம்ப நம்ப வேண்டாம், அவன் கொஞ்சம் நெர்வஸ் ஆக இருக்கிறான்” என்று முன்கதைச் சுருக்கம் சொன்னார்.

அன்று சாயந்திரம் இந்திரா லோக்சபாவைக் கலைத்ததை அறிவித்தார். இரண்டே நாட்களில் புதியதாக ஒரு கட்சி, ஜனதா தளம் எதிர்க்கட்சிகள் சேர்ந்து உருவாக்கப்பட்டது. அதில் சரண்சிங் இருந்தார்.

அடுத்த நாள் பாபு ஜகஜீவன்ராம் மந்திரிசபையில் இருந்தும் காங்கிரஸில் இருந்தும் ராஜினாமா செய்து காங்கிரஸ் ஃபார் டெமாக்ரசி என்ற கட்சி தொடங்கி, ஜனதா கட்சிக்கு ஆதரவு தெரிவித்தார்.

செய்திகளை முந்தித் தந்த பட்டாவின் பெயரோ புகைப்படமோ எந்தப் பத்திரிகையிலும் வராமல் எமெர்ஜன்சி கிட்டதட்ட முடிவுக்கு வந்தது.

அத்தியாயம் 21

# மார்ச் 1977

'நீ திக்குத் தலைவணங்கு' சினிமாப் படம் பார்க்க ஆரம்பித்து முக்கால் மணி நேரம் போன பிறகும் கதை பிடிபடாமல் போனது. காரணம் நானேதான் என்று தோன்றியது. தூக்கக் கலக்கத்தோடு சினிமா பார்த்தால் எப்படி திரைக்கதையும் வசனமும் மனதில் பதியும்? புரியும்?

தில்லி ஜங்புரா ஈராஸ் தியேட்டரில் ஞாயிறு காலைக் காட்சியாக எட்டு மணிக்கு ஆரம்பித்து ஓடிக் கொண்டிருக்கிறது வாத்தியார் நடித்த அட்டகாசமான தமிழ்ப்படம், 'நீதிக்குத் தலைவணங்கு'.

முக்கியமாக சேலம் வீட்டுவேலைத் தொழிலாளர்களையும், அரசுடைமை வங்கி உத்தியோகத்தில் சின்னதாகப் பதவி உயர்வும், கூடவே இடமாற்றமும் கிடைத்துத் தெற்கிலிருந்து வந்து சேர்ந்த, என் போன்ற புது ஆபீஸர்களையும், அவர்களோடு கூடவே பயணிக்கும் குடும்பம் ஏதும் இருந்தால் அவர்களையும் இலக்கு வைத்து அவசரமாக ஒரு ஷோவுக்கு குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் பணம் பண்ண நடக்கிற ஸ்பெஷல் ஷோ, டெல்லி தியேட்டரில் தமிழ்ப்படம்.

ஆப்பரேட்டருக்குத் தமிழ் தெரியாததாலோ என்னமோ, ஃபிலிம் சுருள்களை சரியான வரிசையில் போடாமல் படத்தில் ஏகக் குழப்பம். எஸ்.வரலட்சுமி பாடி முடித்து ஐந்து நிமிடத்தில் அதே பாடலை எம்.ஜி.ஆர் பாடுகிறார். தலையை ஆட்டி ஆட்டி வி.எஸ். ராகவன் சீரியஸாக வசனம் பேச, ரோஜா ரமணி மறுபடி அழ, வி.கே. ராமசாமி யாருக்கோ அப்பாவாக, வழக்கமான வஜ்ரவேலு என்ற பெயரில் வந்து

குரலை ஏற்றி இறக்கிப் பேசுகிறார். புதிய கதாபாத்திரங்கள் வேற, யார் எவர் என்று புரிபடாமல், சுபாவமாகச் சுற்றி வருகிறார்கள்.

எதற்கும் கலங்காத புரட்சித் தலைவர் ஏசுதாஸ் குரலில் பாடிக் கொண்டிருக்கிறார்:

'இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப் பூவில்

தொட்டிலைக் கட்டி வைத்தேன்...'

என்னைத் தவிர யாரும் கதை நான்லீனியராக நகர்வதை லட்சியம் செய்யவில்லை என்பதை உணர்ந்த கணத்தில் நானும் மௌனமாக உட்கார்ந்து பாட்டை ரசிக்க ஆரம்பித்தேன்.

பக்கத்தில் லட்சுமண் கௌடாவும் ஜகதீஷும் குடும்பங்களோடு தமிழ்ப் படம் பார்க்கிற சந்தோஷத்தில் மிதந்தபடி.

லட்சுமண் கௌடாவின் அப்பா அந்த நடுக்கும் குளிரிலும் வெட்டிவேர்த் தட்டி விசிறியை மறக்காமல் எடுத்து வந்து விசிறிக் கொண்டிருக்கிறார். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை அவரை பாத்ரூம் கொண்டுபோய் விடவேண்டும். அங்கேயே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகைத்துவிட்டு வரும்போது அரங்க வாசலில் எதிர்கொண்டு இருட்டில் வழிநடத்திக் கூட்டி வரவேண்டும். கௌடா ஒருவிதமாக தந்தைக்கு உதவியாற்றிக் கொண்டிருக்கிறான்.

ஹோலியும் ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்து வந்திருக்கிறது. மார்ச் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை இது. தெருவில் தெரிந்தவர்களும் பரிச்சயமில்லாதவர்களும் வண்ணப்பொடி கலந்த தண்ணீரை எதிர்ப்படுகிறவர்கள் மேலெல்லாம் அடித்து விளையாடும் நாள். குளிர் இந்த தினத்தோடு விடைபெற்றுப் போய் நவம்பர் மாதத்தில் மறுபடி தலைகாட்டுமாம்.

குளிரோடு எமர்ஜென்சியும் கூடவே இந்திரா காந்தி அரசும் விடைபெற்றுப் போகப்போவதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துவிட்டன. எமர்ஜென்சி ஒழிந்து போகிறது என்ற மகிழ்ச்சி அத்தனை முகங்களிலும் ஹோலிக்கு முன்பே வண்ணச் சிதறலாக படிந்து நிற்கிறது.

லோக்சபா கலைக்கப்பட்டுவிட்டது. ஒட்டுமொத்தமாகக் காவலில் வைக்கப்பட்டு மிசா சட்டத்தின்கீழ் சிறையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவராக வெளியே வந்து, ஒரு புதுக் கட்சியை ஏற்படுத்தி, எல்லாப் பிணக்கையும் தள்ளி வைத்துவிட்டு ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

இந்திராவை எதிர்ப்பது என்ற ஒற்றைவரி அஜண்டாவோடு இவர்கள் எப்படி மாற்று அரசாங்கம் கொண்டு வருவார்கள் என்று அங்கங்கே அறிவு ஜீவிகள் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு விவாதித்தாலும், பத்திரிகையில் ஜாக்கிரதையாக எழுதினாலும், எமர்ஜென்சி போய்த் தொலைவதில் அவர்களுக்கும், மிட்டாய் தின்னும் குழந்தைகளாக சந்தோஷம்.

யாரோ தியேட்டர் கதவு ஒன்றைத் திறந்து வைத்தபடி உள்ளே பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடைத்துவிட்டு அழைத்துப் போய் அறுத்துவிடுவார்களோ... இருக்காது. எமர்ஜென்சி இருட்காலம் முடிந்தாச்சே.

கௌடாக்களின் டாய்லெட் பயணமா? நான் பக்கத்தில் திரும்பிப் பார்த்தேன். லட்சுமண் கௌடாவின் அப்பா நல்ல நித்திரையில் இருக்கிறார். சீனியர் கௌடா பக்கத்தில் ஜூனியர் கௌடாவும் யோக நித்திரையில்.

என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

ஞாயிறு காலை எட்டு மணிக்கு ஸ்பெஷல் ஷோ தமிழ்ப் படம் என்று சென்ட்ரல் மார்க்கெட் தமிழ்க் கடை, வீட்டு வேலை செய்யும் சேலம் அணி, ஜங்புராவில் ராத்திரி சும்மா அலைந்து விட்டுத் திரும்பும் யுவ திராவிட பேங்க் ஆபீஸர்கள் மூலமாகச் செய்தி பரப்பும்போது வராத அசதி இது.

ஆயிரத்தெட்டு வேலை வீட்டில் இருந்தாலும் அப்புறம் பார்க்கலாம் என்று ஒத்தி வைத்து பல் துலக்கிய அடுத்த கணம் ஈர ப்ரஷ்ஷை

ஸ்டாண்டில் செருகிவிட்டு, ஜங்க்புராவுக்குப் புறப்படும்போது வராத தளர்ச்சி இது.

சட்டை கசங்கல், காலரில் அழுக்கு என்றாலும், பளிச்சென்று ஆளை அடிக்கும் சிவப்பு, கறுப்பு, பச்சை, நீல கலர்களில் மேலே போட்டுப் போக எடுத்த காஷ்மிலான் ஸ்வெட்டர் உடனடியாக மானம் மறைத்து பழைய இந்தி சினிமா ஹீரோ பிஜ்வஜித் போல தென்படவைக்க ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பும்போது வராத சள்ளை இது.

நிச்சயமாக சினிமா உண்டா? நல்ல படம் தானா? முடிந்ததும் சாப்பிட இனிமேல் வீட்டில் போய் உடனே சமைக்க முடியாதே. கிடக்கறது கிடக்கட்டும் மாடர்ன் பிரட்டை வாங்கிப் போய் வெண்ணெய் புரட்டிச் சுட்டுத் தின்னலாம் என்று முடிவு எடுத்தபோது வராது இந்த பலகீனம், படம் ஓட ஆரம்பித்ததும் எங்கிருந்தோ வந்து மேலே கவிந்து தூங்க வைத்துவிடும். போதாக்குறைக்கு எம்.ஜி.ஆர் வேற தாலாட்டு பாடிக் கொண்டிருக்கிறார். இன்னும் எத்தனை பேர் தூங்கிக் கொண்டிருக்கிறார்களோ இங்கே.

வாசலில் இருந்து அந்த உருவம் உள்நோக்கி நகர ஆரம்பித்தது. யந்திரமனிதன் மாதிரி நின்று நின்று நகர்ந்து என் நாற்காலி வரிசை முனையில் வந்ததும் குனிந்து உற்று நோக்குவதைப் பார்த்தேன். டாய்லெட்டில் இருந்து தியேட்டரில் ரிசர்வ் ஆன சீட்டுக்கு வர வழிதெரியாது தள்ளாடும் பேர்வழியாக இருக்கலாம்.

இல்லை என்பதுபோல் என் அருகில் வந்து குனிந்து, ‘போத்தி பய்யா’ என்றபோது எம்.ஜி.ஆர், பொய்மீசை வைத்த புஷ்டியான உடம்பு கொண்ட ஏழெட்டு கைலிக்காரர்களை துவம்சம் செய்து கொண்டிருந்தார்.

வீட்டுப் பக்கம் முட்டை, சர்பத், லாட்டரி டிக்கெட், ஊறுகாய், சிகரெட், புளிப்பு மிட்டாய், காட்பரீஸ் மில்க் சாக்லெட், காண்டோம், மருதாணிப் பொடி என்று ஆல் பர்பஸ் கடை வைத்திருக்கும் காலு என்ற ராஜேந்த்ர கபூர். ஓரமாக தோசைக்கல் வைத்து மாட்டுக்கண் (புல்ஸ் ஐ), ரெகுலர் ஆனியன், ஜிஞ்சர் கேரட் என்று விதவிதமாக ஆம்லட் போட்டுத் தருவதும் கடை ஸ்பெஷல்.

காலுவோடு வெளியே வந்து, கதவை அடித்துச் சார்த்தினேன். 'சப் மர் கயே?' என்று அக்கறையாக விசாரித்தபடி பதினொரு மணி போஜ்பூரி பட ஷோவுக்காக ஒரு கூட்டம் பீகாரிகளோ யாரோ நின்றார்கள். அவர்கள் மொழியில் கதாபாத்திரங்களில் யாராவது ஒருத்தர் உயிரோடு இருக்கும்வரை கட்டாயம் படம் தொடரும்போல.

"காலு, எதுக்கு நான் சினிமா பார்க்கறபோது வந்து கூப்பிடறே? நேத்து காலையிலே வாங்கின உன்னோட முட்டைக்கு காசு தரணுமா? அதுலே ரெண்டு கூமுட்டை. அதுக்கும் சேர்த்து கொடுத்தாச்சு ஞாபகமில்லையா?"

"பாய்சாப், காலு முட்டை போடலே. கோழி போடுது. அப்புறம், நான் காசுக்காக வரலே."

"வேற என்ன?"

"பட்னி மெம்சாப் கூப்பிடறாங்க."

என் அடுத்த வீட்டில் இருக்கப்பட்ட பஞ்சாபி முதுபெண் ஆஷாராணி பட்னி. பட்டினி என்பதே தெரியாமல், தினம் வேளாவேளைக்குச் சாப்பிட்டு ஆறு அடி உசரமாய் நிற்கிற இந்தம்மாவுக்கு புருஷன்வழி குடும்பப் பெயர் பட்னி.

பிறந்த நாள் முதலாக, அறுபது வருட தில்லி வாழ்க்கை. வேற எங்கும் போனதில்லை, ஒருதடவை ஹரித்வார் போய் வந்ததைத் தவிர. வீட்டுக்காரர் பஸேஸர் பட்னி வீட்டு ப்ரோக்கராக இருந்து நிறைய சம்பாதித்து இப்போது ரிடையர் ஆகிவிட்டார். வாரிசு இல்லாத சிறு குடும்பம் அவர்களது.

ஆஷாராணி பட்னி அம்மாள் இன்னும் பத்து நாட்களில், மார்ச் பதினாறாம் தேதி நடக்க இருக்கும் லோக்சபா தேர்தலில் எங்கள் லாஜ்பத் நகர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறாள்.

"வெயிட்டைக் குறைக்க வேணும். டாக்டர் ஓடச் சொல்லியிருக்கார். ஓடினா மூச்சு எறைக்குது. அப்போ வேகமா நடங்கறார் டாக்டர். நடந்தா

தலை சுத்துது. அப்போ ராச்சாப்பாடு பழம் மட்டும் சாப்பிடுங்கறார். பழத்தைத் தின்னுட்டு ராத்திரி எப்படி தூக்கம் வரும்?”

எல்லாவற்றுக்கும் எதிர்க் கட்சி கட்டியதால், டாக்டர் பட்னியம்மாளை எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி இரண்டுக்குமே எதிர்ப்பாக சுயேச்சை வேட்பாளராக நிற்கச் சொன்னாரோ?

குறைந்த பணச் செலவில் வேட்பாளராகப் போட்டி போடுகிறார் என்றாலும் அந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்று யாரும் தெருவில் கேட்கவில்லை. அவளுடைய வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு கடியாரச் சின்னம் வழங்கப்பட்டது.

லாஜ்பத் நகர் சுவர்களில் காங்கிரஸின் பசுவும் கன்றும் சின்னமும், ஜனதா கட்சியின் ஏர் உழவனும் இடம் பிடிக்க, மிஞ்சிய இண்டு இடுக்குகள் சிலவற்றில் கடியாரச் சின்னத்துக்கு வோட்டு கேட்டு விளம்பரம் எழுதப்பட்டது.

“தம்பி, நீ எனக்காக உடனே மதராஸ்லே போய் பேசணும்.”

அந்தம்மா எனக்கு முதல் கோரிக்கை வைக்க அசந்து போனேன்.

இந்த நியூடெல்லி தொகுதி லாஜ்பத் நகர், ஜங்புரா, கோல் மார்க்கெட், சரோஜினி நகர் இப்படி ஏழு நிலப்பிரதேசங்கள் அடங்கியது. அவற்றில் ஒன்றுகூட மதராஸ் இல்லை. இதை ஆஷாராணி பட்னியிடம் விளக்கினேன்.

“மதராஸ் இல்லேன்னா மதராஸிகள் கிட்டே எனக்காக வோட்டு கேளு போத்திபாய்.” அவள் சலுகை காட்டும் குரலில் சொன்னாள்.

“சர்க்கார் வேலைக்காரன் நான். எலெக்ஷன் பிரசாரம் எல்லாம் செய்ய அனுமதி இல்லை. அப்படியே கிடைத்தாலும், சக மதராஸிகளிடம் நான் வேலை மெனக்கெட்டு ஆஷாராணிக்காக பிரசாரம் செய்து புண்ணியமில்லை. ஒவ்வொருத்தரையும் நேரில் போய்ப் பார்த்து வாய் வார்த்தையாக ஆஷாராணிக்கு வாக்களிக்கச் சொன்னாலும், என்னைப்போல வந்தேறிகளான பேங்க் அதிகாரி மெட்ராஸ்காரர்கள் யாரும் இங்கே வோட்டுப் போட முடியாது.”

நேற்றைக்கு சாயந்திரம் பேங்க் அரை நாள் சனிக்கிழமைக்கு வேலை பார்த்து முடித்த பின் இதையும் சுயேச்சை வேட்பாளரிடம் அன்போடு தெரிவித்தேன்.

“ஷாமியானாவாலே ஆ கயே.” கூடாரம் போட்டுத் தரும் குழு வந்து சேர்ந்ததாக பட்னி சார் வந்து சொல்ல, அப்புறம் பேசறேன் என்று எங்கள் வேட்பாளர் போனார்.

அவள் வீட்டு வாசலில் வண்ணத்தில் ஷாமியானா அமைக்க வந்த தொழிலாளர்கள் ஒரு மணி நேரத்தில் தெருவையே வளைத்து அந்தக் கூடாரத்தைப் போட்டுவிட்டார்கள். யாரும் எந்தப் புகாரும் சொல்லவில்லை.

நகரம் முழுவதும் ஒரு விழாக்கால உற்சாகம். அது இந்தக் காலையில் ஹோலி வந்து கூடுதல் உற்சாகப்படுத்த, ஆனந்தம் ஆனந்தம் என்று ஊரோடு பாடியாகிறது.

சாவகாசமாக நீதிக்குத் தலைவணங்கிக் கொள்ளலாம் என்று உத்தேசித்து காலுவோடு கூட நடந்தேன். என்னை தேர்தல் பிரசாரம் செய்யவைக்க இன்னொரு தடவை கோரிக்கை விடுப்பதற்குக் காலு மூலம் முயற்சி நடக்கிறதோ என்னமோ.

“இன்னும் அரைமணி நேரத்துலே படம் முடிஞ்சிடும். பார்த்துட்டு வரேன். ஆஷாஜி கிட்டே சொல்லு” என்றேன் காலுவிடம். அவன் முடியாது என்று தலையசைத்தான்.

“பட்னி அம்மாக்கு நம்ம பேட்டையிலே லாட்டா ஐம்பது லட்சம் வோட்டு விழுது. வாஜ்பாயியும் அவுட், சசிபூஷனும் அவுட். ஒரு பிரமாதமான ஐடியா வந்திருக்கு, அதை பேசத்தான் கூப்பிட்டிருக்காங்க” என்றான் காலு.

லாஜ்பத் நகர் நாலு பகுதிகளில் தொடங்கி நிஜாமுதீன், ஜங்க்புரா, டிஃபென்ஸ் காலனி, லோதிரோடு, கோல்ஃப் லிங்க்ஸ் என்று சேர்த்துக்கொண்டாலும் ஐம்பது லட்சம் வாக்காளர்கள், ஏன் ஜனத்தொகையே இங்கே கிடையாது என்று அவனிடம் சொன்னேன்.

அது ஐம்பது லட்சம் ஆகணும்னா என்ன செய்யணும் என்று கேட்டான். காலையிலே கெட்ட வார்த்தை பேசுவதில்லை, அதுவும் ஹோலி அன்றைக்கு என்று தெரியப்படுத்தினேன்.

'மேரி ஸப்னோம் கி ராணி கப் ஆயேகி தும்' என்று சத்தம் போட்டு கிஷோர்குமாரின் 'ஆராதனா' படப்பாடலை ஈடுபாட்டோடு பாடியபடி காலு, அவனுடைய பஜாஜ் ஸ்கூட்டர் ஸ்டார்ட் செய்து என்னைப் பின்னால் உட்காரச் சொன்னான்.

எனக்கும் கிஷோரின் உற்சாகம் தொற்றிக்கொண்டது. அந்த அந்நியோன்யமான குரலுக்கு ஆகாசவாணியில் தடைவிதித்த ஒரே ஒரு அநீதிக்காக இந்திரா காந்தி சர்க்காரை இனிமேல் திரும்ப வரமுடியாதபடி கூட்டமாக வோட்டுப் போட்டுத் தோற்கடிக்கலாம்.

"ஐம்பது லட்சம் ஆள்கணக்கு சொன்னியே, என்ன ஐடியா?" காலுவைக் கேட்டேன்.

"உன்னை வெளியே கூட்டிவரணுமே? அதுக்காக சும்மாதான் சொன்னேன். தெரிஞ்சிருந்தா நானே எலெக்ஷன்லே நின்னிருப்பேனே..."

அவனை முதுகில் பலமாக அடித்தேன். கள்ளன். நான் தமிழ் சினிமா பார்ப்பதை முடக்குவதில் அப்படி ஒரு அற்ப சந்தோஷம் அவனுக்கு.

"சினிமாவை உங்க ஊர்லே போய் பாரு. இப்போ ஆஷாஜி வீட்டுலே பிரமாதமான ப்ரேக்ஃபாஸ்ட். வர மாட்டேன்னு மதராஸி சினிமா பார்த்து அழுதுட்டிருந்தா உன் சாப்பாடு உனக்கில்லே."

காலு கரிசனத்தோடு சொன்னபடி வண்டி ஓட்டிப் போனான்.

வீட்டுக்குள் நுழையக் காலடி எடுத்துவைத்தபோதே நான்கு வீடு தள்ளியிருக்கும் மல்ஹோத்ராவின் சின்னப் பிள்ளை, வண்ணம் பீய்ச்சும் தண்ணீர்க் குழாயால் என் உடுப்பை பஞ்சுமிட்டாய் வர்ணத்தில் நனைத்தான்.

"தும் பி ஏக் பிச்காரி லோ."

சென்ட்ரல் மார்க்கெட்டில் ரெடிமேட் துணிக்கடை வைத்திருக்கும் மல்ஹோத்ரா ஜி, தாராள மனத்தோடு எனக்கு ஒரு வண்ணத் தண்ணீர் பீய்ச்சும் குழாயை - அதற்குத்தான் பிச்காரி என்று பெயர் - நீட்டினார்.

அண்டை அயலில் இருந்து சல்வார் கமீஸ் அணிந்த, எல்லா வயதிலுமான பிச்காரிகள் ஒருமித்த சிரிப்போடு புறப்பட்டு வந்து என் மேல் வண்ணத் தண்ணீர் நிரம்பிய பக்கெட்டைக் கவிழ்க்க இதுவும் சுவர்க்கம் என்றது மனசு.

“தஞ்சு தீதி புலா ரஹி ஹை”, மல்ஹோத்ரா ஜூனியர் அவன் வீட்டு பர்சாதியைக் காட்டிச் சொன்னான். மொட்டைமாடியைப் பார்த்தேன்.

கடந்த ஒரு மாதத்தில் அங்கே எனக்கு ஒரு நல்ல நட்பு ஏற்பட்டிருந்தது. தஞ்சம்மா சம்பத் ஐயங்கார் என்ற தஞ்சு தீதி. ரிசர்வ் பேங்க் அதிகாரி. நாற்பதுகளின் இறுதியில் நிற்கிற, பிடிவாதமான ஸ்பின்ஸ்டர் - என்றால் திருமணம் ஆகாத, செய்து கொள்ள விருப்பப்படாத, தன் காலில் நிற்பதில் நிறைவு காண்கிற முதுகன்னி. பிரம்மசாரிணி என்ற சொல் ஆம்பளைத்தனம் மிகுந்து தொனிப்பதால் இங்கே பயன்படுத்தப்படவில்லை.

காலு கடையில் வாங்கிய முட்டை சரியில்லை என்று நானும், அவனிடம் வாங்கிய மாடர்ன் ப்ரெட் காலம் சென்றுவிட்டது என்று தஞ்சம்மாளும் ஒரே நேரத்தில் அவனோடு யுத்தத்துக்கு வந்து நின்றபோது பொது எதிரிக்கு எதிரிகளாக எங்களுக்குள் சிநேகிதம் ஏற்பட்டது. அதிகாரம் செய்யும் அக்கா பிம்பம் அவளுடையது. அடங்கி நடக்கும் அனியன், என்றால் தம்பி, நான்.

நான் சொல்லி, எங்கள் பேங்கில் சேமிப்புக் கணக்கு திறந்தாள் தஞ்சு தீதி. அவள் கேட்டுக்கொண்டதால் கன்னட சங்கம் ‘சம்ஸ்காரா’ சினிமா திரையிட்டபோது போயிருந்தேன். ஜனாதிபதி விருது பெற்ற கன்னடத் திரைப்படம் அது. கதாநாயகியாக வந்த சிநேகலதா ரெட்டி எமர்ஜென்சிக்கு எதிராகக் குரல் கொடுத்ததால், பெங்களூரில் அவரை மிசாவில் சிறையில் அடைத்து சித்திரவதை செய்ததில், இரண்டு மாதம் முன்பு ஜனவரியில் இறந்து போனாராம். தஞ்சு தீதி படம் முடிந்து

வரும்போது சொல்லிக்கொண்டே வர, அன்று ராத்திரி சிநேகலதாவின் முகம் நினைவில் தங்கியிருந்து திரும்பத் திரும்ப மனதில் எழுந்து வந்து துக்கமளித்தது.

தஞ்சம்மா தமிழ் பேசுவாள். மாண்டியா வைஷ்ணவர்கள் பேசும் தமிழ் அது. கிருமிகண்ட சோழனான அநபாயனிடமிருந்து தப்பி ஓடியவர்களின் வழிவந்தவர்கள் அவர்கள். உடையவர் ராமானுஜரோடு, கர்னாடக அரசன் பிட்டதேவன் ஆதரவு தர, தொள்ளாயிரம் வருஷம் முன்பு அங்கே குடிபெயர்ந்த தமிழர்கள்.

'ஃபோட்டோ வாங்கினேன்', 'ஆட்டோ பண்ணிண்டு போனார்', 'பல்லு கழுவித்தான் காப்பி குடிக்கணும்', 'தலையிலே எண்ணெய் தொடச்சுக்கணும்' என்று கொஞ்சம் விநோதமான மொழி தஞ்சம்மாள் பேசுவது.

'உங்க ஊரு தமிழ்லே தஞ்சம்னா ஷெல்டராமே. எனக்கு ஏன் அப்படி பேர் வச்சா தெரியலே' என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தவளிடம் அது ராமானுஜருடைய மனைவி பெயர் என்று சொல்லி சந்தோஷப்படுத்தியதில் வேகமாகப் பலப்பட்ட நட்பு.

வாசலில் நின்று பெல் அடித்தபோது, 'மொட்டைமாடியில் படித்துக் கொண்டிருந்ததால் காதில் விழவில்லை' என்று அவளுடைய வழக்கில் சொல்லி மொழி அதிர்ச்சி கொடுத்தாலும் அந்த நட்பு வலுவாக நீடிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு மணி நேரம் நான் அவளுக்குத் தமிழும் அவள் எனக்குக் கன்னடமும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்க ஒப்பந்தம் செய்துகொண்டோம். நாலே வாரத்தில் அவள் தமிழில் உயிர், மெய், உயிர்மெய் என்று முழுக்க எழுதக் கற்றுக் கொண்டதோடு சிறு வாக்கியங்களையும் எழுதுவாள். என் கன்னடமோ இன்னும் ஆட்ட, ஊட்டா, ஆஹாராவைத் தாண்டி அப்பால் போகவில்லை.

தஞ்சம்மா தமிழ்ப் பாடம் சொல்லித்தரக் கூப்பிடுகிறாள். போனேன்.

“அரைக்கீரை விற்றுக்கொண்டு போனான்’. இதை இருபது தடவை எழுதுங்க.”

எனக்கே சந்தேகம் என்பதால் மனதில் சொல்லி, எழுதிப் பார்த்துக் கொண்டேன். தஞ்சம்மா குழப்பத்தின் உச்சத்தில் இருந்தாள்.

“மனசுலே வர்றதை எழுதுங்க. சரியா பிழையான்னு வந்து சொல்றேன்.”

அரைக் கீறை. அறைக் கீறை. அறைக் கீரை. ரூம் முழுக்க பசுமையான கீரை வாடை அடிக்க, எழுத்துகளை எல்லா விதமாகவும் பிரயோகித்து, சொல் சார்ந்து கணத்துக்குக் கணம் பொருண்மை முற்றிலும் வேறுபட்டுத் தோன்றும் பிரதியாக்கத்தில் அவள் முனைப்போடு ஈடுபட்டிருக்க, நான் படி இறங்கினேன். நேற்று ராத்திரி விஸ்கியும், தமிழில் ஒரு சோதனைப் படைப்பின் சில பக்கங்களும் சேர்ந்து ஏற்றிய மப்பின் பாற்பட்டது போன வாக்கியம். மன்னிக்கவும்.

தோசையும் வெங்காய சாம்பாருமாக ஆதரவாளர்களின் கூட்டம் ஆஷாராணி பட்னி வீட்டு முன்னால் போட்ட ஷாமியானாவில் பிளாஸ்டிக் நாற்காலி இட்டு உட்கார்ந்து வெளுத்துக் கட்டிக்கொண்டிருக்கிறது. நானும் அதில் கலக்க நடந்தேன்.

ஒரு பெரிய கடாய் அதாவது வாணலியில் கமகமவென்று மணக்கும் மட்டன் கீமா டெபாசிட் போன வேட்பாளர் மாதிரி ஆதரவின்றிக் கிடக்கிறது. பைஜாமா போட்ட, சல்வாரும் ஜகஜகத்த ஷிபான் புடவையும் அணிந்த அண்டை அயல் தர்த்திகள், என்றால் அசடுகள் அத்தனை பேரும், பீகாரி சமையல்காரன் உத்தேசமாகச் செய்து இறக்கி சாம்பார் சாம்பார் என்று முழக்கி நாமகரணம் செய்த மண்வாடை அடிக்கும் திரவத்தை சோமபானம், சுராபானம்போல அருந்திக் களிகொள்ள முட்டி மோதி நிற்கிற அவலம்.

வாயில் இட்டால் கரையும் மட்டன் துண்டுகளோடு கீமாவை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத கூட்டம் அது. நான் வயிறு நிறைய சாப்பிட்டேன்.

“கால் சுன், இருபத்தஞ்சு பேருக்கு மேலே சாப்பாடு போடக்கூடாதுன்னு இன்னும் கெஸ்ட் கண்ட்ரோல் தடை இருக்கு. சாப்பிட்ட அப்புறம் காலி பேப்பர் ப்ளேட்டை எல்லாம் பின்னாலே பள்ளம் தோண்டி வச்சிருக்கு. அதுலே போட்டுடுங்க.”

காலு அறிவித்தபடி போனான்.

சாய்பானி, அதாவது தேநீர் உபசாரம் அடுத்து. அது காலு வழங்குவது என்று ஸ்பான்சர்ஷிப் தகவலை எனக்கு பெரிய டம்ளரில் சாயா வரும்போதே நாலு தடவை காலுவின் அம்மாவும், அவனுடைய மோசியும் - சித்தி - தெரிவித்தார்கள். காலு கடையில் காசு கொடுத்து வாங்கிக் கூமுட்டையாகப் போய் வாபஸ் கிட்டாத எல்லா பைசாவுக்கும் சேர்த்துக் கணக்குத் தீர்க்க அவன் இலவசமாகத் தரும் டீ அட்டகாசமாக இருந்தது.

“தஞ்சு தீதிக்கு ஒரு குரல் கொடு, பய்யா.”

காலு என்னிடம் கண்காட்ட, நான் காந்தி சமாதியில் எனக்கு முன்னால் மலர் வளையம் வைக்கப் போகிறவரின் கைக்குட்டை தரையில் விழுந்து விட்டதென்று அவரிடம் சுட்டும் குரலில் கூப்பிட்டேன். லாயக்குப் படாது என்று காலுவே பெருஞ்சத்தமாகக் கூவினான்.

தஞ்சம்மா முகலாயச் சக்கரவர்த்திக்கு அம்மா பேகம் போல் பால்கனிக்கு வந்து கெத்தாக எட்டிப் பார்த்தாள்.

“கீமாவும் தோசையும் மதராஸி சாம்பாரும் அட்டகாசமா இருக்கு. தோசா தோசா மே லிகா ஹை கானேவாலி கா நாம். ஒவ்வொரு தோசையிலும் உங்க பெயர். வந்து சாப்பிடுங்க.”

காலு முழங்க, சரிதான் போ என்று கைகாட்டி, முகத்தைச் சுளித்தபடி உள்ளே திரும்ப முற்பட்டாள் அவள். சுத்த சைவமான அந்த மாண்டியா வைஷ்ணவப் பெண்மணிக்கு - ஏதோ உதைக்கிறது இந்த வாக்கியத்தில் - சுத்த வைணவமான அந்தப் பெண்ணுக்கு, கீமா என்பது வெறும் பெயர் மட்டும்தான். குணாதிசயங்கள் ஏதும் புலப்படாத வஸ்து.

பட்னி திருக்கல்யாணத்தில் கூட இவ்வளவு கூட்டம் வந்திருக்காது என்றபடி நான் இருப்பதிலேயே சுமாராக மண்ணில் பதிந்த பிளாஸ்டிக் நாற்காலியில், கையில் சாயா கோப்பையோடு உட்கார்ந்தபடி சொன்னேன்.

“நீ பாடத்தை சரிபார்க்க இப்போ வர்றியா, இல்லே குளிச்சுட்டு வந்துடட்டா?”

தஞ்சம்மா மீண்டும் பால்கனிக்கு வந்து எட்டிப் பார்த்துக் கேட்டாள். அப்புறமாக என்ற பதிலை அவள் எதிர்பார்த்தபடி நான் சொல்ல, தஞ்சம்மா கதவடைத்துப் போனாள். அவள்மேல் வண்ணம் தெளித்து ஹோலி விளையாட யாரும் எப்போதும் வந்ததில்லையா?

காலுவின் அப்பாவான பிருத்விராஜ் கபூர் என்ற காலு சீனியர், சாப்பிட்டது செரிக்க யாராவது பேசக் கிடைப்பார்களா என்று வாய் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். ஹோலிக்காக எல்லா வண்ணமும் பொடிபொடித்து முகத்திலும் தோளிலும் தாராளமாக அப்பியிருக்க, போர்னியோவில் இருந்து பொடிநடையாக வந்த தோற்றம் அவருக்கு. மூல்சந்த் ஆஸ்பத்திரியில் லேபரட்டரி அசிஸ்டண்டாக இருந்தவர். ஸ்டூல் சாம்பிளும் யூரின் சாம்பிளுமாகவே வாழ்க்கையின் பெரும்பகுதி கழிய, ரிடையர் ஆனவர். மறுபடி வாக்கியத்தில் ஏதோ இடிக்கிறது.

என்னைப் பார்த்ததும் சொன்னார்:

“சசிபூஷன் வோட்டுக் கேட்டு இன்னும் ஒரு மணி நேரத்திலே இங்கே வரப் போறாராம்.”

யாரு சசி? எனக்கு அமைதியான அழகோடு சிரிக்கும் ஆபீஸ் சகி சசி குப்தாவைத்தான் தெரியும். அப்புறம் பாயல். பாயல் மேல் வண்ணத் தண்ணீர் தெளித்தால் எப்படி இருப்பாள். அவள் என்மேல் பிச்காரியைப் பிரயோகித்து- வேணாம், பாயல் பற்றி நினைக்கும்போது பிரயோகம் போன்ற கரடுமுரடான சொற்கள் கூடாது. மனசு அந்தப் பெயரைக் கேட்டதுமே ரீல் மாற்றிப்போட்ட சினிமாபோல தறிகெட்டு ஓடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சசிபூஷன். காங்கிரஸ் வேட்பாளர். அரை நிமிடம் தாமதமாக நினைவு வந்தது.

“போன எலெக்‌ஷன்லே, அதாம்பா 1971 லோக்சபா தேர்தல், தெற்கு தில்லி காங்கிரஸ் வேட்பாளரா நின்னு ஜனசங்கத்தோட தலைவர் பால்ராஜ் மதோக்கை தோற்கடிச்சவர். காங்கிரஸ் அந்தத் தொகுதியை ஜனசங்கம் கிட்டே இருந்து பிடுங்கினபோது எனக்கே சந்தோஷமா இருந்தது. இவ்வளவுக்கும் நான் காக்கி ட்ரவுசர்காரன். இப்போ இன்னொரு தடவை சந்தோஷப்படப்போறேன். சசிபூஷன் ஜி கதை கந்தலாகி தோற்கப் போறார்.”

அவர் சிரித்தார். ஆஷாராணி பட்னி ஜெயிப்பார் என்று அவ்வளவு நம்பிக்கையா? தோசையும் சாம்பாரும் மட்டன் கீமாவும் செரிக்கும் வரை அது இருக்கும் என்று தோன்றியது.

“எமர்ஜென்சியை மட்டும் கொண்டுவராம இருந்தா இந்திராவுக்கு வோட்டு போடுவேன். இப்போ இல்லே” என்றார் அவர் திடுதிப்பென்று. ஆச்சரியமாக இருந்தது. முழுக்க எதிர்ப்பு மயமான தலைநகரில் எதிர்க் கூடாரத்தில் இருந்து அம்மாவுக்கு ஆதரவாக ஒரு குரல்.

“நாங்க செய்ய வேண்டியதை அவங்க செய்யறாங்க.”

பெரிய கோட்ஸே என்னிடம் சொன்னது. திரும்பவும் அதைக் கேட்கிறேன்.

“அலஹாபாத் ஹைகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் பிரதமர் பதவியைப் பறிச்சதும் அவங்க பயத்திலே எடுத்த அவசர நடவடிக்கைதான் எமர்ஜென்சி. சித்தார்த் சங்கர் ரே என்கிற வங்காளி தப்பான யோசனை கொடுத்ததாலே வந்த வினை. இந்திராம்மா பதவி விலகி இருந்தா என்ன ஆகி இருக்கும்? ஒண்ணும் ஆகியிருக்காது. அடுத்த எலெக்‌ஷன்லே கொஞ்சம் குறைஞ்ச மெஜாரிட்டியோட திரும்ப வந்திருப்பாங்க. நாங்க வடக்குலே காப்பாத்தாட்டாலும் நீங்க மதராஸிகளும், கிழக்கே வங்காளிகளும் அந்தம்மாவைத் திரும்பக் கொண்டுவந்திருப்பீங்க. கம்யூனிஸ்ட்கள் வேற பாதி அவங்க பக்கம்.” நிதானமாகப் பேசினார்.

“அப்போ எங்கே தப்பு நடந்தது?” நான் கேட்டேன்.

“அவசரமா எமர்ஜென்சி கொண்டுவந்தது முதல் தப்புன்னா, அதை நியாயப்படுத்தவோ என்னமோ அடுத்து வரிசையா செஞ்சதெல்லாம் அபத்தமான மிஸ்டேக். தனக்கு மூத்த, தன் அப்போவோட சேர்ந்து சுதந்திரத்துக்காக போராடின அவர் வயது ஒத்த தலைவர்களை ஜெயில்லே அடைக்கறது, பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கறது, தனிமனித சுதந்திரம் இல்லேன்னு ஆக்கறது... ஒவ்வொரு தப்பும் அதுக்கு முந்தினதை சின்னதாக் காட்டிட்டு இருக்க, ஒரே மாசத்திலே ஜனநாயகம் சர்வாதிகாரமா ஆயிடுச்சு. ஜவஹர்லால் நேரு நல்லவேளை போய்ச் சேர்ந்தார். அவர் இன்னும் உயிரோடு இருந்தா அவரையும் மிசா சட்டத்தின்கீழே ஜெயில்லே போட்டிருப்பாங்க அந்தம்மா.” கபூர் சார் தொடர்ந்தார்.

நான் சொன்னேன்: “இது சங்கிலித் தொடர் நிகழ்வு. டொமினோ எஃபெக்ட்.”

எனக்கு நினைவு வந்த கவிதையை நிறுத்தி நிதானமாகக் கூறினேன்:

‘கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.’

பாரதிதாசனின் முழுக் கவிதையைச் சொல்லி விளக்கியபோது, அங்கே பத்துப் பேர் கூடி ரசித்தபடி இருந்ததைக் கவனித்தேன். கவிதையை ரசிக்க மொழி எதற்கு?

“எமர்ஜென்சி கொண்டுவந்த உடனே ஒரு பெரிய ஜனக் கூட்டத்தையே ஆடுறா ராமா ஆடுறா ராமான்னு குரங்கு மாதிரி குச்சியாலே குத்தி ஆட

வைக்க, பாட வைக்க, இருக்க, தூங்க, தூங்காம முழிச்சிட்டிருக்க, பேசாம இருக்கச் செய்ய முடியும்னு புரிஞ்சுக்கிட்டாங்க. பொண்டாட்டி கூட படுக்கறதுக்குக்கூட கவர்மெண்ட் பிடிச்சு அறுத்துவிட்டு அனுப்பும். குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செஞ்சுக்கிட்டாதான் ரேஷன், ஆபீஸ்லே இன்க்ரிமெண்ட், ப்ரமோஷன். இலவச அரிசி, கோதுமை. என்ன அசிங்கம் இது?"

சாயா கோப்பையோடு அரட்டையில் கலந்துகொண்ட மல்ஹோத்ரா கேட்டார்.

"மதராஸிகளுக்கு எமர்ஜென்சியிலே கட்டாய ஆண்குறி அறுப்பு ஆபரேஷன் இல்லே. இருந்திருந்தா அவங்களுக்கும் சர்க்கார் மேலே பெரும் கோபம் வந்திருக்கும். இந்திராவை அறவே வெறுத்திருப்பாங்க."

பஸேஸர் பட்னி சார் சொல்ல நான் குறுக்கிட்டேன்:

"நாங்க கோபப்பட்டிருப்போமோ என்னமோ, ஆனா, யாரையும் வெறுத்தது இல்லே. இந்தியைக் கொண்டுவந்து திணிச்சு அடக்கிப் பிடிச்சு கட்டிப் போட நினைச்சாலும் எதிர்ப்போம். எமர்ஜென்சின்னு சுதந்திரத்தைப் பறிச்சாலும் அடங்க மாட்டோம். ஆனா வெறுப்பு இல்லே, யார் மேலேயும். அவங்க மேலே மரியாதை குறையாது."

எமர்ஜென்சியைக் காரணமாக வைத்து ஆயிரமாயிரம் பேருக்கு - அவர்களில் பலரும் நலிந்தவர்கள் - பேங்க் கடன் கிடைத்த காலம் கடந்து போன இந்த எமர்ஜென்சியின் இருபத்தொரு மாதங்கள் என்பதைச் சொன்னேன்.

"அந்தப் பணம் எல்லாம் திரும்பி வருமா?"

மல்ஹோத்ரா கேட்டார்.

பெரிய கம்பெனிகள், தனியார் துறை ராட்சத நிறுவனங்கள் வாங்கிக் கட்டாமல் போன தொகையை விட இது ஆகக் குறைவுதான் என்றேன்.

"பத்திரிகை தணிக்கையும், குடும்பக் கட்டுப்பாடு கண்டிப்பும் இல்லாம இருந்தா, இங்கேயும் பலபேர் எமர்ஜென்சியை ஆதரிச்சிருப்பாங்க.

தலைவர்களை ஜெயில்லே போட்டது பற்றிக்கூட பெரிசா அலட்டிக்க மாட்டாங்க” என்றார் சீனியர் காலு.

“மாட்டுச் சாணி” என்றார் மல்ஹோத்ரா.

“இவங்களோட உண்மையான முகம் என்னன்னு தெரிய எமர்ஜென்சி வேண்டி இருக்கு” என்றார் அவர்.

“எமர்ஜென்சி போய் ஆட்சி மாறினதும் இன்னும் பல நிஜ முகங்கள் பார்க்கக் கிடைக்கும். இந்திரா கட்சிக்காரங்க மட்டுமில்லே.”

பட்னிசாப் சொல்லிக் கொண்டிருக்கும்போது தெருமுனையில் இரைச்சல்.

சசிபூஷன் ஜி பிரசாரத்துக்கு வந்துகொண்டிருப்பதாக யாரோ வந்து சொல்ல நாங்கள் எல்லோரும் எழுந்து ஷாமியானா முகப்புக்குப் போனோம்.

நான்கு பேர் கடனே என்று முரசு முழக்கி வர்ணக் கோமாளிகளாக நடந்து வந்தார்கள். கடனே என்று பத்துப் பேர் பச்சையும், சிவப்பும், ஆரஞ்சு வண்ணமுமாக ஈரம் நனைந்த பைஜாமாவும் ஜிப்பாவுமாக, கட்சிக் கொடியோடு ஊர்ந்தார்கள். அதில் நான்கு பேர் தலையில் கடனே என்று வைத்த காந்தி குல்லாய். பசுவும் கன்றும் தேர்தல் சின்னம் எழுதிய அட்டைகளைப் பிடித்துப் போனவர்கள் தமக்குள் ஏதோ பேசிச் சிரித்தபடி நடந்தார்கள். ‘இதுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை’ என்ற முகபாவத்தோடு ட்ரைவர் காரை மெல்ல ஓட்டி வர, டாப் அகற்றி நின்றுகொண்டு கடனே என்று கும்பிடு போட்டபடி போய்க் கொண்டிருந்தார் வேட்பாளர். அவர் மேல் ஏனோ யாரும் கடனே என்றுகூட வண்ணம் அடிக்கவில்லை.

ஆஷாராணி ஷாமியானாவைப் பார்த்து பூஷன் சாப் ஏதோ சொல்ல, லொங்குலொங்கென்று இரண்டு பேர், ஆமா, கடனே என்று ஓடி வந்தார்கள்.

“அனுமதி வாங்கியிருக்கா ஷாமியானா போட?”

அவர்கள் கேட்டார்கள். காலு சீனியர் சொன்னார்:

“வீட்டுலே விசேஷம். அதான் பந்தல்.”

அவர்கள் என்ன விசேஷம் என்று கேட்க, கூட்டமே சொல்லி வைத்தாற்போல் குரல் கொடுத்தது:

“பாட்டி ருதுவாயிட்டாங்க.”

வந்தவர்களும் சேர்ந்து சிரித்து உடனே அதை அவித்துப் போட, அந்த ஊர்வலம் ஏகத்துக்கு துக்கத்தோடு முன்னால் போனது. அந்திம தினம் நெருங்கிக் கொண்டிருந்த, அதைப் புரிந்துகொண்ட நோயாளி மாதிரியான கலவரமான நிலைமை அது.

பிற்பகலில் கடலே அலையடித்து லாஜ்பத் நகர் பகுதி ஒன்று, சி பிளாக்கில் புகுந்த மாதிரி ஜனக் கூட்டம். அடல் பீஹாரி வாஜ்பாய் வோட்டுக் கேட்க வந்தார். அவர் இருந்த ஜனசங்கக் கட்சி இப்போது இல்லை. ஜனதா கட்சி என்ற புது அமைப்பில் ஜனசங்கமும், நிஜலிங்கப்பா, மொரார்ஜியின் ஸ்தாபன காங்கிரஸ், பாபு ஜகஜீவன் ராமின் ஜனநாயக காங்கிரஸ், இன்னும் துண்டு துணுக்காக சோஷலிச இயக்கங்கள் என்று பல அரசியல் கட்சிகளும் ஒன்று கலந்துவிட்டிருந்தன.

கிட்டதட்ட ஐநூறு பேர் வாஜ்பாயிக்காக வோட்டுக் கேட்க அவரோடு கூடவே நடந்து வந்தார்கள். நூறு முரசுகள் வெற்றி முழக்கிக் குதித்துக் கும்மாளம் போட்டு வந்தன. மெய்யான சந்தோஷம் அந்தக் கால்களுக்கும் கைகளுக்கும் வலிமை சேர்த்தது. ஏர் உழவன் சின்னம் எழுதிய பிரம்புத் தட்டிகளை உயர்த்திப் பிடித்து வந்தவர்கள் அனுபூதி நிலையில் காணும் ஆனந்தத்தோடு குரல் எழுப்பிப் போனார்கள்.

கூட்டத்தில் ஒருத்தர் முகம் தவிர மற்ற எல்லாவற்றிலும் ஹோலிக்குப் பூசிய வர்ணங்களோடு உற்சாகம் திடமாக எழுதி ஆனந்தம் கரைபுரண்டோடியது. இதுவும் கடந்து போகும் என்று சலனமில்லாமல் பார்த்துக்கொண்டு வந்த ஒற்றை சீரியஸ் முகத்துக்குச் சொந்தக்காரர் அடல் பிஹாரி வாஜ்பாய்தான்.

ஆஷாராணியின் ஷாமியானாவில் வாஜ்பாயி புகுந்து, என்ன பண்றீங்க என்று விசாரித்தார். யாரோ சுடச்சுட ஏலக்காய் டீயை அவரிடம் நீட்டினார்கள். ஷுகர் இருக்கு, சர்க்கரை போட்டா சாப்பிடறதில்லே என்று அவர் சொல்ல ஆரம்பிக்க, தெரியுமே, சர்க்கரை போடலே என்று ஆஷாராணி சந்தோஷமாக அறிவித்தார். வாஜ்பாய் எந்த பிகுவும் இல்லாமல் எதிரணி வேட்பாளர் கூடாரத்தில் சாயா பருகியபடி ஊர்வம்பு கேட்டார்.

காலு, மிஸ்டர் பட்னி, மல்ஹோத்ரா, பெரிய காலு என்று ஒரு கூட்டம் உற்சாகம் குறையாமல் அவரோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தது.

ஆஷாராணியின் மாமியாரும் வீட்டுப் பெரிசுமான பாட்டியம்மாள் பட்னி உள்ளே இருந்து வர, வாஜ்பாய் அவள் காலைத் தொட்டுக் கும்பிட்டு ஆசிர்வாதம் பெற்றபோது லாஜ்பத்நகரே தடதடவென்று விழுந்துவிடும் என்பதுபோல் பெரிய கரகோஷம். இவர்தான் ஜெயிப்பார் என்று அப்போதே யாராவது கேட்டிருந்தால் எழுதிக் கொடுத்திருப்பேன்.

மார்ச் பதினாறாம் தேதி எலெக்ஷன். விடுமுறை அன்றைக்கு. எங்களுக்கு வோட்டு இல்லாததால் ஸ்கூட்டரில் இலக்கில்லாமல் திரிந்துகொண்டிருந்தோம். தஞ்சம்மாளுக்கு அடுத்த பாடமாக ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் தொடங்கினேன். ஔவையாரா, அவ்வையாரா என்று அவள் கேட்டபோது ரெண்டும் சொல்லலாம் என்று நான் முடிவு சொன்னது எனக்கே உடன்பாடில்லாமல் இருந்தது.

அதுபோக சில வயதானவர்களை ஸ்கூட்டரில் வாக்குச் சாவடிக்குக் கூட்டிப் போனேன். லாஜ்பத் நகர் நான்காம் பகுதியில் கால்சா பள்ளிக்கூடத்தில் வாக்குச் சாவடியில் நீண்ட வரிசை வோட்டுப்போட ஊக்கமும் உற்சாகமுமாக நின்றது. எண்பத்தைந்து சதவிகிதம் வாக்குப் பதிவென்று சொன்னார்கள்.

பத்தொன்பதாம் தேதி சனிக்கிழமை பேங்க் கவுண்டரில் கூட்டம் அலைமோதியது. பொது இடத்தில் அரசியல் பேச வேண்டாம் என்று ஒரு காலத்தில் சொல்லியதும் அரசியல் பேச, வேற எதையும்கூடப் பேசப்

பயப்பட்ட அண்மைக் காலமும் போய்க் கழிந்து விலக, அந்தக் கூட்டம் அரசியல் தவிர வேறேதும் பேசவில்லை.

வன்மரங்கள் வீழ்ந்ததுபோல் ஓர் ஆட்சி ஆதரவின்றி அடியோடு வீழ்ந்தது. தேர்தலில், இந்திரா உத்திர பிரதேசம் ரே பரேலி தொகுதியிலும், சஞ்சய் காந்தி அமேதி தொகுதியிலும் தோல்வி அடைந்தார்கள். தேவகாந்த் பருவா, சி.சுப்பிரமணியம், பன்சிலால், இன்னும் பல மத்திய அமைச்சர்கள் தேர்தலில் தோற்றுப் போய்ப் பதவி இழந்தார்கள்.

தில்லி தெருவெல்லாம் சரம்சரமாகப் பட்டாசு வெடிக்கும் சத்தம் நிறைந்திருக்க, ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக அரசாங்கம் வீழ்ந்ததைக் கொண்டாடினார்கள். இந்திராவைத் தோற்கடித்த எதிர்க்கட்சித் தலைவர் ராஜ்நாராயண் போல் தலையில் உருமால் கட்டிக்கொண்டு இளைஞர்கள் நடுத்தெருவில் ஆடினார்கள். எல்லோரும் எல்லோருக்கும் இனிப்பு வழங்கி வாயில் ஊட்டியும், தாளம் கொட்டிப் பாடியும், இலக்கின்றி சுற்றிச்சுற்றி ஓடியும், கூக்கூவென்று கூவித் திரிந்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

சென்ட்ரல் மார்க்கெட் உள்ளே இந்திரா படத்தைச் சிலர் எரிக்க முற்பட, வேகமாகச் செயல்பட்ட கடைக்காரர்கள் அது நடக்கவிடாமல் பார்த்துக் கொண்டார்கள். மிசா என்று அட்டையில் எழுதி நான்கைந்து பேர் சுற்றி உட்கார்ந்து செருப்பால் அடித்துக்கொண்டிருக்க, இன்னும் நிறைய செருப்புகள் காத்திருந்தன. சஞ்சய் காந்தியைப் புழுத்த வார்த்தை சொல்லித் திட்டிய ஒரு தாடிக்கார இளைஞனை மல்ஹோத்ரா கழுத்தில் கைவைத்துத் தள்ளிப் போய், பேசாதே என்று விரட்டினார்.

இந்திரா காந்தி தோல்வியுற்ற தினத்தில், எமர்ஜென்சி முடிவுக்கு வந்து கொண்டிருப்பதைக் காணக் காத்திருக்காமல் மார்க்சிஸ்ட் தலைவர் ஏ.கே. கோபாலன் காலமானார்.

மார்ச் இருபத்தொன்று திங்களன்று நான் சென்னைக்கு விமானத்தில் சென்றேன். முதல் விமானப் பயணம். அச்சன் மெட்ராஸ் மீனம்பாக்கம் ஏர்போர்டுக்கு வந்து கூட்டிப் போனார். குடும்பமே மதராஸ் வந்து நானும்

அங்கே கிளம்பி வர, நந்திதா என்ற கன்யகைக்கும் சிவசங்கரன் போத்தி ஆன எனக்கும் கல்யாணம் நிச்சயம் ஆனது. ஜூன் மாதத்தில் இருப்பதாகக் கணித்த மூன்று நல்ல நாட்களில் ஒரு நாளில் அது பெண் வீடு இருக்கும் ஆலுவா நகரில் நடைபெறும்.

அந்த மார்ச் இருபத்தொன்றாம் தேதி இந்திரா சர்க்கார் ராஜினாமா செய்வதற்கு முன் எமர்ஜென்சியை ரத்து செய்ததையும் சொல்லவேண்டும்.

சொல்ல விட்டுப் போனதே, அந்த எலெக்‌ஷனில் புதுடில்லி தொகுதியில் ஜனதா கட்சியின் அடல் பிஹாரி வாஜ்பாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தாறு வாக்குகள் பெற்று பெருவெற்றி பெற்றார். காங்கிரஸின் சசிபூஷன் நாற்பத்தெட்டாயிரத்து எழுநூற்றைம்பது வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவினார்.

ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்து, மொரார்ஜி தேசாய் பிரதமரானார். சௌத்ரி சரண்சிங்கும், பாபு ஜகஜீவன்ராமும் உதவிப் பிரதம மந்திரிகளாகப் பதவியேற்றார்கள்.

எங்கள் வேட்பாளர் ஆஷாராணி பட்னி முன்னூற்றுப் பதினேழு வாக்குகள் பெற்று டெபாசிட் இழந்தாலும் அவரும் அவருடைய வீட்டுக்காரரும் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்களுக்கு சந்தோஷம் என்றால் காலுவுக்கும் எனக்கும் மல்ஹோத்ரா சாருக்கும் சந்தோஷமே. கடியாரச் சின்னத்தில் பட்னிக்கு வோட்டு போட்ட முன்னூற்றுப் பதினேழு பேருக்கும் கூட மட்டற்ற மகிழ்ச்சிதான். வாஜ்பாய்க்கே முதுகைக் காட்டிய, பட்னியின் கீமாவையும், சாம்பாரையும் தோசையையும் மறக்காத, செஞ்சோற்றுக் கடன் பூண்ட கூட்டம் அது.

# பின்கதைச் சுருக்கம்

ச ங்கரன் போத்தி 1990 டிசம்பர் வரை டெல்லியில் வங்கி அதிகாரியாகப் பதவி வகித்தான். அவன் மே 1977ல் சிகரெட் புகைப்பதை விட்டுவிட்டான். பாயல் மேல் அவன் வைத்த பொருந்தாத மையல் சற்றே அடங்க, அவனுடைய கல்யாணம் ஜூன் 1977ல் ஆலுவாவில் நடந்தேறியது. அதன் பிறகு உலகம் எப்படிப் போகிறது என்பதில் அவ்வளவாகச் சிரத்தை இல்லாத இல்லறத்தானாக புதுடில்லி லாஜ்பத் நகரிலும், கிரேட்டர் கைலாஷிலும் யமுனா நதிக்கரையில் மயூர் விஹாரிலும் இரண்டு அறை அபார்ட்மெண்ட்களில் அடுத்த பதின்மூன்று வருடம் குடும்பம் நடத்தினான்.

சங்கணாசேரிக்கு பணி மாற்றம் கிடைத்து தில்லி மாநகரைப் பிரிய மனமே இல்லாமல் போத்தி குடும்பம் குடிபெயர்ந்தபோது நான்கு பேர் கொண்டதாக இருந்தது அது. போத்தியின் பள்ளிக்கூடம் போகும் எட்டு வயது மகனும் ஐந்து வயது மகளும் குடும்பத்தின் புதிய உறுப்பினர்களாகி இருந்தார்கள்.

சங்கணாச்சேரி, ஆலுவா, காலடி, சாவக்காடு, எர்ணாகுளம் என்று, இட மாற்றமும், அக்கௌண்டண்ட், மேனேஜர், சீஃப் மேனேஜர் என்று அடுத்தடுத்த பதவி உயர்வும் பெற்ற போத்தி அப்புறம் எதுவும் எழுதவில்லை. போத்தியின் குழந்தைகளுக்கு எமர்ஜென்சி என்றால் என்ன என்று தெரியாது. போத்தியின் தலைமுறையும் கூட அதை மறந்துவிட்டது.

இடைக்காலத்தில் நடந்த சில சிறு நிகழ்வுகள்:

ஜனதா கட்சியின் மொரார்ஜி தேசாய் அரசாங்கம் 24 மார்ச் 1977 அன்று பதவி ஏற்று 15 ஜூலை 1979 வரை மத்திய அரசாக ஆட்சியில் இருந்தது. உட்கட்சிப் பூசல்களால் அந்த அரசு கவிழ்ந்த பிறகு, செளத்ரி சரண் சிங்கின் தலைமையில் 28 ஜூலை 1979 முதல் பிளவுபட்ட ஜனதா கட்சி தலைமையில் கூட்டணி அரசு பதவியில் இருந்தது. இந்திராவின் காங்கிரஸ் கட்சி அந்த ஆட்சிக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுத்தது. எனினும் காங்கிரஸ் ஆதரவை விலக்கிக்கொள்ள 1979 டிசம்பரில் சரண்சிங் அரசு கவிழ்ந்தது.

ஜனவரி 14, 1980 - பழையன கழிய, புதியன புகும் போகிப் பண்டிகைக்கு அடுத்து வந்த தைப்பொங்கல் தினத்தில், இந்திரா காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது.

1975
இரா. முருகன் / Era.Murukan

This digital edition published in 2019 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2018 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.